இந்தியாவில் பாங்கியல் சட்டமும் நடைமுறையும்

(மூன்றாம் பகுதி)

ஆசிரியர்

எம். எல். டேனன், ஓ.பி.இ., ஐ.இ.எஸ்.(ஓய்வு)

தமிழாக்கம்

கூ. கருப்பன், எம்.காம்.,

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்–875

இந்தியாவில் பாங்கியல் சட்டமும் நடைமுறையும்

(மூன்றாம் பகுதி)

ஆசிரியர்

எம். எல். டேனன், ஓ.பி.இ., ஐ.இ.எஸ்.(ஓய்வு)

தமிழாக்கம்

கூ. **கருப்பன்**, எம்.காம்.,
பேராசிரியர்,
வணிகவியல் துறைத் தலைவர்,
அரசினர் கலைக் கல்லூரி,
மேலூர், மதுரை மாவட்டம்.

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

First Edition —March, 1982
Number of Copies—1000

T.N.T.B.S. (C.P.) No. 875

© Government of Tamilnadu

BANKING LAW AND PRACTICE IN INDIA–Part III

M. L. TANNAN

Translation

K. KARUPPAN

Price Rs. 27-00

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by :

M/s. Elangovan Printers,
61, Muthu Mudali Street,
Royapettah, Madras-14.

அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி இருபத்தோராண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியற் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியற் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைக் காமராசர் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

அகராதியியல், அரசியல், இயற்பியல், உயிரியல், உளவியல், கணிதவியல், சட்டவியல், தாவரவியல், புவியமைப்பியல், புவியியல், புள்ளியியல், பொருளியல், பொறியியல், மனையியல், மெய்ப்பொருளியல், வரலாற்றியல், வானியல், விலங்கியல், வேதியியல் ஆகிய பல துறைகளில் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகின்றது.

இவற்றுள் ஒன்றான **இந்தியாவில் பாங்கியல் சட்டமும் நடைமுறையும்—III** என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **875**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **910** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளரவேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரித்தாகுக!

செ. அரங்கநாயகம்

பொருளடக்கம்

பக்கம்

சொற்களின் சுருக்கப்பட்டியல் ... viii

வழக்குகளின் பட்டியல் (Table of Cases) ... x

11. பொறுப்புறுதிகள் 1-41

பொறுப்புறுதி ஒப்பந்தங்களில் யார் ஈடுபடமுடியும் ... 7
பிரதிபயன் ... 13
பொறுப்புறுதியின் செயலாற்றல் எல்லை ... 20
பொறுப்புறுதியைக் கடன் முழுமைக்கும் அல்லது ஒரு பகுதிக்கு மட்டும் செயல்படுத்துதல் ... 21
வங்கியரின் கடமைகள் ... 23
பிணையாளிக்கு எதிராக வங்கியருக்குள்ள உரிமைகள் 27
முன்னெச்சரிக்கைகள் ... 30
பிணையாளிக்குள்ள உரிமைகள் ... 32
பொறுப்புறுதியினை முடிவுக்குக் கொண்டுவருதல் ... 36

12. துணைப்பிணையங்களால் உத்தரவாதம் செய்யப்பட்ட கடன்கள் 42-109

கடன்களை உத்தரவாதம் செய்து பெறுவதற்கான வழிமுறைகள் ... 44
எச்ச ஓரம்-விளக்கம் ... 58
பிணையப்பத்திரங்களின் எளிவரல் தன்மை ... 61
எழுத்துமூலமான உடன்பாடுகள் இருக்கவேண்டிய தன் அவசியம் ... 61
பிணையப்பத்திரங்களை விற்றுப் பணமாக்குதல் ... 63
வரையறைச் சட்டமும் கடன்களும் ... 65
பங்குமாற்று நிலையப் பிணையப் பத்திரங்களுக்கு எதிராகக் கடன்கள் ... 66
இந்தியாவில் பங்கு தரகர்களுக்கு அளிக்கப்படும் கடன்கள் ... 71

பக்கம்

சில ஆண்டுகளுக்கான இருப்புநிலைக் குறிப்புகள் மற்றும் இலாப நட்டக் கணக்கு அறிக்கைகளின் ஆய்வு ...	76
சந்தை விலைகளைப் பற்றிய கவனமான ஆய்வு...	76
அளிக்கப்பட்டுள்ள பிணையம் பங்குப்பத்திரமா அல்லது கடனீட்டுப்பத்திரமா ...	77
ஆவணமாற்றுத் தன்மை வகைகள் ...	81
மாற்றுமுறைத் தன்மையில்லாத பிணையப்பத்திரங்கள் ...	87
நியாய உரிமையும் அதன் குறைபாடுகளும் ...	89
நியாய அடைமானங்களை ஏற்படுத்துவதற்கான வெவ்வேறு முறைகள் ...	93
நியாய அடைமானங்களில்மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கைகள் ...	98
தனி நிறுமங்களின் பங்குகள் ...	102
பங்குகள் ஒதுக்கீட்டுக் கடிதங்களுக்கு எதிராகக் கடன்கள் ...	103
பங்குகளுக்கு எதிரான கடன்கள் மீதான கட்டுப்பாடுகள் ...	105
13. சரக்குகளுக்கும் சரக்குரிமைப் பத்திரங்களுக்கும் எதிராகக் கடன்கள்	**110–159**
நன்மைகள் ...	114
குறைபாடுகள் ...	117
இந்தியாவில் அவை அதிகமாக வழக்கில் இல்லாததற்குக் காரணங்கள் ...	119
பொதுவான முன்னெச்சரிக்கைகள் ...	124
சரக்குரிமைப் பத்திரங்களுக்கு எதிராகக் கடன்கள் ...	136
பொதுவான முன்னெச்சரிக்கைகள் ...	153
14. சில்லறைப் பிணையங்கள்	**160–221**
நிலங்களும் கட்டடங்களும் ...	160
பிணையம் என்ற முறையில் உண்மைச் சொத்துகள், வங்கிகளிடத்தில் வழக்கத்தில் இல்லாமை ...	160

பக்கம்

அடைமானங்கள் ... 166

நியாய அடைமானத்தைப் பெற்றவர், அதைத் தொடர்ந்து சட்டப்படியான அடைமானத்தைப் பெற்றவர் ஆகியோருடைய உரிமைகள் ... 169

உரிமைப் பத்திரங்களோடு கவனக் குறைவான நடவடிக்கைகள் ... 171

ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணங்கள் ... 183

பிணையங்கள் என்ற முறையில் காப்பீட்டுத் திட்டாவணங்கள் அதிகமாக வழக்கில் இல்லாமைக்குக் காரணங்கள் ... 190

முன்னெச்சரிக்கைகள் ... 196

பிணையங்களை விடுவித்தல் ... 205

வங்கியர்களின் பிணையமாக வாடிக்கையாளர்களின் ஏட்டுக்கடன்கள் ... 206

வங்கியர்களின் பிணையமாக கடனீட்டுப் பத்திரங்கள் ... 211

வங்கிகளும் வாடகைக் கொள்முறை நிதியீடும் ... 215

முன்னெச்சரிக்கைகள் ... 219

15. துணைப் பணிகள் 222–285

முகமைப் பணிகள் ... 223

வங்கியரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது ... 225

தெளிவற்ற அறிவுறுத்தல்கள் கொடுக்கப்படும் தறுவாய்களில் (வங்கியருக்கு) பொறுப்பில்லாமை ... 226

கடனுறுதிச் சீட்டு — விளக்கம் ... 227

சில்லறை அல்லது பொதுப்பயன் பணிகள் ... 252

ஏற்றுமதிகளுக்கு நிதியிடல் ... 279

ஏற்றுமதி இடர்வாய்ப்புக் காப்பீட்டுக்கூட்டுரு விட். 280

16. வெளிநாட்டு நாணயமாற்றுக் கட்டுப்பாடுகள் 286-346

முன்னுரை ... 286

நாணயமாற்றுக் கட்டுப்பாட்டு வடிவமைப்பில் மாற்றங்கள் ... 287

1947-ன் வெளிநாட்டு நாணயமாற்று ஒழுங்குபடுத்துச் சட்டம், காப்புவாசகச் சரத்துகள் ... 288

பக்கம்

கட்டுப்பாட்டின் அடிப்படை ... 290
தடைகள் ... 291
பொது ... 295
வெளிநாட்டு நாணயமாற்றில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் ... 296
பண அனுப்புகைகள் ... 300
இறக்குமதிகள் ... 314
குடியாள்கள் அல்லாதவர்களின் ரூபாய் கணக்குகள் 318
ஏற்றுமதி ஒழுங்குபடுத்துதல்கள் ... 325
செலாவணி நோட்டுகள் ... 336
அந்நியச் செலாவணிக் கணக்குகள் ... 342
பிணையப்பத்திரங்கள் ... 343

17. அண்மைக்கால வங்கியியல் வளர்ச்சிகள் 347-363

வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு ... 347
மூலதன நிதிகள், மற்றும் வங்கிகளின் எளிவரல் தன்மை வீதங்கள் ஆகியவை பற்றிய ரிசர்வ் வங்கியின் புதிய திட்டங்கள் ... 354
வரவு செலுத்துகைகளை மாற்றல் செய்வதற்கான வசதிகள் புகுத்தீடு ... 358
யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா ... 359
இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி ... 361

பின்னிணைப்பு-ஆ [படிவம் எண்கள் 14 முதல் 46(அ) வரை] 366

மேற்கோள் நூற்பட்டியல் ... 479

கலைச்சொற்கள் ... 482

சொற்களின் சுருக்கப் பட்டியல்

எ. ஸி. (அ. கே.)	—	லா ரிபோர்ட்ஸ், அப்பீல் கேஸ்கள், லார்டுகள் சபை.
ஆ. இ. ரி.	—	ஆல் இண்டியா ரிபோர்ட்டர்
அல். இ. லா. ரி.	—	அலகாபாத்து சீரீஸ் (இந்தியன் லா ரிபோர்ட்ஸ்)
பி. எல். ஆர்.	—	பெங்கால் லா ரிபோர்ட்ஸ்
பி. அண்ட் எ. டி.	—	பார்னால் அண்டு அடால்ப்ஸ் ரிபோர்ட் (கிங்ஸ் பெஞ்சு)
பி. அண்ட் ஸி.	—	பார்னால் அண்டு க்ராஸ்வெல் ரிபோர்ட் (கிங்ஸ் பெஞ்சு)
பிங்.	—	பிங்கம் ரிபோர்ட்டுகள்
பிங். நியூ.	—	,, நியூ வழக்கு
பாம்.	—	பாம்பே ஸீரீஸ் (லா ரிபோர்ட்)
பாம். லா. ரி.	—	பாம்பே லா ரிபோர்ட்டர்
ஸி. ஏ.	—	கோர்ட் ஆஃப் அப்பீல் ரிபோர்ட்
ஸி. பி.	—	காமன் பெஞ்சு ரிபோர்ட்
ஸி. ஸி.	—	கம்பெனி வழக்குகள்
ஸி. பி. என். எஸ்.	—	காமன் பெஞ்ச் ரிபோர்ட் (நியூ சீரீஸ்)
ஸி. பி.	—	லா ரிபோர்ட் (காமன் ப்ளீஸ் டிவிசன்)
கல்.	—	கல்கத்தா ஸீரீஸ் (இந்தியன் லா ரிபோர்ட்)
காம்ப்	—	காம்பெல்ஸ் ரிபோர்ட் நிஸி பிரியஸ்
சா. கா. டி. (சான்சரி)	—	லா ரிபோர்ட்ஸ், சான்ஸரி டிவிஷன்
டி. ஜி. & ஜே.	—	டி ஜெக்ஸ் & ஜோன்ஸ் ரிபோர்ட், சான்ஸரி அப்பீல்

டக்.	—	டக்ளஸ் ரிபோர்ட்ஸ், கிங்ஸ் பெஞ்ச்
இ. அண்ட் பி.	—	எல்லிஸ் அண்டு ப்ளாக்பர்ன்ஸ் ரிபோர்ட், க்வீன் பெஞ்சு
எக்ஸ்	—	எக்ஸ்செக்கர் ரிபோர்ட்
எக்ஸ். டி.	—	எக்ஸ்செக்கர் டிவிஷன்
எ. எல். ஸி.	—	ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸ்-க்ளார்க்ஸ் ரிபோர்ட்
ஹேர்	—	ஹேர்ஸ் ரிபோர்ட்
கே. பி. (கி. பெ.)	—	கிங்ஸ் பெஞ்சு
லா. ஜ. கே.	—	லா ஜர்னல் சான்சரி
லா. ஜ. க்யூ. பி.	—	லா ஜர்னல் க்வீன்ஸ் பெஞ்சு
லா. ரி.	—	லா ரிபோர்ட்
லா. டை.	—	லா டைம்ஸ்
லாகூ.	—	லாகூர் சீரீஸ் (இந்தியன் லா ரிபோர்ட்)
மூ. இ. அ.	—	மூர்ஸ் இண்டியன் அப்பீல் கேஸஸ் பிரிவி கவுன்சில்
மா. & க்ரா.	—	மானிங் அண்டு க்ராங்கர்ஸ் ரிபோர்ட் காமன் பிளீஸ்
மீ. & வெ.	—	மீஸன் அண்டு வெல்ஸ்பீ
மத.	—	மதராஸ் சீரீஸ் (இந்தியன் லா ரிபோர்ட்)
பி. க.	—	பிரிவி கவுன்சில்
க்வீ. பெ. (க்யூ. பெ.)	—	க்வீன்ஸ் பெஞ்சு
க்வீ. பெ. டி. (க்யூ. பெ. டி.)	—	க்வீன்ஸ் பெஞ்சு டிவிஷன் லா ரிபோர்ட்
ரி. ரி.	—	ரிவைஸ்ட் ரிபோர்ட்ஸ்
டை.லா.ரி. / டி.எல்.ஆர்.	—	டைம்ஸ் லா ரிபோர்ட்ஸ்

வழக்குகளின் பட்டியல்

(Table of Cases)

பக்கம்

அ

அபீசியல் அசைனீ ஆப் மதராஸ் எதி. மெர்கன்டைல் பாங்க் ஆப் இந்தியா லிட். ஆ.இ.ரி. (1933), மத. 207 ... 150

அபீசியல் அசைனீ ஆப் மதராஸ் எதி. மெர்கன்டைல் பாங்க் ஆப் இந்தியா லிட். (1935), அ. கே. 53 ... 148

அனிருத்தம் எதி. தி டாம்கோஸ் பாங்க் லிமிடெட். (ஐ. எம். & ஜே. எஸ். சி. பக். 137) ... 41

ஆ

ஆங்கிலோ இந்தியா ஜூட் மில்ஸ் கம்பனி எதி. ஓமோட் மல், இ. லா. ரி. 38, கல். 127 ... 233

ஆங்கிலோ கலிஃபோர்னியன் வங்கி எதி. இலண்டன் அண்ட் புரோவின்சியல் மெரைன் இன்சூரன்ஸ் கம்பெனி (1904), 20 டி. எல். ஆர். 665 ... 22

இ

இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா எதி. அவனாசி செட்டியார் (1930), இ.லா.ரி. 53, மத. 826 (831) ... 14, 16

இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா எதி. யு.ராய், லா.ரி. 50 ஐ. எ. 283 ... 170

இலண்டன் ஜாயின்ட் ஸ்டாக் பாங்க் எதி. சிம்மன்ஸ் (1892), அ. கே. 201 ... 85

எ

எக்ஸ்டைன் எதி. மிட்லண்ட் பாங்க் லிட். (தி பாங்கர், ஜூன், 1926) ... 80

எல்லிஸ் எதி. இம்மானுவேல் (1876), 1 எக்ஸ்.டி. 157 ... 22

பக்கம்

கா

கார்ப்பரேசன் ஆப் செப்பீல்டு எதி. பார்க்லே, (1905) (683)... 69

கிப்ளியர் எதி. மாக்மல்லர் (1869), லா.ரி. 2 பி.சி. 317 (339) ... 257

கிளாஸ்கோ பாரிஸ் கவுன்சில் எதி. மார்ட்டின் (1910) எஸ். சி. ஜே. 102 ... 186

கிளைடன்ஸ் வழக்கு (1816), 1 மெரிவேல் 572 ... 12, 36, 63, 183

கொஞ்சாடி எதி. சிவா, இ. லா. ரி. 28 மத. 54 ... 170

கோ-ஆபரேடிவ் ஹிந்துஸ்தான் பாங்க் லிட். எதி. சுரேந்திரநாத் டே இ.லா.ரி. 59 கல். 667 (683) ... 51, 130

ச

சம்மர்முல் சிங்கானா, இ. லா. ரி. 59 கல். 818 ... 156

சாண்டொஸ் எதி. மக்ளீன் (1883), 11 க்யூ.பெ.டி. 327 ... 137

சார்டர்டு பாங்க் ஆப் இந்தியா எதி. இம்பீரியல் பாங்க் இ. லா. ரி. 60 கல். 1262 ... 156, 158

சாலிக்ராம் எதி. லச்மண் (1928), 50 அல. 211 ... 27

சுப்ரமணியா எதி. கோபாலா (1910), இ.லா.ரி. 33 மத. 309 ... 27

செக்ரடரி ஆப் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா எதி. பாங்க் ஆப் இந்தியா லிட். (1937ஆம் ஆண்டைய அப்பீல் 55)... 86

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா எதி. நுசர்வாஞ்சி, இ. லா. ரி. 57 பாம். 234 ... 170

சேக் முகம்மது எதி. பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பனி லிட். (1908), இ.லா.ரி. 32 மத. 95 பக். 120 ... 259

ட

டியர்லி எதி. லேக்பில் (1874) லா.ரி. 9 க்யூ. பெ. 122 ... 258

டெய்லி எதி. லாயிட்ஸ் பாங்க் லிமிடெட் (1912), அ.கே. 756... 182

டைல்பி எதி. சொத்தாட்சி அதிகாரி (1888), 13 அப்.வழ. 523... 56

ந

நர்சையா எதி. வெங்கடராமையா, இ.லா.ரி. 42 மத. 59 ... 50

நாடார் பாங்க் லிட். எதி. கானரா பாங்க் லிட். ஏ. ஐ. ஆர். 1961 மத. 326 ... 52

பக்கம்

நார்த் வெஸ்டர்ன் பாங்க் எதி. பாயின்டர் (1895) அ. கோ. 56 ... 46, 157

நிரிபேந்த்ர குமார் போஸ், இ.லா.ரி. 56 கல். 107 ... 155

நேசனல் புரோவின்சியல் பாங்க் எதி. கிளானக் (1913), 3 கே. பி. 335 (339) ... 15

ப

பஞ்சாப் நேஷனல் பாங்க் லிட். எதி. திவான் சந்த் மற்றும் இதர நபர்கள் (ஆ.இ.ரி. 1931 லாகூர் 302) ... 179

பால்கிருஷ்ணா எதி. பாங்க் ஆப் பெங்கால், 15 பாம். 585 [591] ... 16, 24

பாஸ்டர் எதி. பர்னார்டு (1916), 2 அ.கே. 160 ... 167

பிக்கர் எதி. இலண்டன் அண்ட் கௌன்டி பாங்க் (1887), 18 க்யூ. பெ. டி. 515 ... 82

பிரஞ்ஜீவன்தாஸ் எதி. சான் மா, லா.ரி. 43 இ.அ. 122 ... 171

பிராட்போர்டு ஓல்டு பாங்க் எதி. சட்கிலிப் (1918), 2கே.பி. 833... 31

பிரையரி ஹால்ராயிடு மற்றும் ஹீலியன் புருவரிஸ் எதி. செக்காம், சான்சரி டிவிசன், டி எல். ஆர்., அக்டோபர் 26, 1922 ... 10

பீப்பிள்ஸ் பாங்க் ஆப் நார்தர்ன் இந்தியா லிட்., லாகூர் எதி. லக்னோ சுகர் ஓர்க்ஸ் லிட். (இ.லா.ரி. 12 லக்னோ 283; ஆ.இ.ரி. 1936 அவுத் 338) ... 213

புல்லர் எதி. க்ளின் மில்ஸ் கரி அண்ட் கம்பனி, (1914), 2 கே.பி. 168 ... 83

பெர்ரிஸ் எதி. முல்லின்ஸ் (1854), 2 எஸ்.எம். அண்ட் ஜி. 378 ... 54

பெரியம்மா எதி. பனியன்ஸ் அண்ட் கம்பனி, இ.லா.ரி. 49 மத. 156 ... 4

பெனாரஸ் பாங்க் லிட். எதி. பாங்க் ஆப் பீகார் லிட். ஆ. இ. ரி. 1947, அல. 117 ... 183

பேக்கர் எதி. அஹமத் இஸ்மாயில், இ.லா.ரி. 5 ரங். 633 ... 50

பொல்லாக் பெர் (1846), 16 எம். அண்ட் டபிள்யூ. 99 பக். 103... 28

பக்கம்

ம

மஞ்சுபாய் எதி. ஐயோட், இ. லா. ரி. 20 பாம். 633 ... 235

மன்மோஹன் முகர்ஜி எதி. கேஸ்ரிசந்த் குலாப்சந்த், இ. லா. ரி. 62 கல். 1046 ... 52

மிடில்டன், லா. ரி. 11 ஈக். 209 ... 51

மில்ஸ் எதி. சார்லஸ்வொர்த் (1890), 25 க்யூ.பி.டி. 421 ... 45

மெண்டெஸ் எதி. கியூடல்லா (1862), 2 ஜே. அண்ட் ஹெய்ச். 259 ... 266

மெர்கன்டைல் பாங்க் ஆப் இந்தியா எதி. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா லிட். லா.ரி. 65 ஐ.எ. 75 ... 46, 151, 159

மோரிடோ, இன் ரி, (1886), 18 க்யூ. பி. டி. 222 ... 64

ர

ரீவ்ஸ் எதி. காப்பர், 5 பிங்க். என். சி. 136 ... 45

ரோவெட் லீகி அண்ட் கம்பனி லிட், எதி. ஸ்காட்டிஸ் பிராவிடண்ட் இன்ஸ்டிடியூசன் பாங்கர்ஸ் அண்ட் இன்சூரன்சு மேனேஜர்ஸ் அண்ட் ஏஜென்ட்ஸ் மேகசைன், ஜூன், 1926, பக். 887, 888 ... 195

ல

லாயிட்ஸ் பாங்க் எதி. பி. இ. குஸ்தர் அண்ட் கே, இ. லா. ரி. 56 கல். 868 ... 171

வ

வில்சன் எதி. பிரெட் (1843), 11 எம். அண்ட் டபிள்யூ. 113 (115) ... 257

வெரிஜெர்ஸ் பாலிசி, இன் ரி (1910) ... 202

வெஸ்ட்மினிஸ்டர் பாங்க் லிட். எதி. காண்ட் ... 17

வைதிஸ் எதி. லேபௌசர் (1858), 3 டி. ஜி. மற்றும் ஜே. 593 ... 17

ஜ

ஜெல்லிகோ எதி. பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் கம்பனி., இ. லா. ரி. 10 கல். 489 ... 259

பக்கம்

ஸ

ஸ்டீல் எதி. டிக்சன் (1881), 17 சி. டி. 825 ... 39

ஸ்டோன் எதி. காம்ப்டன் (1838), 5 பிங்க், புதிய வழக்குகள் 142 ... 19

ஸ்மித் எதி. ஹூட் (1929), 1 சான். 14 ... 25

ஹ

ஹசாரிமுல் எதி. சதீஸ் சந்திர கோஸ், இ.லா.ரி. 46 கல். 331... 84

ஹரால்டு எதி. பிளென்டி (1901), 2 சான்சரி. 314 ... 55

ஹன்டர் எதி. ஹன்டர் மற்றும் இதர நபர்கள் (1936), ஹெய்ச். ஓ. எல். ... 65

ஹாப்கின்சன் எதி. ரோல்ட் (1861), 9 ஹெய்ச்.எல்.சி. 514 ... 182

ஹாமில்டன் யங் அண்ட் கே., இன். ரி (1905), 2 கே. பி. 772 ... 130

ஹால்ராய்டு எதி. மார்சல் (1862), 10 ஹெய்ச்.எல்.சி. 191 ... 56

ஹாலிடே எதி. ஹால்கேட் (1868), லா.ரி. 3, எக்ஸ். பக். 299 ... 44

ஹிவாட்சன் எதி. வெப் (1907), 1 சான்சரி. 537 ... 19

ஹெல்பி எதி. மேத்யூஸ் (1895), அ. கே. 471 ... 218

இந்தியாவில்
பாங்கியல் சட்டமும் நடைமுறையும்

(மூன்றாம் பகுதி)

11. பொறுப்புறுதிகள்
(Guarantees)

வங்கியரளிக்கும் கடன்களுக்குப் பிணையமாகப் பொறுப்புறுதிகள் (Guarantees as Security for Bankers' Advances)

வங்கியர்களின் கடன்கள் துணைப் பிணையங்களின் (collateral securities) வாயிலாகப் பாதுகாக்கப்படாமல் இருந்து, கடன் பெறுவோரின் ஆட்பிணையும் (personal security) போதுமானதாக இல்லாது இருக்கின்றபொழுது பொறுப்புறுதிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கடன் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள ஒருவர் உருப்படியான (tangible) பிணையம் எதனையும் கொடுக்க முடியாமல் இருக்கின்றபொழுதுமட்டுமன்றி, அவர் அளித்திருக்கும் துணைப் பிணையத்தின் மதிப்புக் குறைந்துபோன காரணத்தால் வங்கியரின் கடன் போதுமான பாதுகாப்பினை இழந்து, அவருக்குக் கடன்பட்டுள்ள வாடிக்கையாளரின் நிலைமை மிகவும் நலிந்துபோய் உள்ளது என்று வங்கியர் கண்டறிகின்ற பொழுதுங்கூட இந்த வகையான பிணையத்திற்குத் தேவை எழுகின்றது. ஒரு தனி நிறுமம் அதற்குத் தேவையாயுள்ள ஒரு கடனுக்குப் போதுமான பிணையத்தை அளிக்க முடியாத நிலையில் இருக்கலாம். ஆனால், நிறுமத்தைக் கட்டுப்பாடு செய்கின்ற இயக்குநர்கள், கடனை உத்தரவாதம் செய்வதற்குத் தங்களுடைய ஆட்பொறுப்புறுதிகளை (personal guarantees) அளிக்கத் தயாராக இருக்கலாம்.

பொறுப்புறுதி-விளக்கம் (Guarantee defined)

1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச்சட்டம், 126ஆம் பிரிவு, ஒரு பொறுப்புறுதி ஒப்பந்தத்திற்கு (contract of guarantee), 'மூன்றாம் நபர் ஒருவர் நிறைவேற்றத் தவறுகின்றபொழுது, அவருடைய உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு அல்லது பொறுப்பினைத் தீர்ப்பதற்கு உண்டான ஓர் ஒப்பந்தமாகும்', என்று விளக்கம் கூறுகின்றது. அதே பிரிவு, 'ஒரு பொறுப்புறுதி வாய்மொழியானதாகவோ எழுத்து மூலமானதாகவோ இருக்கலாம்', என்று

மேலும் கூறுகின்றது. எடுத்துக்காட்டாக, 500 ரூபாய்க் கடன் தேவையாக உள்ள திரு. எஸ். பி. கபூர் என்பவர் தாம் செலுத்தத் தவறினால், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான உறுதி மொழியைத் தம்முடைய நண்பர் திரு. எம். என். மேத்தா என்பவரை, திரு. பி. டி. ஸ்ராப் என்பவருக்கு அளிக்கும்படி தூண்டினால் அத்தகைய ஒப்பந்தம் ஒரு பொறுப்புறுதி ஒப்பந்தம் எனப்படும். இந்த ஒப்பந்தத்தில், முதன்மைக் கடனாளியான திரு. எஸ். பி. கபூர், பிணையாளியான திரு. எம். என். மேத்தா மற்றும் கடனாளரான திரு. பி. டி. ஸ்ராப் ஆகிய மூன்று நபர்கள் இருப்பதைக் காணலாம். இரண்டாந்தரத் தன்மையைக் கொண்டுள்ள ஒப்பந்தமான பொறுப்புறுதி ஒப்பந்தத்தின்படி பிணையாளியாகிய திரு. எம். என். மேத்தாவைப் பொறுப்பாளியாக ஆக்கவேண்டுமெனில், கடனாளரான திரு. பி. டி. ஸ்ராப்புக்குத் தொகையைத் திருப்பித் தருவதற்கான முதன்மைக் கடனாளி திரு. எஸ். பி. கபூரின் உறுதிமொழியைக் கொண்டுள்ள ஒரு முதன்மை ஒப்பந்தம் இருக்கவேண்டும். இத்தகைய ஓர் ஒப்பந்த மில்லையெனில், திரு. கபூர் செலுத்தத் தவறியதாக ஆகின்ற ஒரு நிலை தோன்றாது. எனவே, பொறுப்புறுதி ஒப்பந்தம் பிடிப்புக் கொண்ட ஒன்றாக இராது. இருந்தபோதிலும், சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் முதன்மைக் கடனாளிக்குப் பொறுப்பு இல்லா விட்டாலுங்கூடப் பிணையாளி பொறுப்பாளியாகிறார். எடுத்துக் காட்டாக, இளவர் (minor) ஒருவரோடு செய்துகொண்ட ஒப்பந் தத்தைப் போன்ற மூல ஒப்பந்தம் ஒன்று செல்லாததாக (void) ஆகிவிட்டால், பிணையாளி, பிணையாளி என்னும் முறையில் மட்டு மன்றி முதன்மைக் கடனாளி என்னும் முறையிலும் பொறுப்பாளி யாவார். இத்தகைய சமயங்களில் பிணையாளி ஒப்பந்தம், முதன்மை ஒப்பந்தமாகக் கருதப்படுமேயன்றி ஒரு துணை ஒப்பந்த மாகக் கருதப்படமாட்டாது. பொறுப்புறுதி ஒப்பந்தம் ஏற்படுகின்ற பொழுது முதன்மை ஒப்பந்தம் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. முதன்மைக் கடனாளி, கடனாளருக்குப் பணத்தைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஒப்புக் கொள்ளுகின்ற மூல ஒப்பந்தம் முடியக்கூடிய தறுவாயில் இருக்கலாம்.

ஈட்டுறுதி ஒப்பந்தம் (Contract of Indemnity)

முதல் நோக்கில் பார்த்தால் பொறுப்புறுதி ஒப்பந்தங்களையே போன்று உள்ள ஈட்டுறுதி ஒப்பந்தங்கள் என்று அறியப்படும் ஒப்பந்தங்களுக்கு வாசகரின் கவனத்தை ஈர்ப்பது இங்கு அவசிய மானதாகும். 1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், 124ஆம்

பிரிவு ஈட்டுறுதி ஒப்பந்தத்திற்குக் கீழ்க்காணும் விளக்கத்தைக் கூறுகின்றது :

> ''உறுதிமொழி அளிப்பவர் தம் நடத்தையின்மூலமோ வேறு யாராவது ஒருவருடைய நடத்தையின் மூலமோ ஏற்படக் கூடிய இழப்பிலிருந்து மீட்பதாக, ஒரு நபர், மற்றொரு நபருக்கு உறுதிமொழி யளிப்பதன்மூலம் ஏற்படும் ஓர் ஒப்பந்தமே 'ஈட்டுறுதி ஒப்பந்தம்' எனப்படும்.''

கப்பலில் அனுப்பப்படும் சரக்கினை அனுப்பப் பெறுபவர் ஒருவர் (consignee of a cargo) கப்பல்வழிச் சீட்டினைக் கொடுக் காமலே கப்பல் நிறுமம் சரக்கினைப் பட்டுவாடா செய்ய வேண்டு மென்று விரும்பினால், அவர் ஈட்டுறுதிப் பத்திரம் (indemnity bond) ஒன்றினை (கப்பல் நிறுமத்திற்கு) அளிக்க வேண்டும். இப் பத்திரத்தை அளிப்பதன்மூலம், கப்பல்வழிச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளாமலே கப்பல் நிறுமம் சரக்கினைப் பட்டுவாடா செய் வதால் அதற்கு ஏற்படக்கூடிய நட்டத்தினை ஈடு செய்வதற்கு அவர் ஒப்புதல் அளிக்கிறார். அதேபோல, இரயில்வே இரசீது (railway receipt) காணாமற்போய்விடும் தறுவாயிலும் சரக்கு அனுப்பீடு பெறுபவர் ஓர் ஈட்டுறுதிப் பத்திரத்தில் ஒப்பமிடுவதன் பேரில் அவருக்குச் சரக்குப் பட்டுவாடா செய்யப்படலாம்.

பொறுப்புறுதிக்கும் ஈட்டுறுதிக்கும் உள்ள வேறுபாடு (Guarantee distinguished from indemnity)

மேலே கூறப்பட்டவையிலிருந்து பொறுப்புறுதி ஒப்பந்தங்கள், ஈட்டுறுதி ஒப்பந்தங்களிலிருந்து கீழ்க்காணும் விதங்களில் வேறுபட்டவை என்பது தெளிவாகின்றது. பொறுப்புறுதி ஒப்பந் தங்களில், கடன் பெறுகின்றவருக்கும் கடன் வழங்குகின்றவருக்கும் இடையிலான ஒரு முதன்மை ஒப்பந்தம் (principal contract), கடன் வழங்குகின்றவருக்கும் பிணையாளிக்கும் இடையிலான ஓர் இரண்டாந்தர ஒப்பந்தம் (secondary contract) ஆகிய இரண்டு ஒப்பந்தங்கள் இருக்கவேண்டும். ஆனால், ஈட்டுறுதி ஒப்பந்தங் களில் ஒரே ஒரு முதன்மை ஒப்பந்தம் மட்டுமே உள்ளது. பொறுப் புறுதிகளில் முதன்மைக் கடனாளியே முதன்மையான பொறுப்பாளி யாகிறார். முதன்மைக் கடனாளி செலுத்தத் தவறுகின்றபொழுது தான் பிணையாளியின் பொறுப்புத் தோன்றுகிறது. ஆனால், ஈட்டுறுதிகளில் உறுதிமொழி அளிக்கின்ற ஒருவர் மட்டுமே வெளிப்படையாக அவர் கூறுகின்ற விருப்பத்தின்பேரில் செய்யப் படும் செயல்களால் உறுதிமொழியினைப் பெற்றவர் அடையும் நட்டத்திற்குப் பொறுப்பாளியாகிறார். ஈட்டுறுதிகளுக்கும், பொறுப்

புறுதிகளுக்குமுள்ள மற்றொரு வேறுபாட்டினையும் மனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும். பணம் செலுத்தப்படாததால் அல்லது கடமையினை நிறைவேற்றாததால் ஏற்படக்கூடிய நட்டங்களுக்கு எதிராக மூன்றாவது நபர் ஒருவரிடமிருந்து பொறுப்புறுதி அல்லது ஈட்டுறுதி ஒன்றினைப் பெற்றுக்கொள்வதன்மூலம், ஒரு வங்கியர் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம். வங்கியரைப் பொறுத்தவரையில் பணம் பிணையாளியால் செலுத்தப்பட்டாலும் சரி அல்லது கடமை (obligation) ஈட்டுறுதி செய்பவர் அல்லது பிணையாளியால் நிறைவேற்றப்பட்டாலும் சரி அவருடைய நிலை ஏறக்குறைய ஒன்றுதான். ஆனால், கடன் திருப்பிச் செலுத்தப்பட்ட பிறகு அல்லது உறுதிமொழி நிறைவேற்றப்பட்ட பிறகு பிணையாளியினுடைய சட்டப்படியான நிலை, ஈட்டுறுதி செய்பவரின் நிலையிலிருந்து பெருமளவில் வேறுபடும். ஒரு பிணையாளி கடனைத் திருப்பிச் செலுத்தினாலும் அல்லது கடமையை நிறைவேற்றினாலும், அவர் தம்முடைய பெயரிலேயே கடனாளியை எதிர்த்து வழக்கினைத் தொடுக்கலாம். ஆனால், ஈட்டுறுதி செய்த ஒருவர் அவ்வாறு செய்ய முடியாது.

ஒப்பந்தம் ஒன்று பொறுப்புறுதியா ஈட்டுறுதியா என்பதனைக் கண்டறியும் ஒரு முறை, கடமையை நிறைவேற்றும் பொறுப்பு, கடனாளியினுடைய வேண்டுகோளின் பேரில் ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்பதைக் கண்டறிவதேயாகும். அவ்வாறு, கடமையை நிறைவேற்றும் பொறுப்பு, கடனாளியின் வேண்டுகோளின் பேரில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அஃது ஒரு பொறுப்புறுதி ஒப்பந்தமாகும். கடமையை நிறைவேற்றுகின்ற பொறுப்பு, கடனாளியின் வெளிப்படையான அல்லது உள்ளார்ந்த வேண்டுகோள் ஏதுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அஃது ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமாகும் (பெரியம்மா எதி. பனியன்ஸ் அண்ட் கம்பெனி, இ.லா.ரி.49 மதராஸ் 156—Periamma v. Banians & Co., I. L. R. 49 Madras 156). இங்கிலாந்தில், மோசடிகள் சட்டத்தின்கீழ் (Statute of Frauds) ஈட்டுறுதி ஒப்பந்தங்கள் வாய்ச்சொல் வாயிலாக இருக்கலாமெனினும், பொறுப்புறுதி ஒப்பந்தங்கள் எழுத்தாலானவையாக இருக்கவேண்டும். இருப்பினும், இந்தியாவில், சட்டம் சம்பந்தப்பட்டவரையில் இரண்டு வகையான ஒப்பந்தங்களுமே எழுத்தாலானவையாக இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. ஆனால், வாய்ச்சொல் மூலமான பொறுப்புறுதியினை எந்த ஒரு வங்கியரும் ஏற்றுக்கொள்ளமாட்டார். ஒரு வாடிக்கையாளர் அவர் அளிக்கும் வாய்ச்சொல்மூலமான பொறுப்புறுதியைப்

போன்றே நல்லவராக இருக்கலாம். ஆனால், பொறுப்புறுதியளிக்கப்பட்ட கடன் தொகை திருப்பிச் செலுத்தப்படும் முன்னரே வாடிக்கையாளர் இறந்துபோக நேரிட்டால், பின்னர் வருகின்ற நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் பொறுப்புறுதி காலாவதியாகிவிடும். பிணையாளி ஒருவர் உயிரோடிருக்கும் காலத்தில் கூட அவருக்கும் வங்கியருக்குமிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு வங்கியர் ஏதும் செய்ய முடியாத நிலையில் இருக்க வேண்டியும் வரலாம்.

நன்மை தீமைகள் (Pros and Cons)

பொறுப்புறுதிகளுக்கும் இதர வகையான பிணையங்களுக்குமிடையே நுணுக்கமான ஓர் ஒப்புமையை ஏற்படுத்துவது மிகவும் அவசியமானது என்று கருதப்படுவதற்கில்லை. முதலாவதாக, அவை வெவ்வேறு, உண்மையாக உள்ள மற்றும் நிகழ்வதற்கு வாய்ப்புள்ள பல சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற வகையில் மாற்றிக் கொள்ளத்தக்கவையாய் இருப்பதாலும் இரண்டாவதாக, அவை பல கடமைகளை வங்கியர்கள் செய்தாக வேண்டுமென்ற கட்டாயத்தை ஏற்படுத்தவில்லையாதலாலும் பொறுப்புறுதிகள் வங்கியர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மூன்றாவது, பொறுப்புறுதிகளைப் பெறுவது மிகவும் எளிது. இத்தகைய நன்மைகள் இருந்தபோதிலும், இத்தகைய பிணையங்கள் முதலாவது, பிணையாளியினுடைய தொடக்க கால மற்றும் வரும் காலத்திய செல்லும் புள்ளித் தன்மை (solvency), மற்றும் இரண்டாவது, ஒப்பந்தத்தைச் சரியான முறையிலும் முழுமையான வடிவிலும் எழுதுவது ஆகிய இரண்டிலும் முழுமையாகச் சார்ந்துள்ளது என்பதை மறந்துவிடலாகாது. பொறுப்புறுதி அளிக்கப்போகின்றவருடைய செல்லும் புள்ளித்தன்மை, தொடக்க காலத்திலும் வருங்காலத்திலும் இருக்கக்கூடிய நிலையைப்பற்றி வங்கியர் தம்மைத் தாமே திருப்திப்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில், உருப்படியான பிணையம் ஏதுமில்லாததால், கடனாளி பணம் செலுத்தத் தவறும் காலத்தில், கடன்தொகை பொறுப்புறுதி அளிப்பவரால் ஈடு செய்யப்படவேண்டும். ஒரு மனிதனின் நற்பேறு (fortune), சில வேளைகளில் முன்னிரவுக்குள் மாறிவிடலாம் என்பதனை மறந்துவிடலாகாது. சில வேளைகளில், முதல்தரமான ஒரு பொறுப்புறுதியர்கூட, கடனாளியைச் செலுத்தத் தவறியவர் என்ற நிலைக்குக் கொண்டுவரக் காரணமாயிருந்த சந்தர்ப்பச் சூழ்நிலைகளால், வெகுவாகப் பாதிக்கப்படுகிறார் என்பது பல வங்கியர்கள் அனுபவத்தில் கண்ட உண்மை.

வெளிப்படையான குறைபாடுகளுக்குச் சரிசெய் வழிகள் (Remedies for the apparent drawbacks)

சாதாரணமாக, அவருடைய நாணயத்தைப்பற்றி ஒன்றுமே அறியாத நிலையில் ஒரு நபரின் பொறுப்புறுதியினை எந்த வங்கியரும் ஏற்றுக்கொள்ளமாட்டார். பொறுப்புறுதி ஒன்று உண்மையிலேயே மதிப்பு எதையேனும் கொண்டிருக்கவேண்டுமெனில், பொறுப்புறுதியளிக்கப்போகின்றவருடைய குணவியல்பு, மற்றும் நிதி நிலைமை ஆகியவற்றைப்பற்றி வங்கியர் தேவையான விசாரணையைச் செய்ய வேண்டும். ஏனெனில், பொறுப்புறுதியளிப்பவருடைய நிதி நிலைமை திருப்திகரமாக இல்லையெனில் பொறுப்புறுதி ஒப்பந்தத்திற்கு மதிப்பு இல்லாமல் போய்விடும். பொறுப்புறுதியர் (guarantor) வங்கியருடைய வாடிக்கையாளராக இருப்பின், வங்கியரின் கடன் வழங்கு துறை, பொறுப்புறுதியரின் நிதிநிலைமைபற்றிய தகவலை அளிக்கக்கூடிய நிலையில் இருக்கும். அப்படியில்லையெனில் மற்றத் தகவல் தோற்றுவாய்கள் பயன்படுத்தப்படலாம். பொது விதியாக, இறந்துபோனால் மட்டும் நின்றுபோகக்கூடிய ஒரு நிலையான வருவாயைக் கொண்டுள்ளவர்களைத் தவிர, வேறு வழிவகை (means) ஏதுமில்லாத ஆள்களுடைய பொறுப்புறுதிகளை ஏற்றுக்கொள்வதற்கு வங்கியர்கள் தயங்குவார்கள். இருந்தபோதிலும், இத்தகைய பொறுப்புறுதியை ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், பொறுப்புறுதியளிப்பவருடைய ஆயுளின்மீது காப்பீட்டுப் பத்திரம் ஒன்றை வங்கியர் எடுத்துக்கொள்வது விரும்பத்தக்கதாகும். தம்முடைய பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்குப் பொறுப்புறுதியருக்கு வாய்ப்பளிக்கக்கூடிய குறைபாடுகள் (loopholes) பொறுப்புறுதி ஒப்பந்த வடிவமைப்பில் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்ற இரண்டாவது குறைபாட்டைப் பொறுத்தமட்டில், தகுதிவாய்ந்த வழக்குரைஞர்களால் எழுதப்பட்டு, அச்சிடப்பட்ட தம்முடைய சொந்தப் பொறுப்புறுதிப் படிவங்களை, தற்போது அநேகமாக ஒவ்வொரு வங்கியும் உபயோகத்தில் கொண்டுள்ளபடியால், இந்த வகையான இடர்ப்பாடு ஏதும் எழுவதற்கில்லை [பின்னிணைப்பு-ஆ, நமூனா எண்கள் 22 மற்றும் 22(அ) பார்க்கவும்]. இந்த நமூனாவில் உள்ள ஒவ்வொரு காப்பு வாசகமும் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகத்தான் சேர்க்கப்பட்டுள்ளது. ஏற்றுக்கொள்ளப்பட்ட நமூனாவின்படி எழுதப்படாத பொறுப்புறுதியை ஏற்றுக்கொள்வது வங்கியர் செய்யும் பெரிய தவறாகும். மிகவும் அதிகமான அளவில் ஒன்றைப்பற்றிக் கூறுவது, திறமையை அளப்பதற்கான உண்மையான சோதனையாகமாட்டாது என்ற கருத்தின் அடிப்படையில் ஆவணம் மிகவும் நீண்டதாக இருப்பதற்கும் மற்றும் புரிந்துகொள்

வதற்குச் சிக்கலான தன்மையைக் கொண்டிருப்பதற்கும் எதிராக மறுப்புத் தெரிவிக்கப்படலாம். ஆனால், அவர் எதிர்நோக்க வேண்டியதாக ஆகக்கூடிய, எதிர்பாராத நிகழ்ச்சிகள் எல்லா வற்றிற்கும் எதிராக வங்கியர் தம்முடைய நலனைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியவராக இருக்கிறார். தவறிழைப்பது என்பது தவிர்க்கமுடியாத ஒன்று எனில், குறைபாடுடைய மற்றும் முற்றுப் பெறாதவையாக உள்ள காப்புவாசகங்களைக் கொண்டுள்ள ஓர் ஒப்பந்தத்தைப் பெற்றிருப்பதைவிட இம்மாதிரியான (அதாவது நீளமான ஆவணத்தைக் கொண்டிருப்பது) தவற்றினை இழைப்பது சிறந்ததாகும். சாதாரண ஒரு கடித வடிவமைப்பிலான பொறுப் புறுதி ஒன்றினை அவர் ஏற்றுக்கொண்டிருந்தால், பல எதிர் வாக்கு வாதங்களைத் தோற்றுவித்து, தம்முடைய பொறுப்பினை முட்டுக் கட்டையிடுவது மற்றும் தவிர்ப்பது பொறுப்புறுதியர்க்கு எளிதான தாக இருக்கலாம். இத்தகைய எதிர்வாக்குவாதங்கள் இறுதியில் கிடைக்கலாம் அல்லது கிடைக்காமலும் போகலாம். எடுத்துக் காட்டாக, மூல ஒப்பந்தத்தின் வாசகத்தை எப்படியோ ஒரு வகையில் வங்கியர் மாற்றிவிட்டதாகப் பொறுப்புறுதியர் குற்றம் சாட்டலாம். இது தவிர, தொடக்கத்திலிருந்த பிணையத்திற்குப் பதிலாகப் புதிய பிணையம் ஒன்றினை, வாடிக்கையாளரிடமிருந்து வங்கி பெற்றுக்கொண்டுள்ளது, அல்லது வாடிக்கையாளரை அல்லது சக பொறுப்புறுதியரைப் பொறுப்பிலிருந்து வங்கி விடு வித்துவிட்டது அல்லது வாடிக்கையாளர் நம்பகமாக அதனிடம் ஒப்படைத்த பிணையங்களைப் பாதுகாக்கத் தவறிய குற்றத்திற்கும் வங்கி ஆளாகிவிட்டது என்பன போன்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதற்குப் பொறுப்புறுதியர்க்கு வாய்ப்பு அதிகமாகக் கிடைக் கும். ஏதோ ஒரு காரணத்தினால் பொறுப்புறுதி ஒப்பந்தம் சம்பந் தமாக ஒரு வழக்கறிஞரின் ஆலோசனையைப் பெறுவது சாத்திய மில்லை என்றாலும் அல்லது அச்சிட்ட நமூனாக்களை வங்கியர் உபயோகத்தில் கொண்டிருக்கவில்லை என்றாலும், சட்டப்படியான தம்முடைய நிலையைப் பாதிப்பு ஏதும் ஏற்படாத வகையில் வைத் துக்கொள்வதற்கு அவருடைய சொந்த அறிவு மற்றும் அநுபவம் அவருக்கு உதவும்.

பொறுப்புறுதி ஒப்பந்தங்களில் யார் ஈடுபட முடியும்? (Who can enter into Contracts of Guarantee?)

இளவர்கள், பைத்தியக்காரர்கள் மற்றும் மணமான பெண்கள் (Minors, lunatics and married women): முன்னரே குறிப் பிட்டபடி இளவர்களோடும் மற்றும் சம மனநிலை

அற்றவர்களோடும் செய்யப்படுகின்ற ஒப்பந்தங்கள் செல்லத் தகாதவை (void) ஆகும். ஆகையால், இத்தகைய நபர்களின் பொறுப்புறுதிகளை வங்கியர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பது தெளிவாகும். சீதனம் போன்ற தங்களுடைய தனிப்பட்ட சொத்துகளைக் கட்டுப்படுத்தக்கூடிய, செல்லுபடியாகத்தக்க பொறுப்புறுதிகளை மணமான இந்துப் பெண்கள் கொடுக்கலாமெனினும் அவர்களுடைய பொறுப்புறுதிகளை ஏற்றுக்கொள்வதற்கு, பொதுவாக, வங்கியர் தயங்குகின்றனர். ஏனெனில், முதன்மைக் கடனாளிக்கும் பொறுப்புறுதியருக்கும் இடையேயான உறவு மனத்தாங்கலால் பாதிக்கப்பட்டதாக ஆகலாம் அல்லது பொறுப்பினைத் தட்டிக் கழிக்கும் நோக்கத்தோடு, ஒப்பந்தத்தில் தான் கையொப்பமிட்டபொழுது அவள் ஒரு தன்னிச்சையான முகவர் (agent) அல்லளென்றும், அவளுடைய கணவரின் வலுக்கட்டாயத்திற்கு அல்லது மிகைப்பட்ட தூண்டுதலுக்கு (undue influence) உட்பட்டுச் செயல்பட்டதாகவும், குறிப்பாக அவளுடைய கணவரோ அவருடைய உறவினர் ஒருவரோ அவருடைய நண்பர் ஒருவரோ முதன்மைக் கடனாளியாக இருக்கின்றபொழுது, ஒரு மணமான பெண் வழக்காடலாம். நீதிமன்றங்கள் பொதுவாக, பெண்களின்பால் இரக்க மனம் கொண்டவையாக இருப்பதால், அதற்கு ஆதரவாக வேண்டிய சாட்சியம், மற்ற வழக்குகளில் வேண்டியதைப்போல அவ்வளவு நம்பகமானதாக இல்லாவிட்டாலுங்கூட, மேலே குறிப்பிடப்பட்ட வழக்கு (மணமான பெண்ணுக்குச் சாதகமாக) வெற்றிபெற வாய்ப்புள்ளது. அதனால், ஒரு மனைவி தம்முடைய கணவருக்காகப் பிணையாளியாக ஆகுதல், தம்முடைய தந்தைக்கு வாரிசாக ஆகக்கூடியவர் என்று எதிர்பார்க்கப்படுவர் அல்லது மிகுதியான தூண்டுதல் இருந்தது என்று எங்கெல்லாம் எதிர் வழக்காடப்படலாமோ அத்தகைய இதர தறுவாய்கள் ஆகியவை, குறிப்பாக வங்கியர் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய எடுத்துக்காட்டுகளாகும். சில வங்கிகள், மணமான பெண் பொறுப்புறுதியர்களை, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் பொறுப்பினுடைய தன்மை முழுவதும் அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளது, மற்றும் அவர்கள் தங்களின் சுய விருப்பப்படியே பொறுப்புறுதி ஒப்பந்தங்களில் கையொப்பமிடுகிறார்கள் என்று கூறும் விவராவணத்தில் (statement) கையொப்பமிடும்படி செய்கின்றன. இருந்தபோதிலும், முதன்மைக் கடனாளியினுடைய மனைவியின் பொறுப்புறுதி பெறப்படுகின்றபொழுது, வங்கியின் வழக்குரைஞர் அல்லாத வேறொரு வழக்குரைஞரால் அவளுக்குச் சிறப்பாக அறிவுரை வழங்கப்பட வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள் (Registered Companies)

பதிவு செய்யப்பட்ட நிறுமங்களின் பொறுப்புறுதிகளை ஏற்றுக் கொள்ளும்பொழுது வங்கிகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டியுள்ளது. நிறுமங்களின் சட்டப்படி (Companies Act) பதிவு செய்யப்பட்ட நிறுமங்களுக்கு, ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதில் உள்ள அதிகாரங்களைப் பொறுத்தவரையில், அத்தகைய அதிகாரங்கள், நிறுமத்தின் அமைப்புப் பத்திரம் மற்றும் சங்க நடைமுறை விதிகள் ஆகியவற்றைப் பொறுத்து அமையும் என்று முன்னரே கூறப்பட்டுள்ளது. பெரும்பாலான நிறுமங்களின் அமைப்புப் பத்திரம், நிறுமத்தின் பலவகையான நோக்கங்களையும் விவரமாகக் குறிப்பிட்டபின், 'அதனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதோடு சம்பந்தப்பட்ட எல்லா வகையான நடவடிக்கைகளையும், செயல்களையும்' செய்வதற்கு நிறுமத்திற்கு அதிகாரத்தை அளிக்கின்ற ஒரு பொதுவான சரத்தினைக் கொண்டு முடிவடையும். இத்தகைய நிறுமங்களின் விஷயத்தில், சங்கச் சரத்துகளின்படி, நிறுமம் பயன்படுத்திக்கொள்ளத்தக்க, குறிப்பிட்ட வேறு பல அதிகாரங்களும் அனுமானம் செய்துகொள்ளப்படுகின்றன. வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுமத்தைப் பொறுத்தவரையில், அதனுடைய அமைப்புப் பத்திரத்தில் அவை வெளிப்படையாகக் கூறப்படாவிட்டாலுங்கூட, அதனுடைய தொழிலைச் சரியான முறையில் நடத்திச் செல்வதற்குத் தேவையான சாதாரண வணிக நடவடிக்கைகள் அதனுடைய அதிகாரங்களுக்கு உட்பட்டவையாகும் என்று அனுமானம் செய்துகொள்ளப்படுகின்றது. இருந்தபோதிலும், நிறுமம் தன்னுடைய சொந்தத் தொழிலுக்காகப் பணம் கடன் பெறுவதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது என்று அனுமானம் செய்து கொள்வது என்பது, பொறுப்புறுதியினை அளிக்கின்ற நிறுமத்தினுடைய வாடிக்கையாளர்களாய் அவர்கள் இருந்தாலுங்கூட, இதர ஆள்களுக்கு அளிக்கப்படும் கடன்களுக்குப் பொறுப்புறுதியினை அளிக்கின்ற அதிகாரம் நிறுமத்திற்கு உள்ளதென அனுமானம் செய்துகொள்வதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது ஆகும். நீதிமன்றங்கள், குறிப்பாக உள்ளார்ந்த அதிகாரங்களின் கோட்பாட்டினைப் (doctrine of implied powers) பொறுத்த வரையில் வெறியார்வமுடையவையாக (jealous) இருப்பதாலும், நிறுமத்தினுடைய தொழிலின் தன்மையைக் கருத்தில் கொண்டு பார்க்கின்றபொழுது, அத்தகைய அதிகாரம் தேவையாய் உள்ளது என்று அவை திருப்தியடைந்தாலன்றி நிறுமத்தினுடைய சட்ட அமைப்பில் (constitutions) அத்தகைய அதிகாரம் இருப்பதாக நீதிமன்றங்கள் கருதுவதில்லையாதலாலும், பொறுப்புறுதி அளிப்பதற்கான ஓர் அதிகாரம் இருப்பதாக எளிதில்

அனுமானம் செய்துகொள்ள முடியாது. இருப்பினும், அவ்வாறு செய்வதற்கு அதனுடைய அமைப்புப் பத்திரமும், சங்க நடைமுறை விதிகளும் வெளிப்படையாக அதிகாரம் வழங்கினாலன்றி, ஒரு நிறுமம் பொறுப்புறுதியராக இருக்கக்கூடாது என்பதுதான், இக் கருத்துச் சம்பந்தப்பட்டவரையில், மிகச் சிறந்த சட்டக் கருத்தாகும் (legal opinion). ஃபிரையரி ஹால்ராயிட் மற்றும் ஹீலியின் புருவரிஸ் லிட்., எதி. செக்காம், சான்சரி டிவிசன், டி. எல். ஆர்., அக்டோபர் 26, 1922 (Friary Holroyd and Healy's Breweries Ltd., v. Seckham, Chancery Division, T. L. R. October, 26th 1922) என்ற வழக்கில், தன்னுடன் தொழில் நடவடிக்கைகளைக் கொண்டுள்ள ஒரு நபருக்கு அல்லது நிறுமத்திற்கு, 'ஊக்க உதவி அல்லது வேறு இதர உதவி' செய்வதற்குத் தன்னுடைய அமைப்புப் பத்திரத்தில் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்பொழுது ஒரு நிறுமம் மற்றொரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரங்களுக்குப் பொறுப்புறுதி அளிக்கலாம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இருப்பினும், இத்தகைய அதிகாரங்கள் நிறுமத்தினுடைய நோக்கங்களை மேலும் மேலும் அடையும் பொருட்டு மட்டுமே பயன் படுத்தப்படவேண்டும்.

இதர முன்னெச்சரிக்கைகள் (Other precautions)

பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுமத்தினுடைய பொறுப் புறுதியினை ஏற்றுக்கொள்ளுமுன், இந்திய நிறுமங்களின் சட்டம் கோருகின்றபடி நிறுமம் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா என வங்கியர் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வா றில்லையென்றால், பதிவுபெறாத கூட்டமைப்பின் சொத்துகளுக்கு எதிராகவோ, கூட்டமைப்பினுடைய தொழிலை நடத்திச் செல்கின்ற உறுப்பினர்களுக்கு எதிராகவோ பொறுப்புறுதியினைச் செயல்படுத்த எண்ணுகின்றபொழுது, குறிப்பிடுமளவிற்குச் சட்டப் படியான இடையூறுகளைச் சமாளிக்க நேரிடலாம். தம்முடைய பங்குநர்களால் முறையாக வழங்கப்படவேண்டிய மூலதனத்தைப் பெறும் பொருட்டு ஒரு நிறுமம் கடன் வாங்குவதை மேற்கொண் டால், கடனீந்தவர் ஒருவர் நிரந்தரமான ஒரு கடனை அளித்த இடர்ப்பாட்டினைக் கொண்டவராக ஆவதற்கு வாய்ப்புள்ளது. ஓர்-ஆள் (one-man) நிறுமம் ஒன்று வரையறுக்கப்பட்ட நிறும மாகப் பதிவுசெய்யப்படுவது பொதுவாக நடைபெறாத ஒன்றன்று. எனவே, இத்தகைய நிறுமங்களில் தோற்றுவிப்பாளர் தம்முடைய தனிப்பட்ட பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். கடனீட்டுப் பத்திரங்களைப் பிணையமாகப் பெற்றுக்கொள்ளும்பொழுது, பணம் கொடுத்தலை ஒரு கடனாக வழங்கும்படி வங்கியர்

அறிவுறுத்தப்படுகிறார். நிறுமம் ஒன்று பிற்போக்கு நிலையை (setback) அனுபவித்துக் கொண்டிருக்கிறது, மற்றும் வங்கியர் அந்த நிறுமத்தால் அளிக்கப்பட்ட பொறுப்புறுதியினை ஏற்கெனவே ஏற்றுக்கொண்டுள்ளார் என்றால், கடன் வாங்கியவர் தம்முடைய பொறுப்பினைத் தீர்க்கமுடியாமல் போகின்றபொழுது வங்கியர் இடர்வாய்ப்பிற்கு உள்ளாகிறார். அதன் விளைவாக, நிறுமத்தின் சொத்துகளைப் பிணையமாகக் கொண்ட கடனீட்டுப் பத்திரம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் முடிவெடுக்கலாம்; ஆனால் கடனீட்டுப் பத்திரங்கள் விடுக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள் நிறுமம் கலைக்கப்படவேண்டிய நிலை தோன்றினால், கடனீட்டுப் பத்திரம் விடுக்கப்பட்ட பின்னர் உடனே தொடருகின்ற காலத்தில் நிறுமம் செல்லும் புள்ளித் தன்மையோடு இருந்தது என்று நிரூபிக்கப்பட்டாலன்றிப் பிரதிபலனைப் பெற்றுக்கொண்டதற்காகக் கொடுக்கப்பட்ட புதிய கடனின் அளவுக்குத் தவிர, பொதுவான ஒற்றியைப் (floating charges) பொறுத்தவரையில், கடனீட்டுப் பத்திரம் செல்லாததாகிவிடும். நிறுமம் ஒன்று, மற்றொரு நிறுமத்தினுடைய கடனீட்டுப் பத்திரங்களைப் பொறுப்புறுதி செய்திருந்து, கடன்பெற்றுள்ள நிறுமம் தன்னுடைய தொழிலைக் கலைக்கின்ற செயல் நிகழுமானால், சாதாரணப் பங்குநர்களைக் காட்டிலும், தங்களின் பங்குகளின்மீது செலுத்தப்பட்டுள்ள பணத்திற்கு (நிறுமத்தினுடைய) சொத்துகளின் மீது முன்னுரிமையைக் கொண்டுள்ள, பொறுப்புறுதியளித்துள்ள நிறுமத்தினுடைய முன்னுரிமைப் பங்குநர்களின் நலன், நியாயமற்றமுறையில், மற்றொரு நிறுமத்தினுடைய நன்மைக்காக, பொறுப்புறுதிக் கடன் தொடர்பான அசாதாரணப் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. முதன்மைக் கடனாளிக்கும் பிணையாளிக்கும் இடையிலான ஒப்பந்தம் தவிர்தகு (voidable) அல்லது செல்லாத ஒன்று (void) ஆக இருக்கும் பொழுதுகூட, பிணையாளி (surety) தம்முடைய பொறுப்புறுதியின் மீது பொறுப்பாளியாவார். ஆனால், பொறுப்புறுதியினை அளிப்பது, பொறுப்புறுதியை அளிக்கின்ற நிறுமத்திற்கு வரம்பு மீறிய செயலாக இருப்பின் நிறுமம் பொறுப்பாளியாகாது. ஆகையால், அவற்றின் அமைப்புப் பத்திரமும், சங்க நடைமுறை விதிகளும் இதற்கான காப்பு வாசகங்களை வெளிப்படையாகக் கொண்டிருந்தாலன்றிப் பதிவு செய்யப்பட்ட நிறுமங்களின் பொறுப்புறுதிகளை வங்கியர்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது பொதுவாக விரும்பத்தக்கதாகும். பொறுப்புறுதியராக இருப்பதன்மூலம் நிறுமம் என்ன நன்மையைப் பெறப்போகின்றது, அல்லது பொறுப்பினை ஏற்றுக்கொள்வதற்கு என்ன பிரதிபலனைப் பொறுப்புறுதியளிக்கும் நிறுமம் பெறுகின்றது போன்ற வினாக்களை

எழுப்புவது பங்குநர்கள் எடுத்துக்கொள்ளவேண்டிய, விரும்பத்தக்க முன்னெச்சரிக்கையாகும்.

வங்கியர் ஒருவர் பதிவுசெய்யப்பட்ட நிறுமம் ஒன்றினுடைய பொறுப்புறுதியை ஏற்றுக்கொள்வதற்கு ஒப்புக்கொள்ளுகின்ற பொழுது, பொறுப்புறுதி, நிறுமத்தின் சார்பாக, குறிப்பாக அதனுடைய இலச்சினையின்கீழ் (seal), நிறுமத்தினுடைய இயக்குநர் அவையின் தீர்மானத்தினால் அவ்வாறு செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ள நிறுமத்தினுடைய இயக்குநர் ஒருவரின் அல்லது வேறோர் அதிகாரியின் கையொப்பத்துடன் கொடுக்கப் படவேண்டுமென்பது வழக்கமாகும். தீர்மானத்தினுடைய நகல் ஒன்று (இயக்குநர் அவை) பெருந்தலைவரால் கையொப்பமிடப்பட்டு, நிறுமத்தின் செயலாளரால் மேற் கையொப்பமிடப் பட்டுப் (countersigned) பெற்றுக்கொள்ளப்படுவது விரும்பத் தக்கதாகும்.

கூட்டு வணிக நிறுவனங்கள் (Partnership Firms)

தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்கள், இதர நபர்களுக்கு வழங்கப் படும் கடன்களுக்குப் பொறுப்புறுதியளிப்பது வழக்கில் இல்லாத ஒன்றாகும். அதன்படி, ஒரு கூட்டாளி, தன்னுடைய சக கூட்டாளி களைப் பொறுப்புறுதிகளின் மூலம் கட்டுப்படுத்த முடியுமென்று கருதுவதற்கில்லை. இருப்பினும், கீழ்க்காணும் தறுவாய்களில் அவர் அவ்வாறு செய்யலாம் :

(அ) பொறுப்புறுதி அளிப்பதென்பது நிறுவனத்தினுடைய வழக்கமான தொழிலின் ஒரு பகுதி என்றிருக்கும் பொழுது.

(ஆ) இத்தகைய பொறுப்புறுதிகளை அளிப்பதற்கு, மற்றக் கூட்டாளிகளின் தெளிவான அதிகாரத்தை, ஒரு கூட்டாளி பெற்றிருக்கின்றபொழுது.

இத்தகைய பொறுப்புறுதிகள் நிறுவனத்தின் பெயரில் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும். அதனுடைய மேல்வரைப் பற்றுக் கணக்கு பொறுப்புறுதி செய்யப்பட்டிருந்தால், ஏதாவது ஒரு கூட்டாளியின் மரணம், நொடிப்பு நிலை, விலகுதல் அல்லது புதிய கூட்டாளிகளைச் சேர்த்துக்கொள்ளுதல் ஆகிய சமயங்களில் நிறுவனத்தின் கணக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுப் புதிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இவ்வாறு செய்வது, கிளேடனின் வழக்கு விதி (Rule in Clayton's case) செயல்படக் கூடிய வாய்ப்பினைத் தடுக்கவும் கூடும்.

பிரதிபயன் (Consideration)

மற்ற ஒப்பந்தங்களைப் போலவே பொறுப்புறுதி ஒப்பந்தமும் பிரதிபயன் ஒன்றினைக் கொண்டதாக இருக்கவேண்டியது அவசியமாகும். 1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், 127ஆவது பிரிவு ஒரு பொறுப்புறுதிக்கான பிரதிபயனுக்குப் பின்வருமாறு விளக்கம் கூறுகின்றது :

> 'முதன்மைக் கடனாளியின் நன்மைக்காகச் செய்யப்பட்ட ஏதாவதொன்று அல்லது கொடுக்கப்பட்ட ஏதாவதோர் உறுதிமொழி, பொறுப்புறுதி அளிப்பதற்காகப் பிணையாளிக்குப் போதுமானதொரு பிரதிபயனாக இருக்கலாம்.'

இதிலிருந்து பிரதிபயன் என்பது பொறுப்புறுதியரின் நன்மைக்காகச் செய்யப்பட்ட ஏதோ ஒன்றாக அவசியம் இருக்கவேண்டுமென்பதில்லை என்பது தெளிவு. ஆனால், முதன்மைக் கடனாளியின் நன்மைக்காகச் செய்யப்பட்ட ஏதாவதொன்று, பொறுப்புறுதியர்க்கு ஒப்பந்தத்தைச் செல்லுபடியாகத் தக்கதாகச் செய்வதற்குப் போதுமான பிரதிபயனாகக் கருதப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, திரு. ஹிராலால் என்பவர், திரு. காசிநாத் *(கடனளித்தவர்)* என்பவரை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் திரு. சூட்சி (முதன்மைக் கடனாளி) என்பவர்மீது வழக்குத் தொடர்வதற்குப் பொறுத்திருக்குமாறு கேட்டுக்கொண்டு, திரு. காசிநாத் அவ்வாறு செய்தால், திரு. சூட்சி பணம் செலுத்தத் தவறும் காலத்து, திரு. ஹிராலால் அத் தொகையைத் தாம் கொடுப்பதாக உறுதியளித்தால், காசிநாத் வழக்குத் தொடர்வதற்குக் காலம்தாழ்த்திக் கொண்டு பொறுத்திருக்கின்ற செயல் பொறுப்புறுதிக்குச் சிறந்ததொரு பிரதிபயன் ஆகும். இருந்தபோதிலும், திரு. ஹிராலால், திரு. சூட்சியின்மீது வழக்குத் தொடர்வதற்குப் பொறுத்திருக்குமாறு திரு. காசிநாத்தைக் கேட்டுக் கொள்வதற்குப்பதிலாக, நீதிமன்றத்தினுடைய அனுமதியுடன் ஒரு பகுதியை மட்டும் நிறைவேற்றி முழுப் பொறுப்பையும் தீர்த்துக் கொள்ளக்கூடியதான, குற்றவியல் சம்பந்தமான வழக்கு ஒன்றினைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி திரு. காசிநாத்தைக் கேட்டுக் கொண்டு, ஆனால் நீதிமன்றம் தேவையான அனுமதியை அளிக்க மறுத்துவிட்டால், அப்போது பிரதிபயன் இல்லாமல் போகிறது. எனவே, ஹிராலால் திரு. காசிநாத்துக்குப் பெறுப்பாளியல்லர்.

உண்மையை மறைத்துப் பெறப்பட்ட பொறுப்புறுதி ஒப்பந்தங்கள் (Contracts of guarantee obtained by concealment)

பொறுப்புறுதி ஒப்பந்தம் ஒன்று, வழக்கறிஞர்களுக்குத் தெரிந்த வரையில், 'முழு நம்பிக்கையில்' (Uberrimae fidei) எழுகின்ற

அதாவது, அதனைச் செயல்படுத்துவதில் நல்ல நம்பிக்கை நிலவ வேண்டியிருக்கின்ற ஒன்றா இல்லையா என்பது மிகத் தேர்ந்த சட்ட நிபுணர்களைக்கூடத் தடுமாற வைக்கின்ற ஒன்றாக இருந்துவருகின்றது. அவ்வாறு செய்தால் மோசடியில் சம்பந்தப் பட்டதாகும் என்பது ஒரு புறமிருக்க, பொறுப்புறுதியர்க்கு அவற்றைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியது எவ்வளவு முக்கிய மானதாக இருப்பினும், கணக்கின் நிலைமை அல்லது வரலாறு, அல்லது கடனாளியின் நிதிநிலைமை அல்லது வியாபார நாணயம் ஆகியவற்றைப்பற்றித் தனக்குத் தெரிந்தவற்றை வெளியிடு வதற்குத் தானே முன்வருவது ஒரு வங்கிக்குத் தேவையற்ற ஒன்று என்று ஒருபுறம் வாதிடப்படுகின்றது. சென்னை உயர்நீதிமன்ற முறையீட்டு வழக்கொன்றில் (appeal case) [(இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா எதி. அவனாசி செட்டியார் (1930) 53, மத. 826 (831)—Imperial Bank of India v. Avanasi Chettiar (1930) 53, Mad. 826 (831)] பிணையாளியாகவே அதுபற்றிய எந்தத் தகவலையும் கேட் காதபோது, முதன்மைக் கடனாளியினுடைய கடந்தகாலக் கடன் பொறுப்புகளைப்பற்றிய எந்த ஒரு தகவலையும் ஒரு பிணையாளிக்கு அளிப்பதற்குத் தானாகவே முன்வரவேண்டுமென்ற கடப்பாட்டிற்கு (obligation) வங்கி உட்பட்டதன்று என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஒரு பொறுப்புறுதியினைக் கோருவதற்கான காரணம், உண்மையில், முதன்மைக் கடனாளியினுடைய நாணயத்தின்மீது கொண்டுள்ள அதிருப்தியே ஆகும், மாறாக, விதிவிலக்காக இருக்கக்கூடிய சில சந்தர்ப்பங்களில் இத்தகைய தகவல்களை வங்கியர், தாமாகவே அளிப்பதற்குக் கடமைப்பட்டுள்ளார் என்னும் கருத்தினை ஆதரிக்கின்றவர்களும் உண்டு. பிணையாளியைக் கையொப்பமிடுமாறு கேட்கப்பட்டுள்ள பொறுப்புறுதி ஒப்பந்தத் திற்கு முற்றிலும் எதிரான, இரகசிய ஏற்பாடு ஏதும் அவருக்கும் (வங்கியருக்கும்) அவருடைய வாடிக்கையாளருக்குமிடையே இருக்குமானால், அதனைப் பிணையாளிடமிருந்து வங்கியர் மறைத்து வைக்கக் கூடாது. நடவடிக்கையைப் பாதிக்கக்கூடிய சம்பந்தப்பட்ட கேள்விகளைப் பிணையாளி கேட்டால், அவற் றிற்கு, பிணையாளி ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்குமுன் வங்கியர் பதிலளிக்க வேண்டும். பிணையாளி (suretyship) ஒப்பந் தம் செயலில் இருக்கின்றபொழுதுங்கூட, பொறுப்புறுதியர் ஒருவர் வங்கியரை அணுகி, அவர் அளித்துள்ள பொறுப்புறுதியின் காரண மாக அவருக்கு உள்ள பொறுப்பின் அளவு சம்பந்தப்பட்ட தகவல் களைக் கேட்கலாம். இருந்தபோதிலும், இவ்வாறு செய்வதால், தம் முடைய கடனாளியினுடைய கணக்கினைப் பொறுத்தவரையில் இர கசியத்தைக் கடைப்பிடிக்கவேண்டிய கடமையை வங்கியர் மறந்து

விடவேண்டும் என்பது பொருளன்று. இந் நூலின் ஆசிரியர் அறிந்த வரையில், ஒரு பிணையாளியிடத்தில்கூட, கணக்கு நடவடிக்கை களைப்பற்றியும், வாடிக்கையாளரின் தொழிலைப்பற்றியும் விவா திப்பது வங்கியரின் தகுதிக்கு உட்பட்டது என்று எந்த ஒரு நீதி மன்றமும் இதுவரை தீர்ப்பளிக்கவில்லை. நேஷனல் புரொவின் ஷியல் பாங்க் எதி. கிளானக் (1913), 3 கே. பி. 335 (339) [National Provincial Bank v. Glanuk (1913) 3 K. B. 335 (339)] என்ற வழக்கினுடைய தீர்ப்புப்படி, தம்முடைய ஐயங்களையெல்லாம், பிணையாளியினுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்ற கடப்பாடு வங்கிக்கு இல்லையாதலால், வாடிக்கையாளருடைய கணக்கு அதிகப் பற்றில் உள்ளது என்ற உண்மை, வாடிக்கையாளர் பொறுப்புறுதியரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார் என்று வங்கி சந்தேகிக்கும்படி செய்தாலுங்கூட, அந்த உண்மையை, வங்கி, பொறுப்புறுதியர்க்குத் தெரியப்படுத்தவில்லை என்ற காரணத்திற் காகப் பொறுப்புறுதி செல்லாதது என்று ஆக்கப்படவில்லை. இருந்த போதிலும், 'கூறவேண்டாததைப்பற்றி மிகச் சிறிது கூறினாலும், கூறவேண்டியதைப்பற்றிக் கூறுவதற்கு மிகச் சிறிது தவறினாலும், அவை ஒப்பந்தத்தைத் தவிர்ப்பதற்குப் போதுமானவை' ஆதலால், பிணையாளியாகப் போகிறவரால் கேட்கப்பட்டால், சந்தர்ப்பம் வாடிக்கையாளரின் கணக்கைப்பற்றிக்கூடத் தகவல் வெளியிடப்படு வதை நேர்மையானதெனக் காட்டக்கூடிய முறையில், தேவையான தகவலை நேர்மையுடனும், தம்முடைய திறமைக்கேற்றவாறும் அவர் (வங்கியர்) வழங்க வேண்டும். திரித்துக் கூறுதல் என்ற இடர் வாய்ப்பு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இருப்பதால், இத்தகைய சந்தர்ப்பங்களில்கூட, தேவையான தகவலைக் கொடுக்கும் பொழுது, ஒரு வங்கியர், எப்போதும் அதிக விழிப்புடன் இருப்ப தென்பது முடியாததாகும். பிணையாளிகளுடன் ஆன பேட்டிகளின் போது, 'சுருங்கச் சொல்லப்பட்டவை விரைவில் திருத்திக் கொள்ளப்படுகின்றன', என்பது வங்கியர் கடைப்பிடிக்கவேண்டிய சிறந்த நெறியுரையாகும்.

உண்மையை மறைத்து வைப்பது, பொறுப்புறுதியின்மீது ஏற்படுத்தும் விளைவுகள் (Effects of concealment on guarantee)

காப்பீட்டு ஒப்பந்தங்களைப் போலல்லாமல், தகவல் அளிப்பது என்பதைப் பொறுத்தமட்டில், முன்னரே குறிப்பிடப்பட்டபடி, மிக உயர்ந்த அளவிலான நம்பிக்கை (utmost faith) என்னும் தத்துவம், பொறுப்புறுதி ஒப்பந்தங்களுக்கு அடிப்படையாக அமையாது, 1872 ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், 143ஆம் பிரிவின் வாசகம், பொறுப்புறுதியருக்கு, முக்கியமான உண்மைகளைப்பற்றிய முழுமை

யான தகவலைக் கொடுக்கவேண்டுமென்ற வரம்பேதுமில்லாத கடமை, கடனாளரின்மீது சுமத்தப்பட்டுள்ளது என்ற எண்ணத்தைக் கொடுத்தபோதிலும், உண்மையை மறைக்கின்ற செயல் பொறுப்புறுதிகளின் மீது ஏற்படுகின்ற விளைவினைப் பொறுத்த மட்டில், ஆங்கிலச் சட்டத்திற்கும் இந்தியச் சட்டத்திற்கும் இடையே முக்கியமான வேறுபாடு ஏதும் இருப்பதாகத் தோன்ற வில்லை. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 143ஆம் பிரிவில் உள்ள, 'மௌனமாயிருத்தல்' என்னும் கருத்து, வெறுமனே (உண்மையை) வெளியில் காட்டாத தன்மையிலிருந்து வேறுபட்ட, வேண்டுமென்றே (உண்மையை) மறைக்கின்ற தன்மையைக் குறிக்கின்றது. மிக முக்கியமான சந்தர்ப்பச் சூழ்நிலை ஒன்றினை வேண்டுமென்றே மறைக்கின்றபொழுது இருப்பதுபோல, உண்மையை வெளியிடாமல் வைத்திருப்பது ஏமாற்று நடவடிக்கையாக இருக்கவேண்டும் [பால்கிருஷ்ணா எதி. பாங்க் ஆப் பெங்கால், 15, பாம். 585 (591)—Balkrishna *v.* Bank of Bengal, 15, Bom. 585 (595)]. இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா எதி. அவனாசி செட்டியார் (1930), 53 மத. 826 (831) என்ற வழக்கிலும் இதே தீர்ப்பு வழங்கப்பட்டது.

கீழ்க்காணும் எடுத்துக்காட்டு, வாசகருக்கு நிலையைத் தெளிவாக்கும் என்று நம்பப்படுகிறது. திரு. பட்டாசார்யா என்ற வங்கியர் ஒருவர், திரு. குப்தா என்பவரை ரொக்கக் கணக்கராக (cashier) அமர்த்துகின்றார். பின்னர், தம்முடைய பணிமுதல்வர் (employer) சார்பாகப் பெற்ற சிறிது பணத்திற்குக் கணக்களிப்பதற்குத் திரு. குப்தா தவறியதால், தம்மால் பெறப்படும் பணத்திற்குச் சரியான கணக்கினைக் காட்டுவார் என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு பிணையாளியைக் கொண்டுவருமாறு கேட்கப்படுகிறார். திரு. குப்தாவின் வேண்டுகோளுக்கிணங்கத் திரு. தேஷ்பாண்டே என்பவர் அவருக்காகப் பொறுப்புறுதியளிக்கிறார். இதில் திரு.பட்டாசார்யா, திரு.குப்தாவின் முந்தைய நடத்தையைப்பற்றித் திரு. தேஷ்பாண்டேக்குத் தெரியப்படுத்தத் தவறினால் பொறுப்புறுதி (ஒப்பந்தம்) செல்லாதது என்று ஆகிவிடும். அதேபோல, திரு. கரீம்பாய் என்பவருடைய வேண்டுகோளுக்கிணங்கத் திரு. லால்ஜி என்பவர் திரு. கரீம்பாயினுடைய ஏற்கெனவே உள்ள மற்றும் எதிர்காலத்திய பொறுப்புகளுக்கு, ஒரு குறிப்பிட்ட தொகை வரைக்கும் திரு. பீர்பாய் என்பவருக்குப் பொறுப்புறுதியளித்து, அந்தக் குறிப்பிட்ட அளவு (கடன்) ஏற்கெனவே தாண்டப்பட்டிருந்து, பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் பிணையாளி கையொப்பமிடுவதற்குமுன், இந்த உண்மையைக் கடனாளர் பிணையாளிக்குத் தெரிவித்தாலன்றி, முக்கியமான உண்மை மறைக்கப்பட்டது என்ற காரணத்திற்காக, பொறுப்புறுதி ஒப்பந்தம் தவிர்தகு (voidable) ஒப்பந்தமாக ஆகி

விடும். இருந்தபோதிலும், கடனாளியோடு தாம் கொண்டிருந்த முந்தைய நடவடிக்கைகளைப்பற்றிய செய்திகளை முழுமையாகவும், விவரமாகவும் தாமே முன்வந்து வெளியிட வேண்டுமென்பது வங்கியர் ஒருவருடைய கடமையின் ஒரு பகுதியாக ஆகாது என்பது இங்குக் குறிப்பிடப்படவேண்டும். வைதிஸ் எதி. லேபௌசர் (1858) 3 டி. ஜி. மற்றும் ஜே. 539 (Wythes v. Labouchere (1858) 3 De. G. and J. 593) என்ற வழக்கில், லார்டு சான்சலர் செம்ஸ்போர்டு, கடனாளரைப் பற்றிப் பேசும் பொழுது, 'கடனாளியினுடைய நாணயத்தைப் பாதிக்கக்கூடிய விஷயங்களைப் பற்றி அல்லது அவருடைய நிலையை மிகவும் இக்கட்டானதாக ஆக்கக்கூடிய, தற்போது அவர் ஈடுபடுவதற்கு உள்ள நடவடிக்கையோடு தொடர்பேதுமில்லாத ஒரு சூழ்நிலையைப் பற்றி, பொறுப்புறுதி அளிக்கப் போகின்றவருக்குத் தெரிவிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு அவருக்கு இல்லை' என்று கூறினார். வெஸ்ட்மினிஸ்டர் பாங்க் லிட். எதி. காண்ட் (Westminster Bank Ltd. v. Cond.) என்ற வழக்கில் காப்பீட்டுப் பத்திரங்களை வைப்புச் செய்தும், இரண்டு பொறுப்புறுதியர்களின் பிணையங்களால் உத்தரவாதம் செய்யப்பட்டும் ஏற்கெனவே மேல்வரைப்பற்று ஒன்றினைப் பெற்றிருந்த, வங்கியின், B என்ற வாடிக்கையாளர் தம்முடைய மேல்வரைப் பற்றுக்கடனைக் கூட்டுவதற்கு விரும்பினார். மேற்கொண்டு பொறுப்புறுதி ஏதுமின்றி (மேல்வரைப் பற்றினை அளிப்பதற்கு) தமக்கு விருப்பமின்மையை வங்கி தெரிவித்தது. எதிர்வாதி (defendant), வங்கி மேலாளரைப் பேட்டி கண்டார்; B-யினுடைய எதிர்காலத்தைப் பற்றிக் கேட்கப்பட்டபொழுது, B வாங்கிக் கொண்டிருக்கும் சம்பளத்தைக் கொண்டு நோக்கும் பொழுது, நியாயமான ஒரு கால அளவிற்குள் தம்முடைய மேல்வரைப்பற்றுத் தொகையைத் திருப்பிச் செலுத்தக்கூடிய நிலையில் அவர் இருக்க வேண்டுமென்று வங்கி மேலாண்மையர் கூறினார். எதிர்வாதி, B-யினுடைய கணக்கு ஏற்கெனவே மேல்வரைப்பற்றில் இருந்ததா என்று மேலாளரைக் கேட்கவில்லை. B, ஒரு வகையில்லாத புள்ளியாக (insolvent) ஆனபொழுது, B-யினுடைய கணக்கு ஏற்கெனவே மேல்வரைப்பற்றில் இருந்தது என்ற உண்மையைத் தெரிவிக்க வேண்டிய கடமைக்கு வங்கி மேலாளர் உட்பட்டவர் என்று காரணம் காட்டி, எதிர்வாதி தம்முடைய பொறுப்பினை ஏற்பதற்கு மறுத்துவிட்டார். பிரதிவாதி தம்முடைய பொறுப்புறுதியினைக் கொடுப்பதா, வேண்டாமா என்று முடிவு செய்வதற்கு ஏற்கெனவே இருந்த மேல்வரைப்பற்று முக்கியமானதாய் அமையும் என்பதை மேலாளரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு ஒன்றுமே இல்லையென்றும், குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பச் சூழ்நிலைகளில்,

முற்றிலும் உத்தரவாதமளிக்கப்பட்ட மேல்வரைப்பற்று ஒன்று ஏற்கெனவே இருந்தது என்ற உண்மையை வெளிபடுத்தவேண்டிய கடமை மேலாளருக்கு இல்லையென்றும் நீதிபதி குறிப்பிட்டதால், வங்கிக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

தவறாக விவரித்துக்கூறுதலின் அல்லது கருப்பொருள் உண்மைகளை வெளிப்படுத்தத் தவறுதலின் விளைவுகள் (Effects of misrepresentation or failure to disclose material facts)

1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், 142 மற்றும் 143ஆவது பிரிவுகளில், பொறுப்புறுதி ஒப்பந்தம் ஒன்றைப் பெறுவது தொடர்பாக, தவறாக விவரித்துக் கூறுவது அல்லது கருப்பொருள் உண்மைகளை வெளிப்படுத்தத் தவறுவது ஆகியவைகளால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி, இந்தியச் சட்டத்தின் நிலை என்ன என்பது கூறப்பட்டுள்ளது :

> நடவடிக்கையினுடைய முக்கியமான ஒரு பகுதியைப் பற்றிக் கடனாளரே தவறுதலாக விவரித்துக் கூறியதன் மூலம் அல்லது அதுபற்றி அவருக்குத் தெரிந்திருந்து அவருடைய ஒப்புதலுடன், பெறப்பட்டுள்ள எந்த ஒரு பொறுப்புறுதியும் செல்லத்தகாததாகும் (invalied).

143ஆவது பிரிவு பின்வருமாறு கூறுகின்றது

> முக்கியமான சந்தர்ப்பச் சூழ்நிலைகளைப் பொறுத்த மட்டில் மௌனமாக இருந்து விடுவதன் மூலம், கடனாளர் பெறுகின்ற எந்த ஒரு பொறுப்புறுதியும் செல்லத்தகாததாகும்.

தவறுதலாக விவரித்துக் கூறுவதன் மூலம் பொறுப்புறுதி பெறப்பட்டால், அங்கு, தன்னிச்சையான ஒப்புதல் இல்லை (There is no free consent when guarantee is obtained by misrepresentation)

ஓர் ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள எல்லா நபர்களும் தன்னிச்சையான ஒப்புதலை அளிக்கவேண்டியது அவசியமாதலால், நடவடிக்கையின் முக்கியமான ஒரு பகுதியைப்பற்றித் தவறுதலாக விவரித்துக் கூறுவதன் மூலம் பொறுப்புறுதி பெறப்பட்டிருந்தால், அங்கு, இத்தகைய தன்னிச்சையான ஒப்புதல் இருக்கமுடியாது என்பது தெளிவு. தற்காலத்திய வங்கியர்கள், அறிந்திருந்தும் வேண்டுமென்றே பொய்யானவற்றைக் கூறுவார்கள் என்றோ, பிணையாளியாக ஆகப்போகின்றவரின் மனத்தில் பொய்யான எண்ணத்தை வேண்டுமென்றே ஏற்படுத்துவார்கள் என்றோ கருதுவதற்கு வாய்ப்பில்லை என்று அனுமானம் செய்து

கொள்ளலாமெனினும், பிணையாளிக்கு, அவர், தம்முடைய ஒப்பந்தத்தைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய, கவனக்குறைவினால் தவறுதலாக விவரித்துக் கூறப்பட்ட சந்தர்ப்பம், முற்றிலும் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள ஒன்றாகும். எனவே பிணையாளியோடு மேற்கொள்ளுகின்ற எந்தப்பேச்சுவார்த்தையிலும், பேரத்திலும், பிணையாளியாக ஆகப்போகின்றவரைத் தவறுதலாக எண்ணும்படி செய்கின்ற எதையும் தற்செயலாகக்கூட வங்கியர் கூறக்கூடாது என்று சொல்லலாம். பின்வரும் எடுத்துக்காட்டு, கவனக் குறைவாகச் செய்த ஓர் அறிவிப்பினால் ஏற்படுகின்ற விளைவினைத் தெளிவாகக் காட்டும். ஸ்டோன் எதி காம்ப்டன் (1838), 5 பிங்க், புதிய வழக்குகள் 142, (Stone *v.* compton (1838), 5 Bing, new cases 142) என்ற பழைய வழக்கில், எதிர்வாதி £ 2000-க்கான உறுதிப்பத்திரம் ஒன்றிற்கு, வங்கியினுடைய வாடிக்கையாளருக்காகப் பிணையாளியாக ஆனார். வங்கி, இந்தக் கடனுக்காக அடைமானம் ஒன்றினையும் பெற்றுக்கொண்டது. இந்தக் கடன் வழங்கப்பட்ட சமயத்தில், வாடிக்கையாளர், வங்கிக்கு ஏற்கெனவே £ 800-க்குக் கடன்பட்டிருந்தார்; ஆனால், அடைமானப் பத்திரத்தில் £ 800 உண்மையாகக் கொடுக்கப்பட்டது என்ற பொய்யான விவரம் காணப்பட்டது. அடைமானப் பத்திரம் வங்கியினுடைய சார்பாளரால் பிணையாளிக்கு வாசித்துக் காட்டப் பட்டது. பொறுப்புறுதியருக்கு வாசித்துக்காட்டப்பட்ட பொய்யான விவரம், பொறுப்புறுதி ஒப்பந்தத்தினுடைய தன்மையைக் குறைபாடு உடையதாக ஆக்கிவிட்டது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நடவடிக்கையினுடைய ஒரு முக்கியமான பகுதியை மறைப்பதன் மூலம் தவறுதலாக விவரித்துக் கூறப்பட்ட ஒரு நிகழ்சிக்கு எடுத்துக் காட்டாக, ஹிவாட்சன் எதி. வெப் (1907), 1 சான்சரி டிவிஷன். 537 (Hewatson *v.* Webb (1907), 1ch. 537) என்ற வழக்கில், ஜே. வாரிங்டனின் தீர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டவை கீழே தரப் பட்டுள்ளன. இந்த வழக்கில், தன்னுடைய சொத்து நடவடிக் கைகள் சம்பந்தப்பட்ட ஒரு பத்திரத்தின் பொருளடக்கத்தைத் தான் அறிந்திருந்தும், எதிர்வாதி தவறுதலாகத்திரித்துக் கூறிவிட்டார்; உண்மையை வெளிக்காட்டவில்லை என்பது, வழக்கிற்கு எதிராக வாதிடுவதற்குப் போதுமானதாக ஆகாது என்று தீர்ப்பளிக்கப் பட்டது. நீதிபதி வாரிங்டன், 'பத்திரத்தின் தன்மை மற்றும் குண வியல்பு ஆகியவைகளைப் பற்றித் தவறுதலாக திரித்துக் கூறுவது என்பது, அப்பத்திரத்தைச் செல்லாததாக ஆக்குகிறது என்பதைத் தவிர அதற்குமேலான கோரிக்கை எதனையும் கொண்டுள்ள ஒரு வழக்கு மேற்கோளாகக் காட்டப்படுவதற்கு என்னிடமில்லை' என்று கூறினார்.

பொறுப்புறுதியின் செயலாற்றல் எல்லை (Scope of guarantee)

பொறுப்புறுதியினுடைய செயலாற்றல் எல்லையை நிர்ணயம் செய்வதில் இரண்டு முக்கியக்கேள்விகள் எழுகின்றன: பொறுப்புறுதி திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்ட தொன்றா, அதாவது, குறிப்பிட்ட ஒரு கடனுக்குமட்டும் செயல்படுத்தப்படுவதற்கெனக் கருதப்பட்ட தொன்றா, அல்லது வங்கியருக்கும் அவருடைய கடனாளிக்கு மிடையே நடைபெறுகின்ற தொடர்ச்சியான நடவடிக்கைகளுக்குப் பொருந்தக்கூடிய தொடர்ச்சியான ஒன்றா? திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்ட பொறுப்புறுதியில் (specific guarantee) குறிப் பிட்ட கடன் அல்லது கடன்கள் திருப்பிச்செலுத்தப்பட்டவுடன் பொறுப்புறுதியரின் பொறுப்பு முடிந்துவிடும். எடுத்துக்காட்டாக, லாலா பாலக்ராம் என்பவர், சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா விடமிருந்து கடன் பெறவிரும்புகின்ற ரூ. 500 தொகைக்கு, லாலாராம் சரன் என்பவர் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்ட பொறுப்புறுதி ஒன்றினைக் கொடுக்கிறார்; இப்பொறுப்புறுதியில், லாலா பாலக்ராம், தான் கடன் வாங்கிய தொகையைத் திருப்பிச் செலுத்திவிட்டு, வங்கியிலிருந்து புதிய கடன் ஒன்றைப் பெற்றார் என்றால், லாலா ராம் சரன் புதிய கடனுக்குப் பொறுப்பாளியாக மாட்டார். மாறாக, பொறுப்புறுதி தொடர்ச்சியான ஒன்றாக இருப்பின், முதன்மைக் கடனாளி திருப்பிச் செலுத்திய தொகைகள் எவ்வளவாக இருப்பினும், அவை முந்தைய கடன்களுக்கு (earlier advances) எதிராகச் சரிக்கட்டப்படுமாகையால், பாக்கி யுள்ள கடன் தொகைக்குப் பொறுப்புறுதியர் பொறுப்பாளியாவார். இதன் காரணமாக, வங்கியர்கள், தொடர்ச்சியான பொறுப் புறுதியைப் பெற்றுக்கொள்வதையே எப்போதும் விரும்புகின்றனர்; ஏனென்றால், இத்தகைய பொறுப்புறுதியில், பொறுப்புறுதியரின் பொறுப்பு, தொடக்கக் கடனுக்கு மட்டும் வரையறுக்கப்படாமல் தொடர்ந்து வருகின்ற எல்லாக் கடன்களுக்கும் விரிவுபடுத்தப் படுகின்றது. 1932ஆம் ஆண்டு இந்தியக் கூட்டுவணிகச் சட்டம், (Indian Partnership Act, 1932), 38ஆவது பிரிவு, 'ஒரு கூட்டு வணிக நிறுவனத்திற்கு அல்லது ஒரு கூட்டுவணிக நிறுவனத் தின் நடவடிக்கைகள் தொடர்பாக மூன்றாவது நபர் ஒருவருக்கு, கொடுக்கப்பட்டுள்ள ஒரு தொடர்ச்சியான பொறுப்புறுதி, அதற்கு எதிரான ஒப்பந்தமேதும் இல்லாதவிடத்து, கூட்டு வணிக நிறுவனத்தினுடைய அமைப்பில் ஏதாவது மாற்றம் ஏற்படும் தேதியிலிருந்து எதிர்காலத்திய நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில், தள்ளுபடி செய்யப்படுகின்றது' என்று கூறுகின்றது.

அதாவது, மாறான ஒப்பந்தமேதும் இருக்கின்றபொழுது தவிர, தொடர்ந்து செல்லுகின்ற நடவடிக்கைகளுக்குப் பொருந்தக் கூடியதாக, கூட்டுவணிக நிறுவனம் ஒன்றிற்கு அது கடனாளர் (Creditor) ஒருவர் என்ற முறையில், அல்லது முதன்மைக் கடனாளியாக அது இருக்கின்றபொழுது கூட்டுவணிக நிறு வனத்தின் சார்பாக மூன்றாவது நபர் ஒருவருக்கு, ஒரு பிணையாளி அளிக்கின்ற பொறுப்புறுதி, ஒரு கூட்டாளி இறந்துபோதல், நொடித்துப்போதல் அல்லது ஒரு கூட்டாளி விலகுதல் அல்லது ஒரு புதிய கூட்டாளியைச் சேர்த்துக்கொள்ளுதல் ஆகியவைகளால், கூட்டுவணிக நிறுவனத்தின் அமைப்பில் ஏற்படும் ஒரு மாற்றத்தால், வருங்காலத்திய நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், தள்ளுபடி செய்யப்படுகிறது. தான் பெறுகின்ற தொடர்ச்சியான பொறுப் புறுதிகளில், இத்தகைய எதிர்பாராத நிகழ்ச்சிகளுக்காக வேண்டியன செய்யப்பட்டுள்ளனவா என்று ஒரு வங்கியர் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

பொறுப்புறுதியைக் கடன் முழுமைக்கும் அல்லது ஒரு பகுதிக்குமட்டும் செயல்படுத்துதல் (Application of guarantee to the whole or part of the debt)

பொறுப்புறுதி, கடன்முழுமைக்கும் செயல்படுத்தத்தக்கதாக இருந்து, ஆனால், பொறுப்புறுதியரின் பொறுப்பு ஒரு குறிப்பிட்ட அளவுத்தொகைக்குமட்டும் வரையறுக்கப்பட்டிருந்தால், வரையறுக் கப்பட்ட இந்தத்தொகைக்கும் அதிகமாகக் கடன்பட்டிருக்கும் முதன்மைக் கடனாளி கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால் வங்கியர், பொறுப்புறுதியரிடமிருந்து, அவரால் பொறுப்புறுதி செய்யப்பட்ட உச்ச அளவுத்தொகையைப்பெற்று, அதனை அனா மத்துக் கணக்கின் வரவுப்பகுதியில் வைத்துவிட்டு, கடனாளியின் சொத்துக்களுக்கு எதிராக முழுக்கடனுக்குமான தன்னுடைய உரிமையைக் கோரலாம். கடனாளியின் சொத்துகளிலிருந்து பெறப்பட்ட (பங்குத்) தொகை கடனாளியின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, பொறுப்புறுதியரிடமிருந்து பெறப்பட்ட தொகை அனாமத்துக் கணக்கிலிருந்து கடனாளியின் கணக்கிற்குக் கொண்டுபோகப்படும். ஏதாவது தொகை எச்சமாக இருப்பின், அது பொறுப்புறுதியருக்குத் திருப்பி அளிக்கப்படவேண்டும். எடுத்துக்காட்டாக, யோகோஹாமா வங்கி (லிட்.)யால், ரட்டன் சந்துக்கு வழங்கப்படும் கடனுக்கு, மோஹன்லால் என்பவர்

பொறுப்புறுதியளித்து, அவருடைய பொறுப்பினை ரூ. 1000 வரையிலும் மட்டும் வரையறை செய்திருந்தால், ரட்டன் சந்த் தன்னுடைய கடனைத் திரும்பச் செலுத்தத் தவறியபொழுது அவர் ரூ. 2000, வங்கிக்குத் தரவேண்டியுள்ளது என்று கண்டறியப் பட்டால், வங்கி, மோஹன்லாலை ரூ. 1000 தரும்படி கேட்கும். பின்னர், அது, தனக்குவரவேண்டிய முழுக்கடன் தொகையையும் ரூபாய்க்கு ஐம்பது காசுகளை பங்குத் தொகையாக (divident) அளிக்கக்கூடிய கடனாளியின் சொத்துகளுக்கு எதிராகக் கோரலாம். கடனாளியின் சொத்திலிருந்து வங்கி ரூ. 1000த்ஐப் பெறும்; இத்தொகை, மோஹன்லாலிடமிருந்து பெற்ற தொகையையும் சேர்த்து வங்கியின் கடனைத் தீர்ப்பதற்குப் போதுமானதாக இருக்கும். இவ்வாறு, பொறுப்புறுதியர் மோஹன்லால் ரூ. 1000 நட்டமடைவார். இருந்தபோதிலும், பொறுப்புறுதி, கடனின் ஒரு பகுதிக்குமட்டும் செயல்படுத்தக்கூடியதாய் இருந்தால், அவருடைய பொறுப்புத்தொகையை வங்கியருக்குச் செலுத்திய பின், பொறுப்புறுதியர், அவர் அளித்த தொகைக்கு வங்கியரின் இடத்தில் இருந்துகொண்டு, அதாவது வங்கியருக்கு உள்ள அதே உரிமைகளுடன் நின்று, கடனாளியின் சொத்துகளுக்கு எதிராகத் தன்னுடைய உரிமையை நிலைநாட்டலாம். இவ்வாறு, மேலே சொல்லப்பட்ட எடுத்துக்காட்டில், பொறுப்புறுதி கடன்தொகையில் பாதி அளவிற்கு மட்டும் தான் செயல்படுத்தக்கூடியது என்றால், மோஹன்லால், யோகோஹாமா வங்கிக்கு ரூ. 1000 தொகையைச் செலுத்தியபின், ரட்டன் சத்தினுடைய சொத்துகளுக்கு எதிராகத் தன்னுடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு உரிமைபெற்று ரூ 500 ஐப் பெற்றுக் கொள்வார். இந்நிலையில், ரட்டன் சந்தினுடைய சொத்திற்கு எதிராகத் தன்னுடைய உரிமையை, ரூ. 1000-த்திற்கு மட்டும்தான் நிலைநாட்டுவதற்கு யோகோஹாமா வங்கிக்கு உரிமையுண்டு; அவ்வாறெனில் அது ரூ. 500ஐ இழக்கும். இவ்வாறு, எல்லிஸ் எதி. இம்மானுவேல் (1876), 1 எக்ஸ். டி. 157 (Ellis *v*. Emmanuel (1876), Ex. D. 157) என்ற வழக்கில் தீர்ப்பளிக்கப் பட்டது. 'மேலெழுத்தவாறு பார்க்கின்றபொழுது வரையறை செய்யப்படாத ஒரு தொகைக்கான (floating balance) பொறுப் புறுதி, பொறுப்புறுதியளிக்கப்பட்டுள்ள தொகையோடு சேர்ந்துள்ள கடனின் ஒரு பகுதிக்கு மட்டுமே ஆன ஒன்றாகும் என இவ் வழக்கில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது; ஆனால் பொறுப்புறுதி, கடன் முழுமைக்குமான ஒன்றா அல்லது அதன் ஒரு பகுதிக்கு மட்டுமான ஒன்றா என்பது நீதிமன்றம் முடிவுசெய்யவேண்டிய ஒன்றாகும்.' ஆங்கிலோ கலிஃபோர்னியன் வங்கி எதி. இலண்டன் அண்ட் புரோவின்சியல் மெரைன் இன்சூரன்ஸ் கம்பனி (1904),

20. டி. எல். ஆர். 665 (Anglo Colifornian Bank v. London and Provincial Marine Insurance Co. (1904), 20 T. L. R. 665) என்ற வழக்கில், பல நபர்களால் கையொப்பமிடப்பட்ட £ 750–க்கான பொறுப்புறுதி, பொறுப்பு £ 750-க்கு வரையறுக்கப்பட்டு, முழுத் தொகைக்கும் ஒவ்வொருவராலும் அளிக்கப்பட்ட பொறுப்புறுதியாகும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது: மேலும், இந்த வரையறை பொறுப்புறுதியருடைய பொறுப்பின் அளவு வரையிலுந்தான் பொருந்துமேயன்றி, கடனாக அளிக்கப்போகின்ற தொகையின் அளவு வரைக்கும் அன்று என்பது கவனிக்கப்படவேண்டியதாகும். ஏனென்றால், பிந்தைய தறுவாயில், பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தொகைக்கு அதிகமான ஒரு தொகை கடனாக அளிக்கப்பட்டிருந்தால், பொறுப்புறுதி முழுவதுமே செல்லாததென ஆக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, பொறுப்புறுதி, 'எ. பி. யூசாபலி என்பவருக்கு ரூ. 500க்கு அதிகப்படியாக இல்லாத ஒரு தொகையை நீவிர் கடனாக அளிப்பதற்குப் பிரதி பலனாக, அந்தத்தொகையைத் திரும்பச் செலுத்துவதற்கு நான் பொறுப்புறுதியளிக்கிறேன்' என்று எழுதப்பட்டிருந்து, ரூ. 500க்கும் அதிகமான ஒரு தொகை எ. பி. யூசாபாலிக்குக் கடனாக அளிக்கப் பட்டிருந்தால், பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனையை கடைப்பிடிக்கவில்லை என்ற காரணத்திற்காக, பொறுப்புறுதியர் தன்னுடைய பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

வங்கியரின் கடமைகள்
(Obligations of the Banker)

மூலசரத்துகளை மாற்றுதல் கூடாது (Not to vary the Original Terms)

மாறான உடன்பாடு எதும் இல்லாவிடத்து, பிணையாளியின் சம்மதமின்றி, வங்கியர், அவருக்கும் முதன்மைக் கடனாளிக்குமிடையிலான ஒப்பந்தத்தின் மூலசரத்துகளில் மாறுதல் ஏதும் செய்யக்கூடாது; ஏனெனில், ஒப்பந்த சரத்துகளில் செய்யப்படும் இத்தகைய மாற்றம் பிணையாளியை அவருடைய பொறுப்பிலிருந்து விடுவித்துவிடும். (1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், 133ஆவது பிரிவு.) எடுத்துக்காட்டாக, 'இ' என்பவருடைய வங்கியில் ரொக்கக் கணக்கராக வேலை பார்க்கும் 'ஆ' என்பவருடைய நன்னடத்தைக்கு 'அ' என்பவர் பொறுப்புறுதியளிக்கிறார். அதன் பிறகு 'அ' வினுடைய சம்மதமின்றி, மேல் வரைப்பற்று அளிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய நட்டங்களில்

ஐந்தில் ஒரு பகுதிக்கு 'ஆ' பொறுப்புறுதியளித்தால் அவருடைய சம்பளம் மாதத்திற்கு ரூ. 100 கூட்டித்தரப்படும் என்று, 'ஆ'வும் 'இ'யும் ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள். இப்போது, மேல்வரைப் பற்றின்மூலம் வங்கி நட்டமடைந்தால் அதனை ஈடுசெய்வதற்கு 'அ' பொறுப்பாளியாகமாட்டார். ஆங்கிலச்சட்டத்தில், பிணையாளியின் நலனுக்குப் பாதகம் ஏற்படாதவரை, பிணையாளியினுடைய சம்மதமின்றி, ஒப்பந்த சரத்துகளில் மாற்றம் செய்யப்படுவது அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த விதி, இந்தியாவிலும் கூட பம்பாய் உயர்நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. (பால்கிருஷ்ணா எதி. பாங்க் ஆப் பெங்கால், 15 பாம். எல். ஆர். 585-Balkrishna *v.* Bank of Bengal, 15 Bom. L. R. 585). இருப்பினும், இந்தியாவில், வங்கியர்கள் தங்களுக்கும், தங்களுடைய முதன்மைக்கடனாளிகளுக்குமிடையேயான ஒப்பந்தங்களின் சரத்துகளை மாற்றுவதற்கென்றே, குறிப்பிட்டு, பொறுப்புறுதியர்களிடமிருந்து அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதால் பிணையாளிகளுக்கு எதிரான அவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுவதில்லை.

கடனாளியைப் பொறுப்பிலிருந்து விடுவிக்கக்கூடாது (Not to release the debtor)

வங்கியர், முதன்மைக் கடனாளியைப் பொறுப்பிலிருந்து விடுவிக்கவோ, சட்டப்படி முதன்மைக் கடனாளியைப் பொறுப்பிலிருந்து விடுவிக்கின்ற ஏதாவது ஒரு செயலைச் செய்யவோ, அல்லது சட்டப்படி முதன்மைக்கடனாளி விடுவிக்கப்படுவதற்கு அவர் ஒரு செயலைச் செய்யத் தவறியதுதான் காரணம் என்ற பழிச்சொல்லுக்கு ஆளானவராக இருக்கவோ கூடாது. (1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச்சட்டம், 134ஆவது பிரிவு.) எடுத்துக்காட்டாக, 'இ' என்பவரால் 'ஆ' என்பவருக்கு அளிக்கப்பட்ட கடனுக்கு 'அ' என்பவர் பொறுப்புறுதியளிக்கிறார். பின்னர் தொல்லைக்குட்பட்டதால், 'ஆ', 'இ' உட்பட அவருடைய கடனாளர்களோடு, அவர்களுடைய கடனிலிருந்து தன்னை விடுவிக்கின்ற பிரதிபலனுக்காக அவர்களுக்காகத் தன்னுடைய சொத்தினை ஒதுக்கிவைப்பதாக ஒப்பந்தம் செய்துகொள்கிறார். இங்கு, 'இ' 'ஆ'வை விடுவித்துவிட்டார் என்ற காரணத்திற்காக, 'அ' அவருடைய பிணையாளிப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

சகபிணையாளி ஒருவரை விடுவித்து விடுவதன் விளைவுகள் (Effects of Release of a Co-Surety)

சக-பிணையாளிகள் பலர் இருக்கின்றபொழுது, அவர்களில்

ஒருவரை பொறுப்பிலிருந்து வங்கியர் விடுவித்துவிடுவதாக ஆகாது; அல்லது அவ்வாறு விடுவிக்கப்பட்ட பிணையாளியை, மற்றப்பிணையாளிகள் அவர் மீது கொண்டுள்ள பொறுப்பிலிருந்து, விடுவித்துவிடாது (1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச்சட்டம், 138ஆவது பிரிவு). இந்நிலை ஏனெனில், பிணையாளிகளில் ஒருவரை விடுவிப்பதன் மூலம், வங்கி, அவரைச் சக பிணையாளிகளுக்குள்ள பொறுப்பிலிருந்து விடுவிக்கவில்லை. விடுவிக்கப்பட்ட பிணையாளிக்கு அளிக்கப்படும் தகுதிக்கு மிஞ்சிய சலுகை மற்றப்பிணையாளிகளை மிகவும் பாதிக்கும். இருப்பினும், ஒரு பிணையாளியை அவருடைய தனிப்பட்ட ஒப்பந்தத்திலிருந்து விடுவித்துவிடுவதென்பது, எதிர்பாராத பொறுப்புகளுக்காக ஈடு காட்டப்பட்டுள்ள, பிணையாளியினுடைய, ஒரு சொத்தினை விடுவிப்பது என்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும், ஸ்மித் எதி. வூட் (1929) 1 சான்சலர் டிவிசன் 14. (Smith *v.* Wood (1929), 1 ch. 14.) என்ற வழக்கில், அடைமானம் அளிக்கின்ற ஒரு குறிப்புப்பத்திரத்தின் மூலம், பன்னிரண்டு நபர்கள், தங்களுடைய சொத்துகளின் உரிமைப் பத்திரங்களையும், சில காப்பீட்டுப்பத்திரங்களையும், நிறுமம் பெற்றிருந்த மேல்வரைப் பற்றிற்குப் பொறுப்புறுதியளித்துவந்த எதிர்வாதியிடம், நிறுமத்திலிருந்து அவருக்கு வரவேண்டிய தொகைக்குப் பிணையமாக ஒப்படைத்தனர். அவ்வாறு ஒப்படைத்தவர்களில் ஒருவரான பெண் ஒருவர், எதிர்வாதியிடம் தான் ஒப்படைத்திருந்த மூன்று வீடுகளுக்குரிய உரிமைப்பத்திரங்களை, தான் பணம் எழுப்புவதற்கு உதவியாகத் திருப்பி அளிப்பதற்கு எதிர்வாதியை இசையவைத்துப் பெற்று, அவற்றை ஒரு கடன்பெறுவதற்குப் பிணையமாக, ஒரு வீடுகட்டும் சங்கத்திடம் அடைமானம் வைத்தார். எந்த நிறுமம் பெற்ற அதிகப்பற்றிற்கு எதிர்வாதி பொறுப்புறுதியளித்தாரோ அந்த நிறுமம் கலைக்கப்பட்டது; எதிர்வாதி, அவர் அளித்திருந்த பொறுப்புறுதியின் மீது £ 5000-க்கு பொறுப்பாளியானார். வாதியிடமிருந்து விடுவிக்கப்பட்ட சொத்துகளைத் தவிர, பிணையாக அளிக்கப்பட்ட இதர சொத்துகளை விற்றுப் பணம் பெறப்போவதாகத் தன்னுடைய நோக்கத்தைப் பிரதிவாதி கூறியவுடன், சொத்துரிமைப்பத்திரங்களை ஒப்படைப்புச்செய்து இருந்தவர்களில் எழுவர், தங்களுடைய சொத்துக்கள் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட வேண்டுமென்ற நடவடிக்கையைக் கொண்டுவந்தனர். எதிர்வாதியினுடைய நடவடிக்கை, ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள நபர்களைப்பொறுத்தமட்டில் குறிப்பிடும் அளவிலான மாற்றத்தை ஒப்பந்தத்தில் ஏற்படுத்தியுள்ளது என்றும், வாதிகள் தங்களுடைய எல்லாச் சொத்து

களையும் ஒன்று திரட்டி, அதன் மூலம், பொறுப்பு, எல்லாச் சொத்துகளின் மீதும் விகிதா சாரப்படி விழுமாறு செய்வதற்கு அவர்களிக்குள்ள உரிமையை இல்லாமல் செய்துவிட்டது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. ஒப்பந்தத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கு ஒப்புதல் அளிக்காத பிணையாளிகள் அவர்களுடைய பொறுப்பு களிலிருந்து விடுவிக்கப்பட்டதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

கவனக்குறைவாக அல்லது தவறான முறையில் பிணையங்களைக் கையாளுவதன் விளைவுகள் (Effects of negligent of improper handling of securities)

பொறுப்புறுதி ஒப்பந்தத்தில், அவர் நினைத்தபடி பிணையங் களைக் கையாளுவதை அனுமதிக்கக் கூடிய ஒரு சரத்து இருந்தா லன்றி, அவைகளின் மதிப்பைக் குறைக்கும்படியாக, கடனாளிக்குச் சொந்தமான பிணையங்களை வங்கியர் கவனக்குறைவாகவும் தவறான முறையிலும் கையாளுவது, பிணையங்கள் எந்த அளவுக் குத் தேய்மானமடைகின்றனவோ அந்த அளவுக்குப் பொறுப்புறுதி யரின் பொறுப்பினைக் குறைக்கும். அதே போல, முதன்மைக் கடனாளிக்குச் சொந்தமான சில பிணையங்களை வங்கியர் வைத்திருந்தால் அவைகளை வங்கியர் முழுவதுமாகவோ, அரைகுறையாகவோ முதன்மைக் கடனாளிக்குத் திரும்பக் கொடுத்து விடலாகாது. ஏனெனில், அவ்வாறு செய்வது பிணை யாளியினுடைய நலனுக்குக் கேடு விளைவிப்பதாகும்.

கடனாளிக்குச் சலுகையேதும் அளிக்கக்கூடாது (Not to give indulgence to the Debtor) :

பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் அதற்காக வகைசெய்யப் பட்டிருந்தால், அல்லது பிணையாளியால் அதற்கு ஒப்புதல் அளிக் பட்டிருந்தால் அன்றி, கடனாளர் (creditor) கடனாளிக்குச் (debtor) சலுகையேதும் அளிக்கக் கூடாது என்ற விதியிலிருந்து, வங்கியரின் மீது சுமத்தப்பட்டுள்ள கடமைப்பொறுப்பிற்கு மற்றொரு எடுத்துக்காட்டினை அறியலாம். முதன்மைக் கடனாளி யின் மீது வழக்குத் தொடர்வதில்லை என்று, அல்லது கடனைத் திருப்பிச்செலுத்துவதற்கான காலக்கெடுவை நீட்டிப்புச்செய்வதற்கு ஒப்புக்கொண்டு, வங்கியர், உடன்பாடு எதிலேனும் ஈடுபட்டால் பிணையாளி அவருடைய பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுவார் (1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், 135ஆவது பிரிவு). இந்த விதியில் அமைந்துள்ள தத்துவம் யாதெனில், பணம் திருப்பிச் செலுத்தப்படுவதற்கான காலக்கெடுவை வங்கியர் நீட்டிப்புச்

செய்தால் வங்கியருக்குக் கடன்பட்டுள்ள முதன்மைக் கடனாளியிடமிருந்து பணத்தைத் திருப்பிப் பெறுவதற்குப் பிணையாளிக்குள்ள வாய்ப்பினைக் குறைக்கும்படியான அளவிற்கு முதன்மைக் கடனாளியின் நிதிநிலைமை மோசமாகிவிடலாம், அல்லது வாய்ப்பு குறைந்துபோகலாம் அல்லது வாய்ப்பினை முற்றிலும் இழக்கநேரிடலாம்; முதன்மைக் கடனாளி பைத்தியமாகக்கூடிய அல்லது இறந்து போகக்கூடிய சத்தர்ப்பமும் ஏற்படலாம். இருப்பினும், ஒப்பந்தத்தில் அதற்கு மாறான சரத்து ஏதும் இல்லாவிடத்து, முதன்மைக் கடனாளிமீது வழக்குத்தொடர்வதிலிருந்து, அல்லது அவருக்கெதிராக, அவரிடமிருந்து பணம் வசூல் செய்வதற்கான நடவடிக்கை எதனையும் எடுப்பதிலிருந்து, வங்கியர் வெறுமனே பொறுத்திருப்பது, பிணையாளியை அவருடைய பொறுப்பிலிருந்து விடுவித்துவிடாது. (1872 ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச்சட்டம், பிரிவு-137). இருந்தபோதிலும் கடனாளர் வழக்குத் தொடராமல் பொருத்திருக்கின்ற கால அளவு, முதன்மைக் கடனாளிக்கு எதிரான உரிமைக்கோரிக்கை காலாவதியாகின்ற காலம் வரையிலும் செல்லக் கூடியதாக இருப்பின், பிணையாளி அவருடைய பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றாரா, இல்லையா என்ற கேள்விக்கு நீதித்துறையினுடைய கருத்து முரண்பாடாக உள்ளது. இக்கேள்விக்கு உடன்பாடான முறையில் (சாதகமாக) அலகாபாத் உயர்நீதிமன்றம் பதிலளிக்கின்றது. (சாலிக்ராம் எதி. லச்மண் [1928], 50 அல. 211) (Saligram *v*. Lachhman [1928], 50 All. 211). ஆனால், பம்பாய் மற்றும் கல்கத்தா உயர்நீதிமன்றங்களைப் பின்பற்றி, சென்னை உயர்நீதிமன்றம் எதிரான கருத்தைக் கொண்டுள்ளது. (சுப்ரமணியா எதி. கோபாலா [1910], 33 மத. 309 (Subramania *v*. Gopala [1910], 33 Mad. 309). வங்கியர் அவசியமென்று நினைத்தால், கடனாளிக்கு அவர் கால அவகாசம் அளிப்பதை அனுமதிக்கின்ற ஒரு காப்புவாசகத்தை, பொறுப்புறுதி ஒப்பந்தத்தின் சரத்துகளோடு சேர்த்துக்கொள்வது நல்லது.

பிணையாளிக்கு எதிராக வங்கியருக்குள்ள உரிமைகள் (Rights of the banker against surety)

பற்றுரிமை (right of lien) பொறுப்புறுதியின்கீழ் அவருக்குள்ள உரிமை காலாவதியாகிவிட்டது என்ற போதிலும், தன்னிடத்தில் பொறுப்புறுதியர் வைத்திருக்கின்ற கணக்கில் உள்ள இருப்புத்தொகையின்மீது வங்கியர் தன்னுடைய பற்றுரிமையைப் பயன்படுத்தலாம். இருப்பினும், பொதுவான பற்றுரிமையைப்

பயன்படுத்துவதற்கான அவருடைய உரிமை, முதன்மைக் கடனாளி கடனைத் திருப்பித் தருவதற்குத் தவறுகின்ற வரையிலும் எழாது என்பது கவனிக்கப்படவேண்டியதாகும்; முதன்மைக் கடனாளி செலுத்தத் தவறுகின்ற தறுவாயில், தான் தன்னுடைய பற்றுரிமையை, தன்னிடம் ஒப்படைத்துள்ள பொறுப்புறுதியரின் பணம் அல்லது பிணையங்களின் மீது உபயோகப்படுத்திவிட்டதாக, வங்கியர், பொறுப்புறுதியருக்கு உடனே தெரியப்படுத்தவேண்டும். இருப்பினும், பொறுப்புறுதியரிடமிருந்து தொகையைக் கோருவதற்கு முன், வங்கியர் கடனாளிமீது வழக்குத் தொடுக்க வேண்டுமென்பது கட்டாயமில்லை.

பிணையாளியின் பொறுப்பு, முதன்மைக் கடனாளியினுடைய பொறுப்பின் அளவுக்குச் சமமானதாகும் (Surety's liability co-extensive with that of the principal debtor)

1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம் 128ஆவது பிரிவின்படி பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் வேறுவகையான காப்பு வாசகமேதும் இல்லாதவிடத்து, பிணையாளியின் பொறுப்பு முதன்மைக் கடனாளியின் பொறுப்புக்குச் சமஅளவினதாகும். எடுத்துக்காட்டாக, திரு. அலி என்பவரால் ஏற்பு செய்யப்பட்ட ஒரு மாற்றுச் சீட்டின்மீது செலுத்த வேண்டிய பணத்தை, திரு. கசனாவி என்பவர் பொறுப்புறுதிசெய்திருந்தால், கசனாவி, மாற்றுச்சீட்டினுடைய தொகைக்கு மட்டுமன்றி, அதன்மீது செலுத்தவேண்டிய வட்டி, மற்றும் கட்டணங்கள் ஆகியவைகளுக்கும் பொறுப்பாளியாவார். 'ஒரு மாற்றுச் சீட்டினுடைய செலுத்துகைக்குப் பொறுப்புறுதியளிக்கும் ஒரு நபர், முதன்மைக் கடனாளி பொறுப்பாளியாக ஆகக்கூடிய எல்லாவற்றிற்க்கும் பொறுப்பாளி என்பதில் எனக்கு ஐயமேதுமில்லை' (1846) 16. எம். & டபிள்யூ. 99; பொல்லாக், சி. பி. 103ஆம் பக்கம். [(1846) 16 M. & W. 99; per pollock, C. B. at p. 103.]

நொடிப்புநிலையடைந்த பிணையாளி ஒருவருடைய சொத்துக்கு எதிராக வங்கியருக்குள்ள உரிமை (Bankers' claim against a Bankrupt surety's estate)

பிணையாளி நொடிப்புநிலையை அடையும் தறுவாயில், அவருடைய சொத்துக்கு எதிராகத் தன்னுடைய உரிமையை நிலைநாட்ட வங்கியர் உரிமையுடையவராவார். பிணையாளியின் மரணம் அல்லது நொடிப்புநிலையடைந்த செய்தியை வங்கியர் கேள்விப்பட்டவுடன் பிணையாளியால் பொறுப்புறுதியளிக்கப்பட்ட

கணக்கினை அவர் மூடிவிடவேண்டும்; தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் முதன்மைக் கடனாளி தவறினால், உடனே, இறந்துபோனவருடைய சட்டப்படியான சார்பாளரிடமிருந்து அல்லது நொடிப்புநிலையடைந்தவருடைய சொத்தாட்சி அதிகாரி (official receiver) இடமிருந்து, வங்கியர், தொகையை உடனடியாகக் கோரவேண்டும்.

பொறுப்புறுதிகளைப் பற்றி வழக்கத்திலுள்ள ஒரு தவறான எண்ணம் (A popular fallacy about guarantee)

பழமைதொட்டு, பொறுப்புறுதிகளோடு சேர்ந்து வழக்குகள் வந்துகொண்டேயிருப்பதற்குக் காரணம், ஒருவேளை, பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதென்பது, வெறுமனே ஓர் ஒழுங்கு முறையேயன்றி (formality) வேறெதுவுமில்லை என்ற பொதுவான எண்ணமாக இருக்கலாம். உண்மையில், டிக்கன்ஸினுடைய (Dickens') தலைசிறந்த நூலான டேவிட் காப்பர்பீல்டு என்னும் நூலில், தம்முடைய பேச்சுத்திறமைக்கேற்ற முறையில் 'பொறுப்புறுதி என்பது, செலுத்தமுடியாத ஓர் ஆள், செலுத்த முடியாத மற்றோர் ஆளை, செலுத்துவேன் என்று சொல்வதற்காகப் பெறுவது ஆகும்' என்று கூறுகின்ற, வில்கின்ஸ் மிகாபெர் (Willkins Micawbers') என்பவருடைய, பொறுப்புறுதி பற்றிய, பகட்டான விளக்கத்தில் அதிக அளவு உண்மை இருந்தது. சற்றுக் குறைகூறுவதுபோல் தோன்றினாலும் உண்மை அதுதான். பிணையளித்தலில் உள்ள இடர்வாய்ப்புகளுக்கு எதிராகத் சமய சார்பான பல எச்சரிக்கைகள் புனித பைபிளில் (Holy Bible) கூறப்பட்டிருந்தபோதிலும், தங்களுடைய அன்புகெழுமிய இயல்புகளின் மூலம் தங்களுக்குச் செல்வாக்கினை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கங்களைக் கொண்டுள்ள நபர்கள், மறுநாளைப்பற்றி, அல்லது பொறுப்பினை நிறைவேற்றும்படி தங்களை அழைக்கக் கூடிய வாய்ப்பு தோன்றக்கூடும் என்பது பற்றிச் சிந்தனையேதுமின்றி பிணையளித்தல் ஒப்பந்தங்களில் ஈடுபடுகின்றனர். அவர்கள் வழக்கமாக, 'உன்னுடைய சக்திக்கு மீறிய அளவில் பிணையாளியாக இருக்காதே. நீ பிணையாளியாக இருந்தால், பணம் செலுத்த வேண்டியுள்ள ஒருவர் என்ற எண்ணத்தை மனதில் கொள்' என்று சிராஜ் தன் மகனுக்குக் கூறுகின்ற அறிவுரையில் (Sirachs' advice) உள்ள கருத்தினை மறந்துவிடுகின்றனர். ஒருவர் தன்னுடைய எழுதுகோலைத் தாளில் வைத்து மனநிறைவோடு தன்னுடைய கையொப்பத்தை பொறுப்புறுதி ஒப்பந்தம் ஒன்றில் இடுவது எளிது; ஆனால் அந்தத் தோழமைச் செயலுக்கான பலன் கேட்கப்படுகின்ற பொழுது, ஒருவருடைய கைகளை அவருடைய சட்டைப்பையில்

வைக்கும்படி அல்லது ஒருவருடைய பணப்பையின் கயிறுகளைத் தளர்த்தும்படி வற்புறுத்தப்படுவது என்பது, வழக்கமாக, எதிர் பாராத மற்றும் வேதனையளிக்கின்ற ஓர் அனுபவமாகும். இறுதி யாகப் பொறுப்பு அவர்மீது விழுகின்றபோது கூட, பொதுவாக, கடனாளியைப் பணம் செலுத்தும்படி கட்டாயப்படுத்தக்கூடிய எல்லா வழி முறைகளும் பயன்படுத்தப்பட்டப் பின்புதான், தான் பணம் செலுத்தும்படி அழைக்கப்படக்கூடும் என்று பிணையாளி கற்பனை செய்து கொள்கிறார். இருந்தபோதிலும், கடனாளி யினுடைய தொழில், உண்மையில் சொத்துகள் எதையுமே விட்டு வைக்காமல் வீழ்ச்சியடைகின்றபொழுது, மயக்கநிலையிலிருந்து விடுபட்ட விசித்திரமான நிலை தோன்றுகிறது. வழக்கத்திலுள்ள இத்தகைய தவறான எண்ணத்தின் மூலம் ஏற்படக்கூடிய தொந் தரவுகளில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கான ஒரு வழியாக, பொறுப்புறுதியர் அவருடைய பொறுப்பிலிருந்து தப் பித்துக்கொள்வதற்கு உதவக்கூடிய, குறைபாடுகள் ஏதுமே இல்லாத, அச்சிட்ட படிவங்களில், ஒப்பந்தங்களைக் கையொப்ப மிட்டுப் பெறுவதை வங்கியர்கள் எப்போதும் வற்புறுத்துகின்றனர்.

முன்னெச்சரிக்கைகள்
(Precautions)

பொறுப்புறுதி ஒப்பந்தம் வங்கி மேலாளரின் முன்னிலையில் கையொப்பமிட்டுப் பெறுவதன் அவசியம் (Advisability of getting the contract of guarantee signed in the Bank Managers' presence)

வழக்கமாக, பொறுப்புறுதியை வங்கி மேலாலளரின் முன் னிலையில் நிறைவேற்றித் தரும்படி வங்கியர்கள் கேட்கின்றனர். பொறுப்புறுதிப்படிவத்தை (form) வாடிக்கையாளரே வெளியில் எடுத்துச்சென்று, அவரே பொறுப்புறுதியரின் கையொப்பத்தைப் பெற்று வருவதற்கு அனுமதிப்பது விரும்பத்தக்கதன்று. இது ஏனெனில், முதலாவது, பொறுப்புறுதியருடைய கையொப்பம் கள்ளக் கையொப்பமாகப் போய்விடலாம், அல்லது, பின்னொரு சமயத்தில், பத்திரத்தின் தன்மையை நன்கு அறிந்து கொள்ளாத நிலையில் தான் அதில் கையொப்பமிட்டதாக அவர் கூறலாம்; இரண்டாவது, அவருடைய பொறுப்பினை நிறைவேற்றும் படி பொறுப்புறுதியர் அழைக்கப்படுகின்றபொழுது, பொறுப்புறுதியரின் கையொப்பத்தைப் பெற்றுவருமாறு வங்கியரிடம் பத்திரத்தை ஒப்

படைத்தோ, அந்த நபர் தவறுதலாகத் திரித்துக் கூறியதன்பேரில், தான் கையொப்பமிட்டுவிட்டதாகப் பொறுப்புறுதியரோ காரணம் கூறலாம்.

முதன்மைக் கடனாளியின் மரணம்பற்றிய அறிவிப்பு (Notice of principal debitors' death)

முன்னரே விவரித்துக்கூறியது போல, வாடிக்கையாளரின் மரணத்தைப்பற்றிய அறிவிப்பு அவருடைய கணக்கை ஒரு முடிவிற்குக் கொண்டுவருகிறது; அதன் விளைவாக, பொறுப்புறுதியும் தானாகவே முடிவிற்கு வந்துவிடுகிறது. இறந்துபோனவருடைய சொத்துகளுக்குப் பொறுப்பாளியாக உள்ளவர்களால் செலுத்தப் பட்டாலன்றி, தொகையைச் செலுத்துமாறு வழக்கமான வேண்டுகோளை, வங்கியர், பொறுப்புறுதியருக்கு விடுக்கவேண்டும்.

கடனாளியின் நொடிப்புநிலைப்பற்றிய அறிவிப்பு (Notice of debtors' Bankruptcy)

தன்னுடைய கடனாளியினுடைய நொடிப்பு நிலையைப் பற்றிய, உண்மையான அல்லது உய்த்தறிந்த (constructive), அறிவிப்பினைப் பெற்றவுடனே பொறுப்புறுதியளிக்கப்பட்டுள்ள ஒரு கணக்கின் மீதான நடவடிக்கைகளை வங்கியர் நிறுத்திவிட வேண்டும். இத்தகைய தருவாயில், பிணையாளியால் கொடுக்கப் படவேண்டிய தொகையைத் திருப்பித் தரும்படி வங்கியர் கேட்கவும் வேண்டும். அந்தக் கணக்குத் தொடர்பாகத் தான் வைத்துள்ள பிணையங்களை, முதலிலேயே விற்பதற்கு வங்கியர் முனைய வேண்டியதில்லை.

கடனாளி அல்லது பிணையாளி சமமனநிலை இழந்தது பற்றிய அறிவிப்பு (Notice of lunacy of the debtor or surety)

முதன்மைக் கடனாளி அல்லது பிணையாளி சம மனநிலையை இழந்துவிட்டார் என்பதுபற்றி நம்பகமான செய்தியைப் பெற்றவுடன், வங்கியர், சம்பந்தப்பட்ட கணக்கினை முடிவிடவேண்டும். பிராட்போர்டு ஒல்டு பாங்க் எதி. சட்கிலிப் (1918), 2 கே. பி. 833 (Bradfore old Bank *v.* sutcliff (1918), 2 K. B. 833) என்ற வழக்கில், ஒரு பிணையாளி சம மனநிலை இழந்துபோய்விட்டார் எனபது, அதற்குப்பின்னர் அளிக்கப்படும் கடன்களைப் பொறுத்த வரையில், அவருடைய பொறுப்புறுதி முடிவுக்குக் கொண்டுவரப் பட்டதாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. அதன் விளைவாக, பொறுப்புறுதியினை முடிவுக்குக்

கொண்டுவருவதற்குப் பிணையாளியிடமிருந்து ஒரு மாத காலத்திற்கு முன்னரே அறிக்கை (one month's notice) ஒன்று வர வேண்டுமென பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் காப்புவாசகம் ஏதும் இருந்தாலுங்கூட, அவருடைய வாடிக்கையாளர் சம மனநிலை இழந்துவிட்டார் என்ற அறிவிப்பினைப் பெற்றுக் கொண்ட பிறகு வங்கியரால் அளிக்கப்படும் கடன் தொகையை சம மனநிலை இழந்தவருடைய சொத்திலிருந்து திருப்பிப் பெறமுடியாது.

வங்கியின் அமைப்பில் ஏற்படும் மாற்றம் (change in the constitution of the Bank)

வங்கியின் அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் பொறுப்புறுதியினைப் பாதிக்காது என பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் காப்பு வாசகமேதும் இருந்தாலன்றி, பொறுப்புறுதியைப் பெற்றுள்ள வங்கி மற்றொரு வங்கியோடு இணைக்கப்பட்டால் அல்லது மற்றொரு வங்கியால் ஈர்க்கப்பட்டால், பொறுப்புறுதி முடிவுக்கு வந்துவிடும். இருப்பினும், வழக்கமாக, வங்கியரின் பொறுப்புறுதிகள் இத்தகைய எதிர்பாராத நிகழ்ச்சிகளுக்கு காப்புவாசகங்களைக் கொண்டுள்ளன. பிணையாளியால் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ள கடனுக்கென, வெளிப்படையான முறையில் அவை வைத்திருக்கப்பட்டிருந்தால், பொறுப்புறுதி ஒப்பந்தம் கையொப்பமிடப்படுவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ அவை வைப்புச் செய்யப்பட்டிருந்தால், மூன்றாவது நபர்களால் வைப்புச் செய்யப்பட்ட பிணையங்களின் மீதுகூட, பிணையாளிக்கு உரிமையுண்டு.

பிணையாளிக்குள்ள உரிமைகள் (Rights of Surety)

வங்கியரால் பயன்படுத்தப்படும் பொறுப்புறுதிப் பத்திரம் படிவத்தினுடைய முற்றுப்பெற்ற தன்மை அவர்களுக்கு உயர்ந்த அளவு விடுதலையைக் கொடுப்பதாலும், முதன்மைக் கடனாளி தவறுகின்றபொழுது பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்வதற்குப் பொறுப்புறுதியர்க்கு எந்தவிதமான வழிக்கும் இடங்கொடுக்காததாலும், வங்கியரின் பொதுவான பொறுப்புறுதி படிவத்தில் கையொப்பமிட்டுள்ள ஒருவர் (தன்னுடைய உரிமைப் பற்றிப்) பேசுவதற்கு உரிமையேதும் பெற்றிலர் என்று மக்கள் நம்பும்படி செய்யப்பட்டுள்ளனர். வங்கியரின் பொறுப்புறுதிகள் அவர்களுக்கு (வங்கியர்களுக்கு) உயர்ந்த அளவு உரிமைக்கு வழிவகுக்கின்றது, மற்றும் பொறுப்புறுதியர்க்கு எந்த உரிமையையும் விட்டு வைக்கவில்லை

யென்பது உண்மைதான் என்றபோதிலும், வெளிப்படையான ஒப்பந்தத்தின்மூலம் அவர் தன்னுடைய உரிமைகளை விட்டுக் கொடுத்தாலன்றி, ஒரு பிணையாளி, சட்டப்படி பின்வரும் உரிமைகளைப் பெற்றுள்ளார்.

தன்னுடைய பொறுப்பின் அளவுபற்றிய விவரங்களைப் பிணையாளி கேட்கலாம் (Surety can call for the particulars of the extent of his Liability)

முதலாவது, பொறுப்புறுதி தொடர்ந்து இருக்கின்ற காலத்தில் ஒரு பிணையாளி, தன்னுடைய பொறுப்பின் அளவு பற்றிய விவரங்களை வங்கியரிடம் கேட்கலாம்; தேவையான செய்திகளை அளிப்பதற்கு வங்கியர் கடமைப்பட்டுள்ளார்; ஆனால், ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட இதர விவரங்களைப் பொறுத்தமட்டில், தன்னை சிக்கலில் ஈடுபடுத்திக்கொள்ளாத முறையில் எல்லாவகையான கவனத்துடனும் அவர் அவ்வாறு செய்யவேண்டும். இருப்பினும், கடனாளியினுடைய கணக்கினைப் பார்வையிடவோ, இரகசியத்தன்மை வாய்ந்த வேறெந்தச் செய்தியினையும் வங்கியரிடமிருந்து பெறுவதற்கோ பிணையாளிக்கு உரிமையில்லை. இருப்பினும், ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கான அறிக்கை (Notice) எதனையும் கொடுக்காமல், பொறுப்புறுதியின் அடிப்படையில், முதன்மைக் கடனாளிக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை, வங்கியர் உடனே எடுத்துவிடுவார் எனப்பொறுப்புறுதியர் எதிர்பார்க்க வேண்டுமென்பது இதன் பொருளன்று. ஏனெனில், பொறுப்புறுதியினுடைய நம்பிக்கையின்பேரில் வியாபார நடவடிக்கைகளிலும், ஒப்பந்தங்களிலும் ஈடுபட்டிருக்கக் கூடிய வாடிக்கையாளரின் நாணயம் இதன் காரணமாகப் பாதிக்கப்படலாம். இருந்தபோதிலும், புதிய மற்றும் முற்றிலும் தன்னிச்சையான கடன்களைக் கொடுப்பதற்கு, இடைக்காலத்தில் சாதகமான நிலையை வங்கி பயன்படுத்திக் கொண்டால், பொறுப்புறுதியர்பால், வங்கி நேர்மையாக நடந்து கொண்டதாகக் கருதப்படமாட்டாது. எடுத்துக்காட்டாக, ஒரு தந்தை, கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் தன்னுடைய மகனின் மேல்வரைபற்றுக்குப் பொறுப்புறுதியளித்திருந்து, மகன், இந்தவாய்ப்பினை அளவு மீறிச் சாதகமாக எடுத்துக்கொண்டு, ஆடம்பரமான வாழ்க்கைக்குப் பணத்தை வீண்செலவு செய்ய ஆரம்பித்தார் என்றால், தன்னுடைய மகனால் எழுதப்படும் காசோலைகளுக்குப் பணம் தர வேண்டாமென்று, தந்தை, வங்கியைக் கேட்டுக்கொள்ளலாம். மேல்வரைப் பற்றிற்குப் பொறுப்புறுதியரான தந்தையால் கையொப்பமிடப்பட்ட பொறுப்புறுதியில் உள்ள மூன்றுமாத அறிவிப்பு சரத்தினைக்

காட்டி, இந்த வேண்டுகோளுக்கு இணங்க வங்கி மறுத்தால், வங்கி அவர்பால் நேர்மையாக நடந்துகொள்ளவில்லை என்பதாகும்.

விலக்குரிமை (Right of Revocation)

பொறுப்புறுதியினை விலக்கிக்கொள்வதற்கு அல்லது திரும்பப் பெற்றுக்கொள்வதற்குப் பிணையாளிக்கு உள்ள உரிமையைப் பொறுத்தவரையில், அது, அதற்கான பிரதிபலனின் தன்மையைப் பொறுத்திருக்கும் என்று கூறலாம். முதன்மைக் கடனாளியிட மிருந்து ஏற்கெனவே வரவேண்டியிருந்த கடன்தொகை ஒன்றினைப் பெறுவதற்காக வழக்கினைத் தொடுப்பதிலிருந்து பொறுத்திருப்பது தான், ஒரு குறிப்பிட்ட பொறுப்புறுதிக்குப் பிரதிபலன் ஆக இருக்கு மென்றால், பொறுப்புறுதி ஒப்பந்தத்தை விலக்கிக்கொண்டு, பொறுப்புறுதியர், தன்னுடைய பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியாது. வங்கியர், பிணையாளி ஒப்பந்தத்திலுள்ள வாசகங்களின்படி, வாடிக்கையாளருக்காக மாற்றுச் சீட்டு ஒன்றினைத் தள்ளுபடி செய்துதருகின்றபொழுது, அல்லது அவருடைய உதவிக்காக நாணயக்கடிதம் ஒன்றினை விடுக்கின்ற பொழுது ஏற்படுவதுபோல, யாருடைய நன்மைக்காகப் பொறுப் புறுதி கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த வாடிக்கையாளரின் பொறுப்பு நிச்சயமற்றதாக இருக்கின்றபொழுதுகூட, எந்த வாடிக்கை யாளருக்குக் கடன்வசதி அளிக்கப்பட்டுள்ளதோ அவர், வங்கிக்குக் கடன் பட்டவராக இருக்கின்றவரையில், நிச்சயமற்றதாக இருந்த போதிலும் கூட, பொறுப்புறுதிப்பத்திரத்தின் மீதான பொறுப்புறுதி யரின் பொறுப்புத் தொடர்ந்து இருந்துகொண்டேயிருக்கும். முதன் மைக் கடனாளியினுடைய கடன் கணக்கு பற்று இருப்பிலும், அவருடைய நடப்புக்கணக்கு வரவுஇருப்பிலும் இருக்கின்றபொழுது கூட, பொறுப்புறுதியினை விலக்கிக் கொண்டதாக, அறிவிக்கை ஒன்றினை, பொறுப்புறுதியரிடமிருந்து பெற்றுக் கொண்டதும், வங்கியர், வாடிக்கையாளரின் நடப்புக் கணக்கை மூடிவிட்டு, அதிலுள்ள இருப்பின்மீது எழுதப்பட்ட காசோலைகளை மறுப்புச் செய்ய (dishonour) முடியாது.

ஒரு குறிப்பிட்ட கால அறிவிக்கை கொடுக்கப்டுவதற்கான காப்பு வாசகம் (Provision for Notice of a specified period)

அறிவிக்கை சம்பந்தபபட்டவரையில், அதற்கு மாறான ஒப் பந்தமேதும் இல்லாவிடத்து, தொடர்ந்துசெல்கின்ற ஒரு பொறுப் புறுதி, வருங்காலத்திய நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், எந்தநேரத்திலும் நிர்ணயம் செய்யப்படக்கூடியது ஆகும். ஒரு குறிப்பிட்ட கால அளவு முடிந்தவுடன், தன்னுடைய பொறுப்புத் தீர்ந்துவிட்டது என்று அறிவிக்கை எதனையும் கொடுக்கவேண்டிய

கட்டாயத்திற்குட்படுத்தப்படாத பொறுப்புறுதியரிடமிருந்து அறிவிக்கையைப் பெற்றுக்கொண்டவுடன், வங்கியர், அதனை வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்தி, பொறுப்புறுதி விலக்கிக் கொள்ளப்பட்டதற்கான அறிக்கையைப் பெற்றுக்கொண்டதற்குப் பின் செலுத்தப்படும் ஒவ்வொரு தொகையும், வேறு வகையாக அது பிரித்தளிக்கப்பட்டாலன்றி, பிணையாளி பொறுப்புறுதி செய்துள்ள தொகையைக் குறைப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற கிளைடன் வழக்கு விதி (Rule in Clayton's case) செயல்படாமல் தடுக்கும் பொருட்டு, கணக்கினை மூடிவிடவேண்டும். இருந்த போதிலும், அறிக்கைக்குப் பின்னர் அளிக்கப்படுகின்ற கடன், ஒரு புதியகடனாகக் கருதப்படுமாகையால் அதற்குப் பொறுப்புறுதியர் பொறுப்பாளியாகமாட்டார். ஒப்புக்கொள்ளப்பட்ட அறிக்கைக்கான கால அளவு முடிந்த பின்னர், செலுத்தப்படாமல் உள்ள காசோலைகளுக்குப் பணம் வழங்கும் ஒரு வங்கியர், தன்னுடைய சொந்த இடர்வாய்ப்பிலேயே (at his own risk) அவ்வாறு செய்கிறார் என்று, பொதுவாகக் கருதப்படுகின்றது. வங்கியர்கள், தங்களுடைய பொறுப்புறுதிப் படிவங்களில் (forms) பொறுப்புறுதிகளின் மீதான தங்களுடைய பொறுப்பினை விலக்கிக் கொள்வதற்கு முன்பாக, பொறுப்புறுதியர்கள் குறிப்பிட்ட கால அளவிலான அறிவிக்கை ஒன்றினைக் கொடுக்கவேண்டுமென்று, தெளிவாகக் கூறுகின்ற, காப்புவாசகம் ஒன்றினைச் சேர்த்துவைத்துக்கொண்டு இத்தகைய இடர்வாய்ப்பினைத் தவிர்த்துவிடுகிறார்கள். இத்தகைய தறுவாயில், அறிவிக்கையினுடைய கால அளவு முடிகின்றவரையிலும் பொறுப்புறுதி செயலில் இருக்கும். செலுத்தப்படவேண்டியுள்ள காசோலைகளுக்கு, அல்லது அறிவிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர், வாடிக்கையாளர் சார்பாக ஏற்பு செய்யப்பட்ட மாற்றுச் சீட்டுகளுக்குப் பணம் செலுத்தப்படுவதைப் பொறுத்த மட்டில், பொறுப்புறுதியர் எத்தகைய நியாயமான எதிர்ப்பினையும் எழுப்பமுடியாது என்பதில் ஐயமேதுமில்லை. (பொறுப்புறுதி) விலக்கிக் கொள்ளப்படுவதற்கு முன்பு, தன்னுடைய சாதாரண தொழில் வழக்கில் தொடங்கப்பட்ட நடவடிக்கைகளை வங்கியர் முடித்து விடுவது நேர்மையான செயல்தான் என்று கூறுவதில் நியாயமுள்ளது என்றும் தோன்றுகிறது.

பிணையாளியின் மரணம் அல்லது சமமனநிலை இழத்தல் பற்றிய அறிவிக்கையின் விளைவு (Effect of the Notice of surety's death or lunacy)

அதற்கு மாறான, வெளிப்படையான உடன்பாடு ஏதும் இல்லாதவிடத்து, பிணையாளியின் மரணம் அல்லது சமமனநிலை

இழத்தல் பற்றிய அறிவிக்கை, மரணம் அல்லது சமமன நிலை இழப்பு ஏற்படுவதற்குப்பின்பு ஏற்படுகின்ற நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில், தொடர்ந்து செல்கின்ற பொறுப்புறுதி ஒன்றினை விலக்கு கிறது அல்லது முடிவுக்குக் கொண்டுவருகிறது. இருந்தபோதிலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி, பொறுப்புறுதியர் உயிரோடு இருக் கும் காலத்தில் அவரால், அல்லது அவருடைய மரணத்திற்குப்பின் சட்டப்படியான அவருடைய சார்பாளர்களால், தேவையான அறி விக்கை கொடுக்கப்படவேண்டுமென்ற சரத்தினைத் தங்களுடைய ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்வதன் மூலம், வங்கியர்கள் தங்களு டைய நலன்களைக் காப்பாற்றிக் கொள்ளமுடிகிறது. பிணையாளி ஒருவரின் மரணம் பற்றிய அறிவிக்கையைப் பெற்றுக் கொண்ட வுடன் கிளைடன் வழக்கின் விதி (Rule in Clayton's case) செயல் படாமல் காக்கும் பொருட்டு, வங்கியர், வழக்கமாக, (பழைய) கணக்கினை மூடிவிட்டுப் புதிய கணக்கு ஒன்றினைத் திறக்கிறார்.

பொறுப்புறுதியினை முடிவுக்குக் கொண்டுவருதல் (Termination of Guarantee)

நொடிப்பு நிலைகாரணமாகப் பொறுப்புறுதியினை முடிவுக்குக் கொண்டுவருதல் (Termination of Guarantee by Insolvency)

முதன்மைக் கடனாளிக்கு மேற்கொண்டு அளிக்கப்படும் கடன் களைப் பொறுத்தவரையில், ஒரு பொறுப்புறுதியரின் நொடிப்புநிலை அவருடைய பொறுப்புறுதியை முடிவுக்குக் கொண்டுவருகிறது. பொறுப்புறுதியர் ஒருவருடைய நொடிப்புநிலை பற்றிய அறிவிக்கை யைப் பெற்றுக் கொண்டவுடன் ஒரு வங்கியர் கடைப்பிடிக்க வேண்டிய சரியான செயல், பொறுப்புறுதியளிக்கப்பட்டிருக்கும் கணக்கினை நிறுத்தி வைத்துவிட்டு, தரவேண்டியுள்ள பாக்கித் தொகையை உடனே தருமாறு கடனாளியைக் கோரி, அவர் செலுத்தத்தவறினால் திருப்பிச் செலுத்தப்படாமல் உள்ள பாக்கித் தொகைக்கான தன்னுடைய உரிமையை நிலைநாட்டுவதாகும். முதன்மைக் கடனாளி செலுத்தத் தவறவில்லையென்றபோதிலும் கூட, இத்தகைய பொறுப்புறுதியரின் சொத்துக்கு எதிராக நட வடிக்கையைமேற்கொள்வதற்கு வங்கியர் உரிமை பெற்றுள்ளார். (மாநில நொடிப்புநிலைச் சட்டம், 34(2)ஆவது பிரிவு, மற்றும் தலை யாய நகரங்கள் நொடிப்புநிலைச் சட்டம், 46 (3)ஆவது பிரிவு) (sec. 34 (2) of the Provincial and sec. 46 (3) of the Presidency Towns Insolvency Acts). பொறுப்புறுதி சம்பந்தப்பட்ட வகையில், (பிணையாளியினுடைய) சொத்து எந்த அளவுக்குப் பொறுப்பாகக் கூடும் என்பது பற்றி, வங்கியர், சொத்தாட்சி அதிகாரிக்குத்(Official

Receiver) தெரியப்படுத்தவேண்டும். வரவேண்டியுள்ள பாக்கித் தொகைக்கான கோருரிமையைத் (claim) தெரிவிக்கின்றபொழுது, முதன்மைக் கடனாளியால் கொடுக்கப்பட்டுள்ள பிணையங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டியது அவசியமில்லையென்று தோன்றினாலும், பொறுப்புறுதியரால் கொடுக்கப்பட்டுள்ள பிணையங்கள் கணக்கில் காட்டப்படவேண்டும். பொறுப்புறுதியைக் கூட்டாகக் கையொப்பமிட்டுள்ள நபர்களில் ஒரே ஒருவர் மட்டும் நொடிப்புநிலையை அடைந்துவிட்டாரானால், வங்கியர் வகையுள்ள பொறுப்புறுதியர்களுக்கு எதிராக மட்டுமன்றி, நொடிப்புநிலையடைந்துள்ள பிணையாளியின் சொத்துக்கு எதிராகவும், தன்னுடைய பணத்தைப் பெறுவதற்கான வழி முறைகளை மேற்கொள்ளலாம்.

கடனாளரின் எல்லா உரிமைகளுக்கும், நியாயங்களுக்கும் பிணையாளி வாரிசாகிறார் (Surety succeeds to all rights and equities of the creditor)

தான் பொறுப்பாளியாகவுள்ள, அல்லது கடனாளருக்குச் சேரவேண்டிய எல்லாவற்றிற்கும் பணம் செலுத்தியவுடன் அல்லது நிறைவேற்றியவுடன், ஒரு பிணையாளி கடனாளரின் உரிமைகளுக்கும், நியாயங்களுக்கும் வாரிசாகிறார். "பிணையளிப்பு ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றபொழுது முதன்மைக் கடனாளிக்கு எதிராகக் கடனாளர் வைத்திருக்கின்ற ஒவ்வொரு பிணையத்தினுடைய நன்மையையும் பெறுவதற்கு, இத்தகைய பிணையம் இருப்பதைப் பிணையாளி அறிந்திருந்தாலும், அறிந்திராவிட்டாலும் பிணையாளி உரிமை பெறுகிறார்; கடனாளர், இத்தகைய பிணையத்தைத் தொலைத்துவிட்டாலும், அல்லது பிணையாளியினுடைய ஒப்புதலின்றி அதனைத் தன்னிடமிருந்து போகவிட்டாலும் பிணையத்தினுடைய மதிப்பின் அளவிற்குப் பிணையாளி பொறுப்பிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்." (1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், பிரிவு-141) இருந்தபோதிலும் பொறுப்புறுதி கடன் முழுமைக்கும் பொருந்துவதாக இருந்து, ஆனால் பொறுப்புறுதியரின் பொறுப்பு ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்தால், கடனாளிக்கு எதிராகக் கடனாளருக்கு உள்ள உரிமை முழுவதும் நிறைவேற்றப்படும் வரையிலும், வங்கியரின் கையிலுள்ள பிணையங்களில் வீதப்படியான ஒரு பகுதியின் மீது உரிமை கோரவோ, அவரால் செலுத்தப்பட்ட தொகைக்காக, கடனாளியின் சொத்துக்கு எதிராகத் தன்னுடைய உரிமையை நிலைநிறுத்தவோ பிணையாளியால் முடியாது. செலுத்தப்படவேண்டிய பொறுப்பு முழுமையாக நிறைவேற்றப்படும்பொழுது, தன்னுடைய கையில் எச்சமாக (surplus) உள்ளவற்றைப் பிணையாளிக்கு, அல்லது

ஒன்றுக்கு மேற்பட்ட பிணையாளிகள் இருந்தால், அவர்கள் ஒவ்வொருவரும் பொறுப்பினை நிறைவேற்றிய வீதத்தில் ஒவ்வொரு பிணையாளிக்கும் கொடுப்பதற்கு வங்கியர் கடமைப்பட்டுள்ளார். பொறுப்புறுதி கடனின் ஒரு பகுதிக்கு மட்டும்தான் பொருந்துவதாக இருக்கும் தறுவாயில், செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்திய பின், வங்கியர் வைத்திருக்கும் கடனாளிக்குச் சொந்தமான பிணையங்களில் விகிதாசாரப்படியான ஒரு பங்கின் மீது பிணையாளி உரிமைகோரலாம்; முதன்மைக் கடனாளி நொடிப்புநிலையை அடையும் தறுவாயில் பிணையாளி, முதன்மைக் கடனாளியின் சொத்துக்கு எதிராகத் தன்னுடைய உரிமையை நிலைநாட்டலாம். வழக்கமாக, ஒரு வங்கியரின் பொறுப்புறுதி முழுகடனுக்கும் பொருந்துவதாகத்தானிருக்கும்; மேலும், முதன்மைக் கடனாளி நொடிப்பு நிலையை அடையும் தறுவாயில், வங்கியரோடு போட்டியிடுவதில்லை, அல்லது வங்கியருக்குச் செலுத்தவேண்டிய கடன் முழுவதும் செலுத்தப்படுகின்றவரை வங்கியர் வைத்திருக்கும் பிணையங்களைக் கோருவதில்லை என்று, பிணையாளி, வெளிப்படையாக அறிவிக்கின்ற காப்பு வாசகம் ஒன்றினையும் அது (பொறுப்புறுதி) கொண்டிருக்கும்.

முதன்மைக் கடனாளிக்கும், சக பிணையாளிகளுக்கும் எதிராகப் பிணையாளிக்கு உள்ள உரிமை (Surety's Right Against Principal and Debtor Co-surities)

பொதுவாக, வங்கியரால் கோரப்படும் தொகையைச் செலுத்துவதற்கு முன், வங்கியரின் கோரிக்கையை நிறைவேற்றுவது தொடர்பாகத் தன்னுடைய எண்ணத்தைப் பற்றிய அறிவிக்கை ஒன்றினைப் பிணையாளி முதன்மைக் கடனாளிக்கு அனுப்புகிறார். வங்கியருக்குப் பணத்தைச் செலுத்தியவுடன், பிணையாளி, தான் செலுத்திய தொகையை முதன்மைக் கடனாளியிடமிருந்து கோரலாம்; ஆனால் இந்த நடவடிக்கையின் மூலம் இலாபம் பெறவோ, தவறுதலாகச் செலுத்திய தொகையைக் கோரவோ முடியாது. எடுத்துக்காட்டாக, பாக்கியுள்ள வட்டித்தொகை முழுவதையும், அல்லது அதில் ஒரு பகுதியை விட்டுக் கொடுப்பதற்கு, பிணையாளி, கடனாளரை இணங்கும்படி செய்தால், கடனாளரால் விட்டுக்கொடுக்கப்பட்ட தொகையை, முதன்மைக் கடனாளியிடமிருந்து, பிணையாளி கோர முடியாது. முதன்மைக் கடனாளி நொடிப்பு நிலையை அடையுந் தறுவாயில், முடிவான ஒரு தொகையைக் கொடுக்கும்படி அவர் அழைக்கப்படாவிட்டாலும் கூட, தன்னுடைய எதிர்காலப் பொறுப்பு தொடர்பான கடனைப் பிணையாளி நிலைநாட்டலாம். கூட்டுப்பொறுப்புறுதி (Joint Guarantee) ஒன்றில், பிணையாளிகள்

அவர்களுக்குள்ளேயே சில உரிமைகளைக் கொண்டுள்ளனர். பொறுப்புகளை அவர்கள் பகிர்ந்து கொள்வதால், நியாயப்படி, மீட்கப்பட்டு வருகின்ற வருமானங்களில் பங்குகொள்ளவும் உரிமை பெற்றுள்ளார்கள். இவ்வாறு, அவர்கள் ஒவ்வொருவரும் சமமான அளவிற்குப் பொறுப்பாளியானார்கள் எனில், வங்கியரின் வசமுள்ள, முதன்மைக் கடனாளிக்குச் சொந்தமான, பிணையங்களைச் சமமாகப் பகிர்ந்துகொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு. அவர்களுடைய பொறுப்புகள் சம அளவினதாக இல்லையெனில், பிணையங்களை அவர்கள் விகிதாசாரப்படி பகிர்ந்து கொள்வர். பிணையாளிகளில் யாராவது ஒருவர், அவருடைய பங்குக்கு அதிகமாகச் செலுத்த வேண்டியிருந்தால், விகிதாசாரப்படியான தன்னுடைய பொறுப்புக்கும் மேலாக அதிகப்படியாக அவர் செலுத்திய தொகையின் அளவிற்கு, அவர், தன்னைத்தானே ஈடுகட்டிக் கொள்வதற்கு உதவியாகப் பணம் தருமாறு, தன்னுடைய சக பிணையாளிகளைக் கேட்பதற்கு உரிமை பெற்றுள்ளார். முதன்மைக் கடனாளியால் மற்றொரு பிணையாளிக்கு அளிக்கப்பட்டுள்ள எதிர் பிணையத்தின் (counter security) நன்மையைப் பெறுவதற்கான உரிமையையும் ஒரு சக-பிணையாளி (co-surety) பெற்றுள்ளார். ஸ்டீல் எதிர் டிக்சன் (1881), 17 சி.டி. 825, [Steel v. Dixon (1881, 17 C.D. 825]. என்ற வழக்கில், தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பிற்காக முதன்மைக் கடனாளியிடமிருந்து எதிர்ப் பிணையம் ஒன்றினைப் பெற்றுக் கொண்டுள்ள ஒரு பிணையாளி, எதிர்பிணையத்தைப் பெற்றுக் கொண்டதனால்தான் பிணையாளியாக இருப்பதற்கு ஒப்புதலளித்திருந்தார் என்ற போதிலும், மேலும் மற்றப்பிணையாளிகள், பிணையளிப்பு ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றபொழுது எதிர்ப்பிணைய ஒப்பந்தத்தைப்பற்றி எதுவுமே அறியாதவர்களாய் இருந்தார்கள் என்ற போதிலும், எதிர்பிணையமாகத் தான் பெற்றுள்ள எல்லாவற்றையும், தன்னுடைய சக பிணையாளிகளின் நன்மைக்காக, அவைகளைப் பொதுக்கூட்டிற்குக் (hotchpot) கொண்டுவருவதற்குக் கடமைப்பட்டுள்ளார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. கடனாளிக்கு எதிரான கால வரையறை (period of limitation), கடனாளியினுடைய பொறுப்பினைப் பிணையாளி கடனாளருக்கு நிறைவேற்றிய தேதியிலிருந்து தொடங்குகின்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தான் விடுவிக்கப்படுவதற்குப் பிணையாளிக்குள்ள உரிமைகள் (Surety's Right to be discharged)

கீழ்க்காணும் தறுவாய்களில் (சந்தர்ப்பங்களில்), தன்னுடைய பொறுப்பிலிருந்து முழுவதுமாக விடுவிக்கப்படுவதற்கு, ஒரு பிணையாளி உரிமை பெறுகிறார் ;

(அ) கடனாளர் முதன்மைக் கடனாளியை விடுவித்துவிட்டார் அல்லது, சட்டப்படி முதன்மைக் கடனாளி விடுவிக்கப்பட்டது போன்ற விளைவு ஏற்படும்படியான முறையில் நடந்து கொண்டார் எனில் (1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், 134-ஆவது பிரிவு). இந்த விதியின் அடிப்படைத் தத்துவம் யாதெனில், முதன்மைக் கடனாளி வங்கியரால் விடுவிக்கப்பட்டுவிட்டால், வங்கியருக்கும் பணம் செலுத்தும் பிணையாளி, முதன்மைக் கடனாளியிடமிருந்து தொகையைக் கோர முடியாது என்பதாகும். அவரை விடுவிப்பதன் மூலம், வாடிக்கையாளரிடமிருந்து வரவேண்டிய கடன் நீங்கிவிடுவதாலும், முதன்மை ஒப்பந்தம் (principal contract) தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதாலும் (cancelled) அவை காரணமாகப் பொறுப்புறுதி ஒப்பந்தமும் தள்ளுபடி செய்யப்பட்டதாக ஆகி விடுகிறது.

(ஆ) பிணையாளியின் சம்மதமின்றிக் கடனாளர் கடனாளியோடு சேர்ந்து கொள்கிறார், அல்லது கால அவகாசம் தருவதற்கும், கடனாளி மீது வழக்குத் தொடர்வதில்லை என்றும் உறுதி கூறுகிறார் எனில் (1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், பிரிவு-135): கடனாளிக்குக் கால அவகாசம் அளிக்கப்படுவதால் ஏற்படும் விளைவு பற்றி, மேலே, முன்னரே விவாதிக்கப்பட்டுள்ளது. முதன்மைக் கடனாளியிடமிருந்து வரவேண்டிய தொகைக்குக் குறைவான ஒரு தொகையை, வரவேண்டிய கடன் தொகை முழுவதும் செலுத்தப்பட்டதற்குச் சமமாக, ஒரு கடனாளர் ஏற்றுக்கொண்டாரானால், கடனாளியிடமிருந்து வரவேண்டிய தொகைக்கும் அவரிடமிருந்து பெறப்பட்ட தொகைக்கும் உள்ள வேறுபாட்டுத் தொகையைப் பொறுப்புறுதியரிடமிருந்து கோருவதற்கு கடனாளர் அனுமதிக்கப்படமாட்டார். அதேபோல, பிணையாளியின் சம்மதமின்றி, ஒரு வங்கியர் முதன்மைக் கடனாளி மீது வழக்குத் தொடர்வதில்லையென உறுதி கூறினால், பிணையாளி பொறுப்பிலிருந்து விடுதலை பெற்றவராவார்.

(இ) பிணையாளியின் உரிமைகளோடு ஒத்துப்போகாத ஏதாவது செயலைக் கடனாளர் செய்தால், அல்லது பிணையாளிக்கு அவர் ஆற்றவேண்டிய கடமையின்படி செய்யவேண்டிய ஏதாவது ஒரு செயலைச் செய்யாமல் விட்டுவிட்டதன் காரணமாக, முதன்மைக் கடனாளிக்கு எதிராகப் பிணையாளிக்குக் கிடைக்கக்கூடிய இறுதியான பாதுகாப்பினைப் (eventual remedy) பாதிக்கும்படி செய்தால் (1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், பிரிவு-139): எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட அளவுகளுக்கு வேலைமுடிந்த

வுடன், ஒரு குறிப்பிட்ட தொகையைத் தவணைகளில் செலுத்து வதற்கு ஒப்புக்கொள்ளும் 'இ' என்பவருக்கு ஒரு வீடு கட்டிக் கொடுக்க, 'அ' என்பவர் ஒப்பந்தத்தில் ஈடுபடுகிறார். ஒப்பந் தத்தை 'அ' சரியாக நிறைவேற்றுவார் என்பதற்கு 'ஆ' என்பவர் பொறுப்புறுதியர் ஆகிறார். 'ஆ'-வுக்குத் தகவலேதும் கொடுக்கா மல் 'இ' கடைசி மூன்று தவணைத் தொகைகளையும் முன் கூட்டிச் செலுத்தி விடுகிறார். இவ்வாறு செய்ததால், 'ஆ' அவ ருடைய பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவராகிறார்.

அனிருத்தம் எதி. தி. டாம்கோவினுடைய பாங்க் லிமிடெட். (ஐ. எம். & ஜே. எஸ். சி. பக். 137) [Aniruddham v. The Tomco's Bank Ltd.,) I. M. & J. S. C. P. 137)] என்ற வழக்கில் விவாதத் திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொருள், முதன்மைக் கடனாளி, பிணையாளியின் ஒப்புதலின்றி ஒரு பொறுப்புறுதிக் கடிதத்திலுள்ள தொகையை மாற்றிவிட்டார் என்ற காரணத்திற்காகப் பிணையாளி பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டாரா என்பதாகும். பெரும் பான்மையினரால், பிணையாளி பொறுப்பாளிதான் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இதர சில தற்செயல் நிகழ்ச்சிகளுக்காகக் காப்புவாசகம் (Provision for certain other contingencies)

இந்த அத்தியாயத்தை முடிப்பதற்கு முன், பொறுப்புறுதி ஒப் பந்தத்தில், மிகவும் தெளிவாக இருக்கவேண்டிய மேலே விவரித்துக் கூறப்பட்ட செய்திகளோடு, கடனளிக்கின்ற வங்கி, வேறொரு வங்கியோடு, இணைக்கப்படுதல் அல்லது அதனால் ஈர்க்கப்படுதல் போன்ற தற்செயல் (அல்லது எதிர்பாராத) நிகழ்ச்சிகளுக்குக் காப்புவாசகம் ஒன்று வங்கியரின் ஒப்பந்தத்தில் வெளிப்படையாக ஏற்படுத்தப்படவேண்டும் என்று கூறவேண்டியது அவசியமாகும். அதேபோல, பொறுப்புறுதியளிக்கப்பட்ட கணக்கு, அல்லது கடன், ஒரு கூட்டுவணிகத்தினுடையதாக இருப்பின், கூட்டுவணிக நிறு வனத்தில் ஏற்படும் மாற்றமேதும் பொறுப்புறுதியைப் பாதிக்காது என்பதற்கான காப்புவாசகம் ஒன்றினைப் பொறுப்புறுதி கொண் டிருக்க வேண்டும். கூட்டாகவும், அல்லது கூட்டாகவும் தனித்தது மான (Joint or Joint and Several) பொறுப்புறுதி ஒன்றில் செய்யப் படும் ஏதாவது மாற்றம், சக பிணையாளிகள் எல்லோருடைய ஒப்புதலையும் பெற்றிருக்க வேண்டுமென்பதும் நினைவில் கொள்ளவேண்டியதாகும்.

12. துணைப் பிணையங்களால் உத்தர வாதம் செய்யப்பட்ட கடன்கள்

(Advances Secured By Collateral Securities)

உத்தரவாதம் செய்யப்பட்ட கடன்கள் (Secured loans)

நாம் இதுவரை, கடன்பெறுவோர் ஒருவருடைய தனிப்பட்ட ஆட்பிணையத்தின் (personal security) பேரிலோ, அவருடைய ஆட்பிணையத்தோடு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேறு நபர்களின் பிணையத்தின் பேரிலோ அளிக்கப்பட்ட வங்கியரின் கடன்களைப்பற்றி ஆராய்ந்தோம். பொறுப்புறுதிகளால் உத்தர வாதம் செய்யப்பட்ட கடன்களில், பொறுப்புறுதியர், வழக்கமாக, உருப்படியான எந்த ஒரு பிணையத்தையும் அடைமானமாகக், கொடுப்பதில்லை. ஆனால், முதன்மைக்கடனாளி செலுத்தத் தவறினால், அவரிடமிருந்து வரவேண்டிய தொகையைச் செலுத்து வதாக வெறுமனே உறுதிகூறுகிறார் என்று நாம் பார்த்தோம். ஒரு மாற்றுச் சீட்டினை ஏற்பவர் முதன்மைக் கடனாளியாகவும், அதனை எழுதியவரும் மேலெழுதுதல் செய்வோர்களும் ஏறக்குறையப் பிணையாளிகள் என்னும் நிலையிலும் உள்ள தூயமாற்றுச் சீட்டு விஷயத்திலும் இது உண்மையாகும். உண்மையான வணிக மாற்றுச் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்வதன் மூலம், கணிசமான தொகையை முதலீடு செய்வதை வங்கியர்கள் ஒரு பொருட்டாகக்கருது வதில்லையெனினும், அவர்கள், உத்தரவாதம் செய்யப்படாத கடன்களை அளிக்க மிகவும் தயங்குகிறார்கள்; மற்றும், பொதுவாக, அவைகளை உத்தரவாதம் செய்வதற்குத் துணைப்பிணையங்களை வற்புறுத்துகிறார்கள். எனவே, இத்தகைய உத்தரவாதம் செய்யப் பட்ட கடன்களைப் பொறுத்த வரையில் வங்கியரின் நிலைபற்றி இப்போது ஆராய்வோம்.

வெவ்வேறு இடங்களிலும் வெவ்வேறு வகையான பிணையங்கள் (Different types of securities in different places)

கடன் வழங்குவோர் என்ற முறையில், தங்களுடைய தொழில் நடவடிக்கைகளில், தற்காலத்திய வங்கியர்கள், அவர்கள் தொழில்

நடத்திச் செல்கின்ற இடத்திற்குத் தக்கவாறு வெவ்வேறு வகையான பிணையங்களைக் காண நேரிடுகிறது. எடுத்துக்காட்டாக, பணக்கார, மற்றும் உயர் நடுத்தர வகுப்பு மக்களைக் கொண்டுள்ள பம்பாய், கல்கத்தா மற்றும் சென்னை போன்ற பெரிய நகரங்களில் வங்கியர், சிறப்பீட்டு (Gilt edged) மற்றும் பங்குமாற்று நிலையப் பிணையங்களுக்கு எதிராகத் தங்கள் கடன்களை, வழங்கும்படி கேட்கப்படுகிறார்கள். பெரிய தொழில் மற்றும் உற்பத்தி நடைபெறும் இடங்களில் ஆலைகளும் தொழிற்சாலைகளும், தாதுப் பொருட்கள் மற்றும் முடிவுற்ற பொருள்கள் ஆகியவைகளின் இருப்புகளுக்கு (Stocks) எதிராகக் கடனுதவி கேட்கின்றன. வேளாண்மைக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில், வங்கியர்களுக்கு வழங்கப்படும் பிணையங்களில், வேளாண்மைப் பொருள்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

வெவ்வேறு வகையான துணைப்பிணையங்கள் (Different kinds of collateral Securities)

வங்கியர்கள், தாங்கள் வழங்கும் கடன்தொகைகளை, வழக்கமாக, பங்குமாற்று நிலையப் பிணையப்பத்திரங்கள், (தங்கம் அல்லது வெள்ளி) உலோகக் கட்டிகள், சரக்குகள், சரக்குரிமைப் பத்திரங்கள் மற்றும் அசையாச் சொத்துகள் ஆகியவைகளைக் கொண்டு உத்தரவாதம் செய்து பெறுகிறார்கள். சில வேளைகளில், எடுத்துக்காட்டாக, காப்பீட்டுப் பத்திரங்கள், கப்பல்கள் மற்றும் ஏட்டுக் கணக்கில் பெறவேண்டியவை (கடனாளிகள் கணக்கு) போன்ற சில்லறைப் பிணையங்களும் வங்கியரின் கடன்களுக்குப் பிணையங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, வழங்கப்படும் பிணையங்களின் பலவகைகளும் பெருமளவில் இருப்பது, தான் அளிக்கும் கடனை இந்தப்பரந்த அளவு பிணையங்களில் பரவலாக இருக்கும்படி செய்து தன்னுடைய இடர்வாய்ப்பினைக் குறைப்பதற்கு வங்கியர்க்கு வாய்ப்பளித்து அவருக்கு வலுவூட்டுகின்ற ஒரு வழியெனக் கருதப்படவேண்டும். இந்த பிணையங்களைப் பற்றி வங்கியருடைய நோக்குக் கருத்தினை (Point of View) ஆராய்வதற்கு முன், சில பொதுவான ஆய்வுகளைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

கடன்களை உத்தரவாதம் செய்து பெறுவதற்கான வழி முறைகள

(Modes of securing advances)

ஹாலிடே எதி. ஹால்கேட் (1868), எல். ஆர். 3 எக்ஸ். பக். 299 [Halliday v. Holgate 1868), L. R. 3 Exch. p 299] என்ற வழக்கில், வைல்ஸ், ஜே. (Wiles, J.) என்பவர், 'மூன்று வகையான பிணையங்கள் உள்ளன; முதலாவது, ஒரு சாதாரணப் பற்றுரிமை (lien) ஆகும்; இரண்டாவது, சொத்தினை முழுக்க முழுக்க உரிமை மாற்றிக் கொடுக்கின்ற அடைமானம் (Mortgage) ஆகும்; மூன்றாவது, ஓர் ஒப்பந்தத்தின் மூலம், பொருள்களை ஒப்படைப்புச்செய்தல் கடன் ஒன்றிற்குப் பிணையமாக ஆக்கப்பட்டு, கடனுக்கு உத்தரவாதம் அளிக்கும் பொருட்டுத் தேவையான அளவிற்குச் சொத்தின் மீதான உரிமையை அடகு பெற்றவருக்கு அளிக்கின்ற, ஒரு பற்றுரிமைக்கும், ஓர் அடைமானத்திற்கும் இடைப்பட்டதான, அடகு (pledge) என்ற பிணையமாகும்' என்று கூறினார்.

வங்கியரின் பற்றுரிமை (Bankers' lien)

வங்கியரின் பற்றுரிமை என்னும் கருத்து எதனைக் குறிக்கின்றது என்பதுபற்றி நாம் ஏற்கெனவே விளக்கிக் கூறியுள்ளோம்; அது, பொருளைத் தன்னிடம் வைத்துக் கொள்வதைக் குறிப்பிடுகின்றதேயன்றி, சொத்தையோ, உடைமை கொள்வதற்கான உரிமையையோ வங்கியருக்கு மாற்றித்தராது என்பதை மீண்டும் இங்கு நினைவுபடுத்திக் கொள்வது போதுமானதாகும். இருப்பினும், வழக்கத்திலும் சட்டத்திலும் வங்கியரின் பற்றுரிமை, சில தருணங்களில் விற்பதற்கான உரிமையை அவருக்கு அளிக்கின்ற ஓர் உள்ளார்ந்த அடகினைப் (Implied Pledge) போன்று உள்ளது இருந்தபோதிலும், பற்றுரிமையைப் பயன்படுத்துவது சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக ஆக்கப்பட்டுள்ளது; ஆனால் செல்லுபடியாகத் தக்க முறையில் அது பயன்படுத்தப்படுகின்றபொழுதெல்லாம் ஒரு பற்றுரிமை, ஓர் அடகினுடைய தரத்திலேயேஇருக்கின்றது.

அடகு (Pledge)

1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், 172ஆவது பிரிவு ஓர் அடகு என்பது, ஒரு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அல்லது ஒரு வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குப் பிணயமாகப் பொருள்களை ஒப்படைவு (bailment) செய்வதாகும் என்று

அடகுக்கு விளக்கம் கூறுகின்றது. அவரிடம் ஒப்படைப்புச் செய்யப்பட்டதன் மூலம் அடகு வாங்கியவரிடம் (pledgee) செல்லுகின்ற குறிப்பிடப்பட்ட சொத்தின் மீதான உரிமை தவிர, தன்னுரிமை (ownership) அடகு கொடுத்தவரிடமே உள்ளது.

பொருளை உடைமை கொண்டிருத்தல் அவசியம் (Possession necessary)

ஓர் அடகினை முடிவானதாகச் செய்வதற்கு (பொருளை) ஒப்படைப்புச்செய்வது (delivery) அவசியமானதாகும். எடுத்துக் காட்டாக, 'பொருள்கள் வைக்கப்பட்டுள்ள பண்டகத்தினுடைய (godown) திறவுகோலை, அல்லது பொருள்கள் தொடர்பான உரிமைப் பத்திரங்களை ஒப்படைப்புச் செய்கின்ற பொழுது ஏற்படுவது போல, பொருளை ஒப்படைப்புச் செய்வதென்பது ஓர் அடையாளமானதாகக் (symbolical) கூட இருக்கலாம். மேலும், பொருள்களை வைத்திருப்பது தொடர்பாக, பொருளினுடைய உண்மையான இடமாற்றம் ஏதும் இல்லாதபோதும் கூட ஒப்படைப்புச் செய்யப்படுவது இருக்கலாம். சட்டத்தினுடைய நோக்கில், அவைகளின் இருப்பு நிலையில் (position) எந்தவித இடமாற்றமும் இல்லாமல், அல்லது அவைகளை உண்மையில் வைத்திருக்கின்ற ஆள்களின் நிலையில் எந்தவிதமாற்றமும் இல்லாமலும், உடன்பாட்டின் மூலம் (by agreement) பொருள்களின் உடைமை (possession) மாற்றப்படலாம். உடன்பாட்டின் மூலம் உடைமை கொண்டிருப்பதற்கான உரிமை மாற்றிக்கொடுக்கப்படலாம்; மற்றும் அவற்றை வைத்திருப்பவர் என்ன தன்மையில் அவற்றை வைத்திருக்கின்றாரோ அதனை, உரிமை மாற்றல் (attorment) வழங்கப்படுவதன் மூலம் மாற்றிக்கொடுக்கலாம்,' என்று லிண்ட்லே, எல். ஜே. என்பவர், மில்ஸ் எதி சார்லஸ்வொர்த் (1890), 25 க்யூ. பி. டி. 421 [Mills *v.* Charlesworth (1890) 25 Q. B. D. 421] என்ற வழக்கில் தீர்ப்புக்கூறினார். அதே விதியின் அடிப்படையில், அடகு கொடுப்பவர் (pledger), அடகு வாங்குபவரின் (pledgee) சார்பாகவும் அவருடைய ஆணைக்குட்பட்டும், ஒப்படைவு பெறுபவர் (bailee) என்ற முறையில் பொருள்களைத், தன்னிடமே வைத்திருப்பதற்கு உடன்படுகிறார் என்றால் பொருள்கள் அடகு கொடுப்பவரின் உடைமையிலேயே தொடர்ந்து இருந்தபோதிலும், அடகு வாங்கியவருக்கு ஒப்படைப்புச் செய்யப்பட்டதாகக் கருதப்படலாம் (ரீவ்ஸ் எதி. காப்பர், 5 பிங்க். என் சி. 136) (Reeves *v.* Copper, 5 Bing. N. C. 136).

அடகு கொடுப்பவரிடம் மறுசேர்ப்புச்செய்தல் (Redelivery to the Pledger)

அடகு வாங்கியவரிடம் பொருள்கள் சேர்ப்புச் செய்யப்பட்டு, பின்னர், அவை ஒரு குறிப்பிட்ட அல்லது சிறப்புத்தன்மை வாய்ந்த காரியத்திற்காக அடகு கொடுத்தவரிடம் மறுசேர்ப்புச் (redelivery) செய்யப்பட்டால், அடகு இழக்கப்பட்டுவிட்டதாக ஆகாது. எடுத்துக்காட்டாக, ஒரு வியாபாரி, ஒரு கடனை உத்தரவாதம் செய்வதற்காக இரயில்வே இரசீது ஒன்றினை ஒரு வங்கியரிடம் அடகு வைத்திருந்து, பின்னர் அதனை, சரக்கினை எடுத்து அவைகளை வங்கியரின் பண்டகத்தில் சேமித்துவைப்பதற்கான குறிப்பிட்ட காரியத்திற்காக வங்கியர் வியாபாரிக்குக் கொடுத்தால் அத்தகைய மறுசேர்ப்பு அடகினை ஒன்றும் பாதிக்காது (மெர்கண்டைல் பாங்க் ஆப் இந்தியா எதி. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா லிட்., 65. ஐ. எ. 75) (Mercantile Bank of India *v.* Central Bank of India Ltd., 65 I. A. 75). அதேபோல, பொருள்களை அடகுபெற்று, அவைகளை உடைமை கொண்டுள்ள ஒருவர், அவைகளை, தன்சார்பாக விற்கப்படவேண்டும் என்ற குறிப்பிட்ட காரியத்திற்காக, அடகு கொடுத்தவரிடம் ஒப்படைத்தால் அடகு பாதிக்கப்படுவதில்லை. (நார்த் வெஸ்டர்ன் பாங்க் லிட்., எதி. பாயின்டர் (1895) எ. சி. 56) (North Western Bank Ltd., *v.* Poynter (1895) A. C. 56).

விற்பனை செய்வதற்கு உரிமை (Right to sell)

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 175ஆவது பிரிவு, அடைமானம் கொடுத்தவர் உடன்படிக்கைப்படியான காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குத் தவறினால், அடைமானம் வாங்கியவர், பின்வரும் இரண்டு பரிகாரங்களில் ஏதாவது ஒன்றினைக் கொண்டுள்ளார்: அவர், தனக்கு வரவேண்டியுள்ள கடன் தொகைக்கு வழக்கு ஒன்றினைத் தொடுத்து, அடகு ஆகப் பெற்றுள்ள சொத்தினைப் பிணையாகத் தன்னிடம் வைத்துக் கொள்ளலாம்; அல்லது நியாயமான அறிவிக்கையைக் கொடுத்த பின் அடகு பெற்ற சொத்தினை விற்றுவிடலாம், என்று கூறுகிறது. பற்றாக்குறை ஏதாவது இருப்பின், அதனை, அடகு வாங்கியவருக்கு ஈடுசெய்வதற்கு அடகு கொடுத்தவர் கடமைப்பட்டுள்ளார்; எச்சமாக (surplus) ஏதாவது இருப்பின், அதற்கு, அடகு வாங்கியவர் அடகு கொடுத்தவருக்குக் கணக்குக் காட்டவேண்டும்.

அடகு ஒன்றினை யார் ஏற்படுத்தலாம் (Who can Create a Pledge)

1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், 178ஆவது மூலப் பிரிவின்படி (original section), சரக்குகளை அல்லது சரக்குரிமைப் பத்திரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள எந்த நபரும் செல்லு படியாகத்தக்க அடகு ஒன்றினை ஏற்படுத்தமுடியும்; ஒரே ஒரு வறையறை யாதெனில், அடகு வாங்குபவர் நல்ல எண்ணத் துடனும், (எதிரான செய்திபற்றிய) அறிவிக்கை எதனையும் பெற்றிருக்காதவராகவும் செயல்பட்டிருக்கவேண்டும்; மற்றும் அடகு கொடுத்தவர், மோசடி, அல்லது குற்ற நடவடிக்கைகளின் மூலம் சரக்குகளின் உடைமையைப் பெற்றிருக்கக்கூடாது. இந்தப் பிரிவு அளவு மீறி பரந்த அளவினதாக இருந்ததால், அது 1930ஆம் ஆண்டின் IVஆவது சட்டத்தின்படி திருத்தப்பட்டு, 178, மற்றும் 178-A என்னும் இரண்டு புதிய பிரிவுகள் பதிலாகக் கொண்டுவரப் பட்டன. புதிய 178ஆவது பிரிவின்படி, சரக்குகளை அல்லது சரக்கு களுக்கான உரிமைப்பத்திரங்களை, அவற்றின் உரிமையாளரின் சம்மதத்தோடு, தன்னகத்தே உடைமை கொண்டுள்ள ஒரு வாணிக முகவர் (Mercantile Agent) செல்லுபடியாகத்தக்க ஓர் அடகினை ஏற்படுத்தலாம். பிரிவு-178 Aயின் படி, மோசடி அல்லது தவறுதலாக விவரித்துக் கூறியதன் மூலம் ஏற்பட்ட தவிர்தகு (voidable) ஒப் பந்தம் ஒன்றின் கீழ் சரக்கின் உடைமையைப்பெற்றுள்ள ஓர் அடகு கொடுப்பவர் கூட, அடகு கொடுக்கின்ற நேரத்தில் தவிர்தகு ஒப்பந் தம் தள்ளுபடி செய்யப்படவில்லையென்றால், செல்லுபடியாகத்தக்க ஓர் அடகினை ஏற்படுத்தலாம். அதேபோல, 1930ஆம் ஆண்டின் இந்தியச்சரக்கு விற்பனைச்சட்டம், 30(a) பிரிவின்படி, வாங்கிய வரின் சம்மதத்தோடு, சரக்குகளின் உடைமையைத் தன்னகத்தே தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்கின்ற ஒரு விற்பனையர், செல்லு படியாகத்தக்க உரிமையினை அடகுவாங்கியவருக்குக் கொடுக் கலாம்; 30(b) பிரிவின்படி, விற்பனை செய்தவரின் சம்மதத்துடன் சரக்குகளின் அல்லது சரக்குரிமைப் பத்திரங்களின் உடைமையைப் பெற்றுள்ள வாங்கியவர் ஒருவர், மூல விற்பனையருக்குக் கிடைக்கக் கூடிய எல்லா உரிமைகளிலிருந்தும் விலக்குப்பெற்ற ஓர் அடகினைத் தோற்றுவிக்கலாம்.

அசைவனவற்றின் மீதான அடைமானம் (Mortgage of Movables)

உருப்படியாக உள்ள, அசையும் பொருள்களின் மீதான, தன்னுடைய், பொதுவான உரிமையை பிணையமாக அளிக்கும் நோக்கத்துடன், அடகு செய்பவர் மீட்புச்செய்துகொள்வதற்கான உரிமைக்கு உட்பட்டு, செய்யப்படும் ஒரு மாற்றலே (transfer)

அசைபவற்றின் மீதான அடைமானம் எனப்படும் என்று கூறலாம். ஆங்கிலச்சட்டத்தின்படி, ஓர் அடைமானத்தை முடிவானதாக ஆக்குவதற்குச் சேர்ப்புச் செய்தல் அல்லது உடைமை கொண்டிருத்தல் அவசியமில்லை.

ஒரு மாற்றல் (transfer) அடைமானமாகக் கருதப்படுமா? அவ்வாறு கருதப்படமாட்டாதா? என்பது, அதனை ஏற்படுத்துகின்ற பத்திரங்களின் வாசகத்தைப் பொறுத்திருக்கும். உரிமை மாற்றித் தருவதற்கான விதி பின் வருமாறு: "அடைமானம் கொடுப்பவர், இங்கு, இதன் கீழ் அடங்கியுள்ள, மீட்புச்செய்வது சம்பந்தமான காப்பு வாசகத்திற்கு உட்பட்டு, சொத்தின் மீதான தன்னுடைய அதிகாரம், உரிமை, நலன் ஆகியவற்றை அடைமானம் பெறுபவருக்கு, அவற்றை அவர் தன்னிடம் வைத்திருக்கும் பொருட்டும், அடைமானம் பெறுபவரின் உபயோகத்திற்காக அவற்றை வைத்துக்கொள்ளும் பொருட்டும், இதன் மூலம் அனுப்பி வைத்து, மாற்றிக்கொடுத்து ஒதுக்கி வைக்கிறார்."

முத்திரை வரி (Stamp Duty)

அடைமானம் ஒன்றினை ஏற்படுத்தக்கூடிய ஆவணத்தின் வாசகத்தைப்பற்றி நாம் ஆராய்ந்து கொண்டிருக்கும் இந்நேரத்தில், இத்தகைய ஆவணங்களின்மீது தேவையான முத்திரை வரி சம்பந்தப்பட்ட இரண்டு வழக்குகளை எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். முதல் வழக்கில், அடகுவைப்பவர் ஒருவர், அடகு வாங்கியவர்களாகிய சுனிலால் கிர்தர்லால் மற்றும் அவருடைய மனைவியிடமிருந்து, சில பங்குப்பத்திரங்களை ரூ. 1,25,000-க்கு வாங்கி, நடவடிக்கையை எழுத்துமூலம் பதிந்துவைத்துக் கொண்டார். குறிப்பிட்ட பங்குகளை வாங்கியவரான அடகு வைத்தவர் (pledger purchaser), தன்னிடம் பணமேதும் இல்லாததால், அவைகளை வாங்கிய அதே தொகைக்குப் பிணையமாக, வெற்று மாற்றுப் படிவங்களோடு (Blank Transfer Forms) சேர்த்து, அதே பங்குப்பத்திரங்களை அடகு வாங்கியவர்களிடம் ஒப்படைத்தார், பம்பாய் உயர்நீதி மன்றத்தின் முழு நடுவர் குழுவிடம் (Full Bench), இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ், முதன்மை வருவாய் அதிகாரியால், இதுபற்றிய அறிவுரை கேட்கப்பட்டபொழுது, சர்ச்சைக்குரிய பத்திரம் கடந்தகால நடவடிக்கையைப்பற்றிய ஒரு குறிப்புமட்டுமேயாதலால், அது, முத்திரை வரி எதுவும் செலுத்தப்படுவதற்கு உட்பட்டதன்று என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இரண்டாவது வழக்கில், வெர்டெக்ஸ் மானுபாக்சரிங் கம்பனி லிமிடெட் (Vertex Manufacturing Co. Ltd.) என்ற நிறுவனத்

திற்குச் சொந்தமான அசையாச் சொத்து ஒன்றினை நியாய அடைமானமாகக் (Equitable Mortgage) கொடுத்து, உரிமைப் பத்திரங்களை ஒப்படைத்ததற்கான குறிப்பு ஒன்றினை, குறிப்பிட்ட சொத்தின் மீதான எந்த உரிமையையும் மாற்றிக் கொடுக்காத மற்றொரு பத்திரத்துடன் சேர்த்துக் கொடுத்ததன் பேரில், கோஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ணஜி ஜீவான்ஜி மஹாராஜ் என்பவரால் ரூ. 90,000 கடனாக அளிக்கப்பட்டது. இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ், முதன்மை வருவாய் அதிகாரியால், இதுபற்றி, பம்பாய் உயர்நீதிமன்றத்தின் முழு நடுவர் குழுவிடம் எடுத்துக்கூறப்பட்ட பொழுது, சர்ச்சைக்குரிய பத்திரம், முத்திரைச் சட்டத்தின் சரத்து 5-ன் கீழ் ரூ. 1-50 முத்திரை வரியாக விதிக்கப்படுவதற்கான ஓர் உடன்பாடு அன்றென்றும், ஆனால் சரத்து 40(B)-ன்கீழ், ஓர் அடைமானம் என்ற முறையில் ரூ. 1,012-50 முத்திரை வரி விதிப்பிற்கு உட்பட்டதாகும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

மேலே கண்ட வழக்குகளிலிருந்து, முத்திரை வரி பற்றிய முடிவினை எடுப்பதில் பத்திரத்தின் வாசகம் முக்கியமானதாகும் என்பது தெளிவு.

விற்பனைச் சட்டங்களின் மசோதாக்கள் (Bills of Sale Acts)

இங்கிலாந்தில், அசையும் சொத்துக்களின் மீதான அடைமானங்கள், 1878 மற்றும் 1882 ஆண்டுகளின், விற்பனைச் சட்டங்களின் மசோதாக்களால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன; இம் மசோதாக்கள், இத்தகைய அடைமானங்களைச் செல்லத்தக்கவைகளாக ஆக்கும்பொருட்டு, அவை நிறைவேற்றப்பட்ட ஏழு நாள்களுக்குள் தலைமை நீதிமன்றத்தின் (Supreme Court) மத்திய அலுவலகத்தில் பதிவு செய்யப்படவேண்டுமென்பதைக் கட்டாயமாக்குகின்றன. நடவடிக்கையோடு தொடர்பான சடங்குகள் யாவும் அனுசரிக்கப்பட்டால், அடைமானம் வாங்கியவருக்குச் சாதகமாக உண்டாக்கப்படுகின்ற உரிமை, இந்த உலகம் முழுவதுக்கும் எதிராகக்கிடைக்கக்கூடிய உரிமையாகும் (Right in Rem); மற்றும், அந்த உரிமை, அடைமானம் கொடுத்தவருடைய நொடிப்பு நிலை, அல்லது அடைமானம் வாங்கியவருடைய உரிமைக்கு எதிராகப் போகக் கூடிய, அசையும் சொத்துகளின் விற்பனை அல்லது அவைகளின் மீதான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ஆகியவைகளால் பாதிக்கப்படக்கூடியதும் அல்ல. ஒரு விற்பனை மசோதாவின்படி, சொத்து, அடைமானம் கொடுப்பவரின் உடைமையில் இருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. மற்றும், சாதாரணமாக, அது அவருடைய உடைமையில்தான் இருக்கிறது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இந்தியாவில் அசையும் சொத்துகளின் மீதான அடைமானங்கள் (Mortgages of Movables in India)

இந்தியாவில் அசையும் சொத்துகள் மீதான ஒற்றிகள் சம்பந்தப்பட்ட சட்டம் இன்னும் திருப்திகரமற்றதாகவே உள்ளது. இந்தியச் சரக்கு விற்பனைச் சட்டம் (Indian Sale of Goods Act) நிறைவேற்றப்படுவதற்கு முன், அடைமானமாகக் கொடுக்கப் பட்ட சரக்குகளைத் தன்னுடைய உடைமையில் வைத்துள்ள, அடைமானம் கொடுத்தவர் ஒருவர், மதிப்பைக் கொடுத்து நல்லெண்ணத்துடன் வாங்குகின்ற ஒருவருக்கு, அல்லது முதல் அடைமானத்தின் கட்டுப்பாடு ஏதுமின்றிச் சரக்குகளின் உடைமையைப் பெற்றுக்கொள்கின்ற, அடகு வாங்கும் ஒருவருக்கு, உரிமையை மாற்றிக் கொடுக்கமுடியும் என்று பல வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டது. (பேக்கர் எதி. அஹமத் இஸ்மாயில், இ.லா.ரி. 5 ரங். 633; நர்சையா எதி. வெங்கடராமையா, இ.லா.ரி. 42 மத. 59) (Backer *v.* Ahmed Ismail, I.L.R. 5 Rang. 663 ; Narsiah *v.* Venkataramiah, I. L. R. 42 Mad. 59). இந்தத் தீர்ப்புகள், உரிமையாளரின் சம்மதத்துடன் சரக்குகளின் உடைமையைத் தன்னகத்தே கொண்டிருக்கும் ஒருவர், விற்பனை அல்லது அடகு மூலம், மதிப்பைக் கொடுத்து நல்லெண்ணத்துடன் பெறுகின்ற ஒருவருக்குச் சரக்கினை மாற்றிக்கொடுத்தால், அது சரக்குகளின் உரிமையாளரைக் கட்டுப்படுத்தும் என்ற சரத்தினைக் கொண்டிருந்த, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பழைய 108ஆவது பிரிவின் அடிப்படையில் கூறப்பட்டவைகளாகும். ஓர் அடைமானத்தில், முழுச்சொத்தும் அடைமானம் வாங்குபவருக்குச் சென்றுவிடுவதால், சட்டப்படி அவர்தான் உரிமையாளர் ஆவார்; மீட்புச் செய்து கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ள அடைமானத்தைக் கொடுத்தவர், அடைமானம் வாங்கியவரின் சம்மதத்தோடு, (சரக்கின்) உடைமையைக் கொண்டிருந்தால், அத்தகைய வழக்கு, நிச்சயமாக, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 108ஆவது பிரிவின் காப்புவாசகங்களுக்கு உட்பட்டதாகும், முதல் அடைமானத்தை வாங்கியவரின் உரிமைகள், தானாகவே, இழக்கப்பட்டவைகளாகும்.

இந்திய ஒப்பந்தச் சட்டம் 108ஆவது பிரிவு நீக்கம் (Repeal of Section 108 of the Indian Contract Act)

1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம், 108ஆவது பிரிவு இப்போது நீக்கம் செய்யப்பட்டுள்ளது ; தற்போது இந்தப்பொருள்களை (matters) உள்ளடக்கிய காப்புவாசகம் இந்திய ஒப்பந்தச் சட்டத்திலோ, 1930ஆம் ஆண்டின் இந்தியச் சரக்கு விற்பனைச்

சட்டத்திலோ இல்லை. மாறாக, முன்னரே கூறப்பட்ட, இந்தியச் சரக்கு விற்பனைச் சட்டத்தின் 66(3)ஆவது பிரிவு, விற்பனை ஒப்பந்தங்கள் தொடர்பாக, (இந்தியச் சரக்கு விற்பனைச்) சட்டத்தில் கூறப்பட்டுள்ள காப்பு வாசகங்கள், அடைமானம் (mortgage), அடகு (pledge), பொருட்பிணைப்பொறுப்பு (Charge) அல்லது இதர பிணையமாகச் செயல்படும் பொருட்டுச் செய்யப்பட்ட, விற்பனை ஒப்பந்தம் அமைப்பிலான எந்த நடவடிக்கைக்கும் பொருந்தமாட்டா என்று தெளிவாகக் கூறுகின்றது. சட்டமுறையிலான காப்புவாசகம் ஏதுமில்லாதவிடத்து, இங்கிலாந்தின் பொதுச் சட்டத்தைப் (Common Law) பின்பற்றுவதுதான், இதுவரையிலும், இந்திய நீதிமன்றங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறையாக இருந்து வந்திருக்கிறது. இங்கிலாந்தில், அசையும் சொத்துகளை அடகு வாங்கியவரின் உரிமையை முடிவானதாக ஆக்குவதற்கு (பொருளை) உடைமை கொண்டிருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. (ரி மிடில்டன். எல். ஆர். 11 ஈக். 209 In Re Middleton, L.R. 11 Eq. 209).

பதிவு செய்யப்பட்ட விற்பனை ஒப்பந்தம் ஒன்றின் மூலம், "அ" என்பவர் தம்முடைய அசையும் சொத்துகள் சிலவற்றை "ஆ" என்பவரிடம் அடைமானம் வைத்தார். "அ" பதிவு செய்யப்பட்ட இரண்டாவது விற்பனை ஒப்பந்தம் ஒன்றின்மூலம் இரண்டாவது அடைமானம் ஒன்றினை "இ" என்பவருக்குச் சாதகமாக ஏற்படுத்தினார். "இ" பொருள்களைத் தம்மிடம் எடுத்துக்கொண்டார் ; அசையும் சொத்துகளைப் பொறுத்தவரையில், உரிமையை முடிவானதாக ஆக்குவதற்கு, உடைமை சேர்ப்புச் செய்யப்படவேண்டுமென்று ஆங்கிலச் சட்டம் கூறுவதால், "இ" முன்னுரிமை பெறுகிறார் என்று, "இ"-யின் சார்பாக வாதிடப்பட்டது. ஆங்கிலச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய விதி ஏதும் கிடையாது என்றும், எனவே, "ஆ"-வினுடைய அடைமானம் "இ"-யினுடைய அடைமானத்தைக் காட்டிலும் முன்னுரிமை பெற்றிருந்தது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. இருப்பினும் கோ-ஆப்பரேடிவ் ஹிந்துஸ்தான் பாங்க் லிட்., எதி. வி. சுரேந்திரநாத் டே. இ.லா.ரி. 59 கல்.667 (Co-operative Hindustan Bank Ltd., v. Surendranath De, I.L.R. 59 Cal. 667) என்ற வழக்கில், கல்கத்தா உயர்நீதிமன்றம் 1872ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பழைய பிரிவு-108 ஒரு புறமிருக்க, இங்கிலாந்தின் பொதுச்சட்டத்தின்படியான, அசையும் பொருள்களின் மீதான அடைமானம்பற்றிய கருத்து இந்தியாவிற்குச் செயல்படாது என்று தீர்ப்புக்கூறியது. சட்டப்படியான காப்புவாசகமேதுமில்லாத விடத்து, இந்தியாவில் தற்போது நிர்வகிக்கப்படு

வதுபோல, சட்டத்துறையின் எல்லாப்பிரிவிலும், செயல்முறையில், ஆங்கிலச் சட்டம் எல்லா இடத்திலும் பின்பற்றப்படும்பொழுது, இந்த ஒரு துறையில் மட்டும் ஏன் அது உபயோகத்தில் இல்லை என்ற நியாயமான கேள்வி கேட்கப்படலாம். இக்கருத்து, அதே உயர் நீதி மன்றத்தால், மன்மோஹன்முகர்ஜீ எதி. கேஸ்ரிசந்த் குலாப்சந்த், இ.லா.ரி. 62. கல். 1046 (Manmohan Mukherjee v Keshrichand, I.L.R. 62 Cal. 1046) என்ற வழக்கில் பின்பற்றப் பட்டது. அந்த வழக்கில் கீழ்க்கண்ட கருத்துகள் வெளியிடப்பட் டன: முதலாவது, உடைமை கொண்டிருத்தல் என்பது இல்லாமல், அசையும் சொத்துகளின் மீதான அடகு என்ற ஒன்றே கிடையாது. இரண்டாவது, அடகு வாங்கியவருக்கு, பொருளை ஒப்படைப்புச் செய்வதற்கான சேர்ப்புச் செய்யப்படவில்லை என்ற காரணத்திற் காக ஓர் அடகு என்ற முறையில் செயல்படமுடியாத, அசையும் சொத்து சம்பந்தமான ஓரு நடவடிக்கை, அந்த நடவடிக்கையைக் கொண்டுள்ள பத்திரத்தினுடைய வாசகம், விரும்பியபடி அடகு என்று இருந்தாலும் சரி, அல்லது ஓர் அடைமானம் அல்லது ஒற்றி என்றுகூறும்படியாக வழக்கமான சொற்களில் அமைந்திருந்தாலும் சரி, அந்தச் சொத்தின் மீதான, செயல் படுத்தத்தக்க ஓர் அடை மானமாகத் தோன்றவில்லை. அடைமானப்பொருளை உடைமை கொண்டிராத, அசையும் சொத்துகளின் மீதான ஓர் அடைமானம், அதே சொத்தின் மீதான அடுத்த அடைமானம் வரையிலும் தள்ளி வைக்கப் படுகின்றது (deferred); "நம்பிக்கை உரிமை" (Reputed ownership) கோட்டபாட்டின்படி, நல்லெண்ணத்துடன், மதிப் பைக் கொடுத்து (முதல் அடைமானத்தைத்) தொடர்ந்து அவை களை வாங்குகின்றவர்களுக்கும், உரிமை மாற்றிப் பெறும் அதிகாரிக் கும் (Official Assignee) கூடத் தள்ளிப்போடப்படுகின்றது. இதே விதி, பொறுப்புரிமை இரசீதுகளை (Trust Receipts) வைத்திருப் பவர்களுக்கும் பொருந்தும்.

கல்கத்தா உயர்நீதிமன்றத்தினால் தெரிவிக்கப்பட்ட, மேலே கண்ட கருத்துகள், நாடார் பாங்க் லிட். எதி. கானரா பாங்க் லிட். எ.ஐ.ஆர். 1961 மத. 326 (Nadar Bank Ltd. v Canara Bank Ltd. Reported in A.I.R. 1961 Mad. 326) என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு முரண்பாடானவையாகத் தோன்றவில்லை. இந்த வழக்கில், முந்தைய அடகுவாங்கியவர் பொருளை உடைமை கொண்டிருத்தல் இழக்கப்படாமல் இருக்கின்றபொழுது-உடைமை, உண்மையாகப் பொருளை இடம் பெயரச் செய்ததன் மூலம் ஏற் பட்ட ஒன்றாக இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை, ஆனால் அனுமானம் செய்துகொள்ளக்கூடியதாகவும்கூட இருக்கலாம்— பின்னர் அடகு வாங்கிய ஒருவர், அவர் அடகினை (முந்தைய

அடகினைப் பற்றி எந்தவித) அறிவிக்கையையும் பெற்றுக் கொள்ளாமல் வாங்கியிருந்தார் என்ற போதிலும்கூட, முந்தைய அடகினை வாங்கியவரைவிட முன்னுரிமை எதனையும் பெற மாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. முதலில் அடகு வாங்கியவர், பொருள்களின் உடைமையைப் பெறுவதற்குத் தவறிய தம் முடைய தவறு காரணமாக மோசடி நடைபெறுவதற்கு இடமளித்த வராக இருந்திருப்பாரெனில் நிலைமை வேறாக இருந்திருக்கும்; ஆனால், அனுமானம் செய்துகொள்ளப்படுகின்ற உடைமை இழக்கப்படாமல் இருக்கின்றபொழுது, பின்னர் அடகு வாங்கிய ஒருவர், அறிவிக்கையெதனையும் பெற்றுக்கொள்ளாமல் அவர் அடகு வாங்கியிருந்தாலும்கூட, முந்தைய அடகு வாங்கியவரை விட எவ்வாறு முன்னுரிமை பெறுகிறார் என்பது, ஏற்றுக்கொள் வதற்கு மிகவும் கடினமாக உள்ளது. உடைமை உண்மையான ஒன்றாக இருக்கவேண்டியதில்லை, ஆனால், அனுமானம் செய்து கொள்ளத் தக்கதாகவும் இருக்கலாம் என்ற காரணத்தினால்தான் இது இவ்வாறு உள்ளது.

நியாய அடைமானங்களும் பொருட்பிணைப் பொறுப்புகளும் (Equitable Mortgages and Charges)

ஏற்கெனவே விவாதிக்கப்பட்ட பற்றுரிமை (Lien), அடை மானம் (Mortgage) மற்றும் அடகு (pledge) ஆகிய மூன்று வகை யான பிணையங்கள் மட்டுமே ஆங்கிலப் பொதுச்சட்டத்தால் (English Common Law) அங்கீகரிக்கப்பட்டவையாகும். இருப் பினும், குறிப்பிட்ட ஒரு நபருக்கு எதிரான உரிமை அதிகாரத்தைக் (in personam jurisdiction) கொண்டிருந்த நியாயம் அல்லது நேர்மை (Equity) என்ற கருத்து, செல்லத்தகாத அல்லது பொதுச் சட்டம் அறிந்திராத பல வகையான பிணையங்களைத் தோற்றுவித்தது. இங்கிலாந்தின், சான்சரி (உயர்) நீதிமன்றங்களி னுடைய, குழப்பத்தை ஏற்படுத்துகின்ற கோட்பாடுகளை விரிவாக விவாதிக்காமல் இக்கருத்தினை விளக்கிக்கூறமுடியாது; வங்கி யியல் சட்டத்தைப்பற்றிய ஒரு நூலில் அவ்வாறு செய்வது தொடர்பற்ற ஒன்றாக இருக்கும். எனவே, நிலைமையைப்பற்றிய ஒரு சுருக்க மான தொகுப்புமட்டுமே இங்கு முயலப்படும்.

பொருட்பிணைப் பொறுப்புகளுக்கு எடுத்துக் காட்டுகள் (Instances of Equitable Charges)

ஒரு பொறுப்புரிமையர் (trustee) பொறுப்புரிமைச் சொத்தி னுடைய சட்டப்படியான உரிமையாளராகக் கருதப்படுகிறார். பொறுப்புரிமையின் (trust) பயனை பெறுகின்றவர் நியாயப்படியான

உரிமையாளர் எனக்கருதப்படுகிறார். பொறுப்புரிமையின் பயனைப் பெறுகின்ற ஒருவர், தம்முடைய உரிமையின் மீது அடைமானம் ஒன்றினை ஏற்படுத்தினால், அடைமானம் வாங்கியவர் சட்டப்படி யான உரிமையைப் பெறமாட்டார். ஆனால், நியாயப்படியான ஓர் உரிமையை (equitable title) மட்டுமே பெறமுடியும்; எனவே, அவருடைய அடைமானம் ஒரு நியாய அடைமானமேயாகும் (Eqitable Mortgage). அதேபோல, ஒரு வரையறுக்கப்பட்ட நிறுமத்தின் பங்குகளைப் பதிவு பெற்று வைத்திருக்கும் ஒருவர் (Registered holder) அவைகளை விற்றால், நிறுமத்தினுடைய ஏடுகளில் வாங்கியவரின் பெயர் கொண்டுவரப்படும் வரையிலும், சட்டப்படியான உரிமையாளராகத் தொடர்ந்து இருக்கிறார். விற்றவரால் ஒப்பமிடப்பட்ட, வெற்று மாற்றுப்படிவங்களோடு சேர்த்துப் பங்குப்பத்திரங்களைத் தம்முடைய உடைமையில் வைத் திருந்தாலும், பங்குகள் அவர் பெயரில் மாற்றித்தரப்படும்வரை, வாங் கியவர் ஒரு நியாய உரிமையாளராகத்தாம் இருப்பார். ஆகையால், பதிவுசெய்யப்படுவதற்கு முன், பங்குகளை வாங்கிய ஒருவரால் ஏற் படுத்தப்படும் எந்த அடைமானமும், அவருடைய உரிமையே சட்டப்படியானதாக அல்லாமல் நியாய உரிமையாக இருப்பதால், ஒரு நியாய அடைமானமாகவே இருக்கும்.

பயன்விளைவற்ற மாற்றம் (Ineffectual Transfer)

சட்டப்படியான உரிமையாளராக அவர் இருந்தபோதிலும் அடைமானம் கொடுக்கின்றவர், சட்டப்படியான உரிமையை மாற்றிக் கொடுப்பதற்கு, பயன் விளைவற்ற மாற்றுதல்முறை ஒன் றினைப் பயன்படுத்தலாம், அல்லது நியாய முறையில் மட்டுமே பயன் விளைவிக்கத்தக்க ஓர் அடைமானத்தை ஏற்படுத்திக்கொள் வதற்கு, சம்பந்தப்பட்ட நபர்கள் வேண்டுமென்றே உடன்படலாம். எடுத்துக்காட்டாக, ஆயுள் காப்பீட்டுப் பத்திரம் (Insurance Policy) ஒன்றினைப், பிணையமாக, மற்றொருவருக்கு மாற்றிக்கொடுப்ப தற்கு, அடைமானம் அளிப்பவரால், கையொப்பமிடப்பட்ட, எழுத் தாலான, ஓர் ஒழுங்கான உரிமை மாற்றம் தேவையென்று சட்டம் கூறுகின்றது. பத்திரத்தை வெறுமனே வைப்புச் செய்தல் (deposit) சட்டப்படி செல்லாததாகும், மற்றும் விளைபயன் ஏதுமற்றது மாகும்; ஆனால், பத்திரத்தின்மீது நியாய அடைமானம் ஒன் றினை அது ஏற்படுத்தலாம். (பெர்ரிஸ் எதி. முல்லின்ஸ் [1854], 2 எஸ்.எம்.அண்ட்.ஜி. 378 Ferris *v.* Mullins [1854] 2 Sm. & G. 378). அதேபோல, ஒரு கடனுக்குப் பிணையமாக, ஒரு பங்குப் பத்திரம், கையொப்பமிடப்பட்ட மாற்றல் ஏதுமின்றி வெறுமனே வைப்புச் செய்யப்பட்டால், அவ்வாறு செய்வதன் மூலம் பங்குகளின் மீது நியாய அடைமானம் ஒன்றினை ஏற்படுத்தலாம் (ஹரால்டு எதி.

பிளென்டி [1901], 2 சான்சரி. 314—Harrold v. Plenty [1901], 2 Ch. 314). அதே விதியின் அடிப்படையில், இங்கிலாந்தில் அசையாச் சொத்தின் மீதான ஓர் அடைமானம், ஓர் ஒழுங்கான மாற்றல் மூலமாகமட்டுமே ஏற்படுத்தப்படமுடியும். ஆகையால், அவைகளில் அடங்கியுள்ள சொத்தின்மீது பிணையம் ஒன்றினை ஏற்படுத்தும் எண்ணத்தோடு உரிமைப் பத்திரங்களை வெறுமனே வைப்புச் செய்தல், சொத்தின்மீது நியாய அடைமானம் ஒன்றினைத்தான் ஏற்படுத்தும். இந்தியாவில் நியாய அடைமானங்கள் சட்டபூர்வமான அங்கீகரிப்பினைப் பெற்றுள்ளன.

ஒற்றி (Hypothecation)

சட்டப்படி அசையும் சொத்துகளின் மீதான அடைமானம் ஒன்றினை ஏற்படுத்துவதற்கு, மாற்றிக் கொடுப்பதற்கான உகந்த வாசகங்கள் இருக்கவேண்டியதும், மாற்றிக் கொடுக்கப்படுவதும் அவசியமானவைகளாகும்; அடகு (pledge) ஒன்றினை ஏற்படுத்துவதற்கு உடைமை கொண்டிருத்தல் அவசியமாகும். எனவே, மாற்றல் செய்துதருவதற்கான வாசகங்கள் ஏதுமின்றி, பொருளின் உடைமை கடன் வாங்கியவரிடமே தொடர்ந்து இருக்குமாறு, அசையும் சொத்துகளின்மீது பிணையம் ஒன்றினை ஏற்படுத்துவதற்கென மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கை, பொதுவாக ஒற்றி (hypothecation) என்று அழைக்கப்படுகின்ற, ஒரு நியாய பொருட்பிணைப் பொறுப்புக்குச் (Equitable Charge) சமமான தாகும். லார்டு மாக்னாக்டென் என்பவர், ஒற்றி என்பதை, "அதனுடைய தன்மையில் நிலையற்றதாக மாறிக்கொண்டே இருப்பது ; அதனை நிலையான ஒன்றாக ஆக்கி, அதனுடைய பிடிப்புக்குள் வருமாறு (பிணையமாக அளிக்கப்பட்ட) பொருளை அதனோடு கட்டுகின்ற ஏதாவது நிகழ்ச்சி நடைபெறும் வரை, அல்லது ஏதாவது செயல் செய்யப்படும்வரை சொத்தின் மேல் வட்டமிட்டுக்கொண்டும், சொத்துடன் மிதந்துகொண்டும் இருப்பது," என்று அதனுடைய குணாதிசயங்களைக் கூறினார். அதனை மட்டும் தனித்து எடுத்துப் பார்த்தால், கல்கத்தாத் தீர்ப்புகளின்படி இந்தியாவில் அசையும் சொத்துகளின் மீதான அடைமானம் (Mortgage), ஆங்கிலச் சட்டத்தின்படியான ஒற்றி (hypothecation) ஒன்றினைப் போன்றே உள்ளது.

அடைமானத்திற்கான உடன்பாடுகள் (Agreements to Mortgage)

நியாயப்படி, அடைமானம் அல்லது பொருட்பிணைப் பொறுப்பு ஒன்றினைக் கொடுப்பதற்கான ஓர் உடன்பாடு, அது குறிப்பிட்ட செயலை நிறைவேற்றக்கூடிய ஒன்றாக இருப்பின்,

உடன்பாட்டினை நிறைவேற்றுவதன் மூலம், அடைமானம் அல்லது பொருட்பிணைப் பொறுப்புச் செய்யப்படவேண்டும் என்று விரும்பப்பட்ட சொத்தின்மீது நியாய பொருட்பிணைப் பொறுப்பு (Charge) ஒன்றினை ஏற்படுத்தும். "எது செய்யப்படவேண்டுமோ, அது செய்யப்பட்டுவிட்டதாக நியாயம் கருதுகிறது" என்னும் விதியின் அடிப்படையில் இது அமைந்துள்ளது. அதே போல, சட்டத்தின்படியோ, நியாயத்தின்படியோ, உண்மையில் உருப்படியாக இல்லாத, ஒரு சொத்தின் மீதான ஓர் அடைமானத்தை ஏற்படுத்தமுடியாது. இனிமேல் உருவாகப் போகின்ற சொத்தின்மீதான ஓர் அடைமானத்தை, நியாயம், அத்தகைய சொத்தினை அடைமானம் செய்வதற்கான ஓர் உடன்பாடு என்று கருதுகிறது; அத்தகைய சொத்து உண்மையில் உருப்பெற்று வந்தவுடன் அதன்மீது அடைமானம் உடனே ஏற்பட்டுவிடும் (ஹாரல்ராய்டு எதி. மார்சல் [1862], 10 ஹெய்ச். எல்.சி. 191 மற்றும் டைல்பி எதி. சொத்தாட்சி அதிகாரி [1888], 13 அப். வழ. 523 Holroyd v. Marshal [1862], 10 H. L. C. 191 and Tailby Official Receiver [1888], 13 app. cas. 523).

நியாய அடைமானங்களின் முன்னுரிமை (Priority of Equitable Mortgages)

நியாய அடைமானங்களின் முன்னுரிமை, நியாயம் பற்றிய இரண்டு கோட்பாடுகளின் (maxims) அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. அவை: (அ) நியாயம், சட்டம் ஆகிய இரண்டிற்கிடையில் சட்டம் நியாயத்தைவிட மேலோங்கி நிற்கிறது. (as between equity and law the law prevails); (ஆ) நியாய உரிமைகள் சமமானவைகளாக இருப்பின், காலத்தால் முன்னதாக இருப்பது மேலோங்கி நிற்கிறது (where equities are equal, the first in time prevails). முதல் விதியில், அறிவிக்கை இன்றி, மதிப்பைக் கொடுத்து நல்லெண்ணத்துடன் வாங்குவர் என்ற கோட்பாடு அடிப்படையாக அமைந்துள்ளது. சட்டப்படியான உரிமையைப் பெறுகின்ற நபர், விலைமதிப்பைக் கொடுத்துள்ளார், நல்லெண்ணத்துடன் செயல்பட்டுள்ளார், மற்றும் முந்தைய நியாய உரிமை (equitable Title) பற்றிய அறிவிக்கை எதனையும் பெறவில்லையெனில், ஒரு நியாய உரிமை, அதைத் தொடர்ந்து ஏற்படுத்தப்படும் சட்டப்படியான உரிமையால் தோற்கடிக்கப்படும் என்பது இக்கோட்பாட்டின் பொருளாகும். நியாய உரிமைகள் யாவும் சமமாக இருந்தால் சட்டப்படியான உரிமை மேலோங்கி நிற்கும். இதற்கான எடுத்துக்காட்டுகள் ஏராளமாக இருந்தபோதிலும், இரண்டு எடுத்துக்காட்டுகள் தேவையை நிறைவேற்றப் போதுமானவைகளாகும். பொறுப்புரிமைச் சொத்து (trust) ஒன்றின்

பயனைப்பெறுகின்ற (beneficiary) ஒருவர், அந்தச் சொத்தி னுடைய நியாய உரிமையாளர் (equitable owner) ஆவார். ஆனால் பொறுப்புரிமைச் சொத்தின் பொறுப்புரிமையர் (trustee) அதனை, மதிப்பைக் கொடுத்து, அறிவிக்கை ஏதுமின்றி நல்லெண்ணத்துடன் வாங்குகின்ற ஒருவருக்கு விற்றாரெனில், பயன்பெறுவோரின் (beneficiary) முந்தைய நியாய உரிமை அதைத் தொடர்ந்து வரக்கூடிய சட்டப்படியான உரிமையை எதிர்த்து நிற்க முடியாது. அதேபோல, இங்கிலாந்தில், அசையாச் சொத்தின் மீதான ஒரு நியாய அடைமானம், அதைத் தொடர்ந்துவருகின்ற, அதே சொத்தின் மீதான சட்டப்படியான அடைமானத்திற்குத் தள்ளிப் போடப்படும். இருந்தபோதிலும், ஒரு நபர், உரிமைப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமல் சட்டப்படியான ஓர் அடைமானத்தை வாங்கினால், அவர் நல்லெண்ணத்துடன் அல்லது முந்தைய நியாய அடைமானம் பற்றிய அறிவிக்கை இன்றிச்செயல்படுகிறுர் என்று கூறமுடியாது; ஏனென்றுல், சாதாரண வழக்கில், உரிமைப் பத்திரங்கள் (அடைமானம் கொடுத்தவரிடம்) இல்லாமை (absence), அடைமானம் வாங்குபவரை விசாரணை செய்யுமாறு தூண்டும். இத்தகைய தறுவாயில், நியாய உரிமைகள் சமமானவைகளாக இல்லாதகாரணத்தால், இந்தக்கோட்பாடு செயல்படாது; எனவே, சட்டப்படியான உரிமைக்கு முன்னுரிமை கிடைக்காது. சட்டப்படியான உரிமையேதுமில்லாமல், இரண்டு உரிமைகளும் சமமானவையாக இருக்கும்பொழுது இரண்டாவது கோட்பாடு பொருந்தும். இத்தகைய தறுவாயில், முன்னுரிமை, அடைமானங்கள் ஏற்படுத்தப்பட்ட காலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். கூட்டுப்பங்கு நிறுமங்களின் பங்குகளைப் பொறுத்தமட்டில், அவைகளைப் பதிவுசெய்து வைத்திருப்பவர் (Registered holder) சட்டப்படியான உரிமையாளர் ஆவார்; அவர் மூலம் அல்லது அவர் சார்பாக உரிமை கோரும் எல்லா நபர்களும், பதிவு செய்யப்படுவதற்கு முன். நியாய உரிமைகளை மட்டும்தாம் கொண்டுள்ளார்கள் என்று நாம் முன்னரே கண்டோம். கீழ்க்காணும் எடுத்துக்காட்டு இதனை நன்கு விளக்குமென நம்பப்படுகிறது. "அ" என்பவர், சில பங்குகளைப் பதிவுபெற்றுத் தம்மிடம் வைத்துள்ளார்; அவர், அவைகளை "ஆ" என்பவருக்காகப் பொறுப்புரிமையர் (trustee) என்ற முறையில் வைத்துள்ளார். ஆகையால், "ஆ" வினுடைய உரிமை, ஐயமின்றி, ஒரு நியாய உரிமையேயாகும். "அ" தாம்பெற்ற ஒரு கடனைத் திருப்பச் செலுத்துவதற்கு உத்தரவாதமாக, பங்குச்சான்றுகளைக் கையொப்பமிடப்பட்ட வெற்று மாற்றல் படிவங்களுடன் சேர்த்து ஒரு வங்கியரிடம் கொடுக்கிறார். வங்கியர் பங்குகளைத் தம்முடைய

பெயரில் பதிவு செய்து கொள்ளவில்லை. இத்தகைய தறுவாயில், வங்கியரின் உரிமைகூட ஒரு நியாய உரிமையேயாகும். ஆகையால், காலத்தின் அடிப்படையில் முதலாவது என்பதால், "ஆ" வினுடைய உரிமை மேலோங்கி நிற்கும். "அ" வினால் செய்யப்பட்ட நம்பிக்கை முறிவிற்கு (Breach of Trust) "ஆ"-வும் உடந்தையாக இருந்தாரெனில், அப்பொழுது நியாய உரிமைகள் சமமானவைகளாக இருக்கமாட்டா; சொல்லப்பட்ட கோட்பாடு இதற்குப் பொருந்தாது; வங்கியரின் நியாய உரிமை மேலோங்கி நிற்கும்.

எச்ச ஓரம் - விளக்கம் (Margin Explained)

எல்லா வகையான பிணைப்பத்திரங்களின் விலைகளும் ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்டவைகளாதலாலும், அவைகளின் தன்மையைப் பொறுத்து மாறுபடக்கூடியவைகளாதலாலும், மற்றும், வங்கியருக்கு வரவேண்டிய கடன்பணத்தின் தொகை, கூடிக்-கொண்டுவரும் வட்டி, மற்றும் கடன் வாங்கியவர் தரவேண்டிய கட்டணங்கள் ஆகியவைகளின் காரணமாகக் கூடுவதற்கு வாய்ப்பு இருப்பதாலும், கொடுக்கப்படும் பிணையங்களின் முழுச்சந்தை மதிப்புக்குச் சமமான ஒரு தொகையை, எந்த வங்கியரும், கடனாக அளிக்கக்கூடாது என்பது தெளிவு. பொதுவாக, (பங்குமாற்றுச்) சந்தைக்கு வெளியிலேயே இருந்து கொண்டு, சந்தையின் தளத்தில் நடைபெறும் "நாட்டியத்தில்" எப்போதாவது பங்கேற்கின்ற, சந்தையினுடைய "சுவர் பூக்களை"ச் (Wall Flowers) சேர்ந்தவைகளாக அவை இருந்தாலும் கூட, இத்தகைய பிணையங்களின் அதிகாரப் பூர்வமான விலை, உண்மையில் அவை விற்கப்படக் கூடிய விலையைக் காட்டிலும், சிலவேளைகளில், அவர்களுக்கே நட்டமேற்படும் வகையில், அதிகமாக இருப்பதை, அவைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் வங்கியர்கள் அறிவர். ஆகையால், கடன் வழங்குகின்ற வங்கியர், தம்மை அளிக்கும்படி கேட்கப்படுகின்ற கடன் அல்லது அதிகப்பற்றின் தொகையைவிட அதிகமான மதிப்புள்ள பிணையப்பத்திரங்களைப் பெறுவதற்கு வற்புறுத்தவேண்டியது அவசியமாகும். பிணையங்களின் சந்தை மதிப்பிற்கும், அவைகளுக்கெதிராகக் கடனுக அளிக்கப்பட்டுள்ள தொகைக்குமிடையேயுள்ள வேறுபாடு எச்ச ஓரம் (margin) எனப்படும்.

விலையுயர்ந்த உலோகங்களுக்கும், சிறப்பீட்டுப் பிணையங்களுக்கும் எச்ச ஓரம் (Margin for Precious Metals and Giltedged Securities):

எச்ச ஓரம், அளிக்கப்படும் பிணையங்களின் வகை, ஓரளவிற்கு வாடிக்கையாளரின் நாணயம் ஆகியவைகளைப் பொறுத்திருக்கும்.

எடுத்துக்காட்டாக, பொன் திட்டத்தைக் (Gold Standard) கொண்டுள்ள நாடுகளில், தங்கத்தின் விலை, பொதுவாக, ஒரே சீராக இருப்பதால், பொன் திட்டத்தைக் கொண்டுள்ள நாடு ஒன்றி லுள்ள ஒரு வங்கியர், தங்கக்கட்டியினுடைய பிணையத்திற்கு எதிரான ஒரு கடனுக்கு, சாதாரண நேரங்களில், 5 சதவீத எச்ச ஓரத்தோடு திருப்தியடையலாம். இருப்பினும், தற்போது இந்தி யாவில் இருப்பதுபோல, ஒரு நாட்டின் பணத்திட்டம் (Money Standard) பொன் திட்டமாக இல்லாதிருந்து, தங்கத்தின் விலை பெருமளவிற்கு ஏற்ற இறக்கங்கள் கொண்டதாக இருந்தால், 5 சதவீதத்திற்கும் அதிகமான எச்ச ஓரம் வற்புறுத்தப்படவேண் டும். அதேபோல, வெள்ளியினுடைய விலை, தங்கத்தின் விலை யைவிட அதிக அளவு ஏற்ற இறக்கங்களுக்கு உள்ளானதாகை யால், வெள்ளி அல்லது வெள்ளி ஆபரணங்களுக்கு எதிராகக் கடன் வழங்கும்போழுது, ஒரு வங்கியர், 10 முதல் 15 சதவீதம் வரையில் அல்லது அதற்கும் அதிகமான எச்ச ஓரத்தைக் கேட்க வேண்டியிருக்கலாம். வெள்ளித் திட்டத்தைக் (Silver Standard) கொண்டுள்ள ஒரு நாட்டில், நிலைமை, மேலே கூறப்பட்டவை களுக்கு நேர் எதிராக இருக்கும்; ஆகையால், அந்த நாட்டில், வங்கியர் ஒருவர், தங்கத்தைவிட வெள்ளியில், குறைந்த அளவு எச்ச ஓரத்தோடு திருப்திப்பட்டுக்கொள்வார். சாதாரணக் காலங்களில், அவைகளின் விலைகள், மிகவும் குறுகிய வரையறைகளுக்குள் (limits) ஏறி இறங்குவதால், சிறப்பீட்டுப் பிணையப்பத்திரங்களின் (Gilt edged Securities) விடயத்தில், 10 சதவீத எச்ச ஓரம், பொதுவாக, போதுமானதெனக் கருதப்படுகிறது. அதேபோல ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பங்குகளுக்கு 15 முதல் 20 சதவீதம் வரையிலான எச்ச ஓரம், பொதுவாகப் போதுமானதென நம்பப்படுகிறது.

பங்குமாற்றுநிலையப் பிணையப் பத்திரங்களுக்கான எச்ச ஓரம் (Margin for Stock Exchange Securities):

உற்பத்தி மற்றும் வணிக நிறுவனங்களின் பங்குகள், மற்றும் பங்குத்தொகுதிகள் (Stocks) ஆகியவைகளின் விடயத்தில் (எச்ச ஓரத்தைப் பொறுத்தமட்டில்) நிலைமை பெருமளவில் மாறுபடு கிறது. அவைகளின் நிதிநிலைமை மற்றும் நற்பெயர் (reputation) ஆகியவை காரணமாக, ஓர் அரசினுடைய பிணையப்பத்திரத்தைப் போலவே, சிறந்த நாணயத்தைப் (credit) பெறக்கூடிய பிணையப் பத்திரங்ளைக் கொண்டு சில உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன; விலை மதிப்பே இல்லாத பிணையப்பத்திரங்களைக் கொண்ட பல நிறுவனங்களும் உள்ளன. கடன்களுக்கு உத்தரவாதமாக இருப் பதில் சிறந்த உற்பத்தி நிறுவனங்களின் கடன்பத்திரங்கள்

(debentures) அவைகளின் பங்குப்பத்திரங்களைவிட மிகவும் உயர்ந்த இடம் வகிக்கின்றன. அதேபோல, அவைகளின் முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares) அவைகளுடைய சாதாரணப்பங்குகளைவிடச் (Ordinary Shares) சிறந்தவை எனக் கருதப்படுகின்றன. இத்தகைய பிணையங்களைப் பொறுத்தவரையில், எச்ச ஓரம் (அவைகளை வெளியிடும்) நிறுமத்தின் அப்போதைய நிலைமையைப் பொறுத்திருக்கும். பல ஆண்டு காலமாகப் பங்காதாயம் (dividend) ஏதும் அளிக்காத, சுரங்கத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுமத்தின் பங்குகள், 50 சதவீத எச்ச ஓரம் அளிக்கப்பட்டபோதிலும்கூட ஒரு சிறந்த பிணையமாகக் கருதப்படாமல் இருக்கலாம். வங்கிகள், வழக்கமாக, "அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களின்" (approved securities) பட்டியல் ஒன்றை வைத்துள்ளன; அவைகளுக்கெதிராகக் கடன்கள் வழங்கப்படலாம். இவ்வாறு, வங்கிக் கடன்களுக்குப் பிணையங்களாக எல்லா வகையான பங்குகளும் கடன்பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை; ஏனென்றால், சாதாரணமாக, சந்தையில் எளிதில் வாங்கி விற்க முடியாத பிணையப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்கு அவைகளும் விரும்புவதில்லை; மேலும், அவைகளின் சந்தை விலை எதுவாக இருந்தபோதிலும், ஒரு குறிப்பிட்ட வகையான பங்கின்மீது தாங்கள் கடனளிக்கத் தயாராக இருக்கும் உயர்ந்த அளவுத் தொகையைச் சில வங்கிகள் நிர்ணயம் செய்து வைத்துள்ளன. இருப்பினும், அங்கீகரிக்கப்பட்ட பிணையப்பத்திரங்களின் பட்டியல், அவைகளுக்கெதிராக அளிக்கப்படும் கடன்தொகைகள், ஆகிய இரண்டுமே சமயத்திற்கேற்றவாறு மாற்றிக்கொள்ளப்படுகின்றன. மேலும், நன் மதிப்பினை பெற்றுள்ள நபர்களின் விடயத்தில், வங்கியினுடைய அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இல்லாத சில பங்குகளும், அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள பங்குகளோடு சேர்த்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பங்குகள், எளிதில், சந்தையில் வாங்கி விற்கப்படக்கூடியவைகளாகவும், பங்காதாயத்தை அளித்துக்கொண்டிருப்பவைகளாகவும் இருப்பின், முன்னுரிமைப்பங்குகளின்மீது 25 சதவீத, மற்றும் சாதாரணப் பங்குகளின்மீது 40 சதவீத எச்ச ஓரம் பாதுகாப்பானது எனக் கருதப்படுகிறது.

சரக்குகளுக்கு (எச்ச ஓரம்) (For goods)

சரக்குகள், மற்றும் சரக்குரிமைப்பத்திரங்கள் ஆகியவைகளின் விடயத்தில், ஏறக்குறைய, அவைகளின் விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்குத் தக்கவாறு, எச்ச ஓரம் வேறுபடுகின்றது. எடுத்துக்காட்டாக, பிணையமாக அளிக்கப்பட்ட பொருள்கள், பொதுவாக ஒரே சீரான விலைகளைக் கொண்டுள்ள பருத்தி, கோதுமை அல்லது சர்க்கரை போன்ற முக்கிய உற்பத்திப் பொரு

ளாக இருப்பின், 25 சதவீத எச்ச ஓரம் போதுமானதென வங்கியர் கருதிக்கொள்ளலாம். மீண்டும், இத்தகைய பொருள்களுக்கும்கூட, நிர்ணயிக்கப்பட்ட எச்ச ஓரம் ஒன்றினை வைத்துக்கொள்ள முடியாதென்பதைக் கவனிக்கலாம். இவைகளின் விடயத்தில் எச்ச ஓரம், பெருமளவிற்கு, சரக்கு மற்றும் பொருள்களின் தன்மை, பிணையமாக அளிக்கப்படும் சரக்குகளுக்கான சந்தை நிலவரங்கள் ஆகியவைகளைச் சார்ந்திருக்கும். விரைவில் அழியக்கூடிய பொருள்களாக இருப்பின், அவை எளிதில் விற்பனையாகக் கூடியவைகளாகவும், அவைகளுக்கெதிராக வழங்கப்படும் கடன்கள் குறுகிய காலத்திற்கானவையாகவும் இருந்தால் வங்கியர் அவைகளை ஏற்றுக் கொள்ளலாம். (பிணையமாக) அளிக்கப்படும் பொருள், நடையுடை பாவனைகளில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக, அவைகளின் விலைகள் பெருமளவில் ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்ட ஆடம்பரப் பொருள்களாக இருப்பின், 40 முதல் 60 வரையிலான எச்ச ஓரம் அளிக்கப்பட்டாலும் கூட, அவைகளை ஏற்றுக்கொள்வதில் வங்கியர் தயக்கங் காட்டவேண்டும்.

பிணையப்பத்திரங்களின் எளிவரல் தன்மை (Liquidity of Securities)

கேட்டவுடன், அல்லது குறுகியகால அறிவிக்கையைப் பெற்றவுடன் திருப்பச் செலுத்தப்படவேண்டிய பணத்தினை, ஒரு வணிக வங்கி கடனாகப் பெறுவதால், நீண்ட காலத்திற்கு, அதனை ஓரிடத்தில் இருத்திவைப்பது அதனுல் முடியாது. எனவே, வாடிக்கையாளர் ஒருவர் சில துணைபிணையங்களுக்கு எதிராகக் கடன் ஒன்றினைக் கோரி விண்ணப்பம் செய்கின்றபொழுது கடன் வாங்கியவர் பணத்தைத் திருப்பச் செலுத்தத் தவறினால், அதனை, இடர்ப்பாடு ஏதுமின்றித் திரும்பப் பெறுகின்ற நிலையில்தான் இருக்கமுடியுமா என்பதை வங்கியர் கவனிக்கவேண்டும். கடன் பெறுபவருடைய நாணயம் மற்றும் தகுதி நிலை (Standing) ஆகியவைகளைக் காட்டிலும், கடன் ஒன்றினை அளிப்பதற்குப் பிணையம் முக்கியமாகக் கருதப்படும்பொழுது, எளிவரல் தன்மையற்ற பிணையத்திற்கு எதிராகக் கடனளிப்பதன் மூலம், வங்கியர் தம்முடைய நிலையையே பலவீனமானதாக ஆக்கிக்கொள்ளக்கூடும்.

எழுத்துமூலமான உடன்பாடுகள் இருக்க வேண்டியதன் அவசியம் (Need for written Agreements)

அவைகளின் மீது பிணையம் ஒன்றினை ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணத்தோடு, பிணையப்பத்திரங்களை அல்லது சரக்கு

களை வெறுமனே வைப்புச் செய்தல், சட்டப்படியான ஓர் உடன்பாட்டினை ஏற்படுத்துவதற்கு முற்றிலும் போதுமானது எனக் கருதப்படுவதால், பங்குமாற்று நிலையப்பிணையப்பத்திரங்கள், சரக்குகள் ஆகியனபோன்ற அசையும் சொத்துகளின் மீதான அடகு அல்லது அடைமானத்திற்கான உடன்பாடு எழுத்தாலானதாக இருக்கவேண்டுமெனச் சட்டம் கோரவில்லையென்ற போதிலும், இத்தகைய உடன்பாடுகளை எழுத்தாலனவைகளாக ஆக்கி, தங்களுடைய வாடிக்கையாளர்களால் ஒப்பமிடப்பட்டவைகளாகச் செய்வது எல்லா வங்கிகளுக்கும் வழக்கமாகும். (பிற்சேர்க்கை ''ஆ'', படிவங்களின் எண்கள், 25, 25(அ), 27 ஆகியவைகளைப் பார்க்கவும்) இந்த நடைமுறை கீழ்க்காணும் நன்மைகளைக் கொண்டுள்ளது.

எழுத்தாலான உடன்பாடுகளின் நன்மைகள் (Advantages of Written Agreements):

முதலாவது, ஒரு உடன்பாட்டின் வாசகங்கள் எழுத்தாலானவைகளாக ஆக்கப்பட்டிருந்தால், அளிக்கப்படும் பிணையத்தால் உத்தரவாதம் செய்யப்பட்ட பொறுப்புகளை, உடன்பாடு தெளிவாகக் கூறும்; எனவே, வங்கியருக்கும் அவருடைய வாடிக்கையாளருக்குமிடையே உடன்பாட்டு வாசகங்கள்பற்றிய கருத்து வேறுபாடு எழுவதற்கான வாய்ப்புகளை அது குறைக்கும். இரண்டாவது, வைப்புச் செய்தது பற்றிய வங்கியரின் குறிப்பு (Memorandum of Deposit), அவருக்குச் சாதகமாக, உபயோகமான சரத்துகளைக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, கடனுக்குப் பிணையாக, பங்குமாற்று நிலையப் பிணையப்பத்திரங்களை வெறுமனே வைப்புச் செய்தல் அவைகளின்மீது ஓர் நியாய பொருட்பிணைப் பொறுப்பினைதான் (Equitable Charge) ஏற்படுத்தும். இருப்பினும், அத்தகைய அதிகாரம் ஓர் உடன்பாட்டின் மூலம் கொடுக்கப்பட்டாலன்றி, அத்தகைய பிணையப் பத்திரங்களை விற்பதற்கான அதிகாரத்தை வங்கியர் பெறவில்லையென்பது, நினைவிற்கொள்ளவேண்டியதாகும். மூன்றாவது, ஒப்புக் கொள்ளப்பட்ட எச்ச ஓரத்தைக், கடன்பெற்றவர், தொடர்ந்து வைத்திருப்பதற்கு உத்தரவாதமளிக்கின்ற சரத்துகளை, வழக்கமாக, ஓர் உடன்பாடு கொண்டுள்ளது; உத்தரவாதத்தை நிறைவேற்றத் தவறினல், பிணையங்களை வங்கியர் விற்றுவிடுவதற்கு உடன்பாடு அதிகாரமளிக்கின்றது. நான்காவது, வங்கியரிடமுள்ள தம்முடைய கணக்கினை அல்லது கணக்குகளை, இறுதியாக வாடிக்கையாளர் மூடுகின்றபொழுது, அவர் தர வேண்டியதாக ஆகக்கூடிய தொகைகளுக்கும் உத்தரவாதமாக, பிணையமாக அளிக்கப்பட்டுள்ள பிணையப்பத்திரங்களும் பொருள்

களும் கருதப்படும் என்று கூறுகின்ற சரத்துகளையும் ஓர் உடன்பாடு கொண்டுள்ளது. கிளைடன் வழக்கின் (Clayton's Case) விதி செயல்படுவதை இது தடுக்கும்; அவ்வாறில்லையெனில், இந்த வழக்கில் முடிவு செய்யப்பட்ட விதியின்படி, வங்கியரின் உரிமை பாதிக்கப்படும். கடைசியாக, வைப்புச் செய்யப்பட்ட பிணையப்பத்திரங்களின்மீது அவர் நல்லதொரு உரிமையைக் கொண்டுள்ளார் என்றும், எனவே அவைகளைப் பிணையமாகக் காட்டலாம் என்றும் கூறுகின்ற, வாடிக்கையாளருடைய உறுதி மொழி ஒன்றினை, வழக்கமாக, ஓர் உடன்பாடு கொண்டுள்ளது, (பிணையமாக) அளிக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள், கடன் வாங்கியவருக்குச் சொந்தமானவையல்ல என்று தெரியவருமானால், இத்தகைய உறுதிமொழி அவரை மோசடி செய்தவரென ஆக்கும்; இவ்வாறு, இத்தகைய பிணையப் பத்திரங்களின்மீது, அவர் (கடன் வாங்கியவர்) உரிமையெதனையும் கொண்டிருக்கவில்லையெனில், அவைகளின் சட்டப்படியான உரிமையாளர் என்று தம்மை அறிவித்துக் கொள்வதிலிருந்து அவர் தடுக்கப்படுவார். எச்சரிக்கையாக, ஒரு வார்த்தை (கூறவேண்டியது) இங்கு அவசியமெனத் தோன்றுகிறது. பத்திரங்களை ஏற்படுத்திக் கொள்வது, ஒரு வங்கியரின் கடன் வழங்குதல் நடவடிக்கைகளின், அவசியமான மற்றும் மிகவும் முக்கியமான பகுதியாகும். தேவையானபொழுது வங்கிப் பாக்கிகளை வசூல் செய்வது, பெருமளவிற்கு, (வங்கியால்) பெறப்பட்டுள்ள பத்திரங்களின் தெளிவு மற்றும் முழுமை (completness) ஆகியவைகளைச் சார்ந்துள்ளது. இத்தகைய முக்கியத்துவத்தை அது கொண்டிருப்பதன் காரணமாகத்தான், சட்ட நிபுணர்களால் எழுதப்பட்ட, மற்றும் பழைய காலம் தொட்டு அனுபவத்தின் அடிப்படையில் தோன்றிய வாசகத்தையும் பொருளடக்கத்தையும் கொண்ட, அச்சிட்ட படிவங்களின் தொகுப்பு ஒன்றினை ஒவ்வொரு வங்கியரும் வைத்துள்ளார். எனவே, ஒவ்வொரு தறுவாய்க்கும் உரிய சம்பவங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு சரியான வகையிலான பத்திரத்தைத் தெரிவு செய்வது மட்டுமன்றி, சட்ட நிபுணரின் ஆலோசனை இன்றிச் செய்யப்படத்தகாத ஏதாவது சேர்க்கை மற்றும் மாறுதல் ஆகியவைகளுக்கு எதிரான பாதுகாப்பினைச் செய்வதும் அவசியமாகும்.

பிணையப்பத்திரங்களை விற்றுப் பணமாக்குதல் (Realisation of Securities)

விற்பதற்கான உரிமை (Right to Sell)

பொதுவாக, பிணையப்பத்திரங்களைப் பொறுத்தவரையில், வெறுமனே கொண்டுள்ள ஒரு பற்றுரிமை (lien), விற்பதற்கான

உரிமையை அளிப்பதில்லை என்று முன்னரே பார்த்தோம். அவைகளை விற்றுப் பணமாக்குவதற்குள்ள ஒரே வழி, வாடிக்கையாளருக்கு எதிராக வழக்கு ஒன்றினைத் தொடுத்து, பிணையங்களைப் பற்றுகை (attachment) அல்லது சப்தி செய்து, தீர்ப்பினை நிறைவேற்றும் முகமாக அவைகளை விற்றுவிடுவதேயாகும். இருப்பினும், பங்குமாற்று நிலைய விதிகள், பற்றுரிமையோடு விற்பதற்கான அதிகாரத்தையும் சேர்த்துக்கொடுத்தால் அத்தகைய அதிகாரம் பயன்படுத்தப்படலாம். மாறாக, பிணையப்பத்திரங்களை அடகு வாங்கிய ஒருவர், அடகு கொடுத்தவர் பணம் செலுத்துவதற்குத் தவறுகின்றபொழுது, எந்தத் தறுவாயிலும், அவைகளை விற்பதற்கான அதிகாரத்தைப் பெற்றுள்ளார். (ரி மாரிடோ [1886] 18 க்யூவீ.பெ.டி. 222—In re Morrits [1886] 18 Q. B. D. 222). பெருமகன்களாகிய நீதிபதிகள் (Lords Justices), காட்டன் (cotton), லிண்ட்லே (Lindley), மற்றும் போவன் (Bowen) ஆகியோர் குறிப்பிட்டது போல, ''ஓர் அடகு ஒப்பந்தம், கடமையினை நிறைவேற்றுவதற்காகப் பிணையத்தினை கிடைக்கும்படி செய்யலாம் என்ற உள்ளார்ந்த கருத்தினை அதனோடு கொண்டுள்ளது: மற்றும் [அடகு கொடுக்கப்பட்டுள்ள பொருள்களின்மீது பொதுவான சொத்துரிமை எதனையும் கொண்டிராமல் சிறப்புச் சொத்துரிமையை மட்டும் அவர் (அடகு வாங்கியவர்) கொண்டிருக்கிறார் என்ற போதிலும்] பிணையப்பொருளைத் தம்மிடம் உடைமைகொண்டுள்ள அடகு வாங்கியவருக்கு, விற்பனை செய்யப்படும்வரை, அவைகளை, அடகு கொடுத்தவர் மீட்புச் செய்து கொள்ளலாம் என்றபோதிலும், பணத்தைத் திரும்பச் செலுத்தத் தவறுகின்றபொழுது, அடகு கொடுத்தவருக்கு அறிவிக்கை ஒன்றினை கொடுத்தபிறகு, விற்பனை செய்வதற்கு உரிமையளிக்கின்றது.

செலுத்தத் தவறுவதும் அறிவிக்கையும் (Default and Notice)

குறிப்பிட்ட ஒரு தேதியில் செலுத்தப்படவேண்டிய ஒரு கடன், அந்தத் தேதியில் செலுத்தப்படாமல் இருந்தால், கடனாளி செலுத்தத் தவறியவர் என்றழைக்கப்படுகிறார். இருப்பினும் மேலே சொல்லப்பட்டவைகளிலிருந்தும், 1872ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டம், 176ஆவது பிரிவின் தெளிவான வாசகங்களிலிருந்தும், இந்தியாவில், பொதுவாக, வரவேண்டிய தொகை குறிப்பிட்ட காலத்தில் செலுத்தப்படாமல் இருந்தால், அவைகளை விற்பனை செய்வதற்கு முன், பிணையங்களை விற்கவேண்டுமென்ற அடகு வாங்கியவரின் எண்ணத்தைத் தெரிவிக்கின்ற அறிவிக்கை, அடகு கொடுத்தவருக்குக் கொடுக்கப்படவேண்டியது

அவசியம் என்பது தெளிவு. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குத் தேதி ஏதும் நிர்ணயிக்கப்படாதபோது, நியாயமான ஒரு கால அளவிற்குள் பணம் செலுத்தப்படவேண்டுமென்று கோரியும், அந்தத் தேதிக்குள் திருப்பிச் செலுத்தத் தவறுகின்ற தறுவாயில், அடகாகக் கொடுக்கப்பட்ட பிணையங்கள் விற்பனை செய்யப்படும் என்று அடகு கொடுத்தவருக்குத் தகவல் தெரிவித்தும் ஓர் அறிவிக்கையைக் (பின்சேர்க்கை-ஆ, படிவம் எண். 33 பார்க்கவும்) கொடுத்தால் போதுமானது. இத்தகைய தறுவாய்களில் நியாயமான கால அளவு என்பது, ஒவ்வொரு தறுவாயினுடைய சந்தர்ப்பச் சூழ்நிலைகளைப் பொறுத்துத் தீர்மானிக்கப் படவேண்டியதாகும். அடகு வைக்கப்பட்ட பிணையப்பத்திரங்களின் விலைகள் விரைவாக வீழ்ந்து கொண்டிருக்கிறது, மற்றும் வாடிக்கையாளர் உறுதியளித்தவாறு எச்ச ஓரத்தை நிலைநாட்டத் தவறிவிட்டார் என்றால், ஒரு குறுகிய கால அறிவிக்கை முற்றிலும் போதுமானதெனக் கருதப்படும். மாறாக, விற்கப்படவேண்டிய பிணையம் நிலம் போன்ற சொத்தாக இருந்தால், பொதுவாக, ஒரு நீண்ட கால அறிவிக்கை தேவையாகின்றது- அடைமானப் பத்திரம், விற்பனை செய்வதற்கான உரிமையைப் பயன்படுத்துவதற்கு முன்னர், பணம் திருப்பிச் செலுத்தப்படுவதற்கான கோரிக்கை ஒன்று விடுக்கப்படவேண்டுமென்று கூறினால், அப்பொழுது, ஏற்கெனவே ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டுப் பின்னர் அது வேண்டாமென்று விட்டுக்கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் கூட, கோரிக்கை விடுக்கப்படவேண்டுமென்பது தெளிவாகத் தெரிந்து கொள்ளப்படவேண்டும் (ஹன்டர் எதி. ஹன்டர் மற்றும் இதரநபர்கள், ஹெச். ஓ. எல். [1936] Hunter *v.* Hunter and others, H. O. L. [1936]). இருப்பினும், உண்மையில், நடைமுறையில், வங்கியர்கள் தங்களிடத்தே பெருமளவிலான அதிகாரத்தை ஒதுக்கிவைத்துக்கொள்வதால், இது தொடர்பாகப் பெருமளவில் இடர்ப்பாடு ஏதும் எழுவதில்லை.

வரையறைச் சட்டமும் கடன்களும்
(Law of Limitation and Advances)

ஒரு கடனைத் திரும்பப் பெறுவதற்காக வழக்கினைத் தொடுப்பதற்கான கால வரையறை, எந்தத் தேதியில் கடன் வழங்கப்பட்டதோ அதிலிருந்து, சாதாரணமாக உள்ள மூன்றாண்டுக் கால அளவாகும். இருப்பினும், கடன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கப்பட்டுள்ள தறுவாய்களில், மூன்றாண்டு வரையறைக் காலம், குறிப்பிட்ட காலம் முடிவடைந்த தேதியிலிருந்து தொடங்கு

கிறது. கேட்டவுடன் பணம் செலுத்தக் கூடியதான ஒரு கடனுறுதிச் சீட்டின் (Promissory Note) பேரில் கடன் ஒன்று வழங்கப்பட்டிருக்கும்பொழுது, வரையறைக்காலம் கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து தொடங்குகிறதேயன்றி, பணம் கேட்கப்பட்ட தேதியிலிருந்து அன்று,

பங்குமாற்று நிலையப் பிணையப் பத்திரங்களுக்கு எதிராகக் கடன்கள்
(Advances Against Stock Exchange Securities)

இச்சொல்லில் என்ன அடங்கியுள்ளது? (What comprises the term?

உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்களை ஆட்சி செய்கின்ற முக்கியமான பொது விதிகளை இதுவரை விளக்கிக் கூறியபின், நாம் இப்போது, முதலாவது பங்குமாற்றுநிலையப் பிணையப் பத்திரங்களால் உத்தரவாதம் செய்யப்பட்ட கடன்களைப் பற்றி ஆராய்வோம். மிகவும் சரியாகக் கூறவேண்டுமெனில், பங்குமாற்றுநிலையப் பிணையப்பத்திரம் என்னும் கருத்து, அரசு கடன்கள், நகராட்சி, துறைமுகப் பொறுப்புரிமை (Port Trust) மற்றும், மேம்பாட்டுப் பொறுப்புரிமைகள் (Improvement Trnst) ஆகியவைகளின் பத்திரங்களான, சிறப்பீட்டுப் பிணையங்கள் (Gilt-edged Securities), மற்றும் பங்குமாற்று நிலையங்களில் எவைகளின்மீது நடவடிக்கைகள் நடைபெறுகின்றனவோ அந்த, அரசு, பொதுக் கழகங்கள் (Public Bodies) ஆகியவைகளால் விடுக்கப்படும் பிணையப்பத்திரங்கள், உற்பத்தி மற்றும் வணிக நிறுமங்கள், வங்கிகள், மற்றும் காப்பீட்டு நிறுமங்கள் ஆகியவைகளின் பங்குகள் மற்றும் கடன்பத்திரங்கள் ஆகியவைகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

பங்குமாற்று நிலையப் பிணையப் பத்திரங்களின் முக்கியத்துவம் (Importance of Stock Exchange Securities):

அவைகளுக்குள்ள மதிப்பில் உயர்வதற்கு வாய்ப்பினைக் கொண்டுள்ள இந்தப் பிணையப்பத்திரங்களை வாங்குவதற்கு ஊக வணிகர்களுக்குத் (Speculators) தேவைப்படும் நிதி காரணமாக மட்டுமன்றி, அவைகளில் முதலீடு செய்யப்படும் பணம் தேவையானபொழுது மிக எளிதில் பெறக்கூடியது என்ற உண்மை காரணமாக இந்தப் பிணையப்பத்திரங்கள் பெரிய நகரங்களிலுள்ள

பணம் படைத்த, மற்றும் உயர் நடுத்தர வகுப்பு மக்களால் பெரிய தொகுதிகளாக வைக்கப்படுவது காரணமாகவும், பங்குமாற்று நிலையங்களைக் கொண்டுள்ள பெரிய நகரங்களில் உள்ள வணிக வங்கிகளால் வழங்கப்படும் கடன்களில், இந்தப் பிணையப்பத் திரங்களுக்கெதிராக வழங்கப்படும் கடன்கள் ஒரு முக்கியப் பகுதி யாக அமைகின்றன. மேலும் வங்கியர்களின் நோக்கிலிருந்து பார்க்கின்ற பொழுதும்கூட, குறிப்பிட்ட மற்றப் பிணையப்பத்திரங் களோடு ஒப்பிடுகையில் அவை அதிக ஆதரவுபெறுகின்றன.

பங்குமாற்று நிலையப் பிணையங்களுக்குச் சாதகமாகக் கூறப் படும் கருத்துகள் (Points in Favour of Stock Exchange Securities)

முதலாவது பொறுப்புறுதிகளோடு ஒப்பிடுகையில், பங்குமாற்று நிலையைப் பிணையப்பத்திரங்ள், பொதுவாக, மிகவும் நம்பகமானவ களாகும்; ஏனென்றால் அவைகளுக்கெதிராகப் பணம் கடனளிக் கும் ஒரு வங்கியர், சிறிதளவேனும் உருப்படியாக (tangible) உள்ள வற்றைப் பெறுகிறார்; ஆனால் பொறுப்புறுதிகளின் விசயத்தில், கடன் பெற்றவர் செலுத்த தவறுகின்றபொழுது கடனைத் திருப்பிப் பெறுவதற்கு, அவர் (வங்கியர்) பிணையாளியின் செல்லும் புள்ளித் தன்மையின்மீதே முழுவதும் சார்ந்திருக்கவேண்டி யுள்ளது. இரண்டாவது, சிறப்பீட்டுப் பிணையங்கள் என்று அறியப் படும் உயர்தரப் பங்குமாற்று நிலையப் பிணையப் பத்திரங்கள், நிலங்கள், கட்டடஙகள் மற்றும் இதரக் குறிப்பிட்ட வகையான சுருக்கள் போன்ற இதர வகையான பிணையங்ளைவிட மிக எளிதில் பணமாக்கப்படக்கூடியவைகளாகும்; எப்படியெனில், பெருமள வான தொகுதிகளாக அவை இருந்தாலும் கூட, சிறந்த பங்கு மாற்று நிலையப் பிணையபத்திரங்களுக்கு எப்போதும் தயாரான சந்தை உள்ளது. மூன்றாவது, சாதாரண காலங்களில், சிறந்த பங்குமாற்று நிலையப் பிணையப்பத்திரங்கள், பருத்தி, சர்க்கரை போன்ற பொருள்களைவிட, குறைந்த அளவு ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்டவைகளாகும். பொதுவாக, முதல்தரப் பங்கு மாற்று நிலையப் பிணையப் பத்திரங்களின் விலைகள் மிகவும் ஒரே சீராக இருப்பதால், ரிசர்வ் வங்கியால் (அதற்கு மேல்) கேட்கப்பட்டா லன்றி, 10 முதல் 20 சதவீதத்திற்கும் மேலான எச்ச ஓரத்தைக் கேட்பது அவசியமென்று வங்கியர் நினைப்பதில்லை. சில வங்கி கள், புகழ் பெற்ற சில பங்குகளுக்கு எதிராகக் கடனாக அளிக் கக்கூடிய தொகையை, அவகைளின் சந்தை விலைக்குறிப்பீடுகள் (quotations) எதுவாக இருப்பினும், நிர்ணயம் செய்துவிடு கின்றன. நான்காவது, பங்கு மாற்று நிலையப் பிணையப்பத்திரங்

களின் விடயத்தில், நிலங்கள், கட்டடங்கள் போன்ற பிணைகளின் விடயத்தில் இருப்பதைவிட, பிணையப்பத்திரங்களை அளிக்கின்ற வாடிக்கையாளரின் உரிமை (title) மற்றும் அவைகளின் சந்தை மதிப்பு ஆகியவைகளைப்பற்றித் தம்மைத்தாமே நிறைவுபடுத்திக் கொள்வது வங்கியருக்கு மிகவும் எளிதானதாகும். அளிக்கப்படும் பங்குமாற்று நிலையப் பிணையப்பத்திரங்களின் மீது தம்முடைய வாடிக்கையாளருக்கு நல்ல உரிமை உள்ளதா? இல்லையா என்பதுபற்றித் தம்மைத்தாமே நிறைவுபடுத்திக் கொள்வதற்கு வங்கியர் தம்முடைய சட்ட ஆலோசகரைக் கலந்தாலோசிக்கவேண்டியதில்லை. பிணையப்பத்திரங்கள்முற்றிலும் மாற்றுந்தன்மை கொண்டவைகளாக (fully negotiable) இருக்கின்றபொழுது, தம்முடைய வாடிக்கையாளருக்கு உள்ள உரிமையில் குறைபாடு ஏதும் உள்ளது என்பதுபற்றி ஏதும் அறியாதவராய், அவைகளுக்குள்ள மதிப்பினைக் கொடுத்துப்பெற்றவராக அவர் இருந்தால், வங்கியர் அவைகளுக்கான நல்ல உரிமையைப் பெறமுடியும். அதேபோல, விடுக்கப்படும் நிறுமத்தின் ஏடுகளில் அவைகளின் மாற்றல்கள் பதிவு செய்யப்படவேண்டிய பங்குகளைக் கொண்டவைகளாகப் பிணையப்பத்திரங்கள் இருக்கின்றபொழுது அவைகளின்மீது வாடிக்கையாளருக்கு உள்ள உரிமை நல்லதுதானு என்று கண்டறிவதில் சிரமம் ஏதும் இருப்பதில்லை. ஐந்தாவது, அவைகளின் சந்தை விலைகளை, செய்தித்தாள்களில் கொடுக்கப்படுகின்ற, மற்றும் பங்குத் தரகர்களால் அளிக்கபடுகின்ற விலைக்குறிப்பீடுகளில் (quotations) இருந்து அறிந்துகொள்ளமுடியும். செய்தித்தாள்களில் கொடுக்கப்படும் விலைக்குறிப்பீடுகள், எப்போதும், நம்பகமானவை அல்ல என்றபோதிலும், அவை, குறிப்பாக எவற்றில் அடிக்கடி நடவடிக்கைகள் நிகழ்கின்றனவோ அத்தகைய பங்குத் தொகுப்புகள் மற்றும் பங்குகள் ஆகியவைகளின் விலைகளைப் பற்றி, நிச்சயமாக, நியாயமான ஒரு கருத்தினைக் கொடுக்கின்றன. ஆறாவது அவை முழுமையாக மாற்றித்தரத்தக்கவை அல்லாத வேறுசில பிணையப்பத்திரங்கள் அல்லது நிலங்கள் மற்றும் கட்டடங்கள் ஆகியவைகளைக்காட்டிலும், வெகு எளிதில் மாற்றிக் கொடுக்கப்படத்தக்கவைகளாகும். எடுத்துக்காட்டாக, பிணையப் பத்திரங்கள் முழுமையான மாற்றுந்தன்மை (negotiability) கொண்டவைகளாக இருந்தால், அவைகளை வெறுமனே சேர்ப்புச் செய்தல் (delivery) அல்லது மேலெழுதல் செய்து (endorsement) சேர்ப்புச் செய்தல் மூலம் மாற்றிக் கொடுக்கமுடியும். ஏழாவது, பிணையப்பத்திரங்களை விடுவிப்புச் செய்தல் (release) குறைந்த செலவிலும், குறைந்த அளவு விதிமுறைகளைக் கடைப் பிடிப்பதன் மூலமும் நிறைவேற்றப்படலாம். எட்டாவது, கடன்

வாங்கியவர் செலுத்தவேண்டிய வட்டி, மற்றும் அசல்தொகை மூலமாக ஏற்பட்ட கடன் ஆகியவைகளைக் குறைக்கக் கூடிய வட்டி அல்லது பங்காதாயத்தை இந்நப் பிணயப்பத்திரங்கள் கொடுக்கின்றன. கடைசியாக, தேவையானபோது, இடர்ப்பாடு ஏதுமின்றி அவைகளை மற்றொரு லங்கியரிடம் அடகு வைத்து இத்தகைய பிணையப்பத்திரங்களுக்கு எதிராக வங்கியர் பணம் எழுப்ப முடியும்.

யங்குமாற்று நிலையப் பிணையபபத்திரங்களுக்கு எதிராகக் கடன் வழங்வதில் உள்ள குறைபாடுகள் (Drawbacks of Making Advances Against Stock Exchange Securities):

பங்குமோற்று நிலையப் பிணையப்பத்திரங்களுக்கு எதிராகக் கடன் வழங்குவதற்குச் சாதகமாக மேலே கூறப்பட்ட நன்மை களுக்கு எதிராகச் சில குறைபாடுகளும் குறிப்பிடப்படலாம். முதலா வது, ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பட்டதுபோல, அரைகுறையா கச் செலுத்தப்பட்ட (partly paid) பங்குகளின் விடயத்தில், அவரோ (வங்கியர்), அவரால் நியமனம் பெற்றவரோ அவைகளின் உரிமை யாளராகப் பதிவுசெய்யப்பட்டிருந்தால், பங்குகளின் மீது அழைக்கப்படாது (uncalled) உள்ள தொகையைச் செலுத்து மாறு வங்கியர் அழைக்கப்படலாம். இரண்டாவது, மாற்றல் பத்தி ரத்தில் (Instrument of Transfer) உள்ள மாற்றிக் கொடுத்தவ ருடைய கையொப்பம் கள்ளக்கையொப்பமெனக் கண்டறியப் பட்டால், நிறுமம் அடையக்கூடிய ஏதாவது நட்டத்திற்கு எதிராக நிறுமத்திற்கு ஈடுசெய்வதற்கு, மாற்றிக் கொடுக்கப்பெற்றவர் (transferee) என்ற முறையில், கடமைப்பட்டவராக வங்கியர் தம்மை ஆக்கி கொள்கிறார். தி கார்ப்பரேசன் ஆப் செப்பீல்டு எதி. பார்க்லே, 1905 (the corporation of Sheffield v. Barclay, 1905) என்ற வழக்கில் எடுக்கப்பட்ட தீர்ப்பு முடிவின்படி, கள்ளக் கையொப்பமிடப்பட்ட ஒரு மாற்றலைப் பதிவுக்கு அனுப்புகின்ற, மாற்றல் பெற்றவர் (transferee) ஒருவர், கையொப்பம் உண்மை யானது என்ற நம்பிக்கையில் செயல்பட்டுள்ள நிறுமத்திற்கு ஈடு செய்யவேண்டும்; மாற்றல் பெற்றவர், அதன் பின்னர் பங்குகளை விற்றிருந்தபோதிலும் கூட இந்தப் பொறுப்புத் தொடரும். வாடிக் கையாளரைத் தம்முடைய முன்னிலையில், மாற்றல் படிவத்தில் கையொப்பமிடச் செய்வதன் மூலம் வங்கியர் இந்த இடர்வாய்ப் பினைத் தவிர்க்கலாம். மூன்றாவது, பொதுவாக, நிறுமங்களின் சங்க நடைமுறை விதிகள் (Articles of Association), பங்குகளின் மீதான அழைப்புகளுக்குச் செலுத்த வேண்டிய பணத்தை அல்லது நிறுமங்களுக்குச் செலுத்தவேண்டியுள்ள ஏதாவது பாக்கித்

தொகையைச் செலுத்த தவறும் தறுவாயில், அவைகளின் பங்குகள், அவைகளின் பற்றுரிமைக்கு (lien) உட்பட்டவைகளாகும் என்ற காப்பு வாசகங்களைக் கொண்டுள்ளன ; எனவே, பிணையப்பத்திரங்களின்மீது தமக்குள்ள பிணையைப் பற்றித் தகுந்த அறிவிக்கையைச் சம்பந்தப்பட்ட நிறுமத்திற்குக் கொடுப்பதற்கு அவர் தவறினால், அவைகளின் முழு நன்மையையும் தாம் பெறமுடியது என்பதை வங்கியர் அறிய நேரிடும். நான்காவது, பெருமளவு ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்ட பங்குகளின் விடயத்தில், தம்முடைய வாடிக்கையாளர், ஒப்புக்கொண்ட எச்ச ஓரத்தை (margin), நிலை நிறுத்துகிறாரா என்று பார்ப்பதற்கு, அல்லது அவ்வாறு செய்யயத் தவறும்பொழுது அவைகளை விற்றுப் பணமாக்குவதற்கு வங்கியர் தவறினால், நட்ட இழப்பினை அவர் அடையக்கூடும். ஐந்தாவது, பிணையப்பத்திரங்கள் மாற்றுந்தன்மை (Negotiability) இல்லாதவைகளாக இருந்தால், அவைகளை மாற்றிக் கொடுப்பவர் (transferor), மாற்றிப் பெறுபவருக்கு, தமக்கு உள்ளதைக்காட்டிலும் சிறந்த ஓர் உரிமையைக் கொடுக்கமுடியாது. ஆறாவது, நேர்மையற்ற சில நபர்கள், பங்குச் சான்றுச் சீட்டுகளைக் (Scrips) கள்ளக்கையொப்பமிட்டு அவைகளுக்கு எதிராகக் கடன்களைப் பெறுகின்ற செயலில் முனைந்துள்ளார்கள் என்பது கவனத்திற்கு வந்துள்ளது. சில தறுவாய்களில் (cases) ஒரே பங்குச் சான்றுச் சீட்டினுடைய இரண்டாவது படிகளும் (duplicates) மூன்றாவது படிகளும் (triplicates) கண்டுபிடிக்கப்பட்டன என்று ஆசிரியர் தகவல் பெற்றுள்ளார். இத்தகைய தறுவாய்களில், குறிப்பிட்ட பங்குச்சன்றுச் சீட்டு உண்மையானதா, இல்லையா என்று வேறுபடுத்தி அறிவது கடனளிப்பவர்களுக்குக் கடினமாக உள்ளது ; எனவே, கடன் திருப்பிச்செலுத்தத் தவறப்படும்பொழுது அதனைத் திரும்பப்பெறுவது கடினமானதாக ஆகின்றது,

வங்கி நிறுமங்களின் சட்டம் (Banking Companies Act), 19-ஆவது பிரிவின்படி, எந்த வங்கி நிறுமமும், மற்றொரு நிறுமத்தினுடைய செலுத்திய பங்கு முதலில் 30 சதவீதம், அல்லது தன்னுடைய சொந்த செலுத்திய பங்குமுதல் மற்றும் காப்பு நிதி ஆகியவைகளில் 30 சதவீதம், இவ்வற்றில் எது குறைவோ அத்தொகைக்கு அதிகமான மதிப்பினைக் கெண்ட மற்றொர் நிறுமத்தினுடைய பங்குகளை வைத்திருக்கக் கூடாது என்பது கவனிக்கப்படவேண்டியதாகும்.

பங்குத் தரகர்களுக்கு அளிக்கபபடும் கடன்கள் (Advances to Stock-Brokers)

பங்குத் தரகர்களுக்கு கடன் வழங்குதல் என்பது, இலண்டனில் உள்ள வங்கியர்களிடத்தில், சாதாரணமாக, இல்லாத ஒ

றன்று; அவை (கடன்கள்) பொதுவாக "ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு" க் (from account to account) கொடுக்கப்படுகின்றன. இந்தக் கடன்கள், மற்ற வாடிக்கையானர்களுக்கு அளிக்கப்படும் இத்தகைய கடன்களைக்காட்டிலும் குறைந்த கால அளவிற்கு அளிக்கப்படுகின்றன; மற்றும் பிணையாக அளிக்கப்படும் பிணையப்பத்திரங்கள், எப்போதும் விற்கப்படுவதற்க்குத் தகுதியானவை, என்ற நன்மையைக் கொண்டவைகளாக உள்ளன. கடனைப் புதுப்பிப்பதற்கு வங்கியர் விருப்பப்படவில்லையெனில், அவர் அவ்வாறு செய்யவேண்டியது அவசியமில்லை. வங்கியர் செய்யவேண்டியதெல்லாம், அரைமாதத்திற்கொருமுறையான பங்கு மாற்று நிலையத்தீர்வுகளுக்கு (settlement) முன்னர், சில நாள்களுக்கான அறிவிக்கை ஒன்றினைக் கொடுக்கவேண்டியதேயாகும்; அவர் தம்முடைய பணத்தைத் திரும்பப் பெறுகிறார். அவைகளின் விலையில் ஏற்றத்தை எதிர்பார்த்து, ஒரு குறிப்பிட்ட பங்குகளைத் தரகரின் வாடிக்கையாளர் வாங்கி, ஆனால் எதிர் பார்த்த விலை ஏற்றம் ஏதும் ஏற்படாதபோது, பங்குகளை விற்றுவிடுவதன் மூலம் (தம் வாடிக்கையாளருடன் ஏற்படுத்தபட்டுள்ள) நடவடிக்கையைத் துண்டித்து விடுவதற்குத் தரகர் விரும்பாதபோது, அல்லது, அவைகளுக்குப் பணம் கொடுப்பதற்கு அவரால் இயலாதபோது இத்தகைய கடன்களுக்கான தேவை எழுகிறது. பங்குத்தரகர், அவைகளின் சந்தை விலையில் 70 முதல் 80 சதவீதம் வரை கடன் அளிக்கக்கூடிய ஒரு வங்கியில் பிணையப்பத்திரங்களை வைப்புச் செய்கிறார், மீதத்தொகையை அவருடைய வாடிக்கையாளர் தேடிப்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். இருப்பினும், பங்குமாற்றுநிலையப் பிணையப் பத்திரங்களுக்கு எதிராக, சாதாரண வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் சற்றுக் குறைவான எளிவரல் தன்மை கொண்டவைகளாகும் ஏனென்றால், குறுகிய கால அறிவிக்கையில் அவை திருப்பிச் செலுத்தப்படவேண்டியவை என்பதுபற்றி உடன்பாடு ஏதுமில்லை.

இந்தியாவில் பங்குதாரர்களுக்கு அளிக்கப்படும் கடன்கள்

(Advances to Stock Brokers in India)

பங்குமாற்று நிலையங்களைக் கொண்டுள்ள, இந்தியாவின் பெரிய நகரங்களில், பங்குத் தரகர்களுக்குப் பொதுவாக, இதே போன்றகடன்களை பதினைந்து நாள்கள் அல்லது அதற்குக் குறைவான இரண்டு அடுத்தடுத்த தீர்வுகளுக்கு இடைப்பட்ட

கால அளவிற்கு, வங்கியர்கள் அளிக்கின்றனர், சில வேளைகளில், இந்தத் தொழில், அகராதிப்படி (literally), "மேலே கொண்டு வருதல்" (carrying over) அல்லது ஒரு தீர்விலிருந்து மற்றொரு தீர்வுக்குக் கொண்டு வருதல் என்னும் பொருள் கொண்ட பட்லா (Budla) நடவடிக்கைகள் என்ற வடிவத்தில் செய்யப்படுகின்றது. பங்குகளை வாங்குபவர், தம்முடைய சொந்த நிதியிலிருந்து தம்முடைய கொள்முதல்களுக்கு நிதியீடு செய்ய முடியாமல் இருக்கும்பொழுது, பணத்தைக் கடனாக அளித்து விட்டு, வாடிக்கையாளருக்காகப் பங்குத்தரகரால் வாங்கப்பட்ட பங்குகளின் தீர்வு நடைபெறும் நேரத்தில் அவைகளை (பங்குகளை) எடுத்துக் கொள்கின்ற வங்கியரிடம் புகலிடம் தேட வேண்டியுள்ளது. அதே நேரத்தில் பங்குகளை உண்மையிலேயே வாங்கியவர் (Real Purchaser) அவைகளைப் பதினைந்து நாள்கள் கழித்து அடுத்து வரும் தீர்வுக்கு அல்லது சேர்ப்புக்காகச் (delivery), சொல்லப்பட்ட பங்குகளை என்ன விலைக்கு எடுத்துக் கொள்ளும்படி வங்கியர் கேட்டுக்கொள்ளப்பட்டாரோ அதைவிட உயர்ந்த ஒரு விலைக்கு வாங்கிக் கொள்வதாக உத்தரவாதம் கொடுக்கிறார். வாங்கிய விலைக்கும், விற்ற விலைக்குமுள்ள வேறுபாடு இந்த நடவடிக்கையில் முதலீடு செய்யப்பட்ட பணத்திற்குக் கிடைக்கும் வட்டியாகும். அதிகமான ஊகவணிகத்தின் காரணமாகப் பங்குகளின் விலைகள் வேகமாக உயர்ந்து கொண்டு போகும்பொழுது, பட்லா வீதங்கள் (Budla Rates), 6 முதல் 12 சதவீதம் வரையிலான வட்டியைக் கொடுக்கின்றன. மாறாக, சந்தை மந்தமாக (depressed) இருக்கும்பொழுது, பட்லா வீதங்களும் சுமார் 3 சதவீத வட்டியை மட்டுமே கொடுக்குமளவிற்கு மிகவும் கீழே போய்விடுகின்றன. விலைகளில் ஏற்படும் பெருமளவு வீழ்ச்சியின் காரணமாக, அடுத்த தீர்வு நேரத்தின் போது வாடிக்கையாளரால் பங்குகளுக்குப் பணம் கொடுக்கமுடியாமல் போகக்கூடிய இடர்வாய்ப்போடு, பங்குகளைக் கொடுக்கின்ற நபரின் உரிமை குறைபாடு உடையதாக ஆகக்கூடிய ஆபத்தும் இதில் இருப்பதால், சாதாரணமாக, வங்கிகள் இத்தகைய நடவடிக்கைகளை மிகவும் மரியாதைக்குரிய நபர்களோடும், பின்னர், சிறப்பீட்டுப் பிணையப் பத்திரங்கள் மற்றும் முதல்தரமான பங்குகள் ஆகியவைகளிலும் மட்டுமே மேற்கொள்ளுகின்றன. இந்திய ரிசர்வ் வங்கியால் விடுக்கப்பட்ட 1960 மார்ச் 11, தேதியிட்ட ஓர் ஆணையின்படி, பட்லா நடவடிக்கைகளுக்கு (அதாவது, தற்போதைய தீர்வுக்காக வாங்கி, அடுத்த தீர்வுக்காக விற்பனை செய்கின்ற நடவடிக்கைகளுக்கு) நேரடியாக நீதி வழங்குவதில் ஈடுபடுவதிலிருந்து வங்கிகள் தடுக்கப்பட்டிருக்கின்றன (Prohibited). பங்குகளை வைப்புச் செய்வதற்கு எதிராக

பச்குத்தாரகர்களுக்கும், இதர வாடிக்கையாளர்களுக்கும் நேரடியாகக் கடன் வழங்குவதும் வங்கியர்களின் நடைமுறை வழக்கமாகும். பம்பாய் மற்றும் கலகத்தாவிலுள்ள வங்கியர்கள், ஊகவணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பங்குகளுக்கு எதிராகக் கடன் வழங்குவதில் 50 சதவீதம் வரையிலும் போகக்கூடிய பெருமளவு எச்ச ஓரங்களைச் சாதாரணமாகக் கோருகிறார்கள்.

எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கைகள் (Precautions to be taken)

ஒரு கடனுக்கு உத்தரவாதமாகப் பங்குமாற்று நிலையப் பிணையப்பத்திரங்கள் வங்கியருக்கு அளிக்கப்பட்டால், அவை எந்த வகையைச் (class) சேர்ந்தவை என்று அவர் பார்க்கவேண்டும். ஒன்பதாவது அத்தியாயத்தில் விளக்கிக்கூறப்பட்டதுபோல, வங்கியர்கள் வழக்கமாகக் கடன் வழங்குவது, மிகவும் பாதுகாப்பானவை என்று கருதப்படும், பொதுக்கடன்கள் (Public Debts), நகராட்சிகள், துறைமுக மற்றும் மேம்பாட்டுப் பொறுப்புரிமைகள் (Port and Improvement trusts) ஆகியவைகளின் கடன்பத்திரங்கள் மற்றும் பத்திரங்கள் ஆகிய பிணையப்பத்திரங்களுக்கு எதிராகவே ஆகும். மின்னூர்தித் துறை (Tramways), மின்சாரம் மற்றும் வாயு போன்ற பொதுப் பயன் நிறுமங்களின் பிணையப் பத்திரங்கள்(Securities of Public utility companies), மற்றும் வங்கிகளுடைய பங்குகள் ஆகியவைகளும்கூட, ஒரு வங்கியரின் கடன்களை உத்தரவாதம் செய்வதற்குத் தகுந்தவை எனப் பொதுவாகக் கருதப்படுகின்றன. நிறுமங்களின் பங்குகளுக்கு எதிராகக் கடன் வழங்கும்பொழுது, தன்னுடைய சொந்த நலத்திற்காகவேனும், இத்தகைய பிணையப் பத்திரங்கள் அரைகுறையாகச் செலுத்தப்பட்டவைகளா அல்லது முழுவதும் செலுத்தப்பட்டவைகளா என்று வங்கியர் கண்டறியவேண்டும். முந்தைய தறுவாயில் (அதாவது அரைகுறையாகச் செலுத்தப்பட்டிருந்தால்), பங்குநர் செலுத்தத் தவறிய அழைப்பு ஏதும் விடுக்கப்படவில்லையென்பதை வங்கியர் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்; ஏனெனில், இத்தகைய செலுத்தப்படாத அழைப்புகள், பங்குநரிடமிருந்து நிறுமத்திற்கு வரவேண்டியுள்ள கடன்களாக ஆகின்றன; நிறுமம், ''சான்றுப்பத்திரங்கள் தனக்குத் திரும்ப அனுப்பப்படவேண்டும் என்று கேட்காமலேயே, அழைப்பு விடுக்கப்பட்டபோதினும் எந்தப் பங்குகளின்மீது பணம் செலுத்தப்படாமல் உள்ளதோ அந்தப் பங்குகளைப் பறிமுதல் (Forfeiture) செய்துகொள்வதற்கு உள்ள தன்னுடைய உரிமையை உபயோகப்படுத்தலாம்'' மேலும், அரைகுறையாகச் செலுத்தப்பட்ட பங்குகள் வங்கிய

ருக்கோ, அவருடைய நியமனம் பெற்றவருக்கோ (nominee) நிறுமத்தின் ஏடுகளில் மாற்றல் செய்யப்பட்டிருந்தால், நிறுமமோ, அதனுடைய கலைப்பாளரோ (liquidator) விடுக்கக்கூடிய அழைப்புகளுக்குப் பணம் செலுத்துவதற்கு வங்கியர் தம்மைப் பொறுப்பாளியாக்கிக் கொள்கிறார். இந்தப் பொறுப்பு, பங்குகளை விற்பதோடு அல்லது மாற்றல் செய்வதோடு கட்டாயமாக முடிவுக்கு வந்துவிடுவதில்லை ; ஏனென்றால், ஒரு நிறுமம் கலைக்கப்படுகின்ற தறுவாயில், நிறுமம் பணம் கேட்டு விடுக்கின்ற அழைப்புகளுக்கு, அதனுடைய தற்போதய உறுப்பினர்கள் பணம் தருவதற்கு இயலாமல் இருப்பின், அவர் உறுப்பினராக இருந்த காலத்தில் நிறுமம் கொடுக்கப்படவேண்டியதாய் இருந்த கடன் ஒன்றைக் கொடுப்பதற்குப் பணம் தேவைப்பட்டால், கலைப்புத் தொடங்கப்பட்டதற்குப் முன்னர் ஓராண்டிற்குள்ளாக அதனுடைய உறுப்பினராக இருந்த எவரும் பொறுப்பினை ஏற்கும்படி அழைக்கப்படலாம் (1956 ஆம் ஆண்டின் இந்திய நிறு மங்களின் சட்டம் 426வது பிரிவினைப் பார்க்கவும்) வங்கியர், நியாய அடமைானம் ஒன்றினை மட்டுமே வாங்கியவராக இருக்கின்றபொழுது, அவைகளின் பறிமுதலைத் தவிர்க்கும் பொருட்டுப் பங்குகளின்மீது விடுக்கப்பட்ட அழைப்புகளுக்குச் செலுத்துவதற்கான பணத்தை அவர் தேடவேண்டியுள்ளது. அடுத்து வருகின்ற இத்தகைய அழைப்புகளுக்குப் பணம் செலுத்துவதற்கு வங்கியர் விருப்பமில்லாது இருந்தால், அவருக்கு உள்ள ஒரே மாற்றுவழி, அவைகளை, கிடைக்கக்கூடிய குறைந்த விலைக்கு விற்றுவிடுவதேயாகும். இருப்பினும், மேற்கொண்டு அழைப்புகள் விடுக்கப்படுவதற்கான வாய்ப்பு ஏதும் இராது என வங்கியர் முழுநம்பிக்கையோடு இருந்தால், வெறுமனே, அழைக்கப்படாத பொறுப்புத் தம்மீது வந்துவிடக்கூடும் என்பதற்காகப் பங்குகளை நிராகரிக்காமல் ஏற்றுக்கொள்ளலாம்.

இதரப் பங்குமாற்று நிலையப் பிணையப்பத்திரங்கள் (Other (Stock Exchange Securities):

உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் வியாபாரம் ஆகியவைகளின் வளர்ச்சி காரணமாகக் கூட்டுப்பங்கு நிறுமங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே இருக்கிறது. நிறுமத் தோற்றுவிப்புக் கோட்பாடு இவ்வாறு விரிவு படுத்தப்படுவது வரவேற்கப்படக்கூடியது எனினும், அதனோடு, பலகாலம் நிலைத்திருக்காத காளான் (போன்ற) நிறுமங்கள் தோற்றுவிக்கப்படுகின்ற அபாயமும் சேர்ந்துள்ளது. எனவே, முதலீட்டாளரைப் (Investor) போல, தம்முடைய கடன்களுக்குப் பிணையமாகத் தாம் ஏற்றுக்கொள்ளவேண்டிய பிணையப்பத்திரங்களைத் தேர்ந்தெடுப்பதில்,

வங்கியர், கவனமாக இருக்கவேண்டியது அவசியமாகும். அதனுடைய எல்லாக் கடன்களுக்கும் பிணையமாக, விரும்பப்படத்தகாத பிணையப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதைத் தவிர்க்கும் நோக்கதோடும், மற்றும் நேரத்தை விரயமாக்குவதைத் தடுப்பதற்காகவும், ஒவ்வொரு தற்கால வங்கியும் இதற்காக, அங்கீகரிக்கப்பட்ட பிணையப்பத்திரங்களின் (Approved Securities) பட்டியல் ஒன்றைத் தயாரிக்கின்றது. அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இடப்படவேணடிய பங்குத் தொகுப்பு மற்றும் பங்குகளைத் தெரிவு செய்வதை நிர்ணயிக்கின்ற, எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, விதிகளை வரைவது கடினமாக இருக்கின்றபொழுது, வங்கியர் ஒருவர், பெருமளவிற்குக் கீழ்க்காணும் ஆய்வுகளினுல் (consideration) வழிகாட்டப்படுவார்.

நிறுமங்களின் இருப்புநிலைக் குறிப்புகளைப்பற்றிய பரிசீலனை, மற்றும் அவைகளின் பொதுவாள செயல்பாட்டினைப் பற்றிய மதிப்பீடு, ஆகியன, (அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களின்) பட்டியலைத் தயாரிப்பதற்கு இன்றியமையாதளவாகும். ஒவ்வொரு நிறுமமும் நடத்திக்கொண்டிருக்கும் தொழிலின் தன்மை, அதனுடைய கடந்த கால வரலாறு பற்றிய ஆய்வு, அவைகளோடு அதனுடைய வருங்காலத் தொழில்வாய்ப்பு ஆகியன ஒரு நிறுமத்தினுடைய பிணையப்பத்திரத்தின் மதிப்பை நிர்ணயம் செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இத்தகைய பட்டியலைத் தயாரிக்கும்பொழுது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்ற ஒரு முக்கிய ஆய்வு (consideration), தன்னுடைய இயக்குநர்களின் மூலமாக நிறுமம் பெற்றுள்ள அனுபவம், வழிகாட்டல் மற்றும் மேலாண்மை ஆகியனவாகும். கூட்டுப் பங்கு நிறுமங்களை வெற்றிகரமாக நடத்திச் சென்று, அவர்கள் தங்களுடைய நிதியீடு மற்றும் மேலாண்மைத் திறமைகளை நிருபித்திருந்தால், அது, அவர்களால் மேலாண்மை செய்யப்படுகின்ற மற்றும் இயக்கப்படுகின்ற நிறுமங்களின் பங்குகளை அங்கீகாரம் செய்வதில் குறிப்பிடுமளவுக்கு வலுக்கொடுக்கும். துரதிர்ஷ்டவசமாக, ஒவ்வொரு வியாபாரச் செழிப்புக் காலமும் (boom), ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறுமங்களை, ஒரு சில நபர்கள் பேரதிகாரம் (domination) செய்வதற்கு உதவுகின்ற வகையில், நற்பேற்றினையும் செல்வாக்கினையும் அவர்கள் பெறுவதற்கு உதவுகின்றது. இத்தகைய பேரதிகாரம், அவர்கள் தங்களுடைய அதிகாரத்தைத் தவறுதலாகப் பயன்படுத்துவதற்கு வழிவகுத்து, அவர்களால் இயக்கப்படும் நிறுமங்கள் தோல்வியடைவதற்கும் காரணமாக உள்ளது.

சில ஆண்டுகளுக்கான இருப்புநிலைகுறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்கு அறிக்கைகளின் ஆய்வு
Study of Balance Sheets and Profit and Loss Account Statements for some years)

சம்பந்தப்பட்ட நிறுமம், கடந்த பல ஆண்டு காலமாக எவ்வாறு செயல்பட்டு வந்தது என்பது, செயல்படுத்திப் பார்க்கவேண்டிய மிக முக்கியமான சோதனைகளில் ஒன்றாகும்; எனவே, பல ஆண்டுகளுக் கான அதனுடைய இருப்புநிலைக் குறிப்புகளையும் இலாப நட்டக் கணக்குகளையும் ஆய்வுசெய்யவேண்டியது அவசியமாகும். இத்தகைய ஆய்வு, அதனுடைய வருங்கால வாய்ப்புகளைப் பற்றி, நியாயமாக நம்பக்கூடிய ஒரு மதிப்பீட்டினைச் செய்வதற்கு வங்கியருக்கு உதவும். நல்ல இலாபத்தினை ஈட்டிக் கொண்டும், ஒரே சீரான பங்காதாயத்தை அறிவித்துக்கொண்டும் இருக்கின்ற ஒரு நிறுமம் முதலீட்டாளர்களின் ஆதரவைப் பெறுவதில் வியப்பில்லை; அதன் விளைவாக அதனுடைய பங்குகளின் விலை பெருமளவில் ஏறி இறங்குவதற்கு வாய்ப்பில்லை. மூலதனத்தோடு அதனுடைய காப்பு நிதி (Reserve) கொண்டுள்ள தொடர்பு (relation), மற்றும் அதனுடைய எளிவரல் தன்மை கொண்ட சொத்துகளோடு (Liquid Assets) நடப்புப் பொறுப்புகள் கொண்டுள்ள தொடர்ப்பு ஆகியனவும் மனத்தில் கொள்ளவேண்டிய காரணிகளாகும்.

சந்தை விலைகளைப்பற்றிய கவனமான ஆய்வு
(Careful Study of Market Prices)

அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இடப்படுவதற்கான பங்குத் தொகுப்புகள் (stocks) மற்றும் பங்குகள் ஆகியவைகளின் உண்மையான சந்தை விலையைப்பற்றிய அபிப்பிராயம் ஒன்றினைக் கொள்ளும் பொருட்டு, வங்கியர் ஒருவர், விலைகளின் அதிகாரபூர்வமான பட்டியலகளைப் பற்றிக் கவனமாக ஆராயவேண்டும். எப்போதாவது நடைபெறும் நடவடிக்கைகளைப் பற்றிய ஒரு பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள விலைகளின் மீது சார்ந்திருப்பது பாதுகாப்பானதன்று. சில வேளைகளில், அதில் அக்கறை கொண்டுள்ள நபர்கள், சில நிறுமங்களினுடைய பங்குகளின் விற்பனையை அதிகரிக்கும்பொருட்டு, மிகவும் குறைந்த விலையில்கூட இத்தகைய பங்குகளில் குறிப்பிடுமளவிற்கானவற்றைச் சந்தையில் விற்பது கடினமெனினும், பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள அவைகளின்

உண்மையான விலையைவிட மிகவும் உயர்ந்த விலைகளில், மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான பங்குகளுக்கு ஒன்று அல்லது இரண்டு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்கின்றனர் என்பது தெரிந்ததே. அடிக்கடி நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும் பங்குகளின் சந்தைவிலைகள், எப்போதாவது நடவடிக்கைகள் நிகழ்கின்றவைகளின் விலையைவிட, எவ்வளவோ நம்பகமானவைகளாகும். நிறுமங்களின் நிதி நிலைமை, மற்றும் அவைகளின் வெற்றியில் முக்கியப் பங்கு வகிக்கின்ற பொருளாதாரக் காரணிகள் ஆகியவைகளோடு நெருங்கிய தொடர்ப்பு வைத்துக் கொள்ளும் பொருட்டு, வங்கியர் ஒருவர், "இந்தியன் பினான்ஸ்" (Indian Finance) மற்றும் "காமர்ஸ்" (commerce) போன்ற வாராந்தரிகளையும், அவைகளோடு, முன்னணியில் உள்ள தினசரிகளில் நிதியீடு பற்றிய பத்திகளையும் கவனமாகப் படிக்க வேண்டும்.

அளிக்கப்பட்டுள்ள பிணையம் பங்குப்பத்திரமா அல்லது கடனீட்டுப் பத்திரமா (Security Offered Share or Debenture)

அளிக்கப்பட்டுள்ள பிணையம் கடனீட்டுப் பத்திரங்களின் வடிவில் உள்ளதா அல்லது பங்குகளாக உள்ளதா என்பதையும் வங்கியர் ஒருவர் கவனிக்கவேண்டும். கடனீட்டுப்பத்திரத்தைப் பிணையமாக ஏற்றுக் கொள்வதன் மூலம், வங்கியர் தம்மை நிறுமத்தினுடைய கடனாளர் என்ற நிலையில் வைத்துவிடுகிறார். பிணையம் பங்குகளாக இருப்பின், அவை சாதாரணப் பங்குகளா அல்லது குவிவு உரிமைகள் கொண்ட (cumulative) அல்லது குவிவு உரிமை இல்லாத முன்னுரிமைப் பங்குகளா என்பதை வங்கியர் கவனிக்கவேண்டும். பொதுவாக, அவர் பங்குகளை விடக் கடனீட்டுப்பத்திரங்களுக்கும் சாதாரணப் பங்குகளைவிட முன்னுரிமைப் பங்குகளுக்கும் முன்னுரிமை (preference) அளிப்பார். குவிவு முன்னுரிமைப் பங்குகள் (cumulative preference shares) குவியா முன்னுரிமைப் பங்குகளை (non-Cumulative Preference Sharse) விடச் சிறந்தவைகளாகும்; ஏனென்றால் குவிவு முன்னுரிமை வகையைச் சேர்ந்த பங்குகளுக்குப் பங்காதாயம் எந்த ஆண்டுக்காவது கொடுக்கப்படவில்லையென்றால், நிறுமத்தின் இலாபம் பங்காதாயம் கொடுப்பதை அனுமதிக்கின்ற பிந்தைய ஆண்டுகளில், அதனுடைய சாதாரணப் பங்குகளின்மீது பங்காதாயம் ஏதும் கொடுக்கப்படுவதற்குமுன், குவிவு முன்னுரிமைப் பங்கு

களின் மீது முந்தைய ஆண்டுகளில் கொடுக்கப் படவேண்டிய பங்காதாயம் கொடுக்கப்படவேண்டும். அதேபோல, நிறுமம் கலைக்கப்படும் தறுவாயில், முன்னுரிமைப் பங்குகளை வைத்திருப்பவர்கள், மற்றவகையான பங்குகளை வைத்திருப்பவர்களுக்கு ஏதும் கொடுக்கப் படுவதற்குமுன், தங்களின் மூலதனம் திருப்பிக்கொடுக்கப்ப பறிவதற்கான முன்னுரிமையைப் பெற்றுள்ளனர். அங்கீகரிக்கப் பட்ட பட்டியலில் சேர்க்கப்படுவதற்குள்ள பங்குகள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்கு மாற்று நிலையங்களால் பட்டியலில் இடப்பட்டுள்ளனவா, மற்றும் தங்கு தடையின்றி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனவா என்றும் வங்கியர் பார்க்கவேண்டும்; அப்படியில்லையெனில், தேவையானபோது அவைகளை விற்றுப் பணம் பெறுவது கடினமானதாகிவிடும்.

சுருங்கக்கூறின், அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இடப்படுவதற்கான பங்குகள், திருப்திகரமான செயல்பாட்டுச் சாதனை (Satisfactory Record of Working), சிறந்த மேலாண்மை ஆகியவைகளைத் தன்னகத்தே கொண்டு நன்கு நிலைநாட்டப்பட்டு, நற்பெயரைக் கொண்டுள்ள நிறுமங்களினுடையவைகளாக இருக்க வேண்டும்; மற்றும் விலைப்புள்ளிப் பட்டியலில் இடப்பட்டவைகளாகவும் (quoted), எளிதில் விற்பனை செய்யக்கூடியவைகளாகவும் மற்றும் பங்காதாயம் அளிக்கக் கூடியவைகளாகவும் இருக்க வேணடும்.

பிணையப்பத்திரங்களை மதிப்பிடல் (Valuation of Securities)

அளிக்கப்பட்டுள்ள பிணையப்பத்திரங்ளைப் பற்றி வங்கியர் திருப்தியடைந்துவிட்டால், குறிப்பிடப்பட்ட விலையில் (price quoted) இருந்து அதில் சேர்க்கப்பட்டுள்ள பங்காதாயத்தைக் கழிவு செய்துவிட்டு, அவைகளின் சந்தை விலையை அவர் கண்டறியவேண்டும். பொதுவாக, பங்காதாய ஆணைகள் (Dividend Warrants) விடுக்கப்படாமல் இருக்கின்றவரையில் பங்குமாற்று நிலையத்தின் விலைக்குறிப்பீடுகள் (quotations) பங்காதாயம் சேர்ந்த (cum dividend) விலைக்குறிப்பீடுகளாகும், எதனுடைய பங்குகள் (பிணையமாக) அளிக்கப்பட்டுள்ளனவோ அந்த நிறுமம், தன்னுடைய பங்குகள் மாற்றல் செய்வதற்கான ஏடுகளை (Transfer books) மூடியிருக்கும்பொழுது, அறிவிக்கப்பட்டு ஆனால் கொடுக்கப்படாமல் உள்ள பங்காதாயம், பங்குகளை வைத்திருப்பவர் என்று நிறுமத்தினுடைய ஏடுகளில் யாருடைய பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த நபருக்குக் கொடுக்கப் படும்; எனவே, மதிப்பீடு (Valuation) செய்வதற்காக, அவைக

ளின் சந்தை விலையிலிருந்து கொடுக்கப்படவேண்டியுள்ள பங்கா தாயத்தொகையை, வங்கியர், கழித்துக்கொள்ளவேண்டிவரலாம். தினசரி அல்லது வாராந்தரச் செய்தித்தாள்களில் கொடுக்கப்பட்டுள்ள விலைக் குறிப்பீடுகளின் (quotations) மீது, குறிப்பாக, பங்குமாற்று நிலையத்தினுடைய விலைக்குறிப்பீட்டுப்பட்டியலின் "தொழில் செய்யப்பட்டவை" (business done) பத்தியில் காணப்படாத பிணையப் பத்திரங்களின் விடயத்தில், வங்கியர் ஒருவர், எப்போதுமே சார்ந்திருக்கக்கூடாது. எப்போதாவது தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்ற பங்குகளின் விடயத்தில், நிறுமத்தினுடைய செயலரிடமிருந்து, அதனுடைய பங்குகளில் செய்யப்பட்டுள்ள கடைசி மாற்றல் என்ன விலைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிந்து கொள்வது நல்லது ஆகும்; மாற்றல் செய்யப்பட்ட தேதியையும் வங்கியர் கவனிக்கவேண்டும்; மற்றும், பிணையப்பத்திரங்களின் விலையைப் பாதிக்கக்கூடிய, தொடர்ந்து வரும் சூழ்நிலைகளின் விளைவினையும் (effect) கருத்தில் கொள்ளவேண்டும்.

பிணையப்பத்திரங்களை எவ்வாறு பிணையாக ஆக்குவது (How to charge the Securities):

வங்கியர் ஒருவர், அளிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களை ஏற்றுக்கொண்டு, அவைகளின் விலையைக் கண்டறிந்து, தேவையான எச்ச ஓரத்தையும் முடிவு செய்த பிறகு பிணையத்தினை நல்ல முறையில் எப்படி முடிக்கலாம் என்று அவர் கருதவேண்டியுள்ளது. முற்றிலும்மாற்றுந்தன்மையைக் (negotiability) கொண்டுள்ள பிணையப்பத்திரங்களின் விடயத்தில், அவை கொணர்பவர் bearer பிணையங்களாக இருந்தால், அவைகளின் மீதான சொத்துரிமை வெறுமனே அவைகளைச் சேர்ப்புச் செய்வதன் (mere delivery மூலம் மாற்றிக்கொடுக்கப்படலாம். ஆனால், குறிப்பிட்ட ஒரு நபருக்கு அல்லது அவருடைய ஆணைக்குக் கொடுக்கப்படவேண்டிய பிணையப்பத்திரங்களின் விடயத்தில் அவைகளில் உள்ள சொத்துரிமையை மாற்றிக் கொடுப்பதற்கு, குறிப்பிட்ட நபருடைய மேலெழுதலோடு (endorsement) சேர்ப்புச் செய்தலும் அவசியமாகும். இத்தகைய பிணையப்பத்திரங்களை, நல்லெண்ணத்தோடு மதிப்பினைக் கொடுத்து வங்கியர் வாங்கியிருந்தால், பிற்பாடு அவைகளை அடகு கொடுத்த நபர் அவ்வாறு செய்வதற்கு உரிமை கொண்டிருக்கவில்லையென்று ஆனாலும் கூட, அவைகளின்மீது அவர் (வங்கியர்) நல்ல உரிமையைப் பெறுகிறார். இத்தகைய பிணையப்பத்திரங்களை ஏற்றுக் கொள்வதற்கு முன் வங்கியர்கள், பொதுவாக, நல்லெண்ணத்துடன் செயல்படுவதாலும் மற்றும் தேவையான முன்னெச்சரிக்கைகளை எடுத்துக்கொள்வ

தாலும், குறிப்பாக, அது கவனக்குறைவாகச் செய்யப்பட்டிருந்த போதிலும், சூழ்நிலை சந்தர்ப்பங்களோடு ஒப்பிட்டுக் கருதப்படும் பொழுது, ஏற்பட்ட கவனக்குறைவு பெருமளவினதாக இருந்தாலன்றி, நலலெண்ணத்துடன் செய்யப்பட்ட தொழில், வங்கியரின் உரிமைக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் பாதகம் எதனையும் ஏற்படுத்தாது. ஆகையால், இந்த வகையான இடர்ப்பாடு ஏதும் எழுவதற்கு வாய்ப்பில்லை (எக்ஸ்டைன் எதி. மிட்லண்ட் பாங்க் லிட்., தி பாங்கர், ஜூன், 1926 Eckstein *v*. Midland Bank Ltd., The Banker, June 1926). இருந்தபோதிலும், நடவடிக்கையோடு தொடர்பு கொண்டிருந்த சந்தர்ப்பச் சூழ்நிலைகள், வைப்புச் செய்யப்பட்ட பிணையப் பத்திரங்கள் அவைகளை வைப்புச்செய்த நபருக்குச் சொந்தமானவை அல்ல என்ற சந்தேகத்தை எழுப்பக்கூடியவைகளாக இருந்திருக்கின்றன என்றபோதும் கூட வங்கியரின் உரிமை பாதிக்கப் படாது என்று பொருள் படுவதாக இது ஆகாது. இந்நிலையில் ஆவணமாற்றுத் தன்மை (negotiability) என்றால் என்ன, மற்றும் எந்தப்பிணையப்பத்திரங்கள் இந்தக் குணாதிசயத்தைக் கொண்டிருப்பவைகளாகக் கருதப்படும் என்பவைகளைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுவது, அவசியமானதெனத் தோன்றுகிறது.

பிணையப்பத்திரங்களின் ஆவண மாற்றுத்தன்மை (Negotiability of Securities)

1881ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணங்களின் சட்டம் (Negotiable Instruments Act, 1881) சரத்துக்களின்படி, ஒரு கடனுறுதிச்சீட்டு (Promissory Note), மாற்றுச்சீட்டு (Bill of Exchange) அல்லது ஆணைக்கு அல்லது கொணர்பவருக்குச் (bearer) செலுத்தப்படக்கூடிய காசோலை (cheque), குறிப்பிட்ட ஆவணத்தின் தன்மைக்கேற்றவாறு, மேலெழுதல் செய்து சேர்ப்புச் செய்வதன் மூலம், அல்லது வெறுமனே சேர்ப்புச் (mere delivery) செய்வதன் மூலம் மாற்றிக் கொடுக்கப்பட்டால், மாற்றிக்கொடுத்தவருடைய உரிமையில் குறையேதுமிருப்பின் அதனால் பாதிக்கப் படாது, மாற்றிப் பெறுபவருக்கு (transferee) நல்ல உரிமையைக் கொடுக்கின்றது. மாற்றிப்பெற்றவர், ஆவணத்தை முறைப்படி கொண்டுள்ளவர் (Holder in due course) எனில், அதனை முதலில் வைத்திருந்தவருக்கு எதிராகச்செயல்படுத்தக்கூடிய நியாய வழக்குகளிலிருந்து (equities) அவர் விடுவிக்கப்படுகிறார். சட்டத்தினுடைய இந்தப்பிரிவு, கடனுறுதிச்சீட்டுகள், மாற்றுச்சீட்டுகள் மற்றும் காசோலைகள் தவிர இதர ஆவணங்களைப்பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. அதன் விளைவாக, ஆவண மாற்றுத்தன்மையைக்

கொண்டிருப்பதாக அனுமானம் செய்துகொள்ளக்கூடிய மற்ற ஆவணங்களின் விடயத்தில், மாற்றிப்பெற்றவர் ஆவணத்திலுள்ள குறைபாடு அல்லது அதனை மாற்றிக்கொடுத்தவருடைய உரிமையில் உள்ள குறைபாடுபற்றிய அறிவிக்கை எதனையும் பெறாமல், மதிப்பினைக் கொடுத்து நல்லெண்ணத்துடன் பெற்றவராக இருக்கவேண்டுமென்பது அவசியமாகின்றது. எடுத்துக்காட்டாக, திருடன் ஒருவனிடமிருந்து அதனைப் பெற்ற நபர் ஒருவரிடமிருந்து, கொணர்பவர் பிணையப்பத்திரம் (bearer security) ஒன்று மதிப்பிணைக் கொடுத்துப்பெறப்பட்டால், நல்லெண்ணத்துடனும் மதிப்பைக்கொடுத்தும் அதனைப்பெறுகின்றவர் அதன்மீது நல்ல உரிமையைப் பெறுகின்றார். அதனைக் கொடுத்தவர்மீது வழக்குத் தொடரப்படலாம்; அதனைத் திருடிய நபர்மீது, அல்லது அதனை விடுத்த நபரிடமிருந்து மோசடி செய்து பெற்றவர்மீது செயல்படுத்தக்கூடிய நியாய வழக்குகளை (equities), ஆவணத்தை முறைப்படி கொண்டுள்ளவருக்கு எதிராகச் செயல்படுத்தமுடியாது. மாறாக, கடன் ஒன்றினை மாற்றிப் பெற்றவர் (Transferee of Debt,) அதனை மாற்றிக் கொடுத்தவரைவிடச் சிறந்த உரிமையைப் பெற முடியாது; ஒரு கடனாளி (debtor), கடனை மாற்றிக் கொடுத்தவராகிய தம்முடைய மூலக் கடனாளருக்கு (original creditor) எதிராக முன் வைக்கக்கூடிய நியாயங்களை (equities), கடனை மாற்றிப் பெறுவதற்கு எதிராகச் செயல்படுத்தமுடியும். இருப்பினும், மாற்றுந்தன்மை கொண்டுள்ள ஆவணத்தின் விடயத்தில், வெறுமனே சேர்ப்புச் செய்தல் அல்லது மேலெழுதல் செய்து சேர்ப்புச் செய்தல் ஆகியவை மூலம் அதில் உள்ள சொத்துரிமை மட்டும் மாற்றிக்கொடுக்கப்படவில்லை, ஆனால் மாற்றிக் கொடுத்தவருக்கு அல்லது அதற்கு முந்தைய நபருக்கு உள்ள உரிமையில் ஏதேனும் குறைபாடு இருந்தாலும், அதனால் முறைப்படி கொண்டுள்ளவர் (Holder-in due Course) எந்த வகையிலும் பாதிக்கப்படுவதில்லை. மேலும், முறைப்படி ஆவணத்தைக் கொண்டுள்ளவர், அதன்மீது, தம்முடைய சொந்தபெயரில் வழக்குத் தொடரலாம்.

ஆவண மாற்றுத்தன்மை வகைகள்
(Forms of Negotiability)

சட்டத்தின் மூலம் அளிக்கப்படும் ஆவண மாற்றுந்தன்மை (Negotiability By Statute)

செலாவணித் தாள்கள் (Currency Notes) உள்பட மாற்றுச்சீட்டுகள் காசோலைகள், மற்றும் கடனுறுதிச் சீட்டுகள், ஆகியவைகளில் உள்ளதுபோல, ஆவண மாற்றுந்தன்மை, சட்டத்தின்

மூலம், வெளிப்படையாகச் சில ஆவணங்களுக்குக் கொடுக்கப் படலாம். மாற்றுமுறை ஆவணங்களை ஆட்சிசெய்கின்ற (governing), வியாபார வழக்காற்றுச் சட்டம் (Law Merchant) முழுவதற்கும், வியாபார வழக்குதான் அடிப்படையாகும்; ஆகையால், இந்த ஆவணங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சட்ட முறையிலான மாற்றுந் தன்மை, சில வணிகப்பழக்கவழக்கங்களுக்குச் சட்டமுறையிலான அங்கீகாரம் அளிக்கப்பட்டதன் வினைவே யாகும்.

வழக்கத்தின் காரணமாக எழுந்த மாற்றுந்தன்மை (Negotiability by custom)

சில பத்திரங்கள் சட்டமுறையிலான மாற்றுந்தன்மையைக் கொண்டிராதபோதிலும், வணிகர்களிடையே நிலவும் வழக்கத்தின் காரணமாக மாற்றுமுறை ஆவணமாகக் கருதப்படலாம். இருந்த போதிலும், சர்ச்சையின் கீழ் உள்ள நடவடிக்கை எந்த நாட்டில் நடைபெற்றதோ அந்த நாட்டினுடையதாக அந்த வழக்கம் இருக்க வேண்டியது அவசியம்; ஆவணம் விடுக்கப்பட்ட அல்லது தோன்றிய நாட்டினுடைய வழக்கமாக அது இருப்பது போதுமானதன்று (பிக்கர் எதி. இலண்டன் அண்ட் கௌன்டி பாங்க் [1887], 18 க்வீ. பெ.டி. 515. Picker *v* London and County Bank [1887] 18 Q.B.D. 515). இந்த வழக்கில் சர்ச்சைக்குரிய பொருள் யாதெனில், அதனோடு சேர்ந்திருக்க வேண்டிய வட்டி தொடர்பான கூப்பன் (coupon) இல்லாமல், பிரெசியன் பிவணமுறி (Prussian Bond) ஒன்றினை நல்லெண்ணதுடன் கொண்டிருந்த ஒருவருடைய உரிமைகளுக்கு எதிராக, அதனுடைய உண்மையான உரிமையாளருக்கு எதிராக அதனுடைய உண்மையான உரிமையானருக்கு உள்ள உரிமையினைப் பற்றியதாகும். இத்தகைய பிணைமுறிகள் மாற்றுமுறை ஆவணங்கள் என பெர்லினில் (Berlin) கருதப்பட்டன என்பதைக் காட்டுவதற்கு போதுமான அத்தாட்சி இருந்தது; ஆனால், அத்தகயை வழக்கு (usage) இலண்டனில் இருந்ததற்கு அத்தாட்சியேதுமில்லை. அவை மாற்றுமுறை ஆவணங்கள் அல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. வழக்கத்தின் காரணமாக மாற்றுந்தன்மையைக் கொண்டுள்ள ஆவணங்கள், ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நேரத்தில், ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் அது நடைமுறையில் உள்ள ஒன்று என்று அறிந்திருந்தார்கள் என்று நிரூபிக்கப்படுமானால், அத்தகைய உபயோக முறை (usage) ஒரு வழக்கு (custom) என்று அழைக்கப்படுவதற்குப் போதுமான அளவு பொதுவானதாக இல்லாதபோதிலும் கூட, தங்களின் மாற்றுந்தன்மையைத் தங்களிடத்தில் வைத்துக் கொண்டுள்ளன என்று மேற்கொண்டும் கூறலாம்.

முரண்தடையினுல் ஏற்படும் மாற்றுந்தன்மை (Negotiability by Estoppel)

கடைசியாக, அதனுடைய தன்மையைக்கொண்டு, சரியாகக் கூறவேண்டுமானால், அது ஒரு மாற்றுமுறை ஆவணம் அன்று என்று கருதப்படும் ஓர் ஆவணம், அதனுடைய முகத்தோற்றத்தி லிருந்து, சேர்ப்புச் செய்தல், அல்லது மேலேழுதல் மற்றும் சேர்ப் புச் செய்தல் ஆகியவற்றின் மூலம் மாற்றிக் கொடுக்கத்தக்கது என்று கருதும்படியாக இருந்தால், அல்லது, அதனை முன்பு வைத் திருந்தவர் அது அவ்வாறு (மாற்றிக்கொடுக்கத் தக்கதாக) இருந் தது என்று கூறினுல், முரண்தடைக் கோட்பாட்டின்படி (Law of Estoppel), நல்லெண்ணத்துடன் மதிப்பைக் கொடுத்துப் பெறு கின்ற ஒருவருடைய கைகளில் ஒரு மாற்றுமுறை ஆவணமாகக் கருதப்படும். இத்தகைய ஓர் ஆவணம், சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் பொருட்டு ஒரு முகவரிடம் (agent) ஒப்படைக் கப்பட்டிருந்தால், ஆவணம் சம்பந்தப்பட்ட நடவடிக்கையில் ஈடு படுகின்றபொழுது அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தை முகவர் மீறியிருந்தாலும் கூட, அதனை நல்லெண்ணத்துடன், மதிப்பினைக்க கொடுத்துப்பெற்றுள்ள ஒரு நபருக்கு எதிராக அத னுடைய மாற்றுந்தன்மையை மறுப்பதிலிருந்து முதல்வர் தடுக்கப் படுவார். புல்லர் எதி. க்ளின் மில்ஸ் கரி அண்ட் கோ. (1914), 2 கிங். பெ. 168 [Fuller *v.* Glyn Mills Currie & Co. (1914), 2 K.B. 168] என்ற வழக்கில், வாதி, கூட்டு நிறுவனமாகச் செயல்பட்ட பங்குத்தரகர்களின் மூலம், "எச்" (H) என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த சில பங்குகளை வாங்கியிருந்தார். வாதி, வெற்றுமாற்றுப் படிவங்களை, "எச்" (H) கையொப்பமிடுமாறு செய்து, பங்குச் சான்றிதழ்களை பங்குத்தரகர்களின் உடைமையில் இருப்பதற்கு அனுமதித்தார்; பங்குத்தரகர் அவரை மோசடி செய்யும் நோக்கத்துடன், அவைகளை, மேல்வரைப்பற்று ஒன் றினை உத்தரவாதம் செய்வதற்காக பிரதிவாதி வங்கியிடம் அடை மானமாகக் கொடுத்தார். பங்குத்தரகர்களிடமிருந்து அவைகளைப் பெறுகின்ற ஒரு நபருக்கு, அவர்கள் (பங்குத்தரகர்கள்), பங்குக ளின் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அதிகாரம் பெற்றிருந்தார்கள் என்ற தவறான எண்ணத்தை உண்டாக்கும் வகையில், பங்குத்தர கர்களின் கைகளில் பங்குச்சன்றிதழ்கழை அவர் விட்டுவை த்திருந்தபடியால், வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராகத் தம்முடைய உரிமையை நிலைநாட்டுவதிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளார் (estopped) என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இருந்தபோதிலும், பங்குத் தொகுப்புகள், பங்குகள் ஆகியவைகளினுடைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான அதிகாரங்களைப் பெற்றுள்ள பங்கு அல்லது

பங்குத் தொகுப்பு தரகர்களைத் தவிர இதர நபர்களுக்கு இந்த விதி விரிவுபடுத்தப் படுவதற்கு வாய்ப்பில்லை. ஹசாரிமுல் எதி. சதிஸ் சந்திர கோஸ், இ.லா.ரி. 46 கலகத்தா 331, (Hazarimull *v.* Satish Chandra Ghose, I.L.R. 46 Calcutta 331) என்ற வழக்கில், மோசடி செய்து, வெற்று மாற்றல் படிவங்களைக் கையொப்பமிடச் செய்து, அவைகளின் உரிமையாளரிடமிருந்து பங்குச்சான்றிதழ்களைப் பெற்ற ஒரு நபர், நல்லெண்ணத்துடன், மதிப்பினைக் கொடுத்து அவைகளை வாங்குகின்ற ஒருவருக்கு, எந்த உரிமையையும் மாற்றிக்கொடுக்கத் தகுதியற்றவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இருப்பினும், சில வேளைகளில், முரண்தடை மூலமான மாற்றுந்தன்மையை (Negotiability by Estoppel), ஆவணம் அத்தன்மை கொண்டதாக இருக்கவேண்டும் என்று எண்ணிச் செயல்பட்ட நபரைத் தவிர வேறு எவருக்கு எதிராகவும் கோரமுடியாது என்பது நினைவில் கொள்ளப்படவேண்டியதாகும். இவ்வாறு, பொதுவாக, ஒரு மாற்றுமுறை ஆவணம் என்று ஏற்றுக்கொள்ளப் படாத ஓர் ஆவணம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாற்றுமுறை ஆவணத்தின் குணாதிசயங்களைப் பெற்றிருக்கமுடியாது.

மாற்றுமுறைப் பிணையப்பத்திரங்களின் வெவ்வேறு வகைகள் (Different Forms of Negotiable Securities):

பின் வருபவை முழுமையான மாற்றுந்தன்மை கொண்ட பங்கு மாற்று நிலையப் பிணையப் பத்திரங்களாகக் கருதப்படுகின்றன:

(1) கொணர்பவர் பிணைமுறிகள் (Bearer Bonds).

(2) கொணர்பவருக்கான பங்குச்சான்றுச் சீட்டுகள் (scripts to bearer). பங்குச்சான்றுச் சீட்டு என்பது, ஒரு கடனின் குறிப்பிட்ட அளவிற்கு அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பங்குகளுக்குச் செலுத்தப்பட்டுள்ள தொகையைக் காட்டுகின்ற தற்காலிகச் சான்றிதழ் அல்லது பத்திரங்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப படுகின்ற ஒரு சொல்லாகும், ஒதுக்கீட்டுப் பணம் (Allotment Money) செலுத்தப்படும்பொழுது, பொதுவாக, ஒரு பங்குச்சான்றுச் சீட்டு அல்லது தாற்காலிகச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. பிணைமுறிகள் (அல்லது பங்குச் சான்றிதழ்கள்) கடைசித் தவணை செலுத்தப் பட்டவுடன் வழங்கப்படுகின்றன. வங்கியர் மற்றும் பொதுப்பிணையப் பத்திரங்களில் தொழில் செய்வோர் ஆகியோரின் வழக்கு (usage). காரணமாக, பங்குச் சான்றுச் சீட்டுகள் மாற்றுமுறை ஆவணங்கள் எனக் கருதப்படுகின்றன.

(3) பொதுவான கொணர்பவர் பங்குகள் அல்லது பங்குத் தொகுப்பு ஆணைகள் (Stock Warrants).

(4) பொதுவாக கொணர்பவருக்குச் செலுத்தவேண்டியவை களான கடனீட்டுப் பத்திரங்கள்.

அடகு கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்களின்மீது வங்கிய ருக்குள்ள உரிமை (Banker's Title to Securities Pledged):

வங்கியரைப் பொறுத்தமட்டில், முற்றிலும் மாற்றுந்தன்மை கொண்ட வகையைச் சேர்ந்த பிணையப்பத்திரம் மிகச்சிறந்த வடிவி லான ஈடாகும் என்பதில் சந்தேகமேதுமில்லை; ஏனென்றால், மதிப் பைக்கொடுத்து நல்லெண்ணத்துடன் அவர் செயல்பட்டாரெனில், அந்தப் பிணையப்பத்திரத்தை உலகம் முழுமைக்கும் எதிராக அவர் வைத்திருக்கலாம். அவர், நாணயமாக நடப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறார்; மற்றும் பிணையத்தை அளிக்கின்ற வாடிக்கையாளரின் உரிமையிலுள்ள ஏதேனும் குறைபாடுபற்றிய அறிவிக்கையினை அவர் உண்மையிலேயே பெற்றிருக்கக்கூடாது. லண்டன் ஜாயின்ட் ஸ்டாக் பாங்க் எதி. சிம்மன்ஸ் (1892), எ.சி. 201 (London Joint Stock Bank *v.* Simmons (1892) A. C. 201) என்ற வழக்கில், வாடிக்கையாளர் ஒருவருக்குச் சொந்தமான கொணர்பவர் பிணைமுறிகளை, ஒரு பங்குத்தரகர் அடைமானம் வைத்தபொழுது, பெருமகனார்கள் அவை (The House of Lords) பங்குத்தரகருக்கு அது அளித்துள்ள கடன்களுக்கு எதிராக அவைகளைக் கொள்வதற்கு வங்கிக்கு உரிமையுள்ளது என்று தீர்ப் பளித்தது. கொணர்பவர் பத்திரங்களைப் பிணையமாக ஏற்றுக் கொள்ளும்பொழுது, எவைகளைச் செய்யத் தவறினால் அது கெட்ட எண்ணத்துடன் செய்யப்பட்டதாக ஆகுமோ அத்தகைய உண்மை கள் ஏதும் அங்கு இல்லாதவரையிலும், பிணையப்பத்திரங்களின் மீது தன்னுடைய வாடிக்கையாளருக்குள்ள உரிமையைப் பற்றி வங்கியர் துருவி ஆராய்ந்துபார்க்கவேண்டுமென்பது அவசிய மில்லையென்பது, பொதுவாக, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், பிணையமாக அவர் எடுத்துக்கொள்ளும் பிணைமுறிகளோடு (பத்திரங்களோடு), செலுத்தப்படாது உள்ள எல்லாக்கூப்பன்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்று வங்கியர் பார்க்கவேண்டும்; ஏனென்றால், பங்குமாற்று நிலைய விதிகளின் படி, கூப்பன்களை இணைக்காமல் பிணைமுறிகளைச் சேர்ப்புச் செய்வது நல்லதொரு சேர்ப்பாக ஆகாது. அரசு கடனுறுதிச் சீட்டு களுக்கு எதிரான கடன்களின் விடயத்தில், கீழ்க்கண்டவைகளைப் பற்றி வங்கியர் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளவேண்டும்:- (அ) கடனுறுதிச் சீட்டுகள், சரியானமுறையில், வங்கிக்குச் சாதக

மாக மேலெழுதப்பட்டுள்ளன. (ஆ) முந்தைய மேலெழுதுதல்கள் யாவும் உண்மையானவை மற்றும் ஒழுங்கானவை. (இ) கடனுறுதிச் சீட்டுகள் சிதைவடைந்தோ கிழிந்தோ, பழுதடைந்தோ இல்லை அரசு கடனுறுதிச் சீட்டுகளுக்கெதிராகக் கடன் வழங்குகின்ற வங்கியர் அவைகளின் மீதான வட்டி வரவேண்டிய தேதிகளைக் குறித்துவைத்துக் கொண்டு அவைகளை வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்; மற்றும் அவரிடம் வைப்புச் செய்யப்பட்டுள்ள பிணைமுறிகள் திரும்ப எடுக்கப்படுதல் பற்றிக் கவனமாக இருக்கவேண்டும்.

செக்ரடரி ஆப் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா எதி. பாங்க் ஆப் இந்தியா லிட். (1937ஆம் ஆண்டின் அப்பீல் 55) [Secretary of State Bank of India v. Bank of India Ltd. (Appeal 55 of 1937)] என்ற வழக்கில், பாங்க் ஆப் இந்தியாவிற்குச் சாதகமாக வழங்கப்பட்ட நீதிபதி வாடியா அவர்களின் தீர்ப்பையும், நீதிபதி வாடியா அவர்களின் தீர்ப்பை எதிர்த்து ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் செக்ரடரி செய்த அப்பீலைத் தள்ளுபடி செய்த மான்புமிகு தலைமை நீதிபதி சர் ஜான் பிமான்ட் (Sir John Beaumont) அவர்களின் தீர்ப்பையும் மாற்றியமைத்த (reveised) பிரிவி கௌன்சிலின் தீர்மானம் இந்திய வங்கி வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அரசு பிணையப் பத்திரங்களைபற்றிய கையேட்டில் (Government Securities Manual) அடங்கியுள்ள அறிவிப்புகளின்படி, ஒரு பழைய கடனுறுதிச் சீட்டிற்குப் பதிலாக விடுக்கப்பட்ட ஒரு புதிய கடனுறுதிச்சீட்டு, அது எந்தப் பழைய சீட்டிற்குப் பதிலாக விடுக்கப்பட்டுள்ளதோ அந்தச்சீட்டிலுள்ள மேலெழுதலில் உள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறைபாட்டிலிருந்து விடுதலை பெற்றதாக உள்ளது எனப் பல ஆண்டுகளாகக் கருதப்பட்டு வந்தது. இவ்வாறு, இத்தகைய (மாற்றப்பட்ட புதிய) கடனுறுதிச் சீட்டு ஒன்றினை வைத்திருப்பவரை, புதிய சீட்டினால் மாற்றப் பட்ட பழைய சீட்டு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கள்ளக் கையொப்பமிடப்பட்ட மேலெழுதல்களைக் கொண்டிருந்ததாகக் கண்டறியப்பட்டால், இந்திய அரசின் செயலருடைய நட்டத்தினை ஈடு செய்யுமாறு, அழைக்கமுடியாது. இருப்பினும், வங்கியர்களும், அரசு பிணையப்பத்திரங்களின் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் திகைப்படையும் வகையில், (பழைய) கடனுறுதிச்சீட்டிலுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மேலெழுதல்கள் கள்ளக் கையொப்பமிடப்பட்டவைகளாக இருந்தன என்ற உண்மையை அறியாமல், புதிய (கடனுறுதிச்) சீட்டுகளை விடுப்பதால் அரசு செயலர் அடைந்துள்ள நட்டத்தினை ஈடு செய்யுமாறு புதிய சீட்டினை வைத்திருக்கும் ஒருவர் அழைக்கப்படலாம் என்று பிரிவி

கௌன்சில் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பு, வங்கிகள் மற்றும் அரசு பிணையப்பத்திரங்களில் முதலீடு செய்வோர் ஆகியோரின்மீது பெரும் பொறுப்பிணைச் சுமத்தியது. சட்டம் திருத்தம் செய்யப் படும் பொருட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; ஆனால், எந்த வெற்றியும் கிட்டவில்லை. ஆகையால், சில வங்கியர் ஓர் அரசு கடனுறுதிச் சீட்டிலுள்ள முந்தைய கடைசி மேலெழுதல் ஒரு வங்கியருடையதாகவோ, குறிப்பிடும்படியான வேறு யாராவது ஒரு நபருடையதாகவோ இருக்கவேண்டுமென வற்புறுத்துகின்றனர்; அவ்வாறு செய்யத்தவறினால் பிணையப்பத்திரத்தை அவருடைய சொந்தப்பெயரில் புதுப்பித்துத் தருமாறு வாடிக்கையாளர் கேட்கப் படலாம். கொணர்பவர் பிணைமுறிகளின் (Bearer Bonds) விடயத்தில் யாருக்குக் கடன் அளிக்கப் படவேண்டியுள்ளதோ அந்த நபரால் கையொப்பமிடப்பட்ட வைப்புக் கடிதம் (Letter of Deposit) ஒன்றினைப் பெறுவது அவசியமில்லை என்ற போதிலும் இத்தகைய கடிதம் ஒன்றினைப் பெறுவது நல்லது ஆகும். இத்தகைய பிணைமுறிகளின் விடயத்தில் கீழ்க்காணும் முன்னெச்ச ரிக்கைகளையும் வங்கியர் எடுக்கவேண்டியவராக உள்ளார்:

(அ) முகப்புத் தோற்றத்தில் (on the face) பிணைமுறிகள் ஒழுங்காக உள்ளன.

(ஆ) பங்குமாற்று நிலைய விதிகளின்படி இணைக்கப்பட்ட கூப் பன்கள் இல்லாமல் செய்யப்படும் பிணைமுறியின் சேர்ப்பு நல்ல சேர்ப்பு அல்ல என்று கருதப் படுவதால், இன்னும், கொடுக்கப்படவேண்டியவை என்று ஆகாத எல்லா வட்டிக் கூப்பன்களும் அவைகளோடு இணைக்கப்பட் டுள்ளன.

மாற்றுமுறைத்தன்மையில்லாத பிணையப்பத்திரங்கள் (Non-Negotiable Securities)

பொதுவாக, பொறிக்கப்பட்ட பங்குத் தொகுப்புகளோ, (Inscribed Stocks), அல்லது பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுப்புகள் மற்றும் பங்குகளோ மாற்றுமுறைத்தன்மையில்லாத பிணையப்பத்திரங்களாகும்.

பொறிக்கப்பட்ட பங்குத் தொகுப்புகள் (Inscribed Stocks):

பொறிக்கப்பட்ட பங்குத் தொகுப்புகள் அவ்வாறு அழைக்கப் படக் காரணம், இத்தகைய பங்குத் தொகுப்புகளை வைத்திருப் பவர்களின் பெயர்களும், அவர்களுடைய உடைமைகளின் (holdings) அளவும் "பொறிக்கப்பட்டுள்ளன" — அதாவது,

அவைகளை விடுக்கின்ற அரசு அல்லது கூட்டுரு (corporation) அல்லது அதனுடைய முகவர் (agent) வைத்திருக்கின்ற ஏடுகளில் பதிவு செய்துவைக்கப்படுகின்றன. இத்தகைய பங்குத் தொகுப்பு மாற்றிக்கொடுக்கப்படவேண்டுமென்றால், அதனுடைய உரிமையாளர் அல்லது அவரால் முறைப்படி அமர்த்தப்பட்ட வக்காலத்தார் (attorney) பிணையங்களின் மாற்றலுக்கான ஏடுகள் வைக்கப்பட்டுள்ள அலுவலகத்திற்குச் சென்று, அவர் விற்பனை செய்துள்ள பங்குத் தொகுப்பின் மாற்றலுக்கு (transfer) அதிகாரமளிக்க வேண்டியது அவசியமாகும். இத்தகைய பங்குத் தொகுப்புகளை வைத்திருப்பவர், கொணர்பவர் அல்லது பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுப்புகளின் விடயத்தில் பெறுவதுபோல, இவரிடமிருந்து வாங்குபவருக்கு அவர் சேர்ப்பிக்க வேண்டிய, உரிமைச் சான்றிதழைப் (certificate of title) பெறுவதில்லை; ஆனால், பிணையப்பத்திரம் என்ற முறையில் மதிப்பேதுமில்லாத, மற்றும் அது குறிப்பிடுகின்ற பங்குத் தொகுப்பினை அதனை வைத்திருப்பவர் வாங்கியிருக்கிறார் என்பதற்கான அத்தாட்சியாகமட்டும் பயன் படுகின்ற, பெற்றுக்கொண்டதாக ஒப்புதல் அளிக்கின்ற ஓர் இரசீதினை மட்டுமே பெறுகின்றார். பங்குத்தொகுப்பினை விற்பனை செய்வதற்கு இரசீதினைக் காட்டவேண்டியது முற்றிலும் அவசியமற்றது ஆகையால் கடன்களுக்கு ஒரு பிணையமாக இரசீதின் மீது நம்பிக்கை வைக்கலாகாது. எனவே, பங்குத்தொகுப்பு இரசீதினை வைப்பாகப் பெறுவதன் மூலம் பிணை எதனையும் கோரமுடியாது. ஆகையால், பங்குத்தொகுப்பினை அவருடைய பெயருக்கோ, அவரால் நியமனம் பெற்றவருடைய பெயருக்கோ, வங்கியர் மாற்றிப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். பொறிக்கப்பட்ட பங்குத்தொகுப்புகளாலான தன்னுடைய உடைமைகள் சம்பந்தமாக, வட்டிக்கூப்பன்கள் இணைக்கப்பட்ட, கொணர்பவருக்கான பங்குத்தொகுப்புச் சான்றிதழ்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுப்புச் சான்றிதழ்கள் ஆகியவைகளை, உடையவர் தம்முடைய விருப்புரிமைப் (option) படி பெற்றுக்கொள்ளலாம் என்று இருக்கின்றபொழுது, இத்தகைய தன்விருப்புரிமையை உடையவர் பயன்படுத்துவார் எனில், அது, பொறிக்கப்பட்ட பங்குத் தொகுப்புகளை மாற்றல் செய்வதில் சாதாரணமாகக் கடைப் பிடிக்க வேண்டிய விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதின் மூலமான முறையைவிட, பிணையப்பத்திரத்தை நிறைவான (perfect) ஒன்றாகச் செய்வதற்குக் குறைந்த அளவு இடர்ப்பாட்டினைக்கொண்டுள்ள, மிகவும் சாதகமான ஒரு முறையை அளிக்கின்றது. 1948ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி முதல் ஆங்கில அரசினுடைய பொறிக்கப்பட்ட பங்குத்தொகுப்புகளும் இங்கிலாந்து

வங்கியில் இருந்த இத்தகைய இதரப் பங்குத்தொகுப்புகளும் ஒழிக்கப்பட்டுவிட்டன (abolished); அதிலிருந்து இத்தகைய பங்குத்தொகுப்புகள், பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுப்புகள் எனக் கருதப்படுகின்றன.

பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுப்புகள் மற்றும் பங்குகள் (Registered stocks and shares):

பெரும்பாலான பங்குமாற்று நிலையப் பிணையப் பத்திரங்கள், பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுப்புகள் மற்றும் பங்குகள் என்ற இரண்டாவது வகையைச் சார்ந்தவைகளாகும். அவை இவ்வாறு அழைக்கப்படுவதற்குக் காரணம், அவைகளின்மீது சட்டப்படியான உரிமையைப் பெறுவதற்கு, அவைகளை விடுக்கின்ற நிறுமத்தினுடைய ஏடுகளில் அவைகளின் மாற்றல்களைப் பதிவுசெய்ய வேண்டியது அவசியமாகும். அவைகளை விடுக்கின்ற நிறுவனத்தினுடைய இலச்சினையின் (seal) கீழ் வழங்கப்படும் சான்றிதழ்களால் அவை அத்தாட்சி செய்யப்படுகின்றன (evidenced). அவைகளை விடுக்கின்ற நிறுமங்களின் அமைப்பு முறையேடு (Memorandum), மற்றும் செயல்முறைவிதிகள் (Articles of Association) ஆகியவை, பங்குகளினுடைய மாற்றல்களுக்கான விதிகளைக் கூறுகின்றன. பல நிறுமங்கள் தரப்படுத்தப்பட்ட [(ஒரே மாதிரியான standard)] மாற்றல் படிவங்களை வைத்துக் கொண்டுள்ளன; வேறு சில, தங்களுடைய சிறப்புத்தன்மை கொண்ட (special) மாற்றல் படிவங்களை வைத்திருக்கின்றன; இத்தகைய தறுவாய்களில் இந்தச் சிறப்புப் படிவங்கள் மட்டுமே உபயோகப்படுத்தப்படவேண்டும்.

நியாய உரிமையும் அதன் குறைபாடுகளும் (Equitable Title and Its Drawbacks)

முந்தைய நியாய உரிமை, அல்லது பிந்தைய சட்டப்படியான உரிமையினால் தோற்கப்படக்கூடியவை (Liable to be defeated by Prior Equitable or subsequent Legal Title):

வாடிக்கையாளரிடமிருந்து, வங்கியருக்கு வரவேண்டியுள்ள கடனுக்கு, அல்லது வரவேண்டியதாக ஆகக்கூடிய கடனுக்கு உத்தரவாதமாகப் பிணையப்பத்திரங்கள் வங்கியரிடம் கொடுக்கப்பட்டுள்ளன என்பதற்கான வெளிப்படையான அல்லது உள்ளார்ந்த ஓர் உடன்பாட்டில் வங்கியருடைய வாடிக்கையாளர் அவரோடு ஈடுபடும்பொழுது, தம்மிடம் வைப்புச் செய்யப்படுள்ள பிணையங்களின்மீது வங்கியர் ஒரு நியாய உரிமையைப் (equitable title)

பெறுகிறார். நியாய உரிமையில் உள்ள முக்கியமான குறைபாடு யாதெனில், அது, ஒரு முந்தைய நியாய உரிமை அல்லது பிந்தைய சட்டப்படியான உரிமையால் தோற்கடிக்கப்படலாம். எடுத்துக் காட்டாக, அவளுடைய பெயரில் உரிய முறையில் பதிவு செய்யப் பட்டிருந்த பங்குகளின் மீதான நியாய ஒற்றியின் பேரில் வாடிக்கை யாளர் ஒருவர், ஒரு வங்கியிலிருந்து பணம் கடன் வாங்கினார். பின்னர், அவள் (வாடிக்கையாளர்) பங்குகளைத் தம்முடைய குழந்தைகளுக்காகப் பொறுப்புரிமையார் (trustee) என்னும் முறை யில் வைத்திருந்தாள் என்பதாகக் கண்டறியப்பட்டது. எனவே, வங்கி தன்னுடைய பிணையத்தைச் செயல்படுத்த (enforce) முயன்ற பொழுது அதனுடைய வாடிக்கையாளரின் குழந்தைகள் சார்பாக எழுப்பப்பட்ட கோரூரிமையை (claim) எதிர்த்து வழக் காட வேண்டி வந்தது; குழந்தைகளின் நியாய உரிமை வங்கியினு டைய நியாய உரிமையை விட முந்தியதாக இருந்ததால் குழந்தை களின் கோருரிமை (claim) ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதேபோல வாடிக்கையாளர் ஒருவருக்கு, ஒரு நிறுமத்தினுடைய குறிப்பிட்ட சில பங்குகளின் மீதான நியாய அடைமானத்திற்கு எதிராக வங்கி யர் ஒருவர் கடனளித்திருந்து, அதைத் தொடர்ந்து நிறுமத் தினுடைய ஏடுகளில் யாருடைய பெயரில் அவை மாற்றல் செய் யப்பட்டுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அத்தகைய நபர் ஒருவருக்கு, வாடிக்கையாளர் அவற்றை விற்றார் என்றால், பிணை யப்பத்திரங்களின் மீது வங்கியருக்குள்ள உரிமை அவைகளை வாங்கியவருக்குள்ள சட்டப்படியான உரிமையால் தோற்கடிக்கப் படும். பொதுவாக, பங்குச்சான்றிதழ்கள், மாற்றல் படிவங்களோடு சேர்த்து, அவைளின் மாற்றல்கள் பதிவு செய்யப்படும் பொருட்டு, அவைகளிடம் கொடுக்கப்பட வேண்டுமென நிறுமங்கள் வேண்டு வதால் இடர்வாய்ப்பு குறைக்கப்படுகிறது; ஆனால், மூலச் (original) சான்றிதழ்கள் தொலைக்கப்பட்டு விட்டன என்ற பொய்யான வாக்கு மூலத்தைக் கொடுத்து, சான்றிதழ்களின் இரண்டாவது படிகளைப் (duplicate copies) பெறுவது வாடிக் கையாளருக்கு, சிலவேளைகளில், செய்யமுடிகின்ற காரியமாகும்; மற்றும் அவ்வாறு இரண்டாவது படிகளைப் பெறுவதைத் தொடர்ந்து, அவைகளை விற்று, வாங்கியவரின் பெயரில் அவை களைப் பதிவு செய்து விடுகிறார்; அவற்றை வாங்கியவர் அவை களின் மீது சட்டப்படியான உரிமையைப் பெறுவதால், அவருக்கு எதிராக வங்கியர், எந்தப் பரிகாரத்தையும் (remedy) கொண்டிருக்க முடியாது. இருப்பினும், தொலைந்து போய்விட்டதாகக் கூறப்பட்ட பங்குச்சான்றிதழ்களின் இரண்டாவது படியினைக் கொடுப்பதற்கு முன்னர், தொலைந்துபோனதுபற்றியும், ஒரு குறிப்பிட்ட காலத்திற் குள் எதிர்ப்பு ஏதும் பெறப்பட வில்லையெனில் இரண்டாவது

படிகளை விடுக்கப் போவதாகத்தாங்கள் கொண்டுள்ள எண்ணத்தையும், வங்கிகள் விளம்பரப்படுத்துகின்றன; மற்றும், இரண்டாவது சான்றிதழ்களின் விடுப்பிற்கு விண்ணப்பம் செய்கின்ற பங்குதாரரைத், தங்களுக்குச் சாதகமாக ஓர் ஈட்டுறுதிப் பிணைமுறியில் (Indemnity) கையொப்பமிடுமாறு வற்புறுத்துகின்றன. கடன் வாங்கியவர், வங்கியருக்குத் தெரியாமல் முந்தைய நியாய உரிமை ஒன்றினையோ, பிந்தைய சட்டப்படியான உரிமை ஒன்றினையோ, மூன்றாவது நபர் ஒருவருக்குக் கொடுத்திருக்கின்ற பொழுது, முந்தைய நியாய உரிமையைப் பெற்றுள்ளவர், அல்லது பிந்தைய சட்டப்படியான உரிமையைப் பெற்றுள்ளவர் வங்கியரைக்காட்டிலும் முன்னுரிமையைப் பெறுவார் என்பது இத்தகய நடவடிக்கைகளோடு சேர்ந்துள்ள இடர்வாய்ப்பாகும். பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் பிணையப்பத்திரங்களை, வெறுமனே, ஒரு பொறுப்புரிமையர் என்ற முறையில் வைத்திருந்தால், அதன் பொருள், பொறுப்புரிமையினுடைய பயன்பெறுவோரின் முந்தைய நியாய உரிமை ஏற்கெனவே உள்ளது என்பதாகும்; பயன்பெறுவோர்களின் உரிமைக்குச் சாதகமாக வங்கியரின் உரிமைக்கோரிக்கைகள் தள்ளிப்போடப்படும்.

நியாய உரிமையில் மேற்கொண்டும் உள்ள குறைபாடுகள் (Further Drawbacks of Equitable Title)

மேலும், வங்கி பெற்றுள்ள பிணையப்பத்திரங்கள் பதிவு செய்யப்படாமல் இருக்கும்பொழுது, பதிவு பெற்றுள்ள உரிமையாளருக்கு எதிராக, பங்குத்தொகுப்புகள் மற்றும் பங்குகள் ஆகியவைகளின் மீது, நிறுமம் பற்றுரிமையைக் கொண்டிருக்கலாம், அல்லது, பிணையப்பத்திரங்களைத் தன்னுடைய சொந்தப் பெயரில் அல்லது தன்னுடைய நியமனப் பெற்றவருடைய பெயரில் (பிணையங்களைப்) பதிவு செய்து பெறுவதற்கு நடவடிக்கைகளை வங்கியர் மேற்கொள்வதற்கு முன், நிறுமம் முந்திய நியாய உரிமை பற்றிய அறிவிக்கை ஒன்றினைப் பெற்றிருக்கலாம் என்ற அபாயமும் உள்ளது. இலண்டன் பங்குமாற்று நிலையக் குழு (The committee of the London Stock Exchange), தன்னுடைய பங்குகளை அன்றாடப் பங்குமாற்று நிலையப்பட்டியலில் விலைக் குறிப்பீடு செய்வதற்கு விருப்பமுள்ள ஒரு நிறுமம், இத்தகைய ஒரு பற்றுரிமையைப் பயன்படுத்தக் கூடாது என்று கட்டாயப் படுத்துகிறது. பம்பாய் நாட்டுப்பங்கு மற்றும் பங்கு தொகுப்புத் தரகர்களின் சங்கத்தினுடைய விதிகளின்படி, எந்த நிறுமங்களினுடைய பங்குகள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்டுள்ளனவோ (quoted) அந்த நிறுமங்கள், மாற்றல் செய்பவர் அவைகளுக்குத் தரவேண்டியுள்ள ஏதாவது கடன் அல்லது பொறுப்பு இருப்பதன்

காரணமாக, பங்குகள் பற்றுரிமைக்கு உட்பட்டவை என்னும் அடிப்படையில், மாற்றல் செய்யப்பவதை மறுப்பதற்குத் தங்களிடம் உரிமையைக் கொண்டுள்ளன. பின்வரும் பக்கங்களில் விளக்கிக் கூறப்பட்டுள்ளதுபோல, நிறுமத்திற்கு ஓர் அறிவிக்கையினை அனுப்புவதன்மூலம், இடர்வாய்ப்பினைக், குறிப்பிடு மளவிற்குக் குறைக்கலாமெனினும், இது ஒரு வெற்றுமாற்றலைப் பெற்றுக் கொள்வதிலுள்ள இடர்வாய்ப்பினை அதிகரிக்கிறது, பங்குகளின் மீதான நியாய அடைமானத்தின் மூலம் கடன் ஒன்றினை உத்திர வாதமாக்குவதிலுள்ள மற்றொரு தீமை, பங்குகளைக் கொண்டுள் ளவர் என்பதாக, நியாய அடைமானத்தை வாங்கியவர், பதிவு செய்யப்படாததால், புதிய பங்குகளின், குறிப்பாக, மேலுதிய (bonus) அல்லது சாதாரணப் பங்குகள் ஆகியவைகளின் விடுப்பு சம்பந்தமாகக் கொண்டுள்ள திட்டத்தைப்பற்றிய, அல்லது நிறுமம் செய்யவேண்டுமென்று நினைத்துள்ள, நிறுமத்தினுடைய மூலதன மறு சீரமைப்புத் (reorganisation) திட்டத்தைப் பற்றிய அறிவிக் கையெதனையும் (நிறுமத்திடமிருந்து) பெறுவதில்லை; இவ்வாறு நிறுமத்தினுடைய முன்மொழியப்பட்டுள்ள அல்லது உண்மையான செயல்களின் மூலம், பங்குகளின் விலைகளில், கொண்டுவரப்படக் கூடிய ஏற்றம் அல்லது இறக்கம் ஆகியவைகளைப்பற்றி அவர் ஏதுமறியாமல் இருக்கக் கூடும்.

சட்டபடியான உரிமையிலுள்ள இடர்வாய்ப்புகள் (Risks of Legal Title)

முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ள பங்குகளின் விடயத்தில், அவைகளை வைத்திருப்பவர் என்பதாக, நிறுமத்தினுடைய ஏடு களில் அவரையோ (வங்கியரையோ), அவருடைய நியமனம் பெற்றவரையோ பதிவு செய்து, சட்டப்படியான உரிமையைப் பெறுவது மிகவும் விரும்பத்தக்கதாகும்; ஆனால், இந்த ஏற்பாட் டினை, வாடிக்கையாளர் பொதுவாக ஏற்றுக்கொள்வதில்லை; ஏனென்றால், முதலாவது, அவைகளினுடைய மாற்றல் மற்றும் மறுமாற்றல் (retransfer) சம்பந்தப்பட்ட எல்லாச்செலவுகளையும் அவர் செலுத்தவேண்டியுள்ளது; இரண்டாவது, அவ்வாறு செய்வது அவருடைய நாணயத்தைப் பாதிக்கலாம். மூன்றுவது, எதனுடைய பங்குகள் வைப்புச்செய்யப்பட்டுள்ளனவோ அந்த நிறுமத்தினுடைய ஓர் இயக்குநராக வாடிக்கையாளர் இருக்கலாம்; அவருடைய பெயரிலிருந்து, வங்கியினுடைய அல்லது அதனுடைய நியமனம் பெற்றவருடைய பெயருக்குப் பங்குகள் மாற்றப்படுகின்ற பொழுது, குறிப்பிட்ட ஒரு நிறுமத்தினுடைய இயக்குநர் வைத்திருக்கவேண்டிய குறைந்த எண்ணிக்கையிலான பங்கு களை வைத்திருப்பதற்கு அவர் தவறுகிறார் என்பதன் காரணமாக

இயக்குநர் அவையில் அவர் தம்முடைய பதவியை இழக்கக்கூடும். நான்காவது, சில நிறுமங்களினுடைய செயல்முறைவிதிகள் (Articles of Association) குறிப்பிட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டுமே மாற்றல்கள் செய்யப்படுவதற்கான கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ளன; அதன் விளைவாக, ஒரு வங்கியர், பங்குகளைத் தம்முடைய சொந்தப்பெயருக்கோ, அதனுடைய நியமனம் பெற்றவருக்கோ மாற்றிப்பெறுவதற்கு முடியாமல் இருக்கலாம். மேலும், பங்குமாற்றுப் படிவங்களையும், பங்குச்சான்றிதழ்களையும் சம்மந்தப்பட்ட நிறுமத்திற்கு, தம்முடைய பெயருக்கு அல்லது தம்முடைய நியமனம் பெற்றவருடைய பெயருக்கு, பங்குகளின் சட்டப்படியான மாற்றல் ஒன்றினைச் செய்யும் பொருட்டு வங்கியர் அனுப்பி, அவை உரியமுறையில் மாற்றல் செய்யப்பட்டிருந்து, பின்னர்ச் சிறிது காலம் கழித்து, வங்கியரின் வாடிக்கையாளர் கள்ளக்கையொப்பமிடப்பட்ட மாற்றல்களை அவரிடம் (வங்கியரிடம்) கொடுத்துள்ளார் என்பதாகக் கண்டறியப்படுமானால், நம்புறுதியை (warranty) முறிவு செய்ததற்காக, நிறுமத்திற்கு ஈடுசெய்யும்படி (idemnify) வங்கியர் அழைக்கப்படலாம்.

நியாய அடைமானங்களை ஏற்படுத்துவதற்கான வெவ்வேறு முறைகள் (Different Methods of Effecting Equitable Mortgage)

பதிவுசெய்யப்பட்ட பிணையப்பத்திரங்களின் மீதான ஒரு நியாய உரிமையை, கீழ்க்கண்டவைகளில் ஏதாவது ஒரு வழியில், வங்கியர் பெறுகின்றனர் :

(1) பிணையப்பத்திரங்களை வெறுமனே வைப்புச் செய்வதன் மூலம்

(2) ஒரு நினைவுக்குறிப்புடன் சேர்த்து பிணையப்பத்திரங்களை வைப்புச்செய்வதன் மூலம்

(3) ஒரு நினைவுக்குறிப்பு, சரியாக நிறைவேற்றப்பட்ட வெற்றுமாற்றல்கள் ஆகியவைகளுடன் சேர்த்து பிணையப்பத்திரங்களை வைப்புச்செய்வதன் மூலம்

(4) பிணையப்பத்திரங்களை வைப்புச்செய்து, அவைகளால் உத்தரவாதமளிக்கப்பட்ட கடனைச் செலுத்துவதில் தவறுகின்றபொழுது அவைகளை விற்பதற்கு அவருக்கு அதிகாரமளிக்கின்ற ஒரு சிறப்பு வக்காலத்தால் அதிகாரத்தை (Special Power of Attorny) வங்கியருக்குச் சாதகமாக நிறைவேற்றிக்கொடுப்பதன் மூலம்

(1) **பிணையபத்திரங்களை வெறுமனே வைப்புச் செய்தல்** (Mere Deposit of Securities)

அவைகளின்மீது பிணையத்தை ஏற்படுத்துகின்ற எண்ணத்துடன், பதிவுசெய்யப்பட்ட பிணையப்பத்திரங்களை வெறுமனே வைப்புச் செய்தல், வங்கியருக்கு ஒரு நியாய உரிமையைக் கொடுக்கின்றது. இந்த முறையில் பல இடர்வாய்ப்புகள் உள்ளன. வைப்புச் செய்வதன் நோக்கம் பற்றி எழுத்து மூலமான அத்தாட்சி ஏதுமில்லை. உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள கடனைப் பற்றிய வெளிப்படையான நிபந்தனைகள், வசூலிக்கப்பட வேண்டிய வட்டிவீதம், நிலைநாட்டப்படவேண்டிய எச்சஓரம், பிணையங்களை விற்பதற்கு வங்கியருக்குள்ள அதிகாரம் ஆகியவைகளைப்பற்றி எழுத்துமூலமான அத்தாட்சி ஏதுமில்லை. சிறப்பு உடன்பாடு ஏதாவது இல்லாதவரையில், விற்பதற்கான ஓர் ஆணையைப் பெறுவதற்கு வங்கியர் நீதிமன்றத்தை நாட வேண்டியுள்ளது, எனவே, இந்தமாதிரியான நியாய அடைமானம், வங்கிகளிடத்தில் அவ்வளவாக விரும்பக்கூடிய ஒன்றாக இல்லை.

(2) **நினைவுக் குறிப்புடன் சேர்த்து பிணையபத்திரகளை வைப்புச் செய்தல்** (Deposit of Securities together with Memorandum)

பொதுவாக, பிணையமாக வைப்புச்செய்யப்படுகின்ற பங்குத் தொகுப்புக்கள் மற்றும் பங்குகள் ஆகியவற்றின்மீதான சட்டப்படியான உரிமையைப் பெறமுடியாமல் இருக்கின்றபொழுது, உத்தரவாதம் செய்யப்படவேண்டிய கடன் தாற்காலிகத்தன்மை (temporary nature) கொண்டதாகவும், கடன் வாங்குபவர் முற்றிலும் நம்பகமானவராகவும் இருந்தால், வாடிக்கையாளரிடமிருந்து அல்லது பிணையப்பத்திரங்களை உரிமைக்கொண்டுள்ள ஒரு மூன்றாவது நபரிடமிருந்து, வைப்புசெய்ததற்கான ஒரு நினைவுக்குறிப்புடன் (பிற்சேர்க்கை "ஆ"—படிவம் எண்கள் 25, மற்றும் 25(அ) பார்க்கவும்) சேர்த்து பிணையத்திரங்களை எடுத்துக் கொள்வதன் மூலம் கிடைக்கின்ற ஒரு நியாய அடைமானத்தைப் பெற்றுக்கொள்வதோடு வங்கியர் திருப்திப்பட்டுக் கொள்கின்றனர். நினைவுக்குறிப்பின் முக்கிய நோக்கம், வைப்புச் செய்வதற்கான நோக்கம்பற்றி எழக் கூடிய சர்ச்சைகளுக்கு எதிராக, எவ்வளவுக்கு முழுமையாக முடியுமோ அவ்வளவு வங்கியர்க்குப் பாதுகாப்பு அளிப்பதேயாகும். எடுத்துக்காட்டாக, அதற்கு எதிரான எழுத்து மூலமான அத்தாட்சி ஏதுமில்லாவிடத்து, சிறிதுகாலம் கடந்த பின்னர், வைப்புச் செய்தபொழுது இருந்த ஓர் அதிகபற்றிற்குப் பிணையமாக அவர் பிணையப்பத்திரங்களை வைப்புச் செய்த

தாகவும், வைப்புச் செய்ததற்கு பின்னர் ஏற்படும் கடன்களுக்குப் பிணையமாக வைப்புச்செய்யவில்லையென்றும் ஒரு வாடிக்கையாளர் குற்றஞ்சாட்டலாம். அதன் விளைவாக, பிணையம் தொடர்ந்து இருக்குமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட எச்ச ஓரத்தை நிலைநாட்டுவதற்கு அல்லது கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு வாடிக்கையாளர் தவறுகின்ற பொழுது பங்குகளை விற்றுவிடுவதற்கான உரிமை வங்கியருக்கு அளிக்கப்படுகிறது என்றும் காப்புவாசகங்களை, பொதுவாக, நினைவுக்குறிப்பு கொண்டிருக்கிறது. அரைகுறையாகச் செலுத்தப்பட்டுள்ள பங்குகளின் விடயத்தில், பிணையப்பத்திரங்கள் வைப்புச்செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நிறுமத்தினால் விடுக்கப்படும் அழைப்புகளுக்கு வாடிக்கையாளர் சார்பாகச் செலுத்தப்படும் தொகைக்கு அவருடைய கணக்கினை பற்று வைத்துக் கொள்வதற்கு, வைப்பு நினைவுக்குறிப்பினால், பொதுவாக, வங்கியர் அதிகாரமளிக்கப்படுகிறார், பங்கு தொகுப்புகளும் பங்குகளும் ஒரு மூன்றாவது நபரால் வைப்புச் செய்யப்பட்டிருக்கும் தறுவாய்களில், எடுத்துக்காட்டு — வாடிக்கையாளர் ஒருவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் கடன்களை உத்தரவாதமளிக்கின்ற ஒரு பொறுப்புறுதிகள் (Guarantor) — கால அவகாசம் கொடுப்பது முதலியன சம்பந்தமாக, வங்கியருக்கும், முதன்மைக் கடனாளிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள ஏற்பாடுகளினால், பிணையாளி விடுவிக்கப்படமாட்டார் என நினைவுக்குறிப்பு குறிப்பிடுகின்றது.

(3) வெற்றுமாற்றலுடன் சேர்த்துப் பங்குச் சான்றிதழை வைப்புச் செய்தல் (Deposit of Share Certificate with Blank Transfer)

ஒரு நிறுமத்தினுடைய ஒழுங்குமுறைவிதிகள், உடன்படிக்கைப் பத்திரம் மூலமாகத்தான் மாற்றல்கள் செய்யப்படவேண்டுமெனக் கோரினாலன்றி, கையொப்பமிடப்பட்ட பிறகு, எந்த நேரத்திலும், மாற்றல்கள் வங்கியினால் முடிக்கப்பட்டு முத்திரையிடப் படலாம். ஆனால், இத்தகைய ஒரு தறுவாயில் முந்தைய நியாய உரிமை ஒன்றினைப்பற்றிய அறிவிக்கையினைப் பெறக்கூடிய இடர்வாய்ப்புக்கு ஆளானவராக அவர் (வங்கியர்) இருக்கிறார். பிணையமாகப் பெறப்படும் பிணையப்பத்திரங்களின்மீது, நியாய உரிமையை வங்கியர் பெறக்கூடிய மற்றொரு வழி, மாற்றிக் கொடுப்பவரால் ஒப்பமிடப்பட்ட, ஆனால் மாற்றிப்பெறுபவருடைய பெயர், மற்றும் அவைகள் வெற்றுப்பத்திரங்களாகக் கையொப்பமிடப்பட்ட தேதி ஆகியவைகளுக்கு வெற்றிடத்தை விடப்பட்டுள்ள மாற்றல் படிவங்களோடு சேர்த்து, பிணையப்பத்திரங்களை வைப்புச் செய்யுமாறு,

கடன்வாங்கியவரைக், கோருவதாகும். இருப்பினும், பத்திரத்தில் தேதி நிரப்பப்பட்டிருந்தால், மாற்றல் படிவத்தில் காணப்படும் தேதியிலிருந்து ஆறுமாதங்களுக்குள் ஆவணங்கள் பதிவு செய்யப்படுவதற்கு இடப்படவேண்டும். அப்படியில்லையென்றால், சில வேளைகளில் சம்பந்தப்பட்ட நிறுமங்கள், இடர்ப்பாட்டில் கொண்டு போய்விடுகின்றவகையில் பதிவு செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு ஒரு விளக்கத்தைக் கோருகின்றன. ஆனால், வெற்று மாற்றலின் முக்கியநோக்கம் முத்திரைவரியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே என்பதால், பொதுவாக, தேதி விடப்பட்டிருக்கின்றது. அவர், தம்மை, மாற்றிப்பெற்றவராகப் (transferee) பதிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் வரையிலும், அல்லது அவ்வாறு எடுத்துக்கொண்டாலன்றி, வெற்று மாற்றல் ஒன்று, வங்கியருக்கு, ஒரு நியாய உரிமையைத்தான் கொடுக்கும். அதேபோல, பொறுப்புரிமைச் சொத்துகள் (trust properties) என்று மாறக்கூடிய சில பிணையப்பத்திரங்கள்மீது வங்கியர் நியாய உரிமையைப் பெற்றிருந்தால், யாருடைய நன்மைக்காகப் பொறுப்புரிமை நிர்வகிக்கப்படுகிறதோ அந்த நபருடைய உரிமைக்கு எதிராக வங்கியரின் உரிமை தோல்வியடையும். பொதுவாக, பங்குமாற்று நிலைய, நடவடிக்கைகளின்மீது அது ஒரு நல்ல விளைவினை ஏற்படுத்தும் என்னும் நோக்கத்தோடு, மோரிசின் பங்கு மாற்று நிலைய விசாரணைக்குழு (1936) (The Morison Stock Exchange Euquiry Committee) [1936]) வெற்று மாற்றல்களை மோசமான சேர்ப்புச் செய்தல் என்பதாக ஆக்கி ஒழித்துவிடுமாறு பரிந்துரைத்தது. இருந்தபோதிலும் அங்கீகரிக்கப்பட்ட பங்குத்தரகர்களால் வங்கியரிடம் அடகு வைக்கப்படுகின்ற பிணையப்பத்திரங்களுக்கு முத்திரைவரி செலுத்துவதில் சில சலுகைகளை அளிக்கவேண்டுமென்று குழு நினைத்தது. கோர்வாலா குழுவினுடைய (1951) உறுப்பினர்களில் (The members of the Gorwala Committee) [1951]) சிலர் தற்போதைய நடைமுறை தொடர்ந்து இருக்கவேண்டுமென்று கருத்துத் தெரிவித்தபொழுது மற்றவர்கள், பங்குமாற்று நிலையங்களில் செயல்முறை விதிகளில் (by-laws) தகுந்த ஒரு காப்புவாசகத்தை ஏற்படுத்தி அல்லது சட்டமன்றத்தின் இசைவின்கீழ் வெற்றுமாற்றல்களின் ஆயுட்காலத்தை ஆறுமாதங்களுக்கு வரையறை செய்யும்படி கருத்துத் தெரிவித்துத் தங்களின் கருத்துகளில் வேறுபட்டிருந்தார்கள். இறுதியாக, வெற்றுமாற்றல்களை ஒழுங்குபடுத்துவதற்கு, அல்லது தடைசெய்வதற்குத் தேவையான விதிமுறைகளை ஏற்படுத்திக்கொள்வதற்குப் பங்குமாற்று நிலையங்கள் அதிகாரமளிக்கப்பட்டன. 1956ஆம் ஆண்டின், பிணையப்பத்திரங்களின்

ஒப்பந்த (ஒழுங்கு படுத்துதல்) சட்டம், 27ஆவது பிரிவின் காப்பு வாசகங்களும் கூட (The Provisions of Section-27 of the Securities, Contracts [Regulation] Act, 1956) ஒரு நிறுமத்தின் பதிவு ஏடுகளில் யாருடைய பெயர் உள்ளதோ அந்த நபருக்குப் பங்காதாயத்தை வைத்துக்கொள்வதற்கான உரிமையை அளித்து, அதன் மூலம், வெற்றுமாற்றல்கள் பயன்படுத்தப்படுவதைக் குறிப்பிடுமளவிற்குக் கட்டுப்படுத்துவதற்கு அது உபயோகமாக இருந்தது என்பதனை நிரூபித்துள்ளது. நிறுமத்தின் ஏடுகள் மூடப்படுவதற்கு முன் பங்குகள் மாற்றப்பட்டுப் பெறுதல்வேண்டும் என்பதை இது மிகவும் அவசியமென்று ஆக்கியுள்ளது. அரையாண்டுக்கொருமுறை பங்காதாயத்தை நிறுமங்கள் அறிவிக்கின்ற தறுவாயில், வெற்றுமாற்றல்கள் ஆறுமாத கால அளவைத்தாண்டியும் போவதற்கு அனுமதிக்கப்படமுடியாது. சந்தர்ப்பச் சூழ்நிலைகள் அனுமதிக்கின்றபொழுதெல்லாம், வெற்றுமாற்றல்களின்கீழ் உடைமை கொள்ளப்பட்டுள்ள பங்குகளை, தங்களுடைய பெயரில், அல்லது தங்களுடைய நியமனம் பெற்றவர்களின் பெயர்களில் மாற்றல் செய்யப்பட்டுப் பெறுவது வங்கியர்களுக்கு வழக்கமாகும் என்பது இங்குக் குறிப்பிடப்படவேண்டியதாகும். பங்குகள் விடுவிக்கப்பட்டவுடன், அவை தொடர்ந்து கைமாறிக்கொண்டேயிருக்கின்றன; அவைகளை வங்கிகளின் பெயரில் மாற்றல் செய்து கொடுப்பதற்கான மனப்பாங்கு குறைந்த அளவே உள்ளது; ஏனென்றால், பிணையப்பத்திரங்கள் ஒப்பந்தச் (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் காப்புவாசகங்கள் இருந்தபோதிலும் கூட,, (பங்காதாயத்திற்கான) கோரிக்கைகள் ஒரு சக வங்கியர் மூலமாகப் பெறப்பட்டால், வங்கிகள், பங்காதாயங்களைக் கோருபவர்களுக்கு அனுப்பிக்கொடுக்கின்றன. அவைகளினுடைய சொந்த நாணயம் மற்றும் நற்பெயர் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு பார்த்தாலும், அவை தப்பித்துக்கொள்வதற்கு வழியெதனையும் அனுமதிக்காத இந்தப் பழக்கம் வெற்றுமாற்றல்கள் உபயோகத்தில் இருப்பதை ஊக்குவிக்கின்றது. ஆனால், எது எப்படியிருப்பினும், பங்குகளின் மாற்றலை மூன்றுமாத காலத்திற்குள், எத்தறுவாயிலும் ஆறுமாத காலத்திற்கு, அதிகப்படாத காலத்திற்குள் செய்யுமாறு வற்புறுத்துவது, வங்கியர் ஒருவர் எப்போதும் செய்யவேண்டியது மதியுள்ள செயலாகும்.

(4) வக்காலத்தார் உரிமை ஒன்றுடன் சேர்த்து வைப்புச் செய்தல் (Deposit with a power of Attorney)

சில வேளைகளில், வங்கியர்கள், பிணையப்பத்திரங்களை வைப்புச் செய்யுமாறும், தங்களுக்கு அல்லது தங்களுடைய நியமனம் பெற்றவர்களுக்கு, தங்களின் வாடிக்கையாளர்கள்

சார்பாகப் பங்குத்தொகுப்புகள் மற்றும் பங்குகள் ஆசியவைகளின், நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குச் சிறப்பு வக்காலத்தார் அதிகாரங்களை (Special Powers of Attorney) அளிக்குமாறும், கடன்வாங்குபவர்களைக் கேட்கிறார்கள். வக்காலத்தார் அதிகாரத்தின் காப்பு வாசகங்கள், பொதுவாக, ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ள எல்லா இடர்வாய்ப்புகளுக்கும் எதிராக வங்கியரைப் பாதுகாக்கின்றன ; ஆனால், இன்னும் அவர் (வங்கியர்) தம்முடைய முதல்வருக்கு (கடன்வாங்யவருக்கு), முதல்வர் அளித்துள்ள சில அதிகாரங்களைக் கொண்டுள்ள ஒரு முகவராகவே இருப்பார்.

நியாய அடைமானங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகள்

(Precautions In Case of Equitable Mortgage)

பங்குமாற்று நிலையப் பிணையப்பத்திரங்களின் மீதான நியாய அடைமானத்திற்கு எதிராகக் கடனளிப்பதற்கு ஒப்புக்கொள்ளுகின்றபொழுது, கீழ்க்காணும் முன்னெச்சரிக்கைகளை, வங்கியர், கடைப்பிடிக்க வேண்டும் :

1. விதிவிலக்காக (Exceptional) உள்ள சூழ்நிலைகளில் தவிர, கடன் வாங்குபவரை அல்லாமல் வேறு நபர்களின் பெயர்களில் உள்ள பங்குகளை தம்முடைய கடன்களுக்குப் பிணையமாக வங்கியர் ஏற்றுக்கொள்ளக்கூடாது. இத்தகைய ஒரு விதிவிலக்கான நிலை தோன்றுமானால், வங்கியினுடைய ஓர் அதிகாரியின், அல்லது வங்கிக்கு நன்கு தெரிந்த வேறொரு நபரின் முன்னிலையில் மாற்றல்படிவத்தைச் கையொப்பமிட்டுப் பெறுவது அவசியமாகும். யாருக்குச் சாதகமாக, அடைமானம் வைக்கப்படஉள்ள பங்குகளின் மீதான தம்முடைய உரிமையைப் பங்குதாரர் விட்டுக்கொடுக்கின்றாரோ, அந்தக் கடன்பெறும் நபரால் பங்குகள் வங்கியரிடம் அடகு வைக்கப்படுவதற்கான உரிமையளிக்கப் பட்டுள்ளது என்று கூறுகின்ற ஒரு கடிதத்தைக் கொடுக்குமாறு, பங்குகளின் பதிவுபெற்ற உரிமையாளர் கேட்கப்படவேண்டும். அடிக்கொருதரம், பங்குகள் பெருந்தொகுதிகளாக வைப்புச் செய்யப்படுகின்றன. பங்குகள், விற்பனை செய்வதற்குத் தகுந்த தொகுதிகளாக இருக்கின்றனவா என்றும், தேவையானபொழுது வசதியாகவும் உடனடியாவும் விற்பனை செய்வதற்கு வசதியாக, கையொப்பமிடப்பட்ட வெற்று மாற்றல் உடன்படிக்கைப் பத்திரங்கள் போதுமான எண்ணிக்கையில் உள்ளனவா என்றும் பார்ப்பதற்கு வங்கிகள் சிறப்புக்கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்,

மேலும், பங்குகள் அடகுவைப்பவரால் வாங்கப்பட்டுள்ளன என்பதற்கு அத்தாட்சியாக வங்கியரின் கொள்முதல் இரசீது (Banker's Bill of Purchases) எப்போதும் பெறப்படவேண்டும்.

2. நிறுமத்திற்கு அறிவிக்கை (Notice to the Company): எந்த நிறுமத்தினுடைய பிணையப்பத்திரங்கள் அவரிடம் வைப்புச் செய்யப்பட்டுள்ளனவோ அந்த நிறுமத்தினுடைய செயலாளருக்கு, அவைகளின்மீது தாம் ஓர் அடைமானத்தைக் கொண்டிருப்பதாக ஓர் அறிவிக்கையினை வங்கியர் அனுப்பவேண்டும். (பொருத்த மான அறிவிக்கைப் படிவத்திற்கு பிற்சேர்க்கை-ஆ, படிவம் எண்.25 (இ) பார்க்கவும்) முதலாவது, நிறுமத்திற்கனுப்பப்படும் இத்தகைய ஓர் அறிவிக்கை, பிணையப்பத்திரங்களின் மீது வேறு யாராவது ஒருவர் முந்தைய பிணை எதையேனும் கொண்டுள்ளாரா என்பதுபற்றி வங்கியருக்குத் தெரியப்படுத்துவதற்கு நிறுமத்திற்கு உதவும். இரண்டாவது, இத்தகைய ஓர் அறிவிக்கை பங்கு நருக்கு நிறுமத்தால் கொடுக்கப்படும் ஏதாவது புதிய கடனைக் காட்டிலும், வங்கியருக்கு, முன்னுரிமையைப் பெற்றுக்கொடுக்கும். மூன்றாவது, பங்கு மறறும் பங்குத்தொகுப்புச் சான்றிதழ்களின் இரண்டாவது படி (duplicate) விடுக்கப்படுவதை அது தடுக்கும்; இவ்வாறு, மற்றோரு நபருக்கு, அடுத்து ஒரு சட்டப்படியான உரிமைக் கொடுப்பதிலிருந்து கடன்பெற்றவர் தடுக்கப்படுவார். அது, ஒரு புறம், கடன் பெற்றவர் பங்குகளின் விடயத்தில் செய் கின்ற மோசடி நடவடிக்கைகளை வெளியில் கொண்டுவந்து விடும்; மற்றொரு புறம், ஒரு கடனுக்காக நிறுமம் கோரக்கூடிய பற்றுரிமை, அல்லது அறிவிக்கையினைப் பெற்றதற்குப் பின்னர் எழுகின்ற பங்குதாரரின் ஒரு பொறுப்பு, ஆகியவைகளுக்கு மேலான உரிமையைப் பெறுவதற்கு வங்கியருக்கு உதவுகிறது. பற்றுரிமை பற்றிய அறிவிக்கை, பொதுவாக, நிறுமம் அறிவிக்கையினைப் பெற்றுக் கொண்டதை மேலெழுதல் செய்வதன் மூலம் ஒப்புதல் செய்து (acknowledge), இரண்டாவது படியைத் திரும்ப அனுப்ப வேண்டுமென்றும், குறிப்பிட்ட பங்குகளின்மீது முந்தைய பிணை ஏதாவது இருப்பின் அதனை வங்கியருக்குத் தெரிவிக்கவேண்டு மென்றும் ஒரு வேண்டுகோளுடன் சேர்த்து, இரண்டு படிகளில், பதிவுத்தபாலில் நிறுமத்திற்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

'டிஸ்ட்ரிங்காஸ்' உத்தரவுக்குப் பதிலான அறிவிக்கை (Notice in Lien of Distringas):- இங்கிலாந்தில், வங்கியர் ஒருவர், பங்குத் தொகுப்புகள் மற்றும் பங்குகள் மீதான தம்முடைய நியாய உரிமையை, ஓரளவிற்கு, "டிஸ்ட்ரிங்காஸ்" உத்தரவுக்குப்பதிலான ஓர் அறிவிக்கையை நிறுமத்திற்கு அனுப்பிவைப்பதன் மூலம் பாதுகாத்துக் கொள்ளலாம். "டிஸ்ட்ரிங்காஸ்" என்பது பொதுச்

சட்டத்திலும் (common Law) நியாயச் சட்டத்திலும் (Equity) அநேக உபயோகங்களைக் கொண்டுள்ள ஒரு வகையான நீதிப்பேராணை (writ) ஆகும். இந்தப் பேராணை, பொது நிறுமம் ஒன்றில் பங்குத் தொகுப்புகளை மாற்றல் செய்யப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக அனுப்பப் பட்டு வந்தது. இந்தப்பேராணை அனுப்பப்பட்டபிறகு, சம்பந்தப் பட்ட நபருக்கு அவருடைய கோருரிமையை (claim) வற்புறுத்திக் கூறுவதற்கு வாய்ப்பு அளிக்காமல், நிறுமம் (பங்குகளை) மாற்றல் செய்வதில் தொடர்ந்து செல்லக்கூடாது. தலைமை நீதிமன்றத்தின் (Supreme Court), 1883ஆம் ஆண்டின் (ஆணை-46, விதி-2) விதிகளின்படி இந்த முறை ஒழிக்கப்பட்டது; விதி 4-ன் படி, அறிவிக்கை ஒன்று அனுப்பப்படுவதற்குப் பதிலாக மற்றொரு முறை புகுத்தப்பட்டது. இந்த முறையின் கீழ், அறிவிக்கையினை அனுப்ப விரும்புகின்ற ஒருவர், அறிவிக்கையினை குறிப்பிடப்பட்ட படிவத்தில் ஓர் ஆணைஉறுதிப்பத்திரத்துடன் (affidavit) சேர்த்து மைய அலுவலகத்தில் (central office) அல்லது ஏதாவது மாவட்ட பதிவு அலுவலகத்தில் (District Registry) பதிவு செய்து, ஆணை உறுதிப்பத்திரத்தினுடைய அலுவலகப்படி ஒன்றினையும், அலுவல கத்தால், உண்மையானது என்று அத்தாட்சி செய்யப்பட்ட அறிவிக்கையின் இரண்டாவது படி ஒன்றினையும் பெற்றுக்கொள்ள வேண்டும். அறிவிக்கையின் இரண்டாவது படி, உடனே, நிறுமத் திற்கு அனுப்பிவைக்கப்படுகிறது. அறிவிக்கையின் விளைவு, பதிவுசெய்யப்பட்ட பங்குநர் பங்குகளின் மாற்றல் ஒன்றிற்கு விண்ணப்பம் செய்திருத்தால், மாற்றலுக்கு இசைவாணை (Sanction) அளிப்பதற்குக் குறைந்தது எட்டு நாள்களுக்கு முன்னர், வங்கியருக்குத் தகவல் கூறவேண்டியது நிறுமத்தினுடைய கடமை என்று ஆகின்றது. இருப்பினும், எட்டு நாள்கள் கழிந்த பின்னர், நியாயக்கோரிக்கையை விடுத்தவர், பங்குகள் மாற்றல் செய்யப்படுவதை, அல்லது அவைகளின்மீது பங்காதாயங்கள் கொடுக்கப்படுவதைத் தடுக்கும்பொருட்டு நீதிமன்றத்திலிருந்து ஓர் ஆணையைப் பெறுவதற்காக எந்த நடவடிக்கையையும் எடுக்கத்தவறினால், நிறுமம் மாற்றலைப் பதிவு செய்யலாம் அல்லது பங்காதாயத்தைச் செலுத்தலாம். ஒரு கடனுக்கு அல்லது மேல் வரைப்பற்றிற்கு எதிராக (பிணையமாக) அவரால் செய்யப்பட்டுள்ள பங்குத்தொகுப்புகளை அல்லது பங்குகளைமாற்றல் செய்வதற்கு அவர் முயற்சி செய்யும் காலத்து, இத்தகைய முன்னெச்சரிக்கை, வாடிக்கையாளரின்மீது சிறந்த ஒரு தடங்கலாகச்செயல்படுகிறது; ஏனென்றால், எந்த நிறுமத்தினுடைய பங்குத் தொகுப்புகளையும் பங்குகளையும் வங்கியர் பிணையமாகக் கொண்டுள்ளாரோ அந்த அந்த நிறுமத்தினிடமிருந்து அறிவிக்கையினைப் பெற்றுக்கொண்ட

எட்டு நாள்களுக்குள் மாற்றலுக்கு இசைவாணையை நிறுமம் கொடுப்பதிலிருந்து கட்டுப்படுத்தக்கூடிய நீதிமன்றத்தினுடைய ஆணையைப் பெறுவதற்கு வங்கியர் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வார்.

3. **பங்குச் சான்றிதழ்களைத் தம்மைவிட்டுப்போகவிடக் கூடாது** (Not to part with share certificates): எக்காரணத்தைக் கொண்டும், பங்கு அல்லது பங்குத்தொகுப்புச் சான்றிதழ்களை, வங்கியர், தம்மைவிட்டுப் போகவிடக்கூடாது; அவ்வாறில்லை யெனில், அவருடைய வாடிக்கையாலர், வேறொரு நபருக்குச் சட்டப்படியான உரிமையைக் கொடுத்து வங்கியருடைய நிலை யைப் பாதிக்கும்படி செய்யலாம்.

4. **நல்லெண்ணம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்** (Good Faith to be observed): பிணையப்பத்திரங்கள் நல்லெண்ணத் துடன் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்பது மிகவும் இன்றிய மையாததாகும்; இதன் பொருள், பிணையப்பத்திரங்களின் மீதான மெய்யான உரிமை பற்றி, சாதாரண புத்திக்கூர்மையுள்ள ஒருவர் ஐயப்படுவதற்கு இடமளிக்கக்கூடிய, அவைகளோடு (பங்கு களோடு) தொடர்பான சந்தர்ப்பச் சூழ்நிலைகள், வங்கியரின் அறிவுக்கு எட்டியவரை அங்கு இருந்திருக்கக்கூடாது என்பதாகும்.

5. **விற்பதற்கான உரிமை** (Power to Sell): ஒரு பொது விதிமுறையாக, அவைகளை விற்பனை செய்வதற்கான அதிகாரத்தை, வங்கியருக்குக் கொடுக்கக்கூடிய ஒரு சரத்தினைப் பொதுவாகக் கொண்டுள்ள வாடிக்கையாளரால் கையொப்பமிடப் பட்ட, ஒரு நினைவுக் குறிப்பினை (Memorandum) வங்கியர் பெற்றுக் கொள்கிறார். இதைத் தவிர குறிப்பிட்ட நடவடிக்கை, அடைமானம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளபொழுது, பிணையப்பத் திரங்களை வெறுமனே வைப்புச் செய்தல், சிலவேளைகளில், வாடிக்கையாளர் செலுத்தத் தவறும் தறுவாயில், விற்பனை செய்வ தற்கான உரிமை உள்ளார்ந்த (implied) ஒன்றாக இருப்பதைக் குறிக்குன்றது. வங்கியரின் கடனைச்செலுத்துவதற்கான முடிவான (definite) தேதி தீர்மானிக்கப்படாமல் இருக்கின்றபொபொழுது, கடன் திருப்பிச் செலுந்தப்படுவதை நியாயமான வருங்காலத்திய ஒரு தேதியில் கோரவேண்டியது வங்கியருக்கு அவசியமானதாகும். இத்தகைய தறுவாய்களில் நியாயமானகாலமென்பது, பெரும்பா லும், குறிப்பிட்ட தறுவாயின் சந்தர்ப்பச்சூழ்நிலைகளைப் பொறுத் திருக்கும், ஆனால்; ஒரு மாத காலத்திற்கான அறிவிக்கையொன்று போதுமானதெனக் கருதப்படுகிறது. வேறுவகையாகப்பார்த்தால் அவ்வாறு செய்வது அவசியமற்றது என்று கருதப்படும் பொழுது

கூட, விற்பனை செய்வதற்கான தம்முடைய உரிமையைப் பயன்படுத்துவதற்குத் தாம் கொண்டுள்ள எண்ணத்தைப்பற்றிய அறிவிக்கையினை வங்கியர் கொடுக்கவேண்டும்.

பங்காதாய உரிமைக் கட்டளை (Dividend Mandate):

கடன் வாங்கியவருடைய பெயரில் அல்லது மூன்றாவது நபர்களின் பெயரில் இருக்கின்ற பங்குகளின் மீதான நியாய அடைமானத்திற்கு எதிராகக் கடன் கொடுக்கின்ற வங்கியர் ஒருவர், தொடர்புடைய நிறுமத்திற்கு எழுதப்பட்ட, வங்கிக்கு பங்காதாயத்தைக் கொடுத்துவிடும்படி கூறுகின்ற உரிமைக்கட்டளை ஒன்றினைப் பெறுவது எப்போதும் விரும்பத்தக்கதாகும். இது, பிணையமாகக் கொள்ளப்பட்டுள்ள பங்குகளின் மீதான பங்காதாயத்தை வசூல் செய்து, வரப்பெற்றவைகளைக் கடன் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு வசதியளிக்கின்றது. குறிப்பாக, வட்டி முதலிய வற்றைக், கடன் வாங்கியவா செலுத்தமுடியாமல் இருக்கின்ற பொழுது இது மிகவும் உதவியாக உள்ளது. இப்படிப்பட்ட(வட்டி) தொகைகள், மற்றும் அசல்தொகையின் ஒரு பகுதியும்கூடப் பங்காதாயமாக வரப்பெறும் வரவுகளில் இருந்து சரிக்கட்டப்படலாம்.

தனி நிறுமங்களின் பங்குகள் (Shares of Private Companies):

தனி நிறுமங்களின் பங்குகள், மிகவும் அரிதாகத்தான், கடனளிக்கும் வங்கியரின் ஆதரவைப் பெறுகின்றன. இதற்குக் காரணம், தனி நிறுமங்கள் தங்களுடைய இருப்புநிலைக் குறிப்புகளை வெளியிடுவதற்குக் கடமைப்பட்டன இல்லையாதலால், அவைகளின் நிதிநிலைமையைப்பற்றிச் சரியான கருத்தினைக் கொள்வது வங்கியருக்குக் கடினமானது மட்டுமல்லாமல், அநேகமாகச் செய்யமுடியாத ஒன்றும் ஆகும். இப்பொழுது, 1956-ஆம் ஆண்டில் நிறுமங்களின் சட்டம், பிரிவு–220 (1) (ஆ)-ன் படி தனி நிறுமங்களின் கணக்குகளும் இருப்புநிலைக் குறிப்புகளும் பட்டயக் கணக்கர்களால் (Chartered Accountants) தணிக்கை செய்யப்பட்டுச் சான்றிதழ் அளிக்கப்படவேண்டும்; மற்றும், நிறுமத்தின் தணிக்கையாளர்களால் (Auditor) உரியமுறையில் சான்றளிக்கப்பட்ட இருப்புநிலைக்குறிப்பின் உண்மை நகல்கள் (true copies) மூன்றும், தணிக்கையாளரின் அறிக்கையும் நிறுமங்களின் பதிவாளரிடம் பதிவு செய்யப்படவேண்டும். ஒரு தனி நிறுமத்திற்கான விளக்கத்திலேயே (definition), பங்குகளின் மாற்றல்தன்மையின்மீது கட்டுபாடு இருப்பது உள்ளார்ந்த ஒன்றாக இருப்பதால், தனி நிறுமம் ஒன்றின் பங்குகளை எளிதில் வாங்கவோ விற்கவோ

முடியாது. ஆகையால், தனி நிறுமம் ஒன்றின் பங்குகளின் மதிப்பினை மதிப்பீடு செய்வது மிகவும் கடினமானதாகும். இத்தகைய பங்குகள் மிகவும் அரிதாக வாங்கவும் விற்கவும்படு வதால், அவைகளுக் கெதிராகக் கடன் வழங்கும் வங்கியர் ஒருவர் அவைகளின் தோராயமான சந்தை மதிப்பைப் பற்றிய எந்த ஒரு நம்பகமான மதிப்பீட்டினையும் கொள்ளமுடியாது. மேலும், ஒரு கடனுக்குப் பிணையமாகத் தனி நிறுமம் ஒன்றின் பங்குகளை ஏற்றுக்கொள்ளும்பொழுது, வங்கியருக்கு அல்லது அவருடைய நியமனம் பெற்றவருக்கு அவை மாற்றிக்கொடுக்கப் படுவது நிறுமத்தினுடைய இயக்குநர்களால் மறுக்கப்படமாட்டாது என்று பார்த்துக் கொள்வதற்குக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இறுதியாக, இத்தகைய பங்குகள் எளிதில் சந்தையிலிடப்படமுடியாதவை (marketable); அவைகளை விற்பனை செய்வதற்கு அவர் விரும்புகின்ற தறுவாயில் அவ்வாறு செய்வது கடினமானது என்பதை வங்கியர் கண்டறிவார். இருந்த போதிலும், வரையறுக்கப்பட்ட தனி நிறுமங்களின் பங்குகளைப் பிணையமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதை, சந்தர்ப்பச்சூழ் நிலைகள், அவசியமானதென ஆக்குகின்றபொழுது அவைகளின் மதிப்பினை அளவிடுவதற்குள்ள சிறந்த வழிகளில் ஒன்று, அவைகளின் நடப்பு மதிப்பினைப்பற்றிய கருத்தினைச் சிறிதளவேனும் கூறுவதற்கு முடிந்த நிலையில் இருக்கக்கூடிய நிறுமச் செயலாளரின் உதவியை நாடுவதாகும். இறுதியாகப் பங்குகள் எந்த விலையில் கைமாறின என்பது பயன் தரக்கூடிய ஒரு வழிக்காட்டியாக இருக்கலாம்; இத்தகவலை, செயலாளர் அல்லது வேறொரு பொறுப்புவாய்ந்த அதிகாரியிட மிருந்து பெற்றுக்கொள்ளலாம். மற்றொரு மாற்றுவழி, நிறுமங் களின் பதிவாளரிடம் அப்போது கிடைப்பவைகளாக உள்ள இருப்புநிலைக் குறிப்புகளைப் பார்வையிடுவதன் மூலம் பங்கு களின் நியாயமான மதிப்பினை அளவிடுவதாகும். எந்தச் சந்தர்ப் பத்திலும், போதுமான அளவு அதிக எச்ச ஒரம் வைத்திருக்கப்பட வேண்டும். மேலும், பங்குகளின்மீது வங்கிகொண்டுள்ள கோரு ரிமைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பது உறுதிசெய்யப்பட வேண்டும்.

பங்குகள் ஒதுக்கீடுக் கடிதங்களுக்கு எதிராகக் கடன்கள்

(Advances Agains Letters of Allotment of Shares)

பங்கு ஒதுக்கீட்டுக் கடிதங்களுக்கு எதிராகக் கடன்கள் கோரி, வங்கிகள், அடிக்கடி அணுகப்படுகின்றன. இந்தக் கடிதங்கள்,

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தாரருக்கு, நிறுமத்தின் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பங்குகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று நிறுமத்திலிருந்து அனுப்பப்படும் அறிவிக்கைகளாக உள்ளன; இறுதியில் இவை பங்குச் சான்றிதழ்களுக்குப் பதிலாக மாற்றிக் கொள்ளப்படவேண்டியவைகளாகும். சாதாரணமாக, ஒதுக்கீட்டுக் கடிதம் விடுவிக்கப்படுவதற்கும், அது தொடர்பான பங்குச் சான்றிதழ்கள் விடுக்கப்படுவதற்குமிடையே கால தாமதம் இருப்பதால், இடைப்பட்ட காலத்தில், (பங்கு) ஒதுக்கீடு பெற்றவர்கள் இந்தக் கடிதங்களுக்கு எதிராகக் கடனுதவி கோருகிறார்கள். நடைமுறையில் எல்லாநோக்கங்களுக்கும், இத்தகைய கடன்கள் பங்குகளுக்கு எதிரான கடன்களாகக் கருதப்பட்டு, வழக்கமான முன்னெச்சரிக்கைகளும்எடுக்கப்படவேண்டும். இருப்பினும், குறிப்பிட்ட அதிகப்படியான சில முன்எச்சரிக்கைகளின்மீதும் கவனம் செலுத்தப்படவேண்டும். முதலாவது, ஒதுக்கீட்டுக் கடிதம் தொடர்பாக இன்னும் கொடுக்கப்படாமல் உள்ள பொறுப்பின் அளவு கண்டறியப்படவேண்டும். இது, ஒதுக்கீட்டுக் கடிதம் கொடுக்கப்பட்ட தேதி வரையிலும் செலுத்தப்பட்டுள்ள தொகையினை அறிந்து உறுதிசெய்து கொள்வதன்மூலம் செய்யப்படலாம்; செலுத்தப்படாமல் உள்ள பாக்கித்தொகை அந்தப் பங்குகளின் மீதான அழைக்கப்படாத பொறுப்பாகும். அந்தப் பங்குகள் தொடர்பாக, நிறுமத்தால் விடுக்கப்படும் அடுத்த ஏதாவது அழைப்பிற்கு அவருடைய சார்பாகப் பணம் செலுத்துவதற்கும் அதனை அவருடைய கணக்கில் பற்றுவைத்துக் கொள்வதற்கும் ஓர் அதிகாரத்தைக் கடன்வாங்கியவரிடமிருந்து பெற்றுக்கொள்வது எப்போதும் நல்லதாகும். இரண்டாவது, கூடியமட்டிலும், கடிதத்தோடு இணைக்கப்பட்ட அல்லது அதனுடைய ஒரு பகுதியாகவுள்ள, உரிமை விட்டுக்கொடுப்புப் படிவம் (Form of Renunciation) கையொப்பமிடப்பட்டுப் பெறவேண்டும்; அவ்வாறு செய்தால் தேவையானபோது பங்குகளை விற்பனை செய்து கொள்ளலாம், அல்லது வங்கியின் பெயரில் மாற்றல் செய்துகொள்ளலாம். உரிமை விட்டுக்கொடுப்புப் படிவத்தைக் கையொப்பமிடப்பட்டுப் பெறுவது இயலாத ஒன்றாக இருக்கின்ற பொழுது, விற்பனை செய்பவர் என்ற முறையில், கடன்வாங்குபவரால் உரியமுறையில் கையொப்பமிடப்பட்ட வெற்று மாற்றல் பத்திரங்கள் பெறப்படவேண்டும்; அவ்வாறு செய்வதன் மூலம், முடிவாகப்பங்குப் பத்திரங்கள் கடன் வாங்கியவரின் பெயரில் விடுக்கப்பட்டு ஒதுக்கீட்டுக்கடிதத்திற்கு மாற்றிப்பெறப்படுகின்ற பொழுது, வங்கி அவைகளை, ஒன்று, நியாய அடைமானத்தின்கீழ் உடமைகொள்ளலால், அல்லது மாற்றல் பத்திரத்தை நிரப்பிய பிறகு, அதனைச்

சம்பத்தப்பட்ட பங்குச்சான்றுச் சீட்டுகளுடன் சேர்த்து நிறுமத்திற்கு அனுப்பிப் பங்குகளைத் தன்னுடைய சொந்தப் பெயரில் மாற்றிப் பெறுவதன் மூலம், சட்டமுறையிலான அடைமானம் ஒன்றினைப் பெறலாம்.

பங்குகளுக்கு எதிரான கடன்கள் மீதான கட்டுப்பாடுகள்

(Restrictions on Advances Against Shares)

இந்தியாவில், பங்குகளுக்கு எதிராகக் கடனளிப்பதற்கு வங்கிகளுக்குள்ள உரிமை, 1949ஆம் ஆண்டின், வங்கி நிறுமங்களின் சட்டத்தினால் (Bankiag Companies Act, 1949) குறிப்பிடுமளவிற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 19 (2)ஆவது பிரிவின்படி, குறிப்பிட்ட நிறுமத்தினுடைய செலுத்து முதலில் 30 சதவீதம், அல்லது தம்முடைய செலுத்துமுதல், காப்புநிதிகள் ஆகியவைகளின் மொத்தமதிப்பில் 30 சதவீதம், இதில் எது குறைவானதோ அதற்கும் அதிகமான ஒரு தொகைக்கு, அடகுபெற்றவர் (pledgee) என்ற முறையிலோ அடைமானம் பெற்றவர் mortgagee) என்ற முறையிலோ அல்லது தனித்த உரிமையாளர் (absolute owner) என்ற முறையிலோ, வங்கி நிறுமம், எந்த வேறொரு நிறுமத்திலும் பங்குகளைக் கொண்டிருக்கக்கூடாது. அதே பிரிவின் உப பிரிவு (3), தன்னுடைய மேலாண்மை இயக்குநர் அல்லது மேலாளர் எந்தவிதத்திலாவது தொடர்பு கொண்டுள்ள அல்லது அக்கறை கொண்டுள்ள ஒரு நிறுமத்தின் பங்குகளை, அடகு பெற்றவர் என்ற முறையிலோ, அடமானம் பெற்றவர் என்ற முறையிலோ அல்லது தனித்த உரிமையாளர் என்றமுறையிலோ உடமை கொண்டிருப்பதிலிருந்து ஒரு வங்கி நிறுமத்தைத் தடை செய்கிறது. அதே சட்டத்தின் 20ஆவது பிரிவின் படி, தன்னுடைய சொந்தப் பங்குகளின் பிணையத்தின்பேரில் எந்த வங்கி நிறுமமும் கடன் அல்லது முன்பணம் வழங்குதல் கூடாது. அதே சட்டத்தின் 21ஆவது பிரிவின்கீழ்த்தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, பங்குகளுக்கு எதிராக வழங்கப் படுப் கடன்களிள் மீது பல கட்டுப்பாடுகளை விதித்து, ரிசர்வ்வங்கி, வங்கி நிறுமங்களுக்குக் கட்டளைகளை விடுத்துக்கொண்டு உள்ளது. எடுத்துக்காட்டாக, 1960, மார்ச்-11 தேதியிட்ட ஒரு கட்டளையின்படி, சாதாரணப்பங்குகளுக் கெதிரான கடன்கள் தொடர்பாக 50 சதவீத எச்ச ஓரத்தை நிலை நாட்டுமாறு அட்டவணை வங்கிகள் (Scheduled Bank) கேட்டுக்கொள்ளப் புட்டன. இருந்தபோதிலும், ரூ.5000, அல்லது அதற்குக் குறைவான

கடன்கள் விதிவிலக்களிக்கப்பட்டன; அதைத் தொடர்ந்து, வங்கியிலிருந்து அவை வாங்கப்பட்ட ஏழுநாள்களுக்குள், மாற்றுச்சீட்டுகளுக்குப் பணம் செலுத்தப்படுமானால், ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பப்படுவதற்குள்ள பங்குகளை உத்தரவாதம் செய்கின்ற, கேட்டவுடன் செலுத்துவதற்கான மாற்றுச் சீட்டுகளை வாங்குவதன் மூலமாகப் பங்குத்தரகர்களுக்கு அளிக்கப்படுகின்ற கடன்கள் தொடர்பாகவும் ஒரு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. முந்தைய அத்தியாயம் ஒன்றில் குறிப்பிட்டது போல, தற்போதைய தீர்வைக்காகவும், மற்றும் அடுத்த தீர்வைக்கான (Settlement) விற்பனைக்காகவும் தங்களின் பெயரில் பங்குகளை வாங்குவதன் மூலம் "பட்லா" (Budla) நடவடிக்கைகளுக்கு அட்டவணை வங்கிகள் நேரடியாக நிதியீடு செய்வதன் மீதும் ஒரு தடை விதிக்கப்பட்டது.

ஒரு யூனிட் டிரஸ்டின் துணை யூனிட்டுகள் பிணையமாக (Subunits in A unit Trust as Security):

இந்தியாவில், முதலீட்டுப் பொறுப்புரிமை அமைப்புகள் (Investment Trusts) போதுமான எண்ணிக்கையில் இருந்தாலும், யூனிட் டிரஸ்ட் அமைப்பினைப் போன்றவைகள் அவ்வளவாக வளர்ச்சியடையவில்லை, தனியார் துறைக்கான நிதிக் குழு (ஸ்ராப் குழு) [The Committee on Finance For Private Sector (Shroff committee)], சிறிய முதலீட்டாளர்களின் நன்மைக்காக, நாட்டில், யூனிட் டிரஸ்ட் (unit Trust) மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை குறிப்பாக வலியுறுத்தியது. இங்கிலாந்தில் (U.K.) யூனிட் டிரஸ்டுகள் பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ளன. இவை (அ) நிலையானவைகளாகவோ (fixed), அல்லது (ஆ) மாறுபடுகின்றவைகளாகவோ (flexible) இருக்கின்றன. முந்தையதில், துறைகள் (portfolies) நிலையானவைகளாகும்; ஏதாவது மாற்றம், ஒரு சிறப்புச் செயல்முறையின் (Special Prohcedure) மூலம், மற்றும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மட்டுமே ஏற்படமுடியும்; பிந்தையதில், பிணையப்பத்திரங்களின் விகிதத்தில் மாற்றம், மேலாளர்களால் (managers), அவர்களுடைய தன்விருப்புப்படி, முடிவு செய்யப்படலாம் "யூனிட்", டிரஸ்ட் உருவாக்கப்பட்ட நேரத்தில், பற்பல பிணையப்பத்திரங்களில், செய்யப்பட்ட, பல வகையான முதலீடுகளைக் கொண்டதாக உள்ளது. பின்னர் யூனிட் துணை யூனிட்டுகளாகப் பிரிக்கப்பட்டு, நிறுமங்களில் பங்குதாரர்களைப்போல, அவைகளை வாங்குவதன்மூலம் யூனிட்டின் உடைமையாளர்களாக ஆகக்கூடிய முதலீட்டாளர்களுக்கு விற்கப்படுகின்றது. முதலீடுகளின்மீது பெறப்படுகின்ற பங்காதா

யம் மற்றும் வட்டி ஆகியவைகளின் அடிப்படையில் பங்காதாயங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. பங்குகளைப்போல, யூனிட் சான்றிதழ்களால் அத்தாட்சியளிக்கப்படும் துணை யூனிட்டுகளும் (Sub-units) பிணையமாகக் கொடுக்கப்படுகின்றன. துணை யூனிட்டுகளுக்கு எதிராக வழங்கப்படும் கடன்களின் விடயத்தில், எடுக்கப்படவேண்டிய வழக்கமான முன்னெச்சரிக்கைகள், ஏறக்குறைய, பங்குகளின் விடயத்தில் எடுக்கப்படவேண்டியவை போன்றவையேயாகும்; மற்றும், அதுபோன்றே கடன்பத்திரங்களும் (Loan documents) பெறப்படுகின்றன. இங்கும்கூட, மாற்றல் படிவப் ஒன்றினை நிறைவேற்றிக் கொடுப்பதன் மூலம், வங்கியின் பெயரில் துணை யூனிட்டை மாற்றல் செயது சட்டபடி ஓர் அடைமானத்தை உண்டாக்கமுடியும். சரியானமுறையில் நிறைவேற்றப்பட்ட படிவம் டிரஸ்டிடம் வைப்புச் செய்யப்படுகின்றது; அதன்பேரில், வங்கியினுடைய பெயரில் புதிய சான்றிதழ் ஒன்று விடுக்கப்படுகிறது. வைப்புச் செய்ததற்கான நினைவுக் குறிப்பு (memorandum) ஒன்றோடு சேர்த்து பிணையப்பத்திரத்தை வைப்புச் செய்வதன்மூலம் நியாய அடைமானத்தை ஏற்படுத்த முடியும். வழக்கமாக, யூனிட்சான்றிதழோடு, இணைக்கப்பட்ட, உரிமை விட்டுக் கொடுப்புப்படிவம் (Form of Renunciation), கடன் பெறுபவரால்—(யூனிட் சான்றிதழை) வைத்திருப்பவரால், வைப்புச் செய்யப்படுகின்ற நேரத்தில், கையொப்பமிடப்பட்டுப் பெறப்பட வேண்டும். தேவை ஏற்படுகின்ற பொழுது, வங்கியின் பெயரில் சான்றிதழ் ஒன்று விடுக்கப்படும் பொருட்டு, சரியான முறையில் நிறைவேற்றப்பட்ட உரிமை விட்டுக்கொடுப்புப் படிவத்தோடு சேர்த்து, சான்றிதழ், பொறுப்புரிமையிடம் (டிரஸ்டிடம்-Trust) வைப்புச் செய்யப்படலாம். நியாய அடைமானம் ஏற்படுத்தப்படுகின்ற எல்லாச் சமயங்களிலும், ஒரே மாதிரியாக, துணை யூனிட் சான்றிதழ்கள் பிணையமாக வைப்புச்செய்யப்பட்டுள்ளன என்ற உண்மையைத் தெரியப்படுத்தி, பொறுப்புரிமையின் (Trust) மேலாளர்களுக்கு அறிவிக்கை ஒன்று அனுப்பப்படவேண்டும். உண்மையிலேயே, மதிப்பீடு செய்வதென்பது அவ்வளவு எளிதான ஒரு பிரச்சினையன்று. இதற்குக்காரணம், அதனுடைய முதலீடுகளின் மதிப்பு மற்றும் அளவீடு ஆகியவைகளைப் பொறுத்து யூனிட்டினுடையமதிப்பு மாறிக்கொண்டேயிருக்கிறது. ஆனால், இதில் மேலாளர்கள் மிகவும் உதவியாக உள்ளனர். துணை யூனிட்டுகளினுடைய சந்தை மதிப்புத்தொடர்பாக, விற்பனையாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் உதவிபுரிவதற்கும், அறிவுரைகள் வழங்குவதற்கும் அவர்கள் எப்போதும் ஆயத்தமாக உள்ளனர்.

கருவூலச் சேமிப்பு வைப்புச் சான்றிதழ்களும், அஞ்சலகச் சேமிப்புச் சான்றிதழ்களும் (Treasury Savings Deposit Certificates and post Office Savings Certificates):

பற்பல ஊக்கமளிப்புச்செயல்களின் மூலம் சிறுசேமிப்புகள் ஊக்குவிக்கப்படுகின்ற இந்நாள்களில், கருவூலச் சேமிப்பு வைப்புச் சான்றிதழ்களும், அஞ்சலகச் சேமிப்புச் சான்றிதழ்களும், ஒரு வங்கியரிடம், பிணையமாக அளிக்கப்படுகின்றன. முன்பு, கருவூலச் சேமிப்பு வைப்புச் சான்றிதழ்கள், அரசு கடனுறுதிச் சீட்டுகளைப் (Government Promissory Notes) போன்று, மேலெழுதல் (Endorsement) செய்வதன் மூலம் மாற்றல் செய்யப்படத்தக்கவைகளாக இருந்தன; ஆனால், அண்மையில் விதிமுறைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. இப்பொழுது, சான்றிதழின் பின்புறத்திலேயே மாற்றல் படிவம் ஒன்று கொடுக்கப் பட்டுள்ளது. இந்தப்படிவம் நிரப்பப்பட்டு, பதிவு செய்யப்படுவதற்காகப் பொதுக்கடன் அலுவலகத்தில் (Public Debt. Office) வைப்புச் செய்யப்படவேண்டும். இரண்டு நபர்கள் கூட்டாக ரூ. 50,000 மதிப்பு வரையிலும் உடைமை கொண்டிருக்கலாமெனினும், தனி நபர் உடைமைக்கு ரூ. 25,000 எனும் வரையறை உள்ளது. பொதுக் கடன் விதிகளின்படி, அரசிதழ்ப் பதிவு பெற்ற ஓர் அரசு அதிகாரி, அல்லது, ஓர் உள்ளாட்சி அதிகாரம் (Local Authority), இந்திய ரிசர்வ் வங்கி, ஓர் அட்டவணை வங்கி அல்லது கூட்டுறவுச் சங்கம் ஆகியவைகளின் நிறைவேற்றாண்மை அதிகாரி (executive officer) ஆகியோருக்குச் சாதகமாக மட்டுமே, சான்றிதழ் அவர்களால் ஒரு பிணையமாக வைத்திருக்கப்பட வேண்டும் என்னும் குறிப்பிட்ட காரியத்திற்காக, மாற்றல் செய்யப் படமுடியும். மாற்றல் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கின்ற காலத்தில், மாற்றல் பெற்றவர் சான்றிதழை வைத்திருப்பவர் (holder) எனக் கருதப்படுகிறார். வைப்புச் செய்தவருக்கு, பிணையப்பத்திரம், மறுபடியும் மாற்றல் செய்யப்படலாம்; இதற்காக, வைப்புச் செய்தவர், புதுப்பிக்கப்படும் பொருட்டு சான்றிதழைப் பெற்று, புதுப்பிக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றினைப் பெறவேண்டியவராக உள்ளார். இவ்வாறு, பொதுக்கடன் அலுவலகத்தில் (Public Debt. Office) மாற்றல் பதிவு செய்யப்பட்டிருந்தால், மற்ற அரசு பிணையபபத்திரங்களின் விடயத்தில் செய்வது போல, வழக்கமான பாதுகாப்புகளை எடுத்துக்கொண்டு, கருவூலச் சேமிப்பு வைப்புச் சான்றிதழ்களுக்கு எதிராக, வங்கியர், கடன்களை அளிக்கலாம்.

1959ஆம் ஆண்டின், சேமிப்புச் சான்றிதழ் விதிகளின் 19ஆவது விதி, குறிப்பிட்ட வடிவத்தில், மாற்றல் செய்பவராலும், மாற்றிப் பெற்றவராலும் விண்ணப்பம் செய்யப்பட்டால், பணமாக

மாற்றப்படுவதற்கு முடியாத காலத்திற்கு (Period of non-encash-ability) முன்னர் அல்லது பின்னர், எந்தநேரத்திலும், மேலே குறிப்பிட்டவர்களில், ஓர் அட்டவணை வங்கிக்கு, அல்லது கூட்டுறவு வங்கியையும் சேர்த்து ஏதாவதொரு கூட்டுறவுச்சங்கத்திற்கு செய்யப்படும் மாற்றலுக்கு, அதிகாரமளிக்கப்பட்டுள்ள அஞ்சலக அதிகாரி ஒருவர் அனுமதி வழங்கலாம் என்று கூறுகின்றது. சான்றிதழில், தேவையான மேலெழுதலை அஞ்சலக அதிகாரி செய்யவேண்டியவராக உள்ளார். அடகுபெற்றவரின் எழுத்து மூலமான உத்தரவின் பேரில், அது, மறுமாற்றல் செய்யப்படும் வரை, மாற்றல் பெற்றவர் சான்றிதழை உடையவர் (holder) எனக் கருதப்படுகிறார். மாற்றல் தொடர்பான இந்தவிதிகளின்கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளசலுகைகளின்படி, பணமாக மாற்றுவதற்கு முடியாத (ஓர் ஆண்டுமுதல் 18 மாதங்கள் வரை மாறுபடுகின்ற) காலத்திற்கு முன்னரும் கூட, தேசிய சேமிப்புச் சான்றிதழ்கள், மற்றும் தேசியத்திட்டச் சான்றிதழ்கள் (National Savings and National Plan Certif'cates) ஆகியவைகளுக்கு எதிராகக் கடன்கள் தடையின்றிக் கொடுக்கப்படலாம்; மாற்றல் பற்றிய அஞ்சலக அதிகாரியினுடைய மேலெழுதலுக்குப்பின், மற்றும் கடன்வழங்குவது தொடர்பான, வழக்கமான பாதுகாப்புகள் எடுக்கப்பட்டபின் கடன் வழங்கப்பட்டிருந்தால் வங்கி எத்தகைய இடர்வாய்ப்பிற்கும் ஆளாகமாட்டாது.

13. சரக்குகளுக்கும் சரக்குரிமைப் பத்திரங்களுக்கும் எதிராகக் கடன்கள்

(Advances Against Goods and Documents of Title to Goods)

பிணையங்கள் என்ற முறையில் அவைகளின் தகுதிபற்றி வேறுபட்ட கருத்துகள் (Divergent Views as to Their Suitability as Securiiies):

முந்தைய அத்தியாயங்களில் விவாதிக்கப்பட்ட பிணையங்களோடு சேர்த்து, குறிப்பாகப் பெரிய துறைமுகங்களிலும், இதர வணிக கேந்திரங்களிலும், விளைபொருள், சரக்குகள், சரக்குரிமைப் பத்திரங்கள் ஆகியவைகளுக்கு எதிராகவும் வங்கியர்கள் நிதியினைக் கடனாக அளிக்கின்றனர். இத்தகைய பிணையங்கள், வங்கியர்களின் கடன்களை உத்தரவாதம் செய்வதற்குத் தகுதியானவைகளா, அல்லவா என்பது, வங்கியியலில் முன்னணியில் உள்ள வல்லுநர்கள் கூட மாறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ள ஒருசர்ச்சையாகும். சர் ஜான் பேஜட் (Sir John paget) என்பவர், தம்முடைய "வங்கியியல் சட்டம்" (5ஆவது பதிப்பு, பக்கங்கள் 376, 377) [The Law of Banking (5th Edition PP.376 and 377)] என்னும் ஏட்டில் கூறுகிறார்:

> வங்கியர், நாணயமான மற்றும் பொறுப்புள்ள நபர்களோடு தொழில் நடவடிக்கையைக் கொண்டிருக்கிறார் எனில், கப்பல் வழிச் சீட்டு (Bill of Lading), ஒப்படைப்பு ஆணைகள் (Delivery Orders), பண்டகஆள்களின் சான்றிதழ்கள் (Warehousemen's Certificates), துறை ஆணைகள் (Dock warrants) மற்றும் பற்றுரிமை அல்லது அடைமானக் கடிதங்கள் (Letters of Lien of Hypothecation) போன்ற சரக்குரிமைப்பத்திரங்கள் கடன்கள் வழங்குவதற்கு வசதியான பிணையங்களாகும். அவைகளின் மூலமாகச் சரக்குகள், விரும்பிய விளைவினை ஏற்படுத்தும் முறையில் அடகு வைக்கப்படலாம்;

அவ்வாறில்லையெனில் அவைகளின் பெரும் அளவு (bulk), அவை வைத்திருக்கப்படுமிடம் (location) ஆகியவைகளின் காரணமாக அவைகளை அவ்வாறு பயன்படுத் முடியாது என்பது தெளிவு. சிறப்பாக, கப்பல் வழிச் சீட்டின் மூலமாக, நடுக்கடலில் உள்ள சரக்குகள் கரைக்கு வந்து சேர்வதற்குமுன், அடைமானம் வைக்கப்படலாம்; இவ்வாறு (சரக்கின்) விலைக்காகக் கொடுக்கப்பட்ட மாற்றுச் சீட்டுகள் (bills) அல்லது கடன்களுக்கு உத்தரவாதமாக அது உபயோகப்படுத்தப்படுகின்றது. இயல்பாக, இந்தத்தொழிலின் மிகப்பெருமளவு, தரகர்கள் மற்றும் இதர சரக்குரிமையாளர்களின் முகவர்கள் (agents) ஆகியோர்களின் மூலமாக நடத்தப்படுகின்றன; 1889ஆம் ஆண்டின், வணிகத்தரகர்களின் சட்டம் (Factors Act, 1889) மற்றும், 1893ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டம், (Sale of Goods Act, 1893) ஆகியவை, இத்தகைய முகவர்கள் மற்றும் வேறெங்கினும் சரக்குகளை ஏற்கெனவே விற்றுவிட்ட விற்பனையாளர்கள் மற்றும் தம்மிடம் (சரக்கினை) வாங்கியவர் (Sub-vendee) அல்லது அடகு பெற்றவர் ஆகியோருக்கு நல்ல உரிமையைக் கொடுக்கமுடியாத நிலையில் உள்ள வாங்கியவர்கள் (Vendees) போன்ற, தற்செயலாக அரைகுறை உரிமையாளர்களாக (quasi owners) உள்ளவர்கள் ஆகியவர்களுடன் தொழில் நடவடிக்கையில் வங்கியர் ஈடுபடும் பொழுது உள்ள இடர்வாய்ப்பினைக் குறைப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பாராட்டுதலுக்குரிய முயற்சிகளாகும். வாடிக்கையாளரின் நிலைமை எதுவாக இருந்தாலும், வாடிக்கையாளர் நாணயமாக இருந்தாலும், நாணயமில்லாமல் இருந்தாலும், பிணையப்பத்திரம் வாடிக்யைாளருக்குச் சொந்தமானதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அல்லது அதில் தொடர்பு கொள்வதற்கு அவர் அதிகாரம் பெற்றிருந்தாலும் பெறாவிட்டாலும், மற்றும் வங்கியர் அதனை ஏற்கெனவே உள்ள ஒரு கடனுக்குப் (பிணையமாக) எடுத்துக் கொண்டாலும் அல்லது புதிய ஒரு கடனுக்கு எடுத்துக்கொண்டாலும், எந்த ஒன்றின்மீது அவர் தவிர்க்கமுடியாத (indefeasible) உரிமையைப் பெற முடியுமோ அத்தகைய, வங்கியரின் மிகச்சிறந்த பிணையமாக, அதாவது, முற்றிலும் மாற்றுமுறை ஆவணங்களாக, பற்பல சரக்குரிமைப் பத்திரங்களையும் உயர்த்துவது இந்தச்சட்டங்களின் திட்டங்கள் (நோக்கங்கள்) அல்ல........... மற்றும் துரதிஷ்டவசமாக,

இரண்டு சட்டங்களின் காப்பு வாசகங்களும் மிகச் சிக்கல் நிறைந்தவைகளாக ஆக்கப்பட்டுள்ளன; ஒன்றின்மீது மற்றொன்று செல்வதாக உள்ளது; எதிரெதிரான மேற்கோள்களின் (cross-references) மூலமாகவும், மற்றும் ஒவ்வொன்றையும் ''வாணிக முகவர்'' (''Mercantile Agent'') என்ற பொதுவான பெயருக்குக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாகவும் சிக்கல் நிறைந்தவைகளாக ஆக்கப்படடுள்ளன; அறுதியிட்டுக் கூறப்படாத காரணத்தால், அவை எவ்வாறு இருக்க வேண்டுமென்று விரும்பப்பட்டனவோ அவ்வாறு, பாது காப்புகள் முற்றிலும் முழுமையானவைகளாகவோ, மறு மறு உறுதியளிக்கக் கூடியவைகளாகவோ இல்லை.

மாறாக, இத்தகைய பிணையங்கள், திரு. கில்பர்ட் (Mr. Gilbart) மற்றும் திரு. ஜான் ஹிட்சிசன் (Mr. Jhon Hutchison) ஆகியோருடைய ஆதரவைப் பெறவில்லை.

திரு. கில்பர்ட் [(வங்கியர் நிறுவனத்தின் கையோடு (1922) ஜனவரி, பக்கம்-7 — Journal of the Institute of Bankers (1922), January, P—7)] அவர்களின் கூற்றுப்படி :

> கப்பல் வழிச்சீட்டும், துறைமுக ஆணைச்சீட்டும் மற்றொரு வகையான பிணையங்கள் ஆகும். இத்தகைய பிணையங்களின் மீதான கடன்கள் விவேகமுள்ள வங்கியர்கள், தங்களின் சொந்த ஆட்சிமுறைக்காக வகுத்துள்ள விதிகளுக்கு அப்பாற்பட்டவை எனக்கருதப்படவேண்டும்; அவை அந்தந்தச் சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கேற்ப மட்டுமே நியாயமானவையெனக் கொள்ளப்பட முடியும். ஆனால், உண்மையில், எந்த வங்கியரும், இத்தகைய பிணையங்களின்மீது, நிச்சயமாகக் கடன்கள் வழங்கக்கூடாது. அவ்வப்போது, மற்றபடி மதிக்கத்தக்க ஒரு வாடிக்கையாளருக்கான ஒரு கடனுச்குத் துணைப்பிணையமாக அவைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், இத்தகைய வாடிக்கையாளர் இத்தகைய கடன்களை அடிக்கடி, ஆனால் தொடர்ச்சியாக இல்லாமல், தேவையுடையவராக இருக்கிறார் என்றால், அது, வங்கியர் தம்முடைய தொழிலை, இறுதியில் தமக்கோ, தம்முடைய வாடிக்கையாளருக்கோ நன்மை பயக்காத முறையில் நடத்திக்கொண்டிருக்கிறார் என்பதைக்காட்டுகின்றது.

திரு. ஹட்சிசன், இன்னும் கடுமையான முறையில் எதிர்த்துக் கூறுகிறார். தம்முடைய, "வங்கியல் நடைமுறை" (1887), என்னும் நூலின், பகுதி III-ல், 327, 328 ஆகிய பக்கங்களில் (The Practice of Banking (1887), Vol. III PP. 327 and 328) அவர் கூறுகிறார் :

> சரக்குகள் தொடர்பாக, தரகர்களின் உத்தரவாதங்கள் (Brokers undertakings) மற்றும் தரகர்களின் உடன்படிக்கைகள் (Brokers' Engagements) என்று அறியப்படும்ஆவணங்களின்படிவங்களிலிருந்து (forms), அவை முற்றிலும் மதிப்பற்ற பிணையங்கள் என்பதை அறியலாம். இந்த வழியில் வியாபாரிகளுக்கு உதவி தேவையாக இருந்தால், அதனுடைய நோக்கத்தை வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டு, "வியாபாரிகள் கடன் நிறுமம்" ("Traders Loan Company") ஒன்று, அல்லது (துறைமுக) ஆணைகள், ஒப்படைப்பு ஆணைகள் மற்றும் பண்டக ஆட்களின் சான்றிதழ்கள் ஆகியவைகளின்மேல்மட்டுமே கொடுக்கப்படும் கடன்களின் தேவையை நிறைவேற்றுவதற்காக, "வியாபாரிகள் அடகு தரகு நிறுமம்" (Traders Pawn-broking company) ஒன்று ஆகியவைகளை அமைப்பதுபற்றித் திட்டமிடப்படலாம். இருப்பினும், அதற்காக, வங்கிகளால் கடன்களுக்கு எதிராக ஏற்றுக்கொள்ளப்படத்தக்க, பொறுப்புறுதி செய்யப்பட்ட மாற்றத்தக்க ஆணைகளை, வசதியான தொகைகளில் விடுப்பதற்காக, "பொது அடைமான நிறுமம்" ("General Hypothecation company") ஒன்று அமைக்கப்படவேண்டும்.

மாறுபட்ட கருத்துகள் விளக்கப்படுதல் (Divergence Explained)

இந்தப் பொருள்பற்றி, நன்கு அறியப்பட்ட வல்லுநர்களுக்கு இடையே இத்தகைய மாறுபட்ட கருத்துகள்இருப்பதால், அத்தகைய மாறுபட்ட கருத்துகள் இருப்பதற்குக் காரணம் என்னவென்று வாசகர் வினவக்கூடும். திரு. கில்பர்ட்டினுடைய கருத்திற்கு, இந்தவகையான தொழிலில் அவருடைய அனுபவம், கட்டாயமாக, மிகக்குறைந்த அளவினதாக இருந்தது என்ற உண்மைதான் காரணம், என்று திரு. ஸ்டீல் (Mr. Steele) என்பவர் கூறுகிறார். மாறாக, திரு ஹட்சிசனுடைய கருத்தைப் பொறுத்தமட்டில், இத்தகைய பிணையப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல்களையும், சில இடர்வாய்ப்புகளையும் தெரிந்து கொண்டு, எதிலும்

கெடுதலையே காண்கின்ற ஒரு கருத்தினை (Pessimistic view) அவர் கொண்டுள்ளார் என்று கூறலாம்; சர் ஜான் பேஜட், வங்கியர்கள் தற்போது எவைகளுக்கெதிராகக் கடன்வழங்குகிறார்களோ அத்தகைய மிகச்சிறந்த பிணையங்களின் விடயத்திலும்கூட ஏதோ ஒரு வகையான இடர்ப்பாடுகள் உள்ளன என்பதை நன்கு தெரிந்து கொண்டிருப்பதால், விவாதத்திலுள்ள பிணையங்களில் நிதியினை முதலீடு செய்வதிலிருந்து வங்கியரை மனம் தளரச் செய்வதற்கான காரணம் எதையும் காணமுடியாதவராக இருக்கிறார். கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் அவர்களின் நோக்கில் ஏற்பட்டுள்ள மாற்றம் கூட, அதில் ஈடுபட்டுள்ளவர்கள், தங்களுடைய வங்கியர்களிடமிருந்து பெறமுடிந்துள்ள வசதிகள் அளிக்கப் படாது இருந்திருந்தால் ஏற்பட்டிருக்கமுடியாத, தற்கால வணிக வளர்ச்சியின் காரணமாகவேயாகும்.

சரக்குகள் மற்றும் சரக்குரிமைப் பத்திரங்கள் ஆகியவைகளுக்கு எதிரான கடன்களில் வங்கியர்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகளை ஆராய்வதற்கு முன், இத்தகைய பிணையங்கள், வங்கியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மற்ற வகையான பிணையங்களோடு என்ன ஒற்றுமையைக் கொண்டுள்ளன என்று பார்ப்பது விரும்பத்தக்கதாகும். விளைபொருள்கள், சரக்குகள் மற்றும் சரக்குரிமைப் பத்திரங்கள் கீழ்க்காணும் நன்மைகளைக் கொண்டுள்ளன:

நன்மைகள் (Advantages)

உருப்படியான (புலனாகக்கூடிய) பிணையம் (Tangihle Security):

இத்தகைய பிணையங்கள், பொறுப்புறுதிகள் மற்றும் மாற்றுச் சீட்டுகள் ஆகியவைகளைவிடச் சிறந்தவைகளாகும்; ஏனென்றால், இத்தகைய பிணையங்களுக்கு எதிராகக் கடன்வாங்கும் வாடிக்கையாளர் செலுத்தத் தவறுகின்ற தறுவாயில், உருப்படியாக உள்ள ஏதோஒன்றின்மீது வங்கியர் பற்றிக்கொள்வதற்கு அவை வசதியாக உள்ளன. கடன் ஒன்று, சாதாரணமாக, ஒரு பொறுப்புறுதியின் (Guarantee) மூலம் உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கும்பொழுது, கடன் வாங்கியவரின் ஆள்சார் பிணையம், பிணையாளி என்றழைக்கப்படும் மற்றொரு நபருடைய ஆள்சார் பிணையத்தோடு சேர்ந்துள்ளது. முதன்மைக்கடனாளி மற்றும் அவருடைய பொறுப்புறுதியர் (Guarantor) ஆகிய இருவருமே செலுத்தத் தவறுகின்ற தறுவாயில், வங்கியரின் கோருரிமை (claim), நொடிப்பு நிலையை அடைந்துள்ள வாடிக்கையாளருடைய (கடன் வாங்கியவர்) உத்தரவாதமளிக்கப்படாத இதரக்கடனாளர்களின்

(creditors) உரிமைக் கோரிக்கைகளோடு சேர்ந்துச்சமஇடத்தைத் தான் பெறுகின்றது. சரக்குகள் மற்றும் சரக்குரிமைப் பத்திரங் களுக்கு எதிராகக் கடன் ஒன்றினை அளிக்கின்ற ஒரு வங்கியர், கடனாளி செலுத்தத் தவறும் தறுவாயில் தமக்கு வரவேண்டிய தொகையை, பொதுவாக, சரக்குகளை விற்பனை செய்வதன் மூலம் திரும்பப் பெறக்கூடிய நிலையில் இருக்கிறார் என்பதும், மேற் கொண்டும் வரவேண்டிய தொகை ஏதாவது இருப்பின் கடனா ளியின் சொத்துக்கு எதிராகத் தம்முடைய கோருரிமையை நிலை நாட்டலாம் என்பதும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

விலைகளில் ஏற்படும் பெருமளவு ஏற்ற இறக்கங்களுக்கு உட்படாத தன்மை (Freedom From Heavy Fluctuations in Prices)

இந்த வகையான பிணையங்களிலுள்ள இரண்டாவது நன்மை, வழங்கப்பட்டுள்ள கடன்களுக்குப் பிணையமாகப் பெறப்பட்டுள்ள விளைபொருள்கள், சரக்குகள் ஆகியவை வாழ்க்கைக்கு இன்றி யமையாதவைகளாக இருந்தால், அவை பரந்த அளவிலான ஓர் உலகச்சந்தையைக் கொண்டிருப்பதால், சாதாரண காலங்களில், அவைகளின் விலைகள், அதிக அளவு ஏற்ற இறக்கங்களால் பாதிக்கப்படக்கூடியவை அல்ல. கோதுமை, பருத்தி, சர்க்கரை போன்ற வாழ்க்கைகு இன்றியமையாதவைகளின் விலைகள், சில வகையான பங்குகளைப் போன்று, மிகப்பெருமளவில் ஏறி இறங்கு வதில்லை; ஏனென்றால், அவை ஏறக்குறைய அகில உலக நிலவரங்களால் ஆட்கொள்ளப்பட்டிருக்கின்றன.

விற்பதற்கு எளிது (Easy to sell):

இந்த வகையான பிணையங்களிலுள்ள மூன்றாவது நன்மை, அவை நிலங்கள் மற்றும் கட்டடங்கள் போன்ற சில வகையான பிணையங்களைவிட, மிக எளிதில் விற்பனை செய்யப்படக்கூடி யவை; அடகு வைக்கபடும் பொருள்கள், குறிப்பாக, அரிசி, கோதுமை அல்லது சர்க்கரை போன்ற உணவுப் பொருள்களாக இருப்பின் அவைகளை விற்றுப் பணமாக்குவதில், வங்கியருக்கு, கிட்டத்தட்ட முற்றிலும், இடர்பாடு ஏதுமில்லை. அசையாச் சொத்துகளைப் பொறுத்தவரையில், அவைகளின் நியாயமான விலைக்கும் குறைவான தொகையையே பெற்றுக்கொள்வதற்கு வங்கியர் தயாராக இருந்தாலும்கூட, சொத்தின் விற்பனை மற்றும் மாற்றல் ஆகியவைகளை நிறைவேற்ற மாதக்கணக்கில் காலம் தேவைப்படலாம். முக்கியமான பொருள்களுக்கும், சில குறிப் பிட்ட வகையான சரக்குகளுக்கும், தற்காலத்தில் சந்தைகள், பன்னாட்டு வாணிபம் தற்போது உள்ளதுபோல அவ்வளவாக

வளர்ச்சியடைந்திராத அரைநூற்றாண்டு காலத்திற்கும் முன்னதாக இருந்ததைவிட, மிகவும் நிலையானவைகளாக (Stable) உள்ளன; எனவே, இத்தகைய தொழில்களுக்கு எதிராக இருந்து வந்த பழைய தப்பெண்ணம் சிறிது சிறிதாக மறைந்து போய் விட்டது.

கடன்கள் குறுகிய காலங்களுக்கு மட்டுமே அளிக்கப் படுகின்றன (Advances only for Short Periods)

இந்தப் பிணையங்களுக்கு ஆதரவாகக் கூறப்படும் நான்காவது நன்மை, அவைகளுக் கெதிரான கடன்கள், பொதுவாக, குறிப்பிட்ட பருவகாலங்களில் மட்டுமே வழங்கப்படுபவையாதலால், அவை குறுகிய காலங்களுக்கானவைகளேயாகும்; ஆகையால் அவை களுக் கெதிராகக் கடன் வழங்கும் வங்கியர், தம்முடைய பணத்தை, குறிப்பிடும்படியான நீண்ட காலத்திற்கு முடக்கிவைத்திருக்க வேண்டியதில்லை; ஆனால் அசையாச் சொத்துகளுக்கெதிரான கடன்களின் விடயத்தில், முதலீடு, வழக்கமாக நீண்ட ஒரு காலத் திற்கானதாகும்.

மதிப்பீடு செய்வது எளிது (Easy to Evaluate)

கடைசியாக, விளைபொருள் மற்றும் சரக்குகள் ஆகியவைகளின் விலைகள், அசையாச் சொத்துகள் மற்றும், இதர வகையான சில பிணையங்களினுடைய விலைகளைக் காட்டிலும் மிகவும் எளிதா கவும், சரியாகவும் கண்டறியக்கூடியவைகளாகும். சரக்குத்தரகர் களிடமிருந்து தகவல்களைப் பெறுவதன் மூலமும், தினசரிச் செய்தித் தாள்களில் வெளியிடப்படுகின்ற சந்தை அறிக்கைகளைப் பார்ப்பதன் மூலமும், ஒரு வங்கியர், முக்கியச் சரக்குச் சந்தை களோடு தம்மைத் தொடர்பு படுத்திக்கொள்ள முடியும்.

இதர நன்மைகள் (Other Advantages)

வங்கியரின் நோக்கிலிருந்து பார்க்கையில், மேலே குறிப்பிடப் பட்ட நன்மைகளோடு இத்தகைய பிணையங்கள் கொண்டுள்ள மற்றொரு முக்கியமான நன்மை, அவை நாட்டினுடைய வாணிபத் திற்கு மிகவும் உதவியாக உள்ளன என்பதாகும்; மற்றும் அவை இல்லாவிட்டால் எந்நிலை இருக்குமோ அதைவிட உணவு, உடை மற்றும் இதர வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் ஆகிய வைகளை, மிக மிக எளிதாகவும் மலிவாகவும் பெறுவதற்கு மக்களுக்கு உதவுகின்றன. வியாபாரி ஒருவர் தம்முடைய கொள் முதலை, மூலதனத்தின் அளவிற்கு சுருக்கிக் கொள்ள வேண்டிய வராக இருந்தால், அவர், குறைந்த விலைகளின் மூலம் பெறக் கூடிய நன்மைகளை இழக்கவேண்டியுள்ளது என்பது மட்டு மன்றி, தம்முடைய வாடிக்கையாளர்களுக்காகப் போதுமான சரக்

கிருப்பினையும், பல வகையான சரக்குகளையும் அவரால் வைத்திருக்கமுடியாது; அதனால் வாடிக்கையாளர்கள் தங்களுடைய கொள்முதல்களைச் செய்வதற்கு மிகவும் குறுகிய அளவு விற்பனை நிலையத்தினையே கொண்டுள்ளனர் என்பதோடு, கொள்முதல்களை, ஒப்பீட்டடிப்படையில், உயர்ந்த விலைகளிலேயே செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். வங்கியர் ஏன் இத்தகைய பிணையங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்குள்ள முக்கியக்காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

குறைபாடுகள் (Drawbacks)

இத்தகைய பிணையங்கள், மேலே குறிப்பிடப்பட்ட நன்மைகளுக்கெதிராகக், கீழ்க்காணும் குறைபாடுகளைக் கொண்டுள்ளன.

கெட்டுப்போகக்கூடிய இடர்வாய்ப்பு (Risk of Deterioration)

சேமித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் முற்றிலும் நிறைவளிப்பதாக இருந்தாலொழிய, பெரும்பான்மையான சரக்குகள் கெட்டுப்போகக்கூடியவைகளாகவும் சேதாரமடையக்கூடியவைகளாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, பழங்கள், எண்ணெய் வியாபாரியின் சரக்குகள், காய்கறிகள் ஆகியவைகளுக்கு எதிராகக் கடன்வழங்குகின்ற வங்கியர் ஒருவர், அவை கெட்டுப்போவதற்கு முன்னர் விற்கப்பட்டு விடுகின்றனவா என்று பார்ப்பதில் கவனமாக இருக்கவேண்டும். பிணையமாக அவரால் ஏற்றுக்கொள்ளப்படும் சரக்குகளைப்பற்றிய தேவையான அனுபவத்தை அல்லது அறிவினை அவர் கொண்டிருக்கவில்லையென்ற காரணமாகவே, கடன் வழங்கியவர், அடிக்கடி நட்டமடைகிறார். எடுத்துக்காட்டாக, இரப்பருக்கு எதிராக வங்கியர் ஒருவர் கடன் வழங்கினால், குறிப்பிடும்படியான காலத்திற்குச் சேமித்து வைக்கப்படுகின்றபொழுது, அது சுருக்கமடைந்து எடையையும் இழக்கின்றது என்பதை அவர் தெரிந்து வைத்திருக்கவேண்டும். அதேபோல, மக்காச்சோளத்தைப் பிணையமாக ஏற்றுக்கொள்ளும்பொழுது, மற்ற வகையான விளைபொருள்களைவிட, அதிகமான "நீர்க்கசிவினை" ("sweats") அது கொண்டுள்ளது என்பதை அவர் மறந்து விடக்கூடாது. கோதுமை கூட ஆறுமாதங்களுக்குமேல் சேமித்துவைக்கப்பட்டால், கரையான்களால் சேதமடையச் செய்வதற்கான வாய்ப்பினைக் கொண்டதாகும்; மழைக்காலங்களில் பருத்தியினுடைய நிறம் மாறுகின்றது, மற்றும் வெல்லம் (jaggery) இளகிக் கசிகின்றது.

விலைகளில் ஏற்படும் வீழ்ச்சி (Fall in Prices)

அவைகளுக்கான சந்தை, நடையுடை பாவனைகளில் ஏற்படும் மாற்றங்களைச் சார்ந்திருப்பதாலும், மற்றும், நடையுடை பாவனை

களில் ஏற்படும் மாற்றங்கள் குறிப்பிடுமளவிற்குத் தேவையில் குறைப்பினை ஏற்படுத்தக் கூடுமாதலாலும், சிலவகையான சரக் குகள் அவைகளின் தேவையில் ஏற்படும் அதிக அளவு ஏற்ற இறக் கங்களுக்கு உட்பட்டவைகளாகும். அதற்கிணையான குறைப்பு அளிப்பிலும் இல்லாமல், தேவையில் மட்டும் ஏற்படுகின்ற குறைப்பு விலைகளில் வீழ்ச்சியைக் கொண்டுவரக் கூடியதாகும்; இது, இத்தகைய சரக்குகளைப் பெருமளவில் இருப்பாகக் கொண்டுள்ள ஒருவரை வீழ்ச்சி யடையச் செய்யும்.

பெருமளவு மோசடி இடர்வாய்ப்புகள் (Greater Risks of Fraud)

குறிப்பிட்ட மற்றவகையான பிணையங்களின் விடயத்தில் இருப்பதைவிட, அடகு கொடுக்கப்படும் விளைபொருள்களின் விடயத்தில், அவைகளின் அளவு, தன்மை ஆகிய இரண்டைப் பொறுத்தமட்டிலுமே பெருமளவு மோசடி இடர்ப்பாடுகள் உள்ளன. குறிப்பாக, தானியங்கள், எண்ணெய் வித்துகள், புகையிலை போன்ற வேளாண்மைப் பொருள்களின் விடயத்தில், சரக்குகளின் தன்மையைப் பற்றிய சரியான தரநிலைப்பாடு (standardisation) இல்லாதிருப்பது, சில தீவினைக்கஞ்சாதவர்களுக்குக் கலப்படம் செய்வதற்கு அதிக வாய்ப்பினைக் கொடுக்கின்றது. இருப்பினும், இந்திய அரசின் வேளாண்மை அமைச்சும், இந்தியத் தரநிலைப் பாட்டு நிறுவனமும் [Indian Standard Institution (ISI)], சமீபத் தில், பொருள்களின் தன்மையில் அவசியமான குறைந்த அளவு தரத்தினை நிர்ணயம் செய்தல், மற்றும் முடிந்தபொழுது அவை களைச் சரக்குகளின்மேல் பொறித்து, பொருளின் தன்மைபற்றிய தனிக்குறிப்பீடு (specifications), விளக்க உரை (description) ஆகியவைகளின் விவரம் அடங்கிய சான்றிதழ்களை விடுத்தல் ஆகிய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டுள்ளன. இவையெல்லாம் இருந்தபோதிலும்கூட, இடாப்பில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளதோ அதைவிடத் தரக்குறைவாகச் சரக்குகளின் தன்மை இருந்துவிடக் கூடிய சிறிது இடர்வாய்ப்பு அங்கு உள்ளது. சரக்குகளின் தன்மையைப் பற்றிய சர்ச்சையை விட்டுவிட்டாலும்கூட, சர்க்கரை யைக் கொணடிருந்தன என்று கூறப்பட்ட, ஆனால் அவைகளில் பெரும்பாலானவை சர்க்கரையையே கொண்டிருக்கவில்லையென்று கண்டுபிடிக்கப்பட்ட சில மூட்டைகளுக்கெதிராகக் கடன்கள் வழங் கப்பட்ட சம்பவங்கள் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளன; அவைகளில் சில முற்றிலும் மணலையும் மரத் தூளையுமே கொண்டிருந்தன. குறிப்பிட்ட சரக்குகள் தொடர் பான பத்திரங்கள், நம்பகமான கட்டுமம் செய்யவர்களிடமிருந்து

(Packers) பெறப்பட்ட சான்றிதழ்களையும் சேர்த்துக் கொண்டிருந்தாலன்றி, பிணையமாக அளிக்கப்படும் சரக்கு பெட்டிகளில் உள்ளவை, அவைகளின் இடாப்பில் கண்டபடி உள்ளனவா என்று வங்கியர் ஒருவர் கண்டறியமுடியாது.

சேமித்து வைத்தலும் சரிபார்த்தலும் (Storage and Verification)

சரக்குகளையும், விளைபொருள்களையும் சேமித்துவைப்பதில், அவை சேதாரமடைவது தொடர்பாக மட்டுமன்றி, உரிமம் (licence) அளிக்கப்பட்டுள்ள பண்டகங்கள் இல்லாததாலும், மிகக்குறிப்பாக நாணயமும், முயற்சியும் கொண்ட பண்டகக் காவலாளிகள் (Godown keepers) அருந்தலாக உள்ள காரணத்தாலும், அவைகளைப் பண்டகங்களில் வைத்திருக்கும்பொழுது சரிபார்ப்பது தொடர்பாகவும் சில இடர்வாய்ப்புகள் ஏற்படுகின்றன. பண்டகக் காவலாளிகளின் மறைமுகமான உடந்தையோடு, அடகு கொடுத்தவரால் சரக்குகள் அகற்றப்பட்டு அதனால் வங்கிகளின் பிணையத்தைக் குறையச் செய்த நிகழ்ச்சிகள் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள வங்கிகளின் கவனத்திற்கு அடிக்கடி வருகின்றன.

இந்தியாவில் அவை அதிகமாக வழக்கில் இல்லாததற்குக் காரணங்கள் (Reasons for their unpopularity in India)

மேலே கூறப்பட்டுள்ள தீமைகள் காரணமாகவும், பின்வரும் காரணங்களுக்காகவும், இத்தகைய கடன்கள், இந்தியாவில் அதிகமாக வழக்கில் இல்லை.

பற்றாக் குறையான போக்குவரத்துச் சாதனங்கள் காரணமாக விலைகளில் ஏற்ற இறக்கங்கள் (Fluctuations in Prices due to scanty means of Transportation)

முன்னாள்களில், போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்பு சாதனங்கள் பற்றாக்குறையாக இருந்த காரணத்தால் இந்தியச் சந்தைகள் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கவில்லை. இது, தேர்ச்சி பெற்றிருந்த வியாபாரிகள் மற்றும் வணிகர்கள்கூட, இத்தகைய பொருள்களுக்கான வருங்காலத் தேவை அல்லது அளிப்பினை முன்கூட்டி அறிந்து கொள்வதற்கு முடியாத அளவிற்குச் சரக்குகளின் விலைகளில் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக, இத்தகைய விளைபொருள்கள் மற்றும் சரக்குகளுக்கு எதிராகப் பெருந்தொகைகளைக் கடனாக வழங்கியதன் காரணமாக வங்கியர்கள் துயரடைய வேண்டிவந்த தறுவாய்கள் சாதாரணமாக இருந்தன.

குழப்பமான சட்டநிலை (Unsettled State of Law)

இந்த வகையான பிணையம் தொடர்பான சட்டம், முன்பு, இப்போது இருப்பதைவிடக் குறைந்த அளவு முடிவானதாகவும், திருப்திகரமாகவும்தான் இருந்தது. இப்போதும்கூட, சட்ட அறிவியலின் இந்தத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களைக் காண்பது அவ்வளவு எளிதன்று. சரக்குகள் மற்றும் விளைபொருள்கள் அல்லது சரக்குரிமைப் பத்திரங்கள் ஆகியவைகளுக்கெதிராகக் கடனளிப்பதற்குச் சிந்தித்துக் கொண்டிருக்கும் வங்கியர்களுக்கு வழிகாட்டுவதற்கு, சில நீதிமன்றத் தீர்ப்புகளைத் தவிர, குறிப்பிடும்படியான சட்டமியற்றல் ஏதுமின்லை. 1930ஆம் ஆண்டின் இந்தியச் சரக்கு விற்பனைச் சட்டம் இயற்றப்பட்டதன் விளைவாக, நிலைமை ஏதோ சிறிது முன்னேறியுள்ளது.

போதுமான பொதுப்பண்டகங்கள் இல்லாமை (Absence of Adequate Public Warehouses)

இந்தியாவில் போதுமான அளவு பொதுப்பண்டகங்கள் இல்லாமையால், விளைபொருள்கள், பொதுவாக, கடன்வாங்கியவருடைய பண்டகத்திலோ கடன் வழங்கியவருடைய பண்டகத்திலோ அல்லது சிலவேளைகளில் வாடகைப் பண்டங்களிலும் கூடச் சேமித்து வைக்கப்படுகின்றன. சிலவேளைகளில், விளைபொருள், கிராமங்களில் ''கோதாஸ்'' (kothas) என்னும் குலுக்கைகளில், அல்லது உத்திரப்பிரதேசத்தில் உள்ளதுபோல, ''காட்டீஸ்'' களில் (''khatties'') சேமித்து வைக்கப்படுகிறது. ''கோதாஸ்'' என்னும் குலுக்கைகள், வைக்கோல் மற்றும் மூங்கில் தப்பைகளால் செய்யப்பட்டு மேலே மாட்டுச் சாணத்தால் பூசப்பட்டவைகளாகும். ''காட்டீஸ்'' என்பவை, வழக்கமாக, வீடுகளில் புறமதில்களில் (compounds), பூமிக்கடியில் தோண்டப்பட்ட குழிகள் ஆகும். கடன் வாங்கியவர், பண்டக வாடகையைக் கொடுப்பதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டு சேமித்துவைக்கப்பட்டுள்ள விளைபொருள்களின்மீது காப்பீட்டினையும் (Insurance) ஏற்படுத்துகிறார். ஐரோப்பாவும் அமெரிக்காவும் கொண்டுள்ளதைப் போன்று அங்கீகரிக்கப்பட்ட பண்டகக் காவலாளிகளைக் கொண்டிருப்பதாக இந்தியா பெருமைப்பட்டுக் கொள்ளமுடியாது. அக்கண்டங்களில் உள்ள சட்டம், வியாபாரிகள், ஏற்றுமதியாளர்கள், மற்றும் இறக்குமதியாளர்கள் ஆகியோர் சார்பாக, சரக்குகள், விளைபொருள்கள் மற்றும் இதர வாணிப சரக்குகள் ஆகியவைகளைச் சேமித்து வைக்கின்ற தொழிலைச் செய்கின்ற பண்டகக் காவலாளிகளை அங்கீகரித்துள்ளது. அவர்கள், பண்டக ஆணைகள் (Warehouse Warrants) என்று அழைக்கப்படும். மாற்று

முறைத் தன்மையைக் கொண்டுள்ள பிணையப்பத்திரங்களை (Negotiable Securities) விடுக்கின்றனர்; ஆகையால், அவை சம் பந்தப்பட்டுள்ள சரக்குகளின்மீதான உரிமை, மேலெழுதல் செய் வதோடு சேர்த்து ஆணைகளை ஒப்படைப்புச் செய்வதன்மூலம், முறைப்படி அவைகளை உடையவர் ஒருவருக்கு (holder in due course), விளைவினை ஏற்படுத்தும் வகையில், மாற்றித்தரப்பட முடியும். கடன் வாங்கியவர் தம்முடைய பண்டகத்தினுடைய திறவுகோலை வங்கியரிடம் கொடுத்துவிடுகின்ற, இந்தியாவிலுள்ள பொதுவான நடைமுறை, கடன் வாங்கியவருக்கு (சரக்கினை) விற்பனை செய்வதற்கான வசதியை இல்லாமல் போக்குகின்றது. இருப்பினும், இந்த நூலின் ஆசிரியர் அறிந்தவரை, இந்தியா விலுள்ள வங்கியர், பொதுவாக, இத்தகைய வாடிக்கையாளர் களுக்கு நியாயமான எல்லா வசதிகளையும் அளிக்கிறார்கள். சரக்குகளைவாங்குவதாக உள்ளவர்களுக்குமாதிரிகளைக்(samples) காட்டுவதற்கு அவர்களை வங்கியர் அனுமதிக்கிறார்கள்; பணம் செலுத்துவதற்கு எதிராகச் சரக்குகளைப் பகுதியாக வெளியீடு (Partial Release) செய்வதற்கு அனுமதிக்கிறார்கள்; மற்றும், சில வேளைகளில் நம்பிக்கை இரசீதுகளுக்கு (Trust Receipt) எதி ராகக்கூடச் சரக்குகளை ஒப்படைப்புச் (delivery) செய்து, அவை களைக் கடன் வாங்கியவர் அனுப்பிவைத்து இரயில்வே இரசீது அல்லது கப்பல் வழிச் சீட்டினை மாற்றிய பின்னர்க் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அனுமதிக்கிறார்கள்.

இந்தியாவில் அண்மைக் காலம்வரை பண்டகம் என்று அழைக்கப்பட்டுவந்தவை, (i) முந்தைய மாநகரங்களில் (Presidency Towns) இருந்த துறைமுகப் பொறுப்புரிமைகளால் (Port (Trusts) உடைமை கொள்ளப்பட்டிருந்த, பத்திரப்பண்டகங்கள் (bonded warehouses), சுங்கவரி செலுத்தப்பட்ட பண்டகங்கள் (duty paid warehouse), மற்றும் பம்பாய் துறைமுகப் பொறுப்புரி மையின் வாடகைப் பண்டங்கள் (rented warehouses) போன்ற சில வகையான பண்டகங்கள், (ii) புகழ்பெற்ற நிறுமங்களால் உடைமை கொள்ளப்பட்டிருந்த தனியார் பண்டகங்கள், (iii) முகட் டமர்களால் (Mukaddams) உடைமை கொள்ளப்பட்டிருந்த பண்ட கங்கள், ஆகியவைகளேயாகும். அகில இந்தியக் கிராமக் கடன் மதிப்பீட்டு அறிக்கை (1954)யில் [All India Rural Credit Survey Report (1954)] அடங்கியிருந்த பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு இந்திய அரசு நாட்டில் பண்டகங்களின் (warehouse) வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டது என்பதும், வேளாண்மைப் பொருள் (வளர்ச்சி மற்றும் பண்டகம்) கூட்டுருச் சட்டம் [Agricultural Produce (Development and Warehousing)

Corporation Act] 1956ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது என்பதும் மகிழ்ச்சி தரக்கூடிய அறிகுறிகளாகும். இச் சட்டம், கூட்டுறவுப் பண்டசாலை அல்லது பண்டகக் கூட்டுரு (Warehousing Corporation) ஒன்றின் மூலமாக வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தி, பதனிடுதல், சந்தையிலிடுதல், சேமித்தல், பண்டகத்திலிடுதல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவைகளைத் திட்டமிடுவதற்கும், திட்டங்களை மேம்பாடு செய்வதற்கும், தேசியக் கூட்டுறவு வளர்ச்சி மற்றும் பண்டக வாரியம் (The National Co-operative Development and Warehousing Board), 1956ஆம் ஆண்டு செப்டம்பரில் நிறுவப்படுவதற்கு வழிவகுத்தது. (அ) மாநில அரசுகளுக்குக் கடன் வழங்குவதற்கும், கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு முதலுக்குப் பணம் செலுத்துவதற்காக அவைகளுக்குப் (மாநில அரசுகளுக்கு) பண உதவி அளிப்பதற்கும் தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி நிதி (National Co-operative Development Fund), (ஆ) மைய பண்டகக் கூட்டுருவினுடைய (Central Warehousing Corporation) பங்கு முதலுக்கு பணம் செலுத்துவதற்கான தேசீயப் பண்டக வளர்ச்சி நிதி (National Warehousing Development Fund) என்ற இரண்டு நிதிகளை வாரியம் தன்னிடம் வைத்திருக்கின்றது. மாநில பண்டகக் கூட்டுருக்களின் (State Warehousing Corporations) பங்கு முதலுக்குப் பணம் செலுத்துவதற்காக மாநில அரசுகளுக்குக் கடன்கள் அளிப்பதற்கும், மற்றும் பண்டக வளர்ச்சிக்கும், சேமிப்பு வசதிகளுக்காகவும் பண்டகக் கூட்டுருக்களுக்கும், மாநில அரசுகளுக்கும் கடன் வழங்குவதற்காகவும்கூட நிதி பயன்படுத்தப்படுகின்றது. இச் சட்டத்தின்கீழ், மத்திய பண்டகக் கூட்டுரு (The Central Warehousing Corporation), 1957ஆம் ஆண்டு மார்ச்திங்களில் நிறுவப்பட்டு, சுமார் நான்கு மாதங்களுக்குப்பிறகு தன்னுடைய நடவடிக்கைகளைத் தொடங்கியது. கூட்டுரு ரூ. 20 கோடி அனுமதிக்கப்பட்ட முதலைக் (Authorised Capital) கொண்டுள்ளது; இதில் ரூ. 10 கோடி, மேலே குறிப்பிடப்பட்ட தேசிய வாரியம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, அட்டவணை வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், காப்பீட்டு நிறுமங்கள் முதலீட்டுப் பொறுப்புரிமைகள் மற்றும் வேளாண்மைப் பொருள்களில் நடவடிக்கைகளைக் கொண்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், மற்றும் கூட்டுப் பங்கு நிறுமங்கள் ஆகியவைகளால் செலுத்தப்பட்டுள்ளது. மூலதனத் தொகை திருப்பிச் செலுத்தப்படுவது, ஆண்டுக்கு 3 1/2 சதவீதத்திலான ஒரு குறைந்த அளவு பங்காதாயத்தைக் கொடுப்பது ஆகியவை தொடர்பாகக் கூட்டுருவின் பங்குகள் மத்திய அரசால் பொறுப்புறுதி செய்யப்பட்டுள்ளன. மற்ற வேலைகளோடு சேர்த்து, அகில இந்திய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பண்டகங்களை நிறுவுகின்ற பொறுப்பும்

கூட்டுருவிற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. 1961ஆம் ஆண்டு ஜூன் கடைசிவரை, பல்வேறு இடங்களில் 40 பண்டகங்களைக் கூட்டுரு நிறுவியிருந்தது. வைப்புகளில் (deposits) பெருமளவு சதவீதம் வியாபாரிகளுக்கும் வணிகர்களுக்கும் சொந்தமானவை; சுமார் 10 சதவீதம் மட்டுமே உண்மையான உரிமையாளர்களுக்குச் சொந்தமானவை. மையக் கூட்டுரு (Central Corporation) ஒன்று நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, வெவ்வேறு மாநிலங்களிலும், மாநிலப் பண்டகக் கூட்டுருக்கள் (State Warehousing Corporations) நிறுவப்பட்டு வருகின்றன. மையக் கூட்டுருவைப் போலவே அவைகளும், மற்ற வேலைகளோடு, மையக் கூட்டுருவின் பண்டகங்களுக்கு என்று ஒதுக்கப்படாத இடங்களில், தங்களின் மாநிலங்களுக்குள் உரிமம் அளிக்கப்பட்ட (licensed) பண்டகங்களை நிறுவி அவைகளை நடத்தி செல்வதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலக் கூட்டுருக்களின் பங்கு மூலதனம், மையப் பண்டகக் கூட்டுருவினாலும் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளாலும் செலுத்தப்பட்டுள்ளது; இதில், மையப் பண்டகக் கூட்டுரு, மொத்தச் செலுத்து முதலில், 50 சதவீதத்திற்குக் குறையாமல் செலுத்தியுள்ளது. 1961ஆம் ஆண்டு ஜூன் கடைசியில் வெவ்வேறு மாநிலப் பண்டகக் கூட்டுருக்களால் நிறுவப்பட்ட பண்டகங்களின் மொத்த எண்ணிக்கை 267 ஆக இருந்தது.

இதுவரை நிறுவப்பட்ட பண்டகங்களின் எண்ணிக்கை, நாட்டின் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லாவிட்டாலும்கூட, பண்டகத்துறையில் ஏற்பட்டுள்ள மேலே சொல்லப்பட்ட முன்னேற்றங்கள் முற்றிலும் ஊக்கமளிப்பதாக உள்ளது. எப்படியும், பண்டகங்களால் அவை எந்த அளவிற்குக் கிடைக்கும்படி செய்யப்பட்டிருந்தாலும், சேமிப்பு வசதிகள், பண்டக இரசீதுகளுக்கெதிராகக் கடன் வழங்கப்படுகின்ற வசதியினை அளிப்பதில் பெருமளவு உதவியினைச் செய்யும். பண்டகங்களை அதிக அளவில் பயன்படுத்துவதற்கு அளித்துவரப்படும் அரசினுடைய ஊக்குவிப்பு உணவு தானியங்கள் மற்றும் விளை பொருள்களுக்கு எதிராக அளிக்கப்படும் கடன்களைக் கட்டுப்படுத்துவதற்காக ரிசர்வ் வங்கியால் விடுக்கப்பட்ட பல வகையான கட்டுப்பாட்டு ஆணைகளின் கட்டுபாட்டிலிருந்து, பண்டகங்களின் இரசீதுகளுக்கு எதிராக வழங்கப்படும் கடன்கள், குறிப்பாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளன என்ற உண்மையிலிருந்து நன்கு தெரிகின்றது. 1961 ஆம் ஆண்டு மார்ச்சு முடிவில், பண்டக இரசீதுகளுக்கு எதிரான கடன்களின் அளவு சுமார் 5 கோடிக்கு இருந்தது. உரிமம் அளிக்கப்பட்டுள்ள (licensed) பண்டகங்களால் விடுக்கப்படுகின்ற இரசீதுகள், ஏற்கனவே அதிகாரிகளின் கவனத்தில் உள்ளதுபோல,

தகுந்த சட்டத்தின்மூலம் மாற்றுத் தன்மையைக் கொண்டவை களாக (negotiable) ஆக்கப்பட்டால், அது ஒரு வரவேற்கத்தக்க முன்னேற்றமாகும்; மற்றும் அது இத்தகைய இரசீதுகளுக்கு எதி ரான கடன்களை மிகவும் எளிதானவைகளாக ஆக்கும்.

பொதுவான முன்னெச்சரிக்கைகள்
(General Precautions)

சரக்குகள், மற்றும் சரக்குரிமைப் பத்திரங்களுக்கு எதிராக வழங்கப்படும் கடன்களின் விடயத்தில் எடுக்கப்படவேண்டிய முக்கியமான முன்னெச்சரிக்கைகளை நாம் சுருக்கமாகக்கூறிவிட்டு, பின்னர் வங்கியரின் பிணையங்கள் என்ற முறையில் முதன்மை யான சில சரக்குரிமைப் பத்திரங்களை ஆராய்வோம். தானியம் மற்றும் விளைபொருள்கள் ஆகியவைகளின் அடகினுடைய பிணையத்தின் மீதான கடன்களுக்காக இந்திய வங்கிகளால் பயன் படுத்தப்படுகின்ற உடன்பாட்டுப் படிவங்களுக்கு (Forms of Agreement) பின்னிணைப்பு-'ஆ', படிவம் எண்கள் 29, 29 (அ) மற்றும் 29 (ஆ) ஆகியவைகளைப் பார்க்கவும்.

கடன் பெறுவோர் நம்பிக்கையானவராகவும், அனுபவசாலியா கவும் இருக்கவேண்டும் (Borrower to be Trustworthy and Exberieneed)

சரக்குகள் மற்றும் சரக்குரிமைப் பத்திரங்கள் ஆகியவைகளின் பிணையத்திற்கு எதிராகப் பணம் கடன்வாங்க விரும்புகின்ற அவருடைய வாடிக்கையாளர் நம்பிக்கையானவராகவும், முன்கவன முள்ளவராகவும், தகுதியானவராகவும், மற்றும் அவர் கையாண்டு கொண்டிருக்கின்ற விளைபொருள் அல்லது சரக்குகளில் நடை முறை அனுபவம் கொண்டவராகவும் இருக்கிறாரா என்று கண்டறிவது வங்கியருக்கு மிகவும் அவசியமாகும். இத்தகைய நடவடிக்கைகளில் மோசடி இடர்வாய்ப்பு பெருமளவில் இருப்பதால் வாடிக்கையாளர் முற்றிலும் நம்பகமானவராக இருக்கவேண்டு மென்பது மிகவும் அவசியமாகும். எடுத்துக்காட்டாக, வாடிக்கை யாளரின் பண்டகத்தில் இருக்கின்ற 500 மூட்டை ஏலக்காய், கடன் ஒன்றிற்குப் பிணையமாக, ஒரு வங்கியருக்கு அளிக்கப்படுகின்ற பொழுது ஒவ்வொரு மூட்டையிலும் உள்ளதைச் சோதனை செய்து பார்ப்பது என்பது வங்கியரால் முடியாத ஒன்றாகும். அதிகபட்சம், அவைகளில் என்ன உள்ளது என்று அறிந்துகொள்வதற்கு ஒரு சில மூட்டைகளை வேண்டுமானால் அவரால் திறந்துபார்க்க முடியும். வங்கியரின் நோக்கிலிருந்து பார்த்தால், அவருடைய

வாடிக்கையாளரும்கூடத் தொழிலில் அதிகப் பழக்கம் கொண்டிருக்கவேண்டு மென்பது அவசியமாகும்; அவ்வாறிருந்தால், சரக்குகளை அவர், தமக்கு நன்மை பயக்கக்கூடிய விதத்திலும், அதனோடு சரக்குகளுக்கு எதிராகப்பணம் கடனளித்துள்ள வங்கியருக்கு நன்மை பயக்கும் விதத்திலும், விற்பனை செய்வதற்கு முடிந்தவராய் இருக்கலாம். பல சமயங்களில், தங்களுடைய வாடிக்கையாளர்களின் அனுபவமின்மை காரணமாக, வங்கியர் நட்டத்தை அடையவேண்டி நேரிட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட துறையில் ஈடுபட்டுள்ள, அனுபவமிக்க தொழில் செய்கின்ற ஒருவர் தம்முடைய வியாபாரத்திலுள்ள இடர்வாய்ப்புகளை நன்கு அறிந்தவராக உள்ளார். எடுத்துக்காட்டாக, உணவுப்பொருள் விற்பனைக் கடை (provision store) ஒன்றின் மேலாளர் ஒருவர், தம்முடைய அனுபவத்திலிருந்து, ஒரு குறிப்பிட்ட நாட்டில், குறிப்பிட்ட காலங்களில் எந்த உணவுப்பொருள்கள் வேகமாகச் சேதாரமடைவதற்கு அல்லது கெட்டுப் போவதற்கு உட்பட்டவை என்பதை அறிகிறார். தங்களுடைய வியாபார நலனை பாதுகாக்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள, அங்கீகரிக்கப்பட்ட வியாபாரச் சங்கங்களின் உறுப்பினர்களோடு தொழில் செய்வது (வங்கியருக்கு) விரும்பத்தக்கதாகும்.

பலவகையான சந்தைகளோடும் வங்கியர் பழக்கப்பட்டிருக்க வேண்டும் (Banker to be Familiar with Different Markets)

இந்தத் தொழிலை மேற்கொள்ளுகின்ற வங்கியர் ஒருவருக்கு, பருத்திச்சந்தை, கோதுமைச் சந்தை போன்ற பலவகையானசந்தைகளோடு பழக்கத்தைப் பெற்றுக் கொள்வதோடு மட்டுமன்றி, ஒவ்வொரு வியாபாரத்திற்கும் சிறப்பாக உள்ள சூழ்நிலைகளையும், பழக்கவழக்கங்களையும்பற்றி நேரடியாகப் பெற்ற அறிவினையும் பெற்றிருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். எடுத்துக்காட்டாக, பெருந்தொகையில் பணத்தை அவர் பருத்தி வியாபாரிகளுக்குக் கடன்வழங்கினுர் என்றால், பருத்திச் சந்தையின் சூழ்நிலைகளைப்பற்றிப் போதுமான அனுபவத்தை அவர் கொண்டிருக்கவேண்டும்; அதனால், எப்போது பருத்தியின் விலை அதிகரிப்படையச் செய்யப்பட்டுள்ளது (inflated) என்பதை அறியக் கூடியவராய் அவர் இருக்கலாம்; அவ்வாறில்லையெனில், அவைகளினுடைய சந்தைகளின் சூழ்நிலைகளுக்கேற்றவாறு, பொருள்களுக்கெதிரான கடன்களுக்குத் தேவையான எச்ச ஓரத்தை (margin) ஒழுங்குபடுத்துவதற்கு முடியாத நிலையில் அவர் இருப்பார். அதேபோல, அவைகளின் விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களோடு அவர் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை

யென்றால், வாடிக்கையாளரால் ஒப்புக்கொள்ளப்பட்ட எச்ச ஓரத்தை நிலை நாட்டும்படி தம்முடைய வாடிக்கையாளர்களை அழைப்பதற்கு அவர் முடியாத நிலையில் இருப்பார்; இது, வாடிக் கையாளரிடமிருந்து வரவேண்டியுள்ள தொகைக்கும் கீழே பிணை யத்தின் மதிப்பு வீழ்ந்துவிடுவதில் போய் முடியலாம். குறிப்பிட்ட ஒரு சந்தையில், "ரிங்குகளும்" ("Rings"). "கார்னர்களும்" (corners) கூட இருக்கக் கூடும்; எனவே, எந்த விளைபொருள் மற்றும் சரக்குகளுக்கு எதிராக அவர் கடன் வழங்கிக் கொண்டிருக் கொண்டிக்கின்றாரோ அவை சம்பந்தப்பட்ட சந்தைகளோடு நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருப்பது வங்கியருக்கு விரும்பத் தக்கதாகும்.

பண்டத்தின் தன்மை (Nature of the commodity)

அவ்வாறு செய்யவேண்டியது தேவையென்று வங்கியர் கண்டறியக் கூடிய பொழுதெல்லாம் பிணையத்தை விற்றுப் பண மாக்குவதற்கு வசதியாக, தயாராக விற்பனை ஆகக்கூடிய பண்டங் களை மட்டுமே அவர் ஏற்றுக்கொள்ளவேண்டும். மேலும், குறிப் பிடப்படும் கால அளவிற்குச் சேமித்து வைப்பதால் சேதாரமடை யக்கூடியவைகளாக அவை இருக்கக்கூடாது. சில தறுவாய்களில் அரிசி மற்றும் டோரியா (Toria) போன்ற விளைபொருள்கள் ஒரு சில ஆண்டுகளுக்குச் சேமித்து வைப்பதால் அதிக மதிப்புள்ளவை களாக ஆகின்றன. மற்றவைகளின் விடயத்தில், பிணையமாக ஏற்றுக்கொள்ளப் படுகின்ற விளைபொருள் நடப்புப் பருவகாலத் தியதாக இருக்கவேண்டும்; மற்றும் அத்தகைய பொருளுக்கெதிராக வழங்கப்படுகின்ற கடன்கள் அந்தப் பருவகாலம் முடியும் முன்னர்ச் சரிக்கட்டப்பட்டுவிட்டனவா (பெறப்பட்டு விட்டனவா) என்று வங்கியர் பார்க்கவேண்டும்.

சேமித்தல் (Storage)

அவை சேதமடைவதைத் தவிர்ப்பதற்கு மட்டுமன்றி, சிறு அளவிலான திருட்டு (Pilferage) முதலான இடர்வாய்ப்புகளுக்கு எதிராகக் காப்புச்செய்வதற்கும் கூட, விளைபொருள்களையும் சரக்குகளையும் சேமித்துவைப்பதில் பெரும் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். பண்டகப் பதிவேடு (Godown Register) ஒன்றில், எல்லாப்பண்டகங்களையும்பற்றிய தேவையான பதி வினை வைத்திருப்பது அவசியமாகும். ஒவ்வொரு பண்டகத் திற்கும் ஓர் எண் கொடுக்கப்படவேண்டும்; அதனுடைய கொள்ளள வினைப்பற்றிக் கருத்து ஒன்றினைக் கொள்வதற்காக அதனுடைய அளவுகள் (measurements) குறித்துக் கொள்ளப்படவேண்டும்.

சரக்கின் உரிமையாளரோடு அல்லது அதனை உடமை கொண்டுள்ள ஒரு முகவரோடு நடவடிக்கையிலீடுபடுதல் (To Deal with Owner of Goods or An Agent in possession)

இந்த வகையான பிணையங்களின் மீது வங்கியருக்கு உள்ள சட்டப்படியான உரிமை பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, ஒருபுறம், சரக்குகளின் உரிமையாளர் அல்லது அவைகளை உடமை கொண்டுள்ள முகவரோடு, அவர், தொழில் நடவடிக்கையிலீடுபட வேண்டும். மறுபுறம் ஈடாகக் கொடுக்கப்படும் சரக்குகளின் உண்மையான அல்லது குறிப்பு மூலமான—உடைமையை அவர் பெற்றுக் கொள்கிறாரா என்று பார்க்கவேண்டும். இதற்குக் காரணம், சரக்குகளை மாற்றிப் பெற்ற ஒருவர், மாற்றுமுறைப் பிணையப்பத்திரம் (Negotiable Security) ஒன்றினை மாற்றிப் பெற்ற ஒருவரைப் போலல்லாமல், 1930ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டத்தினுடைய, 27 முதல் 30 மற்றும் 54 (3) ஆகிய பிரிவுகளில் கூறப்பட்டுள்ள ஆறு தறுவாய்களில் தவிர இதர தறுவாய்களில், மாற்றித் தந்தவருடையதைவிடச் சிறந்த உரிமையைப் பெறமுடியாது.

ஆறு விதிவிலக்குகளாவன :

அ) சரக்குகளை விற்றுவிட்டு, சாக்குகளின் அல்லது சரக்குரிமைப் பத்திரங்களின் உடைமையைத் தொடர்ந்து தங்களிடம் வைத்திருப்பவர்கள் (பிரிவு 30 [1]).

ஆ) சரக்குகளை வாங்கிக் கொண்டு அல்லது வாங்குவதற்கு ஒப்புக் கொண்டு, விற்பனை செய்தவரின் சம்மதத்தோடு சரக்கின் அல்லது சரக்குரிமைப் பத்திரங்களின் உடைமையைப் பெறுகின்றவர்கள் (பிரிவு 30 [2]).

இ) வாணிக முகவர்களின் சாதாரணத் தொழில் வழக்கு முறையில் (Ordinary course of business) செயல்பட்டுக் கொண்டு, உரிமையாளருடைய சம்மதத் தோடு சரக்கு அல்லது சரக்குரிமைப் பத்திரங்களின் உடைமையைக் கொண்டுள்ள வாணிக முகவர்கள் (பிரிவு 27).

ஈ) சக உரிமையாளர்களின் (co-owners) அனுமதியுடன், சரக்குகளைத் தனியாகத் தம்மிடம் உடைமை கொண்டுள்ள பகுதி உரிமையாளர்கள் (pait owners) (பிரிவு 28).

உ) மாற்றிக் கொடுக்கப்பட்ட சமயத்தில் செல்லத்தகாதது என்று தள்ளுபடி செய்யப்படாத, தவிர்தகு ஒப்பந்தம் (voidahle contract) ஒன்றின் கீழ் சரக்குகளின் உடைமையைப் பெற்றுள்ளவர்கள் (பிரிவு 29).

ஊ) தம்முடைய பற்றுரிமையை (Line), அல்லது வழியிடை நிறுத்தம் (stoppoge-in-Transit) உரிமையைப் பயன் படுத்தியுள்ள பணம் செலுத்தப்படாத (unpaid) விற்பனையர் ஒருவர், தம்முடைய மறுவிற்பனை உரிமையைப் பயன்படுத்துகின்றபொழுது, பணம் செலுத்தப்படாத விற்பனையர் உரிமையாளராக இல்லாமலோ உரிமையாளரின் அதிகாரத்தின்கீழ் செயல்படாதவராகவோ இருந்தாலும்கூட, இரண்டாவதாக வாங்கியவர் நல்லதொரு உரிமையைப் பெறுகின்றார் (பிரிவு 54 [3]).

மேலே கூறப்பட்ட தறுவாய்களில், நல்லெண்ணத்துடன் வாங்குபவர்களுக்கு, அல்லது மதிப்பைக் கொடுத்து, அறிவிக்கையேதுமின்றி, அடகு வாங்கியவர்களுக்கு நல்லதொரு உரிமையை மாற்றிக் கொடுக்க முடியும்.

பிணையத்தினை உடைமை கொள்ளவேண்டும் (To take prssession of the Security)

தம்முடைய நலனைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு சரக்குகள், தன்னிடம் சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளன என்பதைப் பார்த்துக்கொள்ளவேண்டியது வங்கியருக்கு அவசியமானதாகும்; மற்றும் பொதுவாக, கடன் அளிக்கப்படுவதற்கு முன்னரே அவை தம்மிடம் சேர்ப்புச் செய்யப்படவேண்டுமென்பதை அவர் வற்புறுத்தவேண்டும். இருப்பினும், அவருடைய பண்டகத்தின் திறவு கோல்கள் வாடிக்கையாளரால் வங்கியருக்குக் கொடுக்கப்படுவது, மற்றும், காவலாளி யாராவது இருந்தால் அவருடைய பணிகள், வாடிக்கையாளரால் வங்கியருக்கு மாற்றிக்கொடுக்கப்படுவது, ஆகியவை, குறிப்பு மூலமான (constructve) சேர்ப்பு அல்லது உடைமை மாற்றத்தை ஏற்படுத்துவதால், இதற்காகச்சரக்குகளை, வாடிக்கையாளருடைய பண்டகத்திலிருந்து வங்கியரின் பண்டகத்திற்கு இடம்மாற்றித் தரவேண்டிய அவசியமில்லை.

"உடைமை (possession) என்பது இருபொருள் கொண்ட ஒரு சொல்லாகும்; அது வெறுமனே (ஒருவர்) கையில் உடைமை கொள்வதையோ (manual possession), வெறுமனே உடைமை கொள்வதற்கான உரிமையையோ குறிக்கலாம்." வங்கியிடமிருந்து ஒப்படைப்புக் கட்டளைகளைப் (delivery instructions) பெறுவதற்கான ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடித்தாலன்றி, சரக்குகளைத் தங்குதடையின்றி வெளியில் எடுத்துச் செல்லமுடியாது என்ற நிலை தோன்றுமாறு, திறவுகோலை வங்கிக்குக் கொடுப்பதில் அல்லது வேறு வழியில் சரக்குகளை வங்கியின் உடைமையில்

வைப்பதில், அடகு கொடுத்தவருக்கு இடர் வாய்ப்பு (difficulty) ஏற்படுகின்ற சூழ்நிலைகளும் உண்டு. இத்தகைய இடர்வாய்ப்புகள், எடுத்துக்காட்டாக, ஒரு தொழிற்சாலையின் விடயத்தில், சரக்குகள் பதனம் செய்யப்படவேண்டும் அல்லது கட்டுமானம் செய்யப்படவேண்டும் (fabricated) என்று உள்ளபோது எழுகின்றன. கடன் வாங்குவோருடைய இத்தகைய நியாயமான இடர்ப்பாடுகளைப் போக்கும் பொருட்டு, "ஆலை வடிவ" "(Factory Type)" அல்லது, "திறப்பு ரொக்கக் கடன்" (open cash credit) வசதிகள் அளிக்கப்படுகின்றன. இத்தகைய எல்லாத் தறுவாய்களிலும், பொருள்களின் உடைமை கடனாளியிடத்தில் (அடகு கொடுத்தவர்) இருந்த போதிலும், மற்றும், சாதாரணமாக நடப்பதுபோல, அவைகளின் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அவர் அனுமதிக்கப்பட்டபோதிலும், ஐயமின்றிப் பிணையந்தின் தன்மை ஓர் அடகினுடையதைப் போன்றதேயாகும். இத்தகைய தறுவாய்களில் பிணையம் ஓர் அடகுதானா என்று கண்டறிவதற்குரிய சோதனை, "சரக்குகளின் மீதான அடகினுடைய உரிமை (அடகு வாங்கியவரால்) வைத்துக் கொள்ளப்படுகிறது, அடகு கொடுத்தவர் சரக்கினை மெய்யாக உடைமை கொண்டிருப்பது அல்லது அவைகளின் நடவடிக்கையில் ஈடுபடுவது, அடகு வாங்கியவரால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் ஆகும்" என்பதே. இருப்பினும், சரக்குகள் தமக்கு அடகாகக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டுகின்ற தம்முடைய பெயர்ப்பலகையை (Name Plate), அதே சரக்குகளின் மீது ஏதாவது மோசடியான மற்றுமோர் அடகு ஏற்படுத்தப்படுவதை முடிந்த அளவு தவிர்க்கும் பொருட்டு, கட்டாயமாக நன்கு தெரிகின்ற ஓர் இடத்தில் தொங்கவிட்டுக் காண்பிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது வங்கியர் ஒருவருக்கு விரும்பத்தக்கதாகும். பல கடனாளிகள், வங்கியினுடைய பெயர்ப்பலகையைத் தொங்கவிட்டுக் காண்பிப்பது சந்தையில் தங்களுடைய மதிப்பினைப் பாதிக்கும் என்று வாதிடக்கூடும் என்பது உண்மை; ஆனால், இத்தகைய வாடிக்கையாளர்களைக் கையாளுவதில் நயமாக நடந்து கொண்டு முன்னெச்சரிக்கையை எடுத்துக்கொள்ளுவதில் தவறு செய்யக் கூடாது. ஏனென்றால், தற்காலத்தில் கடன்தான் வழக்குமுறையாக (விதி முறையாக) இருக்கின்றபொழுது வாடிக்கையாளரின் வாதத்தில் பொருளில்லை.

இருப்பினும், கடனை வழங்குகின்ற நேரத்தில் குறிப்பின் மூலமாக அறியக்கூடிய (constructive) உடைமையைக்கூடப் பெறுவது நடைமுறையில் முடியாததாக இருக்கின்றபொழுது, மற்றும்/அல்லது மேலே குறிப்பிடப்பட்ட முன்னெச்சரிக்கையை எடுத்துக் கொள்ளமுடியாது என்றால், வாடிக்கையாளரை அடைமான ஒப்

பந்தமொன்றில் ஈடுபடுமாறு வங்கியர் கேட்கலாம்; இதன்மூலம், வாடிக்கையாளர், வங்கியரால் அவ்வாறு செய்யும்படி கேட்கப் படுகின்றபொழுது, பின்னர்ச் சரக்குகளை அடகாகக் கொடுப்ப தற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த வழியில், ஐயமின்றி, வங்கியர் ஒருவர் சரக்குகள்மீது நியாய உரிமை (Equitable Title) ஒன்றினைப் பெறமுடியும்; ஆனால் இப்போதும்கூட அடைமான ஒப்பந்தம் பற்றிய அறிவிக்கையெதனையும் பெற்றுக் கொள்ளாது, சட்டப்படியான உரிமையை வேறு யாராவது பெற் றுக்கொண்டு, அதன் மூலம் வங்கியரை அவருடைய பிணை யத்தை இழக்கும்படி செய்யக்கூடிய ஓர் இடர்வாய்ப்பிற்கும் வங் கியர் ஆளாகின்றார்; ஏனென்றால், இத்தகைய ஒப்பந்தங்கள் நியாயத்தின்படியாக (equity) மட்டுமே நல்லவையெனக் கருதப் படும்; அவை சட்டத்தினால் ஒப்புக் கொள்ளப்பட்டவைகளல்ல. இந்தியாவில், சரக்குகளைப் பின்னர் (இரண்டாவதாக) அடகு பெற்ற ஒருவர், அதே சரக்குகள் தொடர்பாக அடகு ஒன்றினைக் கொடுப்பதற்கும் ஒப்புகின்ற பத்திரம் யாருக்கு முன்னதாக நிறை வேற்றிக் கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த நபருக்கும் முன்னதாக முன்னுரிமையைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர் என்று தீர்ப்பளிக் கப்பட்டது. (கோ-ஆபரேடிவ் ஹிந்துஸ்தான் பாங்க் லிட். எதி. சுரேந்த்ரநாத் டே, 59 கல் 667 [683]—Co-operative Hindusthan Bank Ltd. *v*. Surendranath De, 59 Cal. 667 [683]). மேலே கூறப் பட்ட விதியினை விளக்கிக் கூறுவதற்கு, எல்லோராலும் நன்கறியப் பட்ட ரி ஹாமில்டன் யங்க் அண்ட் கோ. (1905) 2 கி.பெ. 772 [In re Hamilton young & Co. (1905) 2 K.B. 772] என்ற வழக் கின் உண்மை நிகழ்ச்சிகள் கீழே தரப்படுகின்றன. நெசவுத் துணி களைக் கப்பலில் அனுப்பி வைக்கின்ற திருவாளர்கள் ஹாமில்டன் யங்க் அண்ட் கோ., துணிகளை வாங்கி, அவைகளைச் சலவை செய்து சாயமிட்டு, கல்கத்தாவைச் சேர்ந்த திருவாளர்கள் ஈவிங்க் அண்ட் கோ.விற்கு (Messrs. Ewing & Co.) வழக்கமாக அனுப்பி வந்தார்கள். ஹாமில்டன் யங்க் அண்ட் கோ. வின் துணிக் கொள் முதலுக்கு நிதி வழங்கிவந்த தி நேஷனல் பாங்க் ஆப் இந்தியா லிட்., ஹாமில்டன் யங்க் அண்ட் கோ. விடமிருந்து கீழ்க்கண்ட வடிவத்தில், பற்றுரிமைக் கடிதம் (Letters of Lien) ஒன்றினைப் பெற்றுக்கொண்டது: "தங்களின்மீது £...க்கான காசோலைகளை, கிழக்கே கப்பலில் அனுப்பப்படும்பொருட்டுத் தயாராகிக்கொண் டிருக்கின்ற சரக்குகளின் பிணையத்தின்மீது, ஒரு கடனாக, எழுதி யுள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அத்தொகையைத் தயவு கூர்ந்து எங்களுடைய கடன் கணக்கில் பற்று வைத்துக் கொள்ளுமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். இந்தக் கடன் தொகைக்குப் பிணையமாக,...............ன் கைவசமுள்ள, இணைக்

கப்பட்டுள்ள அவர்களுடைய இரசீதின்படியான, சரக்குகளைத் தங்கள் சார்பாகவும், தங்களுடைய பற்றுரிமைக்கு உட்பட்டதாக வும் நாங்கள் வைத்திருக்கிறோம். இந்தச் சரக்குகள் தயாரான வுடன் கல்கத்தாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டு, கப்பல் வழிச் சீட்டு சரியான முறையில் மேலெழுதப்பட்டுத் தங்களிடம் ஒப் படைக்கப்படும்; மற்றும், அப்பொழுது, மேலே சொல்லப்பட்ட கடன் தொகையை ரொக்கமாகவோ, அல்லது, கல்கத்தாவைச் சேர்ந்த ஈவிங் அண்ட் கம்பனியின்மீது எழுதப்பட்ட, உங்களால் மாற்றிக்கொடுக்கப்படவேண்டிய, மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட சரக்குகள் முதலியன தொடர்பான கப்பல் அனுப்பீட்டு பத்திரங் களால் (Shipping Documents) உத்தரவாதமளிக்கப்பட்ட, மாற் றுச் சீட்டு (Bill of Exchange) மூலம் கிடைக்கப்பெறும் பணத் திலிருந்தோ, திருப்பிச் செலுத்துவதற்கு உறுதியளிக்கின்றோம்.'' ஹாமில்டன் யங்க் அண்ட் கோ. கடனைச் செலுத்தத் தவறிய தன்பேரில், அவர்களுடைய நொடிப்பு நிலைப் பொறுப்புரிமையர் (Trustee-in-Bankruptcy), சலவை செய்பவர்களின் கையிலிருந்த சில சரக்குகளைக் கோரினர்; ஹாமில்டன் யங்க் அண்ட் கோ. வினால் வங்கியருக்கு அளிக்கப்பட்ட பற்றுரிமைக் கடிதம், வங் கியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் இடையேயான மிகவும் சாதா ரண வகையிலான நடவடிக்கை ஒன்றிற்கான அத்தாட்சிப் பத்திரமேயாதலால், ஹாமில்டன் யங்க் அண்ட் கோ.வின் நொடிப்பு நிலைப் பொறுப்புரிமையர் தம்முடைய கோரிக்கையில் வெற்றி பெறமுடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அளிக்கப்படுகின்ற சரக்குகள் அல்லது விளைபொருள்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளாக இருக்கவேண்டும் (Goods or Produce offered should be necessaries of Life)

பிணையமாக அளிக்கப்படும் சரக்குகள், எளிதாக விற்பனை செய்யக்கூடியனவாகவும், அநேகமாக, வாழ்க்கைக்கு இன்றியமை யாதனவாகவும் இருக்கின்றனவா என்று வங்கியர் பார்க்கவேண் டும். எடுத்துக்காட்டாக, கோதுமை, பருத்தி, சணல், சர்க்கரை போன்ற பொருள்களை, விலையில் குறிப்பிடும்படியான வீழ்ச்சி ஏதும் ஏற்படாமல், பெரிய அளவுகளில் விற்பனை செய்வது கடினமானது அன்று, மாறாக, அவைகளின் தேவை, ஏறக்குறைய வரையறை செய்யப்பட்டுள்ள முற்றுப்பெற்ற சரக்குகளை விற் பனை செய்வது கடினமானதாகும். வாழ்க்கைக்கு இன்றியமை யாத சரக்குகள் அல்லது பொருள்களுக்குச் சாதகமாக உள்ள மற்றொரு நன்மை, அவைகளின் விலைகள், ஒப்பீட்டடிப்படை யில், மிகவும் ஒரே சீரானவையாகும்; ஆகையால் அவைகளுக் கெதிராகக் கடன்வழங்குவதால் வங்கியர் ஒருவர் அடையக்கூடிய

இடர்வாய்ப்பு, அவைகளின் விலைகள் நடையுடைபாவனைகளில் ஏற்படும் மானாமரிப் போக்குகளைச் (Vagaries of Fashion) சார்ந்துள்ள மற்றச்சரக்குகளின் விடயத்தில் இருப்பதைவிடக் குறைவானதாகும்.

மதிப்பீடு செய்வதில் சரியான கவனம் (Proper care in Valuation)

சரக்குகளை மதிப்பீடு செய்வதில் வங்கியர் கவனமாக இருக்க வேண்டியுள்ளது. பிணையமாக அளிக்கப்படும் சரக்குகளின் அளவு, அதனோடு அவற்றின் விலை ஆகியவைகளைப்பற்றி வங்கியர் தம்மை நிறைவுபடுத்திக் கொள்ளவேண்டியுள்ளது. "கோதாஸ்"கள், "கட்டீஸ்"கள் (Kothas, Khatties) மற்றும் பண்டகங்கள் ஆகியவை முதன்முதலாக நிரப்பப்படுவது, வங்கியின் பொறுப்புள்ள ஒரு பணியாளரின் முன்னிலையில் செய்யப்பட வேண்டும். மேலும், நீண்டகாலத்திற்குச் சேமித்துவைக்கப்படும் பொழுது நெல், எடையை இழக்கின்றது; எனவே குறிப்பாக இரண்டு நடவடிக்கைகளுக்குமிடையே நீண்ட கால இடைவெளி இருக்கின்றபொழுது, விற்பனை செய்யப்படும்பொழுது அதனுடைய (நெல்லினுடைய) எடை, அது பிணையமாக ஏற்றுக் கொள்ளப்படும்பொழுது இருந்த அதே அளவு இருக்குமென அனுமானம் செய்துகொள்வது அவ்வளவு பாதுகாப்பானது அன்று. நிலத்தில் இருக்கும் பயிர்களுக்கு (Standing crops) எதிராகக் கடன், சில வேளைகளில், அளிக்கப்படுகின்ற ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற வேளாண்மைத்துறையில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில், வல்லுநர்கள் அல்லது அளவுமீறி அனுபவம் பெற்றுள்ள நபர்கள் மட்டுமே இத்தகைய பயிர்களின் மதிப்பினைச் சரியாக மதிப்பீடு செய்யமுடியுமாதலால், மதிப்பீட்டுப் பிரச்சினை மிகவும் சிரமமானதாகும். மதிப்பீடு செய்யப்பட்டவுடன், நிலத்திலிருக்கும் பயிர்களின் உண்மையான உரிமையாளர் வங்கியருக்கு ஓர் அடைமானக் கடிதத்தைக் (letter of hypothecation) கொடுக்கிறார்; மற்றும் உரிமையாளர், பயிர்களை அறுவடை செய்து, சேமித்து வைத்து, தாம் அளித்துள்ள கடன்களுக்கு உற்பத்தியாளர் (உரிமையாளர்) மீது முதன்மைப் பிணையத்தைக் கொண்டுள்ள வங்கியரின் சார்பில் விற்பனை செய்கிறார். இருப்பினும், இத்தகைய கடன்கள் அசாம், இலங்கை, நீலகிரி போன்ற இடங்களிலுள்ள தேயிலை, ரப்பர் மற்றும் காபி தோட்டங்களுக்கு எதிராக அளிக்கப்பட்டுள்ள சில கடன்களைத் தவிர, நாட்டு வங்கியரும், கூட்டுறவு வங்கிகளும் நாடு முழுவதும், விவசாயிகளுக்கு அவர்களுடைய வேளாண்மை நடவடிக்கைகளுக்கு நிதி வசதியளித்துவந்தபோதிலும்கூட, வணிக வங்கிகளிடத்தில் அதிகமாக

வழக்கத்தில் இல்லை. சராசரி இந்திய விவசாயி, பொதுவாக, அவருடைய வறுமை, அறியாமை, அறிவீனம் ஆகியவைகளினால் ஏற்பட்ட கடன்பளுவோடு வேலை செய்துகொண்டிருப்பதாலும், எளிதில் விற்பனை செய்ய முடியாத வேளாண்மை நிலம்தான் அவரால் அளிக்கமுடிந்த ஒரே பிணையமாக இருப்பதாலும், இந்தியாவில் உள்ள வணிக வங்கிகள், இயற்கையிலேயே அவருடைய பலவகையான வேளாண்மை நடவடிக்கைகளுக்குத் தேவையான பணத்தை விவசாயிக்குக் கடனாகக் கொடுப்பதென்ற யோசனையை ஏற்றுக்கொள்வதில் மிகவும் தயங்குகின்றன. இருப்பினும், இந்தியாவிலுள்ள வங்கிகள், தற்போது, கிராமப்புறங்களில் கிளைகள் திறக்கப்பட்டதன் விளைவாக, இந்த வகையான தொழிலில் சிறிது அக்கறைகாட்ட முயற்சிசெய்துகொண்டிருக்கின்றன.

மிகை மதிப்பீட்டிலுள்ள அபாயம் (Danger of Over-valuation)

மதிப்பீடு என்ற நோக்கிலிருந்து பார்த்தால், சரக்குகளும் விளைபொருள்களும் வேறு சில பிணையங்களைவிடச் சிறந்தவைகளெனினும், அவைகளை மதிப்பீடு செய்வது தொடர்பாக மோசடி நடைபெறுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருப்பதால், அவைகளை மதிப்பீடு செய்வதில் சில இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. வழக்கமாக, அவைகளை மதிப்பீடு செய்வதற்குத் தகுதிவாய்ந்த தரகர் ஒருவரை வங்கியர் அமர்த்தவேண்டும். இடாப்பில் (Invoice) காட்டப்பட்டுள்ள சரக்குகளின் அடக்கவிலையை (cost) வங்கியர் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்; ஆனால், இடாப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் சரக்குகளின் விலைகள் வேண்டுமென்றே அதிகப்படுத்தப்பட்டிருக்கக்கூடுமாதலால், அவைகளின்மீது அவர் முழுமையாகச் சார்ந்திருக்கமுடியாது. முடியுமானால், இடாப்பு விலைகளை (Invoice Prices) விற்பனை விலைகளோடு வங்கியர் ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும். அவரிடம் விடப்பட்டுள்ள சரக்குகள் விற்பனை செய்யமுடியாதவைகளாகவோ, அவைகளின் இடாப்பு விலையில் குறிப்பிடுமளவிற்குக் குறைப்பு செய்த பின்னர் மட்டுமே விற்பனை செய்யப்படக்கூடியவைகளாகவோ இல்லை என்பதைக் கூட வங்கியர் பார்க்கவேண்டியுள்ளது. கட்டுமம் (packed) செய்யப்பட்ட சரக்குகளின் விடயத்தில், நம்பகமான கட்டுமம் செய்பவர்களின் (packers) சான்றிதழ்கள், பொதுவாக, நம்பக் கூடியவைகளாக இருக்கலாம்.

அடகு வைக்கப்பட்டுள்ள சரக்குகளுக்குத் தகுந்த சேமிப்பு மற்றும் காப்பீடு (Proper Storage and Insurance of Goods Pledged)

எந்தச் சரக்குகளுக்கு எதிராகப் பணம் கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளதோ, அவை, திருட்டு மற்றும் தீ மூலமாக ஏற்படக்

கூடிய நட்டத்திற்கு எதிராகத் தகுந்தமுறையில் சேமிப்பு, மற்றும் காப்பீடு செய்யப்பட்டுள்ளனவா என்று வங்கியர் பார்க்கவேண்டும். இந்தியாவில், காப்பீடு அலுவலகங்களால் (tariff offices) விடுக்கப் படுகின்ற, தீக்காப்பீட்டுப் பத்திரங்கள் அனைத்துமே, "சராசரி" நிபந்தனையின் ("Average" condition) செயலுக்கு உட்பட்டவை என்ற காரணமாக, கடன்தொகை எவ்வளவாக இருப்பினும், சரக்குகள் அவைகளின் முழு மதிப்பிற்கும் காப்பீடு செய்யப்பட பட்வேண்டும். இந்த விடயத்தில், ஒரு வங்கி, ஒருபோதும் மிகக் கவனமாக இருக்கமுடியாது. எடுத்துக்காட்டாக, பண்டகம் ஒன்றில் சேமித்து வைக்கப்பட்டுள்ள விளைபொருள் போதுமான அளவு தீ மற்றும் திருட்டு ஆகியவைகளுக்கு எதிராகக் காப்பீடு செய்யப்பட்டிருக்கின்றபொழுது, பலத்த மழை காரணமாகப் பண்டகத்தின் கூரையில் ஏற்படக்கூடிய ஒழுக்கு (leakage) காரணமாகப் பழுதடையக்கூடிய அபாயம் அங்கு ஏற்படலாம்; இது, பிணையம், "தன்னுடைய சொந்தத்தலையையே சாப்பிட்டு விடுவதற்குக்" காரணமாக இருக்கலாம் (may cause the security to "eat its own head off"). அருகிலுள்ள ஒரு பட்டறை (workshop), ஒரு வேதியியல் ஆய்வுக்கூடம், அடுத்துள்ள ஒரு பட்டாசுக்கடை அல்லது ஒரு வெடிமருந்துக்கிடங்கு, ஆகியவை பண்டகத்திற்குச் சேதாரம் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கக் கூடுமாதலால், பண்டகம் இருக்கின்ற இடத்தைக் கவனத்துடன் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அது ஒரு கால்வாய், அல்லது ஓர் ஆற்றுக்கு அருகில் இருந்தால் வெள்ளம் ஒன்று (a flood) அபாயமானதாக ஆகலாம். கட்டடத்திலுள்ள, குறைபாடுடைய மின்சார இணைப்புகளின் காரணமாகப் பண்டகம் தீவிபத்திற்கு உள்ளாகலாம். சேமித்து வைக்கப்பட்ட விளைபொருள் போது மான அளவு காப்பீடு செய்யப்படாமல், அல்லது பண்டகம் பாதுகாப்பானதாக இல்லாமல் இருந்தால், அதனை வேறெங்கா வது பண்டகத்திலிடுவதற்கான தேவையான அதிகாரத்தை வாடிக் கையாளரிடமிருந்து வங்கியர் பெற்று, வாடிக்கையாளரின் செலவில் அதனைப் போதுமான அளவில் காப்பீடு செய்து வைத்திருக்க வேண்டும். வாடகை, காவலாளிகளின் சம்பளம், காப்பீட்டுக் கட்டணம் போன்ற வங்கியர் செய்யக்கூடிய செலுத்துகைகள் கடனின் ஒரு பகுதியாகக் கருதப்படும் என்பதையும், கடனளிக் கப்பட்ட தொகைக்கு உள்ளதுபோல அதற்கும் வட்டி உண்டு என்பதையும் வைப்பு உடன்பாட்டில் (Agreement of Deposit) தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

வெளியீடுகளைப் பெறுத்தமட்டில் தீவிரக் கண்காணிப்பாக (Strict Supervision Regarding Releases)

சரக்கினை (பண்டகத்திலிருந்து) வெளியில் செல்ல அனுமதிக்கின்றபொழுது, வெளியில் செல்லும் விளைபொருளினுடைய விகிதாச்சாரப்படியான பதிப்புப்பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதை அறிய வங்கியர் கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும். சரியான அளவுள்ளபொருள் தான் வெளிச்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள பிணையம்இன்னும் பாக்கியுள்ளகடன்தொகையை உத்தரவாதம் செய்வதற்குப் போதுமான அளவு உள்ளது என்றும் அறிந்து கொள்வதற்கு அவர் தாமே மேற்பார்வை செய்யவேண்டும் அல்லது பொறுப்புள்ள ஒரு வேலையாளைப் பதிலுக்கனுப்ப வேண்டும். வாடிக்கையாளர்களால், பண்டகக் காவலாளிகளின் உடந்தையோடு செய்யப்பட்ட தேசடி காரணமாக, சில வேளைகளில், வங்கிகள் பெரும் தொகையில் பணத்தை இழந்துள்ளன; பண்டகக் காவலாளிகள், பக்சிஸ் (bakshish) என்னும் இலஞ்சப் பணத்தைச் சிறிது பெற்றுக்கொண்டதற்குப் பதிலாக, வங்கிகளால் அதிகாரமளிக்கப்பட்டதைவிட அதிக அளவிலான விளை பொருளையும் சரக்குகளையும் வெளியில் எடுத்துச்செல்ல வாடிக்கையாளர்களை அனுமதிக்கின்றனர். பல தரப்படுத்தப்பட்ட மற்றும் பல வகையான விளைபொருள்கள் அடகாகக் கொடுக்கப்பட்டுள்ளபொழுது, கடன் வாங்கியவர், விற்கப்படத்தக்கதான தரங்களை மட்டுமே வெளியில் எடுத்துச் செல்கிறார், எந்தச் சரக்குகளுக்கு எளிதில் சந்தையை வங்கியர் கண்டறிய முடியாதோ, எவைகளின் மதிப்பு அவருடைய கடனைத்திருப்பிச் செலுத்துவதற்குப் போதுமானதாக இருக்காதோ அத்தகைய பொருள்களின் சுமையைக் கொண்டவராக வங்கியர் இருக்கின்ற நிலை அடிக்கடி தோன்றுகிறது. அடகு வைக்கப்பட்டுள்ள விளைபொருள், நீண்டகாலச் சேமிப்பின் காரணமாக கெட்டோ, சேதாரமடைந்தோ போகவில்லை என்பதைக் கண்டறிவதற்கு ஒழுங்கான கண்காணிப்பு அல்லது மேற்பார்வைக்கும் வங்கியர் ஏற்பாடு செய்யவேண்டும். பண்டகக் காவலாளிகளால் செய்யப்படும் எல்லா ஒப்படைப்புகளும் (deliveries), வங்கியினுடைய மேலாளர், முகவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள வங்கியினுடைய வேறு யாராவது அதிகாரியால் கையொப்பமிடப்பட்ட ஒப்படைப்பு ஆணைக்கு (delivery order) எதிராகத்தான் செய்யப்பட வேண்டுமென்பது சொல்லத்தேவையில்லை. குறிப்பிடப்பட்ட பொருள்தான் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை மட்டுமின்றி, பழைய இருப்பு நீண்டகாலத்திற்குத் தங்கிக் கிடக்கும்படி செய்துவிட்டு, ஒப்பிட்டுப்பார்க்கையில், புதிதாக வந்தவை ஒப்படைப்புச் செய்யப்படவில்லை

என்பதையும் உறுதிப்படுத்துவதற்காக, ஒப்படைப்பு ஆணைகள், சிப்பங்கள் (packages) அல்லது கட்டுமங்களின் (bales) எண்ணிக்கை, மற்றும் பண்டக இருப்புப் பதிவேட்டிலிருந்து (Godown Stock Register) எடுக்கப்பட்ட தனிப்பட்ட எண்கள் முதலியன குறிக்கப்பட வேண்டும். பொறுப்புள்ள அதிகாரிகளால் ஒழுங்கான திடீர் மேற்பார்வையின்மூலம் பயனுள்ள கட்டுப்பாட்டினையும் கண்காணிப்பையும் நிலைநாட்டுவதற்கு, சிப்பங்களாகவும் கட்டுகளாகவும் இருக்கின்ற இடத்தில் எண்ணுவதற்கு வசதியான வரிசைகளாகவும், பெருமளவில் இருக்கின்ற இடத்தில் எடையையும் அளவுகளையும் எடுப்பதற்கு வசதியாக அமைத்தும், முடிந்த அளவு சரக்குகள் சேமித்துவைக்கப்படவேண்டும்.

சரக்குரிமைப் பத்திரங்களுக்கு எதிராகக் கடன்கள்
(Advances Against Documents of Title to Goods)

சரக்குரிமைப் பத்திரங்களுக்கு எதிராக வழங்கப்படும் கடன்கள் தொடர்பாக எழக்கூடிய குறிப்பிட்ட அம்சங்களை ஆராய்வதற்கு முன்னர், சரக்குகளின் மீது உடைமை அல்லது கட்டுப்பாடு கொண்டிருப்பதற்கு அத்தாட்சியாக, சாதாரண தொழில் நடவடிக்கையில் பயன்படுத்தப்படுகின்ற சில முதன்மையான பத்திரங்களை விளக்கிக் கூறுவது இன்றியமையாததாகும்.

பின்வருவன முதன்மையான சரக்குரிமைப் பத்திரங்களாகும்;

1. கப்பல் வழிச் சீட்டுகள் (Bills of Lading).
2. துறைமுக ஆணைகள் (Dock warrants)
3. பண்டகக் காவலாளியின் சான்றிதழ்கள் அல்லது பண்டக இரசீதுகள் (warehouse-keeper's certificates or warehouse Receipts).
4. சேர்ப்பு (அல்லது ஒப்படைப்பு) ஆணைகள் (Delivery orders).
5. இரயில்வே இரசீதுகள் (Railway Receipts).

கப்பல் வழிச் சீட்டு (Bill of Lading)

ஒரு கப்பல் வழிச் சீட்டு (பின்னிணைப்பு-'ஆ', படிவம் எண் 34 பார்க்கவும்) என்பது, சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகள் கப்பலின்மேல் சரியான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதை ஒப்புக்கொண்டு, கப்பல் கட்டணமும், கப்பல் வழிச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இதரக்கட்டணங்களும் ஒழுங்காகச்

செலுத்தப்பட்டிருந்தால், அவை பெற்றுக்கொள்ளப்பட்ட போது இருந்த அதே முறையிலும் நிலையிலும் அனுப்பப்பெற்றவருக்கு, அல்லது அவரது ஆணைக்கு அல்லது அவரால் ஒதுக்கிக் கொடுக் கப்பட்டவர்களுக்குச் சரக்குகளைச் சேர்ப்பிக்கின்ற பொறுப்பினை ஏற்றுக் கொண்டு, ஒரு கப்பலின் தலைவரால் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற நபரால் விடுக்கப்பட்டு, கையொப்பமிடப்பட்ட ஒரு பத்திரமாகும்.'' (வங்கியல் நடைமுறையும் சட்டமும்— எச். பி. செல்டன் பக்கங்கள் 399, 400-practice and Law of Banking by H. P. Sheldon, pp. 399 and 400). ஒரு கப்பல் வழிச் சீட்டு, குறிப்பிட்ட விளக்கம் மற்றும் எடை ஆகியவைகளைக் கொண்ட சிப்பங்கள் கப்பலின்மேல் வைக்கப்பட்டன என்பதற்கான, அதனைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்வதற்கான (prima facie) ஓர் அத்தாட்சியாக இருந்தபோதிலும், கப்பலின் தலைவர் அத்த கைய விளக்கம் கொண்ட சரக்குகள் கப்பலில் உண்மையில் வைக் கப்படவில்லை என்று மெய்ப்பிப்பதற்கு உரிமையினைக் கொண் டுள்ளார் என்றும் கூறலாம். அவர் என்ன செய்கிறார் என்றால், கப்பலில் அனுப்பப்படுவதற்குள்ள குறிப்பிட்ட கட்டுகள் அல்லது பெட்டிகள், இவ்வளவு எண்ணிக்கையில் அல்லது எடையில், அல்லது எண்ணிக்கையிலும், எடையிலும், உள்ளன என்று வெறுமனே சான்றளிக்கிறார்; அதனால், அவை உண்மையில் எவற்றைக் கொண்டுள்ளன என்பதற்கு அவர் எந்தவகையிலும், பொறுப்பாளியாகமாட்டார். கப்பலினுடைய பேணுதல் மற்றும் பாதுகாப்பு ஆகியவைகளுக்காக வேண்டுமென்றே ஏற்படுத்தப் பட்ட நட்டம்—எடுத்துக்காட்டாக கப்பல் மிகவும் அதிகமாகப் பாரம் ஏற்றப்பட்டிருக்கும் பொழுது, கப்பலிலிருந்து சரக்கினைக் கடலில் எறிந்து விடுவது—சம்பந்தப்பட்ட எல்லா நபர்களிடை யேயும் எவ்வாறு பகிர்ந்துகொள்ளப்படவேண்டும் என்பதற்கான ஓர் உடன் பாட்டினைப், பொதுவாக, கப்பல்வழிச்சீட்டு கொண்டுள்ளது. பொதுவாக, கப்பல்வழிச்சீட்டுகள் மூன்று தொகுதிகளாக (sets of three) எழுதப்படுகின்றன. செல்லும் வழியில் காணாமல் போய்விடக்கூடிய இடர்வாய்ப்பினை தவிர்க்கும்பொருட்டு, ஒரு படிமுதல் அஞ்சலில் அனுப்பப்படு கிறது; மற்றொன்று, அடுத்த அஞ்சலில் அனுப்பப்படுகிறது; மூன்றாவது படி, கப்பலில் சரக்கினை அனுப்புபவரால் வைத்துக் கொள்ளப்படுகிறது. வியாபார வழக்காற்றுச் சட்டத்தின் (Law marchpnt) கருத்துப்படி, கப்பல் வழிங்சீட்டுகள் எப்போதும் சரக்குரிமை அடையாளங்களாகக் கருதப்படுகின்றன. சாண்டொஸ் எதி. மக்ளீன் (1883) 11. கியூ. பெ. டி., 327 (sanders v. Maclean (1883), 11 Q.B.D. 327) என்ற வழக்கில், போவென். எல். ஜே. (Bowen. L.J·) என்பவர் கூறினார், "சரக்கேற்றியின் (carrier)

கைகளில் இருக்கின்றபொழுது, கடலில் உள்ள ஒரு சரக்கு, கட்டாயமாக, உண்மையான சேர்ப்பினைச் செய்யப்படுவதற்கு முடியாத நிலையில் உள்ளது. சரக்கு இடம்பெயர்ந்து கொண்டு பயணத்தில் இருக்கின்ற அந்தக் காலத்தில், வியாபார வழக்காற்றுச் சட்டத்தினால், கப்பல் வழிச் சீட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள சரக்கிற்கு அடையாளமாக உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது; மேலெழுதல் செய்து (Endrosement) கப்பல்வழிச் சீட்டினைச் சேர்பபுச் செய்வது, சரக்கினைச் சேர்ப்புச்செய்ததற்கு அடையாளமாக ஆகின்றது. சரக்குகளை உண்மையாகச் சேர்ப்புச் செய்கின்ற சூழ்நிலைகளில் சொத்துரிமை மாற்ச் செல்வதைப் போலவே, சொத்துரிமை (ஒருவரிடமிருப்து மற்றவருக்கு) மாறிச் வருக்கு) மாறிச் செல்லவேண்டுமென்பது தொடர்புடைய நபர்களின் விருப்பமாக இருக்கின்ற பொழுதெல்லாம், கப்பல்வழிச் சீட்டினை இத்தகைய மேலெழுதல் செய்து சேர்ப்புச் செய்வதன் மூலம், சரக்குகளில் உள்ள சொத்துரிமை மாறிச் செல்கிறது. சரக்குகளில் உள்ள சொத்துரிமையை மாற்றிக்கொடுப்பதற்காகவும், மற்றும் அதனுடைய முழு உடைமையையும் கொள்வதற்கான மேலெழுதப் பெற்றவருடைய உரிமையை முடிவானதாக ஆக்குவதற்காகவும், கரையில் வந்து சரக்குச்சேர்ந்து, கப்பல் வழிச் சீட்டின் கீழ் உரிமையோடு அதனைக் கோருகின்ற யாருக்காவது அது முழுமையாகச் சேர்ப்புச் செய்யப்படும்வரை, கப்பல் வழிச்சீட்டு ஓர் அடையாளமாகச் செயலில் இருக்கிறது; மற்றும், அது சரக்குகளின் மீதான முழு உரிமையை மட்டுமன்றி, சரக்கனுப்பியவருக்கும் கப்பல் உரிமையாளருக்குமிடையேயான, சரக்குக் கொண்டு செல்வதற்கான ஒப்பந்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட எல்லா உரிமைகளையும் கூட, தன்னோடு கொண்டு செல்கிறது. அது, சரக்குகள் வைத்திருக்கப்படுவதற்கு வாய்ப்புள்ள, மாறிக் கொண்டேயிருக்கின்ற அல்லது நிலையான பண்டங்களின் கதவுகளைத் திறப்பதற்காக, சரியான உரிமையாளரின் கைகளிலுள்ள ஒரு திறவுகோல் ஆகும். சரக்கனுப்பியவரால் முதலில் பயன்படுத்தப்படும் மூலக்கப்பல்வழிச் சீட்டின் ஏதாவது ஒரு தொகுதிக்கு, மேலே குறிப்பிடப்பட்ட விளைவாற்றலும், சக்தியும் உண்டு. இவ்வாறு உண்டாக்கப்பட்ட மேலேழுதப் பெற்றவரின் (endorsee) உரிமையைத் தொடர்ந்து வைத்திருப்பதற்காகத்தவிர, ஏமாற்றுவதற்கென்றே அவை மோசடி செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டாலன்றி, முதல் தொகுதிக்கு எதிராக, தொகுதியினுடைய மற்ற மூலப்படிகள் (orginals), முற்றிலும் விளைவு எதனையும் ஏற்படுத்தமுடியாதவை, மற்றும் எந்தவகையான விரும்பிய பயனையும் கொண்டிராதவை ஆகும்."

கப்பலின்மேல் இல்லாத சரக்குகளுக்கு விடுக்கப்பட்ட கப்பல் வழிச்சீட்டுகள் (Bills of Lading Issued for Goods not on Board)

கப்பலின்மேல் இல்லாத சரக்குகளுக்குக் கப்பல் வழிச்சீட்டு ஒன்று விடுக்கப்பட்டிருந்தால், விற்பனை அல்லது அடகு மூலமாக அதனை மாற்றிப்பெற்றவர், கப்பலில் அனுப்பப்படாத சரக்குகளின்மீது எந்த உரிமையையும் பெறமுடியாது; ஆனால், கப்பல் நிறுமம் முரண்தடையின் (estoppel) அடிப்படையில் நட்டத்தினை ஈடுசெய்வதற்குப் பொறுப்பாளியாக ஆக்கப்படலாம்.

கப்பல் வழிச்சீட்டுக்கும், மாற்றுச் சீட்டுக்குமுள்ள வேறுபாடு (Bill of Lading Distinguished from Bill of Exchange)

என்ன பொருளில் மாற்றுச்சீட்டு ஒரு மாற்றுமுறை ஆவணம் (Negotiable Instrument) என்று குறிப்பிடப்படுகின்றதோ அதே பொருளின், கப்பல் வழிச்சீட்டு ஒரு மாற்றுமுறை ஆவணம் அன்று என்று கூறலாம். ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணமும் பணத்தைச் செலுத்துவதற்கான ஓர் உறுதிமொழியை அல்லது பணத்தைச் செலுத்துவதற்கான ஓர் ஆணையைத் தன்னுள்ளே கொண்டுள்ளது. அது பணத்தின் ஓர் அடையாளம் (symbol) ஆகும்; அந்த முறையில், மதிப்பினை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றுவதற்கும், தூரத்து இடங்களிலுள்ள கணக்குகளைத் தீர்வு செய்வதற்கும் ஒரு மாற்றுச்சாதனமாகவும், கடன்களை உரிமை மாற்றித் தருவதற்கு வசதியான ஒரு முறையாகவும் செயல்பட்டு பணத்தினுடைய சில பணிகளை அது செய்கின்றது. ஒரு கப்பல் வழிச் சீட்டு சரக்குகளின் சார்பாக அவைகளுக்குப் பதிலாக உள்ளதே அன்றி பணத்திற்குப் பதிலானது அன்று; எனவே மேலே குறிப்பிடப்பட்ட பணத்தினுடைய பணிகளில் எதையும் அது செய்வதில்லை. மாற்று முறை ஆவணம் ஒன்றினைப்போலவே, ஒரு கப்பல் வழிச்சீட்டு சேர்ப்புச் செய்தல், அல்லது மேலெழுதல் செய்து சேர்ப்புச்செய்தல் மூலம் மாற்றிக் கொடுக்கப்படலாம். ஒரு மாற்று முறை ஆவணத்தின் விடயத்தில் உள்ளது போலவே ஒரு கப்பல் வழிச் சீட்டினை மாற்றிப்பெற்றவர் தம்முடைய சொந்தப் பெயரில் வழக்குத்தொடரமுடியும். ஆனால் அதனோடு இரண்டு ஆவணங்களுக்குமிடையேயுள்ள ஒற்றுமை முடிவடைகிறது. ஒரு குறிப்பிட்ட நபருக்குச் செலுத்தப்பட வேண்டிய ஒரு மாற்று முறை ஆவணத்தில், "ஆணை", அல்லது "கொணர்பவர்" போன்ற சொற்கள் இல்லையென்றாலும்கூட அது மாற்றிக் கொடுக்கத்தக்க ஓர் ஆவணமாகும்; ஆனால் "அ" என்ற நபருக்குச் சாதகமாக எழுதப்பட்ட ஒரு கப்பல் வழிச் சீட்டில், "ஆணை" அல்லது "கொணர்பவர்" என்ற சொற்கள் இல்லாமல்

இருந்தால் அதனை மாற்றிக் கொடுக்கமுடியாது. சாதாரணமாக, கப்பல் வழிச்சீட்டு ஒன்றினை மாற்றிப்பெற்றவர், அவருக்கு மாற்றிக் கொடுத்தவருக்கு இருந்ததை விடச் சிறந்த உரிமையைப் பெற முடியாது; சில தறுவாய்களில் அவர் அவ்வாறு பெற்றார் என்றால், அது வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ள சட்டச்சரத்துகளின் (1930ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டம், பிரிவுகள் 27 மற்றும் 30) காரணமாகவே அன்றி, ஆவணத்திலேயே உள்ள ஆவண மாற்றுத் தன்மையின் காரணமாக அன்று. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, ஆணைக்குச் செலுத்தப்படவேண்டிய, மற்றும் சரியான முறையில் மேலெழுதல் செய்யப்பட்ட, அல்லது கொணர்பவருக்குச் செலுத்தவேண்டிய மாற்றுச் சீட்டு ஒன்று திருடப்பட்டுவிட்டால், அதனை நல்லெண்ணத்துடன், மதிப்புள்ள மறுபயனைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளுகின்ற நபர் நல்ல உரிமையைப் பெறுகிறார். இருப்பினும், ஒரு கப்பல் வழிச்சீட்டின் விடயத்தில், அதனை மாற்றிப்பெற்றவர், எடுத்துக்காட்டாக, சரக்கு விற்பனைச் சட்டத்தின் 27 மற்றும் 30 ஆகிய பிரிவுகளின் கீழ், அல்லது ஒப்பந்தச் சட்டத்தின் 178ஆவது பிரிவின்கீழ் உள்ளது போன்ற தனிச்சிறப்புக் காப்புவாசகம் ஏற்படுத்தப்பட்டு இருந்தாலன்றி, அதனை மாற்றிக் கொடுத்தவரைவிடச் சிறந்த உரிமையைப் பெறமுடியாது. அதனை மாற்றிக் கொடுத்தவர் உரிமை எதனையும் கொண்டிருக்கவில்லையாதலால், திருடப்பட்ட கப்பல் வழிச்சீட்டு ஒன்றினை மாற்றிப்பெற்றவர் உரிமை எதனையும் பெறமுடியாது. ஒரு கப்பல் வழிச்சீட்டு "மாற்றுத் தன்மை இல்லை" என்ற கீறலைக்கொண்டுள்ள காசோலையோடு (cheque) சிறிது ஒற்றுமை கொண்டுள்ளது. இருப்பினும், சில சூழ்நிலைகளில் ஒரு கப்பல் வழிச்சீட்டு, "மாற்றுத்தன்மை இல்லை" என்ற கீறலைக் கொண்டுள்ள காசோலை பெற்றிருப்பதைவிட மிகவும் பரந்த அளவில் ஆவணமாற்றுத் தன்மையைப் பெறுகின்றது. சர் ஜான் பேஜட் (Sir John Paget) என்பவரின் கூற்றுப்படி, "கப்பல் வழிச்சீட்டுகளால் பெறப்பட்டுள்ள, ஆவண மாற்றுத் தன்மையை ஒத்துள்ள ஒரே தனிச்சிறப்புக்கூறு யாதெனில், நல்லெண்ணத்துடன் மதிப்பினைக் கொடுத்து மாற்றிப்பெறுகின்ற ஒருவருக்கு அவை அதிகாரத்துடன் மாற்றிக்கொடுக்கப்படுகின்ற பொழுது, செலுத்தப்படாத விற்பனையர் கொண்டுள்ள நடுவழி நிறுத்த (Stoppage in Transit) உரிமையைத் தோற்கடிக்கின்றன என்ற, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அவைகளின் தகுதியேயாகும்." (சரக்கு விற்பனைச் சட்டம், 1930-ன் பிரிவு 53ஐப் பார்க்கவும்) அப்படியில்லையெனில், சரக்குகளை வாங்கியவர் நொடிப்புநிலை அடைந்தவராக (insolvent) இருக்கின்றபொழுது, விற்கப்பட்ட சரக்குகள் தொடர்பாக, வாங்கியவரால் பணம்

செலுத்தப்படுகின்ற வரையில், நடுவழிப் பயணத்திலுள்ள சரக்குகளை நிறுத்திவைத்து, அவைகளின் உடைமையை, அவை பயணத்தில் இருக்கும்பொழுது திரும்பப் பெறுவதற்கான உரிமையைச் செலுத்தப்படாத விற்பனையர் பெற்றுள்ளார்.

துறைமுக ஆணைகள் (DuckWarrants)

ஒரு துறைமுக ஆணை (பின்னிணைப்பு-'ஆ', படிவம் எண் 35ஐப் பார்க்கவும்) என்பது, ஒரு துறைமுக அல்லது பண்டக நிர்வாகியால், அல்லது கப்பல் சரக்கேற்றுமிட உரிமையாளரால் விடுக்கப்பட்டு, அதில் விவரித்துக் கூறப்பட்டுள்ள சரக்குகள் பெறப்பட்டுள்ளன என்றும், மற்றும் அவை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள நபருக்கு அல்லது மேலெழுதல் மூலமாக அவரால் உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டவர்களுக்குச் சேர்ப்புச் செய்யப் படவேண்டியவை என்றும் கூறுகின்ற ஓர் பத்திரமாகும்.

பண்டக நிர்வாகியின் சான்றிதழ்கள் (Warehouse Keeper's Certificates)

ஒரு பண்டக நிர்வாகியின் சான்றிதழ் (பின்னிணைப்பு-'ஆ', படிவம் எண் 36 பார்க்கவும்) என்பது ஒரு பண்டக நிர்வாகியால், சான்றிதழில் விவரித்துக் கூறப்பட்டுள்ள குறிப்பிட்ட சரக்குகளை அவர் தம்மிடம் வைத்திருக்கிறார் என்றும், மற்றும் சான்றிதழ் யாருடைய பெயருக்கு எழுதப்பட்டுள்ளதோ அந்த நபருடைய கட்டளைகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார் என்றும், சான்றளித்துக் கொடுக்கப்படுகின்ற ஓர் பத்திரமாகும். அது ஒரு வைப்பு இரசீது (Deposit Receipt) மட்டுமேயாகும்; எனவே மாற்றிக்கொடுக்கத்தக்கதன்று. இந்த வகையான பத்திரம் ஒரு சேர்ப்பு ஆணையிலிருந்து (Delivery Order) வேறுபடுத்தப்பட வேண்டும். சரக்கு உரிமையாளர் சரக்குகளைப் பண்டகத்திலிருந்து வெளியில் எடுக்க விரும்பினால், பண்டக நிர்வாகியிடமிருந்து, சரக்கினைப் பிறருக்கு உரிமை மாற்றித் தருவதற்கு அவருக்கு (சரக்கு உரிமையாளருக்கு) அதிகாரமளிக்கின்ற ஓர் ஆணையை அவர் பெறவேண்டும், அல்லது இத்தகைய பிணையத்திற்கு எதிராகக் கடனளிக்கின்ற வங்கியின் பெயரில் சான்றிதழ் அளிக்கப் படவேண்டும். மேலும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகள் அவைகளின் மீதான வாடகைக்கு மட்டுமே உட்படுத்தப்பட்டவை (Subjected to) என்று சான்றிதழ் தெளிவாகக் கூறவேண்டும்; அவவாறில்லையெனில் முதன்முதலில் சான்றிதழ் யாருக்கு வழங்கப்பட்டதோ அந்த நபரிடமிருந்து, மற்றச் சரக்குகள் தொடர்

பாக வரவேண்டியுள்ள வாடகை மற்றும் இதரக் கட்டணங்களுக்காகப் பண்டக நிர்வாகி பற்றுரிமையைக் கோரலாம் என்ற சரத்து, சான்றிதழில் இருப்பதை வங்கியர் காண நேரிடலாம்.

இந்நாள்களின், ஒரு சான்றிதழுக்குப் பதிலாகப் பண்டக இரசீதுகளை (Warehouse Receipts) (பின்னிணைப்பு 'ஆ', படிவம் எண் 36 'அ') விடுப்பது பண்டகங்களிடையே வழக்கமாகி விட்டது. சான்றிதழைப்போல இரசீதும் சரக்குகளுக்குப் பகரமாக (பதிலாக—represent) இருப்பதாகப் பொருள்படாது; எனவே, சாதாரணமாக, வெறுமனே மேலெழுதல் செய்தல் மூலமாக உரிமையை மாற்றிக் கொடுக்கமுடியாது. இங்கிலாந்தில் நிலைமை தற்போது இருப்பதுபோல, ஒரு பண்டக இரசீது, 1889ஆம் ஆண்டின் வாணிகத் தரகர்கள் சட்டம் (Factors Act, 1889), மற்றும் 1893ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டம் (Sale of Goods Act, 1893) ஆகியவைகளின் வரையறுக்கப்பட்ட சில காரியங்களுக்காக மட்டுமே ஒரு சரக்குரிமைப் பத்திரமாக உள்ளது. இந்தியாவில், ஒரு பண்டக இரசீது, 1930ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டம் பிரிவு 2(4)ல் உள்ள "சரக்குரிமைப் பத்திரம்" என்பதன் விளக்கத்திற்கு உட்பட்டதாக இருக்கின்றபொழுது அதனுடைய உண்மையான நிலை, பண்டகம் எந்த மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளதோ அந்தக் குறிப்பிட்ட மாநிலத்தின் இதுபற்றிய சட்டத்தைப் பொறுத்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, 1959ஆம் ஆண்டின் பம்பாய் பண்டகங்களின் சட்டம், (இச்சட்டம் 1947ஆம் ஆண்டின் சட்டத்தைத் திருத்தியது ஆகும்) பிரிவு 32, இரசீதின் மீது வேறு வகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, பண்டக நிர்வாகி ஒருவரால் விடுக்கப்படும் ஓர் இரசீது, மேலெழுதல் மூலம் மாற்றப்படத்தக்கதாகும்; மற்றும் அதனைச் சட்டப்படியாக வைத்திருக்கும் நபருக்கு, சரக்கினை முதலில வைப்புச் செய்த நபர் அவைகளை எவற்றின்கீழ் உரிமை பெற்றிருக்கக்கூடுமோ அதே சரத்துகள் மற்றும் நிபந்தனைகளின்பேரில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவராக்குகின்றது. 1960ஆம் ஆண்டின், பம்பாய் பண்டகங்களின் விதிகள் (The Bombay Warehouses Rules, 1960) பண்டக இரசீதுகளை மாற்றத்தக்க, மற்றும் மாற்ற முடியாத ஆகிய இரண்டு படிவங்களிலுமே விடுக்கப்படுவதற்கு வகைசெய்கின்றன. வேறுபல மாநிலங்களிலும் இத்தகைய சட்டம் செயலில் உள்ளது. இருந்தபோதிலும், இரசீதுகள் மேலெழுதல் செய்யப்படுவதன் மூலம் மாற்றப்படத்தக்கவைகளாகவும், மாற்றுமுறைத் தன்மை கொண்டவைகளாகவும் விடுக்கப்படலாம் என்றபோதிலும், அதன்மூலம், அவை மாற்றுமுறை ஆவணங்கள் என்ற முறையில், அவைகளை நல்லெண்ணத்துடன்

மதிப்பினைக் கொடுத்துப் பெறுகின்றவர், குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் தவிர, மாற்றிக் கொடுத்தவருடைய உரிமை குறைபாடு உடையது எனின் சிறந்த ஓர் உரிமையைப் பெறமுடியாது என்ற காரணத்திற்காக, முழுத் தகுதியையும் பெறுவதில்லை என்பது கவனிக்கப்படவேண்டியதாகும். தொடர்ச்சியான மேலெழுதல்களைத் தன்மேல் கொண்டுள்ள ஓர் இரசீதிற்கு எதிராகக் கடனளிப்பது ஏன் ஒரு வங்கிக்கு விரும்பத்தக்கதன்று என்பதற்கு இதுவே காரணமாகும்; மற்றும் நடைமுறையில், இதன் காரணமாகவே, வங்கியின் கடன்கள், இரசீதினை வைப்புச் செய்தவர் அல்லது முதல் மேலெழுதலைப் பெற்றவர் அல்லது மாற்றிப் பெற்றவர் ஆகியோருக்குமட்டுமே கொடுக்கப்படுவதென்று கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னொரு பத்தியில் குறிப்பிடப்பட்டதுபோல, குறைபாடுடைய மாற்றல்களுக்கு எதிராக, கடனளிக்கின்ற வங்கியருடைய நலனை முற்றிலும் பாதுகாப்பதற்காக, தகுந்த சட்டத்தின்மூலம் பண்டக இரசீதுகள் மாற்றுமுறை ஆவணமாக ஆக்கப்படுகின்றவரையில் இந்நிலை தொடர்ந்து இருக்கக்கூடும்.

முன்னெச்சரிக்கைகள்
(Precautions)

பண்டக இரசீதுகளுக்கெதிராகக் கடன்களை வழங்குகின்ற பொழுது, சரக்குகள் அல்லது சரக்குரிமைப் பத்திரங்களுக்கு எதிராகக் கடன் வழங்கும்பொழுது எடுக்க வேண்டிய வழக்கமான முன்னெச்சரிக்கைகள் எடுக்கப்படவேண்டும். பண்டகம், உரிமம் (licence) அளிக்கப்பட்ட ஒன்றா அல்லது உரிமம் அளிக்கப்படாததா என்பதையும், குறிப்பிட்ட மாநிலத்தில் அதனுடைய (பண்டகத்தினுடைய) தொழிலை ஒழுங்குபடுத்துகின்ற சட்டத்தையும் முதலாவது பார்க்கவேண்டும். கடனை நாடி வருகின்ற நபர் அவருடைய சொந்தப் பெயரில் சரக்குகளைப் பெறுவதற்கு உரிமை பெற்றிருக்கின்றாரா என்பது உறுதிப்படுத்தப்படவேண்டும்; மற்றும் அதனோடு இரசீதினால் அத்தாட்சி செய்யப்படும் பொருள்கள் அவருடைய தன்னிச்சையான சொத்தாகும் என்பதற்கான உறுதிமொழியொன்றினை அவரிடமிருந்து பெறுவது விரும்பத்தக்கதாகும். பண்டக இரசீதின் உண்மைத் தன்மையும்கூட சரிபார்க்கப்படவேண்டும்; மற்றும் அதில் பண்டக நிர்வாகியினுடைய கையொப்பம் அல்லது மேலெழுதல் ஏதாவது இருப்பின் அவை முறையாக இருக்கின்றனவா என்று வங்கி சரிபார்க்கவேண்டும். சரக்குகளின் ஒரு பகுதி ஏற்கெனவே ஒப்படைப்புச் (delivery) செய்யப்பட்

டிருந்தால் அது தொடர்பாகப் பண்டக ஆள், தகுந்த ஒரு மேலெழு தல் செய்யவேண்டும். இது, சரக்குகளின் சரியான மதிப்பினைக் கணக்கிடுவதற்கு உதவி செய்யும். பண்டகத்திலுள்ள சரக்குகளை ஆய்வு செய்து அவை சரியான முறையில் சேமித்து வைக்கப் பட்டுள்ளனவா என்று பார்ப்பது எப்பொழுதும் விரும்பத்தக்க செயலாகும். இரசீது பிணையமாக வைப்புச் செய்யப்பட்டவுடனே அவ்வாறு வைப்புச் செய்யப்பட்டதற்கான செய்தி இரண்டு படி களில் பண்டக ஆளுக்கு அனுப்பப்படவேண்டும்; மற்றும் சரியாகக் கையொப்பமிடப்பட்டு இரண்டாவது படியினைத் திரும்ப அனுப்பி வைப்பதன் மூலம் செய்தியைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்பு தலைக் கொடுக்குமாறு அவர் கேட்டுக்கொள்ளப்படலாம். இவ் வாறு உரிமையை மாற்றிப்பெறுவது, கடன் வழங்குகின்ற வங்கி யரின் நலனைப் பெருமளவில் பாதுகாக்கும். மையப் பண்டகக் கூட்டுரு (Central Warehousing Corporation) மற்றும் மாநிலப் பண்டகக் கூட்டுருக்களுக்குக் சொந்தமான பண்டகங்களைப் பொறுத்தமட்டில், இது தொடர்பான கட்டளைகளை, பண்டக ஆட்கள் பண்டக வாரியத்திலிருந்து (Warehousing Board) பெற் றுள்ளனர்; இந்த உண்மை, இத்தகைய பண்டகங்களால் விடுக் கப்படும் இரசீதுகளுக்கு எதிராகக் கடன் வழங்குவதற்கு மிகவும் சாதகமாக உள்ளது. இத்தகைய உரிமை மாற்றத்தை நிறைவேற்று வதில் இடர்ப்பாடு ஏதும் இருக்குமெனில், புத்திசாலித்தனமான ஒரு வழி, இரசீதினைத் திரும்ப ஒப்படைப்பதற்கு ஏற்பாடு செய்து, வங்கியின் பெயரில் புதிய இரசீது ஒன்றினைப் பெற்றுக் கொண்டு அதன்பேரில் கடனளிப்பதாகும். அதிகப்படியான ஒரு பாதுகாப்பாக, அவர் ஈட்டுறுதி அல்லது அதுபோன்ற வேறு எதையேனும் கொடுத்து சரக்குகளை எடுத்துக்கொள்ளமாட்டார் என்பதற்கான ஓர் உறுதிமொழியினை வைப்புச் செய்பவரிட மிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும்; மற்றும், எந்தச் சூழ்நிலை யிலும் வங்கியரிடமிருந்து எழுத்துமூலமான கட்டளைகள் ஏது மில்லாமல் சரக்குகளை ஒப்படைப்புச் செய்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்று பண்டக ஆளுக்கு (வைப்புச் செய்தவரால்) எழு தப்பட்ட கடிதம் ஒன்றினையும் பெற்றுக்கொள்ளவேண்டும். வாடிக்கையாளர் சரக்குகளின் பகுதி ஒப்படைப்பினை (Part Delivery) வேண்டுகின்ற தறுவாயில், அது வங்கியால் விடுக்கப் படும் ஒப்படைப்பு ஆணையின் மூலம் செய்யப்பட்டு ஒழுங்கு படுத்தப்படவேண்டும். எந்த நேரத்திலும் சரக்குகள் முற்றிலும் காப்பீடு செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப் படுத்திக் கொள்ளவேண்டும். கடன் வாங்கியவர் மற்றும் வங்கி ஆகியோருடைய கூட்டுப் பெயரில் காப்பீட்டுப் பத்திரத்தைப் பெறு வது இயலாததாக இருந்து பண்டக ஆள் தாமே சரக்குகளின்

காப்பீட்டிற்கு ஏற்பாடு செய்கின்ற தறுவாயில், காப்பீட்டுக் கட்டணம் ஒழுங்காகச் செலுத்தப்பட்டு வருகின்றதா என்றும், எந்த நேரத்திலும் சரக்குகள் காப்பீடு செய்யப்படாமல் விடப்பட்டிருக்கவில்லையென்றும் வங்கி பார்க்கவேண்டும். வாடகை மற்றும் இதரக் கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவை உடனடியாகச் செலுத்தப்படுகின்றனவா என்பதும் பார்க்கப்படவேண்டும்; மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளியில் செய்யப்படும் ஆய்வுகளின் மூலம், சரக்குகளின் பாதுகாப்பான மற்றும் தகுந்த சேமிப்புச் சரிபார்க்கப்படவேண்டும்.

ஒப்படைப்பு (சேர்ப்பு) ஆணைகள் (Delivery Orders) : ஓர் ஒப்படைப்பு ஆணை [பின்னிணைப்பு 'ஆ', படிவம் எண். 36 (அ) பார்க்கவும்] என்பது, எங்கே சரக்குகள் வைக்கப்பட்டுள்ளனவோ அந்தப் பண்டகத்தின் உரிமையாளர்களுக்கு, சரக்குகளின் உரிமையாளர்களால் எழுதப்படும் ஒரு பத்திரமாகும்; அது அவைகளை ஒப்படைப்புச் செய்வது தொடர்பாகச் சரக்கினுடைய உரிமையாளுடைய கட்டளைகளைக் கொண்டு செல்வதாகக் கருதப்படுகின்றது. உரிமையாளர் தாமோ, தம்மால் உரிமை மாற்றித் தரப்பட்டவரோ, சரக்குகளை ஒப்படைப்புச் செய்து கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நபரின் பெயரை நிரப்புகிறார். ஒப்படைப்பு ஆணைகள் மேலெழுதி ஒப்படைப்புச் செய்யப்படுவதன் மூலம் மாற்றிக் கொடுக்கப்படத்தக்கவையாகும். அடகு பெற்றவர் என்ற முறையில் இத்தகைய ஓர் ஆவணத்தை ஒரு வங்கியர் வெறுமனே வைத்திருப்பது, வாடிக்கையாளர் நொடிப்பு நிலையை அடைகின்ற தறுவாயில், அதனை வைத்திருப்பவருக்கு அதனை மாற்றித்தருகின்ற பண்டக ஆளுக்கு அல்லது கப்பல் சரக்கேற்றுமிட நிருவாகிக்கு அது முன்னிடப்படுகின்ற வரையில், அவைகளிலுள்ள சொத்தினை மாற்றிக்கொடுப்பதற்குப் போதுமானது அன்று. வங்கியருடைய நோக்கிலிருந்து பார்த்தால் சரக்குகளை அவருடைய பெயரில் மாற்றிப் பெற்றுக்கொள்வது மிகவும் விரும்பத்தக்கதாகும்; ஆனால், அவ்வாறு செய்வதற்குத் தவறி, விதிவிலக்காக உள்ள ஒரு தறுவாயில், 'நம்பக ஒப்படைப்பு' (Entrusted) நிபந்தனைகளின்பேரில், சரக்குகளை வங்கியரின் பெயரில் சேமித்து வைப்பதற்காக, அவர் (வங்கியர்) சேர்ப்பு ஆணையை வாடிக்கையாளரிடம் திரும்ப ஒப்படைத்தால், ஒப்படைப்பு நிறுத்தப்பட்டுள்ளது அல்லது அவருடைய வாடிக்கையாளரே ஒப்படைப்பினைப் பெற்றுக்கொண்டுள்ளார் அல்லது சொத்தினை வேறொருவருக்கு மாற்றிக்கொடுத்துவிட்டார் அல்லது நொடிப்பு நிலையை அடைந்துவிட்டார் என்று அறிய நேரிடலாம்.

வங்கியரின் கட்டுப்பாட்டிலும், அவருடைய ஆணைக்கு உட்பட்டும் இருக்கின்ற சரக்கினை கடன்வாங்கியவர் ஒருவர் விற்க விரும்புகின்ற தறுவாயில், கடன் வாங்கியவர், சேர்ப்பு ஆணை ஒன்றினைக் கோரி, வங்கியருக்கு விண்ணப்பம் ஒன்றினைச் செய்யவேண்டியிருக்கும். வாடிக்கையாளர் இனிமேல் வங்கியருக்குக் கடன்பட்டவர் அல்லர் என்று ஆகின்றபொழுது அல்லது அவரிடமிருந்து வரவேண்டிய தொகையைச் செலுத்திவிடுகிறார் என்றால், சரக்குகள் யாரிடம் சேமித்துவைக்கப்பட்டுள்ளனவோ அந்தப் பண்டக நிருவாகிக்கு எழுதப்பட்ட ஓர் ஆணையின் மூலம், வாடிக்கையாளர் தேவையான கட்டளைகளைக் கொடுப்பார்; ஆனால் வாடிக்கையாளர் கடன்பட்டிருக்கும்பொழுது, ஒப்படைப்புச் செய்யப்படுவதற்கு உள்ள சரக்குகளை விற்றுவரும் வருவாய்களை வங்கிக்குக் கொடுப்பதாக உறுதிமொழி ஒன்றினைக் கொடுத்து ஒரு பொறுப்புரிமை இரசீதில் (Trust Receipt) அவர் கையொப்பமிடவேண்டும். நிகரத்தொகை, செலுத்துகை செலுத்தப்படவேண்டியவைகளாக விழுகின்ற தவணைநாள் ஆகியவை தொடர்பாக முழுத் தகவல்களையும் கொடுக்கும்படி அவர் கேட்டுக்கொள்ளப்படவேண்டும்.

தங்களுடைய கடன்களுக்குப் பிணையமாக வங்கிகள் அவைகளை ஏற்றுக்கொள்வதன் காரணமாக முக்கியத்துவம் பெற்றுள்ள ஒப்படைப்பு ஆணைகளில், சணல் மற்றும் தேயிலை ஆகியவைகளின் ஒப்படைப்பு ஆணைகள் குறிப்பாகச் சொல்லப்படலாம். பக்கா சணல் ஒப்படைப்பு ஆணைகள் (ப. ச. ஒ. ஆ. என்று அறியப்படுகின்ற) [Pucca Jute Delivery Orders (known as P.J.D.Os)], அவைகளினுடைய ஆலைகளின்மீது ஆலை நிறுமங்களால் (Mill companies) விடுக்கப்படுகின்றன. இவை, குறிப்பிட்ட அளவிலான சணல், கோணிப்பை, சணல் கித்தான் துணி (hessian), தளர்ச்சியான கோணிச்சட்டை (sacking) போன்றவைகளைச் சமயத்திற்கேற்றவாறு, அங்குப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபருக்கு அல்லது ஆணைக்கு ஒப்படைப்புச் செய்யுமாறு அவைகளின் ஆலைகளின்மீது (நிறுமங்கள்) விடுக்கின்ற கட்டளைகளின் வடிவில் உள்ளன. ஒப்படைப்பு ஆணை விடுக்கப்பட்ட தேதிக்கும், சரக்குகள் உண்மையில் சேர்ப்புச்செய்யப்பட்ட அல்லது கப்பலில் ஏற்றப்பட்ட தேதிக்கும் இடையில் காலதாமதம் இருப்பதால், இலாப எச்ச ஓரத்தைப் (Profit margin) பொறுத்து, இடைப்பட்ட காலத்தில் இந்த ஆணைகளை விற்பதற்கும் வாங்குவதற்கும் சுறுசுறுப்பான சந்தை ஒன்று செயல்படுகின்றது. எனவே, இந்த ஒப்படைப்பு ஆணைகள் அடிக்கடி கைமாறுகின்றன; மற்றும் கடன்களுக்குப் பிணையமாக வங்கி

களிடத்தில் வைப்புச் செய்யவும்படுகின்றன. இத்தகைய ஒப்படைப்பு ஆணைகளைப் பிணையமாக ஏற்றுக்கொள்ளும்பொழுது, ஒரு வங்கியர், முதலாவது, எந்த நிறுமத்தினுடைய ஆணை பிணையமாக அளிக்கப்பட்டுள்ளதோ அதனுடைய நாணயம் மற்றும் தொழில்நிலை ஆகியவைகளோடு அதனுடைய மேலாண்மையின் தன்மை மற்றும் செயல்திறமை ஆகியவைகளையும் பார்க்க வேண்டும். இவ்வாறு தன்னைத்தானே திருப்திப்படுத்திக் கொண்டபிறகு, வங்கி, ஆணை, அடகுகொடுத்தவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கவேண்டும். வைப்புச் செய்யப்பட்டதற்குப் பின் உடனே, ஆணை நிறுமத்திற்குப் பதிவு செய்யப்படும் பொருட்டு அனுப்பிவைக்கப்படவேண்டும்; நிறுமத்திலிருந்து அது வங்கியின் பெயரில் பதிவுசெய்யப்பட்டுத் திரும்பப் பெறப்பட்ட பின்னரே கடனளிக்கப்பட வேண்டும். ஒப்படைப்பு ஆணை அளவு மீறிப் பழையதாக இல்லை என்று பார்ப்பதற்கும் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். சரக்குகளின் விலை தினசரி விலைக்குறிப்பீடுகளில் (quotations) இருந்து கிடைக்கக் கூடியதாகும். ஆனால், இந்த விலைக்குறிப்பீடுகள் பருமன் மற்றும் அளவு ஆகியவை தொடர்பான தரநிலைப்படுத்தப்பட்ட தனிக் குறிப்பீடுகள் (standard specifications) ஆகும். எனவே, மதிப்பீடு கவனமாகச் செய்யப்படவேண்டும். சரக்குகள் கப்பலில் அனுப்பப்படவேண்டியுள்ளபோது, கப்பல் அனுப்பீட்டுக் கட்டளைகள் வங்கியின் மூலம் அனுப்பப்படவேண்டுமென்றும், சேர்ப்பு ஆணைகள் கப்பல் தலைவரின் இரசீதுக்குப் பதிலாக மாற்றப்பட வேண்டுமென்றும் வங்கியர் வற்புறுத்தவேண்டும்.

ஏலங்களில் (auctions) விற்கப்படும் தேயிலை தொடர்பாகத் தேயிலை சேர்ப்பு ஆணைகள் விடுக்கப்படுகின்றன; அவைகளுக்கெதிராக வழங்கப்படும் கடன்கள் பெரும்பாலும் ஒரு குறுகிய காலத்திற்கானவையேயாகும்.

சரக்குகளின் மீதான உரிமையை அளிக்கின்ற ஆவணங்களுக்கும், வெறுமனே இரசீதுகளாக உள்ள ஆவணங்களுக்கு மிடையேயுள்ள வேறுபாடு (Distinction between Documents that give Title to Goods and Those that are mere Receipts): சரக்குகள் தொடர்பான ஆவணங்களில் தொடர்பு கொள்ளுகின்றபொழுது, அவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகளுக்கு உரிமையை அளிக்கின்ற ஆவணங்களையும், ஒரு பண்டகத்தில் சரக்குகள் வைப்புச் செய்யப்பட்டுள்ளன என்பதை ஒப்புக்கொள்கின்ற, வெறுமனே இரசீதுகளாக மட்டும் செயல்படுகின்ற ஆவணங்களையும் ஒன்றுக்கொன்று வேறுபடுத்திப் பார்க்கவேண்டியது

அவசியமாகும். இந்த இரண்டு வகைகளில், முதல் வகையில் கப்பல் இரசீது, துறைமுக ஆணை மற்றும் பண்டகச் சான்றிதழ் ஆகியன சேரும். சரக்குகளின் மீதான உரிமையை அளிக்கின்ற ஆவணங்களை உடைமை கொள்வதன் மூலம், அவைகளை வைத்திருப்பவர், சரக்குகளை, 'நொடிப்புநிலை அடைந்தவரின் ஆணை மற்றும் விருப்பம்' ஆகியவைகளுக்குக் கட்டுப்படாமல் வெளியில் கொண்டுவர முடியுமாதலால் இந்த வேறுபாடு மிகவும் முக்கியமானதாகும். இதுவே 'நம்பிக்கைகொள் உரிமைக் கோட்பாடு' (Doctrine of Reputed Ownership) என்றும் அறியப்படுவதாகும். அதனுடைய விளைவு யாதெனில், உண்மையான உரிமையாளரின் ஒப்புதல் மற்றும் அனுமதியின்பேரில், அவ்வாறு வைத்திருப்பதால் அவர் நம்பிக்கைகொள் உரிமையாளர் (Reputed Owner) என்று கருதும்படியான சூழ்நிலைகளுக்கிடையில், அவருடைய வியாபாரத்தில் அல்லது தொழிலில், நொடிப்புநிலை ஆரம்பமாகின்றபொழுது, நொடிப்புநிலையை அடைந்தவருடைய (Insolvent) உடைமையில் அல்லது ஆணையின்கீழ் அல்லது மனவிருப்பப்படி, இருக்கின்ற சரக்குகள் (நொடிப்பு நிலையடைந்தவருடைய) சொத்தாட்சி அதிகாரியிடம் (Official Assignee) போய்ச்சேர்கின்றன; அவை (நொடிப்புநிலையை அடைந்தவருடைய) கடனாளர்களுக்கிடையில் (creditors) பிரித்துக் கொடுக்கப்படத் தக்கவைகளாகும் [1909ஆம் ஆண்டின் மாநகரங்களின் நொடிப்புநிலைச் சட்டம், பிரிவு 52 (2) (இ)—Section 52 (2) (c) of the Presidency Towns Insolvency Act, 1909]. இந்தக் காப்பு வாசகத்தின் நோக்கம், தங்களோடு தொழில் ஈடுபாடு கொண்டுள்ளவர்களை, தவறாகக் கருதும்படி செய்வதற்கு, உண்மையானது எனக் கூறிப் பொய்யான ஒரு தோற்றத்தை உண்டாக்கி, அதிலிருந்து தாங்கள் எளிதில் தப்பித்துக்கொள்ளக் கூடிய வகையில் ஒரு கடனைப் பெறுவதிலிருந்து வியாபாரிகளைத் தடுப்பது ஆகும். ஆனால் அடகு வாங்கியவரின் பெயரில் சரக்குகள் பதிவு செய்யப்பட்டாலன்றிப் பண்டக நிருவாகியின் சான்றிதழ்கள் அல்லது இரசீதுகள் அல்லது ஒப்படைப்பு ஆணை ஆகியவைகளை உடைமை கொண்டிருத்தல் நொடிப்பு நிலை அடைந்தவருடைய பொறுப்புரிமையர்க்கு (Trustee-in-Bankruptcy) எதிராகச் சரக்குகளின் உடைமையைக் கோருவதற்கு உதவியாயிருக்காது. அபீசியல் அசைனீ ஆப் மதராஸ் எதி. மெர்கன்டைல் பாங்க் ஆப் இந்தியா லிட். (1935) அ. கே. 53. (Official Assignee of Madras *v.* The Mercantile Bank of India Ltd., (1935) A. C. 53) என்ற வழக்கில், பிரிவி கௌன்சில் (Privy Council) இரயில்வே இரசீது ஒன்றினை, மேலெழுதல் செய்வதன்மூலம், சம்பந்தப்பட்ட வங்கிக்கு, வியாபாரி ஒருவர்

அடகு வைப்பது என்பது, சரக்குகளை அடகுவைத்தது போன்றது ஆகும் என்று தீர்ப்பளித்தது. இரயில்வே நிறுமத்திலிருந்து சரக்கு களைப் பெற்று, வங்கியின் சார்பாக அவைகளை ஒரு பண்டகத்தில் இடுவதற்கு வசதியாக இருக்கும்பொருட்டு இரசீதினை அடகு கொடுத்தவரிடம் கொடுப்பதன்மூலம் வங்கி அடகினை விட்டுக் கொடுத்து அதனை இழந்துவிட்டதாக ஆகாது. இறுதியாக, இரயில்வே இரசீது மேலே குறிப்பிடப்பட்ட காரியத்திற்காக அடகு கொடுத்தவரிடம் கொடுக்கப்பட்டிருக்கும்போதுகூட, 1909ஆம் ஆண்டின் மாநகரங்களின் நொடிப்புநிலைச் சட்டம், பிரிவு 52 (2) (இ) கூறுகின்ற பொருளின்படி, அவ்வாறு அடகு வைக்கப்பட்ட சரக்குகள் அடகு கொடுத்தவருடைய உடைமை அல்லது ஆணை அல்லது விருப்பம் ஆகியவற்றிற்கு உட்பட்டவை களாக ஆகமாட்டா என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

சரக்குரிமைப் பத்திரங்களுக்கெதிராகக் கடன்கள் வழங்குவதி லுள்ள அதிகப்படியான இடர்வாய்ப்புகள் (Additional Risks in case of Advances Against Documents of Title to Goods) : இந்த அத்தியாயத்தின் முந்திய பகுதி ஒன்றில் கூறப்பட்டுள்ளது போல், சரக்குகளுக்கு எதிராகக் கடனளிப்பதில் உள்ள குறை பாடுகளோடு, வங்கியரின் கடன்களுக்குப் பிணையம் என்ற முறையில் சரக்குரிமைப் பத்திரங்கள் குறிப்பிட்ட வேறு சில இடர் வாய்ப்புகளையும் கொண்டுள்ளன. சரக்குகளின் (பிணையங்கள்) மூலமாக இருப்பதைக்காட்டிலுல், சரக்குரிமைப் பத்திரங்களின் (பிணையங்கள்) மூலமாக வங்கிகள் மோசடி செய்யப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. அளிக்கப்படும் ஆவணம் (பிணைய மாக) கள்ளக் கையொப்பமிடப்பட்டதாக இருக்கலாம் அல்லது கப்பல் வழிச்சீட்டு, இரயில்வே இரசீது ஆகியவைகளில் குறிப் பிடப்பட்டுள்ள மூட்டைகள் அல்லது சிப்பங்களின் எண்ணிக்கை மோசடி செய்யப்பட்டு அதிகமாகக்காட்டப்பட்டிருக்கலாம். மேலும், சரக்கேற்றிச் செல்பவர், உறைப்பெட்டி (cases) அல்லது மூட்டை களில் என்ன உள்ளன என்பதற்குப் பொறுப்புறுதியளிப்பதில்லை. ஒரு நபர் மணலும், ரம்பத் தூளும் கொண்ட ஐம்பது மூட்டைகளை இரயிலில் அனுப்பிவிட்டு, ஆனால், ஓர் இரயில்வே இரசீதினை ஐம்பது மூட்டைக் கோதுமைக்குப் பெற்றுக்கொண்டு, மூட்டை களில் இருப்பவை கோதுமை என்று அறிவிக்கக்கூடும். இதன் விளைவாக, இத்தகைய இரயில்வே இரசீது ஒன்றுக்கெதிராகப் பணம் கடன் வழங்கும் வங்கியர், மூட்டைகளில் உள்ளவை இரசீதில் குறிப்பிடப்பட்ட பொருள்களாக இல்லை என்ற அடிப் படையில் இரயில்வே நிறுமத்திற்கு எதிராகக் கோருரிமை எதனை யும் விடுக்கமுடியாது. இப்போது விடுக்கப்படுகின்ற இரயில்வே

இரசீதுகள் மாற்றத்தக்கவைகளல்ல; மேலும், அவை சரக்குகள் பற்றிய ஒரு முழுமையான மற்றும் சரியான விளக்கத்தைக் கொடுப்பதில்லை. அதன் விளைவாக, ஓர் இரயில்வே இரசீது நல்ல தொரு பிணையமாகக் கருதப்படுவதில்லை. நீதிபதி வாலர் (Justice Waller) என்பவருடைய தீர்ப்பு ஒன்றில் (அபீசியல் அசைனீ ஆப் மதராஸ் எதி. மெர்கன்டைல் பாங்க் ஆப் இந்தியா, ஆ.இ.ரி. [1933]—Official Assignee of Madras *v.* Mercantile Bank of India, A.I.R. [1933]) மேற்கண்ட கருத்து உறுதிப்படுத்தப்பட்டது. இந்திய வங்கியருடைய நற்பேறு காரணமாக, சென்னை உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியும், நீதிபதி ஸ்டோன் (Justice Stone) என்பவரும், நீதிபதியின் வாலருடைய தீர்ப்பினை மாற்றி, ஓர் இரயில்வே இரசீதினை மேலெழுதல் செய்வதென்பது, சரக்குகளை அடகு கொடுத்தது போன்ற விளைவினை உண்டாக்குகிறது என்று தீர்ப்பளித்தனர். இரயில்வே நிருவாகங்கள் அவர்கள் எந்தச் சரக்குகளுக்கு இரயில்வே இரசீதுகளைக் கொடுக்கின்றார்களோ அவைகளின் முழு விளக்கங்களையும் கோரிப்பெற்று இரயில்வே இரசீதுகளை மாற்றுமுறை ஆவணமாக ஆக்கியிருந்தால் அது உண்மையிலேயே வங்கியர் மற்றும் வாணிப சமூகத்தினர்க்குப் பெரும் சேவையாக இருந்திருக்கும். மறுபடியும் கூறவேண்டுமானால், சரக்குரிமைப் பத்திரங்கள் மாற்றுமுறைப் பிணையப் பத்திரங்கள் அல்ல; எனவே, பத்திரங்கள் திருடப்பட்டவைகளாக இருப்பின், எந்தச் சூழ்நிலையிலும் சரக்குகளின் மீதான உரிமையைப் பெறமுடியாது; ஆனால், இந்தப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத்தக்கவைகளாதலால் (transferable), அவை பிணையமாக, (1) சரக்குகளின் உரிமையாளர், (2) மாற்றிப் பெற்றவர் அல்லது (3) பத்திரங்களை முகவர் என்ற முறையில் உடைமைகொண்டுள்ள வாணிப முகவர் ஆகியோரிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படலாம். அவரால் மாற்றுமுறைச் சீட்டு, ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு எதிராகக் கப்பல் வழிச்சீட்டு வைத்துக் கொள்ளப்படலாம் என்ற நிபந்தனையின்பேரில், ஒரு கப்பல் வழிச் சீட்டு, ஒரு மாற்றுச் சீட்டுடன் சேர்த்து 'அ' என்பவருக்கு அனுப்பப்பட்டு, ஆனால் அவர் கப்பல் வழிச்சீட்டினை வைத்துக் கொண்டு, அதனை நல்லெண்ணத்துடன் பெற்றுக்கொள்கின்ற ஒரு வங்கியரிடம் அடகு வைத்துவிட்டு, மாற்றுச்சீட்டினை ஏற்காமல் திருப்பி அனுப்பி வைத்துவிட்டால், கப்பல் வழிச்சீட்டின் மீது வங்கியர் நல்ல உரிமையைப் பெறுவார். இருப்பினும், கப்பல் வழிச்சீட்டு தந்திரம் அல்லது திருட்டுமூலம் பெறப்பட்டதாக இருந்தால், வங்கியர் அதன்மீது உரிமையைப் பெறமாட்டார். ஒரு கடனுக்குப் பிணையமாக வைப்புச் செய்யப்பட்டுள்ள இரயில்வே இரசீதுகளின் விடயத்தில், சரக்குகளின்மீது தமக்குள்ள

பற்றுரிமையைப்பற்றி, இரயில்வே நிறுமத்திற்குத் தெரியப்படுத்து வதில் வங்கியர் கவனமாக இருக்கவேண்டும்; இல்லையென்றால், இரயில்வே நிறுமத்திற்கு ஓர் ஈட்டுறுதிப் பத்திரத்தைக் கொடுத்து விட்டுக் கடன் வாங்கியவர் இரயிலில் அனுப்பப்பட்ட சரக்கினை எடுத்துக்கொள்ளக்கூடிய அபாயம் அங்கு உள்ளது; இதன் விளைவாக, கடன் வாங்கியவருக்கு எதிரான தீர்ப்பினைப் பெறும் பொருட்டு வங்கி நீதிமன்றத்தின் உதவியை நாடவேண்டிவரலாம்; அதற்குள் கடன் வாங்கியவர், நொடிப்புநிலை அடைந்தவராகவோ சமமனநிலை இழந்தவராகவோ ஆகியிருக்கலாம் அல்லது இறந்து போயிருக்கலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (U.S.A.) சில வேளைகளில் இரயில்வே இரசீதுகள், உண்மையானவை என்பதற்கான சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன. மெர்கன்டைல் பாங்க் ஆப் இந்தியா லிட். எதி. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா லிட். 55 இ.அ. 75 (Mercantile Bank of India Ltd. *v.* Central Bank of India Ltd. 55, I.A. 75) என்ற வழக்கில், இரயில்வே இரசீதுகளினால் பகரமாக்கப்பட்டிருந்த (represented) சரக்குகள் தொடர்பாக, இரண்டு வங்கிகளுக்கிடையேயான போட்டிக் கோரிக்கைகளைப் பற்றி முடிவு செய்யுமாறு பிரிவி கௌன்சில் அழைக்கப்பட்டது. சில இரயில்வே இரசீதுகளின் அடைமானத்தின்பேரில் ஒரு நிறுவனம், சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவிடமிருந்து கடன் ஒன்றினைப் பெற்றது. வழக்கில் இருந்த முறைப்படி, சரக்குகளை எடுத்து அவைகளை வங்கியின் சார்பாக ஒரு பண்டகத்தில் இடும்பொருட்டு, வங்கி, இரயில்வே இரசீதுகளை நிறுவனத்திடம் கொடுத்தது. இருப்பினும், மெர்கன்டைல் பாங்க் ஆப் இந்தியாவிடமிருந்து இரண்டாவது கடன் ஒன்றினைப் பெறும் பொருட்டு நிறுவனம் அதே இரசீதுகளை, மோசடி செய்யும் நோக்கத்துடன் பிணையமாகக் கொடுத்தது; மெர்கன்டைல் பாங்க் ஆப் இந்தியா இரயில்வே நிறுமத்தினிடமிருந்து சரக்குகளைப் பெற்றுக்கொண்டது. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, கையாடல் தீங்கு (conversion) செய்ததற்காக நட்ட ஈடு கோரி, மெர்கன்டைல் பாங்க் ஆப் இந்தியாவிற்கு எதிராக வழக்கொன்றைத் தொடுத்தது; முதலில் சொல்லப்பட்ட வங்கி (சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா) நிறுவனம் செய்த மோசடிக்கு எதிராக முன்னெச்சரிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கவேண்டுமென்ற கடமையைப் பிந்தைய வங்கிக்குச் (மெர்கன்டைல் பாங்க் ஆப் இந்தியா) செய்யவேண்டியதாக இருக்கவில்லை என்ற அடிப்படையிலும், சரக்குகளை வெளியில் எடுத்து வங்கியின் பண்டகத்தில் அவைகளைச் சேமித்துவைப்பதற்கான குறிப்பிட்ட செயலுக்காக இரயில்வே இரசீதுகளைக் கொடுத்து வந்த மெர்கன்டைல் பாங்க் ஆப் இந்தியாவின் அதே நடைமுறையைச்

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா கடைப்பிடித்திருந்தபடியால், அதனைப் பொறுத்தமட்டில் எந்த வகையிலும், எந்த முன்னெச்சரிக்கையையும் எடுக்கத் தவறியதாக இல்லை என்ற அடிப்படையிலும், சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவின் கோரிக்கை அதற்குச் சாதகமாகத் தீர்ப்புச் செய்யப்பட்டது. எனவே நிறுவனம், சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவிற்குக் கொடுக்கப்பட்ட அடகுக்கு உட்பட்ட தன்னுடைய உரிமையைவிடச் சிறந்த ஓர் உரிமையை மாற்றிக் கொடுக்க முடியாது.

நடுவழி நிறுத்த உரிமை (Right of Stoppage in Transit) : சரக்குகள் அவரிடம் ஒப்படைப்புச் செய்யப்படுவதற்கு முன், வாங்கியவர் (buyer) நொடிப்புநிலையை அடைந்துவிட்டால், செலுத்தப்படாத விற்பனையர் (unpaid seller) ஒருவர், சரக்குகளை, வாங்கியவருக்கு அவை சென்றுகொண்டிருக்கும் வழியில் நிறுத்துவதற்கு உரிமை பெற்றுள்ளார். வாங்கியவர், விற்றவரின் ஒப்புதல் இன்றிச் சரக்குகளை மறுவிற்பனை செய்திருந்தாலும்கூட விற்றவரின் இந்த உரிமை பாதிக்கப்படுவதில்லை. ஆனால், விற்றவர் கப்பல் இரசீது அல்லது வேறு ஏதாவது சரக்குரிமைப் பத்திரத்தைத் தம்மிடமிருந்து போக விட்டுவிட்டால், மற்றும் (சரக்கினை) வாங்கியவர் பத்திரத்தை, நல்லெண்ணத்துடன் பிரதிபயனுக்காக (for consideration) அதனை எடுத்துக்கொள்ளும் ஒரு நபருக்கு மாற்றிக்கொடுத்துவிட்டால், விற்பனையருடைய நிறுத்த உரிமை (Right of stoppage) முடிவடைந்துவிடுகிறது. இவ்வாறு, சரக்குரிமைப் பத்திரங்கள் அடகு வைக்கப்பட்டிருக்கும் பொழுது, செலுத்தப்படாத விற்பனையரின் உரிமை, மதிப்பினைக் கொடுத்து, நல்லெண்ணத்துடன் பத்திரங்களை மாற்றிப் பெற்றுள்ள வங்கியருடைய உரிமைக்கு உட்பட்டது. ஆகையால், செலுத்தப்படாத சரக்கு விற்பனையரின் உரிமையால் வங்கியரின் உரிமை பாதிக்கப்படுவதில்லை. ஆனால், விற்பனையரின் உரிமை தோற்கடிக்கப்படவேண்டுமானால், கப்பல் வழிச்சீட்டு சரக்கு வாங்கியவரால் சட்டப்படி பெறப்பட்டிருக்கவேண்டும் என்பது மிகவும் இன்றியமையாததாகும். தந்திரம் அல்லது திருட்டுமூலம் இரசீது பெறப்பட்டிருந்தால் மாற்றிப்பெற்றவருக்குப் பாதுகாப்புக் கொடுக்கமுடியாது. பொய்யான பகட்டுமூலம் இரசீது பெறப்பட்டிருக்கும் போதும் (செலுத்தப்படாத விற்பனையரின்), நடுவழி நிறுத்தம் செய்வதற்கான உரிமை தோற்கடிக்கப்படுவதில்லை (1930ஆம் ஆண்டின் இந்தியச் சரக்கு விற்பனைச் சட்டம், பிரிவு 53).

பொதுவான முன்னெச்சரிக்கைகள் (General Precautions)

சரக்குரிமைப் பத்திரங்களுக்கு எதிராகப் பணம் கடனளிக்கின்றபொழுது, கீழ்க்காணும் பொதுவான முன்னெச்சரிக்கைகளை வங்கியர் எடுத்துக்கொள்ளலாம்.

வாடிக்கையாளருடைய நேர்மை மற்றும் அனுபவம் (Customer's Integrity and Experience): வாடிக்கையாளருடைய நேர்மை, நம்பகத்தன்மை (reliability) மற்றும் அனுபவம் ஆகியவை மிகவும் இன்றியமையாதவைகளாகும். வங்கியர் தம்முடைய வாடிக்கையாளர்களின்மீது நம்பிக்கை வைத்திருந்தாலன்றிச் சரக்குரிமைப் பத்திரங்களின் உண்மைத் தன்மையைப் பற்றி அவர் தம்மைத்தாமே நிறைவுபடுத்திக்கொள்ள முடியாமல் இருக்கிறார். ஏற்கெனவே குறிப்பிட்டபடி, சரக்குகளை நட்டத்தில் விற்பனை செய்வதையும், அவை மோசமடைவதையும் தவிர்ப்பதற்கு, குறிப்பிட்ட துறையில் வாடிக்கையாளர் அனுபவம் கொண்டிருக்க வேண்டியது அவசியமானதாகும்.

கட்டுமச் சான்றிதழ் (Certificate of Packing): கட்டுமச் சிப்பங்களில் என்ன அடங்கியுள்ளன என்பதைப்பற்றி அறிந்து கொள்ளும்பொருட்டு, வங்கியர் நம்பகமான கட்டுமம் செய்பவர் (packer) ஒருவரின் சான்றிதழைக் கொடுக்குமாறு கேட்கவேண்டும்; அல்லது கட்டுமத்தைக் கண்காணிப்பதற்குப் பொறுப்பு வாய்ந்த சார்பாளர் ஒருவரைப் பதிலாளாக அனுப்பிவைக்க வேண்டும்—கண்காணிப்புச் செலவு கடன் வாங்குபவரால் ஏற்கப்படுவதாகும்.

கப்பல் வழிச்சீட்டின் படிகள் (Copies of Bill of Lading): கப்பல் வழிச்சீட்டின் எல்லாப் படிகளையும் பெறுவதற்கு வங்கியர் முயற்சி செய்யவேண்டும். (கப்பல் வழிச்சீட்டின்) மற்றொரு படி வங்கியரிடம் அடகுவைக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறியாமல் இருக்கும்போது, கப்பல தலைவர், கப்பல் வழிச் சீட்டினை வைத்திருப்பவரின் உரிமையைப்பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாட்டிற்கு (obligation) உட்பட்டவரல்லர். மற்றும் பொதுவாக, அச் சீட்டினை வைத்திருப்பவருக்குக் கப்பல் தலைவர் சரக்கினை ஒப்படைப்புச் செய்வார் என்பதை நாம் அறிகின்றபொழுது இதனுடைய அவசியம் நன்கறியப்படும்.

கடுமையான நிபந்தனை ஏதுமில்லை (No Onerous Condition): ஒரு கப்பல் வழிச்சீட்டு அல்லது கப்பல் வாடகை ஒப்பந்தத்தில் கடுமையான சரத்துகள் ஏதும் உள்ளனவா என்று வங்கியர் பார்க்கவேண்டும். சில வேளைகளில், 'மற்றும் கப்பல்

வாடகை ஒப்பந்தத்தின்படியான இதர எல்லா நிபந்தனைகளும்' என்பது போன்ற பொறுப்பு வாய்ந்த சரத்து ஒன்றினை ஒரு கப்பல் வழிச்சீட்டு கொண்டிருக்கக்கூடும்; இது வங்கியர் அல்லது வாடிக்கையாளர் செய்த தவறுகள் காரணமாக ஏற்பட்டவை அல்லாத, மிக அதிகமான கட்டணங்களைச் செலுத்தவேண்டிய கட்டாயத்தில் கொண்டுபோய் விடக்கூடும். எனவே, அவை களுக்கெதிராகப் பணம் கடனளிக்குமுன், கப்பல் வழிச்சீட்டில் வேறு ஏதாவது நிபந்தனைகள் கொடுக்கப்பட்டுள்ளனவா என்பதை வங்கியர் கவனிக்கவேண்டும்.

உரிமை மாற்றிப் பெறுபவரின் வெற்று மேலெழுதல் (Assignee's Endorsement in Blank): கப்பல் வழிச்சீட்டில் எப்பொழுதுமே, சரக்கு அனுப்பீடு பெறுநரின் (consignee) வெற்று மேலெழுதலைச் செய்து பெற்றுக்கொள்வது வங்கியருக்கு நலன் பயக்கக்கூடிய தாகும். இத்தகைய ஒரு தறுவாயில் கப்பல் சத்தத்தைச் (freight) செலுத்துகின்ற பொறுப்பு வாடிக்கையாளரின்மேல் விழுகின்றதே யன்றி வங்கியரின்மேல் அன்று.

காப்பீட்டுத் திட்டாவணங்கள் (Insurance Policies): சரக்குகள் தொடர்பான காப்பீட்டுத் திட்டாவணத்தை வங்கியர் கோரவேண்டியது அவசியமாகும். அவர் காப்பீட்டுத் திட்டாவணத்தை வேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமேயன்றித் தரகரின் குறிப்பினை (Broker's note) அன்று. கப்பலில் சரக்கனுப்பீடு செய்பவர்கள் (shippers) சிலர் காப்பீட்டு நிறுமங்களால் விடுக்கப்படும் திறந்த காப்பீட்டுத் திட்டாவணங்களைப் (Open policies) பெறுகின்றனர். ஒரு திறந்த காப்பீட்டுத் திட்டாவணத்தைப் பெறுவது மட்டும் போதாது; ஆனால் காப்பீட்டு நிறுமம், அந்தக் காப்பீட்டுத் திட்டாவணத்தின்கீழ் இன்ன இன்ன சரக்குகள் காப்பீடு அளிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட வேண்டும்.

பொறுப்புரிமை இரசீதுகள் (Trust Receipts); வாடிக்கையாளரிடமிருந்து தமக்கு வரவேண்டியுள்ள தொகையைப் பெற்றுக் கொள்ளாமல், கப்பல் வழிச்சீட்டு அல்லது சரக்குகளைத் தம் மிடமிருந்து, வங்கியர் விட்டுவிடவேண்டியுள்ள தறுவாய்களில், வங்கியருக்குச் சேரவேண்டிய முழுத்தொகையும் செலுத்தப் படாமல் இருக்கின்ற வரையிலும், சரக்குகளை அல்லது அவை களை விற்றுப்பெறும் பணத்தினை, வங்கியருக்காகப் பொறுப் புரிமையில் (trust) வைத்திருப்பதற்கு ஒப்புக்கொள்கின்ற, அவ

ருடைய வாடிக்கையாளரால் கையொப்பமிடப்பட்ட ஒரு பொறுப் புரிமை இரசீதினை (பின்னிணைப்பு-'அ', படிவம் எண் 30, பார்க்க வும்) வங்கியர் பெறவேண்டியது இன்றியமையாததாகும். இத் தகைய பொறுப்புரிமை இரசீதினைக் கையொப்பமிட்டுள்ள ஒரு வாடிக்கையாளர், சரக்குகளை விற்றுப்பெற்ற பணத்தினை வங்கி யருக்குக் கொடுக்கத் தவறினால், வாடிக்கையாளர் பொறுப் புரிமையை முறிவு செய்த குற்றத்திற்குப் (Criminal breach) பொறுப்பாளியாவார். இருப்பினும், இந்தப் பொறுப்புரிமை இரசீது கள் தொடர்பான சென்னை உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு தீர்ப்பு, அநேகமாக, இந்தியாவின் வங்கியர் சமூகத்தினை அதிர்ச்சி யுறச் செய்துள்ளது. சென்னையில் இருந்த இரண்டு நிலக்கடலை ஏற்றுமதியாளர்களுக்கு எதிராகச் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வழக்கொன்றினைத் தொடுத்தது; ஆனால், இத்தகைய பொறுப் புரிமை இரசீதுகளை நிறைவேற்றிக் கொடுத்தவர்களுக்கெதிராக வழக்குத் தொடர விரும்பிய வங்கியர்களுக்கு, நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு சில இடர்ப்பாடுகளைத் தோற்றுவித்திருந்தது. நீதிமன்றத் தின் தீர்ப்புப்படி, கடன் வாங்கியவரின் மோசடி காரணமாக, வங்கிக்கு உண்மையாக ஏற்படக்கூடிய நட்டத்தை அல்லது ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள நட்டத்தை மெய்ப்பிக்காமல், வங்கியர் எந்தத் தொகையையும் கடன்வாங்கியவரிடமிருந்து கோரமுடியாது என்று இருந்தது. இந்த நூலின் ஆசிரியர், இந்திய மைய வங்கி விசாரணைக் குழு (1931) [The Indian Central Banking Enquiry Committee (1931)] அதனுடைய அறிக்கையின் 565ஆவது பக்கத் தில் கூறியுள்ள, 'இந்தப் பொருள் தொடர்பான சட்டநிலை அரசினுடைய சட்ட ஆலோசகர்களால் பரிசீலனை செய்யப்பட்டு, அவசியமெனக் கருதப்படக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படலாம்' என்ற பரிந்துரையை மிகவும் ஆதரிக்கிறார்.

கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புகள் (Decisions of Calcutta High Court) : பொறுப்புரிமை இரசீதுகள் என்ற பொருளின்மீது, மிகவும் அண்மையில் கல்கத்தா உயர்நீதி மன்றத்தினால் கூறப்பட்ட மூன்று தீர்ப்புகள் திறனாய்வுப் பரிசீலனை செய்யப்படவேண்டியவைகளாய் உள்ளன. முதல் வழக்கு, நிரிபேந்த்ர குமார் போஸ், இ. லா. ரி. 56 கல். 107 (In the Nripendra Kumar Bose, I. L. R. 56 Cal. 107) என்பவர் சம்பந்தப்பட்டது ஆகும். இந்த வழக்கில் விற்பனை செய்தவர், தமக்குச் சாதகமாகப் பொறுப்புரிமை இரசீது ஒன்றனைக் கொடுத்து வாங்கியவருக்கு, சில சரக்குகளை ஒப்படைப்புச் செய்தார். நடவடிக்கை, மாநகரங்களின் நொடிப்பு நிலைச் சட்டத்தினுடைய 52(c) (i)ஆவது பிரிவின் சரத்துகளைத்

தோற்கடிப்பதற்கான முயற்சி என்றும், எல்லாக் கடனாளர்களுக்கும் மேலாக முன்னுரிமையைப் பெறுவதற்கான ஒரு முயற்சி என்றும், எனவே சட்டத்திற்கு முரணானது என்றும் தீர்ப்புக் கூறப்பட்டது; வாங்கியவர் நொடிப்பு நிலையை அடையும் தறுவாயில், சரக்குகள் சொத்தாட்சி அதிகாரியைச் (Official Assignee) சேரும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து வந்த மற்றொரு வழக்கில் (சம்மர்முல் சிங்கானா, இ.லா.ரி. 59 கல். 818—In the Summermull Singana, I.L.R. 59 Cal. 818) சம்பவங்கள் இதேபோன்றவைகளாக இருந்தன; தீர்ப்பும் இதேபோன்று இருந்தது.

வங்கியர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது, இத் தொடரில் கடைசியாகவுள்ள, தி சார்ட்டர்டு பாங்க் ஆப் இந்தியா எதி. தி இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா, இ.லா.ரி. 60 கல். 1262 (The Chartered Bank of India *v.* The Imperial Bank of India, I.L.R. 60 Cal. 1262) என்ற வழக்காகும். அங்கு எழுப்பப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்ட கருத்துகளை நன்கு அறிந்துகொள்ளும் பொருட்டு நிகழ்ச்சிகளைச் சிறிதளவு விவரமாகக் கூறவேண்டியது அவசியமாகும். அவை வருமாறு: 'டி' என்ற ஒரு நிறுவனம் இறக்குமதியாளராகவும் வியாபாரியாகவும் தொழில் செய்து வந்தது; அதற்குச் சரக்கனுப்பியவர்கள், அனுப்பப்பட்ட சரக்கின் விலைக்கு ஒரு மாற்றுச் சீட்டினை (Bill of Exchange) அதன்மீது எழுதினார்கள். (இந்த வழக்கின்) வாதிகளாகச் சார்ட்டர்டு பாங்க் ஆப் இந்தியா, கப்பல் வழிச்சீட்டு மற்றும் சரக்குகளோடு தொடர்புடைய ஆவணங்களைப் பிணையமாக எடுத்துக்கொண்டு, மாற்றுச் சீட்டினைக் கழிவுசெய்து சரக்கனுப்பியவர்களுக்கு நிதியுதவி அளித்தது. சரக்கனுப்பியவர்களுக்கும் 'டி'-க்கும் இடையேயான விற்பனை ஒப்பந்தத்தின் செலுத்துகை சம்பந்தமான பேரங்கள், செ. எ. ஆ. (செலுத்துகைக்கு எதிராக ஆவணங்கள்) (D/P-Documents against Payment) ஆகும். அதன் விளைவாக, மாற்றுச்சீட்டுக்குப் பணம் செலுத்தாமல், 'டி', சார்ட்டர்டு பாங்க் ஆப் இந்தியாவிடமிருந்து (சரக்கனுப்பீடு தொடர்பான) ஆவணங்களைப் பெறமுடியவில்லை. இருந்தபோதிலும், அது ('டி'), வழக்கமான பொறுப்புரிமை இரசீதுகளைச் சார்ட்டர்டு பாங்குக்குச் சாதகமாகக் கையொப்பமிட்டுக் கொடுத்ததன்பேரில், சார்ட்டர்டு பாங்க், ஆவணங்களை 'டி'-யிடம் ஒப்படைத்தது. பின்னர் நிறுவனம் 'டி', (பிரதிவாதியான) இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியாவிடமிருந்து கடன் ஒன்றினைப் பெறும்பொருட்டு, ஆவணங்களை அதனிடம் அடகாகக் கொடுத்தது. அதைத் தொடர்ந்து நிறுவனம் ('டி') நொடிப்புநிலையை அடைந்தது. சார்ட்டர்டு வங்கிக்கும், நிறுவனம் 'டி'-க்கும் இடையேயான,

பொறுப்புரிமை இரசீதுகளினால் ஏற்படுத்தப்பட்ட உறவு எப்படி யிருப்பினும், மதிப்பினைக் கொடுத்து, நல்லெண்ணத்துடன், அறிவிக்கை ஏதுமின்றி அடகு வாங்கியவர்களான இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியாவை அவை பாதிக்காது என்று தீர்ப்பளிக்கப் பட்டது. மேலும், இறக்குமதியாளர்கள் சட்டப்படியான உரிமை யாளர்களாக இல்லாததால், அவர்கள் பொறுப்புரிமையர்களாக (trustees) இருக்கக்கூடிய பொறுப்புரிமை (trust) ஏதும் இருக்க முடியாது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. முந்திய இரண்டு வழக்கு களையும் பின்பற்றி, 1909ஆம் ஆண்டின், மாநகரங்களின் நொடிப்புநிலைச் சட்டத்தின் 52 (இ) பிரிவின் காப்பு வாசகங்களைத் தோற்கடிப்பதுதான் அவைகளின் உண்மையான நோக்கமாக இருந்ததால், பொறுப்புரிமை ஏதாவது இருப்பின் அது இல்லா நிலையது (void) ஆகிவிடும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இறுதியாக, சார்ட்டர்டு வங்கியால், ஆவணங்கள், நிறுவனம் 'டி'-யிடம் ஒப்படைப்புச் செய்யப்பட்டது என்பது வழக்கினை நம்பிக்கை கொள் உரிமைக் (Reputed Ownership) கோட்பாட்டிற்குள் கொண்டுவந்தது என்றும், இம்பீரியல் வங்கிக்குச் சாதகமான அடகிற்கு உட்பட்டுச் சரக்குகள் சொத்தாட்சி அதிகாரியிடம் சட்டப்படி சேரும் என்றும் தீர்ப்புக்கூறப்பட்டது. இந்தத் தீர்ப்பு, கட்சிக்காரர்களால் முன்வைக்கப்பட்ட வாக்குவாதங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது; சார்ட்டர்டு வங்கி இறக்குமதி யாளர்கள் தங்களுடைய பொறுப்புரிமையர்கள் ஆவார்கள் என்று வாக்குவாதம் செய்து தனக்கு இடர்ப்பாட்டினை வரவழைத்தது. இத்தகைய வாதம் (argument) எந்த வகையில் வங்கிக்கு உதவி யாயிருக்கக்கூடும் என்பதை அறிந்துகொள்வது கடினமானதாக உள்ளது; ஏனென்றால், இறக்குமதியாளர்கள் பொறுப்புரிமையர் களாக இருந்தார்கள் என்ற அனுமானத்தை ஏற்படுத்திக் கொண் டாலும்கூட, இம்பீரியல் வங்கிக்குச் சாதகமாக ஏற்படுத்தப்பட்ட அடகு, சட்டப்படியான ஓர் அடகு ஆதலால், நிச்சயமாகச் சார்ட்டர்டு வங்கியின் நியாய உரிமைக்கு (Equitable Title) மேலான முன்னுரிமையை அது (இம்பீரியல் வங்கி) பெறும். சார்ட்டர்டு வங்கிக்கு ஏதாவது உதவியாக இருந்திருக்கக்கூடிய ஒரே வாதம் (argument), நார்த் வெஸ்டர்ன் பாங்க் எதி. பாயின்டர் [1895] அ. கோ. 56 [North Western Bank *v.* Poynter (1895) **A. C.** 56] என்ற வழக்கில் கோமகன்களின் அவை (House of Lords) அளித்த தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்ட ஒன்றாகும். ஆனால், ஆச்சரியப்படும் வகையில், தீர்ப்பில் குறிப்பிடப்பட்ட வாதத்தில் (argument) அது எடுத்துச் சொல்லப்படவில்லை. வழக்கின் சம்பவங்கள் வருமாறு: சில வியாபாரிகள், கடன் ஒன்றினைப் பெறுவதற்காக வாதி வங்கியிடம் ஒரு கப்பல் வழிச்சீட்டினை

அடகு வைத்தனர். ஓர் உடன்பாட்டின்படி—உண்மையில் ஒரு பொறுப்புரிமை இரசீதின்கீழ்—கப்பல் வழிச்சீட்டினை வங்கி அடகு வைத்தவர்களுக்குத் திரும்பக் கொடுத்தது; அதன் மூலம், அடகு வைத்தவர்கள் சரக்குகளைக் கப்பலில் இருந்து எடுத்து, வங்கியின் சார்பாக அவைகளை விற்று, கடனைத் தீர்வு செய்வதற்காக விற்று வந்த பணத்திற்குக் கணக்குக் காட்டவேண்டியவர்களாக இருந்தனர். கப்பல் வழிச்சீட்டு, வியாபாரிகளுக்கு ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காகக் கொடுக்கப்பட்டதால் அடகு முடிவானதாக ஆக்கப்படவில்லையென்றும், அடகு கொடுத்தவர்களுடைய பொதுக் கடனாளர்களுக்கு (General Creditors) எதிராக, வாதி வங்கி, கப்பல் சரக்கினை விற்றுப் பெற்ற பணத்திற்கு உரிமையுள்ளதாகும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. மேலே கண்ட இரண்டு வழக்குகளுக்கு மிடையேயுள்ள ஒரே வேறுபாடு, சார்ட்டர்டு பாங்க் எதி. இம்பீரியல் பாங்க் வழக்கில், ஆவணங்களை அடகு கொடுத்தவர்கள் சரக்கனுப்பியவர்கள், இறக்குமதியாளர்களல்லர். இந்த வேறுபாட்டின் அடிப்படையில், அடகு பெற்றவர்கள் என்ற முறையில், விற்பனை செய்வதற்குச் சார்ட்டர்டு வங்கிக்கு உரிமையளிக்கின்ற வகையில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை; எனவே, அவர்கள் ஆவணங்களை, இறக்குமதியாளர்களுக்கு, தங்களின் சார்பாகச் சரக்குகளை விற்பனை செய்வதற்கான குறிப்பிட்ட செயலுக்காகக் கொடுத்ததாகக் கருதமுடியாது என்று வாதிடலாம். ஆனால், சார்ட்டர்டு வங்கி விற்பனை செய்வதற்கான உரிமையைக் கொண்டிருக்கவில்லையெனில், குற்றம் சாட்டுவதற்கு உரிமை கொண்டுள்ள ஒரே ஆள், சார்ட்டர்டு வங்கியினுடைய அதிகாரமளிக்கப்படாத செயல்களை எந்த நிலையிலும் பின் ஏற்புச் (Ratification) செய்வதற்கு உரிமை கொண்டுள்ள அடகு கொடுத்தவர்கள், அதாவது கப்பலில் சரக்கனுப்பியவர்கள், ஆவார்கள். எப்படிப் பார்த்தாலும், அது, இம்பீரியல் வங்கியோடு தொடர்பே இல்லாத ஒரு செயலாகும். இரண்டாவது, இறக்குமதியாளர்கள், விற்பனை செய்வதற்காக என்ற குறிப்பிட்ட செயலுக்காகச் சரக்குகளின் மீதான உடைமை கொடுக்கப்பட்டனர் என்ற போதிலும், அவர்கள் சரக்குகளை உடைமை கொண்டுள்ள வாணிப முகவர்களாக (Mercantile Agent) ஆயினர் என்ற அனுமானத்தில், 1872ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டத்தினுடைய 178ஆவது பிரிவின்கீழ், செல்லத்தக்க ஓர் அடகினை ஏற்படுத்தமுடியும் என்றும் வாதிடலாம். கோமகன்களின் அவைத் தீர்ப்பில் இந்தக் கருத்து எழுப்பப்படவே இல்லை; வழக்கினுடைய சந்தர்ப்பச் சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கின்றபொழுது, இறக்குமதியாளர்களை வாணிக முகவர்கள் என்று கருதமுடியுமா என்பது ஐயமே. 1930ஆம் ஆண்டின் இந்தியச் சரக்கு விற்பனைச் சட்டத்தின்

30ஆவது பிரிவின் அடிப்படையிலான எந்த வாதத்திற்கும் வாய்ப் பில்லை; ஏனெனில், சார்ட்டர்டு வங்கி சரக்குகளை விற்றவர் அல்லர்; எனவே, இறக்குமதியாளர்கள் தங்களுடைய விற்பனையா ளர்களுடைய சம்மதத்தோடு உடைமை கொண்டுள்ள, வாங்கிய வர்கள் அல்லர்; இவ்வழக்கில், விற்பனையாளர்கள்தாம் சரக்கனுப் பியவர்களாவர் (shippers). இறுதியாக, 'நம்பிக்கைகொள் உரிமை'க் கோட்பாட்டினைப் பொறுத்தமட்டில்கூட, இக் கருத்து (தீர்ப்பு) கோமகன்கள் அவைத் தீர்ப்புக்கு எதிராக இருப்பதோடு மட்டுமல்லாமல், மெர்க்கன்டைல் பாங்க் ஆப் இந்தியா எதி. சென்ட்ரல் பாங்க், 65 இ. அ. 75 (Mercantile Bank of India v. Central Bank, 65 I. A. 75) என்ற வழக்கில் பிரிவி கௌன்சில் அளித்த தீர்ப்புக்கு ஒத்துப்போகாததாகவும் இருக்கிறது. இருப்பி னும், பொறுப்புரிமை இரசீதுகளைப் பொறுத்தவரையிலான சட்ட நிலை, ஏதாவது ஓர் உயர்நீதிமன்றத்தின் (Superior Court) தீர்ப்பி னால் மாற்றிச் (reversed) சொல்லப்படும் வரை கல்கத்தா தீர்ப்பு களினால்தான் ஒழுங்குபடுத்தப்பட்டதாகத் தொடர்ந்து இருந்து வரும்; அதன் காரணமாக, வங்கியருடைய நோக்கிலிருந்து பார்க் கையில், பொறுப்புரிமை இரசீதுகள் மதிப்பற்றவைகளாகக் கருதப்படக்கூடும்.

14. சில்லறைப் பிணையங்கள்
(Miscellaneous Securities)

நிலங்களும் கட்டடங்களும்
(Lands and Buildings)

ஒரு வணிக வங்கியினுடைய பணிகள், கட்டடச் சங்கம் (Building Society) ஒன்றினுடைய பணிகளைப் போன்றதன்று. அதனால், வங்கிகள் பொதுவாக, அசையாச் சொத்துகள் அல்லது அவை தொடர்பான பிணையப் பத்திரங்கள் ஆகியவைகளுக்கு எதிராகப் பணம் கடன் அளிப்பதில்லை. ஆகையால், இந்தத் தலைப்பின்மீது அதிக இடத்தைச் செலவிடுவதற்கு நாம் விரும்பவில்லை. மேலும், அசையாச் சொத்துகளின் அடைமானம் தொடர்பான சட்டம், வங்கியர்கள் வழக்கமாகக் கடன்களுக்குப் பெறுகின்ற பிணையங்களின் வகைகளை ஆட்சி செய்கின்ற (governing) சட்டங்களைவிட எவ்வளவோ சிக்கல் நிறைந்ததாகும். மேலும், இத்தகைய (அசையாச் சொத்துகளின்) பிணையங்களுக்கு எதிராக வணிக வங்கிகளால் கடனளிக்கப்படும் நிதியின் அளவு, ஒப்பீட்டடிப்படையில் மிகச் சிறியதாகும்; இதற்குக் காரணம் நிலங்களும் கட்டடங்களும் பிணையங்கள் என்ற முறையில், கீழ்க்காணும் காரணங்களுக்காக வங்கிகளுக்குக் கவர்ச்சிகரமானவைகளாக இல்லை.

பிணையம் என்ற முறையில் உண்மைச்சொத்துகள், வங்கிகளிடத்தில் வழக்கத்தில் இல்லாமை (Unpopularity of Real Estates with Bankers as Security)

சட்ட இடையூறுகள் (Legal Hindrances): எங்கு, சொத்தின் உரிமையை மாற்றித்தருவது தொடர்பாகச் சட்டப்படியான அல்லது மரபு வழக்கமான (customary) இடையூறுகள் இல்லையோ அங்கு, அது (உண்மைச் சொத்து) ஒரு வலுவான மற்றும் செல்லுபடியாகத்தக்க பிணையமாக அமையும். ஆனால், இத்தகைய மாற்றல்களின்மீது, சட்டங்கள் தடைகளை விதிக்கின்ற தறுவாய்களில், வங்கியர், அவருடைய வாடிக்கை

யாளருக்குக் கடனளிப்பது தொடர்பாகப் பல சிக்கல்கள் தோன்றுகின்றன; எடுத்துக்காட்டாக, விவசாயி அல்லாத ஒருவர், விவசாயி ஒருவரிடமிருந்து விவசாய நிலத்தைப் பெறமுடியாது. மேலும், இந்து மற்றும் முகம்மதியச் சட்டங்கள், மற்றும் சொத்து மரபு வழியுரிமை (Succession) மூலமான மாற்றல்களின் தொடர்பான மரபு வழக்குகள் ஆகியவை, சாதாரணமாக ஒழுங்கான மற்றும் வலுவான பிணையமெனக் கருதப்படும் பிணையத்தின் மீது வங்கியர் நிதி உதவி அளிப்பதில் கடுமையான இடையூறுகளைத் தோற்றுவிக்கின்றன.

வாடிக்கையாளருடைய உரிமையைப்பற்றி ஒருவர் திருப்திப் படுத்திக் கொள்வதிலுள்ள இடர்ப்பாடுகள் (Difficulties in Satrafying oneself regarding the customer's title): இத்தகைய பிணையங்களின் விடயத்திலுள்ள மற்றோர் இடர்நிரம்பிய தீமை யாதெனில், இந்தப் பொருள் தொடர்பான சட்டவியல் சிக்கல் நிறைந்ததாக இருப்பதாலும், அசையாச் சொத்து ஒன்றின்மீது ஓர் ஆள் கொண்டுள்ள உரிமை நல்லதா, இல்லையா என்பதை மிகவும் பயிற்சி பெற்ற ஒரு வழக்கறிஞர் மட்டுமே சான்றளிக்க முடியுமாதலாலும், பிணையத்தை அளிக்கின்ற ஆள் அதன் மீது சட்டப்படியான நல்ல உரிமையைப் பெற்றுள்ளாரா, இல்லையா என்பதைக் கண்டறிவதில் உள்ள இடர்பாடாகும். மேலும், உரிமை நல்லதாக உள்ளது என்று வழக்கறிஞர் ஒருவர் சான்றளிக்கக் கூடியவராக இருப்பதற்கு முன் எல்லாப் பத்திரங்களையும் துருவிப் படித்துப் பார்க்கவேண்டியவராக உள்ளார்; மற்றும் அடைமானம் கொடுப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கு எதிராக ஏற்கெனவே வில்லங்கங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்று கண்டறிவதற்கு, அசையாச் சொத்துகளோடு தொடர்பு கொண்டவைகளாகக் கருதப்படும் எல்லா ஆவணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் (District Collector) அல்லது காப்பீடுகளின் துணைப்பதிவாளர் (Sub-Registrar of Assurances) ஆகியோரின் அலுவலகங்களுக்குச் சான்றுரை கேட்டனுப்பவேண்டியுள்ளது. ஏற்கெனவே பற்றுகை (attachment) ஏதாகினும் உள்ளதா அல்லது பிணையமாகக் கொடுக்கப்படுவதாக உள்ள சொத்து நீதிமன்றத்தின் ஆணைமூலமாக ஏற்கெனவே வில்லங்கப்படுத்தப்பட்டுள்ளதா என்று அறிந்துகொள்ளும் பொருட்டு, அடைமானம் கொடுக்கப்படுவதற்காக உள்ள சொத்து, நகர், ஏதாவது ஒன்றில் இருக்கக் கூடியது என்றால் மாவட்ட ஆட்சித்தலைவர் அல்லது துணைப்பதிவாளர் அலுவலகத்திலும், அது (நகர் அல்லாத) இதர இடங்களில் இருப்பதாக இருந்தால்

நீதி மன்றங்களிலும் ஒரு தேடுதல் சோதனை செய்யப்படவேண்டும், இவை யாவும் தேவையுள்ளவைகளாக உள்ளன; ஏனென்றால், மேலே குறிப்பிடப்பட்டபடி, சரியான தேடுதல் சோதனை நடத்தப் பட்டதன் விளைவாக, பிணையமாக அளிக்கப்படுவதற்கு உள்ள எந்தச் சொத்துக்களின்மீது, வங்கியர் உண்மையான அறிவிக்கை யைப் பெற்றுள்ளாரோ, அறிவிக்கையைப் பெற்றிருக்கக் கூடுமோ, அந்தச் சொத்துகளின் மீதான முந்தைய எல்லா வில்லங்கங்களும் (encumbrances), பொறுப்புகளும், சொல்லப்பட்ட சொத்துகளின் மீது மேற்கொண்டு ஏற்படுத்தப்படும் எல்லா அடைமானங்களை யும்விட முன்னுரிமை பெறுகின்றன. மேலும், ஓர் அசையாச் சொத்தினுடைய உரிமைப் பத்திரங்களை வைத்துள்ள ஓர் ஆள், அதனுடைய முழு உரிமையாளராக இல்லாமல் இருக்கலாம்; எடுத்துக்காட்டாக, அடகு வாங்கியுள்ள ஒருவரைப்போல, அவர், உரிமைப்பத்திரங்களை, ஒரு முழு உரிமையாளர் என்ற முறையில் அல்லாத வேறு ஒரு உரிமையின் கீழ் வைத்துக்கொண்டிருக்கலாம். அவர் ஓர் அடைமானம் பெற்றவர் (mortgagee) எனில், சொத்தினை அடைமானமாக வைப்பதற்கான அவருடைய உரிமை, அவரால் கடனளிக்கப்பட்ட தொகையோடு, வட்டி மற்றும் அதன் மூலம் வரவேண்டியுள்ள இதரக் கட்டணங்கள் சேர்ந்த ஒரு தொகையின் அளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. சில வேளைகளில், உரிமைப் பத்திரங்கள் ஒரு பெரிய நிலப்பரப்புச் சம்பந்தப்பட்டதாக இருக் கலாம்; ஆனால் அதில் கணிசமான ஒரு பகுதி, அவ்வாறு விற்பனை செய்யப்பட்டது மூலப்பத்திரத்தில் குறிப்பிடப்படாமலே (மேலெழு தல் செய்யப்படாமலே), விற்பனை செய்யப்பட்டிருக்கலாம்; அதன் விளைவாக, பிணையமாக ஆக்கப்படவேண்டிய சொத்தினுடைய மதிப்பு, கேட்கப்படும் கடன் தொகையைவிட மிகவும் குறைவான தாக இருக்கலாம்.

சட்டப்படியான அடைமானங்கள் தொடர்பான அதிகச் செலவு கள் (Heavy Expenses of Legal Mortgages) : உண்மையான சொத்துகளுக்கு எதிராகக் கடனைப் பெறுவதற்கு முன்னர், சொத்தினை அடைமானமாகக் கொடுப்பதில் அதிகமான செல வினை வாடிக்கையாளர் ஏற்கவேண்டியுள்ளது. வாடிக்கையாளர் அந்தச் செலவுகளைத் தாங்கமுடியாதவராக இருந்தால், அவருடைய நிதி நிலையை நலிவுறச்செயயக் கூடிய வகையில், அதிகமான பணத்தை, அவர் கடனாக வாங்கவேண்டியிருக்கும். எனவே, வாடிக்கையாளர் நீண்டதொரு காலத்திற்குப் பணம் தேவையுள்ளவராக இருக்கிறார் என்பது பெரும்பாலும் உறுதி.

பிணையத்தினுடைய எளிதில் விற்கமுடியாத் தன்மை (Frigid Nature of the Security): ஒரு வணிக வங்கி மேற்கொள்ளுகின்ற கொள்கை அல்லது நோக்கம், தன்னுடைய கடன்களை, எளிதில் விற்றுப் பணமாக்கக் கூடிய பிணையங்களைக் கொண்டு உத்தரவாதம் செய்வதாகும். நிலங்களையும் கட்டடங்களையும் எளிதில் பணமாக்குவதென்பது இடர்ப்பாடானது. ஆதலால், அதனுடைய பணத்தை நீண்டகாலத்திற்கு முடங்கிக் கிடக்கும்படி (locked up) விட்டுவைப்பது ஒரு வங்கியின் நலத்திற்கு உகந்தது அன்று. குறிப்பாக, அவைகளின் (வங்கிகளின்) பொறுப்புகள், அதிகமாக, கேட்டபொழுது அல்லது குறுகிய கால அறிவிக்கையில் கொடுக்கப்படவேண்டிய வைப்புகளின் வடிவத்தில் இருப்பதால், வணிக வங்கிகள் தங்களின் சொத்துகளை நீண்டகாலத்திற்கான கடன்களாக உறைந்து கிடப்பதற்கு அனுமதிக்க முடியாது. இத்தகைய பிணையங்கள், குறிப்பாக நிதி நெருக்கடி காலங்களில், பெரும்பாலும் விற்கவேமுடியாதவைஃளாகும். மேலும், உரிமை மாற்றிக் கொடுப்பது தொடர்பான படிவம் மிகவும் சிக்கலானதாகும்; மற்றும் இத்தகைய சொத்தினை வாங்கக் கூடிய ஒருவரைக் கண்டுபிடித்துவிட்டாலும், விற்பனைப் பத்திரத்தைத் தயாரிப்பதற்கும், அதனைப் பதிவு செய்வதற்கும் கணிசமான காலம் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பல வகையான நில உரிமைக் கட்டுபாடுகள் (Variety of Land Tenures): மேலும் நிலத்தோடு தொடர்புடைய, சில வரி வீதங்களை வங்கியர் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக் காட்டாக, வில்லங்கமற்றவை (freehold), பசந்தாரி (Fazandari) சனாதி (sanadi), கோட்டி (khoti), இனாமி (Inami), டோகா (Toka), முதலிய பல வகையான உரிமைக் கட்டுப்பாடுகளின் (Tenures) கீழ் நிலங்கள் உள்ளன. அதேபோல, சென்னை, மேற்கு வங்காளம் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில், முறையே குடிமுறை (Ryotwari), மற்றும் படிதாரி (Patidari) ஆகிய உரிமைக் கட்டுப்பாடுகள் உள்ளன. வேளாண்மை வகுப்பினரின் உயர்வுக்காக, நில உரிமைக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் பலவும், பல்வேறு மாநிலச் சட்டமன்றங்களினால் மாற்றப்பட்டு வருகின்றன. வெவ்வேறு உரிமைக் கட்டுப்பாடுகளும், அவைகளோடு இணைக்கப்பட்டுள்ள வெவ்வேறு வரிவீதங்களைக் கொண்டுள்ளன; அதனால், நிலத்தினுடைய மதிப்பு, அது எந்த உரிமைக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ளதோ அந்த உரிமைக் கட்டுப்பாட்டிற்குத் தகுந்தவாறு மாறுபடுகின்றது. சுருங்கக்கூறின், அசையாச் சொத்துகளின் மீதான அடைமானம் என்னும் தலைப்பு (பொருள்), மிகவும் தனித்தன்மை வாய்ந்த மற்றும் சிக்கல் நிறைந்த ஒன்றாகும்; ஒரு

வங்கியர், சட்ட வல்லுநர் ஆலோசனை இல்லாமல், ஓர் அசையாச் சொத்தினுடைய பிணையத்தின்பேரில், பாதுகாப்பான முறையில் எப்போதும் பணம் கடனளிக்கமுடியாது.

மதிப்பீடு செய்வதில் இடர்ப்பாடு (Difficulty in Valuation) : இத்தகைய பிணையங்களைப் பொறுத்தமட்டில் மற்றோர் இடர்ப்பாடு, சொத்துகளை மதிப்பீடு செய்வது தொடர்பாக எழுகின்றது; ஏனென்றால், ஒரு வங்கியர், நிலம், கட்டடம் ஆகியவைகளின் விலையிலுள்ள ஏற்ற இறக்கங்கள், கட்டடத்தின் தேய்மானம், இதரச் சில காரணிகள் ஆகியவைகளுக்காக மட்டுமே ஓர் எச்ச ஓரத்தை (margin) வைத்துக்கொண்டு, ஒரு நபருக்குப் பணம் கடனாக அளிக்கமுடியும். இந்த விடயத்தில் வங்கியர் தம்முடைய சொந்த மதிப்பீட்டின்மீது சார்ந்திருக்கமுடியாது; ஆனால், சிறப்புப் பயிற்சி பெற்றுள்ள அளவாய்வாளர்கள் (surveyors), கட்டட நிபுணர்கள், பொறியாளர்கள் ஆகியோரின் மதிப்பீடு அறிக்கைகளின்மீதே சார்ந்திருக்கவேண்டியவராக உள்ளார். ஐயத்திற்கிடமின்றிச் சொத்தினுடைய விலை மிகவும் உயர்வாக இருக்கலாம்; ஆனால் விற்பனைக்கு அளிக்கப்படுகின்ற பொழுது, வெளிச்சந்தையில் அது, அதுபோன்ற ஒரு தொகைக்கு விற்பனையாகாது. தம்முடைய சொந்தத் தேவைக்காகவும், விருப்பத்திற்காகவும் உரிமையாளர் அதிகப்படியான செலவினைச் செய்திருந்து, ஆனால், அது, உருப்படியான வகையில், சாதாரணக் குத்தகைக்கு விடுகின்ற நோக்கில் பார்த்தால், சொத்தின் மதிப்பினை உயர்த்தாமல் போகக்கூடியதாகவும் ஆகலாம். சில வேலைகளில் அதன் அமைப்பு அல்லது இருக்குமிடம், சொத்தினுடைய மதிப்பினைக் கணிசமான அளவிற்குப் பாதிக்கின்றது; எடுத்துக்காட்டு, மற்ற இடங்களோடு தொடர்பே இல்லாத ஒரு கிராமத்தில் உள்ள மாளிகை போன்ற கட்டடம். இதன்பிறகு, மதிப்பு, நிரந்தரத்தன்மை கொண்டவைகளாக இல்லாத, சில குறிப்பிட்ட நிறுவனம் அல்லது தொழில் நிலையம் ஆகியவை அந்த இடத்தில் இருப்பதன்மீது சார்ந்திருக்கலாம்.

பிணையத்தை விற்றுப் பணமாக்குவதில் தாமதம் (Delay in Realisation of the Security) : இத்தகைய பிணையங்களிலுள்ள மற்றொரு தீமை, அவரிடமிருந்து வரவேண்டிய தொகையைத் திரும்பச் செலுத்துவதற்கு அடைமானம் கொடுத்தவர் தவறுகின்ற தறுவாயில், அடைமானம் கொடுக்கப்பட்டுள்ள சொத்தினுடைய விற்பனையை நிறைவேற்றுவதற்கு முன்னர், வங்கியர், பல சட்டச் சடங்குகளை நிறைவேற்ற வேண்டியவராக உள்ளார். அதன்

விளைவாக, தம்முடைய பணத்தைத் திரும்பப்பெறுவது அவருக்குச் சாத்தியமாக ஆவதற்கு, வங்கியர், பல மாதங்களுக்கு, சிலவேளைகளில் பல ஆண்டுகளுக்குங்கூட, காத்திருக்கவேண்டியுள்ளது.

பழுதுபார்த்தல் செலவுகளைச் செலுத்துவது மற்றும் குடியிருப்பவரை (குத்தகைதாரரைக்) கண்டுபிடிப்பது (To pay costs of Repairs and Find Tenants) : நிலங்கள், கட்டடங்கள் ஆகியவைகளுக்கெதிராகக் கடனளிக்கின்ற நேரத்தில், கடன் அளித்துள்ள காலத்தில் சொத்தினை வாடகைக்கு விடுவதன்மூலம் சிறிது வாடகை பெறுவதை வங்கியர் எதிர்பார்க்கிறார் என்றாலுங்கூட, சொத்தினை வாடகைக்கு விடுவதற்கான நிலையில் வைத்திருப்பதற்காக, பழுது பார்த்தல் செலவுகளைச் செலுத்தவேண்டியவராகவும் அவர் உள்ளார். மேலும், இந்த வேலையைத் தகுதிவாய்ந்த சொத்துத் தரகர்களிடம் அவரால் ஒப்படைக்க முடிந்தாலன்றிச் சரியான குடியிருப்போரைக் (Tenants) கண்டுபிடிப்பதிலும், வாடகை வசூல் செய்வதிலுங்கூட அவர் துயர்படவேண்டியிருக்கக் கூடும்.

முடிவு (conclusion) : பிணையமாக அளிக்கப்படும் அசையாச் சொத்தின் மதிப்பீடு மற்றும் அதனை அடைமானமாகக் கொடுக்கப் போவதாகக் கூறுகின்ற நபருடைய உரிமை ஆகிய இரண்டின் தொடர்பாகவும், அவை தங்களுடைய சொந்த மதிப்பீட்டின்மீது சார்ந்திருக்க முடியாமல், ஆனால், பெருமளவிற்கு மற்றவர்களின் மதிப்பீட்டின்மீது சார்ந்திருக்கின்றவரையில், மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களுக்காக, அசையாச் சொத்துகளின் பிணையத்தின் மீது கடன் வழங்குவது வணிக வங்கிகளிடத்தில் அதிகமாக வழக்கத்திலில்லாத தொழில்வகை என்பதைக் காணலாம். இருந்தபோதிலும், தொழில்களுக்கான நிதியின்மீது (Industrial Finance) அதிகப்படியான முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதன் காரணமாக வங்கிகள் நிலம், கட்டடம் கருவி, தளவாடம் ஆகியவைகளின் அடைமானத்திற்கு எதிரான தளவாட நிதித் (Equipment Finance) துறையில் மெதுவாக முற்பட்டு வருகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட தேவையான முன்னெச்சரிக்கைகளை அவை எடுத்துக் கொண்டு, சிறப்புத் துறையின் வழிகாட்டுதலால் உதவி செய்யப்படுகின்ற வரையில், அவை நியாயமான ஒரு வரம்பினை, சொல்லப் போனால், அவைகளின் வைப்புகளில் 5 சதவீதத்திற்கு, மிகாமல் இருக்குமானால் அவை இத்தகைய கடன்களை வழங்குவதில் ஈடுபடுவதற்குப் பெருமளவிலான எதிர்ப்பு ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை,

அடைமானங்கள் (Mortgages)

விளக்கம் (Definition): 1882ஆம் ஆண்டின் சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 58-ன் படி (Section 58 of the Transfer of Property Act, 1882) ஓர் அடைமானம், "கடனாக அளிக்கப் பட்டுள்ள பணம் அல்லது கடனாக அளிக்கப்படுவதற்குள்ள பணம், ஏற்கெனவே உள்ள கடன் அல்லது வருங்காலக் கடன் ஆகியவை திருப்பிச் செலுத்தப்படுவதையும், பணம் சார்ந்த ஒரு பொறுப்பினை ஏற்படுத்தக்கூடிய ஓர் ஒப்பந்தத்தினை நிறைவேற்றுவதையும் உத்தரவாதம் செய்வதற்காகக் குறிப்பிட்ட சொத்தில் உள்ள ஓர் உரிமையை மாற்றல் செய்வதாகும்" என்று விளக்கப்பட்டுள்ளது. ஓர் அடைமானத்திற்குத் தேவையான சிறப்புக்கூறு, ஒரு கடனை அல்லது கடமையினை உத்தரவாதம் செய்வதற்காகக் குறிப்பிட்ட அசையாச் சொத்திலுள்ள ஓர் உரிமையை மாற்றல் செய்வதாகும். ஒரு கடனைத் தீர்ப்பது போன்ற வேறு ஏதாவது காரியத்திற்காக மாற்றல் செய்யப்பட்டிருந்தால் அதனை அடைமானம் என்று கூற முடியாது. மேலும், அடைமானம் கொடுக்கப்படக்கூடிய அசையாச் சொத்து குறிப்பிடப்பட்டதாக (Specific) இருக்கவேண்டும்; அதாவது அது தெளிவாக விவரித்துக் கூறப்படத்தக்கதாக இருக்கவேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட அசையாச் சொத்து என்னும் சொல், புல், பயிர் அல்லது நின்று கொண்டிருக்கும் மரம் ஆகியவைகளைக் குறிப்பிடாது என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

சட்டப்படியான அடைமானம் (Legal Mortgage): ஒரு சட்டப் படியான அடைமானம் (பின்னிணைப்பு 'ஆ', படிவம் எண் 32 பார்க்கவும்) என்பது, திரு. எச்.பி. செல்டன்(Mr. H.P. Sheldon) என்பவருடைய "வங்கியியல் நடைமுறையும் சட்டமும்", என்னும் நூலின் 9ஆவது பதிப்பின் 47ஆவது பக்கத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளதுபோல், "அடைமானம் அளித்தவர், அவ்வாறு அடைமானமாகக் கொடுக்கப்பட்ட சொத்தினை, வட்டியோடு கடனைத் திரும்பக் கொடுத்ததன்பேரில் திரும்ப எடுத்துக் கொள்வதற்கான உரிமைக்கு உட்பட்டு, பிணையத்தை எடுத்துக் கொள்ளுகின்ற ஆளுக்குக் கொடுக்கவேண்டியுள்ள அல்லது அவருக்குச் சாதகமாக, கொடுக்கவேண்டியதாக ஆகக்கூடிய, பணத்தினைத் திரும்பச் செலுத்துவதற்காக ஓர் உடன் படிக்கைப் பத்திரத்தின்மூலம், சட்டப்படியான ஒரு சொத்தினை அல்லது நிலத்திலுள்ள உரிமையை ஒரு பிணையமாக ஏற் படுத்துவது" ஆகும். சட்டப்படியான அடைமானத்தில், பிணையம் யாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த நபருக்கு,

சட்டப்படியான உரிமைகளை மாற்றிக் கொடுப்பது இன்றியமையாததாகும். வேறு முறையில் கூறவேண்டுமானால், சொத்தின் மீதான சட்டப்படியான உரிமை, அடகு கொடுத்தவர் திரும்ப மீட்டிக்கொள்வதற்கான உரிமைக்கு உட்பட்டு, அதாவது, வட்டி மற்றும் பிணையத்தைப் பாதுகாத்தல், பராமரித்தல் அல்லது செயல்படுத்துதல் ஆகியவை தொடர்பாக அடைமானம் வாங்கியவர் ஏற்கவேண்டி வந்த கட்டணங்களோடு சேர்த்து, கடனைத் திரும்பச் செலுத்தி விடுவதன்பேரில், சொத்தினைத் திரும்ப அனுப்பப் பெறுவதற்கான உரிமைக்கு உட்பட்டு, மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது.

நியாய அடைமானம் (Equitable Mortgage): உரிமைப் பத்திரங்களை வைப்புச் செய்வதன் மூலம் (பின்னிணைப்பு- "ஆ", படிவம் எண்கள் 32(அ) மற்றும் 32(ஆ) பார்க்கவும்) ஒரு கடன் பணம் உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தால் அது நியாய அடைமானம் எனப்படும்; ஏனென்றால், இத்தகைய தறுவாயில் சொத்தினுடைய சட்டப்படியான மாற்றல் ஏற்படுவதில்லை. பாஸ்டர் எதி. பர்னார்டு (1916) 2 அ. கே. 160 (Foster v. Barnard (1916) 2 A.C. 160) என்ற வழக்கில், கோமகன் ஹால்டேன் (Lord Haldane), "உரிமைப்பத்திரங்களை வங்கியரிடத்தில் வைப்புச் செய்வது என்பது, நியாயத்தின் கண்களுக்கு வங்கியர்களை அடைமானம் வாங்கியவர்களாக ஆக்குகின்றது", என்று கூறினார். ஆங்கிலச் சட்டத்தின்கீழ் இத்தகைய அடைமானம், அடைமானம் வாங்கியவருக்குச் சொத்திற்கு எதிராக உரிமைகளைக் கொடுப்பதில்லை; ஆனால் அதனுடைய உரிமையாளருக்கு எதிரான ஆள்சார் உரிமையை (Personal Right) மட்டுமே கொடுக்கின்றது. இவ்வாறு, ஒரு நியாய அடைமானத்திற்கு அவசியமாக இருக்கவேண்டியவை: (1) கடன்; (2) அடைமானம் வைக்கப்படுவதற்குள்ள சொத்தினுடைய உரிமைப் பத்திரங்களை வைப்புச் செய்தல், மற்றும் (3) அடைமானம் வாங்கியவருக்கு ஒரு பிணையத்தை (Security) அளிக்கவேண்டுமென்ற உள்நோக்கம் ஆகியவைகளாகும் என்பதை அறியலாம். இந்தியாவில் இத்தகைய அடைமானங்கள் சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உரிமைப் பத்திரங்களை வைப்புச் செய்வதன் மூலமான அடைமானம் என்று அழைக்கப்படுகிறது.

பெரிய நகரங்கள் மற்றும் இதரச் சில நகரங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளது (Restricted to Large cities and certain other cities): அசையாச் சொத்துகளின் அடைமானம் தொடர்பான சட்டம் மிகவும் சிக்கலானது, மற்றும் தொழில் நுட்டமுடை

யது (technical) என்ற உண்மையைக் கருத்தில்கொண்டு, அவசரத் தேவைகளின்போது, விரைவான கடன்களை வசதியாக ஆக்கும் பொருட்டு, இந்தியச் சட்டமன்றம் (Indian Legislature), 1882ஆம் ஆண்டின் சொத்து மாற்றல் சட்டத்தின், 58(ஊ) பிரிவின் மூலம், பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற பெரியநகரங்களிலும், மற்றும் மாநில அரசுகள், அதிகாரபூர்வமான அரசிதழில் (gazette) அறிவிப்புச் செய்வதன்மூலம் குறிப்பிடுகின்ற வேறு ஏதாவது நகரத்திலும், ஒரு நபரால் அவருடைய அசையாச் சொத்தின் மீதான நியாய அடைமானம் ஒன்று, அவருடைய கடனாளருக்கு அல்லது அவருடைய (கடனாளரின்) முகவருக்கு (agent) அந்த அசையாச் சொத்தின் உரிமைப் பத்திரங்களை, அதன் மூலம் ஒரு பிணையத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற உள்நோக்கத்தோடு, ஒப்படைப்புச் செய்வதன் மூலம் ஏற்படுத்தப்படலாம் என்று மேற்கொண்டும் சட்டமியற்றியது. இந்த வசதியை, கல்வியறிவு இல்லாமலும் அறியாமையிலும் உள்ள மக்கள் அதிகமாக இல்லாத பெரிய நகரங்களுக்கு மட்டும் வரையறைப்படுத்தியது, முதலில் நியாயமானதாக இருந்திருக்கலாம். மைய வங்கியியல் விசாரணைக் குழு (1931) [Central Banking Enquiry Committee (1931)] தன்னுடைய அறிக்கையின், 563ஆவது பத்தியில் ஏற்றுக்கொண்டுள்ளதுபோல, இந்த வசதியை, மேற்கொண்டு இதர வணிக நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படவேண்டியதன் அவசியம் தெளிவாக உணரப்பட்டது. அதன் விளைவாக, அவ்வப்போது விடுக்கப்பட்ட அறிக்கைகளின்மூலம் அதிக நகரங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. (அவை: பந்த்ரா, குர்லா, கட்கோபர்-கிரேல், கான்பூர், அலகாபாத், லக்னோ, கோயம்புத்தூர், மதுரை, காக்கிநாடா, கொச்சி, ஆக்ரா, அகமதாபாத் முதலியன)

நியாய அடைமானங்களின் நன்மைகள் (Advantages of Equitable Mortgages) : நியாய அடைமானங்கள், முதலாவது, நேரத்தையும் தொந்தரவுகளையும் மிச்சப்படுத்துகின்றன என்ற காரணத்திற்காக, சட்டமுறையிலான அடைமானங்களைக்காட்டிலும், பொதுவாக, அதிகமாக விரும்பப்படுகின்றன. ஒரு நியாய அடைமானம் எழுத்து மூலமானதாகவோ, பதிவு செய்யப்பட்டதாகவோ இருக்க வேண்டிய தேவையில்லாததால், ஒரு வங்கியினுடைய வாடிக்கையாளர் ஒருவர், தம்முடைய அசையாச் சொத்துக்கு எதிராகக் கடன் ஒன்றினை அவசரமாகப் பெற விரும்பினால், வங்கியின் அதிகாரிகளை அவர் தம்முடைய உரிமைபற்றியும், சொத்தினுடைய மதிப்பீடுபற்றியும் திருப்திப்படுத்த முடியுமென்றால், எந்தவிதத் தாமதமும் இல்லாமல் அவருக்குப் பணம் கடனளிக்கப்படலாம். இரண்டாவது, சட்டப்படியான அடைமானங்கள் மிகவும் அதிகமான

முத்திரை வரிகளுக்கு உட்பட்டவைகள்; எனவே, உரிமைப் பத்திரங்களை வைப்புச் செய்வதற்கு எதிராகப் பணம் கடனளிக்கப் படுமானால், அதன்மூலம் சட்டப்படியான ஓர் அடைமானத்தை நிறைவேற்றித் தருவதிலுள்ள செலவுகள் தவிர்க்கப்படுகின்றன. மூன்றாவது, சட்டப்படியான அடைமானப் பத்திரத்தில் கையொப்ப மிடுகின்ற சாட்சிகள் மட்டுமல்லாமல், பதிவு செய்யப்படுவதற்காகப் பத்திரம் யார் யாருடைய கைகள் மூலமாகச் செல்கின்றதோ அவர்களுங்கூட, அடைமானத்தைப்பற்றி அறியக்கூடுமாதலால், சட்டப்படியான அடைமானம் ஒன்றினைக் கொடுப்பவருடைய நாணயம் பாதிப்படையக்கூடும். உண்மையில், பதிவு அலுவலகத் திற்குப் பெயரளவிலான கட்டணம் ஒன்றினைச் செலுத்திவிட்டு யார்வேண்டுமானாலும் பத்திரத்தினுடைய பொருளடக்கத்தைப் படிக்கலாம்.

நியாய அடைமானங்களிலுள்ள குறைபாடுகள் (Drawbacks of Equitable Mortgages) : நியாய அடைமானங்களுக்கு ஆதரவாக மேலே சொல்லப்பட்ட கருத்துகளுக்கெதிராக, இங்கிலாந்தில், நியாய அடைமானம் ஒன்றினைப் பெற்றவர், சட்டப்படியான ஓர் உரிமையைக் கொண்டுள்ள ஒருவரால், அல்லது முந்தைய நியாய உரிமை ஒன்றினால், தம்முடைய உரிமை தோற்கடிக்கப்படக்கூடிய இடர்வாய்ப்பினை ஏற்கவேண்டியவராக உள்ளார் என்பது குறிப் பிடப்படவேண்டியதாகும். இருப்பினும்; அடைமானம் கொடுக்கப் பட்டுள்ள சொத்தினுடைய உரிமைப் பத்திரங்கள் வங்கியினால் விட்டுவிடப்படவில்லை என்றாலும், வாடிக்கையாளரின் நடத்தை ஐயத்திற்கிடமில்லாதது என்பது தெரிந்திருந்தாலும், இடர்வாய்ப்பு நிகழக்கூடிய ஒன்றன்று. நியாய அடைமானத்தைப் பெற்றவர், நீதிமன்றத்தினுடைய ஆணை ஒன்றினைப் பெறாமல் சொத்தினை விற்பனை செய்வதற்கு உரிமையில்லாதவராதலால், பிணையத்தை விற்றுப் பணமாக்குவதில் காலதாமதம் ஏற்படக்கூடிய மற்றொரு தீமையும் இதில் உள்ளது.

நியாய அடைமானத்தைப் பெற்றவர், அதைத் தொடர்ந்து சட்டப் படியான அடைமானத்தைப் பெற்றவர் ஆகியோருடைய உரிமைகள் (Rights of Equitable Mortgagee and Subsequent Legal Mortgagee)

இங்கிலாந்தில், பின்னர் ஏற்பட்ட சட்டப்படியான அடை மானத்தைப் பெற்றவர் முந்தைய நியாய அடைமானம் பற்றிய அறிவிக்கையினைப் பெற்றிருந்தார் என்று அத்தாட்சியினால் தோற்கடிக்கப்பட்டாலன்றி, பின்னர் ஏற்பட்ட சட்டப்படியான அடைமானத்தைப் பெற்றவர், முந்தைய நியாய அடைமானத்

தைப் பெற்றவரைவிட முன்னுரிமையைப் பெறுவதற்குத் தகுதி பெற்றிருக்கிறார். அவர், அடைமானத்தை, பதிவுசெய்யப்படாத அடைமானத்தைப்பற்றிய ஓர் அறிவிக்கையோடு பெற்றுக்கொள்கிறார் என்றால், அவருடைய பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற ஒரு காரணத்திற்காக மட்டும் ஒருவர் முன்னுரிமையைக் கோரமுடியாது. இந்தியாவில், சொத்து மாற்றல் சட்டம் (Transfer of Property Act) இத்தகைய அடைமானங்களைச் சாதாரண அடைமானங்களுக்குச் சமமானவையென ஏற்றுக்கொள்வதால் (பிரிவு 96) இங்கு, நிலைமை சற்று வேறுபட்டதாகும்; ஆனால், மேலே குறிப்பிடப்பட்டதுபோல, அவைகளின் நடவடிக்கைகளைக் குறிப்பிட்ட சில வணிக இடங்களுக்கு மட்டும் வரையறை செய்துள்ளது. இது வியாபாரச் சமூகத்தின் வசதிக்காக, உரிமையைப் பரிசீலனை செய்வது தொடர்பாக ஏற்படக்கூடிய காலதாமதம், பதிவு செய்வது மூலமாக ஏற்படக்கூடிய விளம்பரம் ஆகியவை இல்லாமல் பணத்தைக் கடன் பெறுவதற்கு உதவியாகச் செய்யப்பட்டுள்ளது. இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா எதி. யு. ராய், 50 இ. அ. 283 (Imperial Bank of India *v.* U. Rai, 50 I. A. 283) என்ற வழக்கில், பிரிவு கௌன்சில், முன்னுரிமைப் பெறுவது என்பதைப் பொறுத்தமட்டில், உரிமைப் பத்திரங்களை வைப்புச் செய்வதன் மூலமான ஒரு நியாய அடைமானம், ஒப்பாவணம் மூலமான ஓர் அடைமானத்தைப்போல அதே தகுதியில் உள்ளது என்று தீர்ப்புக் கூறியது. இதே போன்ற சரத்து ஒன்று, இப்பொழுது, 1908ஆம் ஆண்டின் இந்தியப் பதிவுச் சட்டத்தின் (Indian Registration Act, 1908) 48ஆவது பிரிவுடன் சேர்க்கப்பட்டுள்ளது. பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களுக்கான வரையறை, சொத்து இருக்கின்ற இடத்தினைக் குறிப்பிடாமல், எங்குப் பத்திரங்கள் சேர்ப்புச் செய்யப்படுகின்றனவோ, அந்த இடத்தினை மட்டுமே குறிப்பிடுகின்றது. ஒருவர் நாசிக்கில் உள்ள தம்முடைய சொத்தினுடைய உரிமைப் பத்திரங்களை, பம்பாயிலுள்ள ஒரு வங்கியிடம் கொடுத்தால், செல்லுபடியாகத்தக்க ஒரு நியாய அடைமானம் ஏற்படுத்தப்படும். (சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா எதி. நுசர்வாஞ்சி, 57 பாம். 234) (Central Bank of India *v.* Nusserwaji, 57 Bom. 234). குறிப்பிட்ட நகரங்களுக்கு வெளியில் பத்திரங்களை வைப்புச் செய்வது ஓர் அடைமானத்தைமட்டுமன்று, ஒரு பொருட்பிணைப் பொறுப்பிணைக் (charge) கூட ஏற்படுத்தாது. (கொஞ்சாடி எதி. சிவா 28 மத. 54) (Konchadi *v.* Shiva, 28 Mad. 54). 'அ' என்பவர், பம்பாயிலுள்ள தம்முடைய சொத்தின் உரிமைப் பத்திரங்களை, டெல்லியிலுள்ள ஒரு வங்கியில் வைப்புச் செய்தால், சொத்தினைப் பொறுத்தமட்டில், சட்டம் எந்த ஒரு விளைவினையும் ஏற்படுத்

தாது. உரிமைப் பத்திரங்களை வைப்புச் செய்வதன் மூலமான ஓர் அடைமானத்திற்கு எழுத்து மூலமாக எதுவும் தேவையில்லை. வழக்கமாக உள்ளபடி, அது ஒரு நினைவுக் குறிப்போடு (memorandum) சேர்த்து வைப்புச் செய்யப்பட்டால் அது, பதிவு செய்யப்படவேண்டும் (பிரஞ்ஜீவன்தாஸ் எதி. சான் மா, 43 இ.அ. 122) (Pranjiwandas *v*. Chan Ma, 43 I.A. 122).

உரிமைப் பத்திரங்களோடு கவனக் குறைவான நடவடிக்கைகள்
(Negligent Dealings with Title Deeds)

தம்மிடம் வைப்புச் செய்யப்பட்டுள்ள உரிமைப் பத்திரங்களோடு கவனக்குறைவான நடவடிக்கைகள் ஏதும் நடைபெறாமல் வங்கியர் பார்த்துக்கொள்ளவேண்டும்; ஏனென்றால், கவனமின்மை (negligence) அவர்களுடைய அடைமானத்தை, அதற்குப் பின்னர் ஏற்பட்ட ஓர் அடைமானத்திற்குத் தள்ளிப்போடுவதற்கு வழிவகுக்கலாம். சொத்து மாற்றல் சட்டத்தினுடைய 78ஆவது பிரிவு பின்வருமாறு சரத்தினைக் கொண்டுள்ளது :

> எங்கு, முந்தைய அடைமானம் ஒன்றினைப் பெற்றவருடைய மோசடி, திரித்துக் கூறுதல் அல்லது பெருமளவிலான கவனமின்மை ஆகியவை காரணமாக, அடைமானமாகக் கொடுக்கப்பட்டுள்ள சொத்தின்பேரில் கடனளிக்குமாறு வேறொரு நபர் தூண்டப்பட்டிருக்கிறாரோ அங்கு, முந்தைய அடைமானத்தைப் பெற்றவர் பிந்தைய அடைமானத்தைப் பெற்றவருக்குத் தள்ளிப்போடப்படுவார்.

இந்தியாவில் எழுந்த, இரண்டு வங்கிகள் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கு இக்கருத்தினை நன்கு விளக்குக்காட்டும் (லாயிட்ஸ் பாங்க் எதி. பி. இ. குஸ்தர் அண்ட் கோ., இ. லா. ரி. 56 கல். 868— Lloyds Bank *v*. P.E, Guzder & Co., I. L. R. 56 Cal 868) குஸ்தர் அண்ட் கம்பெனி, நேஷனல் பாங்க் ஆப் இந்தியாவோடு நீண்டகாலமாகத் தொழில் தொடர்பு கொண்டிருந்தது; மற்றும் ஒரு மேல்வரைப்பற்றுக் கணக்கினையும் வைத்திருந்தது; அந்த மேல்வரைப்பற்றினை உத்தரவாதம் செய்வதற்குச் சில சொத்துகளினுடைய உரிமைப்பத்திரங்கள் நேஷனல் பாங்கிடம் வைப்புச் செய்யப்பட்டன. குஸ்தர் அண்ட் கம்பனியின் கூட்டாளிகளின் (Partner) ஒருவர், தாம் சொத்தினை விற்று மேல்வரைப்பற்றினைத் திரும்பச் செலுத்துவதற்கு விரும்புவதாகப் பொய்யாகத் திரித்துக்

கூறி உரிமைப் பத்திரங்களைத் திரும்பத் தருமாறு நேஷனல் வங்கியைக் கேட்டார். இத்தகைய ஒரு தறுவாயில் உள்ள வழக்கமான நடைமுறையாதெனில், சொத்துகளை வாங்குவதற்கு விரும்புபவர், வங்கியினுடைய சட்டமுகவர்களின் (Solicitors) அலுவலகத்தில் பத்திரங்களைப் பார்வையிடுவதாகும். இருந்தபோதிலும், வாங்குவதற்கு விரும்புபவர், வங்கியினுடைய அடைமானத்தைப்பற்றி அறிய நேர்ந்தால் சொத்து நல்ல விலையைக் கொண்டுவராது என்று கூட்டாளி கூறினார்; அதன் விளைவாக, (வங்கியின்) மேலாளர் (Manager) உரிமைப் பத்திரங்களைக் கூட்டாளியிடம் ஒப்படைத்தார்; கூட்டாளி, அதே நாளில், மேற்கொண்டு ஐந்து இலட்ச ரூபாய்க்குக் கடன் ஒன்றினைப் பெற்றுக்கொண்டு, உரிமைப் பத்திரங்களை லாயிட்ஸ் வங்கியிடம் வைப்புச் செய்தார். உரிமைப் பத்திரங்களை அடைமானம் கொடுத்தவருக்குத் திரும்பக் கொடுத்ததில் வங்கியின் மேலாளர் கவனக்குறைவாக இருந்தார் என்ற காரணத்திற்காக, நேஷனல் வங்கியினுடைய அடைமானம், லாயிட்ஸ் வங்கியினுடைய அடைமானத்திற்குத் தள்ளிப் போடப்பட்டது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

பிற்காலத்திய கடன்களை உத்தரவாதம் செய்வதற்காக, ஓர் அடைமானத்தின்கீழ் இத்தகைய கடன்கள் கொடுக்கப்படுகின்ற சமயங்களில், முதலில் அடைமானம் பெற்றவர், முந்தைய அடைமானத்தைப்பற்றிய அறிவிக்கையுடன் அடைமானத்தைப் பெறுகின்ற ஒரு பிந்தைய அடைமானம் பெற்றவரைக்காட்டிலும் முன்னுரிமையைக் கோரலாம். 1882ஆம் ஆண்டின் சொத்து மாற்றல் சட்டம், 79ஆவது பிரிவு பின்வருமாறு கூறுகின்றது :

> வருங்காலத்திய கடன்களை, ஓர் ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதை, அல்லது ஏற்கெனவே உள்ள ஒரு கணக்கின் பாக்கித் தொகையை உத்தரவாதம் செய்யும் பொருட்டு செய்யப்பட்டுள்ள ஓர் அடைமானம், அதன்மூலம் உத்தரவாதம் செய்யப்படவேண்டிய உயர் அளவினைக் குறிப்பிடுகிறது என்றால் அதே சொத்தின் மீதான பிந்தைய அடைமானம் ஒன்றும் முந்தைய அடைமானம்பற்றிய அறிவிக்கையுடன் செய்யப்பட்டிருக்கிறது என்றால், குறிப்பிடப்பட்ட உயர் அளவினை மிஞ்சாத எல்லாக் கடன்களும் அல்லது பற்றுகளும் (debits) சம்பந்தப்பட்டவரையில், அவைகள் முந்தைய அடைமானம் பற்றிய அறிவிக்கையுடன் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அல்லது அனுமதிக்கப்பட்டிருந்தாலுங்கூட, முந்தைய அடைமானத்திற்கு தள்ளிப்போடப்படும்,

இவ்வாறு, "அ" என்பவர், "பி" அண்ட் கோ என்ற வங்கியரிடம் உள்ள தம்முடைய கணக்கில் செலுத்தவேண்டியுள்ள பாக்கித் தொகையான ரூ. 10,000ஐ உத்தரவாதம் செய்வதற்காகத் தம்முடைய வீட்டினை வங்கியரிடம் அடைமானமாகக் கொடுக்கிறார். பின்னர் "அ", அதே வீட்டினை ரூ. 10,000ஐ உத்தரவாதம் செய்வதற்காக "இ" என்பவருக்கு அடைமானமாகக் கொடுக்கிறார்; "பி" அண்ட் கோவிற்குக் கொடுக்கப்பட்டுள்ள அடைமானத்தைப்பற்றிய அறிவிக்கையினை "இ" பெற்றுக் கொண்டு, இரண்டாவது அடைமானத்தைப்பற்றி, "பி" அண்ட் கோவிற்கு அறிவிக்கையினை அனுப்பிவைக்கிறார். இரண்டாவது அடைமானம் செய்யப்பட்ட தேதியன்று "பி" அண்ட் கோ-விற்கு வரவேண்டிய தொகை ரூ. 5000ஐ மிஞ்சவில்லை. அதைத் தொடர்ந்து, "பி" அண்ட் கோ., "அ"-வுக்கு அவருக்கெதிரான பாக்கித்தொகை ரூ. 10,000-க்கும் அதிகமாக ஆகின்ற முறையில் கடன் வழங்குகின்றனர். "பி" அண்ட் கோ, ரூ. 10,000 வரையிலும் மட்டுமே, "இ"யை விட முன்னுரிமை பெறுவதற்குத் தகுதியுள்ளவர்கள் ஆவர்.

இந்தியச் சட்டத்தின்கீழ் சட்டப்படியான அடைமானங்களை வகைப்படுத்துதல் (Classification of Legal Mortgages under Indian Law) : கீழே கண்டவை, இந்தியச் சட்டத்தினால், 1882ஆம் ஆண்டின் சொத்து மாற்றல் சட்டம், பிரிவு 58ன் கீழ், 1929ஆம் ஆண்டின் சொத்து மாற்றல் திருத்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டபடி, அனுமதிக்கப்படுகின்ற வெவ்வேறு வகையான, சட்டப்படியான அடைமானங்களாகும்.

1. **எளிய அடைமானம்** (Simple Mortgage) : அடைமானம் கொடுக்கப்பட்டுள்ள சொத்தினுடைய உடைமையை மாற்றிக்கொடுக்காமல், அடைமானப் பணத்தைச் செலுத்துவதற்கு அடைமானம் கொடுத்தவர் தனிப்பட்ட முறையில் தம்மைப் பொறுப்பாளியாக்கிக் கொண்டு, தம்முடைய ஒப்பந்தத்தின்படி பணம் செலுத்துவதற்கு அவர் தவறுகின்ற பொழுது, அடைமானம் கொடுக்கப்பட்ட சொத்தினை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்து, விற்றுவந்த பணத்தைத் தேவையான அளவிற்கு அடைமானப் பணத்தைச் செலுத்துவதற்குப் பயன்படுத்திக்கொள்வதற்கு அடைமானம் பெற்றவர் உரிமை கொண்டிருப்பார் என்பதற்கு வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ ஒப்புக்கொண்டார் எனில், நடவடிக்கை எளிய அடைமானம் என்று அழைக்கப்படும். அடைமானம் பெற்றவர் எளிய அடைமானத்தைப் பெற்றவராவார்.

2. நிபந்தனை விற்பனை மூலமான அடைமானம் (Mortgage by conditional sale: அடைமானம் கொடுத்தவர், அடைமானமாகக் கொடுக்கப்பட்ட சொத்தினை, ஒரு குறிப்பிட்ட தேதியில் அடைமானப் பணம் செலுத்தத் தவறினால் விற்பனை முடிவானதாகிவிடும் என்ற நிபந்தனையின் பேரில், அல்லது, அந்தப்பணம் செலுத்தப்பட்டுவிட்டால் விற்பனை இல்லா நிலையது (void) ஆகிவிடும் என்ற நிபந்தனையின் பேரில், அல்லது, அந்தப் பணம் செலுத்தப்பட்டுவிட்டால் வாங்கியவர், சொத்தினை, விற்பனை செய்தவருக்கு மாற்றிக் கொடுத்துவிடுவார் என்ற நிபந்தனையின்பேரில், உண்மையாக விற்பனை செய்கிறார் எனில் அந்த நடவடிக்கை நிபந்தனை விற்பனை மூலமான ஓர் அடைமானம் என்று அழைக்கப்படும்; அடைமானம் பெற்றவர், நிபந்தனை விற்பனை மூலமான அடைமானம் பெற்றவராவார்.

விற்பனையை ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்துவதாகக் கருதப்படுகின்ற ஆவணத்தில் நிபந்தனை சேர்க்கப்பட்டிருந்தாலன்றி இந்தகைய நடவடிக்கையேதும் ஓர் அடைமானமாகக் கருதப்படமாட்டாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

நிபந்தனை விற்பனை மூலமான ஓர் அடைமானம், வெறும் நிபந்தனை விற்பனையினின்று வேறுபடுத்தப்படவேண்டும்; வெறும் நிபந்தனை விற்பனை விடயத்தில், விற்பனை செய்தவர் விற்பனை விலையின் தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பிச் செலுத்திவிட்டால் விற்பனை ரத்து செய்யப்படும் என்று அதிகப்படியாக விதிக்கப்பட்டுள்ள ஒரு நிபந்தனையோடு விற்பனை முடிவான ஒன்றாக இருக்கும்.

3. சொத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்குமட்டுமான அடைமானம் (Usufructuary Mortgage): எங்கு, அடைமானம் கொடுத்தவர் உடைமையை ஒப்படைப்பு செய்கிறாரோ, அல்லது, வெளிப்படையாக அல்லது குறிப்பின் மூலம் அடைமானம் அளிக்கப்பட்டுள்ள சொத்தினுடைய உடைமையை அடைமானம் பெற்றவருக்கு ஒப்படைப்புச் செய்வதற்குத் தம்மைத் தாமே உள்ளாக்கிக் கொண்டு, இத்தகைய உடைமையை, அடைமானப் பணத்தைத் திரும்ப அளிக்கும்வரை வைத்துக் கொள்வதற்கும், சொத்திலிருந்து கிடைக்கக்கூடிய சேர்ந்து கொண்டிருக்கும் வாடகைகள் மற்றும் இலாபங்கள், அல்லது இத்தகைய வாடகைகள் மற்

றும் இலாபங்கள் ஆகியவைகளின் ஒரு பகுதி, ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டு அவைகளை வட்டிக்குப்பதிலாக, அல்லது அடைமானப் பணத்தைத் திரும்பச் செலுத்துவதற்காக, அல்லது ஒரு பகுதியை வட்டிக்காகவும் மற்றொரு பகுதியை அடைமானப் பணத்தைத் திரும்பச் செலுத்துவதற்கும் பங்கிட்டுக் கொள்வதற்காக அவர் அதிகாரம் அளிக்கிறாரோ அந்த நடவடிக்கை சொத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்குமட்டுமான அடைமானம் எனப்படும்; அடைமானம் பெற்றவர், பயன்படுத்திக் கொள்வதற்குமட்டுமான ஓர் அடைமானத்தைப் பெற்றவராவார்.

4. **ஆங்கில அடைமானம்** (English Mortgage) : எங்கு அடைமானம் கொடுத்தவர், அடைமானப் பணத்தை ஒரு குறிப்பிட்ட தேதியில் செலுத்துவதற்குத் தம்மைத்தாமே உட்படுத்திக்கொண்டு, அடைமானம் அளிக்கப்படும் சொத்தினை முழுமையாக, ஆனால், ஒப்புக்கொண்டபடி அடைமானப் பணத்தைத் திரும்பச் செலுத்தியவுடன் அதனை அவர் (அடைமானம் பெற்றவர்) அடைமானம் கொடுத்தவருக்குத் திரும்ப மாற்றிக் கொடுத்துவிடுவார் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, அடைமானம் பெற்றவருக்கு மாற்றல் செய்கிறாரோ அந்த நடவடிக்கை ஓர் ஆங்கில அடைமானம் எனப்படும்.

5. **உரிமைப் பத்திரங்களை வைப்புச் செய்வதன் மூலமான அடைமானம்** (Mortgage by Deposit of Title Deeds): எங்கு, கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய பெரிய நகரங்களில் ஏதாவது ஒன்றில், மற்றும் சம்பந்தப்பட்ட மாநில அரசு, அதிகாரபூர்வமான அரசிதழில் இது சம்பந்தமான அறிவிக்கையின்மூலம் குறிப்பிடுகின்ற ஏதாவது மற்றொரு நகரத்தில், ஒரு நபர், தம்முடைய கடனாளர், அல்லது கடனாளருடைய முகவருக்கு அசையாச் சொத்தினுடைய உரிமைப்பத்திரத்தை, பிணையம் ஒன்றினை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு ஒப்படைப்புச் செய்கின்றாரோ அந்த நடவடிக்கை, உரிமைப் பத்திரத்தை வைப்புச் செய்வதன் மூலமான அடைமானம் எனப்படும்.

1882ஆம் ஆண்டின் சொத்து மாற்றல் சட்டத்தின் பிரிவு 67-ல் உள்ள சரத்துகளோடு சேர்த்து, மேலே விளக்கிக் கூறப்பட்ட வெவ்வேறு வகையான அடைமானங்களையும்பற்றிய ஓர் ஆய்வின் மூலம், அவரால் கடனளிக்கப்பட்ட தொகையினைத் திரும்பப்

பெறுவதற்கு வெவ்வேறு வகையான அடைமானங்கள் வெவ்வேறு உரிமைகளை அடைமானம் பெற்றவருக்குக் கொடுக்கின்றன என்பதை வாசகர் காணலாம்.

வெவ்வேறு வகையான அடைமானங்களின் கீழும் அடைமானம் பெற்றவர்களுக்கு உள்ள உரிமைகள் (Rights of Mortgages under different types of Mortgages): ஓர் எளிய அடைமானம் இரண்டு ஒப்பந்தங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது: (1) கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அடைமானம் கொடுத்தவருக்கு உள்ள தனிப்பட்ட கடப்பாடு (obligation), மற்றும் (2) நீதிமன்றத்தின் ஒப்புதலோடு, பிணையத்தை விற்று, தம்முடைய பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு, அடைமானம் பெற்றவருக்கு அதிகாரமளிக்கின்ற ஓர் ஒப்பந்தம். ஓர் எளிய அடைமானம், அடைமானத்தைப் பெற்றவருக்கு, (பிணையத்தை) விற்பனை செய்வதற்கான அதிகாரத்தை அளிக்காது; எனவே, அவர் அதனை ஒரு நீதிமன்றத்தின் மூலமாகத்தான் விற்பனை செய்யவேண்டும். நிபந்தனை விற்பனை மூலமான அடைமானத்தில், குறிப்பிட்ட சில நிபந்தனைகளின்கீழ், சொத்தினை மீட்புச் செய்துகொள்வதற்கான ஓர் உரிமையை அடைமானம் கொடுத்தவருக்கு ஒதுக்கி வைப்பதோடு, சொத்தினுடைய உண்மையான விற்பனையும் அங்கு ஏற்படுகின்றது. அடைமானம் பெற்றவர் மீட்புரிமை அடைப்புக்கு (foreclosure) மட்டும் வழக்குத் தொடரலாமேயன்றி, விற்பனை செய்வதற்கு முடியாது. பயன்படுத்திக்கொள்வதற்காக மட்டுமான ஓர் அடைமானத்தில், அடைமானம் பெற்றவருக்குச் சொத்தினுடைய உடைமையை மாற்றிக்கொடுத்தல் ஓர் இன்றியமையாத கூறாகும் (Sine qua nan). மற்றும், அடைமானம் பெற்றவரால் சொத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்கான உரிமை, (அ) வட்டிக்குப்பதிலாக, (ஆ) அசல் தொகையைத் திரும்பச் செலுத்துவதில், அல்லது (இ) ஒரு பகுதி அசல் தொகையைத் திரும்பச் செலுத்துவதிலும், மற்றொரு பகுதி வட்டியைச் செலுத்துவதிலும் பயன்படுத்தப்படலாம், என்ற நோக்கத்தோடு உடைமை ஒப்படைப்புச் செய்யப்படுகின்றது. பயனடை உரிமைக்கான ஓர் அடைமானத்தைப் பெற்றவர், அந்தத் தகுதியில், மீட்புரிமை அடைப்புக்காகவோ, விற்பனைக்காகவோ வழக்குத் தொடரமுடியாது; பயனடை உரிமைக்கான அடைமானத்தின் சாரம் என்னென்றால், அடைமானம் பெற்றவர் தம்முடைய கடன்தொகையைத் திரும்பப் பெறுவதற்கு வாடகைகளையும், இலாபங்களையும் எதிர்பார்க்கிறார் என்பதால், பயனடை உரிமைக்கான ஓர் அடைமானத்தைக் கொடுத்தவர் தனிப்பட்ட முறையில் கடனைத் திரும்பச் செலுத்துவதற்குப் பொறுப்பாளியல்லர் என்பதாகும். ஓர்

ஆங்கில அடைமானத்தின் மூன்று முக்கியமான அம்சங்கள் வருமாறு: (1) ஒரு குறிப்பிட்ட தேதியில் அடைமானப் பணத்தைத் திரும்பச் செலுத்துவதற்கு அடைமானம் கொடுத்தவர் தம்மைத் தாமே உட்படுத்திக் கொள்ளவேண்டும், (2) அடைமானம் கொடுக்கப்பட்ட சொத்து முழுமையாக அடைமானம் பெற்றவருக்கு மாற்றல் செய்யப்படவேண்டும், (3) இத்தகைய முழுமையான மாற்றல், அடைமானம் கொடுத்தவர் அடைமானப் பணத்தைத் திரும்பச் செலுத்துவதற்குத் தம்மைத்தாமே உட்படுத்திக் கொள்கின்ற அந்தத் தேதியில், அத்தொகை திரும்பச் செலுத்தப்பட்டுவிட்டால், அடைமானம் பெற்றவர் சொத்தினை அடைமானம் கொடுத்தவருக்குத் திரும்பக் கொடுத்துவிடுவார் என்ற நிபந்தனைக்கு உட்பட்டுத்தான் செய்யப்படவேண்டும். ஆங்கில அடைமானம் ஒன்றினைப் பெற்றவர், விற்பனை செய்வதற்குதான் வழக்குத் தொடரலாமேயன்றி, மீட்புரிமை அடைப்புக்காக (foreclosure) வழக்குத் தொடரமுடியாது. உரிமைப் பத்திரங்களை வைப்புச் செய்வதன் மூலமான ஓர் அடைமானம் பெற்றவருடைய உரிமைகள், ஓர் எளிய அடைமானம் பெற்றவருடைய உரிமைகளைப் போன்றவைகளேயாகும்.

மதிப்பீடு (Valuation): தம்மிடம் கேட்கப்பட்டுள்ள கடனுக்குப் பிணையமாக வங்கியர் ஏற்றுக்கொள்ளப்படுவதாக உள்ள சொத்தினுடைய மதிப்பினைப்பற்றிச் சிறிது கவனம் எடுத்துக் கொள்ளவேண்டியது முற்றிலும் அவசியமானதாகும். பங்குமாற்று நிலையப் பிணையங்கள், விளைபொருள், சரக்குகள் ஆகியவைகளைப்போல் அசையாச் சொத்துகள் நம்பகமான சந்தை விலைகளைக் கொண்டிருப்பதில்லை. அவைகளை மதிப்பீடு செய்வது மிகவும் கடினமானதாகும். பிணையமாக அளிக்கப்படுவதற்குள்ள கட்டடத்தினைக் கட்டுவதற்கான தோராயமான ஒரு மதிப்பீட்டினை மட்டுமே அவர்களால் கொடுக்கமுடியும் என்பதைத்தவிர, கட்டட நிபுணர்களின் உதவிகூட, இந்த விடயத்தில் அவ்வளவு உபயோகமானதாக இருப்பதில்லை. கட்டாய விற்பனை செய்யப்பட்டால் என்ன விலையை அது கொண்டுவரும் என்பதை வங்கியர் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். மதிப்பினை மதிப்பீடு செய்யும்பொழுது, சொத்து வில்லங்கமேதுமில்லாததா, குத்தகைச் சொத்தா என்பதையும் ஒருவர் கணக்கிலெடுத்துக்கொள்ளவேண்டும். முந்தையது (வில்லங்கமேதுமில்லாதது) முழுமையான ஓர் உரிமையைப் (absolute ownership) போன்றதாகும்; பிந்தையது (குத்தகைச் சொத்து) குத்தகை (lease) ஒப்பந்தத்தினால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, குத்தகைதாரரால்

வாடகை கொடுக்கப்படுவதன்பேரில், வரையறுக்கப்பட்ட சில ஆண்டுகளுக்கு உரிமை கொள்ளப்பட்டுள்ளது. ஒரு குத்தகைச் சொத்தினை மதிப்பீடு செய்வதில், சொத்தினுடைய—நிலம் அல்லது கட்டடம்—உரிமையாளருக்குக் கொடுக்கவேண்டிய வாடகைத் தொகை, குத்தகையினுடைய காலாவதியாகாத பகுதி ஆகியவை களை ஒருவர் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டியுள்ளது. குத் தகையின் காலாவதியாகக் காலம் குறைவாக இருப்பின், அத னுடைய மதிப்பும் குறைவாகவே இருக்கும். சொத்து என்ன வரு வாயைக் கொண்டுவருகிறது என்பதையும் வங்கியர் பார்க்கவேண்டி யவராய் உள்ளார். ஒரு கட்டடத்தைப் பொறுத்தமட்டில், அவை களின் வாடகைகளை ஒழுங்காகச் செலுத்தக்கூடிய மதிப்புவாய்ந்த வாடகைக்குக் குடியிருப்போர்களுக்கு அது விடப்பட்டிருந்தால், அது, வாடகைக்குக் குடியிருப்போர் தாற்காலிகமானவர்களாக இருக்கின்ற சமயங்களில் கிடைப்பதைவிட, அதிக வாடகையைக் கொண்டுவருவதற்கு வாய்ப்புள்ளது. கட்டடத்தின் நிலைமையுங் கூட அதனுடைய சந்தை விலையை நிர்ணயிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றது. பாழடைந்த நிலையிலுள்ள ஒரு கட்டடம் நல்ல நிலையிலுள்ள ஒரு கட்டடத்தைவிடக் குறைந்த அளவு விலை யைக் கொண்டுவரக்கூடியதாகும். அது, எப்போதும் மிகவும் நம்பகமானது என்று ஒருவர் சொல்லமுடியாது எனினும், வழக்க மாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு மதிப்பீட்டு முறை, நிகர வாட கையை மூலதனமாக்குவது (capitalising the net rent) ஆகும்.

அடைமானம் வைக்கப்படவுள்ள கட்டடங்களின் காப்பீடு (Insurance of Buildings to be Mortgaged): அடைமானம் கொடுக் கப்படுவதற்குள்ள சொத்து கட்டடமாக இருக்கின்றபொழுது, அடைமானம் நியாயமான அடைமானம் அல்லது சட்டப்படியான அடைமானம் ஆகிய எதுவாக இருந்தாலும், சொத்து, நன்கு தெரிந்த ஒரு காப்பீட்டு நிறுமத்திடம் தீ விபத்திற்கு எதிராகக் காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்றும், பணம் கடனளிக்கின்ற வங்கியருக்குக் காப்பீட்டுப் பத்திரம் உரிமை மாற்றிக்கொடுக்கப் பட்டுள்ளதா என்றும் வங்கியர் பார்க்கவேண்டும். இருந்தபோதி லும், வங்கியை அடைமானம் பெற்றவர் என்று தெளிவாகக் காட்டி வங்கி மற்றும் கடன் வாங்கியவர் ஆகியவர்களின் கூட்டுப்பெயரில் காப்பீட்டுத் திட்டாவணம் ஒன்றினை எடுத்துக்கொள்வது விரும் பத்தக்கதாகும்.

கடன்தொகை எவ்வளவாக இருப்பினும், சொத்து, எப்போதும் தீ இடர்வாய்ப்புக்கு எதிராக, அதனுடைய முழுமதிப்பிற்கும் காப்பீடு செய்யப்படவேண்டும்; இது மிகவும் இன்றியமையாத

தாகும்; ஏனென்றால், இந்தியாவில் காப்பீட்டு அலுவலகங்களால் (tariff offices) விடுக்கப்படுகின்ற எல்லாக் காப்பீட்டுத் திட்டாவணங்களும், "சராசரி" நிபந்தனைக்கு உட்பட்டவைகளாகும். இந்த நிபந்தனை, ஏதாவது தீ விபத்து ஏற்படுகின்ற நேரத்தில் காப்பீட்டு செய்யப்பட்டுள்ள சொத்து, ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து, அதன் மேல் காப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையைவிட அதிக மதிப்பினைக்கொண்டதாக இருந்தால், அப்பொழுது அந்த வேறுபாட்டுத் தொகைக்கு, காப்பீடு பெற்றவர் (insured) தம்முடைய சொந்தக் காப்பீடு அளித்தவராகக் (insurer) கருதப்படுவார்; அதன்படி, நட்டத்தினுடைய விகிதாசாரப்படியான ஒரு வீதத்தை அவர் ஏற்றுக்கொள்வார் என்று கூறுகிறது. இந்த நிபந்தனையின் நோக்கம், ஐயத்திற்கிடமின்றி, குறைத்துக் காப்பீடு செய்யப்படுவதைத் தண்டிப்பதற்காக ஆகும். பிணையம், நிலம், அல்லது கட்டடம், கருவி அல்லது தளவாடம், அல்லது விளைபொருள் இருப்புகள் ஆகிய எதுவாக இருப்பினும், இந்த நிபந்தனையினுடைய செயல்பாடு (operation) காப்பீட்டினை எப்பொழுதும் முழுமதிப்பிற்கு வைத்திருக்க வேண்டுமென்று வற்புறுத்துவது வங்கியர் ஒருவருக்கு இன்றியமையாததாகும் என்று ஆக்குகின்றது.

மற்றவகையான பிணையங்களின் விடயத்தில் உள்ளதுபோல, (பிணையமாக) அளிக்கப்படும் சொத்தினுடைய முழுமதிப்பிற்கும் வங்கியர் கடனளிக்கக்கூடாது. ஒரு பொது விதியாக, இத்தகைய பிணையங்களின் விடயத்தில், தேவையான எச்ச ஓரம் மற்றப் பிணையங்களின் விடயத்தில் உள்ளதைவிட மிகவும் அதிகமாகும். சாதாரணமாக, நிலையான விற்பனை மதிப்பில் பாதிக்குமேல் வங்கியர் கடனளிப்பதில்லை.

அடைமானம் கொடுத்தவருடைய கட்டளைகளை நிறைவேற்றத் தவறுதல் (Failure to carry out the Instructions of the Mortgagor): பஞ்சாப் நேஷனல் பாங்க் லிட். எதி. திவான் சந்த் அண்ட் அதர்ஸ் (ஆ. இ. ரி. 1931 லாகூர் 302) (Punjab National Bank Ltd. v. Diwan Chand and others [A. I. R. 1931] Lahore 302) என்ற வழக்கில் அடைமானம் வைக்கப்பட்ட சொத்துகளின் காப்பீட்டினைப் புதுப்பிப்பது தொடர்பாக, பிரதிவாதியான அடைமானம் கொடுத்தவருடைய கட்டளைகளை, வாதியான வங்கி நிறைவேற்றத் தவறியபொழுது, அதன் காரணமாக, அடைமானம் கொடுத்தவர் நட்டமடைந்தால், அடைந்த நட்டத்திற்கு அடைமானம் கொடுத்தவருக்கு ஈடு செய்வதற்கு வங்கி பொறுப்பாளியாகும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

நீதிமன்றத்தின் குறுக்கீடு இன்றி விற்பனை செய்வதற்கான உரிமை (Right of Sale without Intervention of the Court) : அடைமானப் பணத்தைத் திரும்பச் செலுத்துவதற்குத் தவறுகின்ற பொழுது, ஓர் அடைமானம் வாங்கியவர் கீழ்க்காணும் தறுவாய் களில் மட்டுமே (வேறு தறுவாய் எதிலும் அன்று) நீதிமன்றத்தின் குறுக்கீடு இன்றி, அடைமானம் கொடுக்கப்பட்ட சொத்தினை விற்பதற்கு உரிமையைக் கொண்டுள்ளார் :

(1) அடைமானம் ஓர் ஆங்கில அடைமானமாக இருந்து, (சம்பந்தப்பட்ட) இரண்டு நபர்களில் எவருமே இந்துவா கவோ, முகம்மதியராகவோ அல்லது புத்தமதத்தினராகவோ இல்லாது இருக்கும்பொழுது.

(2) நீதிமன்றத்தினுடைய குறுக்கீடு இன்றி விற்பனை செய்வதற்கான அதிகாரம், அடைமானப் பத்திரத்தினால் அடைமானம் வாங்கியவருக்குக் கொடுக்கப்பட்டிருந்து, அடை மானம் வாங்கியவர் அரசாக (Government) இருக்கின்ற பொழுது.

(3) நீதிமன்றத்தினுடைய குறுக்கீடு இன்றி விற்பனை செய்வதற்கான அதிகாரம் அடைமானம் பெற்றவருக்கு அடை மானப் பத்திரத்தினால் வெளிப்படையாகக் கொடுக்கப்பட் டிருந்து, அடைமானம் வைக்கப்பட்டுள்ள சொத்து அல்லது அதனுடைய ஏதாவது பகுதி, அடைமானப் பத்திரம் நிறை வேற்றப்பட்ட தேதியில், கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய நகரங்களுக்குள் அல்லது இது சம்பந்தமாக மாநில அரசு அதிகாரபூர்வமான அரசிதழில் அறிவிப்புச் செய்வதன் மூலம் குறிப்பிடுகின்ற ஏதாவது மற்ற நகரத்தில் அல்லது பகுதியில் (area) இருந்தால்.

1882ஆம் ஆண்டின் சொத்து மாற்றல் சட்டம், 96ஆவது பிரிவின்படி, உரிமைப் பத்திரங்களை வைப்புச் செய்வதன்மூலமான ஒரு நியாய அடைமானத்தை வாங்கியவர், ஓர் எளிய அடை மானத்தைப் பெற்றவருடைய அதே தகுதியுடன் இருப்பதால், இத்தகைய அடைமானம் பெற்றவருக்குக் கிடைக்கின்ற ஒரே பரிகாரம் (remedy) நீதிமன்றத்தினுடைய ஆணையின் மூலமாக வும், ஆணையின்படியும் சொத்தினை விற்றுவிடுவதாகும்.

விற்பனை பற்றிய அறிவிக்கை (Notice of Sale): நீதிமன் றத்தின் குறுக்கீடு இன்றி விற்பனை செய்வதற்கான உரிமை, அடைமானம் கொடுத்தவருக்கு, அசல் தொகையைத் திரும்பச்

செலுத்துமாறு கோரி, எழுத்துமூலமான ஓர் அறிவிக்கை கொடுக்கப்பட்டு, இத்தகைய அறிவிக்கை கொடுக்கப்பட்டபிறகு மூன்று மாதத்திற்குள் அசல் தொகை செலுத்தப்படவில்லையென்றால், அதன்பிறகு, பயன்படுத்தப்படவேண்டும்; அல்லது அடைமானத்தின்கீழ் கொடுக்கப்படவேண்டிய வட்டி, ரூ. 300க்குக் குறையாத அளவில் வரவேண்டியதாக இருந்து, அது செலுத்தப்படவேண்டிய தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குக் கொடுக்கப்படாமல் இருக்கும்பொழுதும் பயன்படுத்தப்படலாம்.

பதிவு எப்போது அவசியம் (Registration when Necessary) :

மேலே கூறப்பட்ட சட்டப்படியான அடைமானங்களின் எல்லாத் தறுவாய்களிலும், உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அசல் தொகை நூறு ரூபாய்க்கு மேலாக இருக்கின்றபொழுது, ஒரு செல்தகு (valid) மற்றும் சட்டப்படியான அடைமானம், அடைமானம் கொடுத்தவரால் கையொப்பமிடப்பட்டு, குறைந்தது இரண்டு சாட்சிகளால் (witnesses) அத்தாட்சி அளிக்கப்பட்டு (attested), ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலமாக மட்டுமே ஏற்படுத்தப்படமுடியும். பதிவு செய்யப்பட்ட நிறுமங்களோடு அடைமான நடவடிக்கைகளில் ஈடுபடும்பொழுது, பங்குத்தொகுப்புகள் (stocks) மற்றும் பங்குகள், கப்பல் வழிச்சீட்டுகள், ஆணைகள் (warrants) மற்றும் சரக்குகள் தொடர்பான இதேபோன்ற ஆவணங்கள், ஆயுள் காப்பீட்டுப் பத்திரங்கள் மற்றும் மாற்றுமுறை ஆவணங்கள் (Negotiable Instruments) ஆகியவை அல்லாத மற்றவைகளின்மீதான அடைமானங்கள் மற்றும் பொருட்பிணைப் பொறுப்புகள் (charges), அவை நிறைவேற்றப்பட்ட இருபத்தொரு (21) நாள்களுக்குள் நிறுமங்களின் பதிவாளரிடம் பதிவு செய்யப்படவேண்டியது அவசியமாகும்.

''இணைத்துப் பொருத்துதல்'' (Tacking) : வங்கியர்களுக்குக் குறிப்பிடுமளவிலான நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்துள்ள அசையாச் சொத்துகளின் அடைமானம் தொடர்பான மற்றொரு விதி, ''இணைத்துப் பொருத்துதல்'', என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஒன்றாகும். ஒரு பொது விதியாக, அடுத்தடுத்து வருகின்ற அடைமானங்களின் முன்னுரிமை, கால வரிசையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது என்று நாம் பார்த்தோம். இருப்பினும், இங்கிலாந்தில், முன்பு, மூன்றாவது அடைமானம் ஒன்றினைப் பெற்றவர், முதலாவது அடைமானத்தினைப் பெற்றுள்ள நபரைப் பணம் செலுத்தி அனுப்பிவிடுவதன்மூலம், அவருடைய மூன்றாவது அடைமானத்தை முதலாவது அடைமானத்துடன் இணைத்துப் பொருத்தி, இரண்டாவது

அடைமானத்தைப் பெற்றுள்ள ஒரு நபரைக்காட்டிலும் முன்னுரிமையைக் கோரமுடியும். இது, முதலாவது அடைமானத்தைப் பெற்றவருக்குப் பணம் செலுத்தப்பட்டதன் காரணமாக, இரண்டாவது அடைமானத்தைப் பெற்றிருப்பவரை நெருக்கியடித்துத் தள்ளிவிட்டு, அவருடைய மூன்றாவது அடைமானத்தை (முதல் அடைமானத்துடன்) "இணைத்துப் பொருத்துவதன்" மூலம் ஏற்படுத்தப்பட்டதாகும். இங்கிலாந்திலும், இந்தியாவிலும் "இணைத்துப் பொருத்தல்" கோட்பாடு நீண்ட காலத்திற்கு முன்னரே ஒழிக்கப்பட்டுவிட்டது; ஆனால், இரண்டு நாடுகளிலும், அந்த விதி, ஒரு திருத்தம் செய்யப்பட்ட உருவில் (modified form) இன்னும் இருந்துகொண்டுதானிருக்கிறது. சொத்து மாற்றல் சட்டத்தின் 79 ஆவது பிரிவின்படி, தற்போதைய, மற்றும் வருங்காலத்திய கடன்களை, அல்லது ஒரு பொதுவான கணக்கில் (General Account) உள்ள பாக்கித் தொகையை உத்தரவாதம் செய்யும் பொருட்டு, அடைமானம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, உத்தரவாதம் செய்யப்படவேண்டுமென்று விரும்பப்பட்ட உச்ச அளவு தொகை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால், இரண்டாவது அடைமானம் பெற்றவர், முதலாவது அடைமானத்தைப் பற்றிய அறிவிக்கையினைப் பெற்றிருந்தாரென்றால், அதே சொத்தின்மீது ஏற்படுத்தப்பட்ட, இரண்டாவது அடைமானத் தேதிக்குப் பின்னர் அளிக்கப்படும், வருங்காலத்திய கடன்களையும் இணைத்துப் பொருத்துவதற்கு முதல் அடைமானத்தைப் பெற்றவர் உரிமை பெற்றிருக்கிறார். இந்தக்கோட்பாடு, இங்கிலாந்தில், இரண்டாவது அடைமானத்தைப்பற்றிய அறிவிக்கையினை அவர் பெற்றபிறகு, முதல் அடைமானத்தைப் பெற்றவர் இணைத்துப் பொருத்துவதற்கான உரிமையை இழக்கிறார் என்று, ஹாப்கின்சன் எதி. ரோல்ட் (1861) 9. ஹ. லா. கி. 514, (Hopkinson *v.* Rolte (1861) 9, H. L. C. 514) என்ற வழக்கின் தீர்ப்பில் ஏற்படுத்தப்பட்ட விதிக்கு நேர் எதிரானதாகும். டெய்லி எதி. லாயிட்ஸ் பாங்க் (1912) அ. கே. 756 [Deiley *v.* Lloyds Bank, (1912) A. C. 756] என்ற வழக்கு இந்த வேறுபாட்டினை நன்கு விளக்கிக் காட்டுகின்றது. லாயிட்ஸ் வங்கியினுடைய வாடிக்கையாளர் ஒருவர், வங்கியினால் அவருக்குத் தற்போதும், வருங்காலத்திலும் அளிக்கப்படவுள்ள கடன்களை உத்தரவாதம் செய்யும் பொருட்டு, அசையாச் சொத்தின்மீதான ஓர் அடைமானத்தை நிறைவேற்றிக் கொடுத்தார். வாடிக்கையாளர் அதே சொத்தின்மீதான இரண்டாவது அடைமானம் ஒன்றினையும் ஏற்படுத்தினார்; இரண்டாவது அடைமானம் பெற்றவர் வங்கிக்கு அறிவிக்கை ஒன்றினைக் கொடுத்தார். இத்தகைய ஒரு தறுவாயில், மேல்வரைப் பற்றுக் கணக்கு மூடப்பட்டு, வாடிக்கையாளரின் புதிய கணக்கு ஒன்று

திறக்கப்படவேண்டுமென்று வங்கியின் ஒழுங்குபடுத்த விதி கோரியது. கவனக்குறைவின் காரணமாக இந்த முன்னெச்சரிக்கை எடுக்கப்படவில்லை; இரண்டாவது அடைமானத்தைப்பற்றிய அறிவிக்கைக்குப் பின்னரும் கூடத் தொடர்ச்சியாக அதே கணக்கு தான் வைத்துக்கொள்ளப்பட்டது. இதன் விளைவு யாதெனில், கிளைடன்ஸ் வழக்கு (Clayton's case) விதியின்படி, வாடிக்கையாளரால் தொடர்ந்து பின்னர்ச் செலுத்தப்பட்ட செலுத்துகைகள் யாவும், இரண்டாவது அடைமானத்தைப்பற்றிய அறிவிக்கையினுடைய தேதியன்று வங்கிக்குப் பாக்கியாக இருந்த தொகையைத் தீர்வு (discharge) செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டன, ஹாப்கின்சன் எதி. ரோல்ட் வழக்கினுடைய விதி செயல்பாட்டின்படி (operation) இரண்டாவது அடைமானத்தைப் பெற்றவர் வங்கியைக் காட்டிலும் முன்னுரிமையைப் பெற்றார்.

நியாய அடைமானங்களாக ஆகக்கூடிய, இரண்டாவது, மூன்றாவது அல்லது அவைகளைத் தொடர்ந்து வருகின்ற அடைமானங்களின் விடயத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய சரியான முறைபற்றிய விவரங்களுக்கு, பெனாரஸ் பாங்க் லிட். எதி. பாங்க் ஆப் பீகார் லிட். (ஆ. இ. ரி. 1947. அல. 117) [Banares Bank Ltd., v. Bank of Bihar Ltd. (A. I. R. 1947 All. 117)] என்ற வழக்கின் தீர்ப்பினைப் பார்க்கலாம். இந்தியாவில் அசையாச் சொத்துகளின் மீதான அடைமானங்கள்பற்றிய விவரமான சட்ட மற்றும் மேற்கொண்ட ஆய்விற்கு, வாசகர், 1882ஆம் ஆண்டின் சொத்து மாற்றல் சட்டம், அத்தியாயம் IVல், பிரிவுகள் 58 முதல் 104 வரை பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணம்
(Life Policies)

விளக்கம் (Definition): ஓர் ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணம் என்பது, குறிப்பிட்ட ஓர் ஆளுக்கும், ஒரு காப்பீட்டு நிறுமத்திற்கும் (Insurance Company) இடையே ஏற்படுகின்ற ஓர் ஒப்பந்தமாகும்; இந்த ஒப்பந்தத்தின்படி, ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட நேரத்தில் பெரும் தொகை ஒன்றினைச் செலுத்துவதற்கு, அல்லது நிர்ணயிக்கப்பட்ட சில ஆண்டுக் காலத்திற்கு, அல்லது காப்பீடு பெறுநரின் (insured) வாழ்நாள் முழுவதும், காப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்துவதற்குப் பிரதிபயனாக, அவருடைய மரணத்தின்மீதோ, குறிப்பிட்ட ஒரு வயதினை அவர் அடையும்பொழுதோ, இலாபங்களோடு சேர்த்து, அல்லது இலாபங்களின்றி, ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பதற்குக்

காப்பீட்டு நிறுமம் பொறுப்பேற்கின்றது. (காப்பீட்டுத்) தொகை மரணத்தின்பேரில் கொடுக்கப்படுவதாய் இருந்தால், காப்பீட்டுத் திட்டாவணம், ஆயுட்காலத் திட்டாவணம் (whole life Policy) எனப்படும்; ஆனால், (காப்பீட்டுத்தொகைப்) பணம் செலுத்தப் படுவது, காப்பீடு பெறுநருடைய மரணம், அல்லது ஒரு குறிப் பிட்ட வயதினை அவர் அடைவது, இதில் எது முன்னதாக நிகழ் கின்றதோ அப்பொழுது, செய்யப்படவேண்டியதாக இருந்தால், காப்பீட்டுத் திட்டாவணம், காலவரைத் திட்டாவணம் (Endowment Policy) எனப்படும். காப்பீட்டுக் கட்டணங்கள் (Insurance Premiums), வாழ்நாள் முழுவதும், அல்லது நிர்ணயிக்கப்பட்ட சில ஆண்டு காலத்திற்குமட்டும், செலுத்தப்படவேண்டியவையாக ஆக்கப்படலாம்; இரண்டாவது கூறப்பட்ட வகை, அரசு அல்லது மற்றப் பணியில் உள்ள ஆள்களுக்கு விரும்பத்தக்கதாகும். இந்தப் பணிகளில் விதிகள், ஒரு நபர், ஐம்பத்தெட்டாவது வயதினை, அல்லது இன்னும் சில தறுவாய்களில் அறுபது வயதினை, அடைந் தவுடன் ஓய்வுபெறவேண்டுமென்று கோருகின்றன.

நோக்கங்கள் (Objects): ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணங் கள், பொதுவாக, எடுக்கப்படுவதற்கான முக்கிய நோக்கங்கள்: (i) அவருடைய மரணத்திற்குப் பிறகு, காப்பீடு பெறுநருடைய மனைவி, குழந்தைகள் அல்லது அவரைச் சார்ந்திருக்கக்கூடிய வேறு யாருக்காவது, வெளிப்படையாகக் காப்பு ஏற்படுத்தும் பொருட்டும், மற்றும், (ii) வயதான காலம், ஓய்வுபெறும் காலம் போன்றவற்றிற்குக் காப்பு ஏற்படுத்தும் பொருட்டும் ஆகும்; இந்தத் தறுவாயில் காப்பீட்டுத் திட்டாவணம், ஒரு குறிப்பிட்ட வயதினை அடைதல் அல்லது, மரணம், இதில் எது முன்னதாக நிகழ்கிறதோ அப்போது முதிர்வு அடையக்கூடியதாகச் செய்யப் படுகிறது. கடனாளர்கள் (creditors) தாங்கள் அளித்துள்ள கடன் தொகையின் அளவிற்கு, கடனாளிகளின் (Debitors) ஆயுள் காப்பீடு செய்தகு உரிமையைக் (Insurable Interest) கொண் டிருப்பதாலும், ஒரு கூட்டாளி (Partner) இதரக் கூட்டாளிகளின் ஆயுள்மீது காப்பீடு செய்தகு உரிமையைக் கொண்டிருப்பதாலும், காப்பீட்டுத் திட்டாவணங்கள், கடனாளர்களால் தங்களுடைய கட னாளிகளின் ஆயுள்களின் மீதும், ஒரு கூட்டாளியால் அவருடைய சக கூட்டாளிகளின் ஆயுள்களின்மீதுங்கூட, எடுக்கப்படலாம். கடனாளி ஒருவர், ஒரு தொழில் செய்வோராக இருக்கலாம்; அந் நிலையில் அவருடைய தொழில் முழுமையாகவோ, ஓரளவிற்கோ அவர்மீது சார்ந்திருக்கும்; அதன் விளைவாக, அவருடைய மரணத்தினால் அது பாதிப்படையக்கூடும். அதேபோல, கூட்டு

வணிகத்திலும் (Partnership), கூட்டாளி ஒருவரின் மரணம் கூட்டுவணிகத் தொழிலுக்கு அல்லது உயிரோடிருக்கும் கூட்டாளிகளுக்கு நட்டத்தினை ஏற்படுத்தக்கூடும்.

காப்பீடு செய்தகு உரிமை உளதாகுதல் (Existence of Insurable Interest): காப்பீடு செய்யப்படவேண்டும் என்று அவர் விரும்புகின்ற உயிரில், அல்லது சொத்தில் காப்பீடு செய்தகு உரிமையை ஒருவர் கொண்டிருந்தால், எந்த நபரும் காப்பீடு ஒன்றினை ஏற்படுத்தமுடியும். காப்பீடு செய்தகு உரிமை இல்லாமை, காப்பீட்டுத் திட்டாவணத்தை இல்லா நிலையது (void) ஆக ஆக்கிவிடும். தொடக்கக் காலத்தில், எந்த நபரும், வேறு எந்த ஒரு நபரினுடைய ஆயுள்மீதும், முன்னவர், பிந்தையவரின் ஆயுள்மீது காப்பீடு செய்தகு உரிமையைக் கொண்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், காப்பீடு ஒன்றினை ஏற்படுத்தமுடியும். இது, இங்கிலாந்தில், 1774ஆம் ஆண்டில், சாதாரணமாகச் சூதாட்டச் சட்டம் (Gambling Act) என்றழைக்கப்பட்ட, ஆயுள் காப்பீட்டுச் சட்டத்தினுடைய (சட்டம், 1774 [14 ஜியோ, 3, C, 48]) சரத்துக்களின்கீழ்த் தடை செய்யப்பட்டது; இந்தச் சட்டம் காப்பீட்டு ஒப்பந்தம் ஒன்றிற்கு, காப்பீடு செய்தகு உரிமை இருக்கவேண்டுமென்பதை அவசியமென்று ஆக்கியது. அதில் சொல்லப்பட்ட வாசகங்கள் வருமாறு:

> "யாருடைய உபயோகத்திற்கு, நன்மைக்கு அல்லது யாருக்காக, இத்தகைய காப்பீட்டுத் திட்டாவணம் அல்லது திட்டாவணங்கள் எடுக்கப்படுவதற்குள்ளனவோ, அந்த நபர் அல்லது நபர்கள், காப்பீடு செய்தகு உரிமை கொண்டிராத நபர் அல்லது நபர்களின் ஆயுள், அல்லது ஆயுட்களின் மீதான, அல்லது வேறு எந்த வகையான நிகழ்ச்சி அல்லது நிகழ்ச்சிகள் மீதான காப்பீட்டினை அல்லது சூதாட்டம் நடத்துவது போன்றவைகளை, எந்த நபர் அல்லது நபர்களாலும், அரசியல் அல்லது கூட்டுரு நிறுவனங்களாலும் செய்யமுடியாது; மற்றும் இங்குச்சொல்லப்பட்டுள்ள உண்மையான பொருள் (meaning) மற்றும் கருத்துகளுக்கு மாறாகச் செய்யப்படும் ஒவ்வொரு காப்பீடும், அது எந்தவகையான விருப்பங்களுக்கு மற்றும் காரியங்களுக்கு செய்யப்பட்டிருந்தாலும், அவைகளைப் பொறுத்தமட்டில் பயனற்றதாகவும் இல்லா நிலையது ஆகவும் ஆகிவிடும்."

அது மேற்கொண்டும் பின்வருமாறு சட்டமியற்றியது:

> "காப்பீடு பெறுநர், இத்தகைய ஆயுள் அல்லது ஆயுள்களில், நிகழ்ச்சி அல்லது நிகழ்ச்சிகளில் உரிமை கொண்

டிருக்கக்கூடிய எல்லாத் தறுவாய்களிலும், காப்பீடு செய்பவர் அல்லது காப்பீடு செய்பவர்களிடமிருந்து இத்தகைய ஆயுள் அல்லது ஆயுள்கள், அல்லது மற்ற நிகழ்ச்சி அல்லது நிகழ்ச்சிகள் ஆகியவைகளில் காப்பீடு பெற்றுள்ளவருக்குள்ள உரிமையின் மதிப்பு அல்லது பண அளவினைக்காட்டிலும் அதிகமான தொகையை மீட்புச் செய்யவோ, பெற்றுக்கொள்ளவோ முடியாது.''

காப்பீடு செய்தகு உரிமை—விளக்கம் (Insurable Interest Explained): காப்பீடு செய்தகு உரிமை என்றால் என்ன என்பதற்கு விளக்கம் கூறுவது அவ்வளவு எளிதானது அன்று. கிளாஸ்கோ பாரிஸ் கவுன்சில் எதி. மார்ட்டின் ([1910] எஸ்.சி.ஜே. 102) (Glasgow Parish Council *v.* Martin ([1910] S.C.J. 102) என்ற வழக்கில், லார்டு எல்டன் (Lord Eldon) கூறினார்: "(உரிமை என்னும்) அந்தச் சொல்லிலிருந்து நாம் என்னென்னவற்றை அறிந்து கொண்டாலும், ஓர் உரிமையைக் காப்பீடு பெறுநர் கொண்டிருக்கவேண்டுமென்பது தெளிவு. உறுதியான ஓர் உரிமை (Strict Right) அல்லது ஓர் ஒப்பந்தத்தின்கீழ்ப் பெறப்படுகின்ற உரிமைக்கும், காப்பீடு செய்தகு உரிமை என்று பெயரிடப்பட்டுள்ள வெறுமனே ஓர் எதிர்பார்த்தல் அல்லது நம்பிக்கைக்கும் இடையேயான இடைப்பட்ட பொருளை (intermediate thing) வேறுபடுத்திக் காட்டும் பொருட்டுப் பல வழக்குகளில் அது, நெறிமுறையின்படி கட்டாயமாக நிகழக்கூடியது என்று சொல்லும்படியாக இருக்கக்கூடியது என்று கூறப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், நான், வீணாக, உறுதியாகவுள்ள ஒன்றிற்கும், எதிர்பார்க்கக்கூடியதான ஒன்றிற்கும், இடைப்பட்ட, தகுந்த விளக்கம் ஒன்றினை அதற்குக் கண்டறிய முயற்சி செய்துள்ளேன்; அது, சொத்திலுள்ள உரிமையாகவோ, காப்பீடு செய்யப்பட்டுள்ள சொத்துபற்றிய சில ஒப்பந்தங்களிலிருந்து பெறக்கூடிய ஓர் உரிமையாகவோ இல்லையென்றால், ஓர் உரிமை என்றால் என்ன என்றுகூடக் குறிப்பிட்டுக் கூறமுடியாத நிலையில் இருக்கிறேன்; இந்த உரிமை, இரண்டு தறுவாய்களிலுமே, நபருடைய உடைமையை அல்லது அனுபவிக்கின்ற உரிமையை, பாதிக்கக்கூடிய எதிர்பாராத சில நிகழ்ச்சி காரணமாக இழக்கப்படலாம். அது உயர்ந்த அளவு நிகழ்வாய்ப்பின் அடிப்படையில் அமைந்தது எனினும், எதிர்பார்த்தலை (expectation) ஓர் உரிமை என்று கொள்ளமுடியாது; மற்றும் எதிர்பார்க்கக்கூடிய நிகழ்ச்சி நடைபெறுவதற்குச் சாதகமாக வாய்ப்புகள் எவ்வளவு இருந்தாலுங்கூட அது உரிமையாகாது.'' அவர் தொடர்ந்து கூறினார், "கற்பனைச் (fanciful) சொத்தின்மீதான காப்பீட்டின் மூலமாகச் செய்யுப்

படும் சூதாட்டத்திற்கெதிராகக் காப்புவாசகங்களைச் சட்டமன்றம் எவ்வளவு எச்சரிக்கையோடு ஏற்படுத்தியுள்ளது என்பதைக் கருதுகின்றபொழுது, ஓர் எதிர்பார்த்தல் அல்லது ஆர்வம் (anxiety) போன்ற முற்றிலும் மன உணர்ச்சி தொடர்பான ஓர் உரிமை, ஒரு காப்பீட்டுத் திட்டாவணத்திற்கு அடிப்படையாக அமையக் கூடாது என்பது முற்றிலும் விரும்பத்தக்கதாகும்." அனுபவத்திலிருந்து கூறப்பட்ட இந்தக் கருத்திலிருந்து, காப்பீடு செய்தகு உரிமை என்பது காப்பீடு பெற்றுள்ள ஆளின் ஆயுளில் அல்லது பொருளில் உள்ள குறிப்பிட்ட ஒரு பணம் சார்ந்த உரிமை என்று கூறலாம். வெறுமனே, "மெய்யன்பு மற்றும் பாசம்" போன்றவை போதுமானவையல்ல. காப்பீடு பெறுநர், காப்பீடு செய்யப்படும் பொருளோடு, அது இழக்கப்படுகின்ற தறுவாயில், பணம் சார்ந்த சிறிது நட்டத்தினை அவர் அடையக்கூடும் என்ற ஓர் உறவினைக் கொண்டவராக இருக்கவேண்டும். காப்பீடு ஏற்படுத்தப்படுகின்ற நேரத்தில், இந்த (காப்பீடு செய்தகு) உரிமை இருக்கவேண்டியது அவசியமாகும்.

காப்பீடு செய்தகு உரிமையை யார் கொண்டிருக்கலாம்? (Who can have Insurable Interest) : காப்பீடு செய்தகு உரிமை என்றல் என்ன என்பதைக் கண்டபிறகு, காப்பீடு ஒன்றினை யார் ஏற்படுத்தலாம் என்ற கேள்வியை ஆராய்வதற்கு நாம் தொடர்வோம். எந்தத் தொகைக்கு அவர் காப்பீடு செய்திருந்தாலும், அதனைப் பெறுவதற்கு அவருக்கு உரிமையளிப்பதற்கு, போதுமான காப்பீடு செய்தகு உரிமையை அவருடைய சொந்த ஆயுளில் ஒரு நபர் கொண்டிருக்கிறார் என்று கருதப்படுகிறது. ஒரு மனைவி, தன்னுடைய கணவனின் ஆயுளின்மீது காப்பீடு செய்தகு உரிமையைக் கொண்டிருப்பதாக அனுமானம் செய்து கொள்ளப்படுவதால் அவள் தன் கணவனின் ஆயுள்மீது காப்பீடு செய்யலாம். அதேபோல, ஒரு கணவர், இத்தகைய ஓர் உரிமையினை அவருடைய மனைவியினுடைய ஆயுளின்மீது கொண்டிருப்பதாக அனுமானம் செய்துகொள்ளப்படுகிறது. உறவு என்ற அடிப்படையில் மட்டும், ஒரு பெற்றோர், ஒரு குழந்தையின் ஆயுளில் காப்பீடு செய்தகு உரிமையைக் கொண்டிருப்பதாக ஆகாது. ஒரு பெற்றோர், அவருடைய பராமரிப்பிற்கு, முழுமையாக அவருடைய மகன் அல்லது மகள்மீது சார்ந்திருக்கிறார் எனில், இத்தகைய மகன் அல்லது மகள் மீது பெற்றோர் ஒரு காப்பீடு செய்தகு உரிமையைக் கொண்டிருப்பதாக அனுமானம் செய்து கொள்ளப்படுகின்றது. தன்னைப் பராமரிக்கின்ற ஒரு தகப்பனாருடைய ஆயுளில் ஒரு மகன் காப்பீடு செய்தகு உரிமையைக் கொண்டுள்ளார்; ஆனால், பராமரிப்பிற்காக அவர்மீது சார்ந்துள்ள

ஒரு தகப்பனாருடைய ஆயுளின்மீது அத்தகைய உரிமை கொண்டிருக்கமுடியாது. இருந்த போதிலும், இங்கிலாந்தில், 1923 ஆம் ஆண்டின் தொழில் காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் (The Industrial Assurance Act., 1923), பெற்றோர்களால் தங்களின் குழந்தைகளின் ஆயுள்களில் அல்லது எந்த நபராலும் தம்முடைய பெற்றோர், பாட்டன்-பாட்டி, சகோதரர் அல்லது சகோதரி ஆகியோரின் ஆயுளில் ஈமச்சடங்குச் செலவுகளுக்காக (funeral expenses) ஒரு சிறு தொகைக்கு காப்பீடுகள் ஏற்படுத்தப்படலாம். கடனில் அவருக்கு உள்ள பொறுப்பினுடைய பங்கு அளவிற்கு அவருடைய சக பிணையாளியினுடைய (Co. Surety) ஆயுளின் மீதும் அதேபோல அவருடைய முதன்மைக் கடனாளியின் ஆயுள்மீதும், ஒரு பிணையாளி காப்பீடு செய்தகு உரிமையைக் கொண்டுள்ளார். ஒரு கடனாளர், தம்முடைய கடனாளி மற்றும் கடனுக்கான ஒரு பிணையாளி ஆகிய இருவருடைய ஆயுள்களின்மீதும் காப்பீடு செய்தகு உரிமையைக் கொண்டுள்ளார். கடனாளருடைய காப்பீடு செய்தகு உரிமையின் வரையறை, கடன் தொகையோடு, காப்பீட்டுத் திட்டாவனம் முதிர்வடைகின்ற பொழுது அவருக்கு வரவேண்டியுள்ள வட்டி மற்றும் தொடர்பான கட்டணங்கள் ஆகியவை சேர்ந்த ஒரு தொகையாகும். ஒரு சக கூட்டாளியினுடைய ஆயுள்மீது கூட்டு வணிகத்தில் அவருக்குள்ள உரிமையின் அளவிற்கு, ஒரு கூட்டாளி காப்பீடு செய்தகு உரிமையைக் கொண்டுள்ளார்.

கடனாளரின் காப்பீடு செய்தகு உரிமை (Creditor's Insurable Interest) : ஒரு கடனாளர், அல்லது ஒரு பொறுப்புறுதியர் (guarantor) அல்லாத மூன்றாம் நபர் ஒருவரால் காப்பீட்டுத் திட்டாவணம் பெறப்படுகின்றபொழுது, காப்பீடு பெறுநருடைய ஆயுளின்மீது, அந்த மூன்றாம் நபர் (Third Party), பணம்சார் தன்மை கொண்ட காப்பீடு செய்தகு உரிமை ஒன்றினைக் கொண்டிருந்தாலன்றி, காப்பீட்டுத் திட்டாவணம் இல்லா நிலையது (Void) ஆகிவிடும் : ஒரு பொறுப்புறுதியரும், அதேபோல ஒரு கடனாளரும், ஏற்கெனவே கூறியதுபோல, கடன்கொடுக்கப்பட்ட அல்லது பொறுப்புறுதியளிக்கப்பட்ட அளவிற்குக் கடனாளியின் ஆயுள்மீது காப்பீடு செய்தகு உரிமை கொண்டுள்ளனர். காப்பீட்டுத் திட்டாவணம் முதிர்வடையும் தறுவாயில் (காப்பீடு செய்தகு) உரிமை இல்லாமல் போனாலும், காப்பீட்டுத் திட்டாவணம் எடுக்கப்படுகின்ற நேரத்தில் அது இருத்தல் வேண்டும். இத்தகைய ஒரு தறுவாயில், கடன் தீர்க்கப்பட்டிருந்த போதிலுங் கூட, கடனாளரோ பொறுப்புறுதியரோ, (காப்பீடு) நிறுமத்திலிருந்து காப்பீட்டுத் திட்டாவணத்தின் தொகையைப் பெறலாம்;

இந்நேரங்களில், இத்தகைய கடனாளர் அல்லது பொறுப்புறுதியர் (Guarantor) அந்தத் தொகை தொடர்பாக, கடனாளியின் பொறுட்புரிமையர் (trustee) என்று கருதப்படுவது வழக்கம். தங்களுக்குக் கடன்பட்டுள்ள வாடிக்கையாளர்களுடைய ஆயுள் களின்மீது காப்பீட்டுத் திட்டாவணங்களை எடுப்பது என்பது வங்கியரிடத்தில் சாதாரணமாக இல்லாததன்று. பொது நடை முறையில், இருந்த போதிலும், காப்பீட்டுத் திட்டாவணம் கடனாளியினாலேயே எடுக்கப்பட்டுப் பின்னர் பிணையமாக வங்கியரிடத்தில் வைப்புச் செய்யப்படுகின்றது.

பிணையம் என்ற முறையில், காப்பீட்டுத் திட்டாவணங்களின் குறைவில்லாத சிறப்புத் தன்மை (Redeeming Features of Life Policies as Security): குறைபாடுகள் இருந்தபோதிலும், காப்பீட்டுத் திட்டவாணங்கள், கடன்களுக்குத் துணைப் பிணை யமாக வங்கிகளால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பிணையமாகக் கொடுக்கப்படும் காப்பீட்டுத் திட்டாவணம், தொழிலில் நல்நிலை யிலுள்ள ஒரு நிறுமத்தினுடையதாக இருந்தால், அதன் நன்மை யாதெனில், காலம் செல்லச் செல்ல, மேலூதியக் (Bonus) கூடுதல்களின் காரணமாக அது மதிப்பில் கூடுகிறது; ஒரு முழு ஆயுட்காலக் காப்பீட்டுத் திட்டாவணத்தில் உள்ளதுபோல, மர ணம் காரணமாக, அல்லது ஒரு காலவரையறைக் காப்பீட்டுத் திட் டாவணத்தில் உள்ளதுபோல ஒரு குறிப்பிட்ட பருவம் முடிந்த வுடன், அல்லது அதற்கு முந்தைய மரணம் காரணமாக, அது முதிர்வடையும் பொழுது, காப்பீடு செய்யப்பட்ட முழுத்தொகையும் மேலூதியங்கள் ஏதாவது இருப்பின் அவற்றோடு சேர்த்து உடனடி யாகக் கிடைக்கக்கூடியதாக ஆகின்றது. காப்பீட்டு நிறுமத்திலி ருந்து பெறப்படும் பணம் ஒரு மேல்வரைப்பற்றினை வேண்டிய அளவிற்கும் மேலாகத் தீர்வு செய்வது அடிக்கடி நிகழக்கூடிய தாகும். மேலும், அது, காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய விடு மதிப்பு (Surrender Value) அளவிற்காவது, எளிவரல் (liquid) மற் றும் பணமாக மாற்றக்கூடிய பிணையமாகும்; மற்றும், வங்கியர் அதனை விடுதற்கு (Surrender) அல்லது வேறு விதத்தில் ரொக்க மாக மாற்றுவதற்கு உள்ள உரிமையை, எப்போதும் தம்மிடம் ஒதுக்கி வைத்துக் கொள்கிறார். குறிப்பாக, மரணத்திற்குப்பிறகு நின்றுபோகக்கூடிய நிலையான வருவாய்களைக்கொண்டுள்ள ஆள் களுக்கு அளிக்கப்படுகின்ற கடன்களின் விடயத்தில் இத்தகைய ஒரு பிணையத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியது புறக்கணிக்கப் படக்கூடாத ஒரு முன்னெச்சரிக்கையாகும். அதேபோல, வங்கியர் ஒருவர், அதனுடைய தொடர்ச்சியான வெற்றி, பெருமளவில் கூட்டாளிகளில் ஒருவருடைய ஆயுளின்மீது சார்ந்திருக்கின்ற

ஒரு கூட்டுவணிக நிறுவனத்திற்குக் கடனளிப்பதற்கு முடிவு செய்கின்றபொழுது, வங்கியருக்கு வெறுமனே ஒரு பாதுகாப்பாக மட்டுமன்றி, மற்றக் கூட்டாளிகளின் நலனுக்காகவுங்கூட, குறிப்பாக எப்பொழுது வேறு எந்த நல்ல பிணையமும் முன் வரப்பெறவில்லையோ அப்பொழுது, அந்தக் கூட்டாளியினுடைய ஆயுள் மீதான காப்பீட்டுத் திட்டாவணம் ஒன்றினைப் பிணைய மாகப் பெறுவது விரும்பத்தக்கதாகும். சாதாரணமாக, இத்தகைய ஒரு பிணையத்தில் மேற்பார்வையிடவேண்டியதோ, செலவுகளோ கிடையாது; விளைபொருள்கள், சரக்குகள், மற்றும் பங்குத் தொகுப்புகள் (Stocks), பங்குகள் ஆகியவைகளில் கூட இவ் வாறில்லை.

பிணையங்கள் என்ற முறையில் காப்பீட்டுத் திட்டாவணங்கள் அதிகமாக வழக்கில் இல்லாமைக்குக் காரணங்கள் (Reasons for Unpopularity of Life Policies as Securities)

> " ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணங்களின்மீது ஒரு வங்கியர் எந்தவிதக் கடன்களையும் ஒருபோதும் அளிக்கக் கூடாது" (வங்கியியல் நியதி-ஜே. டபிள்யூ. கில்பெர்ட்) (The Logic of Banking by J. W. Gillbert)

கீழ்க்காணும் காரணங்களுக்காக, இந்தியாவிலுள்ள வங்கியர் களிடத்தில், அவர்களின் கடன்களுக்குப் பிணையமாக, ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணங்கள் அவ்வளவாக வழக்கில் இல்லை.

ஒரு முக்கியமான உண்மையை வெளிக்காட்டாத காரணத்திற் காகக் காப்பீடு செய்பவர் தப்பித்துக் கொள்ளல் (Evasion by insurer for Non-disclosure of a Material Fact): ஓர் ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம், மிகச் சிறந்த அளவிலான நல்லெண் ணத்தைக் (utmost good faith) காப்பீடு பெற்றவரிடமிருந்து தேவையெனக் கோருகின்ற "முழு நம்பிக்கையில் எழுகின்ற" (Uberrimae Fidei) ஓர் ஒப்பந்தமாகும்; காப்பீடு பெறுபவர், தம்முடைய ஆயுள் தொடர்பாக, அவருடைய அறிவிற்கெட்டிய வரையில், முக்கியமான உண்மைகளை முற்றிலும் வெளியிடு வதற்குக் கடமைப்பட்டுள்ளார். காப்பீடு பெற்றவருக்குத் தெரிந்த முக்கியமான ஓர் உண்மை மறைக்கப்பட்டிருந்தால், காப்பீட்டுத் திட்டாவணத்தின் மீது தம்முடைய பொறுப்பினைத் தவிர்ப்பதற்குக் காப்பீட்டு நிறுமத்திற்கு உதவுவதற்கு அது போதுமானதாகும். காப்பீடு பெறுபவர், தம்முடைய ஆயுள் தொடர்பான எல்லா முக்கிய உண்மைகளையும் வெளியிட்டுள்ளாரா என்பதைத் தெரிந்துகொள்வதற்கு வழிவகை எதனையும் வங்கியர் ஒருவர்

பெற்றிருக்கவில்லை; காப்பீடு பெறுபவர் மோசடி அல்லது திரித்துக்கூறுதல் போன்ற குற்றங்களைச் செய்தவர் என்று ஆகின்றபொழுது, வங்கியர் தம்முடைய பணத்தை இழக்கக் கூடிய இடர்வாய்ப்பில் நிற்கின்றார். 1938ஆம் ஆண்டின் காப்பீட்டு சட்டத்தின் 45 ஆவது பிரிவின்படி, எந்தக் காப்பீட்டுத் திட்டா வணமும், திட்டாவணம் எடுக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு அது செயலில் இருந்ததற்குப் பிறகு, செய்யப் பட்டதாகக் குற்றம் சாட்டப்படும், முக்கிய உண்மை தொடர் பான திரித்துக் கூறுதல், காப்பீட்டு நிறுமத்தை மோசடி செய்ய வேண்டுமென்பதற்காகக் காப்பீடு பெற்றவரால் தெரிந்தே செய்யப் பட்டது என்று ஆனாலன்றி, வழக்காடப்படலாகாது (Shall not be disputed) என்று கூறுகின்றது.

சிலவேளைகளில் கட்டுப்படுத்தக்கூடிய சரத்துகள், எடுத்துக் காட்டாக, வெளிநாட்டுப் பயணம், இடர்ப்பாடு உள்ள வேலை, அல்லது விமானத்தில் பறத்தல், ஆகியவை தொடர்பாக, காப்பீட்டுத் திட்டாவணங்களில் சேர்க்கப்படலாம்; இவைகள் ஒப்பந்தங்களை ஆட்சி செய்யும்.

காப்பீட்டு திட்டாவணத்தைச் செல்தகு நிலையில் வைத்திருப் பதற்கு ஒழுங்காக காப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்படுவது தேவை (Regular Payment of Premia required to keep policy alive): காப்பீட்டுத் திட்டாவணம் சில ஆண்டுகளுக்குச் செய லில் உள்ளது, மற்றும் அதனுடைய விடுமதிப்பு (surrender value) வங்கியரால் அளிக்கப்பட்ட கடனை உத்தரவாதம் செய்வதற்குப் போதுமானதாக உள்ளது என்றால் அன்றி, காப்பீடு பெறுபவரால் காப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்படாமல் இருக்கும் தறு வாயில், வங்கியர் காப்பீட்டுத் திட்டாவணத்தை செல்தகு நிலை யில் வைத்திருக்கவேண்டியவராக உள்ளார். ஒரு காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய மதிப்பு, அதனுடைய வகை, அது செய லில் உள்ள ஆண்டுகளின் எண்ணிக்கை ஆகியவைகளைச் சார்ந் துள்ளது. பறிமுதல் (forfeiture) செய்யப்படலாகாது என்ற சரத்தினைக் கொண்டுள்ள காப்பீட்டுத் திட்டாவணங்கள், காப் பீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்படுவது தவறுவது காரணமாகக் காலாவதியாகி விடுவதில்லை; ஆனால் அதற்குப் பின்னரும் சில காலத்திற்குச் செயலில் உள்ளன. இருப்பினும், பொது நடை முறை யாதெனில், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஆண்டு களுக்கு, வழக்கமாக இரண்டு அல்லது மூன்றாண்டுகளுக்கு, ஒரு காப்பீட்டுத் திட்டாவணம் செயலில் இருந்தபிறகு காப்பீட்டுக் கட்டணம் செலுத்தப்படுவது நிறுத்தப்படுமானால், காப்பீட்டுத்

திட்டாவணத்தைப் பறிமுதல் செய்யப்படுவதற்கு முடியாததாக ஆக்குவது ஆகும். இந்த முறையில், காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய விடுமதிப்பு கடனுக்குப் போதுமானதாக இருக்கின்ற வரையில், நிறுமம், காப்பீட்டுக் கட்டணங்கள் (Insurance Premia) செலுத்தப்படவேண்டிய தவணை விழுகின்றபொழுது, அவைகளைச் செலுத்துவதற்காகத் தானாகவே ஒரு கடனை வழங்கி காப்பீட்டுத் திட்டாவணத்தைச் செல்தகு நிலையில் (alive) வைத்திருப்பதற்கு ஒப்புகிறது. இவ்வாறு அளிக்கப்படும் கடன்கள், வழக்கமாக, 6 முதல் 9 சதவீத வட்டியில் சேர்ந்துகொண்டே போகின்றன, மற்றும் காப்பீட்டுத் திட்டாவணத்தின்மீதான முதல் (first) பொருட்பிணைப் பொறுப்பு (charge) என்ற தன்மையில் உள்ளது. காப்பீட்டுத் திட்டாவணத்தைச் செல்தகு நிலையில் வைத்திருப்பதற்காக இவ்வாறு கொடுக்கப்படும் கடன்களைத் தீர்ப்பதற்குக் காப்பீடு பெறுநர் தவறுகின்ற தறுவாயில், விடுமதிப்புத் தீர்ந்துபோனவுடன் காப்பீட்டுத் திட்டாவணம் நிறுமத்திற்குப் பறிமுதல் செய்யப்பட்டதாக ஆகிவிடுகிறது. இருந்தபோதிலும், 1938ஆம் ஆண்டினுடைய காப்பீட்டுச் சட்டம், ஒரு காப்பீட்டுத் திட்டாவணம் இரண்டு ஆண்டுகளுக்குச் செயலில் இருந்ததற்குப்பிறகு, காப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்படுவது நிறுத்தப்பட்டு, செலுத்தப்படவேண்டிய பாக்கித் தொகை மூன்று மாதங்களுக்குமேல் நிலுவையாக இருக்கும் தறுவாயில், காப்பீடு செய்பவர் (Insurer), காப்பீட்டுத் திட்டாவணத்தை வைத்திருப்பவர் மீது, காப்பீட்டுத் திட்டாவணத்தைச் செலுத்தப்பட்ட (paid-up) ஒன்றாக மாற்றுவதற்கு அவரால் செலுத்தப்படவேண்டிய தொகை ஏதாவது இருப்பின் அதனைக் குறிப்பிட்டு, ஓர் அறிவிக்கையினைக் கொடுக்கவேண்டுமென்று கூறுகிறது. மேலூதியம் (bonus) கூடிக்கொண்டே இருப்பதால் அதனுடைய மதிப்புத் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருப்பதாலும், வருங்காலத்திய காப்பீட்டுக் கட்டணங்களைச் செலுத்துவதற்கான பொறுப்பேதும் இல்லாமலிருப்பதாலும், இலாபத்தில் பங்கு பெறுகின்ற, செலுத்தப்பட்ட (paid up, participating) ஒரு காப்பீட்டுத் திட்டாவணம் இந்த வகையில் மிகச் சிறந்த பிணையமாகும். இருந்தபோதிலும், காப்பீட்டுத் திட்டாவணம் செலுத்தப்பட்ட ஒன்றாக இல்லாவிட்டால், அந்த தேதிவரை, காப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன எனறும், வருங்காலத்திய காப்பீட்டுக் கட்டணங்கள் அவை செலுத்தப்படவேண்டியவைகளாக ஆகின்ற அவ்வப்பொழுது காப்பீட்டு நிறுமத்திற்குச் செலுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதில் வங்கியர் தம்மை நிறைவுபடுத்திக் கொள்ளவேண்டும். வருங்காலத்திய காப்பீட்டுக் கட்டணம் ஏதா

வது செலுத்தப்படுவதற்கு வங்கியர் பணமளிக்கவேண்டியிருக்கின்ற தறுவாயில், வங்கியர் அதனை, காப்பீடு பெற்றுள்ள தம்முடைய வாடிக்கையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள கடனாகக் கருதுவார்; பிணையத்தைச் செல்தகு நிலையில் (alive) வைத்திருக்கின்ற நிறைவை அவர் கொண்டிருப்பார். ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணத்திற்கு எதிராகக் கடன் ஒன்றினை அளிக்கின்றபொழுது, வங்கியர், காப்பீட்டுத் திட்டாவணம் தொடர்பாகக் காப்பீடு நிறுமத்திற்குச் செலுத்தப்படவேண்டியதாக ஆகக்கூடிய காப்பீட்டுக் கட்டணங்கள் மற்றும் வேறு எல்லாப் பணங்களையும், எல்லாக் காலங்களிலும் தாமதமின்றிச் செலுத்தி, செலுத்தப்பட்ட காப்பீட்டுக் கட்டணம் ஒவ்வொன்றுக்கும் அதனுடைய இரசீதினை அது செலுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படும் சலுகை நாள்கள் முடிவடைவதற்குக் குறைந்தது பதினான்கு நாள்களுக்கு முன் வங்கியருக்கு அனுப்பி வைப்பார் என்ற ஓர் ஒப்பந்தத்திற்கு வாடிக்கையாளரை ஒப்புக்கொள்ளச் செய்யவேண்டும். இந்தியாவில், ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு (Insurance Corporation), பொதுவாக, திங்கள்தோறும் செலுத்தப்படவேண்டிய காப்பீட்டுக் கட்டணங்களுக்குப் பதினைந்து சலுகை நாள்களும், காலாண்டு, அரையாண்டு, மற்றும் வருடாந்தரக் காப்பீட்டுக் கட்டணங்களின் விடயத்தில் முப்பது சலுகை நாள்களும் அளிக்கின்றது. மேலும், வாடிக்கையாளர் செலுத்தத்தவறி, பாக்கியுள்ள காப்பீட்டுக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு வங்கியர் முடிவெடுத்தால், வாடிக்கையாளரின் கணக்கு அந்தந்தத் தொகைக்குப் பற்றுவைக்கப்படும்; இவ்வாறு செலுத்தப்படும் எல்லாக் காப்பீட்டுக் கட்டணங்களும் காப்பீட்டுத் திட்டாவணத்தின்மீது, ஒரு பொருட்பிணைப் பொறுப்பு (charge) ஆகும்.

உரிமை மாற்றிக்கொடுப்பது தொடர்பான சட்டத்தினுடைய நிறைவற்ற தன்மை (Unsatisfactory nature of Law relating to Assignments) : உரிமை மாற்றங்கள் தொடர்பான சட்டத்தினுடைய நிறைவற்ற நிலை காரணமாக, இந்தியாவிலுள்ள வங்கியர், ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணங்களையுங்கூட, கடன்களுக்குப் பிணையமாக ஆதரவு தருகிறார்களில்லை. இங்கிலாந்தில், தம்முடைய கடனுக்குப் பிணையமாக ஓர் ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணத்தைப் பெறுகின்ற வங்கியர், காப்பீட்டுத் திட்டாவணத்தைத் தமக்கு உரிமை மாற்றம் செய்து பெற்றுக்கொண்டு, முந்தைய பொருட்பிணைப் பொறுப்பினைப் (Prior charge) பற்றிய தகவல் எதனையும் காப்பீட்டு நிறுமம் பெறவில்லையென்றால், வங்கியருடைய நிலை மிகவும் பாதுகாப்பானதாகும். துரதிர்ஷ்டவசமாக, இந்தியாவிலுள்ள வங்கியர்களுக்கு முன்னுரிமை,

உரிமை மாற்றல் பதிவு செய்யப்பட்ட தேதியில் அன்றி, உரிமை மாற்றம் உண்மையாக நடந்த தேதியில் முடிவு செய்யப்பட்டு வந்தது. பம்பாய் உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு தீர்ப்புப் படி, வங்கியருக்கு அது உரிமை மாற்றிக் கொடுக்கப்படுவதற்கு முன்னர், ஒரு காப்பீட்டுத் திட்டாவணம் (வேறு யாருக்கேனும்) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டிருந்தால், முதல் உரிமை மாற்றம் காப்பீட்டு நிறுமத்தில் பதிவு செய்யப்படாமல் இருந்தாலுங் கூட, முதலில் உரிமை மாற்றிப் பெற்றவர் வங்கியரைக்காட்டிலும் ஒரு முன்னுரிமையைப் பெற்றிருந்தார். 1938ஆம் ஆண்டைய காப்பீட்டுச் சட்டம், 1939, ஜூலை முதல் தேதிக்கு முன்னர் விடுக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டாவணங்களையும், அதற்குப் பின்னர் விடுக்கப்பட்டவைகளையும் வேறுபடுத்தியுள்ளது. முந்தையவைகளின் விடயத்தில் ஒரு காப்பீட்டுத் திட்டாவணத்தை உரிமை மாற்றிப் பெற்றவர், மாற்றிப் பெற்றவர் (assignee and transferee) ஆகியோருடைய உரிமைகள் மற்றும் பரிகாரங்கள் ஆகியவைகள் சட்டத்தினால் பாதிக்கப்படவில்லை; ஆனால் பிந்தையவைகளின் விடயத்தில், அவைகளுக்கெதிராக கடன் வழங்குகின்ற வங்கியரின் நிலை, நன்மை பயக்கத்தக்கதாக மாறியுள்ளது. முந்தையவைகளின் விடயத்தில் வங்கியர் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டியுள்ளது; அதன் விளைவாக, காப்பீட்டுத் திட்டாவணத்தின் முந்தைய உரிமை மாற்றம் ஏதுமில்லை என்று கூறுகின்ற ஒரு கடிதத்தைக் கொடுக்கும்படி கடன் வாங்கியவரைக் கேட்கவேண்டியது அவசியமாகும்.

தற்கொலைத் தறுவாயில் உள்ள இடர்வாய்ப்புகள் (Risks in case of Suicide) : முன் நாள்களில், காப்பீடு பெற்றவர் தற்கொலை செய்துகொள்ளுகின்ற தறுவாயில், அல்லது நீதியினுடைய தீர்ப்பின்படி அவருடைய மரணம் நிகழும் தறுவாயில், ஓர் ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தத்தின்படியான பொறுப்பு ஒரே மாதிரியாகத் தவிர்க்கப்பட்டு வந்தது; இத்தகைய ஒரு நிகழ்ச்சி ஏற்படுவதன் பேரில் பிணையம் பயனற்றதாக ஆயிற்று. தற்காலங்களில், இத்தன்மையான கட்டுப்பாடுகள் திருத்தம் செய்யப்பட்டிருந்தபோதிலும், வங்கியர், இன்னும் இது தொடர்பான சரத்தினுடைய வாசகத்தைப்பற்றி மிகவும் எச்சரிக்கையாகவே இருக்கவேண்டியுள்ளது. திரு. ரோவெட் (Mr. Rowett) என்பவர், தம்முடைய நிறுமத்திலிருந்து (company) பெருமளவிலான கடன்களைப் பெற்றிருந்தார்; நிலைமையைச் சமாளிப்பதற்கு, காப்பீட்டு நிறுமத்திலிருந்து, ஒவ்வொன்றும் £ 10,000-க்கான மூன்று காப்பீட்டுத் திட்டாவணங்களை, நிறுமம், ரோவெட்டினுடைய ஆயுளின்மீது எடுத்திருந்தது. காப்பீட்டுத் திட்டாவணங்களில் ஒவ்வொன்றும்,

"காப்பீடு செய்யப்பட்டுள்ள ஆயுள், காப்பீட்டுத் திட்டாவணத்தின் தேதியிலிருந்து ஆறுமாதத்திற்குள்ளாக தற்கொலை செய்து கொள்ளமாட்டார், ஆனால் இத்தகைய தற்கொலை, பொறுப்பு வாய்ந்தவர்களாக நல்லெண்ணத்துடன் (காப்பீட்டுத் திட்டாவணங்களை) வைத்திருப்பவர்களின் நலனைப் பாதிக்காது," என்ற ஒரு சரத்தினைக் கொண்டிருந்தது. திரு. ரோவெட், காப்பீடுகள் எடுக்கப்பட்ட ஆறு மாதங்களுக்குள் தற்கொலை செய்து கொண்டார். வாதி நிறுமம் (Plaintiff Company), காப்பீட்டுத் திட்டாவணங்களின்கீழ் £ 30,000-ஐ அடைவதற்கு முயற்சி செய்தது; ஆனால், காப்பீட்டு நிறுமம், ரோவெட் ஆறுமாத காலத்திற்குள்ளேயே தற்கொலை செய்துகொண்டதாலும், வாதிநிறுமம் பொறுப்பு வாய்ந்தவர்களாக நல்லெண்ணத்துடன் காப்பீட்டுத் திட்டாவணங்களை வைத்திருந்தவர்களில்லையாதலாலும், தாங்கள் பொறுப்பாளிகளல்லர் என்று கூறியது. நீதிமன்றம், காப்பீட்டு நிறுமத்திற்கு சாதமாகத் தீர்ப்பு வழங்கியது. அப்பொழுது, வழக்கு, முறையீட்டு நீதிமன்றத்திற்கு (Court of Appeal) எடுத்துச் செல்லப்பட்டது; முறையீட்டு நீதிமன்றம் கீழ் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை உறுதிப்படுத்தியது. வழக்கின் தீர்ப்பினை (ரோவெட் லீகி அண்ட் கோ. லிட். எதி. ஸ்காட்டிஸ் பிராவிடண்ட் இன்ஸ்டிடியூஷன் பாங்கர்ஸ் அண்ட் இன்சூரன்ஸ் மேனேஜர்ஸ் அண்ட் ஏஜெண்ட்ஸ் மேகசைன், ஜூன், 1926, பக்கங்கள் 887, 888—Rowett Leaky & Co. Ltd. *v.* Scottish Provident Institution Bankers and Insurance Managers' and Agents' Magazine, June 1926, Pp. 887, 888) கவனமாகப் படித்துப் பார்க்கின்ற பொழுது, முறையீட்டு நீதிபதிகளின் (Lords of Appeal) கருத்துப்படி, காப்பீட்டு நிறுமத்திற்கு எதிரான தங்களுடைய கோரிக்கையை நிலை நிறுத்துவதற்கு வாதி நிறுமம் தவறியதற்குக் காரணம், "நல்லெண்ணத்துடன், பொறுப்பு வாய்ந்தவர்களாக அவைகளைக் கொண்டிருந்தவர்கள்" என்னும் கருத்திற்கு ஆங்கிலச் சட்டத்தில் பொருள் ஏதுமில்லையென்று கீழ் நீதிமன்றம் கூறியதானால் மட்டுமன்று, ஆனால், வாதி நிறுமம் நல்லெண்ணத்துடன் ஆன உடையவர்களல்லர் என்பதாலுந்தான் என்று தோன்றுகிறது. "உண்மையில், அவர்கள், ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட முதன்மை (original) நபர்களில் ஒருவரான காப்பீடு பெற்றவர்களாவர்." இதிலிருந்து, "தற்கொலைச் சரத்து, ஒப்பந்தத்திற்கு முதன்மை நபர்களைப் பாதிக்கின்றதேயன்றி, மதிப்பினைக் கொடுத்து நல்லெண்ணத்துடன் பெற்றுக்கொண்டவர்களையன்று என்பது தெளிவாகின்றது. காப்பீட்டு நிறுமங்கள், உரிமை மாற்றம் செய்யப்பட்டது பற்றிய அறிவிக்கை, தற்கொலை நடந்த தேதியிலிருந்து குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னர்த் தங்களால் பெறப்பட

வேண்டுமென்பதை, பொதுவாக, ஒரு நிபந்தனையாக ஆக்குகின்றன. அவருக்குச் சாதகமாக ஒரு காப்பீட்டுத் திட்டாவணம் உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட பின்னர், எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் ஓர் அறிவிக்கையினை அவர் காப்பீடு நிறுமத்திற்குக் கொடுத்து, அதற்கான ஓர் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதை வங்கியருக்கு மிகவும் வற்புறுத்திக் கூறுவேண்டியதில்லை. 1938ஆம் ஆண்டின் காப்பீட்டுச் சட்டத்தில், பிரதிபயனோடோ, பிரதிபயன் இல்லாமலோ ஏற்படுத்தப்படுகின்ற ஓர் ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய ஒரு மாற்றல் (transfer) அல்லது உரிமை மாற்றம் (assignment) காப்பீட்டுத் திட்டாவணத்திலேயே மேலெழுதப்பட்டோ, ஒரு தனி ஆவணத்தின் மூலமாகவோ, மாற்றல் செய்பவரால் அல்லது இதற்கென உரிய முறையில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஒரு முகவரால் கையொப்பமிடப்பட்டு, குறைந்தது ஒரு சாட்சியால் அத்தாட்சி அளிக்கப்பட்டு, எழுத்தால் ஆனதாக இருக்கவேண்மென்று தெளிவாக சரத்துகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காப்பீடு செய்தவருக்கு எதிராக, மாற்றல் அல்லது உரிமை மாற்றம் செயல்பாடு உடையதாக (operative) ஆக்கப்படவேண்டுமானால், உரிமை மாற்றம், அல்லது மாற்றல் பற்றிய எழுத்துமூலமான அறிவிக்கை, இந்தியாவில், அவருடைய தொழிலுக்கு முதன்மையான இடத்தில், காப்பீடு செய்பவருக்கு ஒப்படைப்புச் செய்யப்பட்டிருக்கவேண்டும். அறிவிக்கை, மாற்றல் செய்தவர் அல்லது மாற்றல் பெற்றவரால் கொடுக்கப்படலாம்; அவரிடம் கொடுக்கப்படும்பொழுது, இத்தகைய அறிவிக்கையினை, காப்பீடு செய்தவர், தம்முடைய புத்தகத்தில் பதிவு செய்து கொண்டு, ஒரு ரூபாய் கட்டணத்தில், அறிவிக்கையைப் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதலை அனுப்பியவருக்குக் கொடுப்பதற்குக் கடமைப்பட்டுள்ளார். இத்தகைய அறிவிக்கை பெறப்பட்ட தேதியிலிருந்து உரிமை மாற்றிப் பெற்றவரை அல்லது மாற்றல் பெற்றவரை மட்டுமே, காப்பீட்டுத் திட்டாவணத்தின்கீழ் நன்மைகளைப் பெறுவதற்கு உரிமை கொண்டுள்ள ஒரே நபராகக் காப்பீடு செய்தவர் கருதுவார்.

முன்னெச்சரிக்கைகள் (Precautions)

காப்பீட்டுத் திட்டாவணங்களைக் கடன்களுக்குப் பிணையமாக ஏற்றுக்கொள்ளும்பொழுது, கீழ்க்காணும் முன்னெச்சரிக்கைகள் வங்கியர் ஒருவரால் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் ;

காப்பீட்டு நிறுமத்தினுடைய மதிப்பு நிலை (Status of the Insurance Company): முதலாவது, காப்பீட்டுத் திட்டாவணத்தை விடுத்துள்ள நிறுமத்தினுடைய நிதி நிலைமையைப்பற்றி, வங்கியர்

தம்மை நிறைவுப்படுத்திக் கொள்ளவேண்டும். நம் நாட்டில், 1956ஆம் ஆண்டின் ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருச் சட்டத்தின் (Life Insurance Corporation Act, 1956) மூலம், ஆயுள் காப் பீட்டுத் தொழில் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளது; தனிப்பட்ட ஆயுள் காப்பீட்டு நிறுமங்கள் ஏதுமில்லை. அவ்வாறிருப்பதால், நம் நாட்டிலுள்ள வங்கியர் இந்த விடயத்தில் கவலையேதும் கொண்டிருக்கவேண்டியதில்லை. இருந்தபோதிலும், 1938ஆம் ஆண்டின் காப்பீட்டுச் சட்டம், குறிப்பாக வெளிநாட்டு நிறுமங் களைப் பெருமளவிலான வைப்புகளை இந்தியாவில் வைத்திருக்க வேண்டுமென்று கோருவதன் மூலமாக, அவைகளின்மீது சிறிது கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்க முயன்றது என்பது குறிப்பிடப் படவேண்டியதாகும்.

காலவரைத் திட்டாவணங்கள் ஆதரவளிக்கப்படுகின்றன (Endowment Policies Favoured): மக்கள் அதிக அளவில் காப் பீடு மனப்பாங்கு கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்பதன் காரணமாக, வெவ்வேறு வகையான காப்பீட்டுத் திட்டாவணங் கள் வழக்கத்தில் வந்துள்ளன. கீழ்க்காண்பவை, ஆயுள் காப் பீட்டுத் திட்டாவணங்களில் முக்கியமான வகைகளாகும்: (அ) காலம் முழுமைக்குமான காப்பீட்டுத் திட்டாவணம் (Whole Term Policy). இது மிகவும் சிக்கனமானதும் எளிமையானதும் ஆகும். அது, மரணம் என்ற இடர்வாய்ப்புக்கு எதிராக ஓர் உண்மையான காப்பீட்டினை ஏற்படுத்துகின்றது. (ஆ) ஆயுட் காலக் காப்பீட்டுத் திட்டாவணம் (Whole Life Assurance Policy), ஆனால் வரையறுக்கப்பட்ட செலுத்துகைகளுடன். இது முதல் வகையிலிருந்து, காப்பீட்டுக் கட்டணங்கள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஆண்டுகளுக்குச் செலுத்தப்படவேண்டி யவை, அல்லது காப்பீட்டுக் கட்டணங்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது, என்பதில் வேறுபடுகின்றது. (இ) காலவரைக் காப்பீட்டுத் திட்டாவணம் (Endowment Policy). அதனுடைய பெயரே குறிப்பிடுவதுபோல, இந்தத்திட்டாவணம் மற்ற இரண்டிலிருந்தும் வேறுபட்ட ஒன்றாகும்; இதில் காப்பீடு செய்யப்பட்ட தொகை, மரணம் அல்லது நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஆண்டுகள் முடிந்தவுடன், இதில் எது முதலில் நிகழ்கிறதோ அப்பொழுது செலுத்தப்படவேண்டியதாக ஆகின்றது. இந்தவகை, உண்மையிலேயே, மிக அதிகமாக வழக்கத்திலுள்ள ஒன்றாகும். மேலே சொல்லப்பட்ட எல்லா வகையான காப்பீட்டுத் திட்டாவணங்களும் இலாபத்தோடு கூடியவைகளாகவோ இலாபம் சேராதவைகளாகவோ இருக்கலாம்; அதாவது, இலாபத்தில் பங்கு பெறக்கூடியவைகள், அல்லது

இலாபத்தில் பங்கு பங்குபெறாதவைகள். இலாபங்களோடு கூடிய காப்பீட்டுதிட்டாவணங்களின் விடயத்தில், காப்பீடு பெற்றவருக்குச் செலுத்தவேண்டிய தொகை, காப்பீட்டு நிறுமத்தினுடைய, காப்பீட்டு மதிப்பாளரால் (actionary) செய்யப்படும் மதிப்பீட்டின் அடிப்படையில், ஒவ்வொரு மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்குப்பிறகு நிறுமத்தால் மேலூதியம் (bonus) அறிவிக்கப்படுவதன்மூலம் அதிகரிப்படைந்திருக்கும். காலவரை வகையின் விடயத்தில் நிச்சயமான ஒரு முதிர்வு நாள் இருப்பதால், பொதுவாக வங்கியர்கள், ஆயுட்காலக் காப்பீட்டுத் திட்டாவணங்களைவிட, காலவரைக் காப்பீடு திட்டாவணங்களை வெகுவாக விரும்புகின்றனர். ஆயுட்காலக் காப்பீட்டுதிட்டாவணங்களின் விடயத்தில் காப்பீட்டுப் பணத்தின் மூலமாகத் தம்முடைய கடனைத் திரும்பப் பெறுவதற்கு, வங்கியர் நீண்ட காலத்திற்குக் காத்திருக்கவேண்டிவரலாம்.

காப்பீடு செய்தகு உரிமை அவசியம் (Insurable Interest Necessary): ஏற்கெனவே விளக்கிக் கூறப்பட்டதுபோல, சில தறுவாய்களில், காப்பீடு செய்தகு உரிமை இருப்பதாக அனுமானம் செய்துகொள்ளப்படுகின்றது; அவை: (அ) ஓர் ஆளுக்கு, அவருடைய அல்லது அவளுடைய சொந்த ஆயுளின்மீது, (ஆ) ஒரு கணவனுக்கு அவன் மனைவியினுடைய ஆயுளின்மீது, (இ) மனைவிக்கு அவளுடைய கணவனின் ஆயுள்மீது, மூன்றாம் நபர் ஒருவரால் ஒரு காப்பீட்டு திட்டாவணம் எடுக்கப்படும்பொழுது, அவர், மேலே விவரித்துக் கூறப்பட்டதுபோல, காப்பீடு பெற்றவருடைய ஆயுளின்மீது காப்பீடு செய்தகு உரிமையைக் கொண்டுள்ளாரா என்று வங்கியர் தம்மை நிறைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

உரிமை மாற்றிக் கொடுக்கப்படுவதைக் கட்டுப்படுத்துகின்ற நிபந்தனைகளிலிருந்து காப்பீட்டுத் திட்டாவணம் விடுதலை பெற்றிருக்கவேண்டும் (Policy must be free from conditions Restricting Assignment): வங்கியர், காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய நிபந்தனைகளை எச்சரிக்கையாகத் துருவிப் பார்த்து, ஒரு பிணையம் என்ற முறையில் அதனுடைய மதிப்பினைப் பாதிக்க வாய்ப்புள்ள கட்டுப்பாடுகள் ஏதாகினும் உள்ளனவா என்று தெரிந்துகொள்ளவேண்டும். தொழில் வகையைச் (Industrial type) சேர்ந்தவைகளைப் போன்ற சில காப்பீட்டுத் திட்டாவணங்களின் விடயத்தில், சில வேளைகளில், உரிமை மாற்றம் செய்வதில் ஒரு கட்டுப்பாடு உள்ளது.

அளிக்கப்படவேண்டியுள்ள கடனின் அளவு (Extent of Advance to be made): காப்பீடு பெற்ற நபர் ஒருவர், காப்பீட்டுக் கட்டணங்களைத் தொடர்ந்து செலுத்தமுடியாது என்ற காரணத்தினால் தம்முடைய காப்பீட்டுத் திட்டாவணத்தை, செல்தகு நிலையில் வைத்திருக்க முடியாது என்று அறியக்கூடிய தறுவாய்களுக்குக் காப்பு வசதி செய்யும்பொருட்டு, காப்பீட்டு நிறுமங்கள், காப்பீட்டுத் திட்டாவணதாரர்கள் தங்கள் திட்டாவணங்களைக் கைவிடுவதன்பேரில் குறிப்பிட்ட அளவு பணத்தை அளிப்பதற்கு முனைவு (offer) செய்கிறார்கள். இவ்வாறு செலுத்தக்கூடிய தொகைகள் விடுமதிப்புகள் (Surrender Values) என்றறியப்படுகின்றன. பொதுவாக, மூன்றாண்டுகளுக்கு அதிகமில்லாத காலத்திற்குச் செல்தகு நிலையில் வைக்கப்பட்டுள்ள ஒரு காப்பீட்டுத் திட்டாவணம் விடுமதிப்பினைக் கொண்டிராது. சில காப்பீட்டுத் திட்டாவணங்கள், எடுத்துக்காட்டாக, மிகக் குறுகிய காலத்திற்கு எடுக்கப்படும் காப்பீட்டுத் திட்டாவணங்கள், விடுமதிப்பு என்பதனையே பெற்றிருக்கமாட்டா. முதல் மூன்றாண்டுகளுக்கு விடுமதிப்பு ஏற்பாடு ஏதும் இல்லாமைக்கு முக்கியக் காரணம், காப்பீட்டு நிறுமங்கள் பெறுகின்ற காப்பீட்டுக் கட்டணங்களின் பெரும் பகுதியைக் கழிவு (commission), வைத்தியர் கட்டணங்கள் ஆகியவைகளில் செலவு செய்ய வேண்டியுள்ளது என்பதாலாகும். காப்பீட்டுத் திட்டாவணம் செல்தகு நிலையில் வைக்கப்பட்டுள்ள காலம் அதிகமாக இருக்க இருக்க, விடுமதிப்புகள் மூலமாகத் திரும்ப அளிக்கப்படும், காப்பீடு பெற்றவரால் செலுத்தப்பட்ட காப்பீட்டுக் கட்டணத்தினுடைய சதவீதம் அதிகமாக இருக்கும். ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணத்திற்கு எதிராக ஏதாவது கடனை அளிப்பதற்குமுன் வங்கியர் அதனுடைய விடுமதிப்பினை, காப்பீட்டு நிறுமத்தினிடமிருந்து தெரிந்து கொள்ளவேண்டும். சில காப்பீட்டு நிறுமங்கள் வாடிக்கையாளரின் அதிகாரமின்றி, இத்தகைய செய்தியைத் தருவதற்கு மறுக்கின்றன. சில நிறுமங்கள் காப்பீட்டுத் திட்டாவணங்களின் பின்பக்கம், விடுமதிப்புகளின் அட்டவணை ஒன்றினை அச்சிட்டு வைத்துள்ளன. கடன் வழங்குவதற்கு முன்னர், கடைசிக் காப்பீட்டுக் கட்டணம் செலுத்தப்பட்ட இரசீது அல்லது காப்பீட்டுக் கட்டணம் செலுத்தியதற்கான வேறு ஏதாவது அத்தாட்சியோடு, வருங்காலத்திய காப்பீட்டுக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு ஒரு நிரந்தர ஆணையையும் வாடிக்கையாளரிடமிருந்து வங்கியர் பெறவேண்டும். மேலூதியச் சான்றிதழ்கள் (bonus certificates) பெறப்பட்டுக் காப்பீட்டுத் திட்டாவணத்தோடு சேர்த்துவைக்கப்படவேண்டும். விடுமதிப்பு நட்டமேற்படாமலும், மேற்கொண்டு காப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்படுவதற்கான பொறுப்பு இல்லாமலும், காப்பீட்டுத்

திட்டாவணம் எவ்வளவு காலத்திற்கு, செல்லக்கூடிய தகுதியுடன் வைத்திருக்கப்படமுடியும் என்பதையும் வங்கியர் அறிந்துகொள்ள வேண்டும். பொதுவாக, விடுமதிப்பில் 85 சதவீதத்திற்குமேல் வங்கியர் கடன் வழங்கக்கூடாது. ஒப்பீட்டடிப்படையில், ஒரு குறுகிய காலத்திற்குப்பின்னர் முதிர்வடையக்கூடிய காலவரைக் காப்பீட்டுத் திட்டாவணமாக இருக்குமெனில், வங்கியர், குறிப்பாகத் தம்முடைய வாடிக்கையாளர் காப்பீட்டுக் கட்டணங்களைத் தொடர்ந்து செலுத்துவார் என்று நம்புகின்றபொழுது, இந்தச் சதவீதத்தைத் தாண்டிக் கடனளிக்கலாம். வங்கியர், தம்முடைய சொந்த நலனுக்காக, அவ்வப்போது, காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய விடுமதிப்புபற்றிய அதிகாரபூர்வமான விலைக் குறிப்பீடுகளை (quotations) நிறுமத்திலிருந்து பெறவேண்டும். சாதாரணமாக, முன்னரே சொல்லப்பட்டதுபோல, ஓர் ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணம், முதல் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குக்கான காப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்படுகின்றவரை விடுமதிப்பினைக் கொண்டிருப்பதில்லை; மேலும், விடுமதிப்புகள் நிறுமத்திற்கு நிறுமம் வேறுபடுகின்றன.

காப்பீடு பெற்றவருடைய வயது ஒப்புக்கொள்ளப்படுதல் (Admission of the age of the assured): எந்த நபருடைய ஆயுளின் மீது காப்பீட்டுத் திட்டாவணம் எடுக்கப்பட்டுள்ளதோ, அவருடைய வயது காப்பீட்டு நிறுமத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதா என்று வங்கியர் பார்க்கவேண்டும். ஒப்புக்கொள்ளப்படவில்லையென்றால், ஒரு தனிக்கடிதத்தின் மூலமாகவோ, காப்பீட்டுத் திட்டாவணத்தின்மீது மேலெழுதல் செய்வதன் மூலமாகவோ, வயது நிறுமத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டு வங்கியர் பெறவேண்டும்; அவ்வாறில்லையென்றால், காப்பீடு பெற்ற ஆளுடைய மரணம் ஏற்படுகின்ற தறுவாயில், இதற்காகத் தேவைப்படும் அவசியமான அத்தாட்சியினைக் கொடுப்பது வங்கியருக்குக் கடினமானதாக ஆகக்கூடும். ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, காப்பீடு பெற்றவருடைய ஒரு பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புக் குறிப்பின் (horoscope) ஒரு படியினைப் பெற்றுக் காப்பீடு பெற்றவருடைய வயதுக்கு அத்தாட்சியாக, காப்பீட்டுத் திட்டாவணத்துடன் சேர்த்து, வங்கியர், காப்பீட்டு நிறுமத்திற்கனுப்பலாம்.

காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய சட்டப்படியான உரிமை மாற்றம் (Legal Assignment of the Policy) : வங்கியரின் நோக்குக் கோணத்தில் இருந்து, அசையாச் சொத்துகளின் விடயத்தில் உள்ளதுபோல, காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய சட்டப்படியான ஓர் உரிமை மாற்றத்தை, கடன் மற்றும் இதரக் கட்டணங்

கள் திரும்பச் செலுத்தப்பட்டதன்பேரில், மறு உரிமை மாற்றம் செய்வதற்கான ஒரு காப்புவாசகத்துடன் பெற்றுக்கொள்வது விரும்பத்தக்கதாகும். காப்பீட்டுத் திட்டாவணத்தில் உரிமை கொண்டிருக்கும் எல்லோரும் உரிமை மாற்றலில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படவேண்டும். எடுத்துக்காட்டாக, அவருடைய மனைவியின் நன்மைக்காகக் காப்பீட்டுத் திட்டாவணம் ஒரு கணவரால் எடுக்கப்பட்டிருந்தால், இருவரும் உரிமை மாற்றம் செய்வதில் கையொப்பமிடவேண்டும். அதேபோல, காப்பீட்டுத் திட்டாவணம் காப்பீடு பெற்றவருடைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளின் நலனுக்காக எடுக்கப்பட்டது என்றால், நன்மையை அடையப்போகின்ற அவர்கள் எல்லோரும், முழு வயது அடைந்தவர்களாக இருந்தால், காப்பீட்டுத் திட்டாவணம் பிணையமாக அளிக்கப்படுவதற்கு ஒப்புதலளிக்கவேண்டும். இருந்தபோதிலும், குழந்தைகளில் யாராவது, இளவராக (minor) இருப்பின், இளவரான ஒருவர், காப்பீட்டுத் திட்டாவணத்தை உரிமை மாற்றிக் கொடுப்பதற்கு உரிமையில்லாதவராதலால், ஒரு பிணையம் என்ற முறையில், காப்பீட்டுத் திட்டாவணத்திற்கு எந்தப் பயனும் கிடையாது. பொதுவாக, அவர் அதனைக் காப்பீட்டு நிறுமத்திற்கு விடுவதையே (Surrender) முதலில் விரும்பக்கூடுமெனினும், அடகு பெற்றவர் என்ற முறையில், காப்பீட்டுத் திட்டாவணத்தை மாற்றிக் கொடுப்பதற்கு வங்கியர் அதிகாரமளிக்கப்படவேண்டும். அவர், காப்பீட்டுத் திட்டாவணத்தை, எப்போதும் தம்முடைய உடைமையிலேயே வைத்திருக்கவேண்டும்; எந்தச் சூழ்நிலையிலும், ஒரு குறுகிய காலத்திற்குக் கூட, அதனைப் பிரிந்திருக்கக்கூடாது (பின்னிணைப்பு 'ஆ', படிவம் எண் 31 பார்க்கவும்).

காப்பீட்டுத் திட்டாவணத்தின்மீது நியாய அடைமானம் (Equitable Mortgage on Policy): இருந்தபோதிலும், வாடிக்கையாளருடைய கண்ணோட்டத்திலிருந்து, இத்தகைய பிணையங்களை ஈடுகளாக ஆக்குவதற்கான எளிய, மற்றும் அதிகமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையாதெனில், அதனை ஒரு நியாய அடைமானத்தின் மூலம் பிணையமாக ஆக்குவதேயாகும். வாடிக்கையாளர், காப்பீட்டுத் திட்டாவணத்தை, வங்கியர் வேண்டுகின்றபொழுது அதனை உரிமை மாற்றிக் கொடுப்பதற்கான, ஓர் எழுத்துமூலமான உறுதிமொழியுடன் சேர்த்து வைப்புச் செய்கிறார். காப்பீட்டுத் திட்டாவணத்தை வெறுமனே வைப்புச் செய்வது, அதனைப் பிணையமாக ஆக்குவதற்குப் போதுமானது அன்று. அதனைப் பிணையமாக ஆக்க விரும்புகின்ற எண்ணம் வெளிக்காட்டப்படவேண்டும். மேலும், வாடிக்கையாளர் மரணமடைந்து, வங்

கியருடைய பிணையம்பற்றிய அறிவிக்கை ஏதுமில்லாததால், காப்பீட்டுத்திட்டாவணத்தின்மீது செலுத்தப்படவேண்டிய தொகையை, காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய நிபந்தனைகளின்படி, இறந்தவருடைய தனிப்பட்ட சார்பாளர்களுக்கு (Personal Representatives) நிறுமம் கொடுத்துவிட்டால், காப்பீட்டுத் திட்டாவணத்தின்படியான கோருரிமை நிறைவேற்றப்பட்டதாக ஆகிவிடும். எளிமையாக இருப்பதோடு, கடன் திருப்பிச் செலுத்தப்பட்டவுடன், வழக்கமான, காப்பீட்டுத் திட்டாவணத்தைத் திரும்ப உரிமை மாற்றம் செய்ய வேண்டியதில்லை, என்ற மற்றொரு நன்மையும் சட்டப்படியான உரிமை மாற்றம் செய்வதில் உள்ளதைவிட, நியாய உரிமை மாற்றம் செய்வதில் உள்ளது. வெரிஜெர்ஸ் பாலிசி (1910) [In re Weriger's Policy (1910)] என்ற வழக்கில், தம்முடைய கையில் ஒப்படைக்கப்படாத ஒரு காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய பிணையத்தின்பேரில் கடனளிக்கின்ற ஒரு நபர், காப்பீட்டுத் திட்டாவணம் முந்தைய அடைமாணத்தைப் பெற்ற ஒருவருடைய கைகளில் இருக்குமானால், முந்தைய அடைமானத்தைப்பற்றி, அனுமானம் செய்துகொள்ளக்கூடிய ஓர் அறிவிக்கையினைப் பெற்றிருந்தார் என்றும், எனவே, முதல் அடைமானம் பெற்றவரைக் காட்டிலும் முன்னதாகக் காப்பீட்டு நிறுமத்திற்கு அறிவிக்கையினைக் கொடுப்பதன்மூலம் முந்தையதைவிட முன்னுரிமையைப் பெறமுடியாது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. இருந்தபோதிலும், இரண்டாவது அடைமானம் ஒன்றினைப் பெற்றவர், இரண்டாவது அடைமானத்தைப்பற்றித் தெரிந்துகொண்டு மேற்கொண்டும் கடன் அளித்துக்கொண்டிருக்கின்ற முதல் அடைமானத்தைப் பெற்றுள்ள ஒருவருக்கு அறிவிக்கையினைக் கொடுக்க வேண்டுமென்ற கடப்பாட்டிற்கு உட்பட்டவரல்லர்; அவர் (முதல் அடைமானத்தைப் பெற்றவர்), காப்பீட்டு நிறுமத்திற்கு அறிவிக்கையினைக் கொடுக்கின்ற இரண்டாவது அடைமானம் பெற்றவரைவிட, இரண்டாவது அடைமானத்திற்குப் பின்னர்த் தொடர்ந்து வழங்கப்பட்ட கடன்களுக்கு எந்தவித முன்னுரிமையையும் கோரமுடியாது. இந்த நன்மைகளுக்கெதிராக, ஒரு பிணையமாக இந்த மாதிரி ஓர் ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணத்தைப் பொருட்பிணைப் பொறுப்பாக ஆக்குவது சில குறைபாடுகளையும் கொண்டுள்ளது; எடுத்துக்காட்டாக, அவ்வாறு செய்யும்படி அழைக்கப்படுகின்றபொழுது, கடன் பெற்றவர் காப்பீட்டுத் திட்டாவணத்தை உரிமை மாற்றிக் கொடுப்பதற்கு மறுத்தால், பிணையத்தை விற்றுப் பணமாக்குவது கடினமானதாவிடும். காப்பீட்டுத் திட்டாவணத்தை வேறு எவருக்காவது உரிமை மாற்றிக்கொடுப்பதிலிருந்து, கடன் வாங்கியவரைத் தடுக்கவேண்டியவராகவும் வங்கியர் உள்ளார், எனவே, ஓர் ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணத்

தினுடைய நியாய அடைமானத்திற்கு எதிராகப் பணம் கடனளிக் கும் வங்கியர், சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுமத்திற்கு, தான், காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய ஒரு நியாய அடைமானத் தைப் பெற்றவர் என்று எழுத்துமூலமான ஓர் அறிவிக்கையினைக் கொடுக்கவேண்டும். (பின்னிணைப்பு 'ஆ'—படிவம் எண் 31 (ஆ) பார்க்கவும்).

கடன் வாங்கியவராலும், உரிமை கொண்டுள்ள மற்ற நபர் களாலும் நினைவுக் குறிப்பு கையொப்பமிடப்படவேண்டும் (Memorandum to be signed by Borrower and other Interested Parties): வங்கியர் ஒருவர் ஒரு நியாய அடைமானம், அல்லது சட்டப்படியான ஓர் உரிமை மாற்றம்பற்றி நிறைவு அடைந்து விட்டபொழுது, தம்முடைய வாடிக்கையாளரால் கையொப்பமிடப் பட்ட ஒரு நினைவுக் குறிப்பினைப் பெற்றுக் கொண்டிருக்கவேண் டும்; இதில், வாடிக்கையாளர் காப்பீட்டுக் கட்டணங்களைத் தாமதமின்றிச் செலுத்துவதாகவும், இத்தகைய செலுத்துகைகளுக் கான இரசீதுகளைக் காண்பிப்பதாகவும் மற்றும் (மிதசீதோஷ்ண மான இடங்களிலிருந்து அதிக சீதோஷ்ணமுள்ள இடங்களுக்கு ஆட்கள் வசிக்கச் செல்வது போன்ற) காப்பீட்டுத் திட்டா வணத்தை இல்லாநிலையது (void) அல்லது தவிர்தகு (voidable) ஒன்றாக ஆக்கக்கூடிய எச்செயலையும் செய்யாமல் இருப்பதா கவும் உறுதிமொழியினைக் கொடுக்கவேண்டும்; மற்றும், அவர் காப்பீட்டுக் கட்டணங்களைச் செலுத்தத் தவறும் தறுவாயில் அவைகளைச் செலுத்திவிட்டு, தொகையை வாடிக்கையாளரு டைய கணக்கில் பற்று எழுதிக்கொள்ளவும் வங்கியருக்கு அதிகார மளிக்கவேண்டும். இத்தகைய செலுத்துகைகள், கடன் தொகைக்கு உள்ளதுபோல, வட்டி செலுத்தப்படவேண்டியவைகளாக இருக் கும் என்பதும் தெளிவாகக் கூறப்படவேண்டும். காப்பீட்டுத் திட்டாவணத்தில் உரிமை கொண்டுள்ள எல்லா நபர்களும், உரிமை மாற்ற ஆவணத்தில், அல்லது நினைவுக் குறிப்பில் கையொப்ப மிடுகிறார்களா என்று வங்கியர் பார்க்கவேண்டும். காப்பீட்டுத் திட்டாவணத்தின் மேலேயே, காப்பீடு பெற்றவருடைய மனைவி போன்ற ஒரு குறிப்பிட்ட நபருடைய நன்மைக்காக அது எடுக் கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டிருந்தால், அவரும் (மனைவி யும்) கூட நினைவுக் குறிப்பினில் கையொப்பமிடவேண்டும். இது தொடர்பாக, 1874ஆம் ஆண்டின், மணமான பெண்களின் சொத் துச் சட்டம் (Married Women's Property Act, 1874) பிரிவு 6-ல் உள்ள காப்புவாசகங்களின்படி, காப்பீட்டுத் திட்டாவணம் மனை வியினுடை நன்மைக்காக எடுக்கப்பட்டிருந்தால் சட்டப்படியான பொறுப்புரிமை (Statutory Trust) ஏற்படுத்தப்படுகின்றது என்

பது குறிப்பிடப்படவேண்டியதாகும். குறிப்பிட்டுச் சொல்லுகின்ற வார்த்தைகள் ஏதும் தேவையில்லை; காப்பீட்டுத் திட்டாவணம் மனைவியினுடைய நன்மைக்காக எடுக்கப்பட்டுள்ளது என்பதற் கான எண்ணத்தைத் தெளிவாக ஆக்குகின்ற வார்த்தைகளின் தொகுதி போதுமானதாகும். இத்தகைய ஒரு பொறுப்புரிமை இருக்கின்றபொழுது, உரிமை மாற்றத்திற்கு மனைவியினுடைய கையொப்பம் பெற்றிருந்தபோதிலுங்கூட, காப்பீட்டுத் திட்டா வணத்தைப் பிணையமாக ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது விரும் பத்தக்கதாகும். நியமனம் (Nomination) ஓர் உரிமை மாற்றமாக ஆகாது; காப்பீடு பெற்றவர் அவர் விரும்புகின்ற எந்த முறை யிலும் காப்பீட்டுத் திட்டாவணத்துடன் நடவடிக்கையில் ஈடுபட லாம். காப்பீட்டுச் சட்டத்தின் 39ஆவது பிரிவின்கீழ், நியமனம் காப்பீடு பெற்றவருடைய மரணத்திற்குப் பின்னர் மட்டுமே செயல் படுகின்றது; அவ்வாறிருப்பதால், வங்கிக்குச் சாதகமான ஓர் உரிமை மாற்றலுக்கு நியமனம் பெற்றவருடைய கையொப்பத்தைப் பெறவேண்டியது அவசியமில்லை.

நிறுமத்திற்கு அறிவிக்கை (Notice to the company): உரிமை மாற்றம் நிறைவேற்றப்பட்டவுடன், உரிமை மாற்றம்பற்றிய அறி விக்கையினை வங்கியர், நிறுமத்திற்குக் கொடுக்கவேண்டும். பொதுவாக, அறிவிக்கை இரண்டு படிகளில் (in duplicate) கொடுக்கப்படுகின்றது. காப்பீட்டுத் திட்டாவணத்தின்மீது ஏற் கெனவே பொருட்பிணைப் பொறுப்புகள் ஏதாவது இருக்கின்ற னவா, முந்தைய உரிமை மாற்றம் ஏதாவது உள்ளதா என்பது பற்றிச் செய்தி கொடுக்கும்படி நிறுமம் கேட்டுக் கொள்ளப்பட வேண்டும்.

இரண்டாவது அடைமானம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொழுது (When a second charge is created): பிணையமாக அவரிடம் வைப்புச் செய்யப்பட்டுள்ள காப்பீட்டுத் திட்டாவணத் தின்மீதான ஓர் இரண்டாவது பிணையம்பற்றிய அறிவிக்கை யினைப் பெற்றுக் கொண்டவுடன், காப்பீட்டுத் திட்டாவணத்திற்கு எதிராக அவர் அளித்துள்ள கடன் தொகை அல்லது மேல்வரைப் பற்று, முதலாவது பிணையத்தொகையின் அளவிற்கு மட்டுப் படுத்தப்பட்டுள்ளதா அல்லது அவர் அதிகப்படியான பிணை யம் எதனையும் தேவையுள்ளவராக இருப்பாரா என்பதை வங்கியர் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். இத்தகைய ஒரு தறுவாயில், அவரால் அளிக்கப்பட்ட கடன் திருப்பிச் செலுத்தப் பட்டுவிட்டால், அவர் காப்பீட்டுத் திட்டாவணத்தைக் கடன் வாங்கியவருக்கு மறு உரிமை மாற்றம் செய்து கொடுக்கக்கூடாது;

ஆனால், இரண்டாவது அடைமானத்தைப் பெற்றுள்ள நபருக்காக அதனைப் பொறுப்புரிமையில் (trust) வைத்திருக்கவேண்டும், அல்லது அந்த நபருக்குச் சாதகமாக மறு உரிமை மாற்றத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் (பின்னிணைப்பு 'ஆ'—படிவம் எண் 31 (அ) பார்க்கவும்).

பிணையங்களை விடுவித்தல்
(Release of the Securities)

கடன் திரும்பச் செலுத்தப்படுவதன்மூலம் (On Repayment of the Advance): பிணையங்களை விடுவிப்பதற்கு முன்னர், மற்றொரு வாடிக்கையாளரின் கணக்குக்கு, இந்த வாடிக்கையாளர் கொடுத்துள்ள பொறுப்புறுதி தொடர்பாகத் தமக்கு வரவேண்டியுள்ள பொறுப்புகள் ஏதும் உள்ளனவா என்று வங்கியர் பார்க்க வேண்டும்; மற்றும், மறு உரிமை மாற்றத்தின் படிவம் (form) பிணையப்பாரத்தின் பின்புறத்தில் நிறைவேற்றப்படவேண்டும். பிணையத்தை விடுவித்தபின்னர், காப்பீட்டுத் திட்டாவணத்தின் மீது மேற்கொண்டு உரிமை எதனையும் தாம் கொண்டிருக்கவில்லையென்று, வங்கியர், காப்பீட்டு நிறுமத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய முதிர்வின்போது அல்லது கோருரிமை ஒன்று எழுகின்றபொழுது (At the Maturity of the Policy or on a claim arising): சாதாரணமாக, காப்பீட்டுத் திட்டாவணத்தினுடைய பணத்தை (முதிர்வு தேதியில்) வசூலிப்பது, வழக்கமாக வங்கியரால் செய்யப்படுகின்றது. அவருடைய முதல் வேலை, தம்முடைய பிணையத்தின் பாரத்தைக் காப்பீட்டு நிறுமத்திற்கு அனுப்பி, அது தொடர்பாகத் தாம் செய்யவேண்டியவைகள் யாவை என்பதைக் கூறும்படி அதனைக் கேட்டுக்கொள்வதாகும். காப்பீட்டுத் திட்டாவணம், இரசீது, சான்றிதழ் மற்றும் பிணையப் பத்திரம் (Form of charge) ஆகியவைகளைக் கொடுத்த தன்பேரில், காப்பீட்டு நிறுமம், செலுத்த வேண்டிய தொகையைக் கொடுக்கும்; யாருடைய ஆயுள் காப்பீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த நபருடைய மரணத்தின்பேரில் கோருரிமை எழுந்தால், அத் தறுவாயில், மரணச் சான்றிதழோடு சேர்த்து மறு உரிமை மாற்றம் செய்யப்படவேண்டுமென்பதை நிறுமம் கோராது. வாடிக்கையாளருக்கு அல்லது அவருடைய தனிப்பட்ட சார்பாளர்களுக்கு தம்முடைய கைகளிலுள்ள எச்சத்தொகையைக் (surplus) கொடு

ப்பதற்கு முன்னர், வங்கிக்கு வரவேண்டியுள்ள பொறுப்புகள் (liabilities) ஏதும் இல்லையென்றும், மற்றும் இரண்டாவது அடைமானம் ஒன்றினைப் பற்றிய அறிவிக்கை எதனையும் வங்கி பெறவில்லையென்றுங்கூட வங்கியர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தொழில் காப்பீட்டுத் திட்டாவணங்கள் (Industrial Policies): இத்தகைய காப்பீட்டுத் திட்டாவணங்கள் நல்ல பிணையங்களா கக் கருதப்படுவதில்லை. இந்தக் காப்பீட்டுத் திட்டாவணங்கள் இங்கிலாந்தில் (U.K.) சாதாரணமாக வழக்கிலுள்ளவையாகும்; அவை வேலை கொடுப்பவர்களால் (Employers), தொழிற்சாலை யின் வேலையாள்களுடைய ஆயுள்களின்மீது எடுக்கப்படுகின்றன. வழக்கமாக, அவை, சிறிய தொகைகளுக்கானவையாகும்; காப் பீட்டுக் கட்டணம் வாரத்திற்கொருமுறையோ, மாதத்திற்கொரு முறையோ செலுத்தப்படவேண்டியதாக இருக்கும். இவ்வாறு, காப்பீட்டுக் கட்டணங்கள் ஒழுங்காகச் செலுத்தப்படுகின்றனவா என்பதை எப்போதும் உறுதிப்படுத்திக் கொண்டிருப்பது வங்கிக் குத் தொந்தரவு தருகின்ற ஒரு வேலையாகும். தொழில் காப் பீட்டுத் திட்டாவணங்களின் விடயத்திலுள்ள மற்றொரு இடர்ப் பாடு, முன்னரே குறிப்பிடப்பட்டதுபோல, காப்பீட்டு நிறுமத்தினு டைய ஒப்புதலைப் பெற்றாலன்றி, அவைகளை உரிமை மாற்றிக் கொடுக்கமுடியாது. இத்தகைய ஒப்புதல் எதிர்பார்க்கின்றபடியே கொடுக்கப்படுகின்றது என்றபோதிலும், வங்கியரின் நோக்குக் கோணத்திலிருந்து, இந்தத் தொந்தரவெல்லாம் ஏற்றுக் கொள்ளு மளவுக்குப் பயனுள்ளவையல்ல. தொழில் காப்பீடுகளிலுள்ள மற் றொரு குறைபாடு, சில தறுவாய்களில், அவை தங்களின் மதிப் பில் பெருமளவு தேய்மானமடைகின்றன.

வங்கியர்களின் பிணையமாக வாடிக்கையாளர்களின் ஏட்டுக் கடன்கள்

(Customer's Book Debits as Banker's Security)

ஏட்டுக் கடன்களைப் பிணையமாக மதித்தல் (Rating of Book Debits as Security); சில வேளைகளில் தங்களுடைய வாடிக் கையாளர்களுக்கு அளிக்கப்படுகின்ற வங்கியர்களின் கடன்கள் வாடிக்கையாளர்களுக்கு வரவேண்டியுள்ள, அல்லது கூடிக் கொண்டேபோய்க்கொண்டு (accuring) வரவேண்டியதாக உள்ள கடன்களை, உரிமை மாற்றிக் கொடுப்பதன்மூலம் உத்தரவாதம் செய்யப்படுகின்றன. உரிமை மாற்றிக் கொடுத்தவர், ஒரு குறிப் பிட்ட நபருக்கு விற்கப்பட்ட சரக்குகளுக்கு அல்லது செய்யப்

பட்ட பணிகளுக்கு உரிய பணத்தைப் பெறவேண்டியவராக இருக்கலாம் அல்லது பணம் அவருக்கு ஓர் உயில் (Will) மூலமாக வரவேண்டியதாக இருக்கலாம். இத்தகைய நடவடிக்கைகள் பல இடர்வாய்ப்புகளைக் கொண்டுள்ளபடியால், ஏட்டுக் கடன்களின் பிணையத்திற்கெதிராகக் கடன்களை அளிப்பது வங்கியர்களுக்கு வழக்கமில்லை. மேலும், கடன் வசூல் செய்பவர்களுடைய நிலையில் தாங்கள் வைக்கப்படுவதை வங்கியர் விரும்புவதில்லை. கடனை உரிமை மாற்றித் தருகின்ற செயல், (அவ்வாறு மாற்றித்தருபவரிடம்) பணம் இல்லை என்ற நிலையை நன்கு வெளிப்படுத்துகின்றது. இருந்தபோதிலும், கோருரிமையினுடைய சட்டப்படியான செல்தகு தன்மை, பணம் கொடுக்கவேண்டியுள்ள ஆளின் செல்லும் புள்ளித்தன்மை ஆகிய இரண்டையும்பற்றி வங்கியர் நிறைவடைந்துவிட்டால், அவர் வியாபாரக் கடன்களை (trade debits) குறிப்பாக, ஒரு நிறுமம் சம்பந்தப்பட்டவரையில் ஒரு கடனீட்டுப் பத்திரத்தின் மூலமாக, ஒரு கடனுக்குப் பிணையமாக அவைகளின்மீது பொதுவான ஓர் அடைமானத்தை ஏற்படுத்தி ஏற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில், ஓர் உயிலின் மூலமான மரபுரிமைச் சொத்து (legacy under a will) அல்லது ஒரு பொறுப்புரிமையில் உள்ள உரிமை (Interest in trust) போன்ற தனிச்சிறப்பான நிதியிலிருந்து செலுத்தப்படவேண்டிய பணங்களின் ஓர் உரிமை மாற்றத்தினையும் ஏற்றுக்கொள்கின்றனர். முதலாவது பெரிய போர்க் (First Great War) காலத்தில், அரசு ஒப்பந்தங்களின் மூலமாக வரவேண்டியிருந்த செலுத்துகைகளுக்கெதிராக, வங்கிகள், தடையேதுமின்றி கடன் வழங்கின என்பது தெரியவருகின்றது. அதே நடைமுறை இரண்டாவது பெரிய போர்க்காலத்திலும் சிறந்த ஒன்றாக இருந்தது. இந்தப் பிணையத்தினுடைய கீழ்க்காணும் சிறப்புக்கூறுகள் வங்கியர்க்குப் பயனுடையதாக இருக்கும்.

ஏட்டுக் கடன்களின் உரிமை மாற்றம் நியாயப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டது (Assignment of Book Debits recognised by Equity): வியாபார வழக்காற்றுச் சட்டத்தினுடைய (Law Merchant) வழக்கங்கள் ஒரு புறமிருக்க, பொதுச்சட்டமும் (Common Law), இன்னும், உரிமைமாற்றிக் கொடுத்தவரைப் பொறுத்தவரையில், நிறைவேற்றப்பட வேண்டியதாக (executory) உள்ள ஓர் ஒப்பந்தத்தினுடைய பயனை மாற்றல் செய்வதை, அல்லது அதிலிருந்து எழுகின்ற செயல்உரிமைகளை, அங்கீகரிக்கவில்லையாதலால் உரிமை மாற்றிப் பெற்றவர், அதன்பேரில், தம்முடைய சொந்தப் பெயரில் வழக்குத் தொடர்வதற்கு முடியாத நிலையில் இருந்தார்; இதற்காக, உரிமை மாற்றிக் கொடுத்தவரு

டைய பெயரை அவர் பயன்படுத்திக் கொண்டு வந்தார். சில வேளைகளில், பொதுச் சொத்தினுடைய விதி (The Common Law Rule), "ஒரு வழக்குரிமைச் சொத்து மாற்றுமுறைத் தன்மையைக் கொண்டதன்று" (A chose in Action is not Negotiable) என்ற கருத்தின் மூலம் விளக்கிக் கூறப்படுகின்றது. அதனை உரிமை மாற்றிப் பெற்றவர், பகரமாக்கப்பட்ட ஓர் உடன்படிக்கையின்மூலம் (Substituted Agreement) வழக்குரிமைகளைப் (Rights of Action) பெறவேண்டியிருந்தது. இவ்வாறு, "ஆ" என்பவரிடமிருந்து தமக்கு வரவேண்டிய கடன் தொகையை, "அ"-என்பவர், "இ" என்பவருக்கு மாற்றிக் கொடுப்பதற்கு விரும்பினார் என்றால், "அ"-வுக்கும், "ஆ"-வுக்கும் இடையேயான ஒப்பந்தத்தை, தொகையை "இ"-க்குக் கொடுப்பதற்கு "ஆ" பொறுப்பேற்றுக் கொள்கின்ற ஒரு புதிய ஒப்பந்தத்தினால் பகரமாக்கப்படவேண்டியது அவசியமாக இருந்தது. இருந்தபோதிலும், முடிவுசெய்யப்பட்ட (definite) தொகைகளிலான பணம் தொடர்பாக இருந்த இத்தகைய உரிமைகளை மாற்றித் தருவதற்கு நியாயம் (Equity) இணக்கமளித்தது.

அரசு சட்டத்தின்மூலம் உரிமை மாற்றம் அங்கீகரிக்கப்படுதல் (Recognition of Assignment by Statute Law): 1873ஆம் ஆண்டின் வழக்குத் துறைச் சட்டத்தின் (36 & 37 விக்., C. 66) 25ஆவது பிரிவு, [Sec. 25 of the Judicature Act, 1873 (36 & 37 Vict., C. 66)] ஏட்டுக் கடன்கள் உட்பட, ஒரு வழக்குரிமைச் சொத்தினுடைய (chose in action) மாற்றலைச் சட்டப்படியானதாக ஆக்கிற்று. அது, ஒரு மாற்றம் அல்லது உரிமை மாற்றம், எழுத்து மூலமாக, உரிமை மாற்றிக் கொடுப்பவருடைய கைப்படச் செய்யப்பட்டு, அது தொடர்பாக வெளிப்படையான ஓர் அறிவிக்கை எழுத்துமூலம் கடனாளிக்குக் கொடுக்கப்பட்டால், மாற்றம், சட்டத்திலுங்கூட, கடனைப் பெறுவதற்கான உரிமையை, அல்லது அது அழைக்கப்படுவதுபோல "வழக்குரிமைச் சொத்தினை"ப் பெறுவதற்கான உரிமையை உரிமை மாற்றிப் பெற்றவருக்கு மாற்றிக் கொடுத்தது என்று அறிவித்தது. மாற்றம் அறிவிக்கையினுடைய தேதியிலிருந்து செயல்படத் தொடங்கியது, மற்றும், அது கடனாளிக்கு எதிராக உரிமை மாற்றிக் கொடுத்தவருக்குள்ள, சட்டப்படியான எல்லா உரிமைகளையும் பரிகாரங்களையும் (remedies) உரிமை மாற்றிப் பெற்றவருக்கு அளித்தது. இங்கிலாந்தில், 1925ஆம் ஆண்டின் சொத்துச் சட்டத்தின் (15 ஜியோ, 5, C. 20) படி [Property Act of 1925 (15 Geo. 5, C. 20)] இப்பொழுது நிலை திருத்தம் செய்யப்பட்டுள்ளது: இச் சட்டம், அறிவிக்கையின் தேதியிலிருந்து என்பதனை மாற்றி, அது நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து மாற்றம் செயலுக்கு வரும் என்று ஆக்குகின்றது.

இந்தியச் சட்டம் (Indian Law): இந்தியாவில் "சட்டப்படி வழக்குரிமை கொள்ளக் கூடிய கோருரிமைகள்" (actionable claims) என்றழைக்கப்படும், "வழக்குரிமைச் சொத்துகள்" (choses in action), ஒரு நீதிபதி, ஒரு வழக்குரைஞர், அல்லது நீதிமன்றத்தினுடைய ஓர் அதிகாரி ஆகியோரைத் தவிர, வேறு யாருக்காவது உரிமை மாற்றிக் கொடுக்கப்படுவது சட்டப்படியானதாகும். (1882ஆம் ஆண்டின் சொத்துரிமை மாற்றல் சட்டம், பிரிவுகள் 130 மற்றும் 136) (Sections 130 and 136 of the Transfer of Property Act, 1882).

ஓர் உரிமை மாற்றலின் படிவம் (Form of an Assignment): சட்டப்படி வழக்குரிமை கொள்ளக்கூடிய கோருரிமை ஒன்றினை (an actionable claim) மாற்றிக் கொடுப்பது தொடர்பாகக் கீழ்க் காணும் கருத்துகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். ஓர் உரிமை மாற்றம், உரிமை மாற்றிக் கொடுப்பவரால், கையொப்பமிடப்பட்டு எழுத்து மூலமானதாக இருக்கவேண்டும். உரிமை மாற்றிக் கொடுப்பதன் மூலம், உரிமை மாற்றிக் கொடுப்பவருடைய உரிமையை, மாற்றிப் பெறுபவருக்கு, மாற்றிக் கொடுக்கப் போவதான எண்ணம் தெளிவாக இருக்குமானால், எந்த ஒரு குறிப்பிட்ட படிவமும் தேவையில்லை. ஓர் உரிமைமாற்றம், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட கடனை, உரிமை மாற்றிப் பெற்றவருக்குச் செலுத்தும்படி அவருக்கு அதிகாரமளித்து, கடனாளிக்கு எழுதப்பட்ட ஓர் ஆணையின் வடிவத்திலும் இருக்கலாம்; ஆனால், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட கடன், ஒரு கடனுறுதிச்சீட்டு (Promissory Note) அல்லது ஒரு பிணைமுறி (bond) ஆகியவைகளால் உத்தரவாதம் செய்யப்பட்டதாக இருந்தால், (உரிமை மாற்றிக் கொடுப்பதற்கான) வாசகங்கள் கடனுறுதிச்சீட்டு அல்லது பிணைமுறியின் மேலேயே இருக்கவேண்டும்.

கைம்மாறு அவசியமில்லை (Consideration Not Essential): தானமளிப்பதன் மூலமாக ஏற்படுத்தக்கூடிய உரிமை மாற்றத்தினைச் செல்லுபடியாகக் கூடியதாகச் செய்வதற்குக் கைம்மாறு இருக்கவேண்டியது அவசியமில்லை. அந்த மூன்றாம் நபருக்கும் (Third Party) முதன்மைக் கடனாளருக்குமிடையேயான உரிமை மாற்றலுக்குக் கைம்மாறு இருந்திருந்தாலும் இருந்திருக்காவிட்டாலும், அதனைக் கருத்திற்கொள்ளாது, அவருடைய கடனாளரிடமிருந்து பெறப்பட்ட கட்டளையின்பேரில் ஒரு மூன்றாம் நபருக்குக் கடனைச் செலுத்தியதன் மூலம் சட்டப்படியாக (பொறுப்பிலிருந்து) விடுவிக்கப்படுவதற்குக் கடனாளி ஒருவர் உரிமை பெற்றிருக்கிறார்.

கடனாளிக்கு உரிமை மாற்றல்பற்றிய அறிவிக்கை கொடுக்க வேண்டியது அவசியம் (Notice of Assignment to the Debtor Necessary): கடனாளியை, உரிமை மாற்றிப் பெறுபவருக்குப் பொறுப்பாளியாக ஆக்கவேண்டுமானால், உரிமை மாற்றம்பற்றிய தகுந்த அறிவிக்கை அவருக்குக் (கடனாளிக்கு) கொடுக்கப்பட வேண்டியது அவசியம் (1882ஆம் ஆண்டின் சொத்து மாற்றல் சட்டம், பிரிவு 130 மற்றும் 136). அவரிடமிருந்து வரவேண்டிய கடனை, உரிமை மாற்றிப் பெற்றவருக்கு அவர் செலுத்துவார் என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு, முதன்மைக் கடனாளி உரிமை மாற்றத்தைப்பற்றித் தெரியப்படுத்தவேண்டும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. தொகையை, உரிமை மாற்றிக் கொடுத்தவருக்குச் செலுத்துவதிலிருந்து தடுக்கும்பொருட்டு, உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டதென்று கடனாளி தெரியப்படுத்தவேண்டியது, உரிமை மாற்றிப் பெற்றவரின் நலனுக்காகவுங்கூடத் தேவையாக உள்ளது. இருந்தபோதிலும், உரிமை மாற்றத்தினுடைய செல்லுபடிதன்மை (validity) உரிய அறிவிக்கை கொடுக்கப்பட்டதா, இல்லையா என்பதைப் பொறுத்து இருப்பதில்லை. ஆனால், பாதுகாப்பானதாக இருக்கும்பொருட்டு, ஏட்டுக் கடன்களுக்கெதிராகக் கடன் வழங்குகின்ற வங்கியர், வாடிக்கையாளரிடமிருந்து, உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட கடன் அல்லது கடன்கள் தொடர்பாக அவர் (வாடிக்கையாளர்) பெறக்கூடிய தொகை அல்லது தொகைகளை வங்கியருக்குக் கொடுத்துவிடுவார் என்ற உறுதிமொழியினைப் பெறவேண்டுமென்பது விரும்பத்தக்கதாகும்.

உரிமை மாற்றிப் பெற்றவருடைய உரிமை நியாயத்திற்கு உட்பட்டது (Assignee's Right Subject to Equity): இறுதியாக, உரிமை மாற்றிப் பெற்றவர் உரிமையை மாற்றிக் கொடுத்தவருடைய உரிமைகளை மட்டுமே பெற்றிருக்கமுடியுமன்றி, உரிமையை மாற்றிக் கொடுத்தவர் பெற்றுள்ளதைக் காட்டிலும் சிறந்த உரிமைகளைப் பெறமுடியாது என்று குறிப்பிடவேண்டியது அவசியமாகும். எடுத்துக்காட்டாக, கடனாளி, உரிமை மாற்றிக் கொடுத்தவருக்கெதிராக (அதாவது கடனாளருக்கெதிராக) ஓர் எதிர் கோருரிமையை (counter-claim) கொண்டிருந்தாரெனில், இது பற்றி உரிமை மாற்றிப் பெற்றவர் தகவலேதும் கொண்டிருக்கவில்லை அல்லது உரிமை மாற்றிக் கொடுத்தவர், உரிமை மாற்ற உடன்பாட்டில், உரிமை மாற்றிப் பெற்றவருக்கு எதிராக எந்தக் கோருரிமையையும் எழுப்பமுடியாது என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார் என்றபோதிலுங்கூட, உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகையைப் பெறுவதற்கான உரிமை, இத்தகைய கோருரிமைக்கு உட்பட்டதேயாகும் (1882ஆம் ஆண்டின்

சொத்து மாற்றல் சட்டம், பிரிவு-132). அதேபோல, நொடிப்பு நிலையை அடைந்துவிட்ட ஒருவருடைய பொறுப்புரிமையருக்கு (Trustee in Bankruptcy) எதிராக, நொடிப்பு நிலை ஆரம்பமாகின்றபொழுது செலுத்தப்படாமல் உள்ள ஏட்டுக் கடன்களைப் பொறுத்தமட்டிலும் அது ஒரு விற்பனைச் சீட்டாகப் (bill of sale) பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி, ஒரு நபர் ஏட்டுக் கடன்களை உரிமை மாற்றிக் கொடுப்பது, பொதுவாக, இல்லா நிலையது என்று ஆகிவிடும் (void).

வங்கியர்களின் பிணையமாக கடனீட்டுப் பத்திரங்கள்

(Debentures as Bankers' Security)

விளக்கம் (Definition): ஆர். எஸ். டி. சோர்லே, அவருடைய "வங்கியியல் சட்டம்" என்னும் நூலின் 274ஆவது பக்கத்தில் (R. S. T. Chorley Law of Banking, P. 274) கொடுத்துள்ள விளக்கத்தின்படி, "வட்டியுடன் (வழக்கமாக, நிர்ணயம் செய்யப்பட்ட) பின்வரும் ஒரு தேதியில் திருப்பிச் செலுத்துவதாக அது உறுதியளிக்கின்ற பணத்தைப் பெற்றுக் கொண்டதாக, ஒரு வரையறுத்த நிறுமம், ஒப்புதல் அளித்து, தன்னுடைய கடன்களுக்குப் பிணையமாகத் தன் சொத்துகளை அடைமானமாக, அல்லது பொருட்பிணைப் பொறுப்பாக, ஆக்கிக்கொடுக்கின்ற ஆவணத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயரே கடனீட்டுப் பத்திரமாகும்". ஒரு மன்றம் (club) அல்லது ஒரு சங்கம் (association) போன்ற பதிவு பெறாத அமைப்புக்களுங்கூட இத்தகைய ஒரு பிணையத்தை (பின்னிணைப்பு-"ஆ" படிவம் எண்-3 பார்க்கவும்) விடுக்கலாமெனினும், ஒரு கடனீட்டுப் பத்திரம், பொதுவாக, பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுமத்தினால் மட்டும்தான் விடுக்கப்படுகின்றது.

ஒரு கடனீட்டுப் பத்திரத்தின் முக்கிய சரத்து (Main clause of a Debenture) : மீட்பு செய்யப்பட முடியாத (irredeemable) ஒன்றாக அது ஆக்கப்பட்டிருந்தாலன்றி, கடனீட்டுப் பத்திரம், அதனுடைய பிணையத்தின்பேரில் பெறப்பட்ட பணம் செலுத்தப்படுவதற்கான தேதியைக் குறிப்பிடவேண்டும். வட்டி செலுத்தப்படுவதற்காகவுங்கூட, அது காப்பு வாசகங்களைக் கொண்டிருக்க வேண்டும். அது அவ்வாறு கொடுக்கவேண்டுமென்பது இன்றியமையாதது அன்று எனினும், ஆவணம், பொதுவாக, ஒரு பொருட்பிணைப் பொறுப்பினைக் (charge) கொடுக்கின்றது.

பொதுவாக (General): ஒரு நிறுமத்தால் விடுக்கப்படும் கடனீட்டுப் பத்திரம் ஒன்றின் விடயத்தில், கடனீட்டுப் பத்திரம் விடுக்கப்படுவதற்கு (நிறுமத்திற்கு) அதிகாரமளிக்கும் தீர்மானத்தைப் பார்வையிடல் வேண்டும். அது வங்கி, அல்லது வங்கியின் சார்பில் பொறுப்புரிமையில் வைத்திருக்கக்கூடிய, அதனுடைய நியமனம் பெற்ற ஒருவர், ஆகியவர்களில் யாருக்காவது ஒருவருக்குச் சாதகமாக எழுதப்படலாம், அல்லது அது வேற்று ஆவணமாகவும் (in blank) இருக்கலாம். வெற்று ஆவணமாக இருப்பின், அதனைக் கொணர்பவருக்குச் செலுத்தக்கூடியதாக அது ஆகின்றது. கடனீட்டுப் பத்திரம் முடிவானதாகக் (definite) குறிப்பிடப்பட்ட ஒரு தொகைக்கானதாக இருக்கலாம்; அல்லது வருங் காலத்தில் கொடுக்கப்படக்கூடிய கடன்கள் உட்பட, ஒரு கடனின் பாக்கித் தொகையை உத்தரவாதம் செய்வதாக இருக்கலாம். ஒரு கடனீட்டுப் பத்திரம் முடிவான ஒரு தொகைக்கு விடுக்கப்பட்டிருக்கும்பொழுது, அதனுடைய தொகை முடிவான ஒன்றாக ஆக்கப்படாதபோது இருப்பதைவிட, மிக எளிதில் விற்கப்பட்டுவிடலாம். கடனீட்டுப் பத்திரம், பொதுவாக, கேட்டவுடன் செலுத்தப்படக்கூடியது என்று சொல்லப்படுகின்றது; மற்றும், முடிவு செய்யப்பட்ட (definite) ஒரு வட்டி வீதத்திற்கு, அல்லது, காலண்டு அல்லது அரையாண்டுக்கொருமுறை கொடுக்கப்படவேண்டிய ஒரு குறைந்த அளவு வட்டியோடு, ஏறி இறங்கக்கூடிய ஒரு வட்டி வீதத்திற்கு ஒரு காப்புவாசகத்தைக் (Provision) கொண்டிருக்கலாம். வழக்கமாக, கடனீட்டுப் பத்திரத்தை விடுக்கின்ற நிறுமம், தன்னுடைய தற்போதைய மற்றும் வருங் காலத்திய தொழில், சொத்து ஆகியவைகளைப் பொருட்பிணைப் பொறுப்பாக (charge) ஆக்குகின்றது.

நிலையான மற்றும் இழையுறு பொருட்பிணைப் பொறுப்புகளுக்குக் காப்புவாசகம் (Provision for Fixed and Floating Charges): மற்ற நிபந்தனைகளோடு சேர்த்து, நிறுமத்தினுடைய தொழில் மற்றும் சொத்துகளை, கடனீட்டுப் பத்திரத்திற்கு எதிரான முதலாவது பொருட்பிணைப் பொறுப்பாக (first charge) ஆக்குகின்ற, மற்றும் அங்கு விவரித்துக் கூறப்பட்டுள்ள, குறிப்பிட்ட சொத்தின்மீது, ஒரு நிலையான பொருட்பிணைப் பொறுப்பிணை (fixed charge) ஏற்படுத்துகின்ற காப்புவாசகம் (கடனீட்டுப் பத்திரத்தில்) உள்ளது. கடனீட்டுப் பத்திரம், அதற்குச் சமமாக, அல்லது அதற்கு முன்னதாக உரிமை பெறக்கூடிய எந்த அடைமானத்தையும் அல்லது பொருட்பிணைப் பொறுப்பினையும் மேற்கொண்டு தன்னுடைய தொழிற், அல்லது சொத்தின்மீது ஏற்படுத்துவதில்லை என்று நிறுமத்தால் ஏற்படுத்தப்பட்ட

உடன்பாட்டினையும் (covenant) கொண்டுள்ளது. கடனீட்டுப் பத்திரத்தை வைத்திருப்பவரின் எழுத்துமூலமான ஒரு வேண்டு கோள் (demand), அது திரும்பச் செலுத்தப்படுவதற்கான நிபந் தனைகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில், பீப்பிள்ஸ் பாங்க் ஆப் நார்தர்ன் இந்தியா லிட்., லாகூர் எதி. லக்னோ சுகர் ஒர்க்ஸ் லிட். (கலைப் பில் உள்ளது (இ. லா. ரி. 12 லக்னோ 283; ஆ. இ. ரி. 1936 அவுத் 338) [People Bank of Northern India Ltd; Lahore v. Lacknow Sugar Works Ltd. (in liquidation) (I.L.R. 12 Lucknow 283; A.I.R. 1936 Oudh 338)] என்ற வழக்கின் தீர்ப்பு மேற் கோளாகக் காட்டப்படலாம். இவ்வழக்கில், முறையீட்டு வழக்கு வாதியான (appellant) வங்கி, கடனீட்டுப் பத்திரம் கணக்கில் பிணையமாகக் கொடுக்கப்பட்டிருந்த சொத்தினுடைய பிணையம், பிரதிவாதி நிறுமம் கலைப்புக்குச் சென்றவுடனேயே தீர்மானமான ஒன்றாக ஆகிவிட்டது (crystallised) என்ற அடிப்படையில், பயனடை உரிமையையும் (usufruct) கோரியது; ஆனால், கட னீட்டுப் பத்திரத்தை வைத்திருப்பவர் என்ற முறையில், முறை யீட்டு வழக்கு வாதியான வங்கியின் பிணையம், அது இழையுறு (floating) பிணையமாக இருந்தாலும்சரி, அல்லது குறிப்பிட்ட சொத்தின் மீதான நிலையான பிணையமாக இருந்தாலும் சரி, சொத்திற்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தது, சொத்தினுடைய உபயோக உரிமைக்கு நீட்டிக்கப்படவில்லை என்று தீர்ப்பளிக் கப்பட்டது.

பிணையத்தைச் செயல்படுத்துதல் (Enforcement of the Security): கடனீட்டுப் பத்திரத்திலுள்ள வேறு சில முக்கிய சரத்துகள் (clauses), கடனீட்டுப் பத்திரத்தை வைத்திருப்பவரு டைய பொறுப்புரிமையருக்கு அளிக்கப்பட்டுள்ள, குறிப்பிட்டு அடைமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துகள் தொடர்பாக, விற் பனை செய்வதற்கான உரிமையை, அடைமானம் பெற்றவர் என்ற முறையில், பயன்படுத்தமட்டுமன்றி, ஒரு சொத்தாட்சி அதிகாரியை நியமனம் செய்வதன்மூலமும், பிணையத்தைச் செயல்படுத்துவ தற்கு ஒரு வங்கிக்கு உள்ள உரிமைகளோடு தொடர்பு கொண் டுள்ள சரத்துகளாகும். நிறுமம் தன்னுடைய எளிவரல் சொத் துகளை வீணான செலவுகளில் சிதறடித்துக்கொண்டிருக்கும் பொழுது, இரண்டாவது சொல்லப்பட்ட வழிமுறை மிகவும் முக் கியமானதாகும்; இதனைத் தடுக்கப் பொறுப்புரிமையர் (trustees) விரைவாகச் செயல்படவேண்டும். கடனீட்டுப் பத்திரம் கேட்ட வுடன் செலுத்தப்படவேண்டியதாக இருந்தால், நிறுமத்தினுடை

கலைப்பிற்காக ஒரு மனுவை முன்னிடல் (presentation) அல்லது கடனுக்காகச் சொத்தினை உடனடியாகக் கைப்பற்றுதல், அல்லது நிறுமத்தினுடைய ஏதாவது சொத்துகளின்மீது (உரிமையை) நிறைவேற்றுதல், அல்லது நிறுமம் அதனுடைய கடனாளர்களோடு ஏதாவது ஏற்பாட்டிற்கு அல்லது சமாதானத்திற்கு இறங்குதல், போன்ற இதர நிகழ்ச்சிகளைக் குறிப்பிடவேண்டியது அவசியமில்லை; வங்கிகள், வழக்கமாக, கேட்டவுடன் செலுத்தப்படக் கூடிய கடனீட்டுப் பத்திரங்களின் விடயத்திலுங்கூட இத்தகைய நிகழ்ச்சிகளை உடன்படிக்கையில் கொண்டுள்ளன.

சொத்தாட்சி அதிகாரியின் அதிகாரங்கள் பரந்த அளவில் இருக்கவேண்டும் (Receiver's Powers to be Extensive): சொத்தாட்சியதிகாரியின் அதிகாரங்கள், வருங்காலத்தில் தோன்றக் கூடிய பலவகையான சூழ்நிலைகளையும், எதிர்பாராத நிகழ்ச்சிகளையும் சந்திப்பதற்கு ஏற்றவகையில் இருக்கவேண்டியது விரும்பத்தக்கதாகும். மிகவும் முக்கியமான சில அதிகாரங்கள், தொழிலை மேலாண்மை செய்து நடத்திச் செல்வது, அதற்குத் தேவையான பணத்தை எழுப்புவது, கோருரிமைகளை ஒத்திசைவுக்குக் (compromise) கொண்டுவருவது, முகவர்கள், அதிகாரிகள், வாடகைக்குக் குடியிருப்போர் (tenants) ஆகியோரை நியமனம் செய்வது, மற்றும் சொத்துகளை விற்பனை செய்வது ஆகியவை தொடர்பாக அளிக்கப்பட்டவையாகும்.

வைப்புச் செய்ததற்கான நினைவுக் குறிப்பு (Memorandum of Deposit): குறிப்பிட்ட தொகைக்கான கடனீட்டுப் பத்திரம் ஒன்று, பொதுவாக, நிறுமத்திற்குப் பதிலாகச் செயல்பட, உரிய முறையில், அதிகாரமளிக்கப்பட்டுள்ள நிறுமத்தினுடைய ஓர் அதிகாரி அல்லது அதிகாரிகளால் கையொப்பமிடப்பட்ட ஒரு நினைவுக் குறிப்புடன் சேர்த்து வைப்புச் செய்யப்படுகின்றது. நினைவுக் குறிப்பினுடைய நோக்கம், முடிவான (definite) ஒரு தொகைக்கு விடுக்கப்படும் கடனீட்டுப் பத்திரத்தை, ஒரு மேல் வரைப்பற்று அல்லது ஒரு கடன் மூலமான மாறிக்கொண்டேயிருக்கக்கூடிய ஒரு கடனுக்கும் (பிணையம்) கிடைக்கும்படி செய்வதேயாகும்; அது (நினைவுக் குறிப்பு), கடனீட்டுப் பத்திரத்தை, வங்கியிலுள்ள நிறுமத்தினுடைய கணக்கோடு இணைக்கின்றது. இது, கடனீட்டுப் பத்திரம் ஒருபுறமிருக்க, மேல்வரைப்பற்றின்மீது நிறுமத்திற்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கு வங்கியருக்கு வசதியுளிக்கின்ற ஒரு விளைவைக் கொண்டுள்ளது.

வங்கிகளும் வாடகை கொள்முறை நிதியீடும் (Banks and Hire Purchase Finance)

சிறப்புப் பொருளில், ஒரு "வாடகை கொள்முறை" என்று அறியப்படும் நடவடிக்கைகளுக்கு நிதியளுக்குமாறு ஒரு வங்கியர் அடிக்கடி அணுகப்படுகின்றார். இத்தகைய ஒரு நடவடிக்கையில், வாடகைக்கு எடுப்பவர் எனப்படும் வாடிக்கையாளருக்கு, உரிமையாளர், பொருளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வாடகைக்குக் கொடுத்து, எல்லாத் தவணைகளும் செலுத்தப்பட்டவுடன் பொருளிலுள்ள உரிமையினை, வாடகைக்கு எடுத்தவருக்கு மாற்றிக் கொடுப்பதற்கு ஒப்புக்கொள்கிறார். திரு. மௌரிஸ் வியாஸ், க்யூ. சி. (இலண்டன் இன்ஸ்டிடியூட் ஆப் பாங்கர்ஸ் முன்னிலையில் 1956, மார்ச்சில் ஆற்றப்பட்ட வசந்தகால விரிவுரை) குறிப்பிட்டதுபோல, "அந்த வகையான ஒப்பந்தத்தினுடைய முக்கியச் சிறப்புக்கூறு யாதெனில், வாடிக்கையாளருக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பொருள்களை வாடகைக்குக் கொடுத்து, வாடகைக்கான எல்லாத் தவணைகளும் செலுத்தப்பட்டவுடன், அவருக்குச் சொத்தினை மாற்றிக் கொடுப்பதற்கு வியாபாரி உறுதியளித்தபோதிலும், வாடிக்கையாளர் அவரைப் பொறுத்தமட்டில், வாடகைக்குப் பொருளை எடுத்திருப்பதை அவர் விரும்புவதற்கும் அதிகமாகத் தொடர்வதற்குத் தம்மை உட்படுத்திக்கொள்வதில்லையாதலால் பொருள்களை வாங்குவதற்கான கடப்பாடு எதனையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வாறு செய்வதற்கான ஒரு விருப்புரிமையை (option) மட்டுமே அவர் கொண்டுள்ளார்." இவ்வாறு, வாடகைக் கொள்முறை என்பது (சாதாரண) விற்பனையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது ஆகும். விற்பனையில், விலை உடனே கொடுக்கப்பட்டாலும், அல்லது தவணைகளில் கொடுக்கப்பட்டாலும் பொருள்களிலுள்ள சொத்து வாங்கியவருக்கு உடனே போய்விடுகின்றது; வாடகை கொள்முறையில் வாடகைக்கு எடுத்தவரால் கடைசித் தவணை செலுத்தப்படும்வரை சொத்து உரிமையாளரிடமே (விற்றவரிடமே) உள்ளது. வாடகைக்கு எடுத்திருப்பதைத் தொடர்ந்து வைத்திருக்கின்ற காலத்தில், வாடகைக்கு எடுத்தவருக்கு, சொத்தின்மீது, விற்பனை செய்வதற்கான உரிமை கிடையாது; அவ்வாறு செய்வதற்கு அவர் முடிவெடுத்தால், வாடகைக்கு எடுத்தவர், வாடகைக்கு கொள்முதல் ஒப்பந்தத்தில் இது தொடர்பாக உள்ள காப்புவாசகங்களைப் பொறுத்து, பொருளை உரிமையாளருக்குத் திரும்பக் கொடுத்துவிட்டு வாடகைக்கு எடுத்ததை முடித்துக்கொள்ளலாம். இது, வாடகைக்கு எடுத்தவர், தம்முடைய உரிமைகளை, உரிமை மாற்றிக் கொடுக்கவேமுடியாது என்பதாகப் பொருளாகாது. ஆங்

கிலச் சட்டத்தின்படி, ஒரு வாடகை கொள்முறை உடன்பாட்டினுடைய பயன் (benefit) உரிமை மாற்றிக் கொடுக்கப்படக்கூடியது; ஆனால் உரிமை மாற்றிப் பெற்றவர், வாடகைக்கு எடுத்தவரைவிடச் சிறந்த உரிமையைப் பெறமுடியாது. இந்தியாவிலுங்கூட நிறைவேற்றப்படுவதற்காகவுள்ள (proposed) சட்டம், அவருடைய உரிமையை மாற்றிக் கொடுப்பதற்கான உரிமையை வாடகைக்கு எடுத்தவருக்கு அளிப்பதற்கு முயலுகின்றது. தவணை நாள்களில், தவணைகளைச் செலுத்துவதில் வாடகைக்கு எடுத்தவர் தவறுவதன்பேரில், அல்லது உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள ஒரு சில நிபந்தனைகளை முறிவு (breach) செய்வதன்பேரில் பொருளின் உடைமையைத் திரும்ப எடுத்துக் கொள்வதற்கான உரிமையை, உரிமையாளர் தம்மிடம் இருத்தி வைத்துக் கொள்கிறார். உரிமையாளருக்கும், வாடகைக்கு எடுத்தவருக்கும் இடையேயான விசித்திரமான இந்த உறவு, மற்றும் எடுத்தவருக்கு பொருளினுடைய சொத்தில் உரிமையில்லாமை, இத்தகைய நடவடிக்கைக்கு நிதி வசதியளிப்பதை, சற்று எச்சரிக்கையோடு செய்யவேண்டிய திட்டமாக ஆக்குகின்றது. இருந்தபோதிலும், இப்போது, பல பதிகங்களாக (decades), அத்துறையில் தன்ப்பயிற்சியடைந்துவரும் நிதி நிறுமங்கள், மற்றும் வங்கிகள் ஆகிய இரண்டினாலுமே, வாடகை கொள்முதலுக்கு, நிதிவசதியளிப்பது அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள் (U.S.A.), இங்கிலாந்து (U.K.) போன்ற முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் நன்கு சிறந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது; மற்றும் இத்தகைய நிதி வசதியளிப்பதில் அவைகளின் அனுபவம், பணம் செலுத்தத் தவறிய சந்தர்ப்பங்கள் ஒரு சதவீதத்திற்குங்கூட இல்லாமல் இருப்பதால், முற்றிலும் மகிழ்ச்சி தரக்கூடியதாக உள்ளது. இந்தியாவில் இத்துறை சற்றுப் புதிதான ஒன்றாகும்; மற்றும் வங்கிகள் தங்களுடைய கடன்களைப் பொதுவாக, வணிக ஊர்திகளின் (Commercial Vehicles) வாடகை கொள்முறைக்கு மட்டும் நிதியிடுவதற்கு வரையறைப் படுத்தியுள்ளன. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா சட்டம், வாடகை கொள்முறைக் கடனுக்கு வகை செய்யும் பொருட்டு, சிறப்பாகத் திருத்தம் செய்யப்பட்டது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். தனிப் பயிற்சியடைந்துள்ள ஒரு முகமையான (agency), தேசிய சிறு தொழில்கள் கூட்டுரு (National Small Industries Corporation), சிறிய அளவிலான தொழிற்சாலைகளுக்கு வாடகை கொள்முறையில் எந்திரங்களை அளித்து வருகின்றது. பொருள்களின் வாடகை கொள்முறை, மிகவும் சாதாரணமாக நடைபெறுகின்ற வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில், இத்தகைய நடவடிக்கைகள் தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. 1858ஆம் ஆண்டின் வாடகை கொள்முறைச் சட்டம், திருத்தம் செய்யப்பெற்று

1938ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இது இங்கிலாந்தில் வாடகை கொள்முறை ஒப்பந்தங்களை, பொதுவாக, ஒருங்கு படுத்துகின்றது. இந்தியாவில் இன்னும் வாடகை கொள்முறைத் தொழிலை ஒழுங்குப்படுத்துவதற்குத் தனிச்சட்டம் ஏதுமில்லை. சமீபத்தில்தான் சட்டக் குழு (Law Commission) நாடாளு மன்றத்திற்கு ஏறக்குறைய ஆங்கிலச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையிலமைந்த ஒரு "முன் மாதிரி மசோதா" வுடன் (Model Bill) சேர்த்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பித் துள்ளது.

வாடகை கொள்முறைக்கு வங்கி நிதி அளிக்கப்படுகின்ற தொழில்முறை (technique), எப்படிப்பார்த்தாலும், ஒரே மாதிரி யானதாக இல்லை. இங்கிலாந்தில், வங்கிகள், பொதுவாக, நிதி நிறுமங்களின் மூலமாக அவர்களுடைய தனிப்பட்ட ஆட்பிணை யத்தின் மீதாகவோ வாடகை கொள்முறை ஆவணங்களுக்கெதி ராகவோ மற்றும் அல்லது, பொதுவான சொத்துகளின்மீது பொதுப்பிணையத்தை ஏற்படுத்தியோ, அவைகளுக்குக் கடனளித் தல், முன்பணமளித்தல் ஆகியவைகளின் மூலம் வாடகை கொள் முறைக் கடனை அளித்துவந்தன. கடன் நெருக்கடி (credit squeeze) 1958, ஜூலையில் விலக்கப்பட்டதைத் தொடர்ந்து, வங்கிகள் வாடகை கொள்முறை நிதி நிறுமங்களில், வெவ்வேறு அளவுகளில், செல்வாக்குப் பெற்றுள்ளன. முன்னணியில் உள்ள ஐந்து வங்கிகளில் சில, இத்தகைய தொழில் அமைப்புகளில் எல்லாப் பங்குகளையும் பெற்றுள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடு களில் அத்தகைய மாற்றுச் சீட்டுகளுக்கு எதிராக மறுநிதியீட்டு (refinancing) வசதிகளை அவை (வங்கிகள்) அனுபவித்துக் கொண்டிருந்தபடியால், வங்கிகள் வாடகை கொள்முறை மாற்றுச் சீட்டுகளை (Hire Purchase Papers) தள்ளுபடி செய்வதற்கே முதன்மை விருப்பத்தைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவிலுள்ள வங்கிகள், வியாபாரிக்கு நேரடியாக நிதியளிக்கின்றன, அல்லது இங்கிலாந்திலுள்ள, அவைகளை ஒத்த நிறுவனங்களைப் பின்பற்றி, நிதி நிறுமங்களாகவோ, நிறுவனங்களாகவோ உள்ள நிதி இடை நிலையர்கள் (financing intermediaries) மூலமாக நிதியளிக்கின் றன. இத்தகைய நிதி முகமைகளின் (financing agencies) வளர்ச்சி காரணமாக, பிந்தைய முறை இப்போது மிகவும் அதி கமாக வழக்கத்தில் வந்துகொண்டிருக்கிறது. வாடகை கொள் முறை ஒப்பந்தம் நிதியளிப்போருக்கும், வாடகைக்கு எடுப்போருக் குமிடையே, வழக்கமாக, ஒரு பொறுப்புறுதியரோடு (guarantor) சேர்த்து ஏற்படுத்தப்படுகின்றது. வியாபாரி, நிதியளிப்பவரால் (financier) பணம் செலுத்தப்படுகிறார்; நிதியளிப்பவர், சாதாரண

மாக, வாடகை கொள்முறை உடன்படிக்கையின் பிணையத்திற்கு எதிராகவும், வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ள பொருள்களை அடைமானமாகக் கொடுத்தும், கடனளிக்கும் நிறுவனத்தால் வேண்டப் பட்டால் இதரத் துணைப்பிணையங்களைக் கொடுத்தும், வங்கியிலிருந்து நிதியினைப் பெறுகின்றார். கடன் பெறுகின்றவர் ஒரு வரையறுக்கப்பட்ட நிறுமமாக இருந்தால் மேலே குறிப்பிடப்பட்ட முறையில் கடனளிப்பவரின் உரிமையை உத்தரவாதம் செய்வதில், உண்மையில் சிறிய அளவில்தான் இடர்ப்பாடு உள்ளது; ஆனால், கடன் பெறுவோர், ஒரு தனி ஆள் வணிகராகவோ, ஒரு கூட்டு வணிக நிறுவனமாகவோ இருந்தால் இடர்ப்பாடுகள் எழநேரிடும்; ஏனென்றால், அத்தறுவாயில் சொத்துகளின் மீதான பொருட்பிணைப் பொறுப்பினை பதிவு செய்வதற்கு சட்டப்படியான கடப்பாடு (Statutory Obligation) ஏதுமில்லை. இத்தகைய நடவடிக்கைகளுக்கு நிதியிடுவதோடு தொடர்புடைய மற்ற இடர்பாடுகள், முக்கியமாக, (i) சொத்து, வாடகைக்கு எடுத்தவருடைய உடைமையில் இருக்கின்றபொழுது, வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது என்பதுபற்றிய அறிவிக்கையின்றி, அவரிடமிருந்து பொருளைப் பெற்றுக்கொள்ளுகின்ற, குற்றம் ஏதும் செய்யாத ஒரு மூன்றாம் நபரின் கோருரிமை, மற்றும் (ii) நொடிப்பு நிலை அடைகின்ற தறுவாயில், மாநில நொடிப்புநிலைச் சட்டத்தின் பிரிவு, 28 மற்றும் மாநகரங்களின் நொடிப்புநிலைச் சட்டத்தின் பிரிவு 52, ஆகியவைகளில் சொல்லப்பட்டுள்ள நம்பிக்கை உரிமைக் கோட்பாடு செயல்படுவதன் காரணமாக, பொருளில் உள்ள சொத்து, சொத்தாட்சி அதிகாரியிடம் சேர்ந்துவிடுதல் ஆகியவை தொடர்பானவைகளாகும். வாடகைக்கு எடுத்தவர், குற்றமற்ற ஒரு மூன்றாவது நபருக்கு, அறிவிக்கை ஏதுமின்றிச் சொத்தினை விற்றுவிடுவது தொடர்பாக, ஹெல்பி எதி. மேத்யூஸ் ([1895] அ. கே. 471) [Helley *v.* Mathews ([1895] A. C. 471)] என்ற வழக்கில், கோமகன்களின் அவையால் (House of Lords) எல்லா வாடகை கொள்முறை ஒப்பந்தங்களுக்கும் அடிப்படையாக ஒரு குறிப்பிட்ட படிவத்தில் (form) அமைந்திருந்த இந்த ஓர் ஒப்பந்தம், குற்றமேதும் புரியாத வாங்கியவர் ஒருவருடைய கோருரிமைக்கு விடையளிப்பதாக உள்ளது என்று கூறப்பட்டது. மேலும், வாடகைக்கு எடுத்துள்ளவர், தாம் பெற்றிருப்பதைவிடச் சிறந்த ஓர் உரிமையை வாங்கியவருக்குக் கொடுத்து, அவருடைய வியாபாரியைச் சொத்தினை இழக்கும்படியாகச் செய்ய முடியாது என்பது இப்பொழுது முடிவு செய்யப்பட்ட ஒரு சட்டமாகும். நம்பிக்கை உரிமை (Reputed Ownership) விதியினுடைய செயற்பாட்டினைப் பொறுத்தவரை, நொடிப்புநிலை ஆரம்பமாவதற்கு மூன் உடைமையைத் திரும்ப எடுத்துக்கொள்வதற்கு உரிமை

யாளரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்; ஆனால், இவ்வாறு செய்வதற்கு, வாடகைக்கு எடுத்திருப்பது இருக்கின்றவரையிலும் வாடகைக்கு எடுத்திருப்பவருடைய நிதி நிலைமையின்மீது நெருங்கிய கண்காணிப்புத் தேவைப்படுகின்றது. ஒரு பொருளினுடைய அடைமானத்திற்கெதிராகக் கடனளிக்கின்றவருடைய நோக்குக் கோணத்திலிருந்து அவருக்கு, (உரிமையாளருக்கு) அடைமானத்தைப்பற்றித் தெரிவிக்கின்ற ஓர் அறிவிக்கையினைக் கொடுத்து அத்தகைய அறிவிக்கையைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலையும் பெறுவதற்கு ஏற்பாடு செய்வது அறிவுடைமையான ஒரு செயல்முறையாகும். இந்தச் செயல்முறை வாடகைக்கு எடுத்தவருடைய பொருள்களின்மீது ஒரு பறிமுதல் (distress) அல்லது சட்ட ஆணை நிறைவேற்றம் (execution) ஆகியன விதிக்கப்படுகின்றபொழுதுங்கூடப் பயனுடையதாக இருக்கும்.

முன்னெச்சரிக்கைகள் (Precautions)

கடன்வழங்கும் வங்கியருடைய நலன், எந்த முறையில் போதுமான அளவிற்குக் காக்கப்பட்டிருக்கக்கூடும் என்பது ஒவ்வொரு தறுவாயின் சூழ்நிலைகளைப் பொறுத்தும் இருக்கும்; மற்றும், வாடகை கொள்முறை நடவடிக்கைகளுக்கே உரிய சிறப்புத்தன்மைகளுக்கு எதிராக எடுக்கப்படவேண்டியவை தவிர, வங்கிக்கடனுக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய சாதாரண முன்னெச்சரிக்கைகள் எடுக்கப்படவேண்டும். வாடகை கொள்முறை ஆவணங்களின் வைப்பு, மற்றும் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ள பொருளின் அடைமானம் ஆகியவைகளுக்கெதிராகக் கடன் வழங்கப்பட்டிருக்கின்றபொழுது, நபருடைய நாணயம், மற்றும் தொழில் நிலை, மற்றும் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ள பொருள்களின் தன்மை ஆகியவைகளைப்பற்றி நிறைவுபடுத்திக்கொள்ளவேண்டியது ஒரு வங்கிக்கு மிகவும் அவசியமானதாகும். ஒரு விதியாக, கடன்கள் புத்தம் புதிய (brand new) பொருள்களுக்கு மட்டுமே வழங்கப்படவேண்டும்; கைமாறிய (Second-hand) பொருள்களுக்கான கடன்கள் ஊக்குவிக்கப்படலாகாதது. நிதி வழங்கியவருக்கும், வாடகைக்கு எடுத்துள்ளவருக்கும் இடையேயான ஒப்பந்தம், வங்கியின் நலனிற்குப் பாதகமாக அல்லது எதிராக அதில் ஒன்றுமில்லை என்று அறிந்துகொள்வதற்காகக் கவனமாக ஆராயப்படவேண்டும். வழக்கமாக, வரவேண்டிய தொகைக்கான கேட்டவுடன் செலுத்தப்படவேண்டிய ஒரு கடனுறுதிச் சீட்டு அல்லது ஒவ்வொரு தனிப்பட்ட தவணைக்குமான மாமூல் தவணை (usance) கடனுறுதிச் சீட்டுகள், வியாபாரி அல்லது நிதி வழங்கு

வோருக்குச் சாதகமாக வாடகைக்கு எடுப்பவரால் ஏற்படுத்தப் படுகின்றன. கடனுறுதிச் சீட்டுகள் (Promissory Notes) உரிய முறையில் வங்கிக்குச் சாதகமாக மேலெழுதப்பட்டு (endorsement) வாடகை கொள்முறை ஒப்பந்தம், மற்றும் பொருளை வங்கிக்கு அடைமானமாகக் கொடுக்கின்ற ஓர் ஒப்பந்தம், ஆகியவைகளோடு சேர்த்து வங்கியில் வைப்புச் செய்யப்படவேண்டும். வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ள பொருளைப்பற்றிய விவரங்களைக் காட்டுகின்ற ஒரு பட்டியல், மற்றும் மோட்டார் ஊர்திகளின் (Motor Vehicles) விசயத்தில், ஊர்தி, நிதியளிக்கின்றவருடைய பெயரிலோ, வங்கி யினுடைய பெயரிலோ பதிவு செய்யப்படலாம் என்று கூறுகின்ற, பதிவு செய்கின்ற அதிகாரிக்கு (Registering Authority) எழுதப் பட்ட ஒரு கடிதம் ஆகியவைகளுங்கூட பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். மற்றும் 1959ஆம் ஆண்டின் மோட்டார் ஊர்திகள் (Motor Vehicles Rules, 1959) 59ஆவது விதியின்கீழ் இத்தகைய ஒரு சரத்து எந்த நபருடைய உரிமைகளையும் பாதிக்காது எனினும் பதிவுச் சான்றிதழ், வாடகை கொள்முறை ஒப்பந்தம் பற்றிய ஒரு சரத்தினைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பது உறுதிப்படுத் தப்படவேண்டும். ஒரு பொறுப்புறுதியர் (Guarantor) வாடகை கொள்முறை ஒப்பந்தத்தில் சேர்ந்திருப்பது பெரும்பாலும் வழக் கில் உள்ள ஒன்றாகும். இவைகளோடுகூட, காப்பீட்டு நிறுமம் ஒன்றிலிருந்து ஒரு ஈட்டுறுதிப் பத்திரத்தைப் (Indemnity Policy) பெறுவது விரும்பத்தக்கதாகும். பொருள்களை, மூன்றாம் நபர் இடர்வாய்ப்புகளையும் (third party risks) சேர்த்து ஒரு விரி வான காப்பீட்டுத் திட்டாவணத்தின் கீழ்க் காப்பீடு செய்வதற் குக் கவனம் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். மேலே குறிப் பிடப்பட்டுள்ளதுபோல, பொருள் வங்கிக்கு அடைமானம் செய் யப்பட்டுள்ளது என்று கூறுகின்ற ஓர் அறிவிக்கை வாடகைக்கு எடுத்தவருக்கு இரண்டு படிகளில் அனுப்பப்படவேண்டும்; அத னைப் பெற்றுக்கொண்டதற்கான அவருடைய ஒப்புதலைப் பெற்று இதரக் கடன் ஆவணங்களோடு பாதுகாத்து வைக்கப் படவேண்டும். தவணைகளின் முதிர்வு தேதிகளின்மீதும், அவை வசூலிக்கப்படுவதன்மீதும் தீவிரமான கண்காணிப்பு வைத்திருக் கப்படவேண்டும். அவை செலுத்தப்படுவதில் தவறுதல் (default) ஏதுமிருப்பின் அது உடனடியாகக் கவனத்தில் எடுத்துக்கொள் ளப்படவேண்டும். ஒழுங்கான கண்காணிப்புகளுக்கு ஏற்பாடு செய்வதன்மூலம், வாடகைக்கு எடுத்தவர் பொருளை தகுந்த நிலையில் போற்றி வருகிறார் என்பது உறுதிப்படுத்தப்படவேண் டும். கடன், ஒப்புக்கொள்ளப்பட்ட விலையில் சுமார் 20 சத வீதத்திற்கு இருக்கக்கூடிய உடனடி ரொக்கத் தவணை (cash

down instalment) செலுத்தப்பட்ட பின்னர் அனுமதிக்கப்பட வேண்டும்; மற்றும், தவணைகள் செலுத்தப்பட செலுத்தப்பட, வங்கிக்குச் சாதகமாகக் கிடைக்கக்கூடிய எச்ச ஓரம் அதிகமாக ஆகிக்கொண்டே போகுமெனினும், வரவேண்டியுள்ள மொத்தத் தொகையில், நியயாமான ஓர் எச்சஓரம் (margin) வைத்திருக்கப்படவேண்டும்.

15. துணைப் பணிகள்
(Subsidiary Services)

அவைகளின் தன்மையும், அவைகளால் சமுதாயத்திற்குள்ள பயன்பாடும் (Their Nature and Utility to the Community) : இந்த நூலின் முதல் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டதுபோல, தற்காலத்திய கூட்டுப்பங்கு வங்கி (Joint-Stock Bank) உரிய வங்கிப்பணிகளை மட்டுமன்றி, தன்னுடைய பயன்பாட்டினைச் சமூகத்திற்கு அதிகப்படுத்துகின்ற நோக்குடன் மேற்கொள்ளப்படும் பணிகளின் தன்மையில் உள்ள சிலவற்றையுங்கூடச் செய்யவேண்டியுள்ளது. வெறுமனே, எச்சமாக உள்ள பணத்தினுடைய வைப்பிடமாக (depository) இருந்த நிலையிலிருந்து, நடைமுறையில், வணிகத்திற்கும் தொழில்களுக்கும் மற்றும் பொது மக்களுடைய ஒவ்வொரு நிதித்தேவைக்கும் பணமளிக்கின்ற ஒரு நிறுவனமாக, அது ஒரே சீராக வளர்ந்துள்ளது. தற்கால வங்கி, சமூகத்தினுடைய எச்சப் (Surplus) பண இருப்புகளின் வைப்புக் காவலன் (Custodian of Deposits) ஆக மட்டுமல்லாமல், நிதி பற்றிய அறிவுரை, மற்றும் வணிகத் தகவல்கள் ஆகியவைகளின் ஒரு களஞ்சியமாகவும் (repository), தன்னைத் தவிர்க்கமுடியாத தாக ஆக்கிக் கொண்டுள்ளது. அது, முதலீட்டாளர்களுக்கு (investors) அறிவுரை நல்குகிறது அவர்களின் சார்பாக பிணையப் பத்திரங்களை வாங்கி விற்கின்றது; கடன்களை எழுப்புவதில் அரசுகளுக்கும், கூட்டுருக்களுக்கும் (corporations) உதவுகின்றது; தொழிற்சாலைகளுக்கு நிதியுதவி அளிக்கின்றது; சொத்துகளின் ஆட்சியாளராகச் (administrator of Estates) செயல்படுகிறது; பொறுப்புரிமை (trust) நிதியினுடைய பாதுகாப்பு, மற்றும் உபயோகம் ஆகியவை தொடர்பான பலவகையான சூழ்நிலைகளுக்கிடையே, பொறுப்புரிமையர்கள் (trustees), நிறைவேற்றாண்மையர்கள் (Executors) மற்றும் ஆட்சியாளர்கள் (administrators) ஆகியோருடைய தொழிலைச் செய்கின்றது; இளவர்களுக்கு (minor) பாதுகாப்பாளராகச் (Guardian) செயல்படுகின்றது; மற்றும் வருமான வரி தொடர்பான விவகாரங்களையும் கவனிக்கின்றது; தன்னுடைய வாடிக்கையாளர்களின் சார்பாக, அது,

பணத்தைச் செலுத்தவும் பெறவுங்கூடச் செய்கின்றது. நேர்மை மற்றும் தகுதி ஆகியவை இன்றியமையாதவையாக உள்ள எல்லா வகையான பணிகளும் தற்காலவங்கியின் எல்லைக்குள் வருகின்றன; மாறிக்கொண்டேயிருக்கின்ற சூழ் நிலைகளுக்கு ஏற்றமுறையில் இருக்கும்பொருட்டு, ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் வைப்பு வங்கியாக சிறு அளவில் தொழில்செய்து வந்த தன்னுடைய பெற்றோரிடமிருந்து (தொடக்ககால வங்கி) முற்றிலும் மாறுபட்ட ஒரு நிறுவனமாக அது தற்போது உருவெடுத்துள்ளது. தன்னுடைய பயன்பாட்டினைச் சமூகத்திற்கு அதிகப்படுத்தவேண்டுமென்ற தன் விருப்பத்தின் காரணமாக மட்டுமன்றித் தற்கால நாகரிகத்திற்கு அடிப்படைத் தத்துவமாக (key-note) அமைந்துள்ள உயிர்வாழ்விற்கான போராட்டம் (Struggle for Existence) காரணமாகவும், குழந்தை (தற்கால வங்கி) தன்னுடைய பெற்றோர்களுடைய (தொடக்ககால வங்கி) நடவடிக்கைகளை அளவு மீறி வளர்க்கவேண்டியிருந்தது. இந்தச் சிறிய அத்தியாயத்தில், இந்நாளைய வங்கி நிறுவனத்தின், பலவகையான துணைப்பணிகளை ஆட்சி செய்கின்ற சட்டம் மற்றும் நடைமுறைக் கோட்பாடுகளைச் சுருக்கமாக நாம் விவாதிக்கலாம்:

இப்பணிகளை, பரந்த அளவில், பின்வருமாறு வகைப் படுத்தலாம்:

(அ) முகமைப் பணிகள் (Agency Services);

(ஆ) சில்லறை அல்லது பொதுப் பயன் பணிகள் (Miscellaneous or General Utility Services).

முகமைப் பணிகள் (Agency Services)

காசோலைகள், மாற்றுச் சீட்டுகள் (Cheques and Bills of Exchange) ஆகியவைகளின் வசூல் மற்றும் செலுத்துகைகளோடு, தற்கால வங்கி, பின்வரும் முக்கியமான பணிகளை, நிறைவேற்றுவதில், தன்னுடைய வாடிக்கையாளருடைய ஒரு சிறப்பு முகவராகச் செயல்படுகின்றது:

(1) சந்தாக்கள் (Subscriptions), காப்பீட்டுக் கட்டணங்கள், வாடகைகள் முதலியவைகளைச் செலுத்துதல் மற்றும் கடனுறுதிச் சீட்டுகள், கூப்பன்கள், பங்காதாயங்கள், சம்பளங்கள், ஓய்வு ஊதியங்கள் (pensions) முதலியவைகளை வசூல் செய்தல் (பின்னிணைப்பு-'ஆ', படிவம் எண்கள் 6 மற்றும் 7 பார்க்கவும்)

(2) பங்குத் தொகுப்புகள் (stocks), பங்குகள் ஆகியவை களின் கொள்முதல் மற்றும் விற்பனை.

(3) பொறுப்புரிமையர், நிறைவேற்றாண்மையர், சட்டமுகவர் (attorney) ஆகியோராகச் செயல்படுதல்.

(4) அதனுடைய வாடிக்கையாளர்கள், இதர வங்கிகள், நிதிக் கூட்டுருக்கள் ஆகியோருடைய கடிதத் தொடர்பாளராக வும் (correspondent) சார்பாளராகவும் (representative) பணி செய்தல்.

செலுத்துகைகளும் வசூல்களும் (Payment and collections): ஒரு நபர், சந்தாக்கள், காப்பீட்டுக் கட்டணங்கள், வாடகைகள் ஆகியவை தொடர்பாகப் பணம் செலுத்தவேண்டியுள்ளபொழுது, அல்லது, சம்பளம் அல்லது ஓய்வூதியம், அல்லது கடனுறுதிச் சீட்டுகள், கூப்பன்கள் (coupons), பங்காதாயங்கள், வட்டி ஆணைகள் (Interest Warrants), வாடகைகள் முதலானவை தொடர்பாக வரவேண்டியுள்ள பணங்களை வசூலிக்கவேண்டி யுள்ளபொழுது, இவ்வேலையை, பொதுவாக, தம்முடைய வங்கி யரிடம் ஒப்படைக்கிறார். சிறிது கூர்ந்து நோக்கின், தம்முடைய வாடிக்கையாளரின் சார்பாக, வங்கியர் ஒருவர் நிறைவேற்றுவதற்கு வழக்கமாக, ஏற்றுக்கொள்ளுகின்ற இந்தப் பணிகள், தன்மை யில், வங்கியர் ஒருவர் தம்முடைய வாடிக்கையாளருக்காகச் செய் வதற்கு, சட்டப்படிக் கடமைப்பட்டுள்ள காசோலைகளுக்குப் பணம் செலுத்துதல், மற்றும் அவைகளை வசூல் செய்தல் என்ற ஒரு பணியைப் போன்றே இருக்கின்றன என்பதைக் காணலாம். இந்தப் பணிகள் வங்கிக்குக் கழிவு என்ற சிறிய வருமாணத்தை மட்டுமன்றி, வாடிக்கையாளருடைய நன்மதிப்பினையும் (goodwill) ஈட்டுகின்றன; இவ்வாறு மறைமுகமாக இருந்தாலுங்கூட வங்கி யினுடைய தொழிலை முன்னேற்றமடையச் செய்வதற்கு இந்தப் பணிகள் ஒரு முக்கியமான சொத்தாக உள்ளன. இரண்டு தறு வாய்களிலுமே வங்கியர் தம்முடைய வாடிக்கையாளரின் முகவ ராகச் செயல்படுகிறார். மேலும், இந்தப் பணிகளை அவருடைய வங்கியர் பெயரளவிலான ஒரு கட்டணத்திற்காகச் செய்வதற்குத் தயாராக இருக்கும்பொழுது, இந்த வகையான வேலைக்கென ஒரு தனி முகவரை அமர்த்துவது வாடிக்கையாளருக்குத் தேவை யற்ற செலவினை உண்டாக்குவதாகப் பொருள்படும். இருந்த போதிலும், இந்தக் கடமைகளைத் தம் பொறுப்பில் எடுத்துக் கொள்வதற்குமுன், வங்கியர், தம்முடைய வாடிக்கையாளரிட மிருந்து, இத்தகைய விவகாரங்களில் வாடிக்கையாளருடைய முக வராக வங்கியர் செயல்படுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், மற்றும்

இத்தகைய பணிகளுக்கு வழக்கமான கட்டணங்களை விதிப்ப தற்கும், தேவையான அறிவுறுத்தல்களைக் (instructions) கொண் டுள்ள ஒரு தெளிவான உரிமைக் கட்டளையை (mandate) அவ ருடைய வாடிக்கையாளரிடமிருந்து பெறுவதை வற்புறுத்துவது வங்கியருக்கு அவசியமானதாகும்.

வங்கியரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது (Banker's Liability Limited)

உண்மை நடைமுறையில், வங்கியர் ஒருவர், பொதுவாக, வாடிக்கையாளர்களின் அறிவுறுத்தல்களின்படி, அவர்களின் சார் பாகத்தாம் பணத்தைச் செலுத்துகின்ற அல்லது பெறுகின்ற பொழுது வாடிக்கையாளர்களுக்குத் தகவல் தெரிவிக்கின்றார். ஆனால், இத்தகைய ஒரு தகவலை அவர் கொடுக்காதிருந்த போதிலுங்கூட, அவருடைய செயல், அவருடைய வாடிக்கையா ளருக்கு நட்டத்தை விளைவித்தால், வங்கியர், உண்மையாகவே எப்போதும் நல்லெண்ணத்துடனும் உரிமைக் கட்டளையில் உள்ள வாடிக்கையாளருடைய நிலையான கட்டளைகளின்படியும் செயல்பட்டிருந்தால், அப்போது வங்கியர் பொறுப்பிலிருந்து தப் பித்துக்கொள்வார். எடுத்துக்காட்டாக, ராயல் வெஸ்டர்ன் இந்தியா டர்ப் கிளப்பின் (Royal Western India Turf Club) உறுப்பிரான "அ" என்பவர், அவருடைய ஆண்டுச் சந்தா வைக் கிளப்புக்குக் கொடுக்கும்படி, பம்பாயில் உள்ள தம்முடைய வங்கிக்குக் கட்டளையைக் கொடுத்திருந்து, இது தொடர்பாக வங்கிக்குக் கொடுத்திருந்த நிலையான கட்டளையை விலக்கிக் கொள்வதற்குத் (cancel) தவறியிருந்தால், "அ", கிளப்பினுடைய உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக்கொண்டபிறகு கொடுக்கப் பட்ட செலுத்துகைகளுக்கு வங்கி பொறுப்பாகாது. அதேபோல வாடிக்கையாளர் ஒருவர் தம்முடைய வங்கியை, அவர் சார்பாக, அவருடைய காப்பீட்டுத் திட்டாவணத்தின் மீதான காப்பீட்டுக் கட்டணங்களாக ஒரு குறிப்பிட்டத் தொகையைக் கொடுத்து அவ்வாறு கொடுக்கப்பட்ட தொகைகளை அவருடைய நடப்புக் கணக்கில் பற்றுவைக்கும்படி கேட்டுக்கொண்டிருந்தால், பின்னர் அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை, செலுத்தவேண்டியதாக இருந்த தொகையைவிட அதிகமாக இருப்பதாகக் கண்டறியப் பட்டால், அதிகப்படியான செலுத்துகை, வாடிக்கையாளருடைய தவறான கட்டளைகளின் காரணமாகத்தான் என்று அறியப்படு மானால், வங்கியைப் பொறுப்பாளியாக ஆக்கமுடியாது.

தெளிவற்ற அறிவுறுத்தல்கள் கொடுக்கப்படும் தறுவாய்களில் (வங்கியருக்குப்) பொறுப்பில்லாமை (Non-liability in case of Ambiguous Instructions)

வாடிக்கையாளருடைய அறிவுறுத்தல்கள் இரண்டு பொருள்களைக் கொடுக்கின்ற வகையில் தெளிவற்ற சொற்களில் இருக்க நேரிட்டு, வங்கியர் அவைகளுக்கு, வாடிக்கையாளரால் நினைக்கப்பட்டதிலிருந்து மாறுபட்ட ஒரு பொருளைக் கொடுத்து, நல்லெண்ணத்துடனும், கவனக்குறைவு இல்லாமலும், அந்தப் பொருளின்படியே நினைத்து, அதன்படி செயல்பட்டார் என்றால், பின்னர், தாம் (வாடிக்கையாளர்), அதேமாதிரியாக ஏற்றுக் கொள்ளப்படத்தக்க மற்றொரு பொருளை (meaning) அறிவுறுத்தல்கள் கொடுக்கப்படவேண்டுமென்று விரும்பியதாகக் கூறி, அதன் அடிப்படையில், அதிகாரமளிக்கப்படாதது என்று வங்கியரின் நடவடிக்கையை மறுப்பதற்கு வாடிக்கையாளருக்கு வழி கிடையாது. இத்தகைய தறுவாய்களில், தவறு ஏதுமிருப்பின் அது, தெளிவற்ற அறிவுறுத்தல்களைக் கொடுப்பதில் வாடிக்கையாளரின் கவனக்குறைவு காரணமாகத்தான். ஆதலால், வங்கியரைக் குற்றம் சாட்டமுடியாது.

அவருடைய வாடிக்கையாளரின் முகவர் என்ற முறையில், வங்கியரின் நிலையை ஆட்சி செய்கின்ற அடிப்படை விதிகளைக் கூறியபின்னர், நாம், காசோலைகள் மற்றும் மாற்றுச் சீட்டுகள் ஆகியவை அல்லாத மற்ற ஆவணங்களுக்குப் பணம் பெறுதல், மற்றும் பணம் செலுத்துதல் ஆகியவை தொடர்பாக அவருடைய நிலையை ஆராய்வதை மேற்கொள்வோம்.

கடனுறுதிச் சீட்டுகள் (Promissory Notes): 1881ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 4-ன்படி, 'ஒரு கடனுறுதிச் சீட்டு [பின்னிணைப்பு "ஆ", படிவம் எண்கள் 23, 23(அ), 23(ஆ), 23(இ), 23(ஈ), 23(உ) பார்க்கவும்] என்பது, ஒரு குறிப்பிட்ட தொகையிலான பணத்தை, ஒரு குறிப்பிட்ட நபருக்கு அல்லது அவருடைய ஆணைக்கு மட்டும், அல்லது பத்திரத்தைக் கொணர்பவருக்குக் கொடுப்பதாக ஒரு நிபந்தனையற்ற உறுதிமொழியைக் கொண்டிருக்கின்ற, எழுதுபவரால் கையொப்பமிடப்பட்ட, எழுத்துமூலமான (ஒரு வங்கிச் சீட்டு அல்லது ஒரு நாணயச் சீட்டு அல்லாத) ஒரு பத்திரமாகும்.' 1946ஆம் ஆண்டின் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா சட்டம் பிரிவு 31(2), இப்பொழுது, இந்தப் பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி அல்லாமல், கொணர்பவருக்குக் கொடுக்கக்கூடியது எனக் குறிப்பிடப்பட்டுள்ள கடனுறுதிச் சீட்டுகளின் விடுப்பினைத் தடை செய்துள்ளது.

கடனுறுதிச் சீட்டு—விளக்கம் (Promissory-Note Explained)

மேலேயுள்ள கடனுறுதிச் சீட்டினுடைய இலக்கணத்திலிருந்து, ஒரு மாற்றுச் சீட்டு என்பது, ஒரு 'செலுத்துவதற்கான ஆணை' என்று இருக்கும்பொழுது, ஒரு கடனுறுதிச் சீட்டு என்பது, ஒரு 'செலுத்துவதற்கான உத்தரவாதம் அல்லது உறுதிமொழி' என்றிருக்கிறது, என்பதில் மட்டுமே ஒரு கடனுறுதிச் சீட்டு, ஒரு மாற்றுச் சீட்டிலிருந்து மாறுபட்டு உள்ளது என்பது அறியப்படலாம். எனவே, ஒரு மாற்றுச் சீட்டினை (Bill of Exchange) ஏற்றவரைப்போல, கடனுறுதிச் சீட்டினை (Promissory Note) எழுதியவர் முதன்மைப் பொறுப்பாளியாகிறார் என்பது தெரிகிறது. இருந்தபோதிலும், செலுத்துவதாக உள்ள உறுதிமொழி ஒரு கடிதம் என்ற உருவிலோ, மேலே கூறப்பட்ட பிரிவில் (Section) கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் வகையில் வேறு ஏதாவது வடிவத்திலோ இருக்கலாம். அதனை எழுதுபவருடைய, செலுத்துவதற்கான எண்ணத்தை அல்லது உறுதிமொழியைச் சுட்டிக்காட்டுவதாக ஏதுமில்லாமல், ஒரு கடனை வெறுமனே ஒப்புக்கொள்ளுதல் ஒரு கடனுறுதிச் சீட்டாகக் கருதப்படமாட்டாது. எடுத்துக்காட்டாக, "திரு. கே. சி. பூரி, ரூ. 2000-க்கு நா. உ. க." (நா. உ. க.—நான் உமக்கு கடன்பட்டவன்) என்னும் வார்த்தைகளைக் கொண்டுள்ள ஒரு தாள் துண்டு, அது உரிய முறையில் கையொப்பமிடப்பட்டு முத்திரையிடப்பட்டிருந்தபோதிலும்கூட ஒரு கடனுறுதிச் சீட்டாக ஆகாது. முடிவானதாக இல்லாத ஒரு பணத்தொகையைக் கொடுப்பதற்கான ஓர் உறுதிமொழி அல்லது எந்த நிபந்தனை நிகழ்வது உறுதியற்றதாக இருக்கின்றதோ அத்தகைய ஒரு நிபந்தனைக்கு,—எடுத்துக்காட்டு, 'பிறிதொரு நபருடைய திருமணம் நடைபெற்றால், நோயிலிருந்து நலம் பெற்றால், அல்லது இறந்துபோனால்',—உட்பட்டு ஒரு முடிவான பணத்தொகையைக் கொடுப்பதற்கு உத்தரவாதமளிப்பது, ஆகியவை ஒரு கடனுறுதிச் சீட்டாகக் கருதப்படமாட்டாது. இருந்தபோதிலும், குறிப்பிடப்பட்ட தொகை, அது செலுத்தப்பட வேண்டிய இடத்தினுடைய செலாவணியாக இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. அவ்வாறு செய்வது விரும்பத்தக்கது எனினும், ஒரு கடனுறுதிச் சீட்டினை செல்லுபடியாகத் தக்கதாக ஆக்குவதற்கு, அது நிறைவேற்றப்படுவதற்கான இடத்தைக் குறிப்பிடவேண்டியது அவசியமில்லை. எந்தவகையிலும், ஒரு கடனுறுதிச் சீட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தில், எடுத்துக்காட்டாக ஒரு வங்கியின் குறிப்பிட்ட ஒரு கிளையில் செலுத்தப்படும் என்பதாக எழுதப்பட்டிருந்தால், மேலெழுதிய ஒருவரைப் (Endorser) பொறுப்பாளியாக ஆக்குவதற்கு அந்தக் கிளையில் முன்னிடல் செய்யப்படவேண்டியது (Presentment) அவசியமாகும்.

கடனுறுதிச் சீட்டுகள் ஒரு வங்கியியல் செலுத்தப்படவேண்டியவைகளாக எழுதப்பட்டிருக்கும்பொழுது, செலுத்த வேண்டியவைகளாக அவை ஆகின்றபொழுது, அவைகளுக்குப் பணம் செலுத்தி அவைகளின் தொகைகளை எழுதியவரின் கணக்கில் பற்றுவைப்பது, வங்கியர் செய்கின்ற நியாயமான செயல் என்பதாக ஆகும். இருந்தபோதிலும், செலுத்தும் வங்கியருக்கு, காசோலைகளின் விடயத்தில், 1881ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணச் சட்டம் (Negotiable Instruments Act, 1881) பிரிவு 81ஆல் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு, பொய்க் கையொப்பமிடப் பட்ட மேலெழுதல்களைக் கொண்டுள்ள கடனுறுதிச் சீட்டுகளுக்கு விரிவுப்படுத்தப்படவில்லையாதலால் ஒரு குறிப்பிட்ட நபருடைய ஆணைக்குச் செலுத்தப்பட வேண்டியவைகளாக எழுதப்பட்ட கடனுறுதிச் சீட்டுகளின் விடயத்தில், மேலெழுதல் சம்பந்தமான விவகாரத்தில் வங்கியர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

ஒரு கடனுறுதிச் சீட்டு, ஒரு மாற்றுமுறை ஆவணமாக இருப்பதாலும், மற்றும், ஒரு மாற்றுமுறை ஆவணம் சம்பந்தப்பட்ட நபர்களின் பொறுப்பு, ஏற்பு செய்யப்படுதல் மற்றும் செலுத்தப்படுதல் ஆகியவைகளுக்காக அவை முன்னிடப்படுவது தொடர்பான விதிமுறைகள், மாற்றிக் கொடுப்பதற்காக வாடிக்கையாளர்களுக்கு அவை ஒப்படைப்புச் செய்யப்படுதல், அவைகளின் முழுமையான தன்மை, முத்திரை வரிக்கு அவைகளின் பொறுப்பு, முதலிய மாற்றுமுறை ஆவணம் தொடர்பான பல கருத்துகளை நாம் ஏற்கெனவே ஆராய்ந்துவிட்டபடியாலும் இங்கு அவைகளைப் பற்றி விளக்கமாகக் கூறுவது அவசியமற்றதாகும்.

கூப்பன்களும் (வெட்டுச் சீட்டுகளும்) அவைகளின் வசூலும் (Coupons and their collection): வெட்டுவதற்கு என்னும் பொருள் கொண்ட 'கூப்பர்' (couper) என்னும் பிரெஞ்சு வார்த்தையிலிருந்து பெறப்பட்ட 'கூப்பன்' (coupon) என்னும் சொல், சரியான பொருளில் கூறவேண்டுமானால், வெட்டியெடுக்கப்பட்ட ஒரு துண்டு (a piece cut off) என்று பொருள்படும். பொதுவாக, அது, ஒரு வட்டி ஆணை (Interest Warrant) என்பதனைக் குறிக்கவும், மற்றும் சிலவேளைகளில் கொணர்பவர் பிணையப் பத்திரங்கள் (bearer Securities) என்னும் வடிவத்திலுள்ள கடனீட்டுப் பத்திரங்கள், பிணைமுறி (bond) அல்லது பங்குகள் ஆகியவை தொடர்பான பங்காதாயச் சான்றிதழைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. இத்தகைய ஒரு பிணையத்தை விடுக்கின்ற ஒரு நிறுமம், வட்டி, அல்லது பங்காதாயம் கொடுக்கும் நேரத்தில் பிணையத்தை வைத்திருப்பவர் யார் என்பதைச் சரியாக அறியமுடியாது. ஆதலால், அது, பிணையத்தோடு, ஒவ்

வொன்றும் அது தொடர்பான பிணையத்தினுடைய எண், கூப் பனால் குறிப்பிடப்படுகின்ற வட்டி மற்றும் பங்காதாயம் உரித் தாகும் காலம் ஆகியவைகளைக் கொண்டுள்ள கூப்பன்களின் தாள் அடுக்கு (Sheet of Coupons) ஒன்றினைக் இணைக்கிறது. சில வேளைகளில், பிணையம், பிணைமுறி அல்லது கடனீட்டுப் பத்திரம் ஆகிய எதுவாக இருந்தாலும் கூப்பன்களின் தாள் அடுக்கு அத்துடன் இணைக்கப்பட்டிருப்பதில்லை. அவை, (வட்டி அல் லது பங்காதாயம்) நிறுமத்தினிடமிருந்து வரவேண்டியவைகளாக ஆகின்றபொழுது, கூப்பன்கள் வெட்டியெடுக்கப்பட்டு, (பிணை யப் பத்திரங்களை) விடுத்துள்ள நிறுமம் அல்லது அரசு, அல் லது அவைகளின் வங்கிகள் ஆகியவைகளிடத்தில், செலுத்தப் படும் பொருட்டு முன்னிடல் செய்யப்படுகின்றன. சுரங்கத்தொழில், மற்றும் இதர வியாபாரக் கூட்டுருக்களின் சாதாரணப் பங்குக ளின் விடயத்தில் வழக்கமாக உள்ளதுபோல, அவை செலுத்தப் படும் நாள்கள் தீர்மானிக்கப்படாததாக (not fixed) இருக்கும் பொழுது, அவை செய்தித்தாள்களில் அறிவிக்கப்படுகின்றன. கூப்பன்களை செலுத்தப்படுவதற்காக முன்னிடல் செய்யப்படும் பொழுது, ஒரு பட்டியலில் இடுதல் படிவத்தை (listing form) திரப்பி, கூப்பன்களைச் செலுத்துகின்ற அலுவலகத்தில், ஆராயப் படும் பொருட்டு, மூன்று அல்லது நான்கு நாள்களுக்கு விட்டு வைப்பது வழக்கமாகும்; இந்த காலத்திற்குப்பின் வருமான வரி கழிக்கப்பட்டு, மீதமுள்ள செலுத்தவேண்டிய தொகை செலுத்தப் படுகிறது. கூப்பன்கள் இணைக்கப்படாத கொணர்பவர் பிணை யப் பத்திரங்கள் இலண்டன் பங்கு மாற்று நிலையத்தில், சிறந்த ஒப்படைப்பு (delivery) ஆகக் கருதப்படுவதில்லையாதலால், பிணைமுறிகள், கடனீட்டுப் பத்திரங்கள் அல்லது பங்குச் சான் றிதழ்கள் ஆகியவைகளிலிருந்து கூப்பன்கள் பிரிக்கப்படலாகா. கடைசிக் கூப்பன் பிரித்தெடுக்கப்பட்டபிறகு, இன்னும் எஞ்சி யுள்ள கூப்பன்கள் தாளின் அடுக்குப் பகுதி ‘டாலோன்’ (Talon) எனப்படும்; அது அவைகளை விடுக்கின்ற நிறுவனங்களிலிருந்து புதிய கூப்பன்களின் தாள் அடுக்கு ஒன்றினைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. சில வேளைகளில், கூப்பன்களின் தாள் அடுக்குகள் ‘டாலோன்’களைக் கொண்டிருப்பதில்லை; அச்சம யங்களில் பிணையப் பத்திரத்தை வைத்திருப்பவர், நிறுமத்திற்கு ஒரு புதிய கூப்பன்களின் தாள் அடுக்கினைக் கேட்டு எழுத வேண்டும்.

வட்டியைக் குறிப்பிட்ட தேதிகளில் கொடுக்காத நிறுமங்களின் பிணைமுறிகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்களின் விடயத்தில், சம்பந்தப்பட்ட கூப்பன்களை வசூலிக்கின்ற வேலை ஒப்புடைக்

கப்பட்டிருக்கும்பொழுது, வட்டி செலுத்தப்படுவதற்கான தேதிகள் அறிவிக்கப்பட்டவுடன், வசூலுக்கு அவைகளைக் காலதாமத மின்றி முன்னிடல் செய்யும்பொருட்டு (presentment) வங்கியர், செய்தித்தாள்களில் விளம்பரப்பத்திகளில் எப்போதும் கண்ணாய் இருக்கவேண்டும். கூப்பன்களை வசூல் செய்கின்ற பணியை ஒப்படைக்கப்பட்டுள்ள வங்கியர்களுக்கு, அவைகளின் முழு விவரங்களையும் கூப்பன் ஏடு ஒன்றில் எழுதி வைத்திருப்பது, மற்றும் அவை எங்குச் செலுத்தப்படுகின்றன, அவை எந்தெந்தத் தேதிகளில் செலுத்தப்படுகின்றன ஆகியவைகளைப்பற்றி ஒரு கையேட்டில் (diary) குறித்து வைப்பது ஆகியவை வழக்கமான தாகும். கூப்பன்கள் பயனளிக்கக்கூடிய வகையில் கீறலிடப்படலாம் என்பதை ஆங்கிலச் சட்டம் ஏற்றுக்கொள்கின்றபடியால், அவைகளின் கீறலிடம் இந்திய நீதிமன்றங்களாலுங்கூட சரியென ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு வாய்ப்புள்ளது என்பதை அனுமானம் செய்துகொள்வதில் நியாயமுண்டு.

ஒரு பொது விதியாக, வசூலிக்கும் வங்கியர், ஒரு கூப்பனின் மதிப்பிற்கு, குறிப்பாக, வெளிநாட்டுச் செலாவணியில் செலுத்தப் படக்கூடிய ஒன்றாக அது இருக்கும்பொழுது, வாடிக்கையாளரின் கணக்கில், வசூலிக்கப்பட்ட நிகரத் தொகைபற்றிய அறிவிப்பினை அவர் பெறுகின்ற வரையில், வரவு எழுதக்கூடாது; இதற்கான, எல்லோரும் அறிந்த, காரணம், கழிக்கப்படவேண்டிய வருமான வரியில் வேறுபாடு இருக்கக்கூடும் என்பது மட்டுமன்றி, நாணய மாற்று வீதங்களில் உள்ள ஏற்ற இறக்கங்கள் காரணமாகவும், அது உடனே கணக்கிடப்படமுடியாது என்பதாகும். ஒரு கூப்பன், ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் செலுத்தப்படக்கூடியதாக இருக்கும்பொழுது, வாடிக்கையாளர், தம்முடைய வங்கியரை, தொகையை வசூல் செய்யவேண்டுமென்று விரும்புகிறாரா, குறிப்பிட்ட அந்த அடுத்த நாட்டில் செலுத்தப்படத்தக்கதான ஒரு மாற்றுச் சீட்டாகக் கூப்பனை விற்றுவிட விரும்புகிறாரா என்பதுபற்றிக் கட்டளைகளைப் (அறிவுறுத்தல்களை) பிறப்பிக்க வேண்டியவராக உள்ளார்.

கூப்பன் ஒன்று தொலைந்துபோகின்ற தறுவாயில், அதனை வசூல் செய்கின்ற வங்கியர், செலுத்துவங்கியருக்கு அதுபற்றித் தெரியப்படுத்தவேண்டும்; ஆகையால் அவர் அதனை முன்னிடல் செய்கின்ற நபருடைய உரிமையைப்பற்றி விசாரணை செய்து, தவறான நபருக்குப் பணம் செலுத்தப்படுவதை நிறுத்தலாம். செலுத்து வங்கியர், பணம் செலுத்துவதைப் பெறுவதற்கு உரிமையுள்ள நபரைக் கண்டறிவதற்கு முடியாமலிருந்தால், சட்டப்

படியாகப் பணத்தைப் பெறுவதற்கு உரிமையுள்ள நபர் யார் என்று நீதிமன்றம் முடிவு செய்வதற்கு உதவியாக, அவர், இடைவழக்குரைஞர் (Interpleader) வழக்கொன்றினைத் தொடுக்கலாம்.

அஞ்சல் ஆணைகள் (Postal Orders) : ஓர் அஞ்சல் ஆணை என்பது, அதனுடைய முகப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, நாட்டினுடைய எந்த அஞ்சல் நிலையத்திலும், அல்லது அதனைப் பணமாக மாற்றுவதற்கு எதனோடு ஓர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோ அந்த நாட்டிலும் செலுத்தப்படுவதற்கு அதிகாரமளித்து, அதனை விடுக்கின்ற, ஒரு நாட்டினுடைய அஞ்சல் துறையினுடைய ஆணையாகும். இந்த ஆணைகள், ஒரே நாட்டிலுள்ள ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு சிறிய அளவிலான தொகைகளை அனுப்பிவைப்பதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு விடுக்கப்படுகின்றன, அல்லது சில வேளைகளில், குறைந்த செலவில் ஒரு நாட்டிலிருந்து மற்றொன்றிற்குச் சிறு தொகையினாலான பணத்தை அனுப்புவதற்கு அவை பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய ஓர் ஆணையை வாங்கியவர், பணம் பெறுவோருடைய பெயரையும், அதனோடு ஆணையினுடைய செலுத்துகை எங்குச் செய்யப்பட வேண்டுமென்று விரும்பப்படுகின்றதோ அந்த அஞ்சல் நிலையத்தின் பெயரையும் நிரப்பும்படி பரிந்துரைக்கப் படுகிறார்; ஆனால் இது கட்டாயமானதன்று அவர், அஞ்சல் ஆணையைக் கீறலிடலாம் (cross); அப்போது, பெறுவோர் சார்பாகக் கையொப்பமிடுகின்ற ஒரு வங்கியின் மூலமாகமட்டுமே பணம் செலுத்தப்படும். அஞ்சல் ஆணையுன்மீது வாடிக்கையாளருக்கு உள்ள உரிமை குறைபாடு உடையதாக மாறுகின்ற தறுவாய்களில் எழுகின்ற சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டு, அஞ்சல் ஆணையில் அவருடைய வாடிக்கையாளரின் கையொப்பத்தை, பொதுவாக, வங்கியர் பெறவேண்டும். இத்தகைய ஆணைகளை வசூல் செய்கின்ற வங்கியருக்கு, 1908 ஆம் ஆண்டின் அஞ்சல் நிலையச்சட்டம், [Post .Office Act, 1908 (8 Edn. 7, c.48)] பிரிவு 25ஆல் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ள இங்கிலாந்தைப் போலல்லாது, இந்த விடயத்தில், இந்தியாவிலுள்ள வங்கியர்கள், நம்முடைய கருத்துப்படி, சாதகமற்ற நிலையில் இருக்கிறார்கள்.

பங்காதாய, மற்றும் வட்டி ஆணைகளை வசூலித்தல் (Collection of Dividend and Interest Warrants): ஒரு பங்காதாய, அல்லது வட்டி ஆணை, ஒரு கூட்டுப்பங்கு நிறுமத்தால் விடுக்கப்பட்டு, அதனுடைய வங்கியர்களின்மீது, ஒரு குறிப்பிட்ட தொகையிலான பணத்தை, அதனுடைய ஒன்று அல்லது அதற்கு

மேற்பட்ட பங்குகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்களைப் பதிவு பெற்று வைத்திருப்பவருக்குச் (Registered Holder) செலுத்துவதற்காக எழுதப்பட்ட ஒரு ஆணையாகும். இந்திய வழக்குப் படி, இத்தகைய ஆணைகள், ஒரு காசோலையினுடைய சட்டப் படியான இலக்கணத்திற்கு ஒப்ப அவை எழுதப்பட்டிருக்கும் பொழுது, காசோலைகளைப்போலவே செயல்படுத்தப்படுகின்றன. இரசீது வடிவங்களில் விடுக்கப்படும்பொழுது, அல்லது அவை வங்கியர் அல்லாத ஒரு நபர்மீது எழுதப்பட்டிருக்கும்பொழுது, ரு. 20-க்கும் அதிகமான தொகைகளுக்கு இருந்தால், அவை முத்திரை வரிக்கு இலக்காகின்றன. ஒரு பங்காதாய ஆணை பல நபர்களுக்குச் செலுத்தப்படவேண்டியதாக எழுதப்பட்டிருக்கும்பொழுது, பொதுவாக, அவர்களில் ஒருவருடைய கையொப்பம் போதுமானதென ஏற்றுக்கொள்ளப்படுகிறது; ஆனால், ஒரு ஆணையின் விடயத்தில் எல்லோருடைய கையொப்பமும் தேவைப் படுகின்றது. ஒரு பொது விதியாக, ஒரு வங்கியர், இந்த ஆணைகளின் வசூல், மற்றும் செலுத்துகைக்கு, காசோலைகளின் விடயத்தில் எடுத்துக்கொள்ளுகின்ற அதே முன்னெச்சரிக்கைகளை எடுத்துக் கொள்கிறார். ஒரு பங்காதாய, அல்லது வட்டி ஆணையில், கையொப்பத்திற்காகத் தனி இடமென்று ஒதுக்கப்பட்டிருக்கும்பொழுது, சம்பந்தப்பட்ட பங்கு அல்லது கடனீட்டுப் பத்திரத்தை வைத்திருப்பவர், அந்த இடத்தில்தான் கையொப்பமிட வேண்டுமேயன்றி வேறெங்கும் இடக்கூடாது. பங்காதாயம் அல்லது வட்டி, நேரடியாக வங்கியரிடம் செலுத்தப்படும்பொழுது, அவர், ஆணையை (Warrant) உரிய முறையில், விடுக்கவேண்டும் (discharge). அது ஆர். சி. தலால் அல்லது கொணர்பவருக்குச் செலுத்தப்படக்கூடியதாக இருக்கின்றது என்றாலுங்கூட, அவருடைய வாடிக்கையாளரிடமிருந்து, வங்கியர், சட்டமுகவர் (வக்காலத்தார்) அதிகாரத்தைப் (Power of Attorney) பெற்றிருந்தாலன்றி, அது ஆர். சி. தலாலிடமிருந்து விடுவிக்கப்படுவதைத் (discharge) தேவையாய்ப் பெற்றுள்ளது. எந்த நிறுமத்தின் சார்பாகச் செலுத்துகை செய்யப்படுகின்றதோ அந்த நிறுமத்தால் அதிகாரமளிக்கப்பட்டாலன்றி, ஒரு சட்டமுகவர் உரிமை (வக்காலத்தார் உரிமை—Per Procuration) பெற்ற கையொப்பம் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. 1882ஆம் ஆண்டின் மாற்றுச் சீட்டுகளின் சட்டம், [The Bill of Exchange Act, 1882, (45 & 46 Vict., C. 61)] பிரிவு 97, சரத்து 3(ஈ), கீறலிடப்பட்ட காசோலைகள் தொடர்பாகச் சட்டத்திலுள்ள காப்பு வாசகங்களை, பங்காதாயங்கள் செலுத்தப்படுவதற்கான ஆணைகளுக்குச் செயல்படுத்துவதற்கு அதிகாரமளிக்கின்றது; அதன் விளைவாக, இத்தகைய ஆணைகள், இங்கிலாந்தில், கீறலிடப்படலாம். இந்தியாவில்,

(இங்கிலாந்தின்) 1882ஆம் ஆண்டின் மாற்றுச் சீட்டுகள் சட்டத்தின் காப்பு வாசகங்களை ஒத்திருக்கின்ற, சட்டப்படியான காப்பு வாசகங்கள் மாற்றுமுறை ஆவணச் சட்டம், 1881-ல் இல்லையென்றபோதிலுங்கூட, இந்தியாவிலுள்ள நீதிமன்றங்கள், வியாபார மரபு, மற்றும் வழக்குக் காரணமாக, மாற்றுமுறைத் தன்மை (Negotiability) கொண்ட பங்காதாய ஆணைகள் போன்ற பத்திரங்களுக்கு மாற்றுமுறைத் தன்மையை விரிவுபடுத்தக்கூடும் (அதாவது அளிக்கக்கூடும்). இவ்வாறு, ஒரு கல்கத்தா வழக்கில் (ஆங்கிலோ இந்தியா ஜூட் மில்ஸ் கோ. எதி. ஓமோட் மல், இ. லா. ரி. 38, கல். 127)—(Anglo-India Jute Mills Co. v. Omode Mull, I. L. R. 38, Cal. 127) மேலெழுதல் மூலம் சணலின் பக்கா ஒப்படைப்பு ஆணைகளைப் (Pukka Delivery Orders of Jute) பெற்றிருக்கின்ற ஒருவருடைய உரிமை செல்லத்தக்கது என்று தீர்ப்புக் கூறப்பட்டது. ஓர் ஆவணம், மாற்றுமுறை ஆவணமாகக் (Negotiable Instrument) கருதப்படவேண்டுமெனில், ஒரு குறிப்பிட்ட தொகையிலான பணத்திற்கு அல்லது ஒரு குறிப்பிட்ட தொகையிலான பணத்திற்குப் பதிலாக (representing), அதனை வைத்திருப்பவர் தற்காலிகமாகத் தம்முடைய சொந்தப் பெயரில் அதன்மீது வழக்குத் தொடர்வதற்குத் தகுதியுடையதாக, அதாவது வியாபார மரபு காரணமாக முறைப்படி அதனை வைத்திருப்பவருக்கு, ஒப்படைப்புச் செய்வது அல்லது மேலெழுதி ஒப்படைப்புச் செய்வது ஆகியவற்றில் எதன் மூலமாகவாவது அதிலுள்ள உரிமை மாற்றிக் கொடுக்கத்தக்கதாக, ஒரு மாற்றுமுறைப் பிணையம் என்ற வடிவத்தில் அது எழுதப்படவேண்டுமென நீதிமன்றங்கள் கேட்கக்கூடும். 1870ஆம் ஆண்டின் தேசீயக் கடன் சட்டம், (33 & 34 விக். C. 71) [The National Debit Act, 1870 (33 & 34 Vict. C. 71)]-ன் கீழ், 'பங்காதாயம்' என்னும் சொல், ஆங்கில அரசினுடைய பங்குத் தொகுப்புகளின் மீதான வட்டியையும் குறிப்பதாகப் பயன்படுத்தப்பட்டதால், வட்டி ஆணைகள், அவை ஒரு காசோலையின் வடிவத்தில் இருந்தாலன்றி, ஐயத்திற்கிடமின்றி, இந்த வகையிலிருந்து வேறுபட்டது என்றபோதிலும்கூட, மேலே குறிப்பிடப்பட்ட பிரிவின்கீழ் வருகின்றன.

சம்பளங்கள், ஒய்வூதியங்கள் மற்றும் வாடகைகள் (Salaries, Pensions and Rents): தற்காலத்தில், அரசு அதிகாரிகள் போன்ற வாடிக்கையாளர்கள், தங்களுடைய வங்கியர்களுக்கு, தங்களுடைய சம்பளங்கள், அல்லது அவர்களுடைய ஓய்வுக் காலத்தில் பெறப்படும் ஓய்வூதியங்கள் ஆகியவைகளைப் பெறுவதற்கு அதிகாரமளிக்கின்றனர். இது குறிப்பிட்ட ஓர் அதிகாரியால், சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினுடைய தலைமைக் கணக்கதிகாரி (Account-

ant General) சம்பளம் அல்லது ஓய்வூதியம் தொடர்பான காசோலையை வங்கியரின் பெயரில் விடுப்பதற்கு வசதியாக, தம்முடைய சம்பளம் அல்லது ஓய்வூதியப் பட்டியலை (bill) அவருடைய வங்கியருக்குச் செலுத்தப்படக்கூடியதாக ஆக்குவதன் மூலம் செய்யப்படுகிறது. இது, குறிப்பாக அதிகாரி சுற்றுலா அல்லது விடுப்பில், தலைமை அலுவலகத்திலிருந்து தூரத்தில் இருந்தால், ஒரு வசதியான ஏற்பாடாகும். தம்முடைய கடமையை நிறைவேற்றுவதில் தகுந்த கவனத்தைப் பயன்படுத்துவார் என வங்கியர் எதிர்பார்க்கப்படுகிறார். அவை குறிப்பிடப்படும்படி இடர்ப்பாடு எதனையும் கொண்டிராமல், முதல் தரமான நபர்களிடமிருந்து வசூலிக்கப்படவேண்டியவை என்று இருந்தாலன்றி, வாடகைகளை வசூல் செய்யும் பொறுப்பினைப், பொதுவாக வங்கியர் ஏற்றுக்கொள்வதில்லை.

அதற்கான சிறப்பு அறிவுறுத்தல்கள் ஏதுமில்லாதவிடத்து, அவசர காலங்களில், அவருடைய முதல்வரை நட்டத்திலிருந்து காப்பாற்றுவதற்குத் தம்முடைய கருத்து முடிவினைப் (judgement) பயன்படுத்துவதற்கும், முதல்வரின் சார்பாக, அதே சந்தர்ப்பங்களில் அவருடைய சொந்த விவகாரங்களில் ஒரு சாதாரணக் கவனம், மற்றும் புத்திசாலித்தனமுடைய ஒரு நபர் எவ்வாறு நடந்து கொள்வாரோ அதே முறையில் இத்தகைய செயல்களைச் செய்வதற்கும் அதிகாரத்தை வங்கியர் பெற்றிருப்பதாகக் கருதப்படுகிறார் (1892ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டம், 189ஆவது பிரிவு). இவ்வாறு, எடுத்துக்காட்டாக, சில கூப்பன்கள் தொலைக்கப்பட்டுவிட்டபொழுது, ஒரு முகவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள சட்டப்படியான இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தும் வகையில், இது தொடர்பாக வாடிக்கையாளருடைய அறிவுறுத்தல்களுக்குக் (Instructions) காத்திராமல் ஓர் அவசர காலத்தில் செய்வதுபோல, வசூலிக்கும் வங்கியர், செலுத்தும் வங்கியருக்கு அவை தொலைக்கப்பட்டுவிட்ட செய்தியை உடனே தெரிவிக்கவேண்டும். பின்னர், வாடிக்கையாளரையே, திருடன், அல்லது அதன் காரணமாகப் பணம் செலுத்தப்பட்டதற்குப் பொறுப்பாளியான வேறு யாரவது நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி அவர் கேட்கலாம். அவருடைய தன்விருப்புரிமை (discretion) உபயோகம், அவருடைய செயலினால் ஏற்பட்ட விளைவிலிருந்து மட்டுமன்றி, அதற்குப் பின்னால் உள்ள உள்நோக்கத்திலிருந்தும் தீர்மானிக்கப்படும். வங்கியர், நல்லெண்ணத்துடனும் கவனத்துடனும் செயல்பட்டால் அவருடைய வாடிக்கையாளருக்கு ஏற்படும் எந்த நட்டத்திற்கும் அவரைப் பொறுப்பாளியாக்க முடியாது. இருந்தபோதிலும், வாடிக்கையாளரின்

பின்னேற்பினை (ratification) எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில், வங்கியர் பெற்றுக்கொள்வது விரும்பத் தக்கதாகும்.

பங்குத் தொகுப்புகள் மற்றும் பங்குகள் ஆகியவைகளின் கொள் முதலும் விற்பனையும் (Purchase and Sale of Stocks and Shares): தம்முடைய வாடிக்கையாளரின் சார்பாகப் பங்குத் தொகுப்புகளை யும், பங்குகளையும் வாங்குகின்ற மற்றும் விற்கின்ற வங்கியரின் நிலை, வாடிக்கையாளருடைய ஒரு சிறப்பு முகவரின் (Special Agent) நிலையினைப் போன்றதாகும். அதனால், வாடிக்கையாள ரின் அறிவுறுத்தல்களோடு மிகவும் ஒத்துப்போகக்கூடிய முறை யில் செயல்படுவதற்கு அவர் கடமைப்பட்டுள்ளார்; மற்றும் இத் தகைய நடவடிக்கைகளுக்கு அவசியமான, வழக்கத்திலுள்ள முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். வேறுவகையாகச் சொல்ல வேண்டுமானால், இத்தகைய தகுதியில் தம்முடைய கடமைகளை நிறைவேற்றுவதில், வங்கியர் முடிந்த அளவு கவனத்தை எடுத் துக்கொள்ளவேண்டும்; மற்றும் தம்முடைய வாடிக்கையாளரின் நலனைப் பாதுகாப்பதற்குத் தம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்யவேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு தரகரோடு, பிணை யப் பத்திரங்களின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கு ஆணையை (order) முன்வைக்கின்றபொழுது (placing), மற்றும் தேவையான உரிமைப் பத்திரங்களை (Documents of title) வாடிக்கையாள ருக்கு அனுப்பும்பொழுது, அல்லது அவருக்காக அவைகளை வைத்திருக்கும்பொழுது, அல்லது விற்றுவந்த பணத்தைப் பெற்று அதனை அவருடைய கணக்கில் வரவு வைக்கும்பொழுது, அவர் தாமதமின்றிச் செயல்படவேண்டும். மேலும், சரியான பிணை யப் பத்திரங்களையே பெறுவதையும், ஒப்படைப்புச் செய்வதை யும், மற்றும் வாடிக்கையாளர் சார்பாக, இத்தகைய ஒவ்வொரு நடவடிக்கை தொடர்பாகவும் சரியான தொகையே செலுத்தப் படுகிறது அல்லது பெறப்படுகிறது என்பதையும் வங்கியர் உறுதிப் படுத்திக் கொள்ளவேண்டும். தம்முடைய வாடிக்கையாளரின் சார்பாக பிணையப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும்பொழுது, மாற்றல் பத்திரங்கள் மற்றும் தொடர்பான பிணையப் பத்திரங் கள் சரியான முறையில் உள்ளனவா என்று வங்கியர் தம்மை நிறைவுபடுத்திக்கொள்ளவேண்டும். இத்தகைய ஒரு நடவடிக்கை தொடர்பாக எழுகின்ற, அவருடைய கவனமின்மை காரணமாக ஏற்பட்ட நட்டத்தினை ஈடுசெய்ய அவர் பொறுப்பாளியாவார் (மஞ்சுபாய் எதி. ஐயோட், இ.லா.ரி. 20 பாம். 633—Manchubhai v. Iod, I.L.R. 20, Bom. 633).

இந்தியாவிலுள்ள வங்கிகள் பங்குமாற்று நிலையங்களின் உறுப்பினர்களல்ல (Banks in India not members of Stock-Exchanges): ஜெர்மனி, பிரான்சு, ஹாலந்து, இத்தாலி போன்ற அநேக மேலை நாடுகளில், ஒவ்வொரு முக்கிய வங்கியும், உள்ளூர்ப் பங்குமாற்று நிலையத்தினுடைய ஓர் உறுப்பினராகும்; இவ்வாறு, பங்குமாற்று நிலையப் பிணையப் பத்திரங்களின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கான, தன்னுடைய வாடிக்கையாளரின் ஆணைகளை அது விரைவாகச் செல்படுத்துவதோடு மாத்திரமன்றி, சந்தையைச் சுறுசுறுப்பானதாகவும் ஆக்குகின்றது. இந்தியாவில் நிலைமை இப்படியன்று. இங்கு வங்கியர் தம்முடைய வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்களைத் தம்முடைய தரகருக்கு அனுப்பிவைக்கிறார். இந்த அறிவுறுத்தல்களைக் கொடுப்பதில் வங்கியால் ஒரு தவறு செய்யப்பட்டு அதன் விளைவாக அவருடைய வாடிக்கையாளர் நட்டமேதும் அடைந்தால் அதனை வங்கியர் ஈடு செய்யவேண்டும். மேலும், விற்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்குப் பணத்தைப் பெறும் வகையில், தரகருடைய காசோலையை வங்கியர் ஏற்றுக்கொண்டு, அதைத் தொடர்ந்து காசோலை மறுக்கப்பட்டால், அவருடைய வாடிக்கையாளருக்கு வங்கியர் பொறுப்பாளியாவார்; வாடிக்கையாளருக்கு ஈடு செய்யவேண்டிய பொறுப்பு அவர்மீதே சாரும். இருப்பினும், தரகரும் வாடிக்கையாளரும் ஒரே வங்கியரிடம் தங்கள் கணக்குகளை வைத்திருந்தால் இத்தகைய இடர்ப்பாடு எழுவதற்கு வாய்ப்பில்லை.

தெளிவான அறிவுறுத்தல்களைப் பெறவேண்டியதன் அவசியம் (Need for Obtaining Precise Instructions): பங்குத் தொகுப்புகள், மற்றும் பங்குகள் ஆகியவைகளின் விற்பனை அல்லது கொள்முதல் சம்பந்தமாகத் தெளிவான அறிவுறுத்தல்களைக் கொடுக்குமாறு வாடிக்கையாளர்களை வற்புறுத்துவதன்மூலம் வங்கியர் தங்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்கின்றனர். இதற்காக ஒரு தனிப் படிவம் (form) பயன்படுத்தப்படுகிறது; இதில் வாடிக்கையாளர், பிணையப் பத்திரங்களின் முழு விவரங்களையும் அவை எந்தத் தொகைக்குள் விற்கப்படவேண்டும் அல்லது வாங்கப்படவேண்டும் என்ற வரையறைகள் ஏதாவது இருப்பின், அந்த வரையறைகள், பதிவு செய்யப்பட்ட பிணையப் பத்திரங்களின் விடயத்தில் யாருடைய பெயர் அல்லது பெயர்களில் அவை பதிவு செய்யப்பட்டுள்ளனவோ அந்த நபர்களின் பெயர்கள், முகவரி, தொழில் முதலியவை தொடர்பான முழுவிவரங்கள், எப்பொழுது அவை விற்கப்படவேண்டும், அல்லது அவை கொள்முதல் செய்யப்பட்டபின்னர் யாருடைய பெயர் அல்லது

பெயர்களில் பதிவு செய்யப்படவேண்டுமோ அந்த நபர் அல்லது நபர்களின் பெயர், முகவரி, தொழில் ஆகியவைகளையும் கொடுக்க வேண்டும். (பின்னிணைப்பு-'ஆ', படிவம் எண். 41)

வாடிக்கையாளரின் கணக்கைப் பற்றெழுதுவதற்கு அதிகாரம் (Authority to Debit Customer's Accounts): ஒரு பொதுவிதியாக, வங்கிகள், அவர்களுடைய வாடிக்கையாளர்களை, கொள்முதல் செய்வதற்கான அவர்களுடைய ஆணைகளுடன் சேர்த்து, அவர்களுடைய கணக்குகளைக் கொள்முதல் தொகைக்குப் பற்று வைப்பதற்கு வங்கியர்களுக்கு அனுமதி அளித்து, உரிய முறையில் கையொப்பமிடப்பட்ட ஓர் அதிகாரத்தையும் அனுப்பும்படி வேண்டுகின்றன; அவ்வாறு செய்யத் தவறினால், அந்தத் தொகைகளுக்கு வாடிக்கையாளர்களுடைய காசோலைகள், கொள்முதல் ஆணைகள் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப் படவேண்டும். தரகர்களுக்கு விடுக்கப்படும் எல்லா ஆணைகளும், பங்குத் தொகுப்பு மற்றும் பங்கு நடவடிக்கைகளுக்கெனத் தனியாக உள்ள ஒரு பதிவேட்டில், பதிவு செய்யப்பட்டு ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக, எப்போதும் கையில் வைத்திருக்கப்படுகின்றன.

தரகு தொடர்பான நடைமுறை (Practice Regarding Brokerage): மேலை நாடுகளில், இந்த நடவடிக்கைகளுக்கு, வங்கியர் தரகரோடு கழிவினைப் (commission) பகிர்ந்து கொள்வதன் மூலம் தம்முடைய ஊதியத்தைப் பெறுகிறார்; தரகருக்குக் கழிவு பகிர்ந்து தரப்படுகின்ற உண்மை, தெளிவாக, தரகரின் ஒப்பந்தக் குறிப்பில் காட்டப்படவேண்டும். ஓர் இந்திய வங்கியர், மாறாக, பங்குத் தரகர்களுக்கு அளிக்கப்படும் தரகுகளோடு சேர்த்து ஒரு சிறிய கட்டணத்தை விதிக்கிறார். பம்பாய் பங்குமாற்று நிலைய உறுப்பினர்களின் நடைமுறையின்படி, சில வேளைகளில், தரகு, பங்குமாற்று நிலையப் பிணையப் பத்திரங்களை வாங்குதல் அல்லது விற்றல்பற்றிய ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள விலையில் சேர்க்கப்படுகின்றது. முதலீடு செய்கின்ற பொது மக்களின் நலனிற்காக இந்திய நடைமுறை ஊக்குவிக்கப்படலாகாது. ஒரு தரகர் என்பவர், ஒரு கூட்டமைப்பின் முகவர் மட்டுமே என்ற சட்டப்படியான நிலையை வலியுறுத்தக்கூடிய ஒரு நடைமுறை ஏற்படுவதற்கு வசதியாக இருக்கும்பொருட்டு, மாரிசன் பங்குமாற்று நிலைய விசாரணைக் குழு (1937) [The Marrison Stock Exchange Enquiry Committe, (1937)], விதிக்கப்படும் தரகின் தொகையைத் தெளிவாகக் காட்டுகின்ற பதிலாண்மை ஒப்பந்தங்களை விடுப்பது கட்டாயமாக ஆக்கப்படவேண்டுமென்று பரிந்துரைத்தது.

முதலீடுகள் பற்றிய அறிவுரை (Advice about Investments): வாடிக்கையாளரின் சார்பாக, பங்குத்தொகுப்பு மற்றும் பங்கு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், வங்கியரின் சொந்தத் தன்விருப்புரிமைப் (discretion) படி செய்யப்படும் முதலீடுகளிலிருந்து வேறுபடுத்தப்படவேண்டும். ஏற்கெனவே கூறியதுபோல, இதுவரையிலும், உயர்நீதி மன்றங்கள், ஒரு வங்கியரின் தொழில் முதலீடு செய்வதற்கான ஓர் ஆலோசகருடைய தொழிலைப் போன்றதன்று என்ற கருத்தைக் கொண்டிருந்தன. இருந்தபோதிலும், இத்தகைய ஆலோசனையை, கேட்கப்படுகின்றபொழுது, கொடுப்பது என்பது அவருக்கு ஒரு சாதாரண நடைமுறை வழக்காகிவிட்டது. சர் ஜான் பேஜட், என்பவரின் கூற்றுப்படி, தரகில் பங்கு கொள்வது என்பது வங்கியருக்கு வழக்கமான ஒன்று எனில் முதலீடுபற்றி அறிவுரை கூறுதல் என்ற, பங்குத் தரகருடைய வேலையில் ஒரு பகுதியையும் அவர்கள் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதற்குக் காரணமேதும் இருப்பதாகத் தெரியவில்லை; எனவே, அது நியாயமான முறையில், ஒரு வங்கியருக்கும் அவருடைய வாடிக்கையாளருக்குமிடையேயுள்ள உறவு காரணமாகத் தற்செயலாக எழுகின்ற ஒன்றாகும்; அதன் விளைவாக வங்கித் தொழிலினுடைய ஒரு பகுதியானதும் ஆகும். கூட்டுப்பங்கு வங்கிகளும், அவர்களுடைய மேலாளர்களும் (managers) நல்லெண்ணத்துடன் செயல்படுகிறார்கள் என்று இந்த நூல் முழுவதும் அனுமானம் செய்து கொண்டிருப்பதால், ஒரு வங்கியர் அடையக்கூடிய ஒரே இடர்வாய்ப்பு, சரியான ஆலோசனை கொடுப்பதில் அவருடைய கவனமின்மை காரணமாக எழக்கூடியதேயாகும். பொதுவாக, வங்கி மேலாளர் ஒருவர் பங்குமாற்று நிலையங்களில் குறிப்பிடப்படுகின்ற நூற்றுக்கணக்கான பிணையங்களில் ஒவ்வொன்றினைப் பற்றியும் ஆலோசனை கூறக்கூடிய நிலையில் இருக்கமுடியாது எனினும், அவர், தம்முடைய வங்கியின் சார்பாகத் தொழில் செய்து கொண்டிருக்கின்ற அனுபவம் வாய்ந்த தரகர்களின் உதவியையும், அனுபவ அறிவையுமாவது தம் கைவசம் வைத்துள்ளார். இருந்தபோதிலும், ஆலோசனை கூறுவதை, அவர் தாமே மேற்கொண்டால், முடிந்த அளவு முழுமையான மற்றும் நம்பகமான செய்தியைப் பெற்றுக்கொண்டு, தம்மையும் வங்கியையும் பாதுகாத்துக்கொண்ட பின்னர் மட்டுமே அவர் அவ்வாறு செய்ய வேண்டும்; ஆனால், ஒரு கொள்முதலுக்கு அல்லது விற்பனைக்கு ஆலோசனை கூறுவதன்மூலம் தம்மையோ, வங்கியையோ தவறு செய்வதற்கு ஆளாக்கிக் கொள்ளாமல் இருப்பது விரும்பத்தக்கதாகும்.

வாடிக்கையாளரின் பெயரைத் தரகருக்கு வெளியிடுதல்: (Disclosure of Customer's Name to Broker) : வங்கியர் ஒருவர், அவருடைய வாடிக்கையாளரின் பெயரைத் தரகருக்கு வெளியிட்டு, அதன் மூலம் அவர்களுக்கிடையே ஒப்பந்த உறவை ஏற்படுத்துகின்றபொழுது வங்கியர் பொறுப்பு எதனையும் ஏற்க வேண்டியதில்லை என்பது தெளிவு. ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு-226-ன் படி, ஒரு முகவர், ஒரு முதல்வரின் சார்பாக ஒப்பந்தத்தில் ஈடுபட்டு, மற்ற நபர், அவர் (முகவர்) அவ்வாறு ஒப்பந்தத்தில் ஈடுபடுகிறார் என்பதை அறிந்திருந்தால், முதல்வர் யார் என்பது வெளியிடப்படவில்லை என்பதாகக் கருதமுடியாது; அதன் விளைவாக, முகவர் யார் என்பது வெளியிடப்படாத தறுவாய்களில் செயல்படக்கூடிய கோட்பாடுகள் (Principles), இத்தகைய ஒரு தறுவாயில் செயல்படமாட்டா.

பொறுப்புரிமையர், நிறைவேற்றாண்மையர், ஆட்சியாளர் அல்லது சட்டமுகவராகச் செயல்படுதல் (Acting as Trustee, Executor, Administrator or Attorney): பொறுப்புரிமை நிறுமம், முதன் முதலில் அமெரிக்காவில் தோன்றியது; அது தொடங்கப்பட்ட பொழுது அதனுடைய முக்கியப்பணி, தனிப்பட்ட நபர்கள், பண்ணைகள் (Estates) மற்றும் கூட்டுருக்கள் (Corporations) ஆகியவைகளுக்குப் பொறுப்புரிமைகளை நடத்திச் செல்வதாக இருந்த போதிலும், தற்போது அது சிறிது சிறிதாகத் தன்னுடைய நடவடிக்கைகளின் எல்லையை, இதரப்பல பணிகளையும் தழுவும்படியாக விரிவுபடுத்தியுள்ளது. அவை: கேட்டவுடன் செலுத்தப்படவேண்டிய, மற்றும் காசோலைகளின் மூலம் அல்லது அறிவிக்கை (notice) மூலம் திரும்ப எடுக்கப்படுவதற்கு உட்பட்ட வைப்புகளைப் பெற்றுக்கொள்ளுதல், பங்குமாற்று நிலைய அல்லது இதரப் பிணையங்களுக்கெதிராகக் கடன்களை வழங்குதல், வணிகப் பத்திரங்களில் கொள்முதல் ஆகியவைகளாகும்—இவை யாவும் வணிகவங்கிகள் தொடர்பான பணிகள் என்று கூறப்படக்கூடியவைகளேயாகும்.

(அமெரிக்க) ஐக்கிய நாடுகளில், பொறுப்புரிமை நிறுமங்கள், தங்களுடைய வங்கித் தொழிலில் தங்களோடு போட்டியிடுகின்றன என்பதைத் தேசிய மற்றும் மாநில வங்கிகள் கண்டறிந்த பொழுது, அவைகளும் தங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு, பொறுப்புரிமை நிறுமங்களால் அளிக்கப்பட்டு வந்த வசதிகளை அளிப்பதற்கு முடிவு செய்தன. மற்ற நாடுகளில் உள்ள வங்கிகளின்மீதும், அதே அவசியத் தன்மை வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டதன் காரணமாக, இன்று, அவை சொத்துகளுக்குப்

பொறுப்புரிமையர்கள், நிறைவேற்றாண்மையர்கள் மற்றும் ஆட்சியாளர்கள் ஆகியோரின் கடமைகளைத் தயக்கமின்றி ஏற்றுக் கொள்கின்றன. மிக அண்மையில், சில இந்தியக் கூட்டுப்பங்கு வங்குகளுங்கூட, தனிப்பட்ட பொறுப்புரிமை அல்லது நிர்வாகத் துறைகளைத் திறப்பதன்மூலமோ அவைகளால் முற்றிலும் உடைமை கொள்ளப்பட்டு மேலாண்மை செய்யப்படும் துணை நிறுமங்களைத் தொடங்குவதன்மூலமோ இந்தப் பணிகளை ஏற்றுக் கொண்டுள்ளன. மத்திய நிறைவேற்றாண்மையர் மற்றும் பொறுப்புரிமையர் நிறுமம் லிட். (The Central Executor and Trustee Company Ltd.), சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவால் தொடங்கப்பட்டு நல்ல தொழிலையும் செய்து வருகின்றது.

பொறுப்புரிமையர்களாக வங்கிகள் (Banks as Trustees): இத்தகைய பணிகளைச் செய்வதற்கு, வங்கிகள் மிகவும் தகுதி வாய்ந்தவை என்ற உண்மையை மறுத்துக் கூறுவதில்லை. முதலாவது, தனி நபர்களைப் போலல்லாமல், கூட்டுரு நிறுவனங்களாக அவை இருப்பதால், வங்கிகள் தொடர்ச்சியாகச் செயலில் இருக்கின்ற தன்மையைக் (Continuous Existence) கொண்டுள்ளன; ஒரு தனி ஆள் பொறுப்புரிமையரைப் பொறுத்தமட்டில் இவவாறு இருக்காது; மேலும், அவர் இந்த வேலைக்குத் தேவையான நேரத்தை ஒதுக்குவதற்கும் முடியாத நிலையில் இருப்பார். இரண்டாவது, ஒரு தனி நபரைச் சூழ்ந்து கொள்ளக்கூடிய அபிலாசைகள் (temptations) அதிகமாக இருக்கின்றன; அவைகளை எதிர்த்துச் சென்று, அவர், சரியான பாதையைப் பின்பற்றுவாரா, மற்றும் நேர்மையான முறையில் செயல்படுவாரா என்று ஒருவர் அறிந்து கொள்வது முடியாததொன்றாகும். மூன்றாவது, வங்கிகள் பெறுகின்ற இத்தகைய வேலைகளின் அளவு, அவைகளின் பணியாளர் குழுவில் (staff) சிறப்பு அறிவையும், அனுபவத்தையும் தேவையாயுள்ள ஆணைகளை நிறைவேற்றுவதற்கு, சிறப்புத் தேர்ச்சி பெற்ற பணியாள்களை அமர்த்துவதற்கு வழி வகுக்கின்றது. இவ்வாறு அவைகளின் கட்டுப்பாட்டிலுள்ள வெவ்வேறு பொறுப்புரிமைகளும், ஒவ்வொரு பொறுப்புரிமையும் தனித் தனியாக நிர்வகிக்கப்படும்பொழுது இருப்பதைவிட, மிகவும் திறமையாக மேலாண்மை செய்யப்படும். நான்காவது, மேற்செலவுகள் (overhead-charges) பல எண்ணிக்கையிலான பொறுப்புரிமைகளுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுவதால், பொறுப்புரிமைகளை, வங்கிகளைக் கொண்டு மேலாண்மை செய்வது சிக்கனமானதாகும். இறுதியாக, இத்தகைய தன்மையிலான வேலையை ஏற்றுக்கொள்வதன்மூலம், வங்கிகள், வாடிக்கையாளர்களுக்குத் தங்களுடைய பயன்பாட்டினைக் கூட்டுகின்றன.

1882ஆம் ஆண்டின், இந்தியப் பொறுப்புரிமைகளின் சட்டத்தின் (Indian Trusts Act, 1882) 50ஆவது பிரிவு, பொறுப்புரிமைப் பத்திரத்தால் வெளிப்படையாக அனுமதிக்கப்பட்டிருந்தாலன்றி, அல்லது அத்தகைய விளைவினை ஏற்படுத்தக்கூடிய வெளிப்படையான ஓர் ஒப்பந்தத்தில், இறுதிப் பத்திரத்தை எழுதுபவர்கள் (testators), பயன்பெறுவோர்கள் (beneficiaries), அல்லது நீதிமன்றம் ஆகியவர்களோடு பொறுப்புரிமையை ஏற்றுக்கொண்டபொழுது, ஈடுபட்டிருந்தாலன்றி, பொறுப்புரிமையர் ஒருவருக்கு, அவருடைய உழைப்பு, திறமை, பொறுப்புரிமையை நிறைவேற்றுவதில் செலவழிக்கப்பட்ட காலம், ஆகியவைகளுக்காக ஊதியம் பெறுவதற்கு உரிமையில்லை என்று வெளிப்படையாகக் குறிப்பிடுவதால், வங்கிகள், இத்தகைய ஆவணங்களில் தங்களுக்குரிய கழிவு, மற்றும் இதரக் கட்டணங்கள் செலுத்தப்படுவதற்கான காப்பு வாசகங்கள் (provisions) ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்று பார்க்கவேண்டும்.

இத்தகைய பணிகள் இடர்வாய்ப்புகள் ஏதும் இல்லாதவை அல்ல என்பதை மறந்துவிடலாகாது; ஆகையால், பொறுப்புரிமையர் என்ற முறையில், தம்முடைய கடமையை நிறைவேற்றுவதில் சில முன்னெச்சரிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டியது வங்கியருக்கு அவசியமாகும்.

ஒரு பொறுப்புரிமையரின் கடமைகள் (Duties of a Trustee): தாம் பொறுப்புரிமையராக நியமிக்கப்பட்டவுடன், வங்கியர் செய்ய வேண்டிய முதல் வேலை, நிர்வகிக்கப்படவேண்டிய சொத்தினைப் பற்றிய முழு உண்மைகளையும் தெரிந்துகொண்டு, அவற்றின் மீது வில்லங்கங்களெவையேனும் (encumbrances) இருக்கின்றனவா என்று அறிவதாகும். சொத்தினுடைய பெரும்பகுதி அரைகுறையாகச் செலுத்தப்பட்ட (partly paid), அதிகமான அழைப்புகளுக்குப் (பணம் செலுத்தவேண்டியதற்கு) உட்பட்ட, பங்குகளாக இருப்பதாக அவர் கண்டறியும் தறுவாயில், பங்குகளின் மீதான அழைப்புகளுக்குப் பணம் செலுத்துவதற்கு ஏதுவாக இதரச் சொத்து போதுமான மதிப்பினைக் கொண்டதாக இருந்தாலன்றி, ஒரு பொறுப்புரிமையராக இருப்பதற்குத் தம்முடைய ஒப்புதலைக் கொடுப்பதற்கு வங்கியர் தயங்கவேண்டும்.

பொறுப்புரிமைச் சொத்தின்மீது சரியான கவனம் எடுத்துக் கொள்ளுதல் (To take proper care of Trust Property): ஒரு பொறுப்புரிமையர், சாதாரணக் கவனமும் புத்திசாலித்தனமும் கொண்டுள்ள நபர் ஒருவர் தம்முடைய சொந்தச் சொத்தினைப்

பொறுத்தமட்டில் எவ்வாறு செயல்படுவாரோ அதே முறையில் பொறுப்புரிமைச் சொத்தோடும் செயல்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறார். பொறுப்புரிமைப் பத்திரத்தின்படி, அவர், என்ன செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறாரோ அதை அவர் செய்யவேண்டும் அல்லது, அவ்வாறு செய்வது இயலாத ஒன்றாக ஆகின்றபொழுது வயதடைந்த பயன்பெறுவோர்களினுடைய கட்டளையின்படியோ, நீதி மன்றம் வேறுவகையாக ஆணையிட்டால் அதன்படியோ செய்யவேண்டும். அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கப்படும்பொழுது, அல்லது சூழ்நிலைகள் அவ்வாறு செய்வதைத் தேவையாக்கும்பொழுது, தம்முடைய விருப்புரிமையைப் (discretion) பயன்படுத்துவதில், அவர் நேர்மையாகச் செயல்படவேண்டும் என்பது மட்டுமன்றி, அவருடைய சொந்த விவகாரங்கள் சம்பந்தமாக, கவனமும் புத்திசாலித்தனமும் உடைய ஒரு தொழில் நடத்துபவர் எவ்வளவு பயன்படுத்துவாரோ அவ்வளவு விடாமுயற்சியையும் அவர் பயன்படுத்தவேண்டும். பொறுப்புரிமைச் சொத்து பாதுகாப்பாக உள்ளதா என்பதையும் ஒரு பொறுப்புரிமையர் பார்க்கவேண்டும். இறுதிப் பத்திரம் எழுதியவரே (testator) கடன்களை வழங்கியிருந்தபோதிலும், இறுதிப் பத்திரம் எழுதியவருடைய சொத்துகள், ஆள்சார் பிணையத்தின் மீது வரவேண்டியுள்ளவைகளாக இருக்கும்படி அனுமதிக்கக் கூடாது. இறுதிப் பத்திரம் எழுதியவர் இறந்து ஓர் ஆண்டிற்கும் மேலாக ஆன பின்னர், மற்றும் அவருடைய கடன்களும் இதரப் பொறுப்புகளும் கொடுக்கப்பட்டபின்னர், பணம் ஒரு வங்கியரின் கைகளில் இருப்பதற்கு, சாதாரணமாகப் பொறுப்புரிமையர் ஒருவர் அனுமதிக்கக்கூடாது. இறுதிப் பத்திரம் எழுதியவரின் மரணத்திலிருந்து ஓர் ஆண்டிற்குள், இறுதிப் பத்திரத்தை எழுதியவரின் பணங்களை வசூல் செய்யவேண்டுமென்று பொறுப்புரிமையர் ஒருவர் எதிர்பார்க்கப்படுகிறார்.

இறுதிச் சடங்குச் செலவுகளுக்குப் பணம் ஒதுக்குதல் (To provide for Funeral Expenses): பொறுப்புரிமையர் ஒருவர், முதன் முதலாக, இறுதிச் சடங்குச் செலவுகளுக்கும், மற்றும் இறப்புறுதிச் சான்றினைப் (proleate) பெறுவதில் ஏற்க வேண்டியிருக்கும் செலவுகளுக்கும் பணம் ஒதுக்க வேண்டும். அடுத்து, மரணத்திற்குமுன் மூன்று மாதங்களுக்குப் பணியாள்களுக்குரிய கூலிகளுக்கு ஒதுக்கீடு செய்யவேண்டுமென்பது வருகின்றது. அதன்பின்னர், இதரக் கடன்களுக்கு, பற்றுரிமை அல்லது பொருட்பிணைப் பொறுப்பு ஏதுமிருப்பின் அவை மூலமான முன்னுரிமைகளின்படி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். இறுதியாக, மரபுரிமை உடைமைகளுக்கு (legacies) ஒதுக்கீடு செய்யப்படலாம்.

பொறுப்புரிமைப் பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களின்படி செயல்படவேண்டும் (To act in accordance with Instructions in the Trust Deed): பொறுப்புரிமையை நிறைவேற்றிச் செல்கின்ற அவருடைய பாதையில் தேவையற்ற இடையூறுகள் வருவதை ஒரு பொறுப்புறுதியர் தவிர்க்க வேண்டுமென்கின்ற அதே நேரத்தில், தவிர்க்கக்கூடிய இடர்வாய்ப்புகளை அவர் ஏற்க வேண்டி வருவது, அவரைப் பொறுத்தமட்டில் அறிவுடைமை ஆகாது. அவர், பொறுப்புரிமைப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள வாசகங்களின்படி செயல்படவேண்டும்; ஏனென்றால், பொறுப்புரிமைப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள வாசகங்களிலிருந்து விலகிச் செல்வது, அல்லது அவைகளை மீறி நடப்பது, நிச்சயமாக, பொறுப்புரிமையை முறிவு (breach) செய்துவிட்ட குற்றத்திற்கு அவரைப் பொறுப்பாளியாக ஆக்கும்; மற்றும், "பயன் பெறுவோர், (beneficiary) மோசடி செய்து, பொறுப்புரிமையரை, (பொறுப்புரிமையை) முறிவு செய்யும்படி தூண்டியிருந்தாலன்றி, அல்லது பயன்பெறுவோர் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்குத் தகுதியுடையவராக இருந்துகொண்டு, வலுக்கட்டாயம் (coercion) அல்லது தகுதிக்கு மிஞ்சிய தூண்டுகோல் ஆகிய எதுவும் அவர்மீது எந்த விளைவினையும் ஏற்படுத்துமாறு கொண்டுவரப்படாமல் இருந்து, முறிவுக்கு அவர் உடந்தையாயிருந்தால் அன்றி அல்லது அதற்குப்பின்னர், விவகாரத்தினுடைய உண்மைகளையும், மற்றும் பொறுப்புரிமையருக்கு எதிரான தம்முடைய உரிமையையும் முழுமையாக அறிந்துகொண்டு அதற்கு உடன்பட்டவராக இருந்தால் அன்றி, 'முறிவு காரணமாகப் பயன்பெறுவோர் அடையக் கூடிய ஏதாவது நட்டத்திற்கு ஈடு செய்யுமாறு அவர் (பொறுப்புரிமையர்) கேட்கப்படலாம். (1882ஆம் ஆண்டின் இந்தியப் பொறுப்புரிமைகள் சட்டம், பிரிவு-23—Section 23 of the Indian Trust Act, 1882). பொறுப்புரிமைப் பத்திரத்தில் அதற்கு மாறாக, வெளிப்படையாக அதிகாரமேதும் அளிக்கப்பட்டாலன்றி, பொறுப்புரிமையர் ஒருவர், 1882ஆம் ஆண்டின், இந்தியப் பொறுப்புரிமைகள் சட்டம், பிரிவு 20-ல் கூறப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள பிணையப் பத்திரங்களில்தான் பணத்தை முதலீடு செய்யவேண்டும். முதலீடுகள் தொடர்பாகப் பரந்த அளவிலான விருப்புரிமையைப் பொறுப்புரிமையர்களுக்கு அளிக்கின்ற பொறுப்புரிமைப் பத்திரங்கள், அவர்கள் அவ்வாறு முதலீடு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள பிணையப் பத்திரங்களைப் பொதுவாகக், குறிப்பிடுகின்றன; ஆனால் விருப்புரிமையின்படி முதலீடு செய்வதற்கான ஒரு சாதாரண (bare) உரிமை, வழக்கமாக, அங்கீகரிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களின் எல்லையைத் தாண்டிச் செல்வதற்குப் பொறுப்புரிமையர்க்கு அதிகாரமளிக்காது. பொறுப்

புரிமை நிதிகளை, அவருடைய விருப்புரிமையின்படி முதலீடு செய்வதற்குப் பொறுப்புரிமையர் அதிகாரமளிக்கப்பட்டிருந்தபோதிலுங்கூட, அது, பொறுப்புரிமைப் பிணையப் பத்திரங்களின் (trustee securities) எல்லையைத் தாண்டி அவைகளை வேறு பிணையப் பத்திரங்களில் முதலீடு செய்வதற்கு, அவர், அதிகாரம் பெற்றுள்ளார் என்பதாகப் பொருள்படாது. இத்தகைய அதிகாரம், பொறுப்புரிமையர்க்கு முழுமையான விருப்புரிமையைப் பெயரளவில்தான் அளிக்கின்றது. ஒரு பொறுப்புரிமையர், பொறுப்புரிமைப் பணத்தை, ஊக வணிகம், மற்றும் ஆபத்தான பிணையப் பத்திரங்களில் ஒருபோதும் முதலீடு செய்யக்கூடாது. இருப்பினும், பொறுப்புரிமையை முறிவு செய்ததற்கு ஒரு பொறுப்புரிமையரைப் பொறுப்பாளியாக்குவதற்கு, அவர் நேர்மையற்ற செயலைச் செய்தல், கவனமின்மை, அல்லது செய்யவேண்டியதைச் செய்யத் தவறுதல் ஆகியவைகளைச் செய்த குற்றவாளியென நிரூபிக்கப்படவேண்டும்; எடுத்துக்காட்டாக, தரகர் ஒருவர், அல்லது நல்லெண்ணத்துடன் யாரிடம் பொறுப்புரிமைப் பணம் அல்லது பிணையப் பத்திரங்கள் வைப்புச் செய்யப்பட்டுள்ளனவோ அந்த, போதுமான நல்ல நிலையில், நல்ல செல்வாக்குடன் உள்ள நபர் ஒருவர், அவைகளோடு ஓடி மறைந்துவிட்டால், அல்லது பிணையப் பத்திரங்கள் தேய்மானமடைந்துவிட்டால் (மதிப்பில் குறைந்து போய்விட்டால்), பொறுப்புரிமையரை அவைகளுக்குப் பொறுப்பாளியாக ஆக்கமுடியாது; ஆனால், எத்தறுவாயிலும் பொறுப்புரிமை நிதியை வேறு எந்தப் பணத்தோடும் கலக்கக் கூடாது. ஒரு பொறுப்புரிமையின் நிர்வாகம் தகராறுக்கு (dispute) வருமானால், நீதி மன்றங்கள், பொதுவாக, பொறுப்புரிமையர்க்கு எதிராகக் கருத்துக் கொள்கின்ற முறையில் (ஒரு பக்கம்) சார்ந்தவைகளாகவே (inclined) இருக்கின்றன.

ஐயம் எழுகின்ற தறுவாய்களில் நீதிமன்றத்தின் ஆணையைக் கோருதல் (To ask for Court's order in Doubtful cases) : பொறுப்புரிமைகளை நிர்வகிப்பதில் மிகவும் எச்சரிக்கையாகவும் நேர்மையாகவும் செயல்படுகின்ற பொறுப்புரியர்களுக்கு உதவி செய்வதற்கு மட்டுமே நீதிமன்றங்கள் விருப்பம் கொண்டவைகளாக உள்ளன; ஆனால் பயன் பெறுவோர்களுக்கு உதவுவதில் அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருந்த போதிலும், பொறுப்புரிமைப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள கட்டளைகளுக்கு (directions) எத்தகைய மதிப்பும் கொடுக்காமல் செயல்படுகின்ற பொறுப்புரிமையர்களுக்கு ஆதரவு எதுவும் தருவதில்லை. வங்கியர் ஒருவருக்கு மிகவும் சிறந்த வழிகாட்டியாகவுள்ள கோட்பாடு யாதெனில், பொறுப்புரிமையின் வாசகங்களை (terms) அப்படியே

செயல்படுத்துவதாகும்; மற்றும் பொறுப்புரிமைப்பத்திரத்தின் ஏதாவது வாசகத்தின் பொருள்பற்றி உண்மையிலேயே ஐயம் எழுகின்ற தறுவாயில், அந்தப் பிராந்தியத்தில், முதன்மை ஆட்சிவரம்பு கொண்டுள்ள உரிமையில் நீதிமன்றத்திற்கு, (Civil Court of original Jurisdiction) ஒரு விண்ணப்பம் செய்து ஐயப்பாட்டினைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். இத்தகைய ஒரு விண்ணப்பத்தில், உண்மைகளை நல்லெண்ணத்துடன் கூறி, நீதிமன்றத்தால் கொடுக்கப்படும் கருத்து, அறிவுரை, மற்றும் கட்டளைகளின்படி செயல்படுகின்ற பொறுப்புரிமையர், அவருடைய சொந்தப் பொறுப்பினைப் பொறுத்தமட்டில், விண்ணப்பம் தொடர்பான பொருளின் விடயத்தில், ஒரு பொறுப்புரிமையர் என்ற முறையில் தம்முடைய கடமையை நிறைவேற்றியவராகக் கருதப்படுவார்.

தகாதமுறையில் சொத்தினை உரிமை மாற்றம் செய்தால் பொறுப்புரிமையரின் பொறுப்பு (Liability of Trustee for conversion) : சட்டத்தின்படி, தனிநபர் ஒருவருடைய உபயோகம் அல்லது நன்மைக்காக, அல்லது ஏதாவது பொது அல்லது அறக்காரியத்திற்காக உள்ள ஒரு சொத்தினுடைய பொறுப்புரிமையர், அவருடைய சொந்த உபயோகத்திற்காக அல்லது தன்மைக்காகப் பொறுப்புரிமைச் சொத்தின் ஏதாவது பகுதியைத் தகாத முறையில் மாற்றம் செய்த அல்லது ஒதுக்கி வைத்த குற்றம் செய்ததாகக் கண்டறியப்பட்டால் அவர் குற்றத்திற்கான தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுத் தண்டிக்கப்படுகிறார். மேலும், அவ்வாறு கையாடல் செய்யப்பட்ட அல்லது தவறாக உபயோகப் படுத்தப்பட்ட தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கும் அவர் பொறுப்பாளியாவார்.

வங்கிகள் நிறைவேற்றாண்மையர்களாகவும் (சொத்து) ஆட்சியாளர்களாகவும் (Banks as Executors and Administrators) நடைமுறையில், நிறைவேற்றாண்மையர்களின் உரிமைகளும், (சொத்து) ஆட்சியாளர்களின் உரிமைகளும், முன்னவர்கள், இறந்து போனவருடைய உயிலின்படி (Will) கட்டளைகளை நிறைவேற்றவேண்டியவராக இருக்கின்றபொழுது, பின்னவர்கள், இறந்து போனவருடைய உயில் ஏதும் அங்கு இல்லாததால் சட்டத்தால் தங்களின்மீது சுமத்தப்பட்டுள்ளவைகளைத் தவிர வேறு கடப்பாடுகள் எதனையும் நிறைவேற்றவேண்டியவர்கள் அல்லர் என்ற வேறுபாட்டினைத் தவிர, மற்ற வகையில், ஒரே மாதிரியானவைகளாகும். ஒரு சொத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட நிறைவேற்றாண்மையர்கள் இருக்கலாம்; ஆனால் (சொத்து ஆட்சி

யாளரைப் பொறுத்தமட்டில்) ஒரே ஒரு ஆட்சியாளர் மட்டுமே இருப்பதுதான், பொதுவாக, வழக்கு.

நிறைவேற்றாண்மையர் அல்லது ஆட்சியாளராக யார் நியமிக்கப்படலாம் (Who may be appointed Executor or Administrator): 1925ஆம் ஆண்டின் இந்திய வழியுரிமைச் சட்டத்தின்கீழ் (**The** Indian **S**uccession Act, 1925) ஓர் உயில் மெய்ப்பிதழ் (Probate of a Will), இளவர் அல்லது, சமமன நிலையற்ற (unsound mind) ஒரு நபருக்குக் கொடுக்கப்படலாகாது (பிரிவு-**223**). அதேபோல, ஆட்சியுரிமைக் கடிதங்கள் (Letters of Administration) இளவர் அல்லது சமமன நிலையற்ற ஒரு நபருக்குக் கொடுக்கப்படக்கூடாது (பிரிவு 236). இவ்வாறு, இளவர் (minor) ஒருவர், அல்லது சம மனநிலையற்ற ஒரு நபர், மட்டுமே ஒரு நிறைவேற்றாண்மையர் அல்லது ஆட்சியாளராகச் செயல்படுவதற்குத் தகுதியற்றவர் என்பது தெளிவு. ஒரு கூட்டுரு (corporation) நிறைவேற்றாண்மையர் அல்லது ஆட்சியாளராகச் செயல்படுவதிலிருந்து தகுதியற்றதாக உள்ளது என்பது இன்னும் ஐயப்பாடு உடையதாகவே இருந்து வருவதாகத் தெரிகிறது. இந்த ஐயப்பாடு, 1931ஆம் ஆண்டின் இந்திய வழியுரிமை (திருத்தச்) சட்டம், [Indian Succession (Amendment) Act, 1931] நிறைவேற்றப்பட்டதன் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது; அந்தச் சட்டத்தின் பிரிவு-2, மேலே கூறப்பட்ட முதன்மைச் சட்டத்தினுடைய 223, மற்றும் 236 ஆகிய பிரிவுகளோடு பின்வருமாறு சேர்க்கையினைச் (addition) செய்துள்ளது:

> இது தொடர்பாக மாநில அரசால் ஏற்படுத்தப்படுகின்ற விதிகளினால் குறிப்பிடப்படுகின்ற நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற ஒரு நிறுமம் அல்லாத எந்த ஒரு தனிநபர்களின் கூட்டமைப்பிற்கும் (association) இல்லை.

திருத்தத்தினுடைய நோக்கம், ஐயமின்றி மேலே சொல்லப்பட்ட வாசகங்களின் எல்கைக்குள் வருகின்ற நிறுமங்களை, நிறைவேற்றாண்மையர்கள் அல்லது ஆட்சியாளர்களாகப் பதவிகளை வகிப்பதற்குத் தகுதியுடையவைகளாக ஆக்குவதேயாகும். இது தொடர்பாக, அப்போதைய பம்பாய் மாநில அரசால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் பின்வருமாறு:

1. நிறுமம் எனப்படுவது, (அ) இந்திய நிறுமங்களின் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுமம், அல்லது (ஆ) கிரேட் பிரிட்டனின் ஐக்கிய அரசு (United Kingdom of Great Britain), மற்றும் வடஅயர்லாந்து ஆகியவைகளின் சட்டத்தின்

கீழ் அமைக்கப்பட்டு, இந்தியாவில் தொழில் செய்வதற்கான ஓர் இடத்தைக் கொண்டுள்ள ஒரு நிறுமம் ஆகியவைகளில் ஏதாவது ஒன்றாக இருக்கும்.

2. நிறுமம், அதனுடைய அமைப்பு விதிகளினால், பொறுப் புரிமைத் தொழிலை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கும்.

3. நிறுமம், தற்போதைக்கு, (அ) இந்திய நிறுமங்களின் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுமம் எனில், ரூ. 10,00,000, (ஆ) கிரேட், பிரிட்டனின் ஐக்கிய அரசு மற்றும் வட அயர்லாந்து ஆகியவைகளின் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட நிறுமம் எனில் £. 10,000, ஆகிய தொகைகளுக்குக் குறையாமல் செலுத்திய பங்கு முதலைக் (Paid-up Share-capital) கொண்டிருக்கும். இத் தொகையில் பாதி ரொக்கமாகச் செலுத்தப்பட்டிருக்கும். இந்தியாவிலுள்ள ஒரு மாநில அரசு, இந்தக் கடைசி நிபந்தனையை நிறைவேற்றுவதிலிருந்து, எந்த நிறுமத்திற்கும் விதிவிலக்கு அளிப்பதற்கு அதிகாரத்தைக் கொண்டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள விதிகளிலிருந்து, நிறைவேற்றாண்மையர்கள், மற்றும் ஆட்சியாளர்களின் தொழிலை ஏற்றுக் கொள்வதற்கான தகுதியைப் பெறுவதற்கு, இந்திய நிறுமங்களின் சட்டத்தின்கீழ் அமைக்கப்படும் நிறுமங்கள், ஐக்கிய அரசு (U.K.) சட்டங்களின்கீழ் அமைக்கப்படும் நிறுமங்களைவிட மிக அதிக அளவில் செலுத்து முதலைக் கொண்டிருக்கவேண்டியவைகளாக உள்ளன என்பதைக் காணலாம். இத்தகைய வேற்றுமை பாராட்டுவதற்கான (discrimination) காரணங்கள் முற்றிலும் தெளிவாகத் தெரியவில்லை.

நிறைவேற்றாண்மையர்கள், ஆட்சியாளர்கள் ஆகியோரின் கடமைகள் (Duties of Executors and Administrators): நிறைவேற்றாண்மையர்களாகவும், ஆட்சியாளர்களாகவும் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதில், வங்கியர், முந்தியதில் உயிலில் (Will) உள்ளவற்றையும், பிந்தியதில் ஆட்சி செய்வதற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள சரத்துகளையும் (Terms of Administration) மிகவும் கவனமாகக் கடைப்பிடிக்கவேண்டும். அந்தப் பகுதியில் முன்னணியிலுள்ள சில செய்தித்தாள்களில் அறிவிக்கைகளை விடுத்து, இறந்து போனவருக்கு எதிராகக் கோருரிமைகளைக் கொண்டுள்ள கடனாளர்களையும் (creditors), மற்றோரையும், ஒரு குறிப்பிட்ட தேதியில் அல்லது அதற்குமுன்னர், தங்களுடைய கோருரிமைகளை அனுப்பி அவைகளை நிருபணம் (prove) செய்யுமாறு, அவர்கள் (நிறைவேற்றாண்மையர்கள், ஆட்சியாளர்

கள்) அழைக்கவேண்டும். வழக்கமாக அறிவிக்கையில், குறிப்பிடப்பட்ட காலம் முடிவடைந்தவுடன், இறந்து போனவருடைய சொத்துகள், நிறைவாக யாருடைய கோருரிமைகள் நிரூபிக்கப்பட்டுள்ளனவோ, அத்தகைய உரிமை கோரும் நபர்களுக்கிடையே மட்டுமே பகிர்ந்தளிக்கப்படும் என்று அறிவிக்கவேண்டும். சொத்துகள் பகிர்ந்தளிக்கப்படுவதற்குமுன், தம்முடைய கோருரிமைக்கு ஆதரவாகத் தகுந்த அறிவிக்கையினையும், அத்தாட்சியையும் கொடுக்கத் தவறுகின்ற எந்த நபருக்கும் நிறைவேற்றாண்மையர்கள் பொறுப்பாளியாகமாட்டார்கள். இந்த முறை, நிறைவேற்றாண்மையர்களை, அவர்களுடைய பொறுப்பிலிருந்து முற்றிலும் விடுவித்துவிடுவதாகத் தோன்றியபோதிலுங்கூட, சொத்துகளைத் தம்மகத்தே வைத்துக் கொண்டிருக்கின்ற கடனாளர் ஒருவருக்கு உள்ள உரிமையை அது பாதிப்பதாகத் தோன்றவில்லை. வங்கியர் ஒருவர், உயிலின் மூலமான கொடையை (legacy), அவராக விரும்பி ஒருவருக்குக் கொடுத்துவிட்டால், அத்தகைய கொடையைப் பெற்றவரை (legatee), அக்கொடையினைப் பெறுவதற்கு உரிமையுள்ள மற்றவர்களுக்கும் அதனைக் கொடுப்பதற்காகப் பணத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு கட்டாயப்படுத்தமுடியாது; ஆனால், அதனைச் சட்டத்தினுடைய கட்டாயத்தின்பேரில் கொடுத்திருந்தால், அவர், அவ்வாறு செய்யலாம் (அதாவது திருப்பிக் கொடுக்கும்படி கோரலாம்). கொடைகள் கொடுக்கப்பட்டபொழுது, அவைகளைப்பற்றிய அறிவிக்கையெதனையும் நிறைவேற்றாண்மையர் பெறாமல் இருந்து, சில கடன்கள் இன்னும் கொடுக்கப்படவேண்டியவைகளாகவும், நிறைவேற்றாண்மையர் அவைகளைப் பின்னர் செலுத்தவேண்டிய கடப்பாடு உடையவராகவும் இருந்தால், விகிதாசாரப்படி பெற்ற கொடையைத் திருப்பிக் கொடுக்குமாறு கொடையைப் பெற்றவர்களை அழைப்பதற்கு அவர் உரிமை பெற்றிருக்கிறார்.

நீதிமன்றக் கட்டணங்களின் செலுத்துகை (Payment of Court Fees): நிறைவேற்றாண்மையர் அல்லது ஆட்சியாளர் ஒருவருடைய பணிகளை ஏற்றுக் கொள்ளுகின்ற வங்கியர், நீதிமன்றக் கட்டணங்கள் செலுத்தப்படுவதில் மிகவும் கவனம் எடுத்துக் கொள்ளவேண்டும். சொத்தினை அதிகமாக மதிப்பீடு செய்ததன் விளைவாக, உண்மையில் செலுத்தப்படவேண்டியிருந்ததை விட அதிகமான கட்டணத்தை அவர் செலுத்தியிருந்தால், சில சூழ்நிலைகளில் மட்டுமே, அதனைத் திரும்பக் கொடுக்குமாறு அவர் விண்ணப்பம் செய்யமுடியும். எடுத்துக்காட்டாக, ஒரு உயில் மெய்ப்பிதழ் (Probate of a Will) அல்லது ஆட்சியுரிமை அளிப்புக் கடிதங்கள் (Letters of Administration) ஆகியவை

களைக் கோரி விண்ணப்பம் செய்ததன்பேரில், இறந்து போன வருடைய சொத்தினை, பின்னர் அது உண்மையில் இருந்ததை விட, அதிக மதிப்பில் இருப்பதாக மதிப்பீடு செய்து, அதன் விளைவாக அதிகப்படியான நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்தியிருந்தால், சொத்தினுடைய உண்மையான மதிப்பினை அறிந்து கொண்டபின்னர் ஆறு மாதத்திற்குள், உயில் மெய்ப்பிதழ், அல்லது ஆட்சியுரிமை அளிப்புக் கடிதங்கள் எங்கு அளிக்கப்பட்டனவோ அந்த உள்ளாட்சிப் பகுதிக்கான (local area) வருவாய் முதன்மைக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (Chief Controlling Revenue Authority) அதிகமாகச் செலுத்தப்பட்ட கட்டணத்தைத் திரும்பக் கோரி விண்ணப்பம் செய்யலாம். அவர், சம்பந்தப்பட்ட உயில் மெய்ப்பிதழ் அல்லது ஆட்சியுரிமை அளிப்புக் கடிதங்கள் ஆகியவைகளை, ஒரு வாக்குமூலப் பத்திரம் (affidavit) அல்லது உறுதிமொழிப் பத்திரம் (affirmation) ஆகியவைகளால் நிருபிக்கப்பட்ட இறந்தவருடைய சொத்துகளின் பட்டியல் மற்றும் மதிப்பீடு ஆகியவைகளோடு சேர்த்து மேலே சொல்லப்பட்ட அதிகாரியிடம் கொடுக்கவேண்டும். சொல்லப்பட்ட அதிகாரி, உயில் மெய்ப்பிதழ் அல்லது ஆட்சியுரிமை அளிப்புக் கடிதங்கள் ஆகியவைகளின்மீது செலுத்தப்பட்ட கட்டணம், சட்டப்படி செலுத்தப்படவேண்டிய கட்டணத்தைவிட அதிகமாக இருப்பதாக உறுதிப்படுத்திக்கொண்டால், அதிகமாகப் செலுத்தப்பட்ட தொகையை அவர் திரும்பச் செலுத்துவதற்குத் தடையேதும் (மறுப்பேதும்) கிடையாது. அதேபோல, செலுத்தப்பட்ட நீதிமன்றக் கட்டணம், உண்மையில் செலுத்தப்படவேண்டியதை விடக் குறைவாக இருந்து, அத்தகைய தவறு, சொத்தினுடைய சரியான மதிப்பினை அறிவதில் அவர் செய்த மோசடி, அல்லது பிழை காரணமாக ஆனது என்று கண்டறியப்பட்டால், நிறைவேற்றாண்மையர் அல்லது ஆட்சியாளர் சில தண்டங்களுக்கு (penalties) ஆளாவார். 1970ஆம் ஆண்டின் நீதிமன்றக் கட்டணங்கள் சட்டத்தினுடைய பிரிவு 19G-ல் பின்வருமாறு காப்பு வாசகம் உள்ளது :

ஏதாவது தவறு, அல்லது சொத்தினுடைய ஒரு பகுதி இறந்துபோனவருக்குச் சொந்தமானது என்பது அப்போது தெரியாது ஆகியவைகளின் காரணமாக, ஏதாவது உயில் மெய்ப்பிதழ், அல்லது ஆட்சியுரிமை அளிப்புக் கடிதங்கள் ஆகியவற்றின்மீது மிகவும் குறைவான நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால், இத்தகைய உயில் மெய்ப்பிதழ், அல்லது ஆட்சியுரிமை அளிப்புக் கடிதத்தின்கீழ்ச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு நிறைவேற்றாண்மையர் அல்

லது ஆட்சியாளர், தவற்றை (mistake) அல்லது இறந்து போனவருக்குச் சொந்தமானவை என்று, அந்த நேரத்தில், தெரியாது இருந்த சொத்துகளைத் தெரிந்துகொண்ட ஆறு மாதத்திற்குள், சொல்லப்பட்ட அதிகாரிக்கு (குறிப்பிட்ட உள்ளாட்சிப் பகுதிக்கான வருவாய் முதன்மைக் கட்டுப்பாட்டு அதிகாரி) விண்ணப்பம் செய்து, இத்தகைய, உயில் மெய்ப்பிதழ் அல்லது ஆட்சியுரிமை அளிப்புக் கடிதங்களின்மீது முதலில் நீதிமன்றக் கட்டணம் எவ்வளவு செலுத்தப்பட்டிருக்கவேண்டுமோ அதற்குச் சரியாக ஆக்குவதற்குத் தேவையாயுள்ள கட்டணத்தைச் செலுத்தவில்லையென்றால், அவர், ஆயிரம் ரூபாய், மற்றும் சரியான நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டதாகக் கருதப்படுவதற்கு இன்னும் தேவையாகவுள்ள தொகையின்மீது, நூற்றுக்குப் பத்து ரூபாய் என்னும் வீதத்திலான தொகை ஆகியவைகளைத் தண்டவரியாகக் கொடுப்பார்.

வங்கியர் சட்டமுகவராக (Bankers as Attorney): தம்முடைய வாடிக்கையாளரால் அமர்த்தப்பட்ட சட்டமுகவர் என்ற முறையில், வங்கியருடைய நிலை, நிறைவேற்றாண்மையர் அல்லது ஆட்சியாளர் என்ற முறையில் இருக்கும் நிலையைவிடப் பாதுகாப்பான ஒன்றாகும். வங்கியர் ஒருவருக்குச் சட்டமுகவர் அதிகாரத்தை அளிப்பதன் நோக்கம், தம்முடைய வாடிக்கையாளருக்குச் சொந்தமான பிணையப் பத்திரங்களின்மீது பங்காதாயங்கள் அல்லது வட்டியைப் பெற்றுக் கொண்டு, அதன்மூலம் செல்லுபடியாகத் தக்க கடன் தீர்வுகளைக் (discharge) கொடுப்பதற்கு அவருக்கு அதிகாரமளிப்பதற்காகவே ஆகும். அது, வாடிக்கையாளர் சார்பாக, பங்கு மாற்று நிலையப் பிணையப் பத்திரங்களின் விற்பனைகள், மற்றும் கொள்முதல்கள் தொடர்பாக மாற்றல் படிவங்களைக் கையொப்பமிடுவதற்குங்கூட, வங்கியருக்கு அதிகாரமளிக்கலாம். இவ்வாறு, பங்காதாய மற்றும் வட்டி ஆணைகளையும் மாற்றல் படிவங்களையும் கையொப்பமிடுகின்ற தொந்தரவுகளிலிருந்து வாடிக்கையாளர் விடுவிக்கப்படுகிறார். அவரால், வாடிக்கையாளருக்குச் செய்யப்படும் பணிகளுக்கு, வங்கியர் ஒரு கட்டணத்தை விதிக்கின்றார்.

சட்டமுகவர் அதிகாரத்தின்கீழ்ச் செய்யப்படும், வங்கியருடைய செயல்களின் சட்ட விளைவு (Legal Effect of Banker's Acts done in Pursuance of Power of Attorney): சட்டமுகவர் அதிகாரத்தினுடைய காப்பு வாசகங்கள் மிகவும் கவனத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளன; அவைகளின்படி செயல்படுவதன்மூலம் வங்கியரின் கடமை முடிகின்றது. இந்தத் தகுதியில் அவரால் செய்

யப்படும் எல்லாச் செயல்களும் வாடிக்கையாளராலேயே செய்யப்பட்டால் என்ன விளைவினை அவை ஏற்படுத்துமோ, அதே விளைவினையே ஏற்படுத்தும். குறிப்பிட்ட சில செயல்களை மட்டும் குறிப்பிடுவதன்மூலம் ஒரு பொதுவான, சட்டமுகவர் அதிகாரம் கட்டுப்படுத்தப்படுவதில்லை. 1882ஆம் ஆண்டின் சட்டமுகவர் அதிகாரங்களின் சட்டத்தின், 3ஆவது பிரிவு (Section 3 of the Powers-of-Attorney Act, 1882) ஒரு சட்டமுகவருக்குக் கீழ்க்காணும் பாதுகாப்பினை அளிக்கின்றது :

> சட்டமுகவர் அதிகாரத்தைக் கடைப்பிடித்து, நல்லெண்ணத்துடன் ஒரு செலுத்துகையை அல்லது செயலைச் செய்கின்ற ஒரு நபர், அந்தச் செலுத்துகைக்கு அல்லது செயலுக்கு முன்னர் அந்த அதிகாரத்தையளித்தவர், மரணமடைந்துவிட்டார், பைத்தியமாகிவிட்டார் அல்லது சமமனநிலையை இழந்துவிட்டார், பணம் முழுவதையும் இழந்துவிட்டார் அல்லது நொடிப்புநிலையை அடைந்துவிட்டார், அல்லது அளித்த அதிகாரத்தை விலக்கிக் கொண்டார் என்ற காரணத்திற்காக, செலுத்துகை அல்லது செயல் செய்யப்பட்ட நேரத்தில் இறப்பு, பைத்தியமாதல், சமமனநிலை இல்லாமை, பணத்தை இழந்த நிலை, நொடிப்பு நிலை அல்லது அதிகாரம் விலக்கப்பட்டது ஆகியவை பற்றிய உண்மை, செலுத்துகையை அல்லது செயலைச் செய்த நபருக்குத் தெரியாமல் இருந்திருந்தால், அந்தச் செலுத்துகை அல்லது செயல் தொடர்பாகப் பொறுப்பாளியாகமாட்டார்; ஆனால், இச்செயல், அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தில் உரிமை கொண்டுள்ள ஒரு நபருக்கு, அதனைப் பெற்றுக்கொண்டவருக்கு எதிராக உள்ள உரிமையைப் பாதிக்காது; அந்த நபர், செலுத்துகை செய்யப்படாமல் இருந்திருந்தால் அதனைச் செலுத்தியவருக்கு எதிராக என்ன பரிகாரத்தைக் (remedy) கொண்டிருப்பாரோ அதேபோன்ற பரிகாரத்தைப், பணம் பெற்றவருக்கு எதிராகக் கொண்டிருப்பார்.

வங்கிகள் மற்ற வங்கிகளுக்கும், இதர வகையான நிதிக் கூட்டுருக்களுக்கும் (கடிதத்) தொடர்பாளராக (Banks as Correspondents of Other Banks and other kinds of Financial Corporations): இப்பணிகள், பொதுவாக, இலவசமாக அளிக்கப்பட்டபோதிலும் அவைகளின் பயன்பாடு மிகச்சிறு அளவிலானது என்று கருதிவிடமுடியாது. சிறப்பாக, பயணம் செய்து கொண்டிருக்கும் ஒரு வாடிக்கையாளர்தாம் அவைகளின் மதிப்பினை நன்கு அறிந்து கொள்ளமுடியும். முற்றிலும் புதிய ஒரு நாட்டில்

தனிமையில் இருக்கும் பொழுதுகூட, வெளிநாட்டில் அவர் காலைவைக்கின்ற நேரம் முதல் அவர், ஒரு விலை மதிப்பிட முடியாத, அவருக்கு உதவி செய்ய எப்போதும் காத்துக்கொண் டிருக்கின்ற, தன் நாட்டில் உள்ள அவருடைய வங்கியருக்கு வெளிநாட்டில் முகவர் அல்லது தொடர்பாளராகச் செயல்படு கின்ற வங்கியர் என்ற நண்பரைக் கொண்டுள்ளார். இத்தகைய நண்பர் ஒருவர், பொதுவாக, நிதிநடவடிக்கைகளுக்கு மட்டுமல் லாமல் மற்றக்காரியங்களுக்குங்கூடக் கிடைக்கக்கூடியவராக உள்ளார்.

இதர முகவர் பணிகள் (Other Agency services): தங்க ளுடைய வாடிக்கையாளர்களின் சார்பாளர்களாகச் (Representatives) சில வங்கிகள், வருமான வரி (Income-Tax) அதிகாரி களுடன் கடிதத் தொடர்பினை செய்து கொண்டிருக்கின்றன. அவர்களின் வருமானம் பற்றிய செய்திகள் கொடுக்கப்பட்டதன் பேரில், தங்களுடைய வாடிக்கையாளர்களுடைய வருமானவரி அனுப்பீடுகளைத் (Income-Tax Returns) தயாரிப்பதற்கு அவர் கள் (வங்கியர்கள்) முன்வருகிறார்கள்; தங்களுடைய வாடிக்கை யாளர்களின் சார்பாகப் பெறப்படுகின்ற பங்காதாயங்கள் தொடர் பாகத் தேவையான செய்திகளை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கின்றபொழுது, சம்பந்தப்பட்ட வருமானவரிச் சான்றி தழ்களை, சம்பந்தப்பட்ட வருவாய் ஆண்டிற்கான வருவாய் அனுப்பீடுகளோடு சேர்த்து வருமானவரி அதிகாரிகளுக்கு அனுப்பப்படும்பொருட்டுத் தங்களிடமே வைத்துக்கொள்ளு கின்றன. தங்களுடைய வாடிக்கையாளர்களுக்காக, நுழைவுச் சீட்டுகள் (விசாக்கள்-Passports), இரயில்வே பயணச்சீட்டுகள், ஆகியவைகளை அவர்கள் பெறுகின்றார்கள்; பயணம் செய்வதற் கான உரிமையைப் (Passage) பெறுகின்றனர்; மற்றும், பயணி விடுதிகளில் தங்குமிடங்களை அமர்த்துகின்றனர்; வாடிக்கை யாளர்களுடைய கடிதங்களைத் திருப்பி அனுப்புகின்றனர் (Redirect); மற்றும் உண்மையில், தங்களுடைய வாடிக்கையாளர் களுக்கு, தங்களுடைய பயன்பாட்டினை அதிகப்படுத்துவதற்கான எல்லாவற்றையும் அவர்கள் செய்கிறார்கள்.

சில்லறை அல்லது பொதுப்பயன் பணிகள் (Miscellaneous or General Utility Services)

இப்போது நாம், தற்காலத்திய வங்கிகளால் செய்யப்படுகின்ற சில்லறைப் பயன்பாட்டுப் பணிகளைப் பார்ப்போம். இப்பணி களைச் செய்வதில் வங்கியரின் நிலை, அவருடைய வாடிக்கை

யாளருக்கு ஒரு முகவர் என்ற முறையில் அன்று. அவைகளில் முதன்மையானவை வருமாறு:

(1) ஆவணங்கள், பிணையப் பத்திரங்கள், மற்றும் இதர உயர்மதிப்புப் பொருள்கள் ஆகியவைகளைப் பாதுகாப்பு வைப்பிற்காகப் (Safe custody) பெற்றுக்கொள்ளுதல்;

(2) அந்நியச் செலாவணி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்;

(3) வாணிக உறுதிக் கடிதங்கள் (letters of credit), சுற்றுக் குறிப்புகள் (Circular Notes), பயணிகள் காசோலைகள் ஆகியவைகளை விடுத்தல்;

(4) தங்களுடைய வாடிக்கையாளர்களுடைய நிதி நிலைமை தொழில் செல்வாக்கு மற்றும் நன்மதிப்பு ஆகியவைகளைப் பற்றித் தகவல் அளிப்பதில் அறிவுரை நடுவர்களாகப் (referees) பணிபுரிதல்;

(5) அரசுகள், பொது நிறுவனங்கள், (Public bodies) மற்றும் வியாபாரக் கூட்டுருக்கள் (Trading Corporations) ஆகியவைகளால் எழுப்பப்படுகின்ற கடன்களை ஒப்புறுதி செய்தல் (underwriting);

(6) வாடிக்கையாளர்களுக்குச் சிறப்பு அறிவுரைப் பணிகளை வழங்குதல்.

வாடிக்கையாளர்களுடைய உயர்மதிப்புப் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் (Safe Custody of Customer's Valuables) : மாற்றுமுறைப் பிணையப் பத்திரங்கள் (Negotiable Securities), ஆபரணங்கள், பொன்-வெள்ளிப் பெட்டகங்கள் (Boxes of Plate), சொத்துகளின்மீதான உரிமைப் பத்திரங்கள் போன்ற உயர்மதிப்புப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதென்பது, ஒரு வங்கியினுடைய பணிகளோடு அண்மையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரு பணியன்று. இலண்டன் மாநகரத்தில் இருந்த முன்னாளைய பொற்கொல்லர்கள்கூட, இந்தவகையான தொழில்களில் நன்கு பழக்கப்பட்டிருந்தனர்; தற்காலத்திய வங்கியியல் கூட, முற்காலத்திய இத்தகைய பாதுகாப்பு வைப்புத் தொழிலிலிருந்து தோன்றியதொன்றேயாகும். பழங்காலத்திய இந்தியாவில் கூட ரொக்கம், ஆபரணம் மற்றும் இதர உயர்மதிப்புப் பொருள்கள் ஆகியவைகளின் பாதுகாப்பு வைப்பிற்கு வட்டிக்கடைக்காரர் (money lender) ஒருவர்தாம் நம்பகமான முகவராக இருந்தார். தம்முடைய தொழிலுக்காகப் பாதுகாப்பான பெட்டிகளையும், உறுதியான அறைகளையும் கொண்டுள்ள ஒரு தற்காலத்திய வங்கி,

திருட்டு மற்றும் தீ ஆகியவைகளுக்கெதிராகப் பாதுகாக்கப்பட்டிருப்பதால், உண்மையிலேயே, உயர்மதிப்புப் பொருள்களுக்கான, மிகவும் பாதுகாப்பான மற்றும் வசதியான வைப்பகம் (depository) ஆகும். பொருள்களைப் பாதுகாப்பு வைப்பில் விட்டுச் செல்வதற்கான விண்ணப்பப் படிவத்திற்குப் பின்னிணைப்பு " ஆ ", படிவம் எண் 42ஐ பார்க்கவும்.

பாதுகாப்பு வைப்பு முறைகள் (Form of Safe Custody Deposits) : பாதுகாப்பு வைப்பிற்காக ஒப்படைக்கப்படும் பொருள்கள், வாடிக்கையாளரால், பாதுகாப்பு அறையில், வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பு நிலைப் பெட்டியில் (Safe-Deposit Locker) வைத்துப் பூட்டி வைக்கப்படுகின்றன, அல்லது, வாடிக்கையாளரால் அங்கீகரிக்கப்பட்ட முத்திரையால், (Seal) முத்திரையிடப்பட்ட (Sealed) ஒரு பெட்டியில் அல்லது உறையில் (cover), பாதுகாப்பாக வங்கியரால் வைத்திருக்கப்படும் பொருட்டு வைக்கப்படுகின்றன. பாதுகாப்பு வைப்பிற்காக விட்டுச் செல்லப்படும் உறை (cover), பொட்டணம் (packet) அல்லது பெட்டியின் வெளிப்புறம், தெளிவான எழுத்துகளில், வைப்புச் செய்துள்ள வாடிக்கையாளருடைய பெயரைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு நிலைப் பெட்டியும் (locker) ஒரு தனி எண் கொடுக்கப்பட்டு, இரண்டு திறவுகோல் பூட்டு (Double key lock) ஒன்று இணைக்கப்பட்டதாக உள்ளது; இந்த இரண்டு திறவுகோல்களும் (ஒரு சேர) இன்றி நிலைப் பெட்டியைத் திறக்கமுடியாது; அதில் ஒரு திறவுகோல் வாடிக்கையாளராலும், மற்றொன்று வங்கியராலும் வைத்திருக்கப்படுகின்றன. இத்தகைய தறுவாய்களில், நிலைப் பெட்டியில் என்ன உள்ளது என்பதுபற்றிய சரியான தகவல் எதனையும் கொண்டிருக்கவேண்டுமென்று வங்கியர் எதிர்பார்க்கப்படுவதில்லை. அதனுடைய திறவுகோல் வைப்புச் செய்பவரால் வைத்திருக்கப்படுகின்ற பெட்டி விடயத்திலும் நிலைமை இதுதான். பிணைமுறிகள் (bonds) போன்ற சில கொணர்பவர் பிணையங்கள், அவைகளோடு சேர்ந்துள்ள கூப்பன்கள், தவணை நாள்களில் அவை செலுத்தப்படும் பொருட்டு வெட்டியெடுக்கப்பட்டுக் (நிறுமத்திடம்) கொடுக்கப்படவேண்டுமென்ற அறிவுறுத்தல்களோடு, வாடிக்கையாளர் ஒருவரால், பாதுகாப்பு வைப்பிற்காக விட்டுச் செல்லப்படுகின்றபொழுது நிலைமை வேறு.

பாதுகாப்பு வைப்பிற்கான இரசீது (Receipt for Safe Custody) : ஒரு பொது விதியாக, ஒரு சிறப்புப் படிவத்திலான இரசீதினுடைய சரிநேர்படியைக் (counterfoil) கையொப்பமிடு

மாறு வாடிக்கையாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்; இந்த இரசீது பாதுகாப்பு வைப்பு இரசீது ஏட்டிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டு, வங்கியரால் பாதுகாப்பு வைப்பிற்காகப் பொருள்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கு ஒப்புதல் அளிக்கும் முகமாக, வாடிக்கை யாளருக்குக் கொடுக்கப்படுகின்றது (பின்னிணைப்பு-''ஆ'', படிவம் எண் 43ஐ பார்க்கவும்). இரசீது, பொதுவாக, பாதுகாப்பு வைப்பிற்காக வைப்புச் செய்யப்பட்டுள்ள பொருள்களைத் திரும்ப எடுத்துக்கொள்ளுகின்ற நேரத்தில், வங்கியரைப் பொறுப்பிலிருந்து, உரிய முறையில், விடுவிக்கும் பொருட்டு, அதனைத் தாமே வங்கியரிடத்தில் ஒப்படைக்கவேண்டுமென்பதை, வாடிக்கையாளரின்மீது, கட்டாயமானதாக ஆக்குகின்ற ஒரு காப்பு வாசகத்தைக் கொண்டுள்ளது. இருந்தபோதிலும், வாடிக்கையாளர் தாமே செல்வதற்கு முடியாத நிலையிலிருந்தால், இரசீதினைக் கொணர்பவருக்குச் சம்பந்தப்பட்ட பொருள்களை ஒப்படைப்புச் செய்யுமாறு வங்கியருக்குக் கட்டளையிட்டு, இரசீதின் பின்புறத்தில் ஓர் ஆணையினில் அவர் கையொப்பமிடவேண்டும். வாடிக்கையாளரால், அல்லது அவருடைய முகவரால் கொடுக்கப்படும் இரசீதில் உள்ள கையொப்பம் உண்மையானதுதானா என்பது, அதனைச் சரிநேர்படியில் உள்ள கையொப்பத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பதன்முலம் சரிபார்க்கப்படலாம். வங்கியினுடைய அறையிலுள்ள, வாடிக்கையாளருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும், நிலைப்பெட்டியினுடைய (locker) திறவுகோலை வங்கியரே வைத்திருக்கின்ற பொழுது, நிலைப் பெட்டியில் உள்ளவைகளை சேதாரமடைதல் மற்றும் மூன்றாம் நபர்களின் சட்டத்திற்குப் புறம்பான தலையீடு ஆகியவைகளிலிருந்து பாதுகாப்பதோடு, நிலைப் பெட்டியினை வாடகைக்கு எடுக்கின்ற வாடிக்கையாளர், வங்கியருடைய அல்லது அவருடைய வாடிக்கையாளர்களின் கவனமின்மை காரணமாக ஏற்படுகின்ற நட்டங்கள் அல்லது காணமற்போதல் ஆகியவைகளுக்கு அவரைப் (வங்கியரை) பொறுப்பாளியாகக் காரணம் காட்டுவதிலிருந்து தடுக்கும் முறையில், தம்முடைய பாதுகாப்பு வைப்புத் தொழிலை வங்கியர் நடத்தவேண்டும்.

பாதுகாப்பு வைப்புப் பிணையப் பத்திரங்களின் பதிவேடு (Register of Safe Custody Securities): வைப்புச் செய்யப்பட்டுள்ள பெட்டி, அல்லது பொட்டணத்தினுடைய உள்ளடக்கம் பற்றி வங்கியர் தெரிவிக்கப்படுகின்றபொழுது, அல்லது பாதுகாப்பு வைப்பில் வைத்திருக்கப்படும் பொருட்டுப் பொருள்கள் வெறுமனே வங்கியிடம் கொடுக்கப்படுகின்றபொழுது, பாதுகாப்பு வைப்புப் பிணையப் பத்திரங்களான பதிவேட்டில், பின்வருமாறு விவரங்கள் பதியப்படுகின்றன :

எம். கே. ஸ்ராப், பார் அட் லா, அவர்கள்,

30, ஹார்ன்பி ரோடு, பம்பாய்.

தேதி	பெற்றுக்கொள்ளும் அதிகாரியின் பெயர் முதல் எழுத்துக்கள்	பிணையப்பத்திரத்தினுடைய பெயரளவு மதிப்பு	விவரம்	விடுக்கப்பட்ட இரசீது எண்	எவ்வாறு தீர்க்கப்பட்டது	திரும்ப ஒப்படைக்கின்ற அதிகாரியின் பெயர் முதல் எழுத்துக்கள்
12-3-1928	எஸ். கே. எச். ஜே. என். ஏ.	ரூ. 4000	5% போர்ப் பத்திரங்கள், 1928	79	திரும்பக் கொடுக்கப்பட்டது, மே, 7, 1933	எஸ். கே. எச். ஜே. என். ஏ.
6-6-1928	எஸ். கே. எச். ஜே. என். ஏ.	ரூ. 3000	30 இந்தோ-பர்மா பெட்ரோலியம் முன்னுரிமைப் பங்குகள் சான்றிதழ் எண். 19073	80	15-7-1929	எஸ். கே. எச். ஜே. என். ஏ.

பாதுகாப்பு வைப்பிலுள்ள பெட்டிகளின் பதிவேடு (Register of Boxes in Safe Custody): அதேபோல, பெட்டிகளின் பதிவேடு ஒன்றும் வைத்திருக்கப்படலாம்; இதில் பாதுகாப்பு வைப்பிற்காகப் பெறப்படும், பூட்டப்பட்ட எல்லாப் பெட்டிகளினுடைய விவரங்களும், அவைகளுடைய உரிமையாளர்களின் பெயர்களோடு சேர்த்துப் பதியப்படலாம். ஒவ்வொரு பெட்டியினுடைய வெளித் தோற்றத்தைப்பற்றிய விவரமும்கூட, அதற்கு ஒதுக்கப்பட்ட எண்

னுடன் பதிவேட்டில் குறிக்கப்படவேண்டும். உயர்மதிப்பான பொருள்களின் தன்மை, மற்றும் மதிப்புப்பற்றிய கருத்து எதனையும், அல்லது அவைகளை நிர்ணயம் செய்கின்ற வழிமுறைகளையும் வங்கி தன்னகத்தே கொண்டிருக்கவில்லையாதலால், அவைகளில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வங்கிகள், அவைகளுக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளமுடியாது; எனவே, தங்களுடைய நலத்திற்காகவேனும், வைப்புச் செய்பவரை, (பெட்டியின்) உள்ளிருப்பவைகளின் தன்மை, மதிப்பு மற்றும் அவை எந்த நிபந்தனைகளின்பேரில் கையாளப்படவேண்டும் என்பவைபற்றி முன் கூட்டியே கூறும்படி வங்கிகள் கேட்கவேண்டும். வங்கி வெறுமனே, ஆவணங்களின்மீதும், வைப்புச் செய்தவர்கள் அல்லது அவர்களுடைய முகவர்கள் ஆகியோரின் வாக்குமூலங்களின்மீதும் சார்ந்திருக்கமுடியாது; ஏனென்றால், முகவர்களே, பின்னர், வங்கிக்கு எதிரான, பொய்யான மற்றும் மோசடியான கோருரிமைகளுக்கு உடந்தையாயிருக்கக்கூடும்.

ஊதியம்பெறா ஒப்படை பெறுபவராக வங்கியர் (Banker as Gratuitous Bailee): பாதுகாப்பு வைப்பிற்காகப் பொருள்களை ஏற்றுக்கொள்ளுகின்ற வங்கியர் ஒருவரின் நிலை, ஓர் ஒப்படை பெறுபவருடைய (bailee) நிலையேயாகும்; அதாவது, யாருக்கு, ஓர் ஒப்பந்தத்தின்கீழ், நம்பிக்கையின்பேரில், பொருள்கள் ஒப்படைவு (bailment) செய்யப்பட்டுள்ளனவோ, மற்றும் யார், ஒப்படைவினுடைய வாசகங்களின்படி, வைப்புச் செய்யப்பட்ட பொருள்களின் பாதுகாப்பிற்கும், பாதுகாப்பாகத் திரும்பக் கொடுப்பதற்கும் பொறுப்பாளியோ அந்த நபருடைய நிலை. அவரிடம் ஒப்படைவு செய்யப்பட்டுள்ள பொருள்கள் தொடர்பாக, ஓர் ஊதியம் பெறா ஒப்படைவு பெறுபவரின் பொறுப்பு என்ற கருத்துப் பற்றி, தற்காலத்திய ஆங்கிலச் சட்டத்தின் நிலை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழக்கில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது: "தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்தின்மீது, நியாயமான புத்திசாலித்தனமும் கவனமும் கொண்ட ஒரு மனிதர், அதே மாதிரியான தம்முடைய சொத்தின்மீது நியாயமாக எடுக்கும்படி எதிர்பார்க்கக்கூடிய அதே கவனத்தை எடுப்பதற்கு அவர் கடமைப்பட்டுள்ளார்." (கிப்ளியர் எதி. மாக்மல்லர் [1869] லா. ரி. 2 பி. க. 317 [339]—Giblier v. Memuller [1869] L. R. 2 P.C. 317 [339]). ஓர் ஊதியம் பெறா ஒப்படை பெறுபவர், ஒப்படைவு செய்யப்பட்ட பொருள்கள் தொடர்பாக, அவர் உண்மையில் பெற்றிருக்கின்ற திறமை முழுவதையும் பயன்படுத்துவதற்குக் கடமைப்பட்டுள்ளார் என்று மேலும் தீர்ப்புக் கூறப்பட்டது. [வில்சன் எதி. பிரெட் (1843), 11 எம் & டபிள்யூ 113 (115)—Wilson v.

Brett (1843), 11 M & W. 113 (115)]. இருந்தபோதிலும், "ஊதியம்பெறா ஒப்படை பெறுபவர்" ஒருவரின் நிலையை ஆதரித்து மேலே கூறப்பட்ட வழக்குகள் மிகவும் பழையவையாகும்; மற்றும் தற்போதுள்ள நடைமுறையை அடிப்படையாகக் கொண்ட அண்மைக் காலத்திய தீர்ப்பு ஒன்று, நிச்சயமாக, வேறுவிதமாகத் தானிருக்கும் என்று கூறலாம்.

ஊதியம் பெறும் ஒப்படை பெறுபவராக வங்கியர் (Banker as Bailee for Reward): ஊதியம் பெறும் ஓர் ஒப்படை பெறுபவரிடம் தேவையான கவனத்தின் தரம், பொதுச் சரக்கேற்றிகள் (common carriers), விடுதி நடத்துபவர்கள் (inn-keepers) ஆகியவர்களின் விடயத்தில் இருப்பதைத் தவிர மற்றவைகளில், எந்த வகையிலும் உயர்வாக இருக்கவேண்டுமென்பதாகத் தோன்றவில்லை. (டியர்லி எதி. லேக்பிக் [1874] லா. ரி. 9 க்யூ. பெ. 122—Dearlie *v.* Lakebick [1874] L. R. 9 Q. B. 122). இந்தியச் சட்டம், ஓர் ஊதியம்பெறா ஒப்படை பெறுபவரின் பொறுப்புக்கும், ஊதியம் பெறும் ஓர் ஒப்படை பெறுபவரின் பொறுப்புக்குமிடையே, வெளிப்படையாக, வேறுபாடு ஏதுமில்லாமல் செய்கின்றது. 1872ஆம் ஆண்டின் ஒப்பந்தச் சட்டத்தினுடைய 151ஆவது பிரிவு, "ஒரு சாதாரணப் புத்திக் கூர்மையுள்ள மனிதர், அதே மாதிரியான சூழ்நிலைகளில், ஒப்படைவு செய்யப்பட்டுள்ள சரக்குகளைப் போன்ற அதே அளவு, தரம், மற்றும் மதிப்பினைக் கொண்டுள்ள தம்முடைய சொந்தப் பொருள்களின்மீது எடுத்துக் கொள்ளக்கூடிய அதே அளவு கவனத்தை அவரிடம் ஒப்படைவு செய்யப்பட்டுள்ள பொருள்களின்மீது", ஒப்படைவு செய்யப்படும் எல்லாத் தறுவாய்களிலும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறுவதன்மூலம், எல்லாத் தறுவாய்களிலும் ஒரே மாதிரியான கவனம் தேவையென்று கோருகின்றது. அதே சட்டத்தினுடைய பிரிவு, 152, பிரிவு 151-ல் கூறப்பட்டுள்ள அதே அளவு கவனத்தை அவர் எடுத்துக்கொள்ளும்பொழுது, மற்றும் அவருக்கும் ஒப்படைவு கொடுப்பவருக்கும் (bailor) இடையே அவருடைய பொறுப்பினை வரம்பில்லாததாக, அதாவது, எந்த அளவு கவனம் எடுத்துக்கொண்டாலும் அதனால் அவருடைய பொறுப்பின் அளவு பாதிக்கப்படாததாக ஆக்குகின்ற சிறப்பு ஒப்பந்தமேதும் இல்லாதபொழுது, ஒப்படைவு செய்யப்பட்ட பொருள்களின் இழப்பு, அழிவு, மற்றும் சேதாரம் ஆகியவை தொடர்பாக எழக்கூடிய பொறுப்பிலிருந்து, ஓர் ஒப்படைவு பெற்றவருக்கு விலக்கு அளிக்கின்றது. இவ்வாறு, ஓர் ஒப்படைவு பெற்றவருடைய பொறுப்பு, சிறப்பான ஓர் ஒப்பந்தத்தின்மூலம் அதிகரிக்கப்படலாமெனினும், அது (பொறுப்பு) ஒரு சிறப்பு ஒப்பந்தத்தின்மூலம்,

பிரிவு 151-ல் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கும் கீழ்க் குறைக்கப் படமுடியுமா, பொறுப்பு முற்றிலும் இல்லையென்று ஆக்கமுடியுமா என்ற சர்ச்சையில், நீதிமன்றத்தினுடைய கருத்தில் வேறுபாடு உள்ளது. சேக் முகம்மது எதி. தி பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பனி லிட். (1908) 32. மத 95, பக். 120, (Sheikh Mahomed v. The British India Steam Navigation Co., Ltd. (1908) 32 Mad. 95, at P. 120) என்ற வழக்கில், சங்கரன் நாயர். ஜே. கூறியபடி, ஒரு சிறப்பு ஒப்பந்தத்தின்மூலம், ஒப்படை பெற்ற ஒருவர், பெருமளவு பொறுப்பினை ஏற்றுக்கொள்ளலாம் என்றபோதிலும், அதே முறையில், இந்தப் பிரிவின்கீழ் விதிக்கப்பட்டுள்ள பொறுப்பினை அவர் குறைத்துக்கொள்ளமுடியாது. ஒரு கல்கத்தா வழக்கில் (ஜெல்லிகோ எதி. பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் கம்பனி, 10 கல். 489—Jellicoe v. British India Steam Co., 10 Cal. 489) வெளிப்படையான ஒப்பந்தங்களின் மூலம், இந்தப் பொறுப்பினை, ஒப்படை பெற்றவரை அதலிருந்து முற்றிலும் விடுவித்துவிடுகின்ற அளவுக்குக்கூட, வரையறைப்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு உரிமையுண்டு என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆங்கிலச் சட்டத்தின்படி, ஊதியம் பெறும் ஒப்படை பெற்ற ஒருவர், அந்தக் குறிப்பிட்ட துறைத் தொழில் அல்லது பணியிலுள்ள ஒரு நபரிடமிருந்து, சாதாரணமாக எதிர் பார்க்கக்கூடிய அதே அளவு கவனத்தைக் காட்டவேண்டும். வங்கியர் ஒருவரிடமிருந்து, சாதாரணமாக, எதிர்பார்க்கப்படுகின்ற கவனம், நிச்சயமாக, மிக உயர்ந்த அளவிலான ஒன்றேயாகும்; எடுத்துக்காட்டு, போதுமான மற்றும் உறுதியான அறையை ஏற்பாடு செய்தல், களவுகள் மற்றும் மோசடிகளைத் தவிர்ப்பதற்கு முன்னெச்சரிக்கைகளை எடுத்தல், மற்றும், கூடியமட்டிலும், வங்கி வேலையாள்கள் நேர்மையானவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டுப் பணியாளர்களை நியமித்தலில் கவனம் எடுத்துக் கொள்ளுதல் ஆகியன. வங்கியர் ஒருவர் உள்ளார்த்தமாக (impliedly) இந்தப் பணியை ஏற்றுக்கொள்வதால் அவர் ஓர் ஊதியம் பெறுகின்ற ஒப்படை பெற்றவர் என்பது நிரூபிக்கப்படமுடியுமானால், அவ்வாறு நிரூபிப்பது ஐயத்திற்கிடமின்றிச் செய்ய முடிந்த ஒன்றேயாதலால், ஊதியம் பெறும் ஒப்படை பெற்ற ஒருவருக்கும், ஊதியம் பெறா ஒப்படை பெற்ற ஒருவருக்குமிடையேயுள்ள வேறுபாடு அதன் முக்கியத்துவத்தை இழக்கின்றது.

கவனமின்மைக்கு வங்கியரின் பொறுப்பு (Banker's Liability for Negligence): இந்த நூலின் முந்திய பகுதி ஒன்றில் நாம் ஏற்கெனவே பார்த்தபடி, மனிதனுடைய நடவடிக்கைகளை நடத்

திச் செல்வதை ஒழுங்குபடுத்துகின்ற சாதாரண சிந்தனைகளால் வழிப்படுத்தப்படுகின்ற நியாயமான ஒரு மனிதர் எவற்றைச் செய்வாரோ அத்தகைய சில காரியங்களைச் செய்யாமல் விட்டுவிடுதல், அல்லது அதே சந்தர்ப்பங்களில் நியாயமான ஒரு மனிதர் எவற்றைச் செய்யமாட்டாரோ அப்படிப்பட்ட சில காரியங்களைச் செய்தல் ஆகியவை கவனமில்லாதிருத்தல் எனப்படும். அது பல வடிவங்களில் தோன்றலாம். மற்றவர்களைச் சுகப்படுத்துகின்ற கலையில்தான் சிறப்பாகத் தகுதி பெற்றிருப்பதாக வெளிப்படையாகக் கூறிக்கொண்டிருக்கும் ஒரு மருத்துவர் (Doctor), நோயாளி ஒருவருக்கு வைத்தியம் செய்துகொண்டிருக்கும்போது தேவையான திறமை அல்லது அறிவினைக் காட்டுவதற்குத் தவறுகின்ற பொழுது கவனமின்மைக்காகப் பொறுப்பாளியாக்கப்படுவதைப் போலவே, அவருடைய வாடிக்கையாளரின் உயர்மதிப்புப் பொருள்களின் கவனிப்பாளர் (caretaker) என்ற தொழிலைச் செய்யும் வங்கியர், பொருள்களைப் பாதுகாப்பதில் அவருடைய கவனமின்மை காரணமாக ஏற்படுகின்ற நட்டத்திற்கு வாடிக்கையாளருக்குப் பொறுப்பாளியாவார்.

பாதுகாப்பு வைப்பு அறை போதுமான அளவு உறுதியில்லாமல் இருந்து, பூட்டை உடைத்துத் திருடுதல் (burglary) களவு (larceny) அல்லது திருட்டு (theft) ஆகியவைமூலம் நட்டமேற்பட்டால் அதற்கு வங்கியர் பொறுப்பாளியாவார். அதேபோல, பாதுகாப்பு அறையின் நுழைவாயிலைப் பூட்டாமல் விட்டுவிடுதல், அல்லது அதனைக் காவல் காக்கின்ற ஏற்பாடு நிறைவு அளிக்கத்தக்கதாக இல்லாதிருத்தல், அல்லது பாதுகாப்பு அறையில் நுழையும் உரிமை எல்லோருக்கும் வழங்கப்பட்டிருத்தல் ஆகிய தறுவாய்களில், அவர்மீதான ஒரு குற்றம் காரணமாக எழுகின்ற நட்டத்திற்கும் அவர் பொறுப்பாளியாவார். பாதுகாப்பு அறை உள்ள இடம் பாதுகாப்பில்லாமல், அல்லது அருகிலுள்ள வேதியியல் ஆய்வுக்கூடம் (Chemical Laboratory), பட்டறை (Workshop) அல்லது வெடிபொருள்கள் அல்லது போர்த்தளவாடங்களின் சேமிப்பிடம் ஆகியவைகளிலிருந்து எழக்கூடிய நெருப்பினுடைய அபாயத்திற்கு எளிதில் உள்ளாகும்படி வெளிப்படையாக இருந்தால், இத்தகைய விபத்துகளுக்கு எதிராகத் தகுந்த முன்னெச்சரிக்கைகளை எடுக்கத் தவறியதற்கு வங்கியர் பொறுப்பாளியாவார். பணம் செலுத்தப்படுவதற்கு ஒழுங்கான காலவரிசைப்படி (periodically) எழுதப்பட்டுள்ள பத்திரங்களை வங்கியர் பாதுகாப்பு வைப்பில் வைத்துக்கொண்டு, அவைகளை வசூல் செய்கின்ற பொறுப்பினையும் அவர் ஏற்றிருந்தால், சரியான நேரத்தில் வசூலுக்காக அவைகளை அனுப்புவதற்கு அவர் தவறினால்,

அதன் காரணமாக ஏற்படும் நட்டத்திற்கு அவர் பொறுப்பாளி யாவார். அவை முத்திரையிடப்பட்ட ஓர் உறையில், அல்லது ஒரு காப்பு வைப்பு நிலைப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்து, அவை களின் திறவுகோல் வைப்புச் செய்தவரிடம் இருந்து, அவை சம் பந்தமாக வசூல் செய்வதற்கான உத்தரவாதத்தை வங்கியர் அளிக் காமல் இருந்தால் வங்கியர் எந்தப் பொறுப்பிற்கும் ஆளாகமாட் டார். எத்தறுவாயிலும், அவர்மீதான ஒரு கவனமின்மை காரண மாக நட்டம் எழுகின்றபோதுமட்டுமே வங்கியர் பொறுப்பாளி யாவார். பொதுவாக, அவரிடம் பாதுகாப்பு வைப்பில் விடப்பட் டிருக்கும் பொருள்களுக்கு, நீண்ட காலத்திற்குச் சேமித்து வைக் கப்பட்டதால் அவை மோசமாக ஆனதன் காரணமாக, ஏற்படு கின்ற நட்டம் அல்லது சேதாரத்திற்கு வங்கியரைப் பொறுப்பாளி யாக்க முடியாது. பாதுகாப்பு வைப்பிற்காக வைப்புச் செய்யப் பட்டுள்ள மதிப்பு வாய்ந்த ஆவணங்களோடு தொடர்புகொள்ளும் வாய்ப்புள்ள வங்கியின் பணியாளர் ஒருவர் அவைகளைத் திருடி விட்டார் என்றால், நட்டத்திற்கு வங்கி பொறுப்பாளியாக்கப்படும். வாடிக்கையாளருடைய ஒரு முகவர் அல்லது சார்பாளர், சிற்சில சமயங்களில் மதிப்புயர்ந்த பொருள்களைப் பார்வையிடுவதற்கு அல்லது அவைகளில் சிலவற்றை வெளியில் எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தால், வாடிக்கை யாளரின் அதிகாரத்தை மிஞ்சி அவர் செயல்படாமல் இருப்பதை உறுதிசெய்யும் பொருட்டு வங்கியர் அவரோடு செல்லவேண்டும்.

தகாத மாற்றம் செய்ததற்குப் பொறுப்பு (Liability for conversion): தகாத மாற்றம் (அல்லது கையாடல் தீங்கு) என்பது, மற்றொரு நபருக்குச் சொந்தமான சரக்குகள் மற்றும் அசையும் சொத்துகள் ஆகியவைகளோடு, நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற, அதிகாரமளிக்கப்படாத ஒரு செயலாகும். வேறுவகையாகக் கூற வேண்டுமானால், அது, மற்றொரு நபரை, தாற்காலிகமாக அல் லது நிரந்தரமாக, அவருடைய சொத்தினை இழக்கும்படியாக ஆக்குகின்ற, அதிகாரமளிக்கப்படாத ஒரு செயலைச் செய்வதா கும். அவரிடம் பாதுகாப்பு வைப்பிற்காக ஒப்படைக்கப்பட்டிருக் கும் பொருள்களை, அதிகாரமில்லாமல், மூன்றாவது நபர் ஒரு வருக்கு ஒப்படைப்புச் செய்கின்ற வங்கியர் ஒருவர்மீது, வாடிக் கையாளருக்கு எதிராக ஒரு முரண்தடையை (estoppel) வெற்றி கரமாக முறையீடு செய்து அடைய வங்கியரால் முடிந்தாலன்றி, மாற்றம் (அல்லது கையாடல்) செய்ததற்கு வழக்குத் தொடுக்க லாம். அதனால், ஒரு மூன்றாம் நபருக்கு உயர்மதிப்புப் பொருள் களைக் கொடுப்பதற்கு முன்னர், அவைகளைப் பெறுவதற்கு அந்த நபர், வாடிக்கையாளரால் தகுந்த முறையில் அதிகாரமளிக்

கப்பட்டுள்ளாரா என்று வங்கியர் தம்மை நிறைவுபடுத்திக்கொள்ள வேண்டும். வாடிக்கையாளருடைய கையொப்பம் உண்மையானதா என்பதை, வைப்புச் செய்த நேரத்தில் அவருக்குக் கொடுக்கப்பட்ட இரசீதினுடைய சரிநேர்படியிலுள்ள அவருடைய மாதிரிக் கையொப்பத்துடன் அதனை ஒப்பிடுவதன்மூலம், வங்கியர் சரிபார்க்கலாம். பொருள்களை ஒப்படைப்புச் செய்யும்படி கோருகின்ற ஆணை உண்மையானதுதானா என்று ஐயப்படுவதற்கு அவர் காரணமேதும் கொண்டிருந்தால், தேவையான விசாரணைகளை மேற்கொள்ளும்பொருட்டு, ஒப்படைப்புச் செய்வதை, ஒரு நியாயமான காலத்திற்கு அவர் நிறுத்திவைக்கவேண்டும். இருப்பினும், வாடிக்கையாளரின் சொந்த இருப்பிடத்திற்கு, அல்லது தொழில் செய்யுமிடத்திற்குப் பொருள்களை, வங்கியின் பணியாள் ஒருவர் மூலமாக அனுப்பிவைப்பதை வங்கி வற்புறுத்தினால், தவறுதலாக ஒப்படைப்புச் செய்யப்படும் அபாயம் தவிர்க்கப்படலாம். வைப்புச் செய்யப்பட்ட பொருள்கள் திருடப்பட்டவை என்று ஆகுமானால், மூன்றாம் நபருக்குப் (அதாவது உண்மையான உரிமையாளருக்கு) பொருளின் மீதுள்ள உரிமையைப் பற்றி நிறைவுபடுத்திக்கொண்டு, வாடிக்கையாளரின் அதிகாரம் இல்லாமலேகூட, வங்கியர் அதனை உண்மையான உரிமையாளருக்குக் கொடுத்துவிடலாம். வைப்புச் செய்தவரின் மரணம், சமமனநிலை இழத்தல், நொடிப்பு நிலை ஆகியவைகளால், குறிப்பாக வாடிக்கையாளர் ஒரு கூட்டு வைப்பாளராக (Joint Depositor) இருக்கின்றபொழுது, இடர்ப்பாடுகள் அதிகமாகவும் எழக்கூடும்.

பொதுவான முன்னெச்சரிக்கைகள் (General Precautions): அவர்களின் வைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள ஏதாவது நட்டம் அல்லது சேதாரத்திற்கு அவர்தாம் (வங்கியர் தாம்) காரணமாவார் என்று வைப்புச் செய்தவர்கள் அவர்மீது குற்றம் சாட்டுவதைத் தவிர்க்கக்கூடிய முறையில், வங்கியர், தம்முடைய பாதுகாப்பு வைப்புத் தொழிலை நடத்திச் செல்லவேண்டும். அவரோ, அவருடைய முகவர்கள் அல்லது உதவியாளர்களோ (deputies) கவனமில்லாமலிருத்தல் அல்லது வேலையில் மனத்தைச் செலுத்தாமலிருத்தல் ஆகியவைகளைத் தவிர்ப்பதற்குக் கவனம் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இறுதியாக, அழிவு, சேதாரம், அல்லது வெளியாள்களின் அதிகாரமளிக்கப்படாத தலையீடு ஆகியவைகளிலிருந்து வைப்புகளைக் காப்பாற்றுவதற்குத் தேவையான எல்லா முன்னெச்சரிக்கைகளையும் அவர் எடுக்கவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், அவர் கொடுக்கவேண்டியதாக ஆகக்கூடிய சேதாரத்திற்கான அவருடைய பொறுப்பினைத் தவிர்ப்பதற்கு உதவியாக இருப்பதற்காகவே இத்தகைய நடவடிக்கைகள்

எடுக்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ளவை, தம்முடைய பாதுகாப்பு வைப்புத் தொழிலுக்கு, வங்கியர் ஒருவர், நல்ல முறையில் மேற்கொள்ளக்கூடிய சில பொதுவான முன்னெச்சரிக்கைகளாகும்.

உள்ளடக்கத்தைப் பற்றிய உறுதிமொழி ஒன்றினைக் கேட்டல் (To ask for a Declaration of the contents): பொருள்களைப் பாதுகாப்பு வைப்பிற்காக அவர் பெறுகின்றபொழுது, வங்கியர் எடுத்துக்கொள்ளவேண்டிய முக்கியமான முதல் முன்னைச்சரிக்கை, பெட்டி அல்லது உறைபையின் உள்ளடக்கத்தைப்பற்றியும், அவைகளின் தோராயமான மதிப்பினைப் பற்றியும் ஓர் உறுதிமொழியினைக் கொடுக்குமாறு வாடிக்கையாளரைக் கேட்பதாகும். இத்தகைய, பொருள்களினுடைய ஒரு பட்டியல், அதில் காட்டப்படாத பொருள்கள் காணாமல் போய்விட்டன என்று வாடிக்கையாளர் புகார் செய்வதற்கு எதிரான ஒரு தடுப்பாகச் செயல்படுகின்றது. பொருள்கள் காணாமல் போய்விட்டால், காணாமல் போன பொருள்களின் மதிப்பினை அதிகப்படுத்திக் கூறுவதிலிருந்து இது (பட்டியல்) வாடிக்கையாளரைத் தடுக்கும். பொதுவாக, ஒரு பெட்டி அல்லது பொட்டலத்தில் (parcel) உள்ள பொருள்களின் இழப்பிற்கு, அவைகளைத் தொட்டுக் கையாளுகின்ற, அல்லது வங்கியின் பாதுகாப்பு வைப்பு அறைக்குப் போய் வருவதற்கு உரிமை பெற்றுள்ள நபர்கள் தாம் பொறுப்பாளியாவார். இருந்தபோதிலும், சில கடமைகளை நிறைவேற்றுவதற்காகப் பாதுகாப்பு வைப்பிலுள்ள பொருள்களோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பு, அல்லது வேறு வகையில் அவைகளைக் கையாளும் வாய்ப்பு, எதையேனும், அவை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள காலத்தில் எந்த நேரத்திலாவது, வங்கியின் பணியாள் பெற்றிருந்தார் என்று நிரூபிக்கமுடியுமானால், அப்பொழுது, ஐயமின்றி இழப்பிற்கு வங்கியைப் பொறுப்பாளியாக்கமுடியும். இந்த விடயத்தில், ஆரம்பத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த பொருள்களின் விளக்கம், அளவு மற்றும் மதிப்பு ஆகியவைகளைப்பற்றி வங்கி தகவல் எதனையும் பெறாமல் இருந்திருந்தால், (வாடிக்கையாளரின்) கோருரிமையிலுள்ள பிழை (error) அல்லது பொய் (falsity) ஆகியவற்றிற்குத்தாம் பொறுப்பில்லையென்று நிரூபிக்க வங்கியால் முடியாமல் போகலாம். அதனுடைய எச்சரிக்கையான காவலின் மூலமாகவும், பாதுகாப்பு அறையில் நுழைவதைத் தடுப்பதற்கான ஏற்பாடு, மற்றும் அதனுடைய கடுமையான விதிகள் மற்றும் மேலாண்மை முறை ஆகியவைகளின் காரணமாகவும், பாதுகாப்பு வைப்பில் இருந்த பொருள்களைப் பார்ப்பதற்கு அல்லது அவைகளைக் கையாளுவதில் தொடர்பு கொள்வதற்கு அதனுடைய

பணியாள்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லையென்று வங்கி கூறலாம். எப்படியிருப்பினும், அதனுடைய பாதுகாப்பு வைப்பு களின் உள்ளடக்கம் மற்றும் மதிப்பு ஆகியவைகளைப்பற்றிய ஒரு பொய்யான கோருரிமை எழுப்பப்பட்டால் அதனை எதிர்த்து விலக்குவது (repel) வங்கிக்கு இடர்ப்பாடு நிறைந்ததாக இருக் கும்; எனவே, மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களைப் பெறவேண் டியது அவசியமானதாகும். மாறாக, அதனுடைய தொழில் நட வடிக்கையின் போக்கிலேயே ஒழுங்காக வைக்கப்பட்டுள்ள ஒரு பொருள்களின் பட்டியல் மூலமாக இத்தகைய தகவல்களை வங்கி பெற்றிருக்கமுடியுமென்றால், பொய்யான எல்லாக் கோருரிமை களையும் மறுப்பது அதற்கு எளிதாக இருக்கும்.

முழுமையாக உடைமை கொண்டிருத்தல் (To have Exclusive Possession): அவரிடம் பாதுகாப்பு வைப்பிற்கு விட்டுச் செல் லப்படும் சொத்தினை முழுமையாக உடைமை கொண்டு தம் முடைய பாதுகாப்பில் வைத்திருப்பதற்கும், மற்றும் ஒரு சாதார ணக் காப்பாளர் (custodian), பண்டக ஆள், ஓர் ஒப்படை பெற் றவர் (bailee) ஆகியவர்களைப்போல, அவரிடம் வைப்புச் செய் யப்பட்டுள்ள காலத்தில், அதனோடு தொடர்பு கொள்வதற்கான முழு உரிமையையும் பெற்றிருப்பதற்கும் வங்கியர் முயல வேண் டியது விரும்பத்தக்கதாகும். வங்கியரின் பாதுகாப்பு அறையில் விடப்பட்டுள்ள உயர்மதிப்பான பொருள்களுக்கான பாதுகாப்பு, உடைமை மற்றும் கட்டுப்பாடு ஆகியன தொடர்பான உரிமை வைப்புச் செய்தவருக்கு அளிக்கப்பட்டிருந்தால், அவைகளை அவர் தொட்டுக் கையாளுவதன்மூலம் செய்யக்கூடிய பணிகளை வங்கியர் தவிர்க்கவேண்டும்; அவ்வாறு செய்வதற்கு அவர் (வங் கியர்) ஒப்புக்கொண்டாரெனில், உயர்மதிப்பான பொருள்களைப் பாதுகாப்பதில் சிறிதும் பிறழாத கவனத்தை அவர் எடுத்துக் கொள்ளவேண்டியது மிகவும் அவசியமானதாகும். சிறப்பாக, பெட் டியிலிருந்து குறிப்பிட்ட பொருள்களை எடுத்துக்கொண்டுபோவ தற்கு ஒரு முகவரை வாடிக்கையாளர் பதிலாளாக அனுப்புகின்ற பொழுது, வாடிக்கையாளரால் குறிப்பாக உரிமையளிக்கப்பட்டவை களையன்றி மற்றப் பொருள்களை முகவர் எடுத்துக்கொண்டுபோகா மல் வங்கியர் பார்த்துக்கொள்ளவேண்டும்.

பாதுகாப்பு வைப்புப் பொருள்களை அனுப்பிவைப்பதற்கு முழு மையான அறிவுறுத்தல்களைக் கொடுக்கும்படி கேட்கவேண்டும் (To ask for Complete Instructions for Despatch of Safe Custody Articles): உயர்மதிப்புப் பொருள்களை வைத்துள்ள பாது காப்பு வைப்பு நிலைப்பெட்டியை (locker) அவர் எங்கு

வாடகைக்கு எடுத்துள்ளாரோ, பாதுகாப்பு வைப்பிற்காக எங்குத் தம்முடைய பெட்டியை அவர் வைப்புச் செய்துள்ளாரோ அந்த நகரத்திலிருந்து தம்முடைய குடியிருப்பு இடத்தை மாற்றிக் கொண்டு, தாமே நேரடியாக வங்கிக்கு வராமல் நிலைப்பெட்டியிலுள்ளவைகளை, அல்லது பெட்டியைத் தம்முடைய புதிய குடியிருப்பு இடத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்ற வாடிக்கையாளர் ஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்குவதாக வங்கியர் ஒருவர் முடிவெடுக்கின்றபொழுது, வாடிக்கையாளர் ஏற்கெனவே அவ்வாறு கொடுக்காதிருந்தால், பெட்டியில் உள்ளவைகளைப்பற்றிய விவரமான பட்டியல் மற்றும் மதிப்பு ஆகியவற்றை, அவை எந்த முறையில் அனுப்பப்படவேண்டும், மற்றும் பயணத்தில் அவை இருக்கும்பொழுது, எவ்வளவு தொகைக்குக் காப்பீடு செய்யப்படவேண்டும் என்பதுபற்றிய முழுமையான அறிவுறுத்தல்களோடு சேர்த்து எழுத்துமூலமாகக் கொடுக்கும்படி வாடிக்கையாளரை வங்கியர் வற்புறுத்தவேண்டும். வாடிக்கையாளரிடமிருந்து தேவையான உறுதிமொழி (declaration), மற்றும் தகவல் ஆகியவைகளைப் பெற்றுக்கொண்டவுடன், முடிந்தால் சாட்சி (Witness) ஒருவரின் முன்னிலையில் வங்கியர் பெட்டியைத் திறந்து அதிலுள்ளவைகளின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து, கவனமாகக் கட்டுமானம் செய்து, வாடிக்கையாளருடைய அறிவுறுத்தல்களின்படி கட்டுமானத்தை (package) அனுப்பிவைக்கலாம். தொலைபேசி மூலமான, வாடிக்கையாளருடைய வாய்ச்சொல்லால் ஆன ஒரு செய்தி அல்லது தகவல் போதுமானதன்று; அவைகளின் அளவு, மற்றும் விவரம் ஆகியவை பற்றிய தகவல் எதனையும் தாம் கொண்டிராதபோது, வங்கியர் ஒருவர் எத்தறுவாயிலும், மதிப்புயர்ந்த பொருள்களைக் கையாளுவதற்கும், தாற்காலிகமாகக்கூட அவைகளை வைத்திருப்பதற்கும் இணங்கக் கூடாது.

சில சிறப்பு வகையைச் சேர்ந்த வாடிக்கையாளர்களோடு நடவடிக்கைகளில் அவர் ஈடுபடுகின்றபொழுது எழக்கூடிய இடர்வாய்ப்புக்களைத் தவிர்க்கும்பொருட்டு, மேலே கூறப்பட்ட பொதுவான முன்னெச்சரிக்கைகளோடு சேர்த்து, வேறு சில நடவடிக்கைகளையும் ஒரு வங்கியர் எடுத்துக்கொள்ளவேண்டும்.

கூட்டு வைப்புகளின் விடயத்தில் கவனம் (Care in case of Joint Deposits) : பொருள்கள் இரண்டு, அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால் கூட்டாக வைப்புச் செய்யப்படும்பொழுது, பாதுகாப்பு வைப்பு இரசீதின் சரிநேர்ப்படியில் (counterfoil),

அவர்கள் ஒவ்வொருவருடைய மாதிரிக் கையொப்பத்தையும் வங்கியர் பெற்றுக்கொள்ளவேண்டும். சில வங்கிகள், யாருக்குப் பொருள்களோடு தொடர்பு கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்த நபர்களுடைய மாதிரிக் கையொப்பங்களைப் பெறுவதற்கு, ஒரு சிறப்புப் படிவத்தை, அதற்கெனக் கொண்டிருக்கின்றன; இந்த நபர்கள், பொருள்களைக் காணும் உரிமையினைக் கூட்டாகவும் தனித்தும், வங்கியோடு செய்துள்ள கூட்டு வாடகை ஒப்பந்தத்தின்படி (Joint Rental Contract) பெற்றுள்ள நபர்களின் சார்பாளர்களாக இருக்கலாம்; இந்த ஒப்பந்தத்தை வங்கியர், தமக்கு ஏற்படக்கூடிய இடர்களுக்கு மத்தியிலும், தெளிவான முறையில் நிறைவேற்றுவதற்குக் கடமைப்பட்டுள்ளார். அவர்கள் (கூட்டு வைப்புச் செய்தவர்கள்) பொருள்களைப் பொறுப்புரிமையர்களாக வைத்திருந்தனர் என்பதுபற்றி அறிவிக்கையெதனையும் வங்கி பெறவில்லையென்றால், கூட்டாக (பாதுகாப்பு வைப்பு அறையை) வாடகைக்கு எடுத்துள்ள ஒருவரின், அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நபர்களின், மரணம் சரியாக நிருபணம் ஆனதன்பேரில், உயர்மதிப்புப் பொருள்களை உயிரோடு இருக்கின்ற மற்ற நபரிடம், அல்லது மற்ற நபர்களிடம் ஒப்படைப்புச் செய்வதன் காரணமாக, வங்கி, எந்தப் பொறுப்பினையும் ஏற்கவேண்டியது வராது. (பின்னிணைப்பு-" ஆ ", படிவம் எண் 44 பார்க்கவும்)

கூட்டுப் பொறுப்புரிமையர்களின் சார்பாக வைத்திருக்கப்படும் பொருள்கள் (Articles held on behalf of Joint-Trustees) : பொறுப்புரிமையர்களால் வைப்புச் செய்யப்பட்டுள்ள பொருள்கள், அவர்களின் கூட்டுக் கட்டுப்பாட்டின்கீழ் இருக்குமானால், பொறுப்புரிமையர்கள் எல்லோராலும் கையொப்பமிடப்பட்ட அறிவுறுத்தல்களின்பேரில்தான் வங்கியர் செயல்படுவார். மெண்டஸ் எதி. கியோடல்லா (1862) 2 ஜே & எச்., 259 (Mendes *v.* Guedalla (1862) J & H 259) என்ற வழக்கில், மூன்று பொறுப்புரிமையர்களின் பெயரிலும் பாதுகாப்பு வைப்பிற்காக, வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட, கொணர்பவர் பத்திரங்களைக் கொண்டிருந்த பெட்டியின் திறவுகோலைத் தம்மிடம் வைத்திருந்த, மற்றும் அவைகளுக்குப் பணம் செலுத்தப்படும்பொருட்டுக் கூப்பன்களை அரையாண்டுக்கொருதரம் வெட்டிக் கொடுப்பதற்கு, அவருடைய சக பொறுப்புரிமையர்களால் (co - trustees) அதிகாரமளிக்கப்பட்டிருந்த ஒரு பொறுப்புரிமையர் பெட்டியிலிருந்து வேறு சில பொருள்களையும் எடுத்துச் சென்றுவிட்டார்; பெட்டி, மூன்று பொறுப்புரிமையர்களுக்காகவும், வங்கியில், பொறுப்புரிமையில் வைத்திருக்கப்பட்டிருந்தபடியால், அவர்கள் (வங்கியர்கள்) அத

னைத் தங்களிடமிருந்து பிரிந்து போகவிடக்கூடாது அல்லது மூன்று பொறுப்புரிமையர்களின் அதிகாரமும் இன்றி, கூப்பனைத் தவிர, அதிகமாக எதனையும் எடுத்துக் கொண்டுபோக அனுமதிக்கக்கூடாது" என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அவரிடம் வைப்புச் செய்யப்பட்டுள்ள சொத்தினை வெளியில் செல்ல அனுமதிப்பதற்கு அல்லது வேறுவகையில் கைதவிர்ப்பு (disposal) செய்வதற்குமுன்னர், எல்லாப் பொறுப்புரிமையர்களின் கையொப்பத்தையும் பெறுவதற்கு வங்கியர் தனிக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

வைப்புச் செய்தவரின் மரணத்தின்பேரில் ஒப்படைப்புச்செய்தல் (Delivery on Death of Depositor): உயர்மதிப்புப் பொருள்களை வைப்புச்செய்தவர் மரணமடையும் தறுவாயில், மரணச் சான்றிதழை அல்லது ஆட்சி உரிமை அளிப்புக் கடிதங்களை அவர்கள் கொடுப்பதன்பேரில், வங்கியர், அவைகளை இறந்து போனவருடைய தனிப்பட்ட சார்பாளர்களுக்கு (Personal Representatives) ஒப்படைப்புச் செய்து அவர்களிடமிருந்து இரசீது ஒன்றினைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் உயில் (will), இதர உயர்மதிப்புப் பொருள்களோடு சேர்ந்து, பாதுகாப்பு வைப்பில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இருக்க நேர்ந்தால், வங்கியர், இறந்துபோனவரின் நெருங்கிய உறவினர் ஒருவருடைய முன்னிலையில் பெட்டியைத் திறந்து, அதற்கான இரசீதினைப் பெற்றுக் கொண்டு, உயிலை மட்டும் நிறைவேற்றாண்மையர்களிடம் ஒப்படைக்கலாம். மரணச் சான்றிதழ் அல்லது ஆட்சி உரிமை அளிப்புக் கடிதங்கள் கொடுக்கப்படாமல் இருக்கும்வரை, பெட்டியிலுள்ள மீதிப்பொருள்களை அவர்களுக்கு ஒப்படைப்புச் செய்யக் கூடாது.

முகவர்கள், சார்பாளர்கள் ஆகியவர்களோடு நடவடிக்கைகள் (Dealings with Agents and Representatives): இறுதியாக, சட்டப்படி அமர்த்தப்பட்ட சட்டமுகவர்களாகச் செயல்படுவதாகக் கருதப்படும் நிறுமங்கள், கூட்டுருக்கள், கூட்டு வணிகங்கள், மற்றும் இதரவகையான நிறுவனங்களின் முகவர்கள், அதிகாரிகள், மற்றும் சார்பாளர்கள் ஆகியவர்களோடு நடவடிக்கையில் ஈடுபடும்பொழுது வங்கியர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்களுடைய செயல்கள், அவர்களுடைய சட்ட முகவர் அதிகாரங்களின்கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமையின் உரிய எல்கைக்குள் உள்ளனவா என்று வங்கியர் தம்மை நிறைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

அந்நியச் செலாவணித் தொழில் (Foreign Exchange Business) : ஒரு பொதுவிதியாக, இந்தியக் கூட்டுப்பங்கு வங்கிகள் இத்தொழிலைப் பெருமளவில் செய்துவரவில்லை. இருந்தபோதிலும், அண்மைக் காலத்தில், அவைகளில் சில அந்நியச்செலாவணித் (வெளிநாட்டு நாணயமாற்றுத்) தொழிலில் பெரிதும் அக்கறை எடுத்துக்கொள்ளத் தொடங்கியுள்ளன: எடுத்துக் காட்டாக சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, சென்ட்ரல் எக்சேஞ்ச் பாங்க் ஆப் இந்தியா லிட். என்னும் ஒரு துணை வங்கி நிறுமத்தை அதனுடைய தலைமை அலுவலகத்தை இலண்டனில் கொண்டு, தொடங்கியிருந்தது. ஐயமின்றி, இந்தநாட்டில் ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற நாணய மாற்று வங்கிகள் கொண்டுள்ள, பழைய மற்றும் முக்கியமான தொடர்புகளின் காரணமாக, இந்த நாட்டின் வெளிநாட்டு வாணிபத்திற்கு நிதியிடுவதில் தனக்குரிய பங்குத் தொழிலைப் பெறுவது இந்தப் புதிய இந்திய நிறுவனத்திற்குக் கடுமையான வேலையாக இருந்தது. அதன் விளைவாக, புதிய வங்கி, ஒரு குறுகிய கால வாழ்வுக்குப்பின் மறைந்து போய்விட்டது. இருந்தபோதிலும், ஆங்கிலேயக் கிழக்கு ஆப்பிரிக்கா (British East Africa), மற்றும் ஏடன் ஆகிய இடங்களில் வங்கித் தொழிலில் ஈடுபட்ட பாங்க் ஆப் இந்தியாவின் அனுபவம் முற்றிலும் ஊக்கமளிப்பதாக உள்ளது. தென்கிழக்கு ஆசியாவில் கிளைகளைக் கொண்டுள்ள இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் லிட்., மற்றும் யுனைடெட் கமர்சியல் பாங்க் லிட். ஆகியவைகளின் அனுபவமும் இதேபோல் இருப்பதாகத்தான் சொல்லப்படுகிறது. இலண்டனில் கிளைகளைத் திறந்துள்ள மற்றுமிரண்டு வங்கிகள், சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவும், யுனைடெட் கமர்சியல் பாங்கும் ஆகும். இலண்டனில் ஒரு கிளையைக் கொண்டுள்ள பாங்க் ஆப் பரோடா லிட். தன்னுடைய நடவடிக்கைகளை ஏடனுக்கும், ஆங்கிலேயக் கிழக்கு ஆப்பிரிக்காவுக்கும் விரிவுபடுத்திக் கொண்டுள்ளது. நம்முடைய அரசு, அதேபோன்று நமது தொழிலகங்கள் (Business houses) ஆகியவைகளின் உதவியுடன், வெளிநாட்டு நாணய மாற்றுத் தொழில் நம்முடைய வங்கிகளால் பெருமளவில் பங்கேற்கப்பட்டு நல்லமுறையில் உருவெடுத்து வருகின்றது. இந்திய வங்கிகளின் கிளைகள், வெளிநாடுகளில் போதுமான எண்ணிக்கையில் இல்லாததால், தொழில், முக்கியமாக வெளிநாடுகளிலுள்ள முகவர்கள், மற்றும் தொடர்பாளர்கள் ஆகியோர்கள் மூலமாகவே செய்யப்பட்டு வருகின்றது. இருப்பினும், இத்தொழிலில் வெற்றி பெறுவதற்கு, வங்கிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகிய இரண்டு தொழிலையும் பெறவேண்டுமாதலால், நம்முடைய இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்களை, அவர்களு

டைய மாற்றுச் சீட்டுகளை வெளிநாட்டு நாணய மாற்றுத் தொழி லில் ஈடுபட்டுள்ள இந்திய வங்கிகளுடைய கிளைகளின் மூலமாக மாற்றிக் கொள்ளும்படி வற்புறுத்துவதன்மூலம், இத்துறையில் இந்திய வங்கிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுக்கப்படலாம்.

உள்நாட்டு, மற்றும் வெளிநாட்டு மாற்றுச் சீட்டுகளுக்குப் பணம் செலுத்துதல் மற்றும் அவைகளை வசூல் செய்தல், ஆகி வை தொடர்பாக வங்கியரின் நிலை என்ன என்பதை நாம் ஏற் கெனவே பார்த்தோம். இந்தத் தலைப்பை, மிகவும் விரிவாக விவாதிக்க நாம் விரும்பக் கூடுமெனினும், இந்த நூலில் நமக்குக் கிடைக்கக்கூடிய இடம் தொழிலின் இந்தப் பிரிவைப்பற்றிய விவ ரங்களை விவாதிக்கத் தொடங்குவதற்கு அதன்மீது விரிவாக விவாதிப்பதற்குக்கூட நம்மை அனுமதிக்கவில்லை என்பது வருத் தத்திற்குரியதாகும்.

வாணிக உறுதிக் கடிதங்கள், சுற்றுக் குறிப்புகள், வங்கியரின் பணிவிடைகள், பணிகள் காசோலைகள் ஆகியவைகளை விடுத்தல் (Issuing of Letters of Credit, Circular Notes, Banker's Deafts, Travellers' Cheques, Etc.): தன்னுடைய வாடிக்கை யாளருக்கு அதனுடைய பயன்பாட்டினை அதிகப்படுத்துவதற்கும், அவர்களைத் தன்னுடைய நாணயச் செல்வாக்கின் (credit) மூலம் நன்மையடையச் செய்வதற்கும் தற்காலத்திய வங்கி, வாணிக உறுதிக் கடிதங்கள், சுற்றுக் குறிப்புகள், வங்கியரின் பணவிடை கள், பயணிகள் காசோலைகள் ஆகியவைகளைத் தன்னுடைய வாடிக்கையாளர்களின் வசதிக்காக விடுப்பதற்கு எப்போதும் தயாராக உள்ளது.

வாணிக உறுதிக் கடிதங்கள் (Letters of Credit): ஒரு வாணிக உறுதிக் கடிதம் என்பது, ஓர் இடத்திலுள்ள வங்கிய ரால், மற்றொரு இடத்தில் அவருடைய முகவர் அல்லது தொடர் பாளராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மற்றொரு வங்கிய ருக்கு, ஆவணத்தில் குறப்பிடப்பட்டுள்ள ஒரு நபருடைய பண விடைகள் அல்லது காசோலைகளுக்குக் கடிதத்தில் (ஆவணத் தில்) குறிப்பிடப்பட்டுள்ள தொகைவரையிலும் பணம் கொடுத்து, அவ்வாறு பணம் கொடுக்கப்பட்ட பணவிடைகளின் மொத்தத் தொகையை அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையை, வாணிக உறுதிக் கடிதத்திற்குப் பொறுப்புறுதியளித்தவரின்மீது விதிப்பதற்கு (பற்றாக எழுதுவதற்கு) அதிகாரமளிக்கின்ற ஓர் ஆவணம் அல்லது ஆணையாகும். அனுமதிக்கப்பட்ட தொகை யில் எவ்வளவு எடுக்கப்பட்டுள்ளது, மற்றும் இன்னும் எவ்வளவு பாக்கியுள்ளது என்பதைக் கண்டறிவது எளிதாக இருப்பதற்கு

வசதியாக, அளிக்கப்பட்டுள்ள வாணிக உறுதிக் கடனுக்கு எதிராக, குறிப்பிட்ட நபரால் எழுதப்பட்ட எல்லாப் பணவிடைகள் மற்றும் காசோலைகள் ஆகியவைகளின் விவரங்கள் வாணிக உறுதிக் கடிதத்தின் பின்புறத்தில் மேலெழுதப்பட வேண்டியது அவசியமாகும்.

வாணிக உறுதிக் கடிதங்களின் பயன்கள் (Uses of Letters of credit): வாணிக உறுதிக் கடிதங்களின் பலவகையான படிவங்களைப் (forms) பற்றி விவாதிப்பதும், அவைகளினால் ஏற்படக்கூடிய எல்லாவிதமான பயன்களைப் பற்றி விவாதிப்பதும், இந்த நூலின் எல்கைக்குள் செய்யமுடியாத ஒன்றாகும். ஆகையால், பன்னாட்டு வணிக மற்றும் சமூக உறவுகள், குறிப்பிடுமளவிற்கு, வாணிக உறுதிக் கடிதத்தின்மூலம் வணிகர்களுக்கும், பயணிகளுக்கும், வழங்கப்பட்டுள்ள வசதிகளினால் உதவிகளைப் பெற்றுள்ளன என்று கூறுவதோடு, நம்மை நாமே நிறைவு படுத்திக் கொள்வோம். எடுத்துக்காட்டாக, இந்தியாவிலுள்ள, இறக்குமதியாளர் ஒருவர், அமெரிக்காவிலுள்ள ஒரு வணிகரால், வாணிக உறுதிக் கடிதத் தொகையின் அளவிற்கு எழுதப்படும் மாற்றுச் சீட்டுகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற பொறுப்பினை ஏற்றுக்கொண்டு, வாணிக உறுதிக் கடிதம் ஒன்றினை அவருடைய வங்கியரால் விடுக்கச் செய்து பெற்றுக்கொள்கிறார் என்றால், அமெரிக்கர், தம்முடைய சரக்குகளை அல்லது வாணிபப் பொருளை அனுப்பிவைப்பதில் தயக்கம் கொள்ளத்தேவையில்லை. ஏனென்றால், வாணிக உறுதிக் கடிதத்தின்கீழ் எழுதப்படும் மாற்றுச் சீட்டுகளுக்கு உரியமுறையில் பணம் செலுத்தப்படும் என்ற உறுதியை, அவர், வாணிக உறுதிக் கடிதத்தை விடுத்துள்ள வங்கியரிடமிருந்து பெற்றுள்ளார். வாணிக உறுதிக் கடிதத்தினுடைய ஆதாரத்தின்பேரில், அமெரிக்க ஏற்றுமதியாளர் இந்திய இறக்குமதியாளருக்கு ஆணைப்படி சரக்கினை அனுப்பி வைக்கிறார்; அதனுடைய சரத்துகளின்படி, இந்தியாவில் உள்ள வங்கியரின் மேல், பார்த்தவுடன் செலுத்தப்படவேண்டிய, அல்லது குறிப்பிட்ட காலத்திற்கான மாற்றுச் சீட்டுகளை எழுதுகிறார். அமெரிக்க ஏற்றுமதியாளர் தாம் அவ்வாறு எழுதுகின்ற மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்து பெறுகிறார், அல்லது வசூல் செய்வதற்காக, அதனை அமெரிக்காவிலுள்ள தம்முடைய வங்கியரிடம் கொடுத்துவிடுகிறார். அமெரிக்க வங்கியர், மாற்றுச் சீட்டுகளை, ஏற்புச் செய்யப்படும் பொருட்டு அல்லது பணம் செலுத்தப்படும் பொருட்டு முன்னிடல் செய்யப்படுவதற்காக இந்தியாவிலுள்ள தம்முடைய முகவருக்கு அனுப்பிவைக்கிறார். அமெரிக்க ஏற்றுமதியாளரோ, இந்திய இறக்குமதியாளரோ தாற்காலிகமாகக்

கூடத் தங்கள் நிதியினை முடக்கிப்போட்டு வைத்திருக்கவேண்டிய தில்லை; இடைக்காலத்தில், அவைகளின்மூலம், இதைவிடச் சிறந்த அல்லது அதிக இலாபகரமான பயனைப் பெறலாம். இதே முறையில், வெளிநாட்டுப் பயணத்திலுள்ள, பணத்தை இழக்கக் கூடிய, இடர்வாய்ப்புகளைத் தவிர்த்து, வாணிக உறுதிக் கடிதங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கு வசதியளிக்கின்றன. அவைகளின் உபயோகத்தின்மூலம், நாம் இந்நாள்களில் பார்ப்பதுபோல, வெவ்வேறு நாடுகளுக்கு அவர் செல்கின்றபொழுது தேவைப்படும் தொகைகளை அவர் பெறமுடியுமாதலால், வெளிநாடுகளில் பயணம் செய்யும் ஒரு நபர், அவரோடு பெருந்தொகையிலான பணத்தைக் கொண்டு செல்லத் தேவையில்லை.

தூய (வெற்று), மற்றும் ஆவணங்கள் சேர்ந்த வாணிக உறுதிக் கடிதங்கள் (Clean and Documentary Letters of credit): ஏற்கெனவே குறிப்பிடப்பட்டதுபோல, ஒரு வாணிக உறுதிக் கடிதம், அது யாருக்கு எழுதப்பட்டுள்ளதோ அந்த நபருக்கு, அதனுடைய காப்பு வாசகங்களின்படி, அதனை விடுக்கின்ற வங்கியின்மீது மாற்றுச்சீட்டுகளை எழுதுவதற்கு அதிகாரத்தை அளிக்கின்றது; வாணிக உறுதிக் கடிதத்தினுடைய தொகையின் அளவு வரையிலும் அவ்வாறு எழுதப்படும் மாற்றுச் சீட்டுகளை ஏற்புச்செய்வதாக வாணிக உறுதிக்கடிதத்தை விடுக்கின்ற வங்கி அளிக்கும் ஓர் உறுதிமொழியும் அதில் உள்ளது. இடாப்பு (Invoice), கப்பல் வழிச்சீட்டு (Bill of Lading), காப்பீட்டுத் திட்டாவணம் (Insurance Policy), போன்ற சரக்குரிமைப் பத்திரங்களை இணைக்கவேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் ஏற்புச் செய்வதற்கான உறுதிமொழி அளிக்கப்படும் பொழுது, வாணிக உறுதிக்கடிதம், ஆவணங்கள் சேர்ந்த வாணிக உறுதிக் கடிதம் என்றழைக்கப்படும். (பின்னிணைப்பு - "ஆ," படிவம் எண் 45ஐ பார்க்கவும்) உறுதிமொழி நிபந்தனையற்றதாக அல்லது சரக்குரிமைப் பத்திரங்களை இணைப்பதுபற்றி எந்தவிதக் குறிப்பும் இல்லாமல் இருக்கும்பொழுது, அது தூய மற்றும் திறந்த (Clean and open) வாணிக உறுதிக்கடிதம் எனப்படும். (பின்னிணைப்பு-"ஆ", படிவம் எண் 45 (அ) பார்க்கவும்). தூய (வெற்று), மற்றும் ஆவணங்கள் சேர்ந்த வாணிக உறுதிக்கடிதங்கள் வணிக நடவடிக்கைகளின் தொடர்பாக மட்டுமே விடுக்கப்படுகின்றன. ஆவணங்கள் சேர்ந்த ஒரு வாணிக உறுதிக் கடிதத்தை விடுப்பதற்குமுன், எவைகளின் தொடர்பாக வாணிக உறுதிக்கடிதம் விடுக்கப்பட்டுள்ளதோ அந்தச் சரக்குகளின் மீது அடைமானம் ஒன்றினை ஏற்படுத்திக் கொள்வதோடு, வங்கியர்கள் வழக்கமாக, வாணிக உறுதிக்கடிதத் தொகையில் 10 முதல்

30 சதவீதம் வரையில் மாறுபடக்கூடிய, எச்ச ஓரங்களை (margins) வாடிக்கையாளர் வைப்புச் செய்யவேண்டும் என்று கோருகின்றனர். தூய (வெற்று) வாணிக உறுதிக்கடிதங்கள், அவைகளின்கீழ் எழுதப்பட்ட மாற்றுச்சீட்டுகளோடு சரக்குரிமைப் பத்திரங்களை இணைக்கவேண்டுமென்று கோராவிட்டாலுங்கூட, சரக்குரிமைப்பத்திரங்கள் சரக்கனுப்பீடு பெறுபவர்களுக்கு (consignee) நேரடியாக அனுப்பப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன என்ற காரணத்திற்காக இத்தகைய மாற்றுச்சீட்டுகள் நல்லெண்ணத்துடன் ஆன நடவடிக்கைகள் தொடர்பானவையல்ல என்று எண்ணிவிடலாகாது. இருந்தபோதிலும், நல்ல நிலையிலுள்ள அவருடைய வாடிக்கையாளர் ஒருவர், உண்மையான தொழில் காரியத்திற்காகக் கடன் தேவையுள்ளவராக இருக்கிறார் என்பதை அறிகின்றபொழுது, அவருடைய கணக்கில் மேல்வரைப்பற்றில் பணமெடுக்க அவரை அனுமதிப்பதற்குப் போதுமான அளவு வரவு இருப்பினை நிலையாக வைத்திருப்பதற்கு, அல்லது போதுமான பிணையங்களை வைப்புச் செய்வதற்கு வாடிக்கையாளர் அளிக்கின்ற ஓர் உடன்பாட்டு உறுதிமொழியினைப் பெற்றுக்கொண்டு, நிறைவடைந்துவிடுகிறார் (கடன் வழங்குகிறார்) என்பது வழக்கத்திலில்லாத ஒன்றன்று. இந்த இரண்டு ஏற்பாடுகளும், வாணிக உறுதிக்கடிதத்தின் மொத்தத் தொகையையும் வாடிக்கையாளர் வைப்புச் செய்ய வேண்டியதில்லை என்கின்றவரையில் வாடிக்கையாளருக்கு நன்மை பயக்கக்கூடியவைகளேயாகும். அதனைப் பயன்படுத்துவதன் மூலம், தம்முடைய நடப்புக் கணக்கில் அவர் மேல்வரைப்பற்றாகப் பணம் எடுத்துவிட்டால், அவரால் பயன்படுத்தப்பட்டுள்ள வாணிக் உறுதிக்கடிதத் தொகையின் அளவிற்கு மட்டுமே அவர் வட்டி செலுத்துவார்.

பின்னழிப்புச் செய்யப்படக்கூடிய, மற்றும் பின்னழிப்புச் செய்யப்படமுடியாத வாணிக உறுதிக் கடிதங்கள் (Revocable and Irrevocable Letters of Credit): பின்னழிப்புச் செய்யப்படக்கூடிய வாணிக உறுதிக் கடிதத்தின் விடயத்தில், அதனை விடுக்கின்ற வங்கியர், அவர் விரும்பும் எந்த நேரத்திலும் அதிகாரத்தை விலக்கிக் கொள்ளலாம் (ரத்துச் செய்துவிடலாம்); ஆனால், அதனை விலக்கிக் கொள்வதற்கு முன்னர் எழுதப்பட்ட மாற்றுச்சீட்டுகளுக்கு அவர் பொறுப்பாளியாவார். பின்னழிப்புச் செய்யப்படமுடியாத (irrevocable) ஒரு வாணிக உறுதிக் கடிதத்தை, அதனுடைய முழுக்காலமும் தீர்ந்துவிட்டது, அல்லது அதிலிருந்து பயன்பெறக் கூடியவர் (beneficiary) இத்தகைய ஒரு விலக்குக்கு (ரத்துச் செய்வதற்கு) உடன்படுகிறார் என்றாலன்றி, விலக்குச் செய்யமுடியாது (ரத்துச் செய்யமுடியாது). வாசகர்,

"உறுதி செய்யப்பட்ட" கடன் ("confirmed" credit) [பின்னிணைப்பு-'ஆ' படிவம் எண் 45(ஆ) பார்க்கவும்], மற்றும் "உறுதி செய்யப்படாத" கடன் ("unconfirmed" credit) [பின்னிணைப்பு-'ஆ' படிவம் எண் 45(இ) பார்க்கவும்] என்னும் சொற்கள், "பின்னழிப்புச் செய்யப்படமுடியாத", மற்றும், "பின்னழிப்புச் செய்யப்படக்கூடிய" என்னும் கருத்துகளுக்கு ஒத்த பொருள்களைக் கொண்டவைகளாக உபயோகப்படுத்தப்பட்டு வருவதை அறிந்திருக்கக்கூடும்; இருப்பினும், "உறுதி செய்யப்பட்ட" மற்றும் "உறுதி செய்யப்படாத" என்னும் கருத்துகள், வெளிநாட்டிலுள்ள வங்கிகளால் திறக்கப்படும் வாணிக உறுதிக் கடன்களை ஓர் உள்நாட்டு வங்கி "உறுதி செய்வதற்கு" ஒப்புக்கொள்ளுகிறது, அல்லது ஒப்புக் கொள்ளவில்லை என்கின்ற பொழுது மட்டுமேதான் பயன்படுத்தப்படவேண்டும்.

வாணிக உறுதிச் சுற்றுக் கடிதங்கள் (Circular Letters of Credit) : வாணிக உறுதிச் சுற்றுக் கடிதங்கள், குறிப்பாகத் தாங்கள் சென்று பார்ப்பதற்கு விரும்பும் பல்வேறு நாடுகளில் பணம் தேவையாகவுள்ள உல்லாசப் பயணிகளுக்கும் (tourists), பயணிகளுக்கும் (travellers) உபயோகமானவைகளாகும் (பின்னிணைப்பு "ஆ", படிவம் எண் 46 பார்க்கவும்). அவை, பயணிகள் வாணிக உறுதிக் கடிதங்கள் என்றும், பொறுப்புறுதி வாணிக உறுதிக் கடிதங்கள் என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படலாம். ஒரு பயணியின் வாணிக உறுதிக் கடிதம், அதனை விடுக்கின்ற வங்கியால், அதனுடைய வெளிநாட்டு முகவர்கள், அல்லது தொடர்பாளர்களுக்கு, அதன்மீதே எழுதப்பட்ட, பயன்பெறுவோருடைய பணவிடைகளுக்குப் பணமளிக்குமாறு விடுக்கப்படுகின்ற ஒரு கோரிக்கையின் வடிவத்திலானதாகும்; அவை முன்னிடல் செய்யப்படும்பொழுது அவைகளுக்குப் பணமளிப்பதற்கு அது (வங்கி) பொறுப்பேற்றுக் கொள்கிறது. இந்த வகையான கடிதங்களுக்கு, வாடிக்கையாளர்கள் வழக்கமாக, உடனே ரொக்கம் செலுத்தி விடுகிறார் அல்லது அத்தொகைகளுக்குத் தங்களின் நடப்புக் கணக்குகளைப் பற்றெழுதச் செய்கின்றனர். பொறுப்புறுதி வாணிக உறுதிக் கடிதங்களின் (Guarantee Letters of Credit) விடயத்தில், வழக்கமாக, கடிதத்தின் தொகைக்குச் சமமான ஒரு தொகை ரொக்கமாகச் செலுத்தப்படுவதில்லை. அவைகளை விடுக்கின்ற வங்கியர் பணவிடைகள் முன்னிடல் செய்யப்படுகின்ற அவ்வப்பொழுது, அவைகளை ஈடுசெய்யும்படி கோருகின்றனர். இத்தகைய கடிதங்களை விடுக்கின்ற வங்கியர், கேட்கப்படும்பொழுது, ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி வீதத்தில் பணம் ஈடு செய்யப்படும் என்ற ஒரு பொறுப்புறுதியை (Guarantee) வாடிக்கையாளரிட

மிருந்து பெற்றுக் கொள்கிறார்—அதனால்தான் இக்கடிதத்திற்கு இப்பெயர் வந்தது—அல்லது கடன் வழங்கப்படுவதற்குப் போது மான பிணையத்தைத் தேவையென வங்கியர் கேட்கலாம். ஒரு வாணிக உறுதிக் கடிதம் அதன் அடிபாகத்தில் அல்லது பின் புறத்தில், பணம் செலுத்தப்பட்ட தேதி, மற்றும் இடம், செலுத் தப்படும் தொகை எழுத்தாலும் எண்ணாலும், மற்றும் பணம் செலுத்துகின்ற வங்கியரின் பெயர் ஆகிய விவரங்களுக்கான இடத்தைக் கொண்டிருக்கிறது. இந்த விவரங்கள், கடிதத்தின் கடன் தொகைக்கு அதிகமாகப் பணம் செலுத்துவதிலிருந்து, பணம் செலுத்தும் வங்கியர்களைத் தடுப்பதற்கு உதவி செய் யும். பாதுகாப்பிற்காக, ஒவ்வொரு வாணிக உறுதிக் கடிதத்துட னும் ஒரு சுட்டிக் காட்டும் கடிதம் (Letter of Indication) அளிக்கப்படுகின்றது; இக்கடிதம், வாணிக உறுதிக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை எடுக்கின்ற ஒவ்வொரு சமயத் திலும் காட்டப்படவேண்டும். வழக்கமாக, வாடிக்கையாளர், வாணிக உறுதிக் கடிதத்தை விடுக்கின்ற வங்கியரின் முன்னால் அவருடைய கையொப்பத்தைச் சுட்டிக்காட்டும் கடிதத்தில் இடு மாறு கோரப்படுகிறார்; அதனடியில் உள்ள ஒரு குறிப்பின்மூலம், வாணிக உறுதிக் கடிதத்திலிருந்து, அதனைச் (சுட்டிக்காட்டும் கடிதத்தை) பிரித்தெடுத்துத் தனியாக வைத்திருக்கும்படி வாடிக் கையாளர் எச்சரிக்கப்படுகிறார். வாடிக்கையாளரின் அடையா ளத்தை (identification) மெய்ப்பிப்பதற்குச் சுட்டிக்காட்டும் கடி தம் எப்போதும் காட்டப்படவேண்டியதாக இருப்பதால், வாணிக உறுதிக் கடிதம் தகாதவர்கள் கைகளில் கிடைத்துவிட்டாலுங் கூட, கள்ளக் கையொப்பமிடுதல், ஆள் மாறாட்டம் செய்தல் ஆகியவைகளின்மூலம் பணம் பெறுவது கடினமானதாக இருக்கும்.

பரிகாரத்தைக் கொண்ட அல்லது பரிகாரமில்லாத வாணிக உறுதிக் கடிதம் (Credit with or without Recourse) : ஒரு வாணிக உறுதிக் கடிதம், பரிகாரத்தைக்கொண்ட ஒன்றாகவோ, பரிகாரமில்லாத ஒன்றாகவோ இருக்கலாம். ஒரு வாணிக உறுதிக் கடிதத்தின் பயனைப் பெறுகின்றவரே, ஒரு மாற்றுச்சீட்டினை எழுதியவராக இருந்து, அது மறுப்புச் செய்யப்பட்டால் அதனை வைத்திருப்பவருக்குத் தம்மைத் தாமே பொறுப்பாளியாக ஆக் கிக் கொண்டார் என்றால், வாணிக உறுதிக் கடிதம் பரிகாரத் தோடு கூடிய ஒன்று எனப்படும். அவர் தம்மைப் பொறுப்பாளி யாக ஆக்கிக் கொள்ளவில்லையென்றால், வாணிக உறுதிக் கடி தம் பரிகாரமில்லாத ஒன்று என்று அழைக்கப்படும்.

சுழல் கடன் வசதி (Revolving credit) : வாணிகக்கடன் ஒன்று, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்திக் கொள்ளப் படவேண்டிய, ஒரு வரையறுக்கப்பட்ட தொகைக்கு விடுக்கப் படும்பொழுது, அளிக்கப்பட்ட கடன் முழுவதும் பயன்படுத்தப் பட்டவுடன் புதிய கடன்ஒன்று தேவையாகின்றது; ஆனால் சுழலும் கடன்களின் விடயத்தில் அவைகளின்கீழ் விடுக்கப்பட்ட மாற்றுச் சீட்டுகளுக்குப் பணம் கொடுக்கப்பட்ட பிறகு, கொடுக் கப்பட்ட தொகைகள் தாமாகவே புதுப்பிக்கப்பட்டுவிடுகின்றன. எடுத்துக்காட்டு : சுழலும் கடன் ஒன்று ரூ. 2000-க்கு இருக்கும் பொழுது, ரூ. 500-க்கான ஒரு மாற்றுச் சீட்டு சொல்லப்பட்ட கடனின் கீழ் விடுக்கப்படுகிறது என்றால், சொல்லப்பட்ட மாற் றுச்சீட்டிற்குப் பணம் கொடுக்கப்பட்ட உடனே அளிக்கப்பட்ட கடன்தொகை தானாகவே அதனுடைய தொடக்கத்திலிருந்த தொகையான ரூ. 2000-க்குத் திரும்ப வைக்கப்படுகிறது.

வாணிக உறுதிக்கடிதம் ஒன்றின்கீழ் விடுக்கப்பட்ட மாற்றுச் சீட்டிற்குப் பணமளிக்கும் வங்கியர் எடுத்துக்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கைகள் : (Precautions by Banker Negotiating a Bill under a Letter of credit) : வாணிகஉறுதிக்கடிதம் ஒன்றின்கீழ் விடுக்கப்பட்ட மாற்றுச்சீட்டு ஒன்றிற்குப் பணம் அளிக்கும் ஒரு வங்கியர் கீழ்க்காணும் விடயங்களைப் பொறுத்த மட்டில் தம்மை நிறைவுப்படுத்திக்கொள்ளவேண்டும்: (1) வாணிக உறுதிக் கடிதம் உண்மையானது என்றும், வாணிக உறுதிக் கடிதத்தை விடுத்துள்ள வங்கியின் சார்பாகக் கடிதத்தைக் கையொப்பமிட்டுள்ள அதிகாரியின் கையொப்பம், பணமளிக்கி ன்ற வங்கியின் கைவசமுள்ள மாதிரிக் கையொப்பத்தை ஒத்தி ருக்கிறது என்றும் நிறைவுப்படுத்திக் கொள்ளவேண்டும். (2) அது செல்லுபடியாகக் கூடிய காலம் காலாவதியாகிவிடவில்லை; மேலே கூறப்பட்டதுபோல, பொதுவாக, ஆறுமாதம் அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட காலத்திற்குத்தான் வாணிகஉறுதிக்கடிதங்கள் விடுக்கப்படுகின்றன. (3) பணமளிக கப்படவேண்டியுள்ள மாற்றுச் சீட்டினுடைய தொகை, வாணிக உறுதிக் கடிதத்தில் கொடுக்கப்பட்டுள்ள தொகையில் இன்னும் பயன்படுத்தப்படாமல் உள்ள தொகைக்குள்ளேயே உள்ளது. வாணிக உறுதிக் கடிதத்தின் நிபந்தனைகளின்படி, குறிப்பிட்ட வாணிக உறுதிக் கடிதத்தின்கீழ் மாற்றுச் சீட்டுகளுக்குப் பண மளிக்கின்ற ஒவ்வொரு வங்கியரும், வணிக உறுதிக் கடிதத்தின் மீது பணமளிக்கப்பட்டுள்ள மாற்றுச் சீட்டின் தொகை, அத னுடைய தேதி ஆகியவைகளைப்பற்றித் தேவையான பதிவினைச் செய்யவேண்டுமாதலால், வாணிக உறுதிக் கடிதம் செல்லுபடி

யாகத்தக்கதாகவுள்ள மீதித் தொகையைத் தெரிந்துகொள்வது அவ்வளவு கடினமானதன்று (4) வாணிக உறுதிக் கடிதத்தின் கட்டுப்பாட்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பண மளிக்கும் வங்கியர் இந்த விடயத்தில் தம்மை நிறைவுபடுத்திக் கொள்ளத் தவறினால், வாணிக உறுதிக் கடிதத்தை விடுத்துள்ள வங்கிக்கு எதிராக கோருரிமை எதனையும் கொள்ளமுடியாமல் போகலாம். (5) யாருடைய மாற்றுச் சீட்டிற்கு வங்கியர் பண மளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளாரோ, அந்த ஆளும், வாணிக உறுதிக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆளும் ஒருவரே. இந்த விடயத்தில் மாற்றுச் சீட்டுகளை விடுக்கின்ற நபருடைய கையொப்பத்தை, சுட்டிக்காட்டும் கடிதத்தில் கொடுக்கப்பட்டுள்ள கையொப்பத்துடன் ஒப்பிடுவதன்மூலம், அல்லது அவர் விரும்பும் வேறு எந்தமுறையிலும் வங்கியர் தம்மை நிறைவுபடுத்திக்கொள்ளலாம்.

அ. கா. ச. (அடக்கச் செலவு, காப்பீடு, சத்தம்) ஒப்பந்தங்கள் (C. I. F. Contracts) : ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் ஏற்படுத்தப்படுகின்ற விலைக் குறிப்பீடுகளும் (quotations) ஒப்பந்தங்களும், பொதுவாக, அ. கா. ச. (அடக்கம், காப்பீடு, மற்றும் சத்தம்) அல்லது க. மீ. இ. (கப்பல் மீது இலவசம்—Free on Board) ஆகியவைகளின் அடிப்படையில் இருக்கின்றன. இந்தியாவிலுள்ள வங்கியர், இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள தங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு வாணிக உறுதிக் கடிதங்களைத் திறப்பது தொடர்பாக அதிகப்படியான இடர்வாய்ப்புகளையும், பொறுப்புகளையும் கொண்டுள்ளனர். இந்தியாவுக்குச் சரக்கனுப்புகின்ற வெளிநாட்டு ஏற்றுமதியாளர்கள், வாடிக்கையாளர்களைப்பற்றிய, இத்தேதிவரையிலான மற்றும் நம்பகமான தகவல்களைப் பெற்றிருக்கவில்லையாதலால், தேவைப்பட்டியல்கள் (Indents) புகழ் வாய்ந்த ஒரு வங்கியால் விடுக்கப்படுகின்ற, பின்னழிப்புச் செய்யப்படமுடியாத, முழுமதிப்பிற்குமான ஒரு வாணிக உறுதிக் கடிதத்தோடு இணைத்து அனுப்பப்படவேண்டுமென்று வற்புறுத்துகின்றன. இத்தகைய தறுவாய்களில், வாடிக்கையாளர்களுடைய நாணயத்தைப்பற்றிக் கவனமாக இருப்பதுமட்டுமன்றி, வாடிக்கையாளர்கள் செல்லுபடியாகத்தக்க இறக்குமதி அனுமதிகளை (Import Licences) வைத்துள்ளனரா என்றும் பார்க்கவேண்டும். வெளிநாட்டு நாணயக் கட்டுப்பட்டு ஒழுங்குகளின் காரணமாக, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதில் தவறுவது என்பது, சரக்குகள் பறிமுதல் செய்யப்படுதல் (confiscation) அல்லது பெரும் அபராதம் விதிக்கப்பட்டபிறகு வெளிவிடப்படுவது ஆகியவைகளுக்கு வழிவகுக்கக்

கூடும். ஆவணங்கள் சேர்ந்த வாணிக உறுதிக் கடிதங்களில் பெரும்பாலானவை, அ. கா. ச. ஒப்பந்தங்களோடு அதிகமாகத் தொடர்பு கொண்டிருப்பதால், அவை தொடர்பான சில முக்கிய விடயங்களில் கவனம் எடுத்துக்கொள்ளவேண்டியது அவசிய மாகும். இத்தகைய கடன் வசதிகளை அளிக்கும்பொழுது, வாணிக உறுதிக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுச்சீட்டு களை ஏற்புச் செய்கின்ற அல்லது அவைகளுக்குப் பணம் செலுத் கின்ற வங்கியர் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டுமே யன்றி சரக்குகளையல்ல. அ. கா. ச. ஒப்பந்தத்தில், விற்பனை யாளர், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அனுப் பப்படவேண்டிய துறைமுகத்திலிருந்து, ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் விவரங்களுக்கு ஒப்பச் சரக்குகளை அனுப்பிவைக்கவேண் டும். சரக்கு போய்ச் சேரவேண்டிய இடத்தில், சரக்கு ஒப் படைப்புச் செய்யப்படுவதற்கு உதவியாக இருக்கக்கூடிய, தோற்று வாய்ச் சான்று (Certificate of Origin) உட்பட, அவசியமான கப்பல் அனுப்பீட்டு (Shipment) ஆவணங்களை அவர் பெற வேண்டும்; அவசியப்பட்டால் வாங்கியவருக்கு, அவருடைய சொந்த உரிமையின்கீழ்க் காப்பீட்டுப் பணம் கிடைக்கக்கூடிய முறையில் அவைகளின் காப்பீட்டிற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கப்பல் வழிச்சீட்டு, தெளிவற்ற மேலெழுதல் போன்ற ஒழுங்கீனங் களில்லாமல், தூய வணிக ஆணையில் இருக்கும்படி பார்த்துக் கொள்வது அவசியமாகும்; அது முழுப்பணத்திற்கும் காப்பளிக் கக்கூடியதாக இருக்கவேண்டும். காப்பீட்டு பத்திரம், வேறு முறையிலான ஒப்பந்தமேதுவில்லாதவிடத்து, தரநிலைப்படுத்தப் பட்ட காப்பீட்டுத் திட்டாவணத்தின் படிவத்தில் (form of Standard Insurance Policy) இருக்கவேண்டும்; அது, ஒரு காப்பீட்டுத் திட்டாவணத்தின்கீழ் விடுக்கப்படும் ஒரு சான்றிதழாக மட்டுமே இருக்கக்கூடாது; காப்பீட்டுத் திட்டாவணம் அது குறிப்பிடுகின்ற, குறிப்பிடப்பட்ட தொழிலில் உபயோகப்படுத்தப்படுகின்ற பத் திரங்களால், சாதாரணமாக, உள்ளடக்கப்பட்ட எல்லா இடர் வாய்ப்புகளையும் (Risks) தன்னகத்தே கொண்டிருக்கவேண்டும். இடாப்புக்களைப் பொறுத்தமட்டில், அவை வாணிக உறுதிக் கடிதத்தின் நிபந்தனைகளுக்கு ஒத்துப் போகக்கூடியவைகளாக இருக்கவேண்டும்.

சுற்றுக் குறிப்புகள் (Circular Notes): சுற்றுக் குறிப்புகள் (பின்னிணைப்பு-"ஆ", படிவம் எண் 47ஐ பார்க்கவும்) வாணிக உறுதி சுற்றுக் கடிதங்களிலிருந்து வேறுபட்டவைகளாகும்; சுற்றுக் குறிப்புகள், பொதுவாக, விடுக்கப்படும் வங்கியினுடைய நாட்டின் நாணயத்தில் குறிப்பிட்ட முழுத்தொகைகளுக்கு (round sums)

ஆனவைகளாகும். ஒரு சுற்றுக் குறிப்பின் மறுபக்கத்தில், அதனை வைத்திருப்பவருடைய பெயர், மற்றும் அவருக்களிக்கப்பட்டுள்ள சுட்டிக்காட்டும் கடிதத்தினுடைய (Letters of Indication) எண், ஆகியவைகளைக் கொடுக்கின்ற, முகவர்களுக்கும் தொடர்பாளர்களுக்கும் ஆன அறிவுறுத்தல்கள் உள்ளன. (பின்னிணைப்பு "ஆ", படிவம் எண் 47(அ) பார்க்கவும்)

பயணியின் காசோலைகள் (Traveller's Cheques): பயணியின் காசோலைகள் (பின்னிணைப்பு "ஆ", படிவம் எண் 48 பார்க்கவும்), அவை எந்த ஒரு சுட்டிக்காட்டும் கடிதத்தையும் தேவையுடையவைகளாக இல்லை என்ற விதிவிலக்கைத் தவிர, சுற்றுக் குறிப்புகளை மிகவும் ஒத்தவைகளாக உள்ளன. சுற்றுக் குறிப்புகளைப்போல, பொதுவாக அவை குறிப்பிட்ட முழுத் தொகைகளுக்கு எழுதப்படுகின்றன; மற்றும், அவை நடப்பு நாணய மாற்று விகிதத்தில் (Current Exchange Rate) பணமாக மாற்றப்படக்கூடியவைகளாகும். ஒரு பயணியின் காசோலை விடுக்கப்படும்பொழுது, அதனுடைய உரிமையாளர், அதற்கென உரிய இடத்தில், அதில் கையொப்பமிடுகிறார்; அவர் யாருக்கு, அவைகளுக்குப் பணம் செலுத்தும்படி கோரி, அவைகளை முன்னிடல் செய்கிறாரோ அந்த வங்கியரின் முன்னிலையில் மறுபடியும் கையொப்பமிட்டால் போதும். இந்தக் கையொப்பம், வைத்திருப்பவரை அடையாளம் கண்டு கொள்வதற்கு உதவுகின்ற, காசோலையில் ஏற்கெனவேயுள்ள கையொப்பத்தை ஒத்திருக்க வேண்டும்.

வங்கியரின் பணவிடைகள் (Banker's Drafts): ஒரு வங்கியால், மற்றொரு வங்கிக்கு, அல்லது ஒரே வங்கியின் ஓர் அலுவலகத்தால் மற்றோர் அலுவலகத்திற்கு எழுதப்படுகின்ற ஒரு வங்கியரின் பணவிடை, குறிப்பிடப்பட்ட ஒரு தொகையை, பெயர் குறிப்பிடப்பட்ட பெறுவோர் (payee) ஒருவருக்கு அல்லது அவரது ஆணைக்குச் செலுத்தும்படி கூறுகின்ற ஒரு ஆணையாகும். அவை காசோலைகளை மிகவும் ஒத்திருந்தபோதிலும், இங்கிலாந்தில், எழுதியவரும் எழுதப்பெற்றவரும் ஒரே வங்கியினுடைய கிளைகளாக அல்லது அலுவலகங்களாக இருக்கும்பொழுது அவை காசோலைகளாகக் கருதப்படுவதில்லை. இருந்தபோதிலும், இந்தியாவில் அவை காசோலைகளாகக் கருதப்படலாம். எழுதியவரும், எழுதப்பெற்றவரும் வெவ்வேறு நாடுகளில், இருக்கும் பொழுது வங்கியரின் பணவிடைகள், ஏறக்குறைய, வாணிக உறுதிக் கடிதங்களைப் போன்றே உள்ளன; ஒரே ஒரு வேறுபாடு யாதெனில், முன்னிடல் செய்யப்படும்பொழுது, ஒரு வங்கியரின்

பணவிடைக்கான முழுத்தொகையும் செலுத்தப்படவேண்டும்; ஒரு வாணிக உறுதிக் கடிதம், அதில் கொடுக்கப்பட்டுள்ள தொகைக்கு மிகாமல், தேவைப்படுகின்றபொழுதெல்லாம் பணத்தை எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்கின்றது.

ஏற்றுமதிகளுக்கு நிதியிடல்
(Financing of Exports)

பல வகையான வெளிநாட்டு நாணய மாற்றுத் தொழிலையும், அவைகளைக் கையாளுவதில் உள்ள தொழில் நுட்பங்களையும்பற்றி விரிவாக விவாதிப்பது இந்த நூலினுடைய செயல் எல்லைக்கு அப்பாற்பட்டதாகும்; எனவே, இந்தப் பாடத்தை, விரிவாக விவாதிக்கின்ற ஏடுகளைப் பார்க்குமாறு வாசகர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இருந்தபோதிலும், இந்தியாவின் வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் சரக்குகளின் இறக்குமதி ஏற்றுமதிகளில், ஏற்றுமதிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, நிதியிடுவதற்கான தேவை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகின்றது. ஏற்றுமதி நிதியிடல் சரக்கு அனுப்பீட்டிற்கு முந்தியதாகவோ, சரக்கு அனுப்பீட்டிற்கு பிந்தியதாகவோ, இரண்டுமாகவோ இருக்கலாம். அது, ஏற்றுமதியாளருக்குச் சாதகமாகத் திறக்கப்படும் ஒரு நாணயக் கடிதத்திற்கு எதிராகவோ, இறக்குமதியாளரால் ஏற்றுமதியாளரிடம் முன்னிடல் செய்யப்படும் முடிவான ஓர் ஆணைக்கு (Firm Order) எதிராக மட்டுமோ இருக்கலாம்; முந்திய தறுவாயில், இந்தியாவிலுள்ள வங்கி, வாணிக உறுதிக் கடன் ஒப்பந்த பேரங்களுக்கு ஒப்ப எழுதப்படும் ஆவணங்களை அனுப்பிக் கொடுக்கும்; இரண்டாவது தறுவாயில், நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யும் வங்கி, மாற்றுச்சீட்டுடன் தொடர்பு கொண்டுள்ள ஏற்றுமதியாளரையும், இறக்குமதியாளரையும் தவிர வேறு எவரையும் எதிர்பார்க்கவேண்டியதில்லை. ஏற்றுமதியாளருக்கும், இறக்குமதியாளருக்கும் இடையேயான செலுத்துகைச் சரத்துகள், காலம் தாழ்த்திப் பணம் செலுத்துவதற்கு வகை செய்துள்ள சமயங்களில், இறக்குமதியாளர், வழக்கமாக இந்தியாவிலுள்ள, நிதியளிக்கின்ற வங்கிக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ள வங்கிப் பொறுப்புறுதி (Bank Guarantee) ஒன்றிக்கு ஏற்பாடு செய்யவேண்டியவராக உள்ளார். ஏற்றுமதியாளர் "கட்டுமானக் கடன்" (Packing Credit) வசதிகள் என்றழைக்கப்படும், அனுப்பப்படவேண்டிய சரக்குகளை வாங்குவதற்கு அல்லது உற்பத்திசெய்வதற்கு நிதியிடுவதற்கான வங்கிக்கடனைத் தேவையுள்ளவராக இருக்கலாம், இதற்கு, சாதாரணமாக, உற்

பத்தியிலுள்ள சரக்குகளை அசை அடைமானம் (Hypothecation) கொடுப்பது, மற்றும் நிதியிடுகின்ற வங்கிக்கு, சம்பந்தப்பட்ட அனுப்பீடு தொடர்பான ஆவணங்களை வங்கியிடம் முன்னீடல், (Present) செய்வதாக வாக்குறுதி ஒன்றினைக் கொடுப்பது ஆகியவைகளைத் தவிர வேறு எந்தவிதமான பிணையத்தையும் அவர் கொடுப்பதில்லை. இந்த நூலில் விவாதிக்கப்பட்ட பல வகையான கடன்களோடும் தொடர்புகொண்டுள்ள வழக்கமான இடர்வாய்ப்புகளோடு, ஏற்றுமதிகளுக்கு நிதியிடுவதில், வேறுசில இடர்வாய்ப்புகளும் உள்ளன. அவை, முக்கியமாக, வெளிநாட்டு வாங்குவோரின் நொடிப்பு நிலைகாரணமாகவும், வெளிநாட்டு நாணயமாற்றுக் கட்டுப்பாடுகள், செலாவணி ஒழுங்குபடுத்தல்கள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஆகியவைகளிலிருந்தும் எழக்கூடிய இடர்வாய்ப்புகளைக் கொண்டுள்ளன. இத்தகைய எல்லாவிதமான நெருக்கடிச் சந்தர்ப்பங்களிலும், தாம் நிதியளித்துள்ள ஏற்றுமதி யாளரை ஈடுசெய்யுமாறு, வங்கியர் எப்போதும் கேட்கலாமெனி னும், இது, அவருக்கு வேண்டியுள்ள பாக்கித் தொகைகளைத் திரும்பப்பெறுவதற்கு எப்போதுமே உதவியாக இருக்காது; எனவே, வங்கிக்குச் சில பாதுகாப்புகள் தேவையாக உள்ளன. இது தொடர்பாக, ஏற்றுமதி இடர்வாய்ப்புக் காப்பீடுக் கூட்டுரு வின் தோற்றுவிப்பு வரவேற்கப்படத்தக்க ஒரு முன்னேற்றமாகும்.

ஏற்றுமதி இடர்வாய்ப்புக் காப்பீடு கூட்டுரு லிட். (ஏ. இ. கா. கூ.)

(Export Risk Insurance Corporation Ltd.) [ERIC]

அதே ஆண்டில், முன்னதாக, அரசால் நியமிக்கப்பட்ட, ஏற்றுமதிக் கடன் பொறுப்புறுதிக் குழுவின் (Export Credit Guarantee Committee) பரிந்துரைகளுக்கேற்ப, பம்பாயில் அத னுடைய தலைமையகத்தைக் கொண்டு, ஏற்றுமதி இடர்வாய்ப் புக் காப்பீட்டுக் கூட்டுரு லிட். 1956ஆம் ஆண்டு ஜூலை, 30ஆம் தேதி தோற்றுவிக்கப்பட்டது. அது, முழுவதும் அரசால் உடைமை கொள்ளப்பட்ட ஒரு நிறுமமாகும். கூட்டுருவினுடைய முக்கியப் பணி, வெளிநாட்டு வாங்குவோர்களால் பணம் செலுத் தப்படாமல் போவதற்குக் காரணமாக இருக்கக்கூடிய, சில வணிக மற்றும் அரசியல் இடர்வாய்ப்புகளுக்கு எதிராக, இந்தியாவிலுள்ள ஏற்றுமதியாளர்களுக்குக் காப்பீட்டினை அளிப்பதன்மூலம், இந் தியாவிற்கும் வெளிநாடுகளுக்கும் இடையேயான வியாபாரத்தை ஊக்குவிப்பது, வசதியாக்குவது மற்றும் வளர்ச்சியடையச் செய் வது ஆகும். வாங்குபவர்களின் நொடிப்பு நிலை, அல்லது செலுத்

துகை செய்வதில், காலம் கடத்தியபின்னும் செலுத்தத் தவறுதல் (protracted default) அல்லது ஏற்றுமதியாளருடைய நடவடிக்கைகளின் காரணமாக இல்லாத, அல்லது அவர்களுடைய செயல்கள் காரணமாக மன்னிக்கப்படக்கூடியதாக இல்லாத, வாங்கியவர் சரக்குகளை ஏற்றுக் கொள்ள மறுக்கும் செயல்கள் ஆகியவை வணிக இடர்வாய்ப்புகளாகும்; இறக்குமதிக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள், வங்கியவரின் நாட்டிலுள்ள செலுத்துகை இடர்ப்பாடுகள் காரணமாக நிதி அனுப்புதலில் ஏற்படும் காலதாமதம், போர் மற்றும் உள்நாட்டுக் கலவரம் (civil commotion) ஆகியன, இந்தக் கூட்டுருவால் பாதுகாப்பளிக்கப்படுகின்ற முக்கிய அரசியல் இடர்வாய்ப்புகளாகும். கூட்டுரு எந்தவித இலாபம் ஈட்டும் நோக்கத்துடனும் நிறுவப்படவில்லை; ஆனால், ஏற்றுமதியாளர்களை, நாட்டினுடைய ஏற்றுமதிகளை அதிகரிக்கும்படி செய்யவேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடுதான் நிறுவப்பட்டது; எனவே, அது, "இலாபமுமில்லை நட்டமுமில்லை" (No Profit no loss) என்னும் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றது. அது ரூ. 5 கோடி அங்கீகரிக்கப்பட்ட முதலைக் கொண்டுள்ளது; இதில் ரூ. 2.5 கோடி, விடுக்கப்பட்டு ஒப்புதலும் செய்யப்பட்டுள்ளது (subscribed), ரூ. 50 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது (paid up). அது ஓர் இயக்குநர் அவையால் மேலாண்மை செய்யப்படுகின்றது. சாதாரணமாக, கூட்டுருவால் விடுக்கப்படும் காப்பீட்டுத் திட்டாவணங்கள் வருமாறு: (அ) சரக்கனுப்பீடுகள் (பல்வகை இடர்வாய்ப்புகள்) திட்டாவணம், (ஆ) சரக்கனுப்பீடு (அரசியல் இடர்வாய்ப்புகள்) திட்டாவணம், (இ) ஒப்பந்தங்கள் (பலவகை இடர்வாய்ப்புகள்) திட்டாவணம், மற்றும், (ஈ) ஒப்பந்தங்கள் (அரசியல் இடர்வாய்ப்புகள்) திட்டாவணம். (பல்வகை இடர்வாய்ப்புகள்) ஒப்பந்தங்கள் திட்டாவணம், ஏற்றுமதியாளருக்கு, சரக்கனுப்புவதற்கான ஆணையை அவர் பெற்றுக்கொள்ளும் நேரம் முதல், சரக்கிற்குப் பணத்தைப் பெறுகின்றவரை அரசியல், மற்றும் வணிக இடர்வாய்ப்புகளுக்கு எதிராகப் பாதுகாப்பு அளிக்கின்றது. அதேபோல, (பல்வகை இடர்வாய்ப்பு) சரக்கனுப்பீட்டுத் திட்டாவணம், சரக்கனுப்பிய தேதிமுதல், பணம் பெறப்படுகின்ற தேதிவரையில் அரசியல் மற்றும் வணிக இடர்வாய்ப்புகளுக்கு எதிராகப் பாதுகாப்பு அளிக்கின்றது. சரக்கு ஒப்படைப்புச் செய்தல் (consignment) அடிப்படையில் செய்யப்படும் ஏற்றுமதியிலுள்ள இடர்வாய்ப்புகளுக்குங்கூட, தகுந்த ஒரு மேலெழுதல் (Endorsement) செய்யப்படுவதன்மூலம் பாதுகாப்பளிக்கப்படுகின்றது. இந்தியாவுக்கு வெளியே எழுகின்ற இடர்வாய்ப்புகளுக்குப் பாதுகாப்பளிப்பதோடு, நடப்பு ஏற்றுமதி அனுமதிகளை விலக்குச் செய்வது (concellation) அல்லது அதற்கு

முன்னர் உரிமத்துக்கு (licence) உட்படாத சரக்குகளை ஏற்றுமதி செய்வதில் கட்டுப்பாடுகளை விதிப்பது ஆகியவைகளிலிருந்து எழக்கூடிய அதிகப்படியான இடர்வாய்ப்புகளுக்குங்கூட, கூட்டுருப் பாதுகாப்பளிக்கின்றது. வணிக இடர்வாய்ப்புகளின் விடயத்தில் 85 சதவீதம் வரையிலும் கூட்டுருப் பாதுகாப்பளிக்கின்றது. ஒவ்வொரு வாங்குபவரிடமிருந்தும், கூட்டுருவரால் நிர்ணயம் செய்யப்பட்டு ஒரு கடன் வரம்பினை (credit limit) ஏற்றுமதியாளர் பெறவேண்டும். அந்த வரம்பிற்குள், கூட்டுருவினிடம் யோசனையேதும் கேட்காமல்கூட, ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றுமதியாளர் தன்னுரிமை (freedom) கொண்டுள்ளார். காப்பீடு பெற்றுள்ள ஒவ்வோர் ஏற்றுமதியாளரும், திட்டாவணம் தொடங்கப்படும் தேதியிலிருந்து பன்னிரண்டு மாத காலத்திற்கு, ஒப்புதல் செய்யப்பட்ட பின்னழிப்புச் செய்யப்படமுடியாத வாணிக உறுதிக் கடிதங்கள், மற்றும் முன்கூட்டிப் பணம் செலுத்தப்பட்ட சரக்கனுப்பீடுகளுக்கெதிரான, சரக்கனுப்பீடுகள் தவிர்த்து, எல்லா நாடுகளுக்கும் அவர் அனுப்பும் சரக்கனுப்பீடுகளையும் காப்பீடு செய்யவேண்டும்.

காப்பீட்டுத் திட்டாவணங்களின் பயன்களை (benefits), தங்களுடைய வங்கிகளுக்கு உரிமை மாற்றிக் கொடுப்பதற்கு ஏற்றுமதியாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். உரிமை மாற்றம், (அ) தனிப்பட்ட மாற்றுச்சீட்டுகள், (ஆ) ஒரு நாட்டிற்கான ஏற்றுமதிகள், அல்லது, (இ) முழுத் திட்டாணவம் (the whole Policy) ஆகியவைகளாக இருக்கலாம். ஏற்றுமதியாளரால் கையொப்பமிடப்பட்ட அதிகாரமளிப்புக் கடிதம் (Letters of Authorisation) காப்பீட்டுத் திட்டாவணத்தின்கீழ் கொடுக்கப்படவேண்டிய எந்தப் பணத்தையும் வங்கிக்கு நேரடியாகக் கொடுத்து, முழுமையான கடன் தீர்ப்புச் செய்ததாக, வங்கியின் இரசீதினைப் பெற்றுக் கொள்ளும்படி, காப்பீடு செய்பவருக்குக் (insurer) கொடுக்கப்படும் ஓர் அதிகாரமாகும். சம்பந்தப்பட்ட வங்கியின் ஒப்புதலின்றி இந்த அதிகாரம் பின்னழிப்புச் செய்யப்படமுடியாததாகும்.

சாதாரணமானது என்றும், சிறப்பானது என்றும் கூறப்படும் இரண்டு வகையான அதிகாரமளிப்புக் கடிதங்கள் உள்ளன. இரண்டு வகையும் அதிகப்படியான பாதுகாப்பினை வங்கிகளுக்கு அளிக்கின்றன. இருப்பினும் சிறப்பு அதிகாரமளிப்புக் கடிதம், குறிப்பிடுமளவிற்கு, இதற்கு மேற்கொண்டும் செல்கின்றது. சிறப்பு அதிகாரமளிப்புக் கடிதத்தில், கூட்டுருவால் விடுக்கப்படுகின்ற சான்றிதழ், வங்கிகளைப் பொறுத்தவரையில், எல்லாச் சரக்கனுப்

பீடுகளையும் வெளிக்காட்டாமல் இருப்பது (non-disclosure) திட்டாவணத்தினுடைய நிபந்தனைகளை முறிவு செய்ததாகக் கருதப்படமாட்டாது என்று வங்கிகளுக்கு உறுதியளிக்கின்றது. இந்தச் சான்றிதழ், சம்பந்தப்பட்ட சரக்கனுப்பீட்டின் (shipment) மீதான காப்பீட்டுக் கட்டணத்திற்குச் சமமான ஒரு கட்டணத்தை ஏற்றுமதியாளர் செலுத்துவதன்பேரில் அளிக்கப்படுகின்றது. எல்லாச் சரக்கனுப்பீடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், அவைகளின் மீதான காப்பீட்டுக் கட்டணங்கள் யாவும் செலுத்தப்பட்டுள்ளன என்றும் கூட்டுரு நிறைவடைந்துவிட்டால், இந்தக் கட்டணம், திரும்பச் செலுத்தப்படக்கூடியதாகும்.

கூட்டுரு, அண்மையில், கட்டுமானக் கடன் காப்பீட்டுத் திட்டாவணங்களை (Packaging Credit Insurance Policies), ஓர் உறுதி செய்யப்பட்ட விற்பனை ஒப்பந்தத்திற்கெதிராக (against a firm contract of sale) வழங்கப்பட்டுள்ள கடன்களின் மீதான, சரக்கனுப்பீட்டிற்கு முந்தைய இடர்வாய்ப்புகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக, விடுப்பதன்மூலம் தன்னுடைய செயல் நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளது. இந்தத் திட்டாவணத்தின்கீழ், ஏற்றுமதியாளர் நொடிப்பு நிலையடைந்துவிடுதல், அல்லது அவர் கடனைத் திருப்பித் தருவதில் காலம் கடத்தியபின்னும் செலுத்தத் தவறுதல் (protracted default) ஆகிய இடர்வாய்ப்புகளுக்கெதிராகப் பாதுகாப்பளிக்கின்றது. இத்தகைய ஒரு திட்டாவணத்தைப் பெறுவதற்கு, நிதியளிக்கும் வங்கி ஒரு விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவேண்டும், அதன்பேரில் காப்பீட்டுத் திட்டாவணம் வங்கிக்குச் சாதகமாக விடுக்கப்படுகின்றது என்பது கவனிக்கப்படவேண்டியதாகும்.

மேலே எடுத்துரைக்கப்பட்ட திட்டாவணங்களோடு சேர்த்து, உற்பத்தியாளர் கடன் காப்பீடு, சந்தை மேம்பாடு மற்றும் சந்தை அளவீட்டுத் திட்டாவணங்கள் என்றழைக்கப்படும் இதரத்திட்டாவணங்களையும் கூட்டுரு விடுக்கின்றது. மேலும், ஏற்றுமதியோடு சம்பந்தப்பட்ட பலவகையான இடர்வாய்ப்புகளுக்கும் பாதுகாப்பளிப்பதோடு, மதிப்புநிலை பற்றிய தகவலையும் (Status Information) கூடக்கூட்டுரு அளிக்கின்றது. அது, வெவ்வேறு நாடுகளிலும் உள்ள கடன் காப்பீடு செய்பவர்களின் (Credit Insurers) சங்கமான, பெர்ன் யூனியனின் (Berne Union) ஓர் உறுப்பினராகும்; மற்றும் அது கடன் தொடர்பான தகவல்களை, இதர நாடுகளிலுள்ள காப்பீடு செய்பவர்களோடு பரிமாறிக் கொள்ளக்கூடியதாக உள்ளது. பெற்றுள்ள அனுபவத்தைக் கொண்டு, ஏற்றுமதி நிதியீடு அளிப்பதிலுள்ள இடர்வாய்ப்புகளு

க்கு மிகப் பரந்த அளவில் பாதுகாப்பினை அளித்து, தன்னுடைய நடவடிக்கைகளை அதிகரிக்கக் கூடியதாகவும், வங்கிகளுக்குப் பெருமளவில் உதவியளிக்கக் கூடியதாகவும் இருக்குமென கூட்டுரு எதிர்பார்க்கப்படுகிறது.

நிதி மதிப்புநிலை, தொழிற் செல்வாக்கு மற்றும் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பு ஆகியவைகளுக்கு அறிவுரை நடுவர்களாகச் செயல்படுதல் (Acting as Referees as to the Financial Status, Business Reputation, and Respectability of their customers) : தற்கால வங்கியினுடைய இந்தப் பணியிலிருந்து கிடைக்கின்ற பெருமளவிலான பயன்பாடு எல்லோரும் நன்கறிந்த தொன்றாகும். முதலாவது, தொழில் செய்வோர்கள் யாரோடு தொடர்பு வைத்துக்கொண்டுள்ளனரோ, தொடர்பு கொள்வதற்கு எதிர்பார்த்துக் கொண்டுள்ளனரோ அவர்களுடைய நிதி நிலையைப் பற்றி நம்பகமான, மற்றும் உடனடியான தகவலை அவர்களுக்கு அளிப்பதால், வங்கி, அவர்களுக்கு மிகவும் உதவியாக உள்ளது. இரண்டாவது, இத்தகவலை அளிப்பதன்மூலம், சிறிய அளவு நிதிவசதி, அல்லது நிதிவசதி ஏதுமே இல்லாத நபர்களுக்குக் கடன் அளிப்பதன் மூலம் அடையக் கூடிய நட்டத்தை வியாபாரச் சமூகம் தவிர்ப்பதற்கு உதவியாக வங்கிகள் உள்ளன. தன்னுடைய வாடிக்கையாளர்களின் நிதிநிலை போன்றவைகளுக்கு ஓர் அறிவுரை நடுவராக (referee) இருக்கின்ற வங்கியரின் நிலை, மற்றும் அது தொடர்பாக அவர் எடுத்துக்கொள்ள வேண்டிய, தேவையான, முன்னெச்சரிக்கைகள் ஆகியவை ஏற்கெனவே விவாதிக்கப்பட்டுள்ளன.

அரசுகள், பொது நிறுவனங்கள் அல்லது வியாபாரக் கூட்டுருக்கள் ஆகியவைகளால் எழுப்பப்படும் கடன்களை ஒப்புறுதி செய்தல் (Underwriting loans raised by Governments, Public bodies, or Trading Corporations) : சில உள்ளாட்சி நிர்வாகங்கள் (local Authorties), மற்றும் இதரப்பொது நிறுவனம் (Public body) ஆகியவைகளுக்கு வங்கியர்களாகச் செயல்படுதல், மற்றும், சிலவேளைகளில் அவைகளின் சார்பாக ஒரு கடன் விடுப்பினை (issue of a loan) மேலாண்மை செய்வது, அல்லது இங்கிலாந்தில் உள்ளதுபோல, ஒரு வெளிநாட்டு அரசுக்குக்கூட வங்கியராகச் செயல்படுவது ஆகியன, கூட்டுப்பங்கு வங்கிகளுக்கு வழக்கமல்லாத ஒன்றல்ல. இரண்டாவது உலகப்போருக்கு முன்னர், ஜெர்மனியில் பல வங்கிகள், பங்கு மாற்று நிலையங்களின் உறுப்பினர்களாக அடிக்கடி செயல்பட்டு வந்தன; முதலீடு வங்கியர்களாகவும் அவை செயல்பட்டு வந்தன; அந்த நாட்டில்

அந்நாள்களில் இருந்த வங்கியர், பங்குத்தொகுப்புகள், மற்றும் கடன்பத்திரங்கள் ஆகியவைகளை ஒப்புறுதி செய்து, அவைகளின் விடுப்புகளைப் பங்கிட்டுக் கொடுத்தல் ஆகிய பணிகளைச் சாதாரணமாகச் செய்துவந்தனர். இந்தியாவிலுள்ள வங்கிகள், அடிக்கடி, உள்ளாட்சி மற்றும் நகராட்சி நிர்வாகங்கள் (local or Municipal Authorities) அல்லது இதரப்பொது நிறுவனங்கள், நிறுமங்கள், மற்றும் கூட்டுருக்கள் ஆகியவைகளின் வங்கியர்களாகச் செயல்படுகின்றன; மற்றும், எப்போதாவது, உற்பத்தி நிறுவனங்களின் பிணையப்பத்திரங்களோடு, அரசு கடன்கள், உள்ளாட்சி மற்றும் நகராட்சி நிர்வாகங்கள் ஆகியவைகளின் விடுப்புக்களையுங்கூட ஒப்புறுதி செய்கின்றன. இத்தகைய தொழிலை விரிவுபடுத்துவதற்கான நல்ல வாய்ப்பு, இந்த நாட்டில் இருப்பதாகத் தோன்றுகிறது. இருந்தபோதிலும், தங்களுடைய பொதுக்கடன் மேலாண்மையைத் தங்களுடைய தலைமை வங்கி (மத்தியவங்கி) நிறுவனங்களிடம் ஒப்படைத்து விடுவது, நாடுகளின் அரசுகளுக்கு வழக்கமான ஒன்றாகிவிட்டது.

16. வெளிநாட்டு நாணயமாற்றுக் கட்டுப்பாடுகள்

(Foreign Exchange Control)

முன்னுரை (Introduction)

சாதாரணக் காலங்களில், இந்தியாவைப் பொறுத்தமட்டில், சரக்குகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிகளின் இடப்பெயர்ச்சி கள் அரசுகட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விடுதலையளிக்கப் பட்டிருந்தன; ஓர் ஆள் எந்தச் செலாவணியிலும் வாங்கலாம், விற்கலாம் அல்லது முதலீடு செய்யலாம், மற்றும் எந்தவிதத் தடையுமின்றித் தான் விரும்பியபடியெல்லாம், தம்முடைய சொத்து முழுவதையும், அவர், என்னவேண்டுமானாலும் செய்யலாம். போர், அல்லது பாதகமான செலுத்து இருப்பு நிலை நெருக்கடி (adverse Balance of Payment crisis) போன்ற நாட்டின் அவசரக்காலங்களில் (National Emergencies) இந்தச்சுதந்திரம் கொடுக்கப்படமுடியாது. இரண்டாவது உலகப்போரின் போது, 1939 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மூன்றாம் தேதி அது தொடங்கியவுடனே இந்தியப் பாதுகாப்பு ஒழுங்குபடுத்துக் கட்டுப்பாடுகளின்படி (Defence of India Regulations) பெறப் பட்ட அவசரக்கால அதிகாரங்களின்கீழ் (Emergency Powers), இந்திய அரசு நாணயமாற்றுக் கட்டுப்பாட்டினைப் புகுத்தியது. இந்த அவசரக்கால அதிகாரங்கள், பின்னர், 1947 ஆம் ஆண்டின் வெளிநாட்டு நாணயமாற்று ஒழுங்கு படுத்துச் சட்டத்தின் படி, சட்டத்தின்படியானவையாக ஆக்கப்பட்டன; இச்சட்டம், அதே ஆண்டில் மார்ச் 25ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது. வெளிநாட்டு நாணயமாற்று நடவடிக்கைகள், மற்றும் இந்தியா விலுள்ள வெளிநாட்டுப் பிணையப்பத்திரங்களின் மீதான நட வடிக்கைகள், இந்தியாவுக்கு வெளியே குடியிருப்பவர்களுக்குச் செலுத்துகைகள், செலாவணி, உலோகக்கட்டி, மதிப்புமிகுந்த கற்கள் (Precious Stones) ஆகியவைகளின் ஏற்றுமதி இறக்கு மதி, மற்றும் பிணையப்பத்திரங்களை, இந்தியாவில் குடியிருக்கா தவர்களுக்கு (non-residents) மாற்றிக் கொடுத்தல், ஆகியவை களைக் கட்டுப்பாடு செய்து ஒழுங்குபடுத்துவதற்கு இந்தச்

சட்டம், மைய அரசுக்கும், இந்திய ரிசர்வ் வங்கிக்கும் (Reserve Bank of India) அதிகாரமளிக்கின்றது. இத்தகைய கட்டுப்பாடு போர்க்காலத்திய அரசு தேவைகளுக்காகவும், நாட்டின் பொது நலத்திற்காகவும் அவசியமானதாக ஆக்கப்பட்டது. ஆங்கிலப் பேரரசின் உறுப்பினராக இருந்தபடியால், இந்தியா போரில் ஈடுபடவேண்டியதாயிற்று; அதன் விளைவாக, குறிப்பாகப் போர்க்காலத் தேவைகளைக் கருத்திற்கொண்டு, நாட்டின் இறக்குமதி, ஏற்றுமதி ஆகிய இரண்டு வியாபாரங்களின் கட்டுப்பாட்டினையும் ஒழுங்குபடுத்தவேண்டியிருந்தது. இந்த நோக்கத்தோடு தான், நாணயமாற்றுக் கட்டுப்பாடு புகுத்தப்படவேண்டியதாயிற்று.

நாணயமாற்றுக் கட்டுப்பாட்டு வடிவமைப்பில் மாற்றங்கள் (Changes in the Pattern of Exchange Control)

1947 ஆம் ஆண்டிலிருந்து, இந்தியாவில் நாணயமாற்றுக் கட்டுப்பாடு, அமைப்பில் சிறிதளவு மாற்றம் பெற்றுள்ளது; ஆனால் ஐந்தாண்டுத் திட்டங்களோடு இணைத்துப் பேசப்படும் பொழுது, அது வேறுபட்ட ஒரு பொருளையும் (meaning), நோக்கையும் பெற்றுள்ளது. முந்தைய கட்டங்களில், கட்டுப்பாடு, போர்க் காலங்களில் இருந்த அவசர நிலைமையையோ தடைகளினால் (restrictions) ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலைகளையோ சமாளிப்பதற்கு ஓர் உதவிச்சாதனமாகவே கருதப்பட்டது. இத் தடைகள், 1950 ஆம் ஆண்டில், ஸ்டெர்லிங் நாணய இருப்புகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டவுடன், பெருமளவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. அப்பொழுது முதல், அவசியம் காரணமாகப் பல ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டுவரும், நாட்டின் முன்னேற்ற முயற்சிநடவடிக்கைகள், நாணயமாற்றுக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு கருவியாக ஆக்கியுள்ளன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல்பாதியில், நாடு, தன்னுடைய ஸ்டெர்லிங் நாணய இருப்பிலிருந்து பெருமளவு தொகையைத் திரும்ப எடுத்துக் கொண்டது; இந்த இருப்புகள், தற்போது வளர்ச்சிக்காரியங்களுக்குப் பயன்படக்கூடியவைகளாக உள்ள இருப்புகளை மிகவும் குறைந்த அளவிலேயே கொண்டுள்ளன. தொழில் வளர்ச்சிக்கான பாதையில் இன்னும் பெருமளவு முன்னேற்றத்தைக் காட்டவேண்டியுள்ள இந்தியா போன்ற ஒரு நாட்டின் முன்னேற்றத் திட்டம், செலுத்து இருப்பு நிலையிலுள்ள பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்காக வெளிநாட்டிலிருந்து வாங்கப்படும் கடன்மீது பெருமளவில் சார்ந்துள்ளது; இவ்வாறு சார்ந்திருக்கின்ற நிலை, பொருளாதாரம் தன்வலிமை

(Self sustaining) பெற்றபின்னரே குறையுமென்று எதிர்பார்க்க முடியும். 1957 ஆம் ஆண்டிலிருந்து, நடப்பு இறக்குமதித் தேவைகள், ஏற்கெனவே, பெருமளவு குறைக்கப்பட்டதனாலும், முன்னேற்றத்திற்கு அவசியமான இறக்குமதித்தேவை தொடர்ந்து இருந்துவருவதாலும், மற்றும் வெளிநாட்டுக் கடன்களுக்காக உதவி செய்யவேண்டியிருப்பதாலும் நாட்டினுடைய வெளிநாட்டு நிதிகளைச் செல்லும் புள்ளித் தன்மையில் வைத்திருப்பதற்கு உதவியாக, நாணயமாற்றுக் கட்டுப்பாட்டின் மீது ஒரு சிறப்பான பொறுப்புச் சுமத்தப்பட்டுள்ளது.

1947ஆம் ஆண்டின் வெளிநாட்டு நாணயமாற்று ஒழுங்கு படுத்துச் சட்டத்தின் (Foreign Exchange Regulation Act, 1947) பல்வேறு பிரிவுகளினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் பயன்படுத்துவதன் மூலம், மைய அரசும், இந்திய ரிசர்வ் வங்கியும், வெளிநாட்டு நாணயமாற்று, சரக்குகளின் ஏற்றுமதி, பொன், ஆபரணம், மற்றும் செலாவணி நோட்டுகள் ஆகியவைகளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, பிணையப்பத்திரங்களின் மாற்றல், வெளிநாட்டுச் செலாவணி இருப்புகளைக் கைவிடல் (surrender), வெளிநாட்டுப் பிணையப் பத்திரங்களின் திருப்பம் (return) ஆகியவைகளின் நடவடிக்கைகள் சம்பந்தமான விடயங்களின் தொடர்பாகப் பலவகையான அறிவிக்கைகளையும் ஆணைகளையும் விடுத்துள்ளன.

1947ஆம் ஆண்டின் வெளிநாட்டு நாணயமாற்று ஒழுங்கு படுத்துஞ் சட்டம், காப்புவாசகச் சரத்துகள் (Provisions of Foreign Exchange Regulation Act, 1947)

1947ஆம் ஆண்டின் வெளிநாட்டு நாணயமாற்று ஒழுங்கு படுத்துஞ் சட்டம், ரிசர்வ் வங்கியின் பொதுவான அல்லது சிறப்பான அனுமதியின்றி, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகளைத் தவிர, இதர நபர்களால், மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நாணயமாற்று நடவடிக்கைகள் எல்லாவற்றையும் தடைசெய்கின்றது. அதிகாரமளிக்கப்பட்டு, வெளிநாட்டு நாணயமாற்றுத் தொழிலில் ஈடுபட்டுள்ள வங்கிகள், சுமார் 40 உள்ளன; இவைகளில், ஒரு சில ஸ்டெர்லிங் பகுதிச் செலாவணிகளில் (Sterling area currencies) மட்டுமே ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளன; அவைகளில் பெரும்பாலானவை, ரிசர்வ் வங்கியால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குக் கட்டுபாடுகளுக்கு ஒப்ப, எல்லா வகையான வெளிநாட்டுச் செலாவணிகளிலும் தொழில் நடவடிக்கைகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. ஸ்டெர்லிங் நாணயத்திலான எல்லா நடவடிக்கைகளும், வெளிநாட்டு நாணயமாற்று

வியாபாரிகளின் சங்கத்தால் (Foreign Exchange Dealers Association) வெளியிடப்படும் (மாற்று) வீதங்களில்தான் செய்யப்பட வேண்டும். இதர எல்லாச் செலாவணிகளுக்குமான வீதங்களும், இந்திய வெளிநாட்டு நாணயமாற்று வியாபாரிகளின் சங்கத்தால் (Foreign Exchange Dealer's Association of India) நிர்ணயிக்கப்படுகின்ற ஸ்டெர்லிங் நோட்டுகளின் விடயத்தில் தவிர, இலண்டன் சந்தையில் நிலவும் வீதத்தில் அல்லது வீதங்களுக்கிடையில், அவ்விடத்திய பேரங்கள், (Spot Transactions) செய்யப்படவேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, சந்தை நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களாலேயே நிர்ணயிக்கப்படலாம் என்று இந்திய ரிசர்வ் வங்கி, அதிகாரமளிக்கப்பட்டுள்ள எல்லா வியாபாரிகளுக்கும் அறிவுரை கூறியுள்ளது. உண்மையான, சரக்கு இறக்குமதிகள், ஏற்றுமதிகள் ஆகியவைகளுக்கான, அவசியமாகின்றபொழுது, முன்னோக்கிய விற்பனைகளுக்கான (Forward Sales), அல்லது வெளிநாட்டுச் செலாவணிகளை வாங்குவதற்கான ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு நாணயமாற்று நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்ற பலவகையான ஒழுங்குக் கட்டுப்பாடுகளும், உலோகக்கட்டியின் இறக்குமதி ஏற்றுமதி, இந்தியாவிற்கு வெளியிலுள்ள நாடுகளுக்குப் பண அனுப்பீடுகள் (remittances) இறக்குமதி அனுமதிகளை வழங்குதல், மற்றும் இறக்குமதிகளுக்கு நிதியிடும் வழிமுறைகள், தடைசெய்யப்பட்ட கணக்குகளைத் (blocked accounts) திறந்து அவைகளைப் பராமரித்தல், ஏற்றுமதிக் கட்டுப்பாடு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிதியீடு வழிமுறைகள், வெளிநாட்டுச் செலாவணி நோட்டுக்களின் இறக்குமதி, மற்றும் ஏற்றுமதி, பிணையப் பத்திரங்களின் மீதான நடவடிக்கைகள், காப்பீடுகளின் மீதான நடவடிக்கைகள் ஆகியவைகளோடு தொடர்பானவைகளாகும். இந்த ஒழுங்குக் கட்டுப்பாடுகள், பரந்த அளவில், ரிசர்வ் வங்கியிலிருந்து பெறப்பட்ட பொதுவான, மற்றும் சிறப்பான அனுமதிகளோடு செய்யப்படுபவைகளைத் தவிர, இதரத் தங்கம், அல்லது வெள்ளி அல்லது ஏதாவது செலாவணி நோட்டுகள் அல்லது வங்கி நோட்டுகள் ஆகியவைகளின் இறக்குமதி, அதேபோல, தங்கம், ஆபரணம் நோட்டுகள் ஆகியவைகளின் ஏற்றுமதி, ஆகியவைகளைத் தடை செய்கின்றன. அதேபோல, இந்தியாவிற்கு வெளியில் குடியிருக்கின்ற நபர்களுக்குப் பிணையப் பத்திரங்களை ஏற்றுமதி, அல்லது மாற்றல் செய்வது

தடை செய்யப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குக் கட்டுப்பாட்டு விதிகளின்படி சரக்குகளை விற்றுப்பெறும் பணத்தை இந்தியாவிற்குக் கொடுத்துவிடுவதாக ஏற்றுமதியாளர் ஓர் உறுதிமொழியினைக் கொடுத்தாலன்றி இந்தியாவிலிருந்து எந்தச் சரக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடை செய்வதற்குக்கூட மைய அரசு அதிகாரத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவுக்கு வெளியே அனுப்பப்படும் பண அனுப்பீடு, சம்பந்தப்பட்ட நாட்டினுடைய செலாவணியில், அல்லது ஸ்டெர்லிங் அல்லது ரூபாய்களை அந்த நாட்டில் வசிப்பவருடைய கணக்குக்கு மாற்றல் செய்வதுமூலம் செய்யப்படலாம்; சில தறுவாய்களில் நடவடிக்கைகள், செலுத்துகை அல்லது பணம் சம்பந்தமான உடன்படிக்கைகள் ஆகியவைகளால் கட்டுப்படுத்துகின்றன. வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பண அனுப்பீடுகள், அவை இறக்குமதிகள் அல்லது வியாபாரக் காரியங்கள் ஆகியவை மூலமாக எழுகின்ற செலுத்துகைகள் தொடர்பாக இருப்பின், அனுமதிக்கப்படுகின்றன; ஆனால் இதரப் பண அனுப்பீடுகள் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதலுக்கு உட்பட்டவைகளாகும். இவைதாம், வெளிநாட்டு நாணயமாற்று நடவடிக்கைகளை ஆட்சி செய்கின்ற ஒழுங்குக் கட்டுப்பாட்டு விதிகளின், பரந்த அளவிலான சில கூறுகளாகும். இப் பாடத்தைப்பற்றிய சரியான மற்றும் பரந்த அளவிலான அறிவினைப் பெறுவதற்கு, 1960ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்ட, 'இந்தியாவில் நாணயமாற்றுக் கட்டுப்பாட்டின் சுருக்கம்' ("Outline of Exchange Control in India") மற்றும், அதற்குப்பின்னர் அதில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவைகளைப் பார்க்குமாறு வாசகர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். இந்தப் பாடத்தின் மிகவும் விளக்கமான, மற்றும் விரிவான படிப்பிற்கு, ரிசர்வ் வங்கியால், இந்தியாவிலுள்ள வெளிநாட்டு நாணயமாற்றில் அதிகாரம் பெற்றுள்ள வியாபாரிகளுக்கான அறிவுறுத்தல்களின் வடிவில், வெளியிடப்பட்டுள்ள, நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுக் கையேட்டினைப் (Exchange Control Manual) பார்க்குமாறு வாசகர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

கட்டுப்பாட்டின் அடிப்படை (Basis of Control)

1947ஆம் ஆண்டின் வெளிநாட்டு நாணயமாற்று ஒழுங்குபடுத்துஞ் சட்டத்தின் (Foreign Exchange Regulation Act, 1947) 3ஆவது பிரிவு, எந்த நபருக்கும், வெளிநாட்டு நாணயமாற்றில் தொழில் செய்வதற்கு அதிகாரமளிப்பதற்கும், மற்றும், அவர்களுடைய வெளிநாட்டு நாணயமாற்று வியாபாரத்தைக் கட்டுப்பாடு செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும், இவ்வாறு அதிகார

மளிக்கப்பட்ட வியாபாரிகளுக்குப் பொதுவான, மற்றும் சிறப்பான கட்டளைகளையும், அறிவுறுத்தல்களையும் விடுப்பதற்கும் இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றது.

தடைகள் (Prohibitions)

பிரிவு 4, ரிசர்வ் வங்கியின் பொதுவான, அல்லது சிறப்பான அனுமதி இருந்தாலன்றிக் கீழ்க்கண்டவைகளைத் தடை செய்கின்றது :

(அ) அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகளைத் தவிர, இதர நபர்களால் செய்யப்படும் வெளிநாட்டு நாணய மாற்றுத் தொடர்பான எல்லா நடவடிக்கைகளையும் தடை செய்கின்றது.

(ஆ) இந்தியச் செலாவணியை, வெளிநாட்டுச் செலாவணிக்கு, அல்லது வெளிநாட்டுச் செலாவணியை இந்தியச் செலாவணிக்கு, ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்டவற்றைத் தவிர இதர வீதங்களில் மாற்றுவதற்கு வழி செய்கின்ற எந்த நடவடிக்கையையும் தடை செய்கின்றது. அது, ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக வெளிநாட்டு நாணயத்தைப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள எந்த நபரும், எந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளதோ அவைகளை நிறைவேற்றவேண்டுமென்றும் மற்றும் வெளிநாட்டு நாணயத்தைக் குறிப்பிட்ட காரியத்திற்காகப் பயன்படுத்த முடியவில்லையெனில், தாமதமின்றி அதனை ஓர் அதிகாரம் பெற்றுள்ள வியாபாரிக்கு விற்றுவிடவேண்டுமென்றும், மேலும் கூறுகிறது.

பிரிவு 5, ரிசர்வ் வங்கியின் பொதுவான, அல்லது சிறப்பான அனுமதி இருந்தாலன்றிக் கீழ்க்கண்டவைகளைத் தடை செய்கின்றது :

(அ) இந்தியாவிற்கு வெளியே குடியிருக்கின்ற ஒரு நபருக்கு, அல்லது அவருடைய கணக்கில் வரவு வைப்பதற்காக, அல்லது அவருடைய ஆணையின்மூலம் அல்லது அவர் சார்பாக, நேரடியாகவோ, மறைமுகமாகவோ செய்யப்படும் எந்த ஒரு செலுத்துகையையும் தடை செய்கின்றது; மற்றும்

(ஆ) இந்தியாவிற்கு வெளியே குடியிருக்கின்ற ஒரு நபருக்குச் சாதகமாக, ஒரு செலுத்துகையைப் பெறுவதற்கான (உண்மையில் இருக்கின்ற அல்லது எதிர்காலத்தில் வரக்கூடிய) ஓர் உரிமையை உண்டாக்கும்படியாக, ஒரு மாற்றுச் சீட்டினை, அல்லது கடனுறுதிச் சீட்டினை, எழுதுதல், விடுத்தல் அல்லது மாற்றிக் கொடுத்தல், அல்லது ஏதாவது செலுத்துகையைச் செய்தல் அல்லது ஏதாவது கடனை ஒப்புதல் செய்தல் ஆகியவைகளைத் தடை செய்கின்றது.

பிரிவு 6(1) (அ), இந்தியாவிற்கு வெளியே குடியிருக்கின்ற நபர்களுக்குச் செலுத்தவேண்டியவை, 'தடை-செய்யப்பட்ட கணக்கில்' (Blocked Account) மட்டுமே செலுத்தப்படும் என்று கட்டளை பிறப்பிப்பதற்கு ரிசர்வ் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றது; மற்றும் பிரிவு 6(1) (ஆ), 'தடைசெய்யப்பட்ட கணக்கிற்கு' ஏதாவது தொகையை வரவு வைப்பதானது, வரவு வைக்கப்பட்ட தொகையளவிற்கு, செலுத்துகையைச் செய்த நபருக்குச் சிறந்த (கடன்) தீர்வினைக் (discharge) கொடுக்கின்றது.

பிரிவு 8(1), ரிசர்வ் வங்கியின் பொதுவான அல்லது சிறப்பான அனுமதி இருந்தாலன்றிப் பொன் அல்லது வெள்ளி, அல்லது ஏதாவது செலாவணி நோட்டுகள் அல்லது வங்கி நோட்டுகள் ஆகியவைகளின் இறக்குமதியைத் தடை செய்வதற்கு மைய அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

பிரிவு 8(2), ரிசர்வ் வங்கியின் பொதுவான, அல்லது சிறப்பான அனுமதி இருந்தாலன்றிப் பொன், ஆபரணம், அல்லது விலையுயர்ந்த கற்கள், அல்லது இந்தியச் செலாவணி, அல்லது ஓர் அதிகாரம் பெற்றுள்ள வியாபாரியிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டு நாணயத்தைத் தவிர, வேறு வெளிநாட்டு நாணயம் ஆகியவைகளின் ஏற்றுமதியைத் தடைசெய்கிறது.

பிரிவு 9, வெளிநாட்டு நாணயத்தை உடைமை கொண்டுள்ள அல்லது வைத்துள்ள, இந்தியாவிலுள்ள அல்லது இந்தியாவில் குடியிருக்கின்ற எந்த நபரையும், அதனை மைய அரசு நிர்ணயிக்கின்ற விலையில் இந்திய ரிசர்வ் வங்கிக்கு விற்றுவிடுமாறு அழைப்பதற்கு மைய அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

பிரிவு 10(1) (அ) மற்றும் (ஆ), வெளிநாட்டு நாணயத்தைப் பெறுவதற்கு, அல்லது இந்தியாவிற்கு வெளியே குடியிருக்கின்ற ஒரு நபரிடமிருந்து ரூபாய் நாணயத்தில் செலுத்துகைகளைப்

பெறுவதற்கு உரிமையைக் கொண்டுள்ள எந்த ஒரு நபரும், இத்தகைய வெளிநாட்டு நாணயத்தை அல்லது செலுத்துகையைப் பெறுவதைத் தாமதப்படுத்தக்கூடிய அல்லது விலக்குச் (cancel) செய்யக்கூடிய எந்தச் செயலையும் செய்யக்கூடாது என்று கூறுகின்றது; மற்றும் பிரிவு 10(2), இந்தப் பிரிவின் தேவைகளைக் கடைப்பிடிக்கத் தவறுகின்ற எந்த நபருக்கும், வெளிநாட்டு நாணயத்தை அல்லது செலுத்துகையைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டுத் தேவையெனத் தோன்றுகின்ற கட்டளைகளை விடுப்பதற்கு ரிசர்வ் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றது.

பிரிவு 12, ஏற்றுமதியாளர், இந்தியாவிலுள்ள சரக்குகளை விற்பதன்மூலம் பெறும் பணத்தை, ரிசர்வ் வங்கியால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு ஏற்ப, இந்திய நாட்டிற்குக் கொடுத்துவிடுவதாக உறுதிமொழி ஒன்று கொடுத்தாலன்றி, இந்தியாவிலிருந்து எந்தச் சரக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடைசெய்வதற்கு மைய அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

பிரிவு 13, ரிசர்வ் வங்கியின் பொதுவான அல்லது சிறப்பான அனுமதி இருந்தாலன்றி இந்தியாவிற்கு வெளியே குடியிருக்கின்ற நபர்களுக்கு பிணையப் பத்திரங்களை ஏற்றுமதி அல்லது மாற்றல் செய்தல், அல்லது பிணையப் பத்திரங்களின்மீது உரிமையை ஏற்படுத்துதல், அல்லது மாற்றல் செய்தல் ஆகியவைகளைத் தடைசெய்கின்றது.

பிரிவு 13A, மைய அரசினால் அறிவிக்கைமூலம் குறிப்பிடப்படுகின்ற பிணையப் பத்திரங்கள் தொடர்பான செலுத்துகையைத் தடை செய்கின்றது.

பிரிவு 15, ரிசர்வ் வங்கியின் அனுமதியின்றிக் கொணர்பவர் பிணையப் பத்திரங்கள் விடுக்கப்படுவதைத் தடைசெய்கின்றது.

பிரிவு 16, வெளிநாட்டுப் பிணையப் பத்திரங்கள் வைத்திருப்பவர்களை, ஒரு குறிப்பிட்ட விலையில் அவைகளைத் தமக்கே மாற்றிக் கொடுக்கும்படி அல்லது அவைகளை விற்பதற்கு அல்லது இத்தகைய பிணையப் பத்திரங்களின் விற்பனையைப் பெற்று விற்பனைமூலம் பெறும் வெளிநாட்டு நாணயத்தை ரிசர்வ் வங்கிக்குக் கொடுத்துவிடும்படி ஆணையிடுவதற்கு மத்திய அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

பிரிவு 18, ரிசர்வ் வங்கியின் பொதுவான அல்லது சிறப்பான அனுமதியின்றி,

(அ) இந்தியாவில் குடியிருக்கின்ற நபர்களிடமிருந்து, இந்தியாவிற்கு வெளியே குடியிருக்கின்ற நபர்களுக்குத் தொழிலின் கட்டுப்பாட்டினை மாற்றிக் கொடுப்பதை, மற்றும்

(ஆ) இந்தியாவிற்கு வெளியே குடியிருக்கின்ற நபர்களால் கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ள, வங்கி நிறுமங்கள் அல்லாத எந்தக் கூட்டு வணிகத்திற்கும் அல்லது நிறுமத்திற்கும் கடன்கள் வழங்கப்படுவதைத் தடை செய்கின்றது.

பிரிவு 18A, எந்த ஒரு நபருக்கு, கூட்டு வணிகத்திற்கு அல்லது நிறுமத்திற்கு முகவராக, அல்லது தொழில்நுட்ப (technical) ஆலோசகராக அல்லது மேலாண்மை ஆலோசகராக, நியமனம் செய்யப்படுவதை, வெளிநாட்டுக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட நிறுவனங்கள் அல்லது நிறுமங்கள் ஏற்றுக் கொள்வதைத் தடை செய்கின்றது.

பிரிவு 18B, கப்பல் நிறுமங்கள், விமான நிறுமங்கள் மற்றும் பயண முகவர்கள் (travel Agencies), முற்றிலும் அல்லது ஒரு பகுதி இந்தியாவிற்கு வெளியே இருக்கக்கூடிய பயணங்களுக்கு, பயண ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கின்ற தொழிலைச் செய்வதற்கு, ரிசர்வ் வங்கியின் அனுமதியைப் பெறவேண்டியது அவசியம் என்று ஆக்குகின்றது.

பிரிவு 21, இந்தச் சட்டத்தினுடைய சரத்துகளில் எதையேனும் அல்லது அதன்கீழ் விடுக்கப்பட்ட ஆணை எதையேனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தவிர்க்கக்கூடிய ஒப்பந்தங்களில் அல்லது உடன்படிக்கைகளில் எந்த ஒரு நபரும் ஈடுபடுவதைத் தடைசெய்கின்றது.

பிரிவு 23, மற்றவைகளோடு, (inter alia), இந்தச் சட்டத்தினுடைய எந்தச் சரத்தினையும், அல்லது அதன்கீழ் விடுக்கப்படும் எந்த விதியையும் கட்டளையையும் அல்லது ஆணையையும் மீறிச்செயல்படுகின்ற எந்த நபருக்கும், இரண்டு ஆண்டுகள் காலவரையிலுமான சிறைத் தண்டனை அல்லது தண்டப் பணம் (fine) அல்லது இரண்டையுமே, விதிக்கின்றது.

பொது (General)

1. அந்நியச் செலாவணி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் (Authorised Dealers in Foreign Exchange): 1947ஆம் ஆண்டின், வெளிநாட்டு நாணய மாற்று ஒழுங்குபடுத்துஞ் சட்டத்தின், 3ஆவது பிரிவின்கீழ் தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்துவதன் மூலம், ரிசர்வ் வங்கி, அந்நியச் செலாவணித் தொழிலில் ஈடுபடுவதற்குச் சில வங்கிகளுக்கு அனுமதி (licence) வழங்கியுள்ளது. இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ள வங்கிகள் வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் (Dealers) எனப்படுவர்; இவைகளில், நாணயமாற்றுக் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட தேதியான, 1939ஆம் ஆண்டு செப்டம்பர் 3ஆம் தேதிக்கு முன்னர் அந்நியச் செலாவணித் தொழிலைச் செய்து வந்த வங்கிகளும், மற்றும் அத் தேதிக்குப்பின்னர், அந்நியச் செலாவணித் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள வேறு சில வங்கிகளும் அடங்கும். அனுமதிக்கப்பட்டுள்ள சில வங்கிகள் ஸ்டெர்லிங் பகுதிச் செலாவணிகளில் மட்டுமே தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன; ஆனால், அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகளில் பெரும்பாலோர், ரிசர்வ் வங்கியால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, எல்லா வெளிநாட்டுச் செலாவணிகளிலும் தொழில் செய்வதற்கு உரிமையளிக்கப்பட்டுள்ளனர்.

2. ரூபாய் கொள்முதல் (Purchase of Rupees): அங்குக் குடியிருக்காதவர்களால், ஸ்டெர்லிங்கிற்கு எதிராக ரூபாய் கொள்முதல் செய்யப்படுவது இலண்டனில் அனுமதிக்கப்பட்டுள்ளது; ஆனால், ஸ்டெர்லிங், (ரூபாயை) வாங்குகின்ற நபருடைய, குடியாள் அல்லாத ஸ்டெர்லிங் கணக்கு (non-residental sterling account) ஒன்றிலிருந்து, அல்லது, அத்தகைய ஒரு செலுத்துமுறை இங்கிலாந்தின் (U. K.) ஒழுங்குபடுத்துக் கட்டுப்பாட்டு விதிகளால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால், இலண்டன் கட்டுப்பாட்டிற்கு (London control) அவருடைய வெளிநாட்டு நாணயத்தை விற்பனை செய்வதன்மூலம், பெற்றுக் கொடுக்கப்படவேண்டும்.

3. அட்டவணையிலிடப்பட்ட நிலப்பகுதிகள் (ஸ்டெர்லிங் நிலப்பகுதி) [Scheduled Territories (Sterling area)]: "அட்டவணையிலிடப்பட்ட நிலப்பகுதிகள்" என்னும் கருத்து, இங்கிலாந்தின் நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (United Kingdom Exchange Control Act), முதலாவது அட்டவணை

யில் குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பகுதிகளைக் குறிப்பிடுகின்றது. இது, முன்னர், 'ஸ்டெர்லிங் நிலப்பகுதி" (Sterling Area) என்றழைக்கப்பட்டுவந்த நிலப்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தற்போது, அட்டவணையிலிடப்பட்ட நிலப்பகுதிகள் என்பவை கீழ்க்கண்டவைகளைக் கொண்டவைகளாகும்.

1. (கானடா தவிர) ஆங்கிலேயக் காமன்வெல்த் [The British Commonwealth (except Canada)],
2. ஐரிஸ் குடியரசு (The Irish Republic),
3. ஆங்கிலேயப் பொறுப்புரிமை நிலப்பகுதிகள் (British Trust Territories),
4. ஆங்கிலேயக் காப்பாளர் ஆட்சி நிலப்பகுதிகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட நாடுகள் (British Protectorate and Protected States),
5. பர்மா (Burma),
6. ஐஸ்லாந்து (Iceland),
7. ஜோர்டானின் ஹேசமைட் அரசு (The Hashemite Kingdom of Jordan),
8. லிப்யா (Libya),
9. குவைத் (Kuwait),
10. தென் ஆப்பிரிக்கா, தென்மேற்கு ஆப்பிரிக்கா (South Africa, S. W. Africa).

இந்த அத்தியாயத்தில் "ஸ்டெர்லிங் நிலப்பகுதி" என்ற கருத்து எங்கெல்லாம் பயன்படுத்தப்படுகின்றதோ அங்கெல்லாம் அது, "அட்டவணையிலிடப்பட்ட நிலப்பகுதி"களைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும்.

வெளிநாட்டு நாணயமாற்றில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் (Authorised Dealers in Foreign Exchange)

1. பொது (General) : எந்த நாட்டினுடைய, அந்நியச் செலாவணி நடவடிக்கைகள், பணத்தினால் அல்லது செலுத்துகை உடன்படிக்கைகளால் நடைபெறவேண்டுமென்று உள்ளதோ அந்த நாட்டின் செலாவணி மற்றும் எந்த நாடுகள் எல்லா நடவடிக்கைகளும் ஸ்டெர்லிங் அல்லது ரூபாய்க் கணக்குகள் மூல

மாகத்தான் செய்யப்படவேண்டுமென்று கோருகின்றனவோ அந்த நாடுகளின் செலாவணிகள், ஆகியவை தவிர மற்ற எல்லா அந்நியச் செலாவணிகளிலும் வியாபாரம் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2. வங்கித் தொடர்பாளர்களுடன் நடவடிக்கைகள் (Transactions with Bank Correspondents): (i) விற்கப்படும் செலாவணி, வங்கியினுடைய கிளை அல்லது தொடர்பாளர் இருக்கின்ற அதே பணப்பகுதியைச் (monetary area) சேர்ந்த ஒரு நாட்டினுடையதாக இருக்கின்றது என்றால், ரூபாய் நிதிகளை அவர்கள் தங்களிடமிருந்து விட்டுவிடுவதற்கு வசதியாக, வங்கியினுடைய வெளிநாட்டுக் கிளைகளால் அல்லது தொடர்பாளர்களால், அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகளுக்கு, வெளிநாட்டுச் செலாவணிகள் விற்பனை செய்யப்படுவது அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ii) விற்கப்படும் அந்நியச் செலாவணி, வங்கியினுடைய சம்பந்தப்பட்ட கிளை அல்லது தொடர்பாளர் இருக்கின்ற அதே பணப்பகுதியைச் சேர்ந்த ஒரு நாட்டினுடையதாக இருக்கின்றது எனில், ரிசர்வ் வங்கிக்கு அறிவிக்கை ஒன்றை அனுப்பிவிட்டு, ரூபாய்களுக்கு எதிராக (பதிலாக), அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளால், வங்கிகளின் வெளிநாட்டுக் கிளைகளுக்கு அல்லது தொடர்பாளர்களுக்கு, அந்நியச் செலாவணிகள் விற்பனை செய்யப்படலாம்.

(iii) ஸ்டெர்லிங் பகுதிக்கு வெளியேயுள்ள ஓர் இடத்தில் (centre), ஓர் அந்நியச் செலாவணியை, மற்றோர் அந்நியச் செலாவணிக்கு, அல்லது ஸ்டெர்லிங்குக்கு எதிராக விற்பனை செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் அனுமதிக்கப்படவில்லை.

3. வங்கிகளுக்கிடையேயான நடவடிக்கைகள் (Inter-Bank Operations): அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள், ஒருவரிடமிருந்து மற்றொருவர், தடங்கல் ஏதுமின்றி அல்லது படிவங்களை நிரப்பவேண்டிய (completion of forms) அவசியமின்றி, பொது மக்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு அல்லது அவர்களுக்கு விற்பனை செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள, T.T.க்கு உள்ள கொள்முதல் மற்றும் விற்பனை வீதங்களுக்கு இடையேயுள்ள எந்த வீதத்திலும், அந்நியச் செலாவணிகளை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

4. இலண்டன் கட்டுப்பாடு (London Control) : கீழ்க் காணும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால், அதிகாரமளிக்கப் பட்டுள்ள மற்ற வியாபாரிகளிடமிருந்து வாங்குவதன்மூலம் தங்க ளுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியாமல் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் இருக்கும் பொழுது, அவர்கள், தங்களுடைய இலண்டன் முகவர்களின் மூலமாக இலண்டன் கட்டுப்பாட்டிலிருந்து கொள்முதல்களைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் :

(அ) படிவம் A-8-ல், இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியா பாரி, பொதுமக்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள நட வடிக்கைகளுக்கான விற்பனைகளுக்கு வேண்டிய அந் நியச் செலாவணியைத் தேவையுடையவராக இருந் தால் மட்டுமே இலண்டன் கட்டுப்பாட்டில் இருந்து கொள்முதல் செய்வதற்கு அனுமதியளிக்கப்படுகின்றது.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரி, குறிப்பிட்ட செலாவணியை நியாயமற்ற முறையில் தேவைக்கு அதிகமாக வாங்கி வைத்திருக்கவில்லை.

(இ) (அந்நியச் செலாவணியின்) தேவைக்கான விண்ணப் பம், அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரி எந்த அள விற்கு அந்நியச் செலாவணியை விற்றுள்ளாரோ அந்த அளவிற்கு உண்மையில் ஒப்படைப்பு (delivery) செய் யப்படுவதற்காகவே செய்யப்பட்டுள்ளது.

அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள், தங்களிடம் எச்ச மாக (surplus) உள்ள அந்நியச் செலாவணிகளை, தங்களுடைய இலண்டன் முகவர்களின் மூலமாக இலண்டன் கட்டுப்பாட்டிற்கு விற்றுவிடவேண்டும்.

5. அந்நியச் செலாவணிகளைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்தல் (Sales of Foreign Currencies to the General Public): (i) அங்கீகரிக்கப்பட்டுள்ள சில குறிப்பிட்ட காரியங்களுக்காக மட்டும், மற்றும் அந்நியச் செலாவணி எந்தக் காரியத்திற்காகத் தேவைப்படுகின்றது என்பதைக் குறிப்பிட்டு, அதற்கென உரிய படிவத்தில், வாங்குவோரால் விண்ணப்பம் செய்யப்பட்டதன் பேரில், பொதுமக்களுக்கு அந்நியச் செலாவணிகளின் விற்பனை, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகளால் செய்யப்படலாம். விண்ணப்பதாரரால் கொடுக்கப்பட்டுள்ள வாக்குமூல அறிக்கை

(statement) அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரியால் சரிபார்க்கப்படவேண்டும்; படிவத்தில் உள்ள அவருடைய முத்திரை மற்றும் கையொப்பம், அங்குக் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கை (வாக்குமூலம்), சரியாக உள்ளது என்பதைப் பற்றியும், விண்ணப்பதாரருடைய நல்லெண்ணத்தைப் பற்றியும் அவர் தம்மை நிறைவுப்படுத்திக்கொண்டுவிட்டார் என்பதற்குச் சான்றளிப்பதாகக் கருதப்படுகின்றது.

(ii) ஓர் அந்நியச் செலாவணியை விற்பனை செய்வதற்கு, அல்லது குடியாள் அல்லாத ஒருவருக்கு (non-resident) ரூபாய்களில் பணம் செலுத்தப்படுவதற்கு, ரிசர்வ் வங்கியினுடைய ஒப்புதல் முன்கூட்டியே தேவையாகவுள்ள தறுவாய்களில், அதற்கென உரிய படிவம் விண்ணப்பதாரரால் நிரப்பப்பட்டு, தேவையான ஆவணச் சான்று (documentary evidence) அல்லது உறுதிமொழி ஆகியவைகளோடு சேர்த்து, யார் மூலமாகப் பணமனுப்புதல் செய்யப்பட்டுள்ளதோ அந்த அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரியால் ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்படவேண்டும். அங்கீகரிக்கப்பட்டவுடன், படிவம், அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிக்குத் திருப்பி அனுப்பப்படும்; அப்போது அந்நியச் செலாவணியினுடைய விற்பனை செய்யப்படலாம்.

6. **முன்னோக்கிய ஒப்பந்தங்கள்** (Forward Contracts): முன்னோக்கிய சேர்ப்புகளுக்கு (Forward Delivery) அந்நியச் செலாவணிகளை ஆள்கள் வாங்குவதற்கோ, விற்பனை செய்வதற்கோ தடையேதுமில்லை. இருந்தபோதிலும், அந்நியச் செலாவணி ஓர் உண்மையான தொழில் காரியத்திற்காகத் (Business Purpose) தேவையாயுள்ள தறுவாய்களில், அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் மட்டுமே, அந்நியச் செலாவணிகளை முன்கூட்டிச் சேர்ப்புச் செய்வதற்கான ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஓர் இறக்குமதி உரிமம் (Import Licence) அல்லது O. G. L.—ன்கீழ் செய்யப்படும் இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்தப்படுவதற்கு அந்நியச் செலாவணி தேவையாக உள்ள பொழுது மட்டுமே முன்னோக்கிய விற்பனை (Forward sales) செய்யப்படலாம். அதேபோல, வெளிநாட்டு வாங்குவோரிடமிருந்து பெறப்பட்ட, உறுதியான ஆணையைச் (firm order) சான்றாகக் காட்டுவதன்பேரில், அதிகாரமளிக்கப்பட்டுள்ள, அல்லது தடைசெய்யப்படாத ஏற்றுமதிகள் தொடர்பான, அந்நியச் செலாவணிகள் தொடர்பாக மட்டுமே, முன்னோக்கிய கொள்முதல்கள் (forward purchases) செய்யப்படலாம்.

பண அனுப்புகைகள் (Remittances)

1. இந்தியாவிற்கு வெளியேயுள்ள நாடுகளுக்கு பண அனுப்புகைகள் (Remittances to Countries Outside India) : இந்தியாவிற்கு வெளியேயுள்ள நாடுகளுக்குப் பண அனுப்புகைகள், சம்பந்தப்பட்ட நாட்டினுடைய செலாவணியில், அல்லது ஸ்டெர்லிங் அல்லது ரூபாய்களை அந்நாட்டில் குடியிருக்கின்ற ஒருவருடைய கணக்கிற்கு மாற்றஞ் செய்வதன்மூலம், செய்யப்படலாம். தற்போதைக்குக் கிழக்கு ஐரோப்பிய, மற்றும் இதரச் சில நாடுகளோடு மட்டுமே இருதரப்பு உடன்படிக்கைகள் (Bilateral Agreements) உள்ளன. இத்தகைய தறுவாய்களில், செலுத்துகைகள் மாற்றப்படமுடியாத (non-convertible) ரூபாய்களில் மட்டுமே செய்யப்படமுடியும்.

2. இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்துவதற்குக் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் (Prescribed Methods of Payment for Imports) : (i) கீழேயுள்ள அட்டவணை, இந்தியாவிற்கு வெளியேயுள்ள நாடுகளுக்குப் பணமனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள செலுத்துகை முறைகளைக் காட்டுகின்றது.

இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்துவதற்குக் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள்

(Prescribed Methods of Payment for Imports)

நிலப்பகுதிகளின் விவரம் (Description of Territories)	குறிப்பிடப்பட்டுள்ள செலுத்துகை வழிமுறைகள் (Prescribed Methods of Payments)
அ. மாற்றப்படக்கூடிய கணக்கு நாடுகள்	
(i) ஆஸ்திரியா பெல்ஜியம் பணப்பகுதி (பெல்ஜியம், லக்சம்பர்க், மற்றும் பெல்ஜியன் காங்கோ) கானடா, டென்மார்க் (பாரோ தீவுகள் உட்பட) டச்சுப் பணப்பகுதி (நெதர்லாந்து மற்றும் நெதர்லாந்தினுடைய மேற்கிந்தியத் தீவுகள்)	(i) சம்பந்தப்பட்ட நாட்டில், அல்லது "மாற்றப்படத்தக்க கணக்குப்" பிரிவில் உள்ள ஏதாவது நாட்டில் குடியிருக்கும் ஒருவருடைய கணக்கிற்கு ரூபாய்களில் பணம் செலுத்துதல்

பிரான்சு பிராங்க் பகுதி (நகர்ப்புற பிரான்ஸ் மற்றும் கடல் கடந்த நாடுகளின் அரசு) இந்தாலியப் பணப்பகுதி-ஜப்பான், நார்வே, ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து மற்றும்லீச்டென்ஸ்டீன், அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள் மற்றும் அமெரிக்க ஐக்கிய மாநிலங்களின் ஆட்சிக்குக்கீழ் இருக்கக்கூடிய நிலப்பகுதி மேற்கு ஜெர்மனி எகிப்து†, ஈராக், பனமா, பிலிப்பைன் தீவுகள், பிரெஞ்சு சோமாலி கடற்கரை, போர்ச்சுகல் பணப்பகுதி, சோமாலிலாந்து காப்பாளர் ஆட்சிப்பகுதி	(ii) இங்கிலாந்தில் அல்லது ஸ்டெர்லிங் பகுதியிலுள்ள ஏதாவது நாட்டில் உள்ள வெளியாள், அல்லது "குடியாள் அல்லாத" ஒருவருடைய கணக்கிற்கு வரவு வைக்கும் முறையில், ஸ்டெர்லிங்கில், அல்லது ஸ்டெர்லிங் பகுதிச் செலவாணி ஒன்றில் பணம் செலுத்துதல் (iii) சம்பந்தப்பட்ட நாட்டின் செலாவணியில் அல்லது உப பிரிவில் உள்ள ஏதாவது பகுதியினுடைய செலாவணியில் பணம் செலுத்துதல்
(ii) உப பிரிவு 'அ' (1), மற்றும் 'ஆ' மற்றும் 'இ' பிரிவுகளில் உள்ள நாடுகளைத் தவிர இதர நாடுகள் அனைத்தும்	உப பிரிவு அ (i)-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது நாட்டினுடைய செலாவணியில், அல்லது சம்பந்தப்பட்ட நாட்டினுடைய அல்லது "மாற்றப்படத்தக்க கணக்கு" பிரிவிலுள்ள ஏதாவது நாட்டினுடைய குடியாள் ஒருவரின் கணக்கிற்கு, ரூபாய்களில் அல்லது ஸ்டெர்லிங்கில் பணம் செலுத்துதல்
ஆ. இருதரப்புக் கணக்கு நாடுகள் ஆப்கானிஸ்தானம்* பல்கேரியா செகோஸ்லோவேகியா ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு (கிழக்கு ஜெர்மனி), ஹங்கேரி, போலந்து ருமேனியா, யு.எஸ். எஸ்.ஆர். (ரசியா) யூகோஸ்லேயா	சம்பந்தப்பட்ட நாட்டினுடைய குடியாள் ஒருவருடைய கணக்கிற்கு ரூபாய்களில் செலுத்துகை செய்தல்

† அரிசி, பருத்தி ஆகியவைகளின் இறக்குமதி, மற்றும் தேயிலை, சணல் ஆகியவைகளின் ஏற்றுமதி, ஆகியவை தவிர

* பிரிவு அ(ii)ல் காட்டப்பட்டுள்ள முறைகளின்படி, ஆப்கானிஸ்தானத்திலிருந்து செய்யப்படும் பருத்தி, மற்றும் உரோமம் ஆகியவைகளின் இறக்குமதிகளுக்கு மட்டுமே செலுத்துகை செய்யப்படலாம்.

இ. ஸ்டெர்லிங் பகுதி நாடுகள் (அட்டவணையிலிடப்பட்ட நிலப்பரப்புகள்)	ஸ்டெர்லிங் பகுதியிலுள்ள ஏதாவது செலாவணியில் அல்லது ஸ்டெர்லிங் பகுதி நாட்டினுடைய குடியாள் ஒருவருடைய அங்குள்ள கணக்கின் வரவிற்கு ரூபாய்களில் செலுத்துகை செய்தல்

3. அந்நியச் செலாவணியில் பண அனுப்புகைகள் (Remittances in Foreign Exchange): வெளிநாடுகளுக்குச் செய்யப்படும் செலுத்துகைகள் பின்வரும் வகைகளின்கீழ் வருவதாகக் கருதப்படலாம்:

(i) இறக்குமதிகள் (Imports)

(ii) பராமரிப்பு மற்றும் தனிப்பட்ட செலுத்துகைகள் (Maintenance and Private Payments)

(iii) பயணம் (Travel)

(iv) தொழில் மற்றும் வியாபாரக் காரியங்கள் (Business and Trade Purposes)

(v) மூலதன மாற்றல்கள் (Capital Transfers)

4. இறக்குமதிகள் (Imports): சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து முன்கூட்டிப் பெற வேண்டிய அங்கீகாரம் (அனுமதி) ஏதுமின்றி, இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்துவதற்காக, வெளிநாட்டு நாணயத்தை விற்பதற்கு, மற்றும் குடியாள் அல்லாதாருடைய கணக்குகளுக்கு ஸ்டெர்லிங் அல்லது ரூபாய்களை மாற்றல் செய்வதற்கு, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

5. பராமரிப்பு மற்றும் தனிப்பட்ட செலுத்துகைகள் (Maintenance and Private Payments): இந்திய நாட்டைச் சேர்ந்த மக்களாலும், ஸ்டெர்லிங் பகுதி அல்லாத நாடுகளின் மக்களாலும் செய்யப்படும் பராமரிப்பு அனுப்புகைகளுக்கான எல்லா விண்ணப்பங்களும், இந்திய ரிசர்வ் வங்கியின் முன் (prior) ஒப்புதலைப் பெறவேண்டியது அவசியமாகும்; இந்த வகையான செலுத்துகைகளைச் செய்ய விரும்பும் ஆள்கள், அதற்கென உள்ள விண்ணப்பப் படிவத்தில், பணம் அனுப்புவதற்கான காரணத்தைக்காட்டி, அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரியின் மூலமாக விண்ணப்பம் செய்யவேண்டும். அனுமதியளிக்கப்பட்டதன் பேரில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஒரு குறிப்பிட்ட அளவிலான மாதாந்தர அனுப்புகைகளுக்கு ரிசர்வ் வங்கியின் அனுமதி கிடைக்கின்றது; அதிகாரமளிக்கப்பட்டுள்ள காலம் முடிவடையும்

வரையில், ரிசர்வ் வங்கியினிடம் எந்தத் தொடர்பும் கொள்ளாமல், இந்த அனுமதியினை ஆதாரமாகக் கொண்டு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் அனுப்புகைகளைச் செய்யலாம். அனுமதி (permit) ஒன்று காலாவதியானவுடன், மேலே சொல்லப்பட்ட முறையில், புதிய அனுமதி ஒன்றிற்கு, ரிசர்வ் வங்கிக்கு விண்ணப்பம் செய்யவேண்டும். இந்தியாவில் வசித்து வருகின்ற ஆனால், குடியுரிமையை அங்குப் பெற்றில்லாத, எல்லா ஸ்டெர்லிங் பகுதி, மற்றும் ஸ்டெர்லிங் பகுதி அல்லாத நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கும், பின்வரும் வசதிகள், சாதாரணமாக வழங்கப்படுகின்றன.

(i) ஸ்டெர்லிங் பகுதி நாட்டுமக்கள் (Sterling Area Nationals):

(அ) இந்தியாவில் வசித்து வருகின்ற வெளிநாட்டினர்களுக்காக, மாதத்திற்கு ரூ. 1500-க்கு மிகாத ஓர் உச்ச வரம்பிற்கு உட்பட்டு, அவர்களுடைய நிகர வருமானத்தில் 50 சதவீதம் வரை (வெளிநாட்டிற்குப் பண) அனுப்புகைகளைச் செய்வதற்கு, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) இந்த வரம்பிற்கு அதிகமான அல்லது ஸ்டெர்லிங் பகுதிக்கு வெளியேயுள்ள நாடுகளுக்கான அனுப்புகைகள் ரிசர்வ் வங்கியின் முன் (prior) அனுமதியைப் பெறவேண்டியவைகளாக உள்ளன; இந்த அனுமதியைப் பெறுவதற்கு முழு விவரங்களையும், பணம் அனுப்பப்படுவதற்கான காரணங்களையும் கொடுத்து, ஒரு விண்ணப்பம், வெளிநாட்டு நாணயமாற்றுத் தொழிலில் அதிகாரம் பெற்றுள்ள ஒரு வியாபாரியின் மூலம் செய்யப்படவேண்டும்.

(இ) இந்தியாவில் குடியிருந்து வரும் ஆள்களுடைய, வெளிநாட்டில் பிறந்த மனைவிகள் (அதாவது, தங்களுடைய கணவர்களினுடையவை அல்லாத நாடுகளைச் சேர்ந்த மனைவிகள்), நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுக் காரியங்கள் தொடர்பாக, அவர்களுடைய கணவர்கள் குடியுரிமை பெற்றுள்ள நாடுகளைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படுகின்றனர்; இந்தியா, மற்றும் இதர ஸ்டெர்லிங் பகுதி நாடுகளைச் சேர்ந்தவர்களுடைய மனைவியர், ரிசர்வ் வங்கிக்கு அவர்கள் விண்ணப்பம் செய்வதன் பேரில், அவர்களுடைய சொந்த நாட்டில் பராமரிப்புச் செலவிற்காக, அவர்களுடைய உறவினர்களைப் பார்க்கச் செல்வதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, ஒரு வரையறுக்கப்பட்ட காலத்திற்கு, நடுத்தரமான அளவு அனுப்புகைகளுக்கு அனுமதிக்கப்படுகின்றனர்

என்பதைத் தவிர, அவர்களுடைய கணவர்களுக்குக் கிடைக்காத அனுப்புகை வசதிகள், அவர்களுக்குச், சாதாரணமாக வழங்கப் படுவதில்லை.

(ii) ஸ்டெர்லிங் பகுதி அல்லாத நாடுகளைச் சேர்ந்தவர்கள் (Non-Sterling area Nationals): (அ) இந்தியாவில், தற்காலிக மாக, வசித்துவரும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள், ரிசர்வ் வங்கிக்கு விண்ணப்பம் செய்வதன்பேரில், அவர்களுடைய குடும்பங் களின், மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களின் ஆதரிப்புச் செலவுகளுக்கு (Support), அல்லது அவர்களுடைய சொந்த நாடுகளில் உள்ள நிரந்தரமான செலவுகளுக்குப் (Standing Charges) பணம் செலுத்துவதற்காக, நியாயமான அனுப்புகை வசதி கள், அளிக்கப்படுகின்றனர்.

ஆ) தங்களுடைய சொந்தநாடுகளுக்குத் தாற்காலிகமாகச் சென்றிருக்கும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள், அவர்கள் வெளி நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில், தங்களுடைய விடுப்புக்கால ஊதியங்களைத், தங்களுக்கு அனுப்புகை செய்யப்பட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

6. தற்செயல் அனுப்புகைகள் (Occassional Remittances); விண்ணப்பதாரர், அனுப்புகையின் அவசியத்தைப் பற்றித் திருப்திகரமான காரணத்தைக் காட்டுவதன் பேரில், இந்தியாவிற்கு வெளியேயுள்ள நாடுகளிலுள்ள உறவினர்கள், மற்றும் நண்பர்கள் ஆகியோர்களுக்கு, நடுத்தர அளவிலான தொகைகளுக்குப் பணம் அனுப்புவதற்காக அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு, இரக்கச் சிந்தனையின் அடிப்படையில், அனுமதி வழங்கப்படுகின்றது.

7. வெளிநாட்டுப் பயணம் (Travel): (i) பயணங்கள் (Passages): (இந்த நாட்டிற்கு வருவதாகப் பயண வழியில் உள்ள அல்லது இந்த நாட்டிற்குக் குறுகிய கால வருகையில் உள்ள நபர்களைத் தவிர) இந்தியாவில் வசிக்கின்றவர்களால், பயணம் எப்போதும் உள்ள நேரடி பாதையில் இருக்குமானால், மற்றும் கட்டணம், கப்பல் மற்றும் பயணமுகவர்கள் எல்லோருக்கும் ரிசர்வ் வங்கியால் அறுவுறுத்தப் பட்டுள்ள குறிப்பிடப்பட்ட வரையறைக்குள் இருக்குமானால், ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியின்றி, ரூபாய்களில் செய்யப்படும் செலுத்துகைகளுக் கெதிராக, வெளிநாட்டுக்கப்பல்கள் மற்றும் விமான நிறுமங்களி னால், அமெரிக்கக் கண்டம், மற்றும், பிலிப்பைன்ஸ் தவிர மீதி எல்லா இடங்களுக்கும் பயணங்கள் ஏற்பாடு செய்யப்படலாம். பயணம் செய்பவர், எந்தப் பயணத்திற்கான பயணச் சீட்டு உறுதி

செய்யப்பட்டுள்ளதோ, எந்தப் பயணத்திற்கான பயணச்சீட்டுப் படிவம் 'P'-ல், ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோ அந்தப் பயணத்திற்காக, ரிசர்வ் வங்கியால் விடுக்கப்படும் டாலர் நாணயத்திற்கான அனுமதியைப் (permit) பயணி பெற்றிருந்தாலன்றி, அமெரிக்கக் கண்டம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவைகளிலுள்ள இடங்களுக்குப் பயணச் சீட்டுகள், கப்பல் அல்லது விமான நிறுமங்களால் அளிக்கப்படலாகாது. மேலேயுள்ள தடைகள், தங்களுடைய சொந்த நாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கின்ற அமெரிக்கா, மற்றும் பிலிப்பைன் நாடுகளைச் சேர்ந்தவர்களுக்குச் செயல்படமாட்டா. பயணத்திற்காக, வெளிநாட்டு நாணயம் வழங்கப்பட்டிருந்தால், அல்லது பயணம் ரிசர்வ் வங்கியால் அளிக்கப்பட்டுள்ள விலக்குகளில் ஒன்றாக இருந்தால் அன்றி, இந்தியாவுக்கு வெளியேயுள்ள இடங்களுக்குப் பயணச் சீட்டுகளைப் பதிவுசெய்வதற்கு, 'P' படிவத்திலான அனுமதியைப் பெறவேண்டும்.

(ii) தொழில் தொடர்பான காரணங்களுக்கான வெளிநாட்டுப் பயணம் (Travel for Business Reasons): ஒவ்வொரு நாட்டிற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள சலுகை அளவின்படி, தொழில் காரியங்களுக்காக வெளிநாட்டில் பயணம் செய்வதற்கு, இந்தியாவில் வசிக்கும் ஆள்களுக்கு, வெளிநாட்டு நாணயமளிப்பு வசதிகள் அளிக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள், பயணத்தின் நோக்கம் முதலியவை தொடர்பாக எல்லாத் தகவல்களையும் அவைகளில் கொடுத்து, குறிப்பிடப்பட்டுள்ள வினாத்தொகுதி (questionnaire) படிவத்தில் கேட்கப்பட்டுள்ளதுபோல நேரடியாகவோ, வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரி ஒருவரின் மூலமாகவோ செய்யப்படவேண்டும். வினாத் தொகுதியின் படிவப் படிகளை, வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள எந்த வியாபாரியிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

(iii) மருத்துவக் காரணங்களுக்காக வெளிநாட்டுப் பயணம் (Travel for Medical Reasons): மருத்துவச் சிகிச்சைக்காக, அல்லது உடல்நலக் காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்புகின்ற, இந்தியாவில் குடியிருக்கின்ற ஆள்கள், நோயாளி எந்த நோயிலிருந்து துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றாரோ அந்த நோய்ச் சிகிச்சைக்காக அவர்/அவள், வெளிநாடு செல்லவேண்டுமென்பதை அவசியமானதாக ஆக்குகின்ற அளவிற்கு மோசமானது (serious) என்றும், நோயாளி செல்லவிரும்பும் நாட்டில் உயர்ந்த தரத்திலான சிகிச்சை கிடைக்கக்கூடியதாய் உள்ளது என்றும்,

ஒரு பரிந்துரைச் சான்றிதழை மாநில அறுவை மருத்துவரிட மிருந்து (Presidency Surgeon), அவர்கள் வசிக்கின்ற பகுதியின் நிர்வாக மருத்துவ அதிகாரியினுடைய (Administrative Medical Officer) மேற்கையொப்பத்துடன் (Counter-Signature) பெற்ற பிறகு, இந்திய ரிசர்வ் வங்கிக்கு விண்ணப்பம் செய்யலாம். சான் றிதழ், நோயாளியைக் கவனித்துவரும் மருத்துவர் / அறுவை மருத்துவர் ஆகியோராலுங்கூட வழங்கப்படலாம்; ஆனால், நிர் வாக மருத்துவ அதிகாரியினுடைய மேற்கையொப்பம் அவசிய மானதாகும்.

ஒவ்வொரு நோயினுடைய தேவைக்கும் தகுந்தவாறு, நோயாளி யினுடைய பராமரிப்பு மற்றும் மருத்துவச் செலவுகளுக்காக, அந்நியச் செலாவணி வசதிகளுக்கு ரிசர்வ் வங்கியால் இசை வாணை அளிக்கப்படும். மேற்கொண்டு அந்நியச் செலாவணிக் கான எந்த ஒரு வசதியும் அளிக்கப்படுமுன்னர், மருத்துவமனை அல்லது உடல்நல மாடம் (Sanatorium) ஆகியவைகளின் கட் டணச் சீட்டுகளால் (bills), ஏற்கப்பட்ட செலவுகளின் விவரங் கள் அத்தாட்சியளிக்கப்பட்டு, (நோயாளியைக்) கவனித்துக் கொண்டிருக்கும் மருத்துவரின் பரிந்துரையோடு சேர்த்துப் பணிந் தனுப்பப்படவேண்டும்.

மருத்துவச் சிகிச்சை சம்பந்தமில்லாத, வேறு காரணங்களுக் காக இந்தியாவை விட்டு வெளியே சென்றுள்ள நபர்கள், ஏதா வது மருத்துவச் செலவுகளை ஏற்பதற்காக அந்நியச் செலாவணி வசதிகள் தேவையுடையவர்களாக இருந்தால், அவர்கள் எந்த நாட்டிற்குச் சென்றுள்ளார்களோ அந்த நாட்டிலுள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்புகொண்டு, அதன் மூலமாக, தேவை யான அந்நியச் செலாவணிக்கு இசைவாணை (sanction) வழங்குவதைப் பரிந்துரை செய்து, தூதரகத்தால் நியமிக்கப்படும் இரண்டு மருத்துவர்களால் கையொப்பமிடப்பட்ட ஒரு சான்றித ழோடு, இந்திய ரிசர்வ் வங்கிக்கு விண்ணப்பம் செய்யவேண்டும். சம்பந்தப்பட்ட நாட்டில், இந்திய அரசின் சார்பாளர் எவரும் இல்லையெனில், அந்த நாட்டிலுள்ள இங்கிலாந்து நாட்டின் சார்பாளரால் (Consul) நியமிக்கப்படும் இரண்டு மருத்துவர்களால் கையொப்பமிடப்பட்ட ஒரு சான்றிதழ், அந்நியச் செலாவணி வசதிகோரி அனுப்பப்படும் விண்ணப்பத்திற்கு ஆதரவாக (to support) அனுப்பப்படலாம்.

(iv) கல்வித் தொடர்பான காரியங்களுக்காக வெளிநாட்டுப் பயணம்—மாணவர்கள் (Travel for Educational Purposes—Students): இந்திய அரசால் விதிக்கப்பட்டுள்ள சலுகைகளின்

அளவுகளுக்கு ஏற்றபடி, இந்தியாவிற்கு வெளியே கல்வி கற்ப தற்காகச் செல்ல விரும்பும் மாணவர்களுக்கு, அவர்களின் பரா மரிப்பு, கல்லூரிக் கட்டணங்கள் மற்றும் இதரத் தொடர்புடைய செலவுகளுக்காக வெளிநாட்டு நாணய வசதிகள் அனுமதிக்கப் படுகின்றன. இப்போது, இந்த வசதி, அங்கீகரிக்கப்பட்ட சில படிப்புகளுக்கு மட்டுமே வரையறை செய்யப்பட்டுள்ளது. குறிப் பிடப்பட்ட வினாத்தொகுதியின் படிவத்தில் கேட்கப்பட்டுள்ளது போன்ற விவரங்களோடு, வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் அல்லது பள்ளியில் சேர்க்கப்பட்டதற்கான சான்றுடன் இந்திய ரிசர்வ் வங்கிக்கு விண்ணப்பம் செய்யப்படவேண்டும். இந்த வினாத்தொகுதியின் படிகள், வெளிநாட்டு நாணய நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள எந்த வியாபாரி யிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டதன்பேரில், அதில் குறிப் பிடப்பட்டுள்ள அளவிற்கு, மாணவரின் பெற்றோர்/பாதுகாப்பாளர், அல்லது வங்கியர்களுக்கு, அனுப்புகைகளைச் செய்வதற்கு அதி காரமளித்து, ஓர் அனுமதி (permit) ரிசர்வ் வங்கியால் விடுக்கப் படும்.

8. முதலீடுகளின் மீதான வருவாய் (Income on Investments): சில நடைமுறை ஒழுங்குகள் நிறைவேற்றப்பட்டபின், நிரந்தரமாக இந்தியாவிற்கு வெளியே குடியிருக்கின்றவர்களால் வைத்திருக்கப்படும் பங்குகள் மற்றும் பிணையப் பத்திரங்களின் மீதான பங்காதாயம் மற்றும் வட்டியை அனுப்புவதற்கு அனுமதி, தடையேதுமின்றி வழங்கப்படுகின்றது.

9. தொழில் மற்றும் வியாபாரக் கொள்முதல்களுக்கு அனுப் புகைகள் (Remittances for Business and Trade Purchases): அனுமதிக்கப்பட்டுள்ள இறக்குமதிகளுக்கான செலுத்துகைகளைத் தவிர, தொழில் அல்லது வியாபாரம் தொடர்பான காரியங்களுக் காக இந்தியாவிற்கு வெளியே அனுப்பப்படும் அனுப்புகைகள், பொதுவாக, இந்திய ரிசர்வ் வங்கியின் முன்கூட்டிய அனுமதி யைப் பெறவேண்டும். இத்தகைய அனுப்புகைகளுக்கான விண் ணப்பம், ஆவணச் சான்றால் (documentary evidence) ஆதரிக் கப்படவேண்டும்.

10. சத்தம், மற்றும் பயண வசூல்கள் (Freight and Passage Collections): இந்தியக் குடியாள்கள் அல்லாத, கப்பல் மற் றும் விமான நிறுமங்களின் உரிமையாளர்கள், மற்றும் அவைகளை நடத்துபவர்கள் ஆகியவர்களுக்குக் கொடுக்கவேண்டியுள்ள எச்சச்

சத்தம் (Surplus Freight), பயணக் கட்டணப்பணம் (Passage Money) ஆகியவைகளை, முழுமையாக அனுப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய அனுப்புகைகளுக்கான விண்ணப்பங்கள், குறிப்பிட்ட படிவங்களில் கொடுக்கப்படும் உறுதி மொழிகள் மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவைகளோடு சேர்த்து, வெளிநாட்டு நாணய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரிக்கு அனுப்பப்படலாம். குறிப்பிட்ட படிவங்களின் படிகளை (copies), அதிகாரமளிக்கப்பட்டுள்ள எந்த ஒரு வியாபாரியிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய விண்ணப்பங்கள் முன்கூட்டிய அங்கீகாரத்திற்காக, ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்படவேண்டும்.

குறிப்பு (Note): இந்தியா உரிமைகொண்டுள்ள சரக்குகளின் மீதான சத்தம் மட்டுமே ரூபாய்களில் வசூலிக்கப்படலாம். ஈரான், ஆப்கானிஸ்தானம் போன்ற ஸ்டெர்லிங் பகுதியில் இல்லாத நாடுகளிலிருந்து அனுப்பப்படுகின்ற, மற்றும் இந்தியத் துறைமுகங்களிலிருந்து கப்பலில் ஏற்றியனுப்பப்படுகின்ற அல்லது மறுபடி கப்பலில் ஏற்றியனுப்பப்படுகின்ற சரக்குகளின் மீதான சத்தம், சம்பந்தப்பட்ட ஸ்டெர்லிங் பகுதியில் இல்லாத நாடுகளிலுள்ள ஏற்றுமதியாளர்களிடமிருந்து, ஏற்றுமதியாளர்களுடைய நாட்டினுடைய, அல்லது அதே பிரிவிலுள்ள ஏதாவது நாட்டினுடைய, செலாவணியில் அல்லது ஸ்டெர்லிங்கில் அல்லது ரூபாய்களில், உரிய ஒரு கணக்கிலிருந்து வசூலிக்கப்படவேண்டும். இந்திய அல்லது ஏதாவது ஸ்டெர்லிங் பகுதிக் கப்பல்களில் அனுப்பப்படும் இத்தகைய அனுப்பீடுகளின் மீதான சத்தம், ஏற்றுமதியாளருடைய நாட்டின் செலாவணியை, அல்லது உரிய ஸ்டெர்லிங்கை விற்பதன்மூலம் ரூபாய்கள் பெறப்பட்டுள்ளன என்று காட்டுவதற்கு ஒரு சான்றிதழ், அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரியிடமிருந்து பெறப்பட்டுள்ளது என்றால், ரூபாய்களில் வசூலிக்கப்படலாம். சத்தக் கட்டணங்கள் இந்திய ஏற்றுமதியாளரால் ஏற்கப்படவேண்டியவைகள் என்றிருக்கும்போது மட்டுமே, ஏற்றுமதிகளின் மீதான சத்தம் ரூபாய்களில் வசூலிக்கப்படலாம்.

11. ஏற்றுமதி/இறக்குமதிகளின் மீதான கழிவு (Commission on Exports/Imports): வெளிநாட்டு முகவர்களுக்கு, கழிவினை அனுப்பி வைப்பதற்காகச் செய்யப்படும் விண்ணப்பங்கள், எதன் மீது கழிவு செலுத்தப்படவேண்டியுள்ளதோ அந்தத் தொழிலின் முழு விவரங்களையும் கழிவு வீதத்தை நிர்ணயம் செய்த உடன்

படிக்கைகளையும் கொடுத்து, ஆவணச் சான்றால் ஆதரிக்கப்பட வேண்டும். வழக்கமாக, கழிவு எந்தச் செலாவணியில் தொழில் நடத்தப்பட்டுள்ளதோ அந்தச் செலாவணியில் மட்டுமே செலுத் தப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது; ஆனால், எந்த நாடு களுக்குச் சரக்குகள் அனுப்பப்பட்டுள்ளனவோ, எங்கிருந்து அவை இறக்குமதி செய்யப்பட்டனவோ, அந்த நாடுகள் தவிர இதர நாடுகளிலுள்ள முகவர்களுக்குக் கழிவு செலுத்தப்படுவதுங்கூட அனுமதிக்கப்பட்டுள்ளது.

12. கடல் கடந்த நாடுகளிலுள்ள முகவர்களின் சம்பளம், மற்றும் கடல் கடந்த நாடுகளிலுள்ள கிளைகளின் பராமரிப்பு (Salaries of Overseas Agents and Upkeep of Overseas Branches): ஸ்டெர்லிங் பகுதி அல்லாத நாடுகளிலுள்ள முகவர்கள், மற்றும் கிளைகளின் விடயத்தில், 1939ஆம் ஆண்டு செப்டம்பர் 3ஆம் தேதிக்கு முன்னர், அல்லது ஸ்டெர்லிங் பகுதி நாடுகளில் உள்ள முகவர்களின் விடயத்தில் 1947ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதிக்கு முன்னர், முகவர்கள் அல்லது கிளைகள் இந்தியா விலிருந்து அனுப்பப்பட்டு வந்த பணத்திலிருந்து பராமரிக்கப் பட்டுவரப்பட்டதாத இருந்தால், வெளிநாட்டு முகவர்களின் சம் பளங்கள், மற்றும் கடல் கடந்த நாடுகளிலுள்ள கிளைகளின் செலவுகள் தொடர்பான அனுப்புகைகள் அனுமதிக்கப்படுகின்றன. கடல் கடந்த நாடுகளில் புதிதாக முகவர்களை வைத்துக்கொள் வதற்கு அல்லது புதிய அலுவலகங்களைத் திறப்பதற்கு ரிசர்வ் வங்கியின் முன்அனுமதியைப் பெறவேண்டும்; இதற்கு, குறிப் பிட்ட படிவத்தில், விண்ணப்பதாரருடைய தொழிலின் அளவு, மற்றும் தன்மை பற்றிய விவரங்களோடு, ஒரு விண்ணப்பம் செய்யப்படவேண்டும். முகவருடைய அல்லது கிளையினுடைய பணிகள் நாட்டினுடைய வியாபாரத்திற்கு அவசியமானவை, மற் றும் நாட்டினுடைய நலனிற்காக உள்ளன என்று விண்ணப்ப தாரர் ரிசர்வ் வங்கியை நிறைவுபடுத்தினால் மட்டுமே அங்கீகாரம் அளிக்கப்படும்.

13. வெளிநாட்டுத் தொழில் வல்லுநர்களை வேலைக்கமர்த் தல் (Engagement of Foreign Technicians): வேலைக்காக வெளிநாட்டுக்காரர்களை இந்தியாவில் அமர்த்திக்கொள்வதற்கு ரிசர்வ் வங்கியின் முன்இசைவாணையைப் பெறவேண்டும்; இதற் கான விண்ணப்பம், அவர்கள் எந்த வேலைக்குத் தேவையா யுள்ளார்களோ அந்த வேலையின் முழு விவரங்களையும், அவர் களைத் தெரிந்தெடுப்பதற்கான காரணங்களையும், அவர்களின்

நியமன பேரங்களின் சரத்துகளையும், இந்தியாவிற்கு வருவதற்கு வழங்கப்பட்டுள்ள இணைவுச் சீட்டின் (Visa) விவரங்களையும் கொடுத்து, கடிதத்தின் மூலம் செய்யப்படவேண்டும்.

14. இலாபங்கள், உரிமைத் தொகைகள் மற்றும் புனை பொருள் உரிமைக் கட்டணங்கள் ஆகியவைகளின் அனுப்புகைகள் (Remittances of Profits, Royalties and Patent Fees) : இந்தியாவில் தொழில் செய்துவருகின்ற, அயல்நாட்டு நிறுமங்களின் கிளைகள் அல்லது துணை நிறுமங்கள், இந்திய ரிசர்வ் வங்கியின் முன்அனுமதியைப் பெற்றுக்கொண்டு, அவைகளின் உரிமையாளர்கள் வசிக்கின்ற நாட்டினுடைய செலாவணியில், தங்கள் இலாபம் முழுவதையும் அனுப்பிவைக்கலாம். இத்தகைய அனுப்புகைகளுக்கான விண்ணப்பங்கள், விண்ணப்பதாரரின் வங்கியர் மூலமாகச் செய்யப்படவேண்டும். இந்த விண்ணப்பங்கள், இருப்புநிலைக் குறிப்புகள் மற்றும் இலாப நட்டக் கணக்குகள் ஆகியவைகளின், உரிய முறையில் தணிக்கை செய்யப்பட்ட படிகளினாலும், இந்திய வருமானவரி மற்றும் இதர வரிகள் செலுத்தப்பட்டதற்கான ஆவணச் சான்றுகளினாலும் அல்லது இத்தகைய பொறுப்புகளுக்குச் செலுத்துவதற்காகப் போதுமான நிதி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதாக அவர்களுடைய தணிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ஒரு சான்றிதழினாலும் ஆதரிக்கப்படவேண்டும்.

புனைபொருள் உரிமைக் கட்டணங்கள் (Patent Fees) அல்லது உரிமைத் தொகைகள் (Royalties) ஆகியவைகளின் அனுப்புகைகள் ரிசர்வ் வங்கியினுடைய முன்அனுமதியைப் பெறவேண்டும்; இதற்கு, வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரியின்மூலமாக, அதற்கான படிவத்தில், ஒரு விண்ணப்பம் செய்யப்படவேண்டும்.

15. வெளிநாட்டுப் பத்திரிகைகள், சங்கங்கள் முதலானவற்றுக்குச் செலுத்துகைகள் (Subscriptions to Foreign Periodicals, Clubs, Etc.) : செலுத்தப்படவேண்டிய செலுத்துகைத் தொகைக்குச் சான்று காட்டவேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டு, தனிப்பட்ட நபர்கள், மற்றும் அதையே தொழிலாகக் கொண்டுள்ள புத்தக விற்பனையாளர்கள் அல்லாத நிறுவனங்கள் ஆகியவர்களால், வெளிநாட்டு மாதாந்தர வெளியீடுகள், பத்திரிகைகள் போன்றவற்றுக்கான செலுத்துகைகள் (subscriptions), வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளின்மூலமாக, எந்தவிதத் தடையுமின்றிச் செலுத்தப்படலாம். நல்லெண்ணத்தினாலான (bonafide) சங்கங்கள் (clubs),

அறிவியல், தொழில்நுட்ப அல்லது கல்வி நிறுவனங்களுக்கான செலுத்துகைகள் அல்லது உறுப்பினர் கட்டணங்களின் அனுப்புகைகள், அதேபோல, தேவைப்பட்டால், ரிசர்வ் வங்கியிலிருந்து இசைவு ஆணையைப் பெற்றுக்கொள்ளுகின்ற, வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள ஓர் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிக்கு விண்ணப்பம் செய்வதன்மூலம் அனுமதிக்கப்படுகின்றன. அனுப்பப்படும் தொகை ஆண்டிற்கு ரூ. 200-க்கு அதிகமாக இருந்தாலன்றி ரிசர்வ் வங்கியினுடைய அனுமதி தேவையில்லை.

16. (அ) அஞ்சல்வழிக் கல்விகள் (Correspondence Courses): வெளிநாடுகளிலுள்ள நிறுவனங்களால் நடத்தப்படும் அஞ்சல்வழிக் கல்விகளுக்கான கட்டணங்களின் அனுப்புகைகளுக்கான விண்ணப்பங்கள், அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகளுக்குச் செய்யப்படலாம். ஆண்டொன்றுக்கு ரூ. 200-க்கு அதிகமாகவுள்ள இத்தகைய அனுப்புகைகள், படிக்கின்ற கல்வியைப் புரிந்து கொள்வதற்கு, அல்லது அதன்மூலம் நன்மையைப் பெறுவதற்குப் போதுமான கல்விப் பின்னணியை, அல்லது செய்முறை அனுபவத்தை (Practical Experience) விண்ணப்பதாரர் பெற்றுள்ளார் என்று ரிசர்வ் வங்கி முழுநிறைவுபடுகின்றபொழுதுமட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. இப்போது இந்த வசதி, தொழில்நுட்பப் பாடங்கள் தொடர்பான கல்விகளுக்கு மட்டுமென வரையறுக்கப் பட்டுள்ளது.

(ஆ) தேர்வுக் கட்டணங்கள் (Examination Fees): வெளிநாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களுக்குத் தேர்வுக் கட்டணங்கள் செலுத்தப்படுவது தொடர்பான அனுப்புகைகளை, ஆவணத்தின் மூலம் சான்றளிக்கப்பெற்ற விண்ணப்பத்தை அதிகாரமளிக்கப் பட்டுள்ள வியாபாரிகளுக்குச் செய்வதன்மூலம் நிறைவேற்றலாம். 150 ரூபாய்க்கு அதிகமான அனுப்புகைகள், ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியைப் பெறவேண்டும்.

17. மூலதன மாற்றல்கள் (Capital Transfers): **ஸ்டெர்லிங் பகுதி நாடுகளைச் சேர்ந்தவர்கள்** (Sterling Area Nationals): (இந்தியாவில்) தாற்காலிகமாகக் குடியிருக்கும், ஆனால் இந்தியாவில் குடியுரிமை பெறாத, ஸ்டெர்லிங் பகுதி நாடுகளைச் சேர்ந்தவர்கள், அவர்கள் ஓய்வுபெறுகின்ற சமயத்தில், மூலதன முதலீடுகள் (Capital Investments) உட்படத் தங்களுடைய சொத்துகள் முழுவதையும், ஸ்டெர்லிங் பகுதியைச் சேர்ந்த எந்த நாட்டிற்கும், திரும்ப எடுத்துச்செல்வதற்கு (repatriate) அனுமதிக்கப்படுவர். ஓய்வுபெறும் சமயத்தில் மூலதனச் சொத்துகள்,

ரூ. 75,000 மதிப்புவரையில் மட்டுமே எடுத்துச்செல்லப்படலாம். அதிகப்படியாக (excess) உள்ளவை ஆண்டுக்கு ரூ. 20,000 அளவிற்குத் தவணைகளில் எடுத்துச் செல்லப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன. இத்தகைய அனுப்புகைகளுக்கான விண்ணப்பம், அனுப்புகையின் தன்மை, அது எவைகளைக் கொண்டுள்ளது, மற்றும் அனுப்புபவரின் தகுதி ஆகியவை பற்றிய முழு விவரங்களோடும் இந்திய ரிசர்வ் வங்கிக்குச் செய்யப்படவேண்டும்.

இந்தியாவிலிருந்து ஓய்வுபெறும் ஆள்களால், சொத்துகளை மாற்றல் செய்வதற்கான விண்ணப்பங்கள், வெளிநாட்டு நாணய மாற்றில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரியின் மூலமாக, இந்திய ரிசர்வ் வங்கிக்குச் செய்யப்படவேண்டும். இசைவாணை அளிக்கப்பட்டுள்ள தொகை அனுப்பப்பட்ட பின்பு, இந்தியாவில் விடப்பட்டுள்ள மூலதனச்சொத்து, (வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு) தடை செய்யப்பட்டதாக ஆக்கப்பட்டு (blocked), இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள முதலீடுகளுக்கு மட்டுமே கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படும்.

18. வெளிநாட்டு மூலதன முதலீடுகளைத் திரும்ப எடுத்துச் செல்லல் (Repatriation of Foreign Capital Investments) : (i) ஸ்டெர்லிங் பகுதி நாடுகளில் வசிக்கின்றவர்களால் இந்தியாவில் செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு மூலதன முதலீடுகள், தங்குதடையின்றித் திரும்ப எடுத்துச்செல்லப்படலாம். இருப்பினும், இத்தகைய விண்ணப்பங்கள் ரிசர்வ் வங்கியின் முன்கூட்டிய அனுமதியைப் பெறவேண்டியவைகளாக உள்ளன.

(ii) மேலே சொல்லப்பட்ட நாடுகளைத் தவிர இதர நாடுகளில் குடியிருக்கும் ஆள்களால் உரிமை கொள்ளப்பட்டுள்ள மூலதனத்தைத் தாய்நாட்டிற்குத் திரும்ப எடுத்துச்செல்லப்படுவது, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் அனுமதிக்கப்படும் :

(அ) இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள திட்டங்களில் (Projects), 1950ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதிக்குப்பின்னர், முதலீடு செய்யப்பட்டுள்ள முதல், அந்த முதலீட்டின் மதிப்பில் ஏற்பட்டுள்ள மூலதன அதிகரிப்போடு சேர்த்து, அதற்குப்பின்னர், எந்த நேரத்திலும் தாய்நாட்டிற்கு எடுத்துச் செல்லப்படலாம்.

(ஆ) முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட இலாபங்களின் ஏதாவது ஒரு பகுதி, இந்திய அரசின் அங்கீகாரத்துடன் திட்டங்களில் திரும்ப முதலீடு செய்யப்பட்டிருந்தால்

அது, தாய்நாட்டிற்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதி தொடர்பான காரியங்களுக்காக, முதலீடு என்று கருதப்படும்.

(இ) அது, அங்கீகரிக்கப்பட்ட ஒரு முதலீட்டுத் திட்டத்தின் இணைந்த ஒரு பகுதியாக இருந்தாலன்றி, தாய்நாட்டிற்குத் திரும்ப எடுத்துச் செல்வதற்கான இந்த வசதிகள், பங்குமாற்று நிலையத்தில் பங்குகளை வாங்குகின்ற நடவடிக்கைக்குப் பொருந்தமாட்டா.

(ஈ) மேலே குறிப்பிடப்பட்ட, தாய்நாட்டிற்குத் திரும்ப எடுத்துச் செல்வதற்கான வசதிகள், 1950ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதிக்கு முன்னர் இந்தியாவில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்திற்குப் பொருந்தமாட்டா.

(iii) வெளிநாட்டு மூலதனத்தை இந்தியாவில் முதலீடு செய்வதற்கான எல்லா விண்ணப்பங்களும், இந்திய அரசின், வாணிகம் மற்றும் தொழில் அமைச்சகத்திற்குச் செய்யப்படவேண்டும்; அவைகளைத் தாய்நாட்டிற்குத் திரும்ப எடுத்துச் செல்வதற்கான விண்ணப்பங்கள் இந்திய ரிசர்வ் வங்கிக்குச் செய்யப்படவேண்டும்.

19. **வெளிநாட்டில் குடியேறுதல் (Emigration):** இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஒரு நாட்டில், அல்லது ஸ்டெர்லிங் பகுதிக்கு வெளியேயுள்ள ஒரு நாட்டில், நிரந்தரமாக அங்குத் தங்கிவிடும் பொருட்டுக் குடியேறுவதற்கு விரும்புகின்ற ஓர் இந்தியர் அல்லது இதர ஸ்டெர்லிங் பகுதி நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆகியவர்களால் சொத்துகளை மாற்றல் செய்வதற்காகச் செய்யப்படும் விண்ணப்பம், வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரியின் மூலமாக இந்திய ரிசர்வ் வங்கிக்குச் செய்யப்படவேண்டும். சொத்துகளை மாற்றல் செய்வதற்கான வசதிகள் பின்வருமாறு அளிக்கப்படும்;

இதர ஸ்டெர்லிங் பகுதி நாடுகளைச் சேர்ந்தவர்கள், இந்தியாவிலிருந்து ஸ்டெர்லிங் பகுதியைச் சேராத நாடுகளுக்குக் குடியேறச் செல்லுதல் (Other Sterling Area Nationals Emigrating from India to Non-Sterling Area Countries): இந்தியாவில் தாற்காலிகமாக வசித்துவரும், மற்றும் இந்தியாவிலிருந்து ஸ்டெர்லிங் பகுதிக்கு வெளியேயுள்ள நாடுகளுக்குக் குடியேறுவதற்குச் செல்ல விரும்புகின்ற ஸ்டெர்லிங் பகுதி நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு, ஸ்டெர்லிங் பகுதி அல்லாத நாடுகளுக்குக் குடியேறச்

செல்லுகின்ற, இங்கிலாந்து (U.K.) நாட்டின் குடிகளுக்கு, இங்கிலாந்து நாட்டின் அதிகாரிகளால் வழங்கப்படும் அதே அளவிலான அனுப்புகை வசதிகள் அளிக்கப்படுகின்றன.

இறக்குமதிகள் (Imports)

1. இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்தும் வழிமுறைகள் (Methods of Payment for Imports): (i) 'நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுக் காரியங்களுக்காக' (For Exchange Control Purposes) என்னும் குறியிடப்பட்ட ஓர் இறக்குமதி உரிமத்தை (licence) உடைமை கொண்டிருத்தல், அதில் பெயர் குறிப்பிடப் பட்டுள்ள ஆளுக்கு, உரிமத்தில் சொல்லப்பட்டுள்ள தொகை வரையிலும், வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள எந்த வியாபாரியிடமிருந்தும், சரக்குகளை அளிக்கும் நாட்டினுடைய அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கு அனுமதியளிக்கின்றது. உரிமத்தை உண்மையில் வைத்திருக்கின்றவருக்காக, முகவர் என்ற முறையில் மற்றொரு நபரால் இறக்குமதி செய்யப்படுவதற்கு அதிகாரமளிக்கும் ஒரு கடிதம் இறக்குமதி வியாபாரக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து (Import Trade Controller) பெறப்பட்டாலன்றி, உரிமத்தில் பெயரிடப்படாத வேறொரு நபருக்கு வெளிநாட்டு நாணய விற்பனைகளைச் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் அனுமதிக்கப் படுவதில்லை.

(ii) இறக்குமதிகளுக்கெதிரான அனுப்புகைகள், சம்பந்தப் பட்ட நாட்டுடன் ஏற்படுத்தப்படும் நடவடிக்கைகளுக்கு அனுமதிக் கப்பட்டுள்ள செலுத்துகை முறைகளின்படி, சரக்குகள் தோன்றிய நாட்டினுடைய செலாவணியிலோ, அல்லது அந்த நாட்டிலுள்ள ஒரு குடியாளின் (resident) கணக்கிற்கு ஸ்டெர்லிங்கில் அல்லது ரூபாயில் செலுத்துகை செய்யப்படுவதன் மூலமோ செய்யப்படலாம். இரண்டு நாடுகளும் ஒரே பணப்பகுதியைச் சேர்ந்தவை அல்லது இத்தகைய செலுத்துகைகளை அவைகளுக்கிடையில் அனுமதிக்கப்பட்டுள்ள நாடுகளின் தொகுதியைச் சேர்ந்தவை என்றிருந்தாலன்றி, சரக்குகள் தோன்றிய நாட்டினுடையது அல்லாத செலாவணிகளில், அல்லது சரக்குகள் தோன்றியுள்ளது அல்லாத நாடுகளினுடைய குடியாள்களின் ஸ்டெர்லிங் அல்லது ரூபாய் கணக்கிற்குச் செலுத்துவதன்மூலம், இறக்குமதிகளுக்கான செலுத்துகைகள் செய்யப்படுவது, சாதாரணமாக அனுமதிக்கப் படுவதில்லை. இத்தகைய செலுத்துகைகள் செய்யப்படுவதற்கு முன்னர் இந்திய ரிசர்வ் வங்கியின் முன்கூட்டிய அனுமதியைப் பெறுவது அவசியமாகும்.

(iii) சரக்குகளுக்குப் பணம் செலுத்தப்படுவது, விதிக்கப்பட்டுள்ள உடன்படிக்கைச் சரத்துகள், அல்லது நிபந்தனைகளுக்கேற்ப, ஒரு வாணிக உறுதிக் கடிதத்தைத் திறப்பதன் மூலமோ, அந்நியச் செலாவணியை நேரடியாக அனுப்புவதன்மூலமோ அல்லது கப்பல் அனுப்பீட்டு ஆவணங்கள் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தபின் ஸ்டெர்லிங் அல்லது ரூபாய்களை மாற்றல் செய்வதன் மூலமோ செய்யப்படலாம்.

(iv) இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்துவதற்குத் தேவையான அந்நியச் செலாவணிக்கான விண்ணப்பங்கள், அதற்கெனவுள்ள நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுப் படிவத்தில் (Exchange Control Form), இறக்குமதி செய்யப்பட்டுள்ள சரக்குகளின் அளவு, மற்றும் தன்மை, அவைகளின் தோற்றுவாய் நாடு (Country of Origin), அவைகளின் இடாப்பு எந்தச் செலாவணியில் தயாரிக்கப்பட்டுள்ளதோ அந்தச் செலாவணி ஆகிய விவரங்களோடு, அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரிக்கு அனுப்பப்படவேண்டும்; மற்றும் அதனோடு சேர்த்து, இறக்குமதி அனுமதியினுடைய நாணயமாற்றுக் கட்டுப்பாட்டின் படியும் (copy) அனுப்பப்படவேண்டும். அவர்களின் மூலமாகச் சம்பந்தப்பட்ட மாற்றுச்சீட்டு மற்றும் கப்பல் அனுப்பீட்டு ஆவணங்கள் பெறப்பட்டிருக்கும்பொழுது, மேற்கொண்டு ஒழுங்குமுறை (formalities) எதனையும் கடைப்பிடிக்காது, உரிமத்தினுடைய (licence) நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுப் படியின் ஆதாரத்தைக்கொண்டு அனுப்புகைகளைச் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட கப்பல் அனுப்பீட்டு (shipment) ஆவணங்கள், பணமனுப்பும் வங்கியின் மூலமாக அல்லாமல் இறக்குமதியாளரால் நேரடியாகப் பெறப்படுகின்றபொழுது, தூய மாற்றுச் சீட்டுகளின் (Clean Bills) விடயத்தில், பணம் அனுப்பப்படுவதற்குமுன்னர், சரக்குகள் தொடர்பான சுங்க நுழைவுச் சீட்டினுடைய (Customs Bill of Entry) நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுப் படியும் முன்னிடல் செய்யப்படவேண்டும்.

(v) மேலே சொல்லப்பட்ட அதே நிபந்தனைகள், தேவையான அந்நியச் செலாவணியை இலண்டனில் வாங்குவதற்கான விண்ணப்பங்களுக்கும், அல்லது இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்தும் வகையில் குடியாள்கள் அல்லாதவர்களுடைய கணக்குகளுக்கு ஸ்டெர்லிங் அல்லது ரூபாய்களை மாற்றல் செய்வதற்கும் பொருந்தும்.

2. உரிமமின்றி இறக்குமதிகள் (Imports Without Licence) : அதிகாரமேதுமில்லாத முறையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள், ஒழுங்குக் கட்டுப்பாட்டினை முறித்த தன்மை, ஒரு

தொழில்நுட்பத் தன்மையில் (technical nature) ஆனதுதான் என்று இருந்தாலன்றி, அரசால் பறிமுதல் செய்யப்படுவதற்கு உட்பட்டவைகளாகும். ஒழுங்குக் கட்டுப்பாட்டினை (regulation) மீறியது, தொழில்நுட்பத் தன்மையிலான ஒன்றுதான் என்றிருந்தால், ஒரு தண்டக்கட்டணம் (penalty) செலுத்தப்படுவதன்பேரில், இறக்குமதி வியாபாரக் கட்டுப்பாட்டாளர் (Import Trade Controller) பொருள்களை விடுவிப்பதற்கு ஆணையிடலாம். இத்தகைய தறுவாய்களில், சுங்க அதிகாரிகள், இறக்குமதி அதிகாரமின்றிச் செய்யப்பட்டு, தண்டக்கட்டணம் செலுத்தப்பட்டதன் பேரில் அது விடுவிக்கப்பட்டது என்று காட்டுவதற்கு, சுங்க நுழைவுச் சீட்டின், நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுப் படியில் தகுந்த முறையில் மேலெழுதல் (Endorsement) செய்து விடுப்பார்கள். சுங்க நுழைவுச் சீட்டினுடைய நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுப் படியினுடைய ஆதாரத்தைக் கொண்டு இத்தகைய இறக்குமதிகளுக்கான பணம் செலுத்தப்படுவதற்கான அனுப்புகைகள், வெளிநாட்டு நாணயமாற்றில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரியின்மூலம் செய்யப்படலாம்.

3. வாணிக உறுதிக் கடிதங்கள் (Letters of Credit) : (i) கடன் முதிர்வு (Expiry of the Credit) தேதி, இறக்குமதி உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கப்பல் அனுப்பீட்டிற்கான கடைசித் தேதிக்குப்பின்னர் 30 நாள்களுக்கு அதிகப்படாமல் இருக்குமானால், உரிமமளிக்கப்பட்டுள்ள (licenced) சரக்குகளுக்கெதிராக வாணிக உறுதிக் கடிதங்கள் எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் திறக்கப்படலாம். கப்பல் அனுப்பீடுகளை நிறைவேற்றுவதற்கு, குறிப்பிட்ட தேதியிலிருந்து 15 நாள்களுக்கான ஒரு சலுகைக்காலம், இறக்குமதி வியாபாரக் கட்டுப்பாட்டு அதிகாரிகளால் அனுமதிக்கப்படுகின்றது. வாணிக உறுதிக் கடன்கள் அதுவரையிலும் திறக்கப்பட்டுக்கொள்ளலாமென்று கூறி அளிக்கப்படும் அதிகப்படியான காலமான 15 நாள்கள், ஆவணங்களை மாற்றிக் கொடுப்பதற்குப் போதுமான கால அவகாசத்தை அளிப்பதற்காக மட்டுமேயன்றி, இறக்குமதி அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியிலிருந்து 15 நாள்களுக்கும் தள்ளிக் கப்பல் அனுப்பீட்டுக் காலத்தை அதிகப்படுத்துவதற்காகச் செய்யப்படுவது அல்ல. கப்பலில் சரக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் இறக்குமதி அனுமதிக்காலம் முடிந்துபோகின்ற சமயங்களில், இறக்குமதி அனுமதி மறுபடியும் செல்லுபடியாகக் கூடியதாக ஆக்கப்படும் வரை வாணிக உறுதிக்கடித வசதி அளிக்கப்படவேண்டியதில்லை.

(ii) திறந்த பொதுவான அனுமதியின் (Open General Licence) பேரில் சரக்குகள் இறக்குமதி செய்யப்படுவதற்கெதி

ராக, ஆறு திங்களுக்கு அதிகமான காலத்திற்கு வாணிக உறுதிக் கடிதங்கள் திறக்கப்படலாகாது.

4. முன்கூட்டிச் செய்யப்படும் அனுப்புகைகள் (Advance Remittances): இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்துவதற்காக முன்கூட்டிப் பணம் அனுப்பிவைப்பது, எந்திரம், மூலதனப் பொருள்கள் (Capital Goods) ஆகியவைகளின் இறக்குமதிகள் சம்பந்தமாக அன்றி, சாதாரணமாக அனுமதிக்கப்படுவதில்லை. எந்திரம் போன்றவைகளை இறக்குமதி செய்வதில் வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடத்தில் பண முன்வைப்புகள் (deposits) செய்யப்படவேண்டும். இத்தகைய தறுவாய்களில், வெளிநாட்டு நாணய மாற்றில் ஈடுபட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரியின் மூலமாக, ரிசர்வ் வங்கியின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

5. இதர ஸ்டெர்லிங் பகுதி நாடுகளுக்குள் செய்யப்படும் இறக்குமதிகள் (Imports into other Sterling Area Countries): ஸ்டெர்லிங் பகுதியிலுள்ள ஒரு நாட்டிலிருந்து அதே பகுதியிலுள்ள மற்றொரு நாட்டிற்குச் செய்யப்படும் இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்துவதற்காக, ஸ்டெர்லிங் அல்லது இதர ஸ்டெர்லிங் பகுதி செலாவணிகளை வாங்குவதற்கு இந்தியாவிலுள்ள இடைநிலை முகவர்களால் (intermediaries) விடுக்கப்படும் வேண்டுகோள்கள், அதற்கு ஈடுசெய்யக்கூடிய அனுப்புகை இந்தியாவில் பெறப்பட்டால் அனுமதிக்கப்படுகின்றன. இதர ஸ்டெர்லிங் பகுதி நாடுகள் செய்யும் இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்துவதற்காக, ஸ்டெர்லிங் பகுதியைச் சேராத செலாவணிகளை வங்குவதற்காகச் செய்யப்படும் விண்ணப்பங்கள், ரிசர்வ் வங்கியினுடைய முன்கூட்டிய அங்கீகாரத்தைப் பெறவேண்டும்; இந்த அங்கீகாரம், இறக்குமதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று காட்டுவதற்கு விண்ணப்பப் படிவம் E-1-ல் செய்யப்பட்ட ஒன்றினால், அல்லது அதற்குச் சமமாக, இறக்குமதி செய்கின்ற நாட்டிலுள்ள நாணய மாற்றுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளால் விடுக்கப்படுகின்ற ஒன்றினால் ஆதரிக்கப்பட்டால் மட்டுமே அளிக்கப்படும்.

6. ஸ்டெர்லிங் பகுதி அல்லாத நாடுகளில் செய்யப்படும் இறக்குமதிகள் (Imports into Non-Sterling Area Countries): ஸ்டெர்லிங் பகுதியில் இல்லாத ஒரு நாட்டிலிருந்து, மற்றொரு ஸ்டெர்லிங் பகுதியில் இல்லாத நாட்டிற்குச் செய்யப்படுகின்ற, இந்தியாவில் நிதியிடப்பட்டுள்ள இறக்குமதிகளுக்கான வாணிக உறுதிக் கடிதங்களைத் திறப்பதற்கான வேண்டுகோள்கள், அல்லது ஸ்டெர்லிங் பகுதி அல்லாத ஒரு நாட்டிலிருந்து அதே

பகுதியில் உள்ள மற்றொரு நாட்டிற்கு அனுப்பப்படுவதற்குள்ள சரக்குகளுக்கெதிராக இந்தியாவின்மீது எழுதப்பட்டுள்ள மாற்றுச் சீட்டுகளுக்குப் பணம் செலுத்துவதற்காக, வெளிநாட்டுச் செலாவணிகளை வாங்குவதற்கான வேண்டுகோள்கள் ஆகியன ரிசர்வ் வங்கியின் முன்அங்கீகாரத்தைப் பெறவேண்டும். அடுத்து, மறுஏற்றுமதி செய்யப்படும்பொருட்டுச் சுங்கப் பண்டகத்தில் (bond) சரக்குகள் இறக்குமதி செய்து வைக்கப்பட்டுள்ள தறுவாய்களில், அந்நியச் செலாவணி அனுப்பப்படுவதற்கான அனுமதி, இந்திய ரிசர்வ் வங்கியால் சிறப்பாக அதற்கான இசைவாணை வழங்கப்பட்டாலன்றி அளிக்கப்படுவதில்லை.

7. தனிப்பட்ட இறக்குமதிகள் (Private Imports) : இறக்குமதி உரிமங்களின்கீழ் அல்லாத, தனிப்பட்டோரின் இறக்குமதிகளுக்காக வெளிநாட்டு நாணயத்தை விற்பனை செய்வதற்கு, ரிசர்வ் வங்கியின் முன்அனுமதியைப் பெறவேண்டும்.

குடியாள்கள் அல்லாதவர்களின் ரூபாய்க் கணக்குகள் (Rupee Non-Resident Accounts)

1. குடியாள்கள் அல்லாதவர்களின் ரூபாய்க் கணக்குகள் (Rupee Non-Resident Accounts) : இந்தியாவிற்கு வெளியேயுள்ள நாடுகளில் வாழும் தனிநபர்கள் (individuals), கூட்டு வணிக நிறுவனங்கள், நிறுமங்கள் (Company) அல்லது வங்கிகள் ஆகியோரின் கணக்குகள் குடியாள்கள் அல்லாதாரின் கணக்குகளாகக் கருதப்படுகின்றன. குடியாள்கள் அல்லாதாரின் கணக்குகள், வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகளால் மட்டுமே நிர்வகிக்கப்படலாம்.

2. குடியாள்கள் அல்லாதவர்களின் கணக்குகளுக்கு மாற்றல்கள் (Transfers to Non-Resident Accounts) : 'குடியாள் அல்லாதவரின் கணக்கு' என்னும் பெயர், குடியாள்கள் அல்லாத வங்கிகள், அவைகளோடு தனிப்பட்ட ஆள்கள், நிறுமங்கள், கூட்டுவணிக நிறுவனங்கள் ஆகியவைகளின் கணக்குகளைக் குறிப்பதாகப் பயன்படுத்தப்பட்டபோதிலும், வங்கிகளின் கணக்குகளைக் கருதுகின்றமுறை இதரக் கணக்குகளைக் கருதுகின்ற முறையிலிருந்து மாறுபட்டதாகும். குடியாள் அல்லாத ஒரு வங்கியினுடைய கணக்கிற்கு ரூபாய்களை மாற்றல் செய்வது என்பது, அவ்வாறு அந்த வங்கியின் கணக்கில் வரவு வைக்கப்படும் தொகை, சம்பந்தப்பட்ட வங்கியினுடைய நாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியவைகளாக ஆகின்றபடியால், அயல்நாட்டு நாணயமாற்றுக் கட்டுப்பாட்டினால், எந்த நாட்டில் வங்கி நிறுவப்

பட்டுள்ளதோ அந்த நாட்டிற்கு அந்நியச் செலாவணியை அனுப்பி வைத்ததற்குச் சமமாகக் கருதப்படும்; ஆனால், குடியாள் அல்லாத தனி நபர், அல்லது கூட்டுவணிக நிறுவனத்தினுடைய கணக்கிற்கு மாற்றல் செய்யப்படும் ரூபாய்கள், இந்திய ரிசர்வ் வங்கியினுடைய, அதற்கெனக் குறிப்பாக விடுக்கப்படும் அங்கீகாரம் இல்லாமல், கணக்கு வைத்திருப்பவரின் குடியிருப்பிடம் உள்ள நாட்டிற்கு அனுப்பிவைக்கப்படவேண்டியது அல்ல. குடியாள் அல்லாதவருடைய கணக்குகளுக்குச் செலுத்துகைகள் அல்லது அவைகளிலிருந்து செய்யப்படும் செலுத்துகைகள் ஆகியவைகளுக்கான விண்ணப்பங்கள், படிவம் **A-7** அல்லது படிவம் A-7C ஆகியவைகளில், வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரியின்மூலம் செய்யப்படவேண்டும்.

3. வங்கிகளின் குடியாள் அல்லாத கணக்குகள் (Non-Resident Accounts of Banks) : இந்திய ரிசர்வ் வங்கிக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இந்தியாவிற்கு வெளியேயுள்ள வங்கிக் கிளைகள் அல்லது தொடர்பாளர்களின் பெயர்களில், அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகளால் கணக்குகள் திறக்கப்படலாம். பொதுவாக, இத்தகைய கணக்குகளின் வரவுகள் மற்றும் பற்றுகள் தொடர்பாகப் பின்வரும் விதிகள் பொருந்தும் :

அ. வரவுகள் கீழ்க்காண்பவற்றுக்கு மட்டும் வரையறை செய்யப்பட்டுள்ளன :

I. இந்திய ரிசர்வ் வங்கிக்கு, படிவம் A-7-ல் அறிவிப்புச் செய்யப்படவேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு :

(அ) ரூபாய்களில் எழுதப்பட்டுள்ள மாற்றுச் சீட்டுகளின் பேரில் இறக்குமதி செய்யப்பட்டவைகளுக்குச் செலுத்துகைகள்.

(ஆ) இந்திய ரிசர்வ் வங்கிக்கு முன்கூட்டித் தெரியப்படுத்த வேண்டியது இல்லாமல், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் அங்கீகாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த, இந்தியக் குடிகளால் செய்யப்படக்கூடிய இதரச் செலுத்துகைகள்.

(இ) அதே நாட்டில் அல்லது அதே பணப்பகுதியிலுள்ள இதர வங்கிக் கிளைகள் அல்லது தொடர்பாளர்கள் ஆகியோரின் கணக்குகளிலிருந்து மாற்றல்கள் [அட்டவணையிலிடப்பட்ட பகுதிகள் ஒரு தனித்த பணப்

பகுதியாக இருப்பதால், அது ஸ்டெர்லிங் பகுதியின் வெவ்வேறு நாடுகளிலுள்ள வங்கிகளின் கணக்குகளுக் கிடையேயான மாற்றல்களையும் உள்ளடக்குகின்றது (covers); எடுத்துக்காட்டு : இலங்கை வங்கிக் கணக்கு ஒன்றிலிருந்து இங்கிலாந்து வங்கியின் கணக்கு ஒன்றிற் குச் செய்யப்படுகின்ற ஒரு மாற்றல்].

(ஈ) தனிப்பட்ட நபர்களின் குடியாள் அல்லாத கணக்கு களிலிருந்து மாற்றல்கள், அல்லது ரிசர்வ் வங்கிக்கு முன்கூட்டித் தெரியப்படுத்தவேண்டிய அவசியமின்றி, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் அங்கீகரிப்ப தற்கு அனுமதிக்கப்பட்டுள்ள, ஒரு வகையான கணக் கினை வைத்திருக்கும் அதே நாட்டைச் சேர்ந்த கூட்டு வணிக நிறுவனங்களின் கணக்குகளிலிருந்து மாற்றல் கள்.

(உ) அனுமதிக்கப்பட்டால், கணக்கு வைத்திருப்பவரின் நாட்டினுடைய, அல்லது பணப்பகுதியினுடைய செலா வணிக்கு விற்பனைகள்.

(ஊ) இங்கிலாந்திலுள்ள பொருத்தமான (appropriate) குடி. யாள் அல்லாத ஸ்டெர்லிங் கணக்கிலிருந்து, ஸ்டெர் லிங்கின் விற்பனைகள்.

(எ) [இருதரப்பு (bilateral) கணக்கு வைப்புத் தொகுதி யில் இருக்கின்றவைகளைத் தவிர இதர] ஸ்டெர்லிங் பகுதிக்கு வெளியேயுள்ள வங்கிகள், மற்றும் கிளை களினுடைய கணக்குகளிலிருந்து, ஸ்டெர்லிங் பகுதி யிலுள்ள வங்கிகள் மற்றும் கிளைகளின் கணக்கு களுக்கு மாற்றல்கள்.

II. படிவம் A-7-ல், இந்திய ரிசர்வ் வங்கியின் முன்கூட்டிய அங்கீகாரத்திற்குட்பட்டு :

(அ) I(அ) மற்றும் (ஆ) ஆகியவற்றில் விளக்கமாகக் கூறப் பட்டுள்ளவை தவிர, இந்தியாவிலுள்ள மற்றக் குடியாள் களிடமிருந்து பெறப்படும் எல்லாச் செலுத்துகைகளும்.

(ஆ) மேலே I(இ) மற்றும் (எ) ஆகியவைகளின்கீழ் வராத இதர வங்கிக் கிளைகள் அல்லது தொடர்பாளர்களின் கணக்குகளிலிருந்து மாற்றல்கள்.

(இ) I(ஈ)-ன்கீழ் வருபவைதவிர இதரத் தனி நபர்கள் அல் லது கூட்டுவணிக நிறுவனங்கள் ஆகியவற்றின் குடி யாள் அல்லாத கணக்குகளிலிருந்து மாற்றல்கள்.

ஆ. பற்றுக்கள் கீழ்க்காண்பவற்றுக்குமட்டும் வரையறை செய்யப்பட்டுள்ளன.

I. படிவம் A-7-ல் ரிசர்வ் வங்கிக்கு அறிவிப்புச் செய்ய வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு:

அதே நாட்டில் அல்லது பணப்பகுதியிலுள்ள இதர வங்கிகளின் கணக்குகளுக்கு மாற்றல்.

II. படிவம் A-7-ல் ரிசர்வ் வங்கிக்கு அறிவிக்கவேண்டுமென்ற அவசியமின்றி:

ஏற்றுமதிகளுக்கான செலுத்துகைகள் தொடர்பான எல்லாப் பற்றுகளும், மற்றும் இந்தியாவில் குடியிருப்போர்களுக்குச் செலுத்துவது தொடர்பான இதரப் பற்றுகளும்.

III. படிவம் A-7-ல் ரிசர்வ் வங்கியின் முன் அங்கீகாரத்திற்குட்பட்டு :

மேலே I மற்றும் II ஆகியவைகளின்கீழ் வராத இதர எல்லாப் பற்றுகளும்.

4. **குடியாள் அல்லாத வங்கிக் கணக்குகளுக்கிடையிலான மாற்றல்கள்** (Transfers between Non-Resident Bank Accounts) : வெவ்வேறு நாடுகளிலுள்ள வங்கிகளின் ரூபாய்க் கணக்குகளுக்கிடையிலான மாற்றல்கள் கீழ்க்காணும் வங்கிகளின் விடயத்தில் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன:

(அ) 'மாற்றத்தகு கணக்கு நாடுகள்' (Convertible Account Countries) எனப்படும் நாடுகளின் தொகுப்பிலுள்ள வங்கிகள்; இவை, அதே தொகுதியில் மற்ற நாடுகளிலுள்ள வங்கிகளுக்கு, அல்லது ஸ்டெர்லிங் பகுதியிலுள்ள வங்கிகளுக்குத் தொகைகளை மாற்றல் செய்யலாம், மற்றும்

(ஆ) ஸ்டெர்லிங் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ள நாடுகளிலுள்ள வங்கிகள்; இவை அதே பகுதியைச் சேர்ந்த மற்ற நாடுகளிலுள்ள வங்கிகளுக்குத் தொகைகளை மாற்றல் செய்யலாம்.

(இ) இதர எல்லா மாற்றல்களும், படிவம் A-7-ல் ரிசர்வ் வங்கியின் முன்அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

5. வங்கிகள் அல்லாத நபர்கள், மற்றும் கூட்டுவணிக நிறுவனங்கள் ஆகியவைகளின் குடியாள் அல்லாத கணக்குகள் (Non-Resident Accounts of Persons and Firms other than Banks): இத்தகைய தன்மையிலான எந்தக் கணக்கும் திறக்கப்படுவதற்கு முன்னர், விண்ணப்பதாரரின் அடையாளம், என்ன காரியத்திற்காகக் கணக்குத் தேவையாக உள்ளது, மற்றும் நிதியைப் பொறுத்தமட்டில் அது எவ்வாறு வைத்திருக்கப்படும் ஆகியவைபற்றிய விவரங்களோடு இந்திய ரிசர்வ் வங்கிக்கு பார்வைக்குறிப்பு (reference) ஒன்று அனுப்பப்படவேண்டும். இருந்தபோதிலும், இந்தியக் குடிமக்கள் அல்லது வெளிநாடுகளில் நிரந்தரமாகத் தங்கியுள்ள, இந்தியாவிலிருந்து சென்ற நபர்கள், ஆகியோர்களின் விடயத்தில், ரிசர்வ் வங்கிக்கு முன்கூட்டித் தெரிவிக்கவேண்டிய அவசியமின்றி, இத்தகைய கணக்குகளைத் திறப்பதற்கு, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒவ்வொரு கணக்கையும் நடத்திச் செல்வது தொடர்பாக, சிறப்புக் கட்டளைகளை ரிசர்வ் வங்கி விடுக்கலாம்; ஆனால் இத்தகைய சிறப்புக் கட்டளைகள் ஏதும் இல்லாதவிடத்து, வரவுகளும் பற்றுகளும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டுச் செய்யப்படலாம்.

(அ) இந்திய ரிசர்வ் வங்கிக்கு படிவம் A-7-ல் அறிவிப்புச் செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனைக்குட்படாத வரவுகளும் பற்றுகளும் ;

வரவுகள் (credits) :

(i) பிணையப் பத்திரங்களின் மீதான பங்காதாயங்களும் வட்டிகளும்,

(ii) முதலில் பற்று வைக்கப்பட்ட, அல்லது அதிகமாக விதிக்கப்பட்ட தொகைகளைத் திருப்பிக் கொடுத்தல்.

பற்றுகள் (Debits) :

(i) அஞ்சல் செலவுகள், தந்திக் கட்டணங்கள், முத்திரைக் கட்டணங்கள் (Stamp fees), பண்டகத்திலிடல் மற்றும் பாதுகாப்பு வைப்புக் கட்டணங்கள், சங்கக் கட்டணங்கள் (Club bills), வங்கிக் கட்டணங்கள், ஆகியவை தொடர்பான செலுத்துகைகள், பணியாள்களுக்குச் செலுத்துகைகள், மற்றும் 100 ரூபாய்க்கு மிகாத அளவிலான இதரச் சில்லறைச் செலுத்துகைகள்.

(ii) முன்பு செய்யப்பட்ட வரவுகளை மாற்றி எழுதுவதற்கான (reverse) பற்றுகள்.

(iii) அந்நியச் செலாவணியிலான அனுப்புகைகள், அல்லது படிவம் A, S. A. 1 அல்லது A-7 ஆகியவைகளின் கீழான, வங்கிகளின் குடியாள் அல்லாத ரூபாய் கணக்குகளுக்கு மாற்றல்கள் ஆகியவை தொடர்பான பற்றுகள்.

(ஆ) படிவம் A-7-ல் இந்திய ரிசர்வ் வங்கிக்கு அறிவிப்புச் செய்யப்படுவதற்கு உட்பட்ட வரவுகளும் பற்றுகளும்.

வரவுகள் :

(i) வங்கியின் கிளைகள் மற்றும் தொடர்பாளர்களுடைய குடியாள் அல்லாத கணக்குகளிலிருந்து, அனுப்புகின்ற நாட்டில் அல்லது பணப்பகுதியில் வசிக்கின்ற, இந்திய நாட்டைச் சேர்ந்தவர்களின் குடியாள் அல்லாத ரூபாய்க் கணக்குகளுக்கு ஏதாவது தொகையை மாற்றல் செய்வது.

(ii) ஒரு மாதத்தில் மொத்த வரவுகள் ரூ. 2000-க்கு அதிகமாக இல்லை, மற்றும் தனிப்பட்ட ஒரு தொகை (individual amount) ரூ. 750-க்குமேல் இல்லை என்றிருந்தால், சிறிய காசோலைகளை வசூல் செய்து பெற்ற தொகைகள்.

பற்றுகள் :

(i) இந்தியாவிலுள்ள பணம் பெறுவோர்களுக்குச் (payees) சாதகமாக அல்லது அவர் தாற்காலிகமாக இந்தியாவில் இருக்கும்பொழுது கணக்கு வைத்திருப்பவருக்கே சாதகமாக, ரூ. 100-க்கு மேல், ஆனால் ரூ. 1000-க்கு அதிகப்படாத தொகைக்கு எழுதப்பட்ட காசோலைகள்.

(ii) கணக்கு வைத்திருப்பவருடைய கட்டளைகளின்பேரில், காப்பீட்டுக் கட்டணங்கள், வருமான வரி, உறவினர்களுக்குச் சலுகைப் பணங்கள் ஆகியவை சம்பந்தமாக ரூ. 100-க்கு மேல் ஆனால் ரூ. 1000-க்கு அதிகப்படாமல் செய்யப்பட்ட செலுத்துகைகள்.

(iii) இந்திய அரசின் பிணையப் பத்திரங்களில் முதலீடு செய்வதற்கான பற்றுகள்.

(இ) இதர எல்லா வரவுகளும் பற்றுகளும், படிவம் A-7-ல் இந்திய ரிசர்வ் வங்கியின் முன்அனுமதியைப் பெற வேண்டும்.

6. இந்தியாவிற்கு வெளியே செல்ல ஓர் ஆள் புறப்படுதல் (Departure of a Person Outside India): (i) இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஒரு நாட்டிற்கு ஒரு நபர் புறப்பட்டுபோனவுடன், அவருடைய கணக்கை வைத்திருக்கின்ற வங்கி, இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதுபற்றிய செய்தியைத் தெரியப்படுத்தவேண்டும்; மற்றும், அவர் புறப்படுவதற்கு முன்னர் எழுதப்பட்ட காசோலை களுக்குப் பணம் செலுத்துவதைத் தவிர அந்தக் கணக்கு எவ்வாறு வகைப்படுத்தப்படவேண்டும் என்று, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு ரிசர்வ் வங்கி அறிவுரை கூறுகின்ற வரையில், அவருடைய கணக்கில் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் அனுமதிக்கப்படமாட்டாது.

(ii) இந்தியாவில் குடியேறியில்லாத, ஆனால், இந்தியாவில் வசித்து வருகின்ற ஓர் இங்கிலாந்து நாட்டுக் குடிமகன், இந்த நாட்டை விட்டுச் சென்று ஸ்டெர்லிங் பகுதிக்குள் ஏதாவது ஒரு நாட்டில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டால், இந்தியாவிலுள்ள அவருடைய கணக்கு, இந்திய ரிசர்வ் வங்கிக்குத் தெரிவிக்கப் படவேண்டிய அவசியமின்றி, சம்பந்தப்பட்ட அதிகாரமளிக்கப் பட்டுள்ள வியாபாரியால், குடியாள் அல்லாத கணக்கு என்று பெயரிடப்படலாம்.

7. ரூபாய்ப் பணவிடைகள் (Rupee Drafts): இந்தியாவிற்கு வெளியேயுள்ள இடங்களில் ரூபாய்ப் பணவிடைகள் அல்லது தந்தி மாற்றல்களை (T.Ts.) வாங்குவதற்கான விண்ணப்பங்கள் படிவம் A-7-ல் செய்யப்படவேண்டும். இத்தகைய விண்ணப்பங்கள், அந்நியச் செலாவணியை அனுப்புகை செய்வதற்கான விண்ணப் பங்களைப்போன்று அதேமுறையில் இந்திய ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியைப் பெறவேண்டும்.

8. ரூபாய் மாற்றுச்சீட்டுகள் (Rupee Bills): ரூபாய் மாற் றுச்சீட்டுகளுக்குப் பெறப்படும் தொகைகளை, குடியாள் அல்லாத வங்கிக்கிளை அல்லது தொடர்பாளரின் கணக்குக்கு வரவு வைப் பதற்கான விண்ணப்பங்கள், அந்நியச் செலாவணியை அனுப் புகை செய்வதற்கான விண்ணப்பங்களைப் போன்று அதேமுறை யில், இறக்குமதி உரிமங்களின் நாணய மாற்றுக் கட்டுப்பாட்டுப் படிகளினால் (Exchange control copies of import licences) ஆதரிக்கப்படவேண்டும். இந்தியாவின்மீது எழுதப்படும் ரூபாய்

மாற்றுச் சீட்டுகளை வசூல் செய்து பெறப்படும் தொகைகள், சரக்குத் தோற்றுவாய் நாட்டின் (Country of Origin) குடியாள் ஆன ஒரு வங்கியின் கணக்கில் மட்டுமே வரவு வைக்கப்படலாம்.

9. A-7 படிவங்களைப் பணிந்தனுப்பவேண்டிய பொறுப்பு (Responsibility of Submitting Forms A-7) : குடியாள் அல்லாத ஒரு கணக்கிற்கு வரவுகள் கொடுக்கின்ற விடயத்தில், A-7 படிவத்தினைப் பணிந்தனுப்பவேண்டியதற்கு, பெறுகின்ற வங்கியர் தாம் பொறுப்பாளியாவார்.

பகுதி 5-ல் சொல்லப்பட்ட எல்லைக்கு வெளியேயுள்ள, குடியாள் அல்லாத கணக்குகளின்மீது எழுதப்பட்டு, A-7 படிவங்களைச் சேர்த்து அனுப்பப்படாத காசோலைகள், 'குடியாள் அல்லாத கணக்கு, படிவம் A-7-ல் இந்திய ரிசர்வ் வங்கியினுடைய அங்கீகாரம் தேவை' என்ற குறிப்புடன் செலுத்தும் வங்கியால் திருப்பி அனுப்பப்படும். அப்பொழுது, வசூலிக்கும் வங்கி, யாருடைய கணக்கிற்குக் காசோலை வரவு வைக்கப்படுகின்றதோ அந்த வாடிக்கையாளரோடு சேர்ந்து, விவரங்களையும் செலுத்துகைக்கான காரணத்தையுங் காட்டி, இந்திய ரிசர்வ் வங்கிக்கு, A-7 படிவத்தை, பணிந்தனுப்புவதற்கு (submission) ஏற்பாடு செய்யும்.

10. வெளிநாட்டுக் கிளைகள், முகவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் கணக்குகள் (Accounts of Overseas Branches, Agents and Customers) : இதே தடைகள், இந்தியாவிற்கு வெளியே குடியாள்களாக உள்ள தங்களுடைய கிளைகள், முகவர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகியோர்களுக்காக, வியாபாரிகள் மற்றும் வியாபார நிறுவனங்களின் ஏடுகளில் நிர்வகிக்கப்படும் கணக்குகளின் மீதான நடவடிக்கைகளுக்கும் பொருந்தும். இத்தகைய கணக்குகளை வைத்திருப்பதற்கான இசைவாணை (sanction) ரிசர்வ் வங்கியிலிருந்து பெறப்படவேண்டும்; அவைகளின் மீதான நடவடிக்கைகளும், முன்கூட்டி அவைகள் அங்கீகரிக்கப்படும்பொருட்டு ரிசர்வ் வங்கிக்குத் தெரியப்படுத்தப் படவேண்டும்.

ஏற்றுமதி ஒழுங்குபடுத்துதல்கள் (Export Regulations)

1. ஏற்றுமதிக் கட்டுப்பாடு (Export Control) : நேபாளம், பூடான் ஆகியவை தவிர, இந்தியாவிற்கு வெளியேயுள்ள இதர நாடுகளுக்குச் செய்யப்படும், சரக்குகளின் ஏற்றுமதி, சரக்குகளின் முழு ஏற்றுமதி மதிப்பிற்கான அந்நியச் செலாவணி, இந்திய ரிசர்வ் வங்கியால் குறிப்பிடப்பட்டுள்ள முறையில், மற்றும் குறிப்

பிடப்பட்டுள்ள காலத்திற்குள் செலுத்தப்பட்டுள்ளது அல்லது செலுத்தப்படும் என்ற உறுதிமொழியை, குறிப்பிட்ட படிவத்தில் (பத்தி 4 பார்க்கவும்), சுங்க அதிகாரிக்கு, ஏற்றுமதியாளர் செய்தால் மட்டுமே அனுமதிக்கப்படும்.

2. ஏற்றுமதிக் கட்டுப்பாடு பொருந்தக்கூடிய நாடுகளின் பட்டியல்களும், அனுமதிக்கப்பட்டுள்ள நிதியீட்டு முறைகளும் (Lists of Countries to which Export Control applies and the permitted Methods of Finance) : ரிசர்வ் வங்கி, கீழேயுள்ள பத்தி (இ)-ல், பட்டியலில் இடப்பட்டுள்ள நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குக் கீழ்க்காணும் நிபந்தனைகளை விதித்துள்ளது :

(அ) கப்பல் அனுப்பீட்டு ஆவணங்கள், வெளிநாட்டு நாணய வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அதிகாரகளிக்கப்பட்டுள்ள ஒரு வங்கியின் மூலமாக அனுப்பப்படவேண்டும்.

(ஆ) அவைகளுக்குக் குறிப்பிடப்பட்டுள்ள கால அவகாசம் 3 மாதங்கள் என்றுள்ள பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானம் ஆகியவைகளின் விடயங்களில் தவிர, இதரத் தறுவாய்களில் சரக்குகளுக்கான செலுத்துகைகள் 6 மாத கால அவகாசத்திற்குள் பெறப்படவேண்டும்.

(இ) செலுத்துகைகள் கீழே சொல்லப்பட்டுள்ள முறைகளில் ஏதாவது ஒரு முறையில் பெறப்படவேண்டும்.

ஏற்றுமதிச் செலுத்துகைகளுக்காகக் குறிப்பிடப்பட்டுள்ள முறைகள்

(Prescribed Methods of Payment for Exports)

நாடுகளின் பெயர்கள்	அனுமதிக்கப்பட்டுள்ள செலுத்துகை முறைகள்
அ. மாற்றப்படத்தக்க கணக்கு நாடுகள்	

தொகுதி அ(i)

(i) ஆஸ்திரியா பெல்ஜியம் பணப்பகுதி (பெல்ஜியம், லக்சம்பர்க், மற்றும் பெல்ஜியன் காங்கோ) கானடா, டென்மார்க் (பாரோ தீவுகள் உட்பட) டச்சுப்	(அ) இந்தத் தொகுதியிலுள்ள, எந்தப் பகுதியினுடைய செலாவணியிலும் செலுத்துகை செய்தல்.

பணப்பகுதி (நெதர்லாண்ட்ஸ், மற்றும் நெதர்லாண்ட்ஸ் மேற்கிந்தியத் தீவுகள்) பிரான்சு பிராங்க் பகுதி (நகர்ப்புறப்பிரான்ஸ், மற்றும் கடல் கடந்த நாடுகளின்பேரரசு) இந்தாலியப் பணப்பகுதி, ஜப்பான், நார்வே, ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து மற்றும்லீச்டென்ஸ்டீன், அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள் மற்றும் அமெரிக்க ஐக்கிய மாநிலங்களின் அதிகாரத்துக்கீழுள்ள ஏதாவது பகுதி, மேற்கு ஜெர்மனி பிரெஞ்சு சோமாலி கடற்கரை, ஈராக், பனமா, பிலிப்பைன் தீவுகள், போர்ச்சுகல் பணப்பகுதி, சோமாலி நிலக்காப்பாளர் ஆட்சி, எகிப்து†	(ஆ) இங்கிலாந்தின் நாணய மாற்றுக் கட்டுப்பாடு ஒழுங்குபடுத்தல்களில் கூறப்பட்டுள்ள விளக்கத்தின்படியான வெளிவிவகாரக் கணக்கில் (External Account) இருந்து, ஸ்டெர்லிங்கில் செலுத்துகை செய்தல். (இ) மாற்றப்படத்தக்க கணக்கு தொகுதியில் எந்த நாட்டிலாவது உள்ள வங்கியின் கணக்கிலிருந்து ரூபாய்களில் செலுத்துகை செய்தல்.

தொகுதி அ(ii)

(ii) உப தொகுதி அ(i), மற்றும் தொகுதிகள் ஆ, இ ஆகியவைகளில் குறிப்பிடப்பட்டவைகளல்லாத இதர எல்லா நாடுகளும்.	(அ) உபதொகுதி (i)-ல் உள்ள ஏதாவது பகுதியின் செலாவணியில் செலுத்துகை செய்தல். (ஆ) இங்கிலாந்தின் நாணயமாற்றுக் கட்டுப்பாடு ஒழுங்குபடுத்தல்களின் கீழ் வெளிவிவகாரக் கணக்கு என்று விளக்கம் கூறப்பட்டுள்ள கணக்குகளிலிருந்து ஸ்டெர்லிங்கில் செலுத்துகை செய்தல். (இ) மாற்றப்படத்தக்க கணக்குத் தொகுதியில் எந்த நாட்டிலாவது உள்ள வங்கியின் கணக்கிலிருந்து ரூபாய்களில்செலுத்துகை செய்தல்.

† அரிசி, பருத்தி ஆகியவைகளின் இறக்குமதி. மற்றும் தேயிலை, சணல் ஆகியவைகளின் ஏற்றுமதி தவிர

ஆ. இருதரப்புக் கணக்கு நாடுகள் ஆப்கானிஸ்தானம்* பல்கேரியா செகோஸ்லோவேகியா ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு (கிழக்கு ஜெர்மனி), ஹங்கேரி, போலந்து ருமேனியா, யு.எஸ்.எஸ்.ஆர். யூகோஸ்லேவியா	சம்பந்தப்பட்ட நாட்டிலுள்ள ஒரு வங்கியின் கணக்கிலிருந்து ரூபாய்களில் செலுத்துகை செய்தல்.
இ. ஸ்டெர்லிங் பகுதி நாடுகள் (அட்டவணையிலிடப்பட்ட நாடுகள்)	(அ) இந்தியா தவிர, இந்தத் தொகுதியில் உள்ள ஏதாவது ஒரு நாட்டின் குடிமகனுடைய கணக்கிலிருந்து ஸ்டெர்லிங் அல்லது இந்திய ரூபாயைத் தவிர, ஸ்டெர்லிங் பகுதியிலுள்ள வேறு ஏதாவது செலாவணி, ஆகியவைகளில் செலுத்துகை செய்தல். (ஆ) இந்தியாவைத் தவிர இந்தத் தொகுதியிலுள்ள ஏதாவது நாட்டினுடைய ஒரு வங்கிக் கணக்கிலிருந்து ரூபாய்களில் செலுத்துகை செய்தல்.

மேலே சொல்லப்பட்ட, அனுமதிக்கப்பட்டுள்ள முறைகளில் அல்லாமல் வேறு ஒரு முறையில், எந்த நாட்டிற்காவது செய்யப்படும் ஏற்றுமதிக்கு நிதியிட வேண்டுமானால், அதற்கு ரிசர்வ் வங்கியின் முன்அனுமதியைப் பெறவேண்டும்.

மாற்றுச் சீட்டுகளும், கப்பல் அனுப்பீட்டு ஆவணங்களும், மாற்றல் செய்யப்படும் பொருட்டு அல்லது வசூல் செய்யப்படும் பொருட்டு, வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும். அனுப்பீட்டு (consignment) அடிப்படையில்கூட, விற்பனைக்குச் சரக்குகள் கப்பலில் அனுப்பிவைக்கப்படலாம்; ஆனால் கப்பல் அனுப்பீட்டு ஆவணங்கள், ஓர் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியா

* தொகுதி அ(ii)-க்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள முறைகளின்படி, ஆப்கானிஸ்தானத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்தி, உரோமம் ஆகியவைகளுக்கு மட்டுமே செலுத்துகை செய்யப்படும்.

பாரியின்மூலமாக அனுப்பப்படவேண்டுமேயன்றி, அயல்நாட்டிலுள்ள ஏற்றுமதியாளரின் முகவர்களுக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்படலாகா.

3. ஏற்றுமதிகளின் உறுதிச் சான்றிற்கான படிவங்கள் (Forms for Declaration of Exports) : (i) ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் செயற்படக்கூடிய ஒரு நாட்டிற்கு, சரக்குகளை, கப்பலில் அனுப்பிவைக்கும் ஆள்கள், படிவங்கள்—G. R. 1, G. R. 3, E. P. அல்லது E. P. 1 ஆகியவைகளில் பொருத்தமானதை நிரப்பி, சரக்கு அனுப்பப்படும் நேரத்தில், சுங்க இலாகாவிற்கு அதனைப் பணிந்தனுப்பவேண்டும்.

(ii) படிவம் G. R. 1, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் செயல்படக்கூடியனவாகவும், செலுத்துகை அனுமதிக்கப்பட்ட ஏதாவது ஒரு முறையில் செலுத்தப்படவேண்டியதாகவும் உள்ள, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானம் ஆகியவை தவிர, எல்லா நாடுகளுக்கும் செய்யப்படும் கப்பல் அனுப்பீடுகள்பற்றி உறுதிச் சான்றளிப்பதற்காகப் பயன்படும், பொதுவான உபயோகத்திற்கான ஒன்றாகும்.

(iii) படிவம் G. R. 3, இந்திய ரிசர்வ் வங்கியோடு செய்யப்பட்டுள்ள சிறப்பான உடன்படிக்கையின்கீழ், இத்தகைய ஏற்றுமதிகளின்மூலம் கிடைக்கும் பணத்தை, இங்கிலாந்து அல்லது பாகிஸ்தான் தவிர இதர ஸ்டெர்லிங் பகுதி நாடுகளிலுள்ள முகவர்கள் அல்லது கிளைகளால் இருத்தி வைத்துக்கொள்ளப்பட்டு அவைகளை அந்த நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு அவர்கள் செய்யும் இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்காகப் பயன்படுத்துவதற்கு அல்லது அனுமதிக்கப்பட்ட சில வகையான செலுத்துகைகளை அந்நாடுகளில் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்களால், ஸ்டெர்லிங் பகுதி நாடுகளுக்குச் செய்யப்படும் கப்பல் அனுப்பீடுகளுக்கு உறுதிச்சான்றிதழ் அளிப்பதற்கானதாகும்.

(iv) படிவம் E. P. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளுக்கு மட்டுமான கப்பல் அனுப்பீடுகளுக்கு உறுதிச் சான்றிதழ் அளிப்பதற்காகப் பயன்படும் பொதுவான உபயோகத்திற்கான ஒன்றாகும். மற்றும், அது தன்மையில், படிவம் G. R.1ஐப் போன்றதாகும்.

(v) படிவம் E. P. 1, அந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெறுகின்ற பணத்தை இருத்திவைத்துக்கொள்ளவும், மற்றும் அவைகளை இந்தியாவிற்குச் செய்யப்படும் இறக்குமதிகளுக்குப்

பணம் செலுத்துவதற்குப் பயன்படுத்திக் கொள்ளவும் இந்திய ரிசர்வ் வங்கியால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதிகளைச் செய்கின்றவர்களின் உபயோகத்திற்காக ஆன ஒன்றாகும்.

4. ஏற்றுமதி உறுதிச் சான்றிதழ்கள் (Export Declarations): (i) உறுதிச் சான்றிதழ், ஏற்றுமதியாளர்களால், மேலே 3ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்ட, பொருத்தமான ஏதாவது ஒரு படிவத்தில் அளிக்கப்படவேண்டும்; மற்றும் கப்பல் அனுப்பீட்டின் இடாப்பு மதிப்பு பற்றிய முழுவிவரங்கள், சரக்குகளின் வகை, செலுத்துகை பெறப்படும் முறை (இது, மேலே இரண்டாவது பத்தியில் சொல்லப்பட்டதுபோல, எந்த நாட்டிற்குச் சரக்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளனவோ அந்த நாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு முறையாக இருக்கவேண்டும்), ஆவணங்கள் யார் மூலமாக அனுப்பப்படவேண்டியுள்ளனவோ அந்த அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரியின் பெயர் ஆகியவைகளும் அதில் கொடுக்கப்படவேண்டும்.

(ii) G. R. 1 படிவங்கள், மூன்று படிகளில் தயாரிக்கப்படவேண்டும்; மூலப்படி, சரக்கனுப்பப்படும் பொழுது சுங்க இலாகாவிற்குப் பணிந்தனுப்பப்படவேண்டும்; மீதமுள்ள படிகள், கப்பல் அனுப்பீட்டு ஆவணங்கள், மற்றும் சரக்கனுப்புபவருடைய இடாப்பினுடைய ஒரு மிகைப்படி (extra copy), ஆகியவைகளோடு சேர்த்து அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிக்கு அனுப்பப்படவேண்டும். பின்னர், அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரி, படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்று உறுதிப்படுத்திக்கொள்வதற்காக, கப்பல் அனுப்பீட்டு ஆவணங்களைப் பரிசோதனை செய்தபிறகு, G. R. படிவத்தினுடைய இரண்டாவது படியை, இந்திய ரிசர்வ் வங்குக்கு அனுப்பிவைப்பார். அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரி, பணம் செலுத்தப்பட்டதற்கான தகவல் பெறப்படும்வரை, G. R. படிவத்தின் மூன்றாவது படியைத் தம்மிடத்தில் வைத்திருப்பார்; தகவலைப் பெற்றவுடன், படிவத்தின் பின்புறத்தில், செலுத்துகை எந்த முறையில் பெறப்பட்டுள்ளது என்று சான்றளித்தபின், அதனை இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பிவைப்பார்.

(iii) G. R. 3 படிவம், மூன்று படிகளில் தயாரிக்கப்படவேண்டும். முதற்படி சரக்கனுப்பப்படும்பொழுது சுங்க அதிகாரிகளுக்குப் பணிந்தனுப்பப்படவேண்டும்; இரண்டாவதுபடி, சரக்கனுப்பப்பட்ட மாதத்தின் கடைசியில் இந்திய ரிசர்வ் வங்கிக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்பட வேண்டியதாகும்; மூன்றாவது

படி, அனுப்பப்பட்ட சரக்கிற்கான பணம் பெறப்பட்டு, அவருடைய கணக்கிற்கு வரவு வைக்கப்படும் பொழுது, ரிசர்வ் வங்கிக்குப் பணிந்தனுப்பப்படும் பொருட்டுச் சரக்கனுப்புபவரால் வைத்திருக்கப்படவேண்டியதாகும்.

(iv) E. P. மற்றும் E. P. I. படிவங்கள், மூன்று படிகளில் தயாரிக்கப்பட வேண்டியவைகளாகும். இந்தப் படிவங்களைத் தயாரித்தல் மற்றும் தீர்வு செய்தல் (disposal) ஆகியவைகளுக்கான முறை, முறையே G. R. 1, மற்றும் G. R. 3 ஆகிய படிவங்களுக்குரிய அதே முறைகளேயாகும்.

5. **பகுதிச் செலுத்துகைகள்** (Part Payments): இடாப்பு மதிப்பில் (Invoice Value) ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு மட்டுமே மாற்றுச்சீட்டுகளை எழுதுவது ஏற்றுமதியாளர்களின் நடைமுறையாக இருக்கின்ற தறுவாய்களில், மீதத்தொகை, சரக்குகள் அவை சேரவேண்டிய இடங்களுக்கு வந்துசேர்ந்த பின்னரே கொடுக்கப்படவேண்டியதாக இருக்கும்பொழுது, சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளர்களால், அனுப்பப்பட்ட சரக்கின் மீதான மீதத்தொகையை (balance amount), அது பெறப்பட்டவுடன், அதற்கு (வங்கிக்கு) விற்பதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்வதாக ஓர் உறுதிமொழி, ஏற்றுமதி வியாபாரத்தில் உதவியாக இருக்கின்ற வங்கிக்குக் கொடுக்கப்படவேண்டும். அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் சம்பந்தப்பட்ட G. R. அல்லது E. P. படிவங்களின் நகல்படிகளின் மீது, இத்தகைய உறுதிமொழி தங்களால் பெறப்பட்டுள்ளது என்ற சான்றிதழைக் கொடுக்கவேண்டும். G. R., அல்லது E. P. படிவங்களின் மூன்றாவது படிகள், முழுச்செலுத்துகையும் பெறப்பட்டபின்னரே ரிசர்வ் வங்கிக்குப் பணிந்தனுப்பப்படும்.

6. **ஏற்றுமதி உரிமங்கள்** (Export Licences): எவைகளின் ஏற்றுமதி, அனுமதியின்கீழ் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சரக்குகளின் விடயத்தில், வெளிநாட்டு நாணயமாற்றுக் கட்டுப்பாடு ஒழுங்கு படுத்தல்களைக் கடைப்பிடிப்பதானது, ஏற்றுமதியாளர்களை, அவர்கள், ஏற்றுமதி வியாபாரக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து (Export Trade controller) ஏற்றுமதி அனுமதிகளைப் பெறவேண்டுமென்ற கட்டாயத்திலிருந்து விடுவிக்காது.

7. **வெளிநாட்டு நாணய வருமானம் பெற்றுக் கொள்ளப்படாமை** (Foreign Exchange Proceeds not Received): (i) ஏற்றுமதி ஒன்றிற்கு எதிராக எழுதப்பட்ட ஒரு மாற்றுச்சீட்டுக்குப்

பணம், ஏற்றுமதி செய்யப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்குள் (பாகிஸ்தானம், ஆப்கானிஸ்தானம் ஆகியவைகளின் விடயத்தில் 3 மாதத்திற்குள்) செலுத்தப்படவில்லையென்றால், அல்லது கப்பல் அனுப்பீடு (Shipment) ஒன்றின் மீதான வெளிநாட்டு நாணயம் 6 திங்களுக்குள் பெறப்படவில்லையென்றால், ஏற்றுமதியாளர், G. R. படிவத்தை வைத்துள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரியின் மூலமாக, ஏற்றுமதியின்மீது பெறப்பட வேண்டிய பணம் இன்னும் செலுத்தப்படாததற்கான காரணத்திற்கு ஒரு விளக்கத்தை, இந்திய ரிசர்வ் வங்கிக்குப் பணிந்தனுப்ப வேண்டும். சந்தர்ப்பச் சூழ்நிலைகள் அவ்வாறு செய்யப்படுவதைத் தேவையாக உள்ளபொழுது, ரிசர்வ் வங்கி காலநீட்டிப்பினை அளிக்கலாம்.

(ii) ஏதாவது குறிப்பிட்ட தறுவாயில், காலநீட்டிப்பு அளிக்கப்படமுடியாது என்று கருதப்படுமானால், வெளிநாட்டு நாணய ஒழுங்குபடுத்துதல் சட்டத்திலிருந்து (Foreign Exchange Regulation Act) பெறப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம், ரிசர்வ் வங்கி, சரக்குகளை விற்பதற்கு உரிமை பெற்றுள்ள நபரை, விற்பனையைச் செய்து, அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையில் செலுத்துகையைப் பெறுமாறு கட்டளையிடலாம். மாறாக, சரக்குகள் மைய அரசுக்கு, அல்லது அதன் சார்பாகக் குறிப்பிடப்பட்ட ஒரு நபருக்கு, உரிமை மாற்றிக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் ரிசர்வ் வங்கி ஆணையிடலாம்.

(iii) இந்திய ரிசர்வ் வங்கியால் கொடுக்கப்படும், ஏதாவது பொதுவான அல்லது சிறப்பான கட்டளைகளை (directions) நிறைவேற்றத் தவறுகின்ற ஏற்றுமதியாளர்கள் 1947ஆம் ஆண்டின் வெளிநாட்டு நாணய ஒழுங்குபடுத்துச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளுக்கு ஆளாவார்கள்.

8. கட்டும அஞ்சல் (Parcel Post) : அஞ்சல் கட்டுமம் மூலமான ஏற்றுமதிகள், கடல், தரை, அல்லது விமான வழி ஏற்றுமதிகள் எத்தகைய தடைகளுக்கு உட்பட்டவைகளோ, அதே தடைகளுக்கு உட்பட்டவைகளாகும்; மற்றும் இந்தியாவிலிருந்து, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு முறை பொருந்தக்கூடிய நாடுகளுக்குச் (பத்தி 1 பார்க்கவும்) செய்யப்படும் இம்மாதிரியான எல்லா ஏற்றுமதிகளும் P. P. படிவங்களின் உறுதியளிக்கப்படவேண்டும். இந்தப் படிவங்கள், கட்டுமங்கள் அனுப்பப்படுகின்ற நேரத்தில், அஞ்சலக அதிகாரிகளிடம் கொடுக்கப்படவேண்டும். பின்வரும் வகையிலான கட்டுமங்கள் மேலே சொல்லப்பட்ட விதிமுறைகளிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டவைகளாகும்;

(அ) கட்டுமத்தை (parcel) ஏற்றுமதி செய்வது தொடர்பாக அந்நியச் செலாவணி நடவடிக்கை ஏதும் நிகழாது என்று இந்திய ரிசர்வ் வங்கியால், அல்லது அந்நியச் செலாவணி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஓர் அதிகார மளிக்கப்பட்டுள்ள வியாபாரியால் விடுக்கப்படும் சான்றிதழின்கீழ் வரும் கட்டுமங்கள்.

(ஆ) கட்டுமத்திலுள்ள அடக்கப் பொருள்களின் மதிப்பு ரூ. 50-க்கும் குறைவானது என்பதற்கும், மற்றும் கட்டு மத்தை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வது, வெளி நாட்டு நாணயமாற்றில் எந்தவித நடவடிக்கையையும் தோற்றுவிக்காது என்பதற்கும், அஞ்சலக அதிகாரி களுக்கு, அவைகளை அனுப்புவோரால் எழுதப்பட்ட கடித அமைப்பிலான ஓர் உறுதிமொழியோடு சேர்த்து அனுப்பப்படும் கட்டுமங்கள்.

(இ) மைய அரசு, அல்லது காலாட்படை, கடற்படை, அல் லது விமானப்படை ஆகியவைகளின் அதிகாரிகளினு டைய ஆணைகளின்கீழ் அனுப்பப்படும் கட்டுமங்கள்.

9. கட்டுமங்களை மதிப்பீடு செய்தல் (Valuation of Parcels): ரூ. 50-க்கு அதிகமான மதிப்பினைக் கொண்டுள்ள, ஆபரணம் அல்லது விலையுயர்ந்த கற்கள் ஆகிய பொருள்களைக் கொண் டுள்ள கட்டுமங்கள், முதலில் மதிப்பீடு செய்யப்படும் பொருட்டு சுங்க இலாகாவிடம் கொடுக்கப்படவேண்டும். சம்பந்தப்பட்ட P, P. படிவங்கள், அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரியால் எதிர்க் கையொப்பமிடப்படுவதற்கு முன்னர், சுங்க இலாகா கட்டுமத்தை முத்திரை செய்து, இடாப்பிலும் முத்திரையை இடும்.

10. P. P. படிவங்களின் செயல்முறை (P. P. Forms Procedure): (i) P. P. படிவம் மூன்று படிகளில் நிரப்பப்பட்டு, சம்பந்தப்பட்ட கட்டுமத்தோடு சேர்த்து, யார்மூலமாகச் செலுத் துகை பெறப்படவேண்டியதாக உள்ளதோ, அந்த, வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியா பாரிக்குப் பணிந்தனுப்பப்படவேண்டும். முந்திய பத்தியில் குறிப் பிடப்பட்டுள்ள தறுவாய்களில், கட்டுமம் சுங்க இலாகாவினால் மதிப்பீடு செய்யப்பட்டு முத்திரை செய்யப்பட்டுள்ளது, மற்றும் இடாப்பும் முத்திரையிடப்பட்டுள்ளது என்று நிறைவுபடுத்திக் கொண்ட பிறகு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரி, P.P. படிவத்தின் மூலப்படியை எதிர்க்கையொப்பமிட்டு, ஏற்றுமதியாள ருக்கு, கட்டுமத்தோடு சேர்த்து அதனை அஞ்சலக அதிகாரிக் குப் பணிந்து அனுப்பப்படுவதற்காக அனுப்பிவைத்துவிட்டு, இரண்டாவது, மூன்றாவது படிகளைத் தம்முடன் வைத்துக்

கொள்கிறார். மாற்றுச் சீட்டுகள் அல்லது ஆவணங்கள் மாற்றிக் கொடுக்கப்படும்பொருட்டு அல்லது வசூல் செய்யப்படும்பொருட்டுப் பெறப்படுகின்ற நேரத்தில், சம்பந்தப்பட்ட மாற்றுச்சீட்டுகள் அல்லது ஆவணங்கள் மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன அல்லது வசூலுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்பதற்கான சான்றினை அளித்து, இரண்டாவது படியை, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரி, ரிசர்வ் வங்கிக்கு அனுப்பிவைப்பார். மூன்றாவது படி, G. R. அல்லது E. P. படிவங்களின் விடயத்தில் உள்ளதுபோல, கட்டுமத்தின் மீதான முழுத்தொகையும் பெறப்பட்ட பின்னர் ரிசர்வ் வங்கிக்குப் பணிந்தனுப்பப்படும்.

(ii) அஞ்சல் மூலம் செய்யப்படும் ஏற்றுமதிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிதியீட்டு முறைகள், மேலேயுள்ள இரண்டாவது பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள, மற்ற முறைகளிலான ஏற்றுமதிகளுக்குரிய அதே முறைகளேயாகும்.

(iii) கட்டுமங்கள் போய்ச் சேரவேண்டிய இடங்கள் உள்ள நாடுகளில் வங்கி வசதிகள் இல்லாத காரணத்தால், எடுத்துக்காட்டு: சௌதி அரேபியா, அல்லது பெர்சியன் வளைகுடாவிலுள்ள நாடுகள் P. P. படிவங்களை எதிர்க்கையொப்பமிட்டுப் பெறுவதற்கு ஏற்றுமதியாளர்கள் முடியாத நிலையில் உள்ள தறுவாய்களில், விண்ணப்பம் செய்வதன்பேரில், ஏற்றுமதியின்மூலம் பெறப்படும் விற்பனைப் பணத்தைப் பெறுவதற்குத் திருப்திகரமான பொறுப்புறுதி விண்ணப்பதாரரால் கொடுக்கப்படுமானால், ரிசர்வ் வங்கி P. P. படிவங்களை எதிர்க்கையொப்பமிடும்.

11. ஆபரண ஏற்றுமதி (Export of Jewellery): பொன், ஆபரணம் அல்லது விலையுயர்ந்த கற்கள் ஆகியவைகளை இந்தியாவிற்கு வெளியே, இந்திய ரிசர்வ் வங்கியின் பொதுவான அல்லது சிறப்பு அனுமதியின்றி, எடுத்துச்செல்வது, அல்லது அனுப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தடை சம்பந்தப்பட்டவரையில், பொன், ஆபரணம், மற்றும் விலையுயர்ந்த கற்கள் என்னும் சொற்கள் முழுமையாக அல்லது முக்கியமாக, பொன், பிளாடினம், வைர வகைகள் யாவும், விலையுயர்ந்த கற்கள் மற்றும் முத்துகள் ஆகியவைகளால் செய்யப்பட்டு, பதிக்கப்பட்டோ, பதிக்கப்படாமலோ, இணைக்கப்பட்டோ தொங்கிக் கொண்டோ இருக்கின்ற பொருள்கள், மற்றும் வைரங்கள், விலையுயர்ந்த கற்கள் அல்லது முத்துகள் ஆகியவைகளைக்கொண்டு இணைக்கப்பட்ட அல்லது பதிக்கப்பட்ட பொருள்கள், ஆகியவைகளை உள்ளடக்கியவைகளாகக் கருதப்படும்.

12. பயணிகளால் ஆபரணங்கள் வெளியில் எடுத்துச் செல்லப்படுதல் (Taking out of Jewellery by Travellers): (i) இந்திய ரிசர்வ் வங்கி, முழுவதும் அல்லது முக்கியமாகப் பொன்னால் செய்யப்பட்ட பொருள்கள் தவிர்த்து, 12ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு, இந்தியாவை விட்டு வெளியே எடுத்துச் செல்வதற்கு அதிகாரமளித்துப் பொதுவான அனுமதியை வழங்கியுள்ளது.

(அ)	ஆப்கானிஸ்தானம், ஈரான், பெர்சியன் வளைகுடா துறைமுகங்கள், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு	ரூ. 2000 மதிப்பு வரையிலும்,
(ஆ)	(அ)-வில் குறிப்பிடப்படாத வேறு ஏதாவது நாட்டிற்கு அல்லது இடத்திற்கு	ரூ. 5000 மதிப்பு வரையிலும்.

விதிவிலக்கு (Exception): இந்தியாவில் அல்லது பாகிஸ்தானில் குடிவாழ்வுரிமை கொண்டிராத, தம்முடைய சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்கின்ற எந்த நபரும், இந்தியாவிற்கு அவரால் கொண்டுவரப்பட்ட விலையுயர்ந்த கற்களை அல்லது ஆபரணங்களை, மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களில் இந்தியாவில் வாங்கப்பட்டவைகளை, மதிப்பில் மேற்கொண்டு ரூ. 15,000 வரையிலும், தம்முடன் எடுத்துக்கொண்டு போகலாம்.

(ii) மேலே குறிப்பிடப்பட்ட வரம்புகளுக்கு அதிகமாக, ஆபரணம் அல்லது குறிப்பிடப்பட்ட ஏதாவது பொருளை எடுத்துச்செல்ல விரும்பும் நபர்கள், படிவம் 'J'-ல், வெளிநாட்டு நாணயத்தில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரியின் மூலமாக, இந்திய ரிசர்வ் வங்கிக்கு ஒரு விண்ணப்பம் செய்யவேண்டும். குறிப்பிடப்பட்ட வரம்புகளுக்கு அதிகமாக ஆபரணத்தை எடுத்துச்செல்வதற்கு, அங்கீகரிக்கப்பட்டுள்ள தறுவாய்களில் (in approved cases) அனுமதிகள் விடுக்கப்படும்.

(iii) சுங்க இலாகாவினால், தனிப்பட்ட உடைமைகள் (Personal Effects) என்று வகைப்படுத்தப்படாத சமுக்காளங்கள், விந்தைப் பொருள்கள் (curios) போன்ற பொருள்களை இந்தியாவிற்கு வெளியே தங்களோடு எடுத்துச் செல்ல விரும்பும் நபர்கள், ஆபரணத்தை எடுத்துச் செல்வதற்கான விண்ணப்பங்கள் ஏதுமிருப்பின் அவைகளோடு சேர்த்து, படிவங்கள் "J"-ல் ரிசர்வ் வங்கிக்கு விண்ணப்பம் செய்யவேண்டும்.

13. அஞ்சல் மூலம் ஆபரண ஏற்றுமதி (Export of Jewellery by Post): முற்றிலும் அல்லது முக்கியமாகப் பொன்னால் செய்யப்பட்ட பொருள்கள் தவிர, பத்தி 12-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு, இந்தியாவிற்கு வெளியே, அஞ்சல் மூலம், எந்த நபரும் அனுப்புவதற்கு பொதுவான அனுமதியுங்கூட, இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்டுள்ளது.

(அ) நேபாளத்திற்கு.........................நாள் ஒன்றிற்கு ரூ. 2000 மதிப்பு வரையிலும்.

(ஆ) (அ)-வில் சொல்லப்படாத வேறு ஒரு நாட்டிற்கு அல்லது இடத்திற்கு — மேலே 11ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரி ஒருவரால் எதிர்க்கையொப்பமிடப்பட்டு, ஏற்றுமதியாளரால் P. P. படிவத்தில் கொடுக்கப்படும் உறுதிமொழியோடு, அஞ்சல் கட்டுமம் சேர்த்து அனுப்பப்படுமானால், வரம்பு ஏதுமின்றி.

செலாவணி நோட்டுகள் (Currency Notes)

1. செலாவணி நோட்டுகளின் இறக்குமதி (Import of Currency Notes): இந்தியாவிற்குள், செலாவணி நோட்டுகள், வங்கி நோட்டுகள், அல்லது நாணயங்கள் ஆகியவை இறக்குமதி செய்யப்படுவது, இந்திய ரிசர்வ் வங்கியினுடைய பொதுவான அல்லது சிறப்பு அனுமதிக்கு உட்பட்டதாகும். இந்திய ரிசர்வ் வங்கியால், கீழ்க்காணும் பொதுவான அனுமதி எல்லா நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது :

(i) கீழ்க்காண்பவற்றை இந்தியாவிற்குள் அனுபபுவதற்கு—

(அ) [இங்கு உப பிரிவு (ஆ)-வில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி நோட்டுகள் அல்லாத], ரிசர்வ் வங்கியால் விடுக்கப்பட்டுள்ள சிறப்பு வங்கி நோட்டுகள் (Special Bank Notes), அல்லது 1934ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் (Reserve Bank of India Act, 1934) பிரிவு 28A-ன்கீழ் வரம்பேதுமின்றி, பாஹ்ரின் சேக்டம்ஸ், குவாதார், சார்ஜா, மற்றும் கல்பா, ராஸ் அல் காய்மா, உம்உல் அவைன், அஜ்மன், துபாய், அபு தாபி, மற்றும் புஜைரா, மற்றும் முஸ்காட் மற்றும்

ஓமன் ஆகியவைகளின் சுல்தானேட்டுகள் ஆகிய பகுதியிலுள்ள இடங்களிலிருந்து, இந்திய அரசால் விடுக்கப்பட்ட சிறப்பு ஒரு ரூபாய் நோட்டுகள்.

(ஆ) 1934ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், பிரிவு 28A-ன்கீழ் விடுக்கப்பட்டு, 1959ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கி (சிறப்பு வங்கி நோட்டுகள் மற்றும் ஒரு ரூபாய் நோட்டுகள்) ஒழுங்குபடுத்துமுறைகள் ஒழுங்குபடுத்து விதி 4-ல், சிறப்பு ஹாஜ் நோட்டுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ள, இந்திய ரிசர்வ் வங்கியால், வரம்பு ஏதுமின்றிச் சௌதி அரேபியாவிலிருந்து விடுக்கப்பட்ட சிறப்பு வங்கி நோட்டுகள்.

(ii) கீழ்க்காண்பவற்றை இந்தியாவிற்குள் கொண்டுவருவதற்கு—

(அ) இந்திய அரசின் செலாவணி நோட்டுகள், "அசோக ஸ்தூபி" உருவ வரைப்படத்தைக் கொண்ட, இந்திய ரிசர்வ் வங்கியின் நோட்டுகள் (ரூ. 100 அல்லது அதற்கு அதிகமான முக மதிப்பிலான நோட்டுகள், மற்றும் 1934ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், பிரிவு 28A-ன் கீழ் விடுக்கப்பட்டுள்ள சிறப்பு வங்கி நோட்டுகள், மற்றும் சிறப்பு ஒரு ரூபாய் நோட்டுகள் ஆகியவை தவிர) ஆகியவைகளை, மொத்தத்தில், ஒரு நேரத்தில், ஓர் ஆளுக்கு, ரூ. 75-க்கு மிகைப்படாத தொகைக்கு நேபாளத்திலிருந்து கொண்டு வருவதற்கு.

(ஆ) இந்திய அரசின் செலாவணி நோட்டுகள், "அசோக ஸ்தூபி" உருவ வரைபடத்தைக் கொண்ட, இந்திய ரிசர்வ் வங்கியில நோட்டுகள் (ரூ. 100 அல்லது அதற்கு அதிகமான முகமதிப்பிலான நோட்டுகள், மற்றும் 1934ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் பிரிவு 28A-ன்கீழ் விடுக்கப்பட்டுள்ள சிறப்பு வங்கி நோட்டுகள், மற்றும் சிறப்பு ஒரு ரூபாய் நோட்டுகள் ஆகியவைகளைத் தவிர) ஆகியவைகளை, மொத்தத்தில், வயது வந்தவர்களாக இருந்தால் ஒரு நபருக்கு ரூ. 50-க்கு மிகைப்படாத தொகை வரையிலும், மற்றும் 12 வயதினை அடைந்து, ஆனால் 18 வயது முடிவடை

யாத நபர்கள் விடயத்தில், மொத்தத்தில், ஓர் ஆளுக்கு ரூ. 25-க்கு மிகைப்படாத தொகை வரையிலும், பர்மா விலிருந்து கொண்டுவருவதற்கு.

இவ்வாறு கொண்டுவருவதற்கு, அவைகளைக் கொண்டு வருவதற்குக் கேட்டுக் கொண்டிருக்கும் நபருடைய நுழைவுச் சீட்டில் (Pass Port) பர்மாவில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரி யால், இந்தியாவிற்குக் கொண்டுவருவதற்குக் கோரப்படும் தொகை மேலெழுதப்பட்டிருக்கவேண்டும்.

(இ) பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானம், பர்மா மற்றும் குவைத்தின் சேக்டம் (Sheikhdom) ஆகியவை தவிர, இந்தியாவிற்கு வெளியேயுள்ள எந்த இடத்திலிருந்தும், 1934ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், பிரிவு 28A-ன்கீழ் விடுக்கப்பட்டுள்ள சிறப்பு நோட்டுகள் மற்றும் சிறப்பு ஒரு ரூபாய் நோட்டுகள் ஆகியவை களை வரம்பின்றிக் கொண்டுவருவதற்கு.

(iii) இந்தியாவிற்கு வெளியேயுள்ள எந்த இடத்திலிருந்தும், செலாவணி நோட்டுகள், அல்லது வங்கி நோட்டுகள் (இந்திய அரசின் விடுக்கப்படாத நோட்டுகள், செலாவணி நோட்டுகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் நோட்டுகள் ஆகியவை தவிர) ஆகியவைகளை வரம்பின்றி, இந்தியாவிற்குள் கொண்டுவரு வதற்கு.

இந்தியாவில் வந்து சேர்ந்தவுடன், இது சம்பந்தமாக ரிசர்வ் வங்கியால் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில், அவரால் கொண்டு வரப்பட்டுள்ள எல்லா நோட்டுகளினுடைய விவரங்களையும் பற்றிய ஓர் அறிவிப்பினைச் சுங்க அதிகாரிகளுக்கு அவர் செய் தால் மட்டுமே, இந்தியாவிற்குள் நோட்டுகளைக் கொண்டுவரு வதற்கு, இந்த அறிவிக்கையின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள அனு மதி ஒரு நபருக்குக் கிடைக்கும்.

2. செலாவணி நோட்டுகளைப்பற்றிய அறிவிப்புச் செய்வதற் கான படிவம் (Form for Declaration of Currency Notes);
(i) இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணிகள் பற்றி, செலாவணி அறிவிப்புப் படிவத்தில், சுங்க இலாகாவிற்கு அறிவிப்புச் செய்யப்படவேண்டும்,

பாதிவழிப் பயணத்திலுள்ள பயணிகளின் விடயத்தில், புறப் படுகின்ற துறைமுகத்தில் இந்தப் படிவத்தினைக் காட்டுவது,

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதெற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கமான வரம்பிற்கு அதிகமாக அவை இருந்தாலுங் கூட, படிவத்தில் அறிவிக்கப்பட்டுள்ள நோட்டுகளை இந்தியாவிற்கு வெளியில் எடுத்துச் செல்வதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டதாகச் செயல்படும்.

3. அதிகாரமளிக்கப்பட்டுள்ள பண-மாற்றாளர்கள் (Authorised Money-changers) : அந்நியச் செலாவணி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வங்கிகளோடு, பண-மாற்றாளர்களின் சிறு நிறுவனங்களும் வெளிநாட்டுச் செலாவணி நோட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளன. இத்தகைய, அதிகாரமளிக்கப்பட்டுள்ள பண-மாற்றாளர்கள், சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, சுங்க அதிகாரிகளால் சரியான முறையில் முத்திரையிடப்பட்டுள்ள, குறிப்பிட்ட அறிவிப்புப் படிவங்களை (declaration forms) வைத்துள்ள, அல்லது ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நபர்களிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணி நோட்டுகளை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். நாணயமாற்று ஒழுங்குபடுத்துவிதிகளுக்கு ஒப்ப, அந்நியச் செலாவணி நோட்டுகளைப் பொதுமக்களுக்கு அவர்கள் விற்கவும் செய்யலாம்.

4. செலாவணி நோட்டுகளின் ஏற்றுமதி (Export of Currency Notes) : (i) இந்திய, அல்லது அந்நியச் செலாவணி நோட்டுகள் அல்லது நாணயங்கள் இந்திய ரிசர்வ் வங்கியின் பொதுவான அல்லது சிறப்பு அனுமதியின்றி ஏற்றுமதி செய்யப்படுவது, வெளிநாட்டு நாணயமாற்று ஒழுங்குபடுத்துச் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது.

(ii) கீழ்க்காண்பவற்றுக்கான பொதுவான அனுமதியை இந்திய ரிசர்வ் வங்கி,

I எல்லா நபர்களுக்கும் அளித்துள்ளது ;

(அ) இந்தியாவை விட்டு வெளியே, நேபாளம் மற்றும் திபெத் ஆகிய நாடுகளுக்கு, இந்திய அரசின் செலாவணி நோட்டுகள், இந்திய ரிசர்வ் வங்கியின் நோட்டுகள் மற்றும் இந்திய நாணயங்கள், அல்லது அவை எந்த நாடுகளுக்கு அல்லது நிலப்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனவோ அல்லது அனுப்பப்படுகின்றனவோ அவைகளினுடைய செலாவணியாகவுள்ள

இதர நோட்டுகள் அல்லது நாணயங்கள் ஆகியவை களை வரம்பேதுமின்றி எடுத்துச் செல்வதற்கு அல்லது அனுப்புவதற்கு.

(ஆ) இந்தியாவை விட்டு வெளியே கீழ்க்காணும் நாடு களுக்கு எடுத்துச்செல்வதற்கு—

(i) ஆப்கானிஸ்தானத்திற்கு, இந்திய அரசின் செலா வணி நோட்டுகள், இந்திய ரிசர்வ் வங்கியின் நோட்டு கள், மற்றும் இந்திய நாணயங்கள் ஆகியவைகளை, ஒரு நாளைக்கு, மொத்தத்தில் ரூ. 50-க்கு மிகைப் படாத மதிப்பிற்கு, மற்றும் ஆப்கானிஸ்தானத்தின் செலாவணியாகவுள்ள இதர நோட்டுகள் மற்றும் நாணயங்கள் ஆகியவைகளை வரம்பு ஏதுமின்றி எடுத் துச் செல்வதற்கு

(ii) பாகிஸ்தானுக்கு, இந்திய அரசின் செலாவணி நோட்டுகள், இந்திய ரிசர்வ் வங்கியின் நோட்டுகள், மற்றும் இந்திய நாணயங்கள் ஆகியவைகளை, ஒரு நாளைக்கு, மொத்தத்தில் ரூ. 50-க்கு மிகைப்படாமல், மற்றும் பாகிஸ்தானின் செலாவணியாகவுள்ள இதர நோட்டுகள் மற்றும் நாணயங்கள் ஆகியவைகளை, ஒரு நாளைக்கு, மொத்தத்தில் ரூ. 100-க்கு மிகைப் படாத அளவிற்கு எடுத்துச் செல்வதற்கு.

(iii) சரத்துகள் (அ), (ஆ) (i), மற்றும் (ஆ) (ii) ஆகியவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் தவிர இதர இடங்களுக்கு, இந்திய அரசின் செலாவணி நோட்டுகள், இந்திய ரிசர்வ் வங்கியின் நோட்டுகள், அல்லது இந்திய நாணயங்கள், அல்லது வெளிநாட் டுச் செலாவணி நோட்டுகள் ஆகியவைகளை, மாதம் ஒன்றிற்கு மொத்தத்தில் ரூ. 75-க்கு மிகைப்படாத அளவில் எடுத்துச் செல்வதற்கு.

II இந்தியாவில், சாதாரணமான குடிவாழ்வுரிமை கொண் டிராத எந்த நபருக்கும் இந்தியாவை விட்டு வெளியே கீழ்க்காணும் தொகையை எடுத்துச் செல்வதற்கு

(அ) வெளிநாட்டுச் செலாவணியாக அவரால் கொண்டு வரப்பட்ட தொகைக்கு மிகைப்படாத தொகையிலான அந்நியச் செலாவணி, மற்றும்

(ஆ) 1934ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், பிரிவு 28A-ன்கீழ் விடுக்கப்பட்டுள்ள சிறப்பு வங்கி

நோட்டுகள், மற்றும் சிறப்பு ஒரு ரூபாய் நோட்டுகள் ஆகியவைகளை, இரண்டு வகையான நோட்டுகளிலும், அல்லது அவைகளில் ஒன்றில், அவரால் கொண்டு வரப்பட்ட தொகைக்கு மிகைப்படாத தொகையில் எடுத்துச் செல்வதற்கு.

இந்தியாவிற்கு வந்துசேர்ந்தவுடன், இது தொடர்பாக ரிசர்வ் வங்கியால் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில், அவரால் கொண்டு வரப்பட்டுள்ள அந்நியச் செலாவணி, அல்லது சந்தர்ப்பத்திற் கேற்றபடி, சிறப்பு நோட்டுகள் ஆகியவைகளின் தொகையைப் பற்றிய ஓர் அறிவிப்பினைச் சுங்க அதிகாரிகளுக்கு அவர் செய்ய வேண்டும்.

மேலும், இந்த அனுமதி, ரூ. 100 அல்லது அதற்கு மேற் பட்ட முகமதிப்பினைக் கொண்ட இந்திய அரசின் செலாவணி நோட்டுகள் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியின் நோட்டுகள் ஆகி யவைகளை இந்தியாவிற்கு வெளியே எடுத்துச் செல்வதற்கு அல்லது அனுப்புவதற்கு பொருந்தாது.

5. காசோலைகள், பணவிடைகள் ஆகியவைகளின் ஏற்றுமதி (Export of Cheques, Drafts Etc.) : இந்திய ரிசர்வ் வங்கி கீழ்க்காணும் பொதுவான அனுமதிகளை வழங்கியுள்ளது :

(அ) வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள, அதிகார மளிக்கப்பட்டுள்ள வியாபாரிகளுக்கு, அவர்களால் தங்களுடைய வழக்கமான தொழில் முறையில் அவர் களுக்களிக்கப்பட்டுள்ள அதிகாரச் சரத்துகளுக்குள் பெறப்படுகின்ற காசோலைகள், பணவிடைகள் அல் லது மாற்றுச் சீட்டுகள் ஆகியவைகளை இந்தியா விற்கு வெளியே அனுப்புவதற்கு;

(ஆ) எல்லா நபர்களுக்கும், இந்தியாவிலுள்ள வெளிநாட்டு நாணயமாற்றில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியா பாரியால், எந்த நாணயத்திலும் இந்தியாவிற்கு வெளியேயுள்ள எந்த இடத்தின்மீதும் எழுதப்பட் டுள்ள காசோலைகள், பணவிடைகள் ஆகியவைகளை இந்தியாவை விட்டு வெளியே எடுத்துச் செல்வதற்கு அல்லது அனுப்புவதற்கு;

(இ) அந்நியச் செலாவணிகளில் கணக்குகளை வைத்திருப் பதற்கு அனுமதிக்கப்பட்டு, இந்தியாவில் குடியிருக்

கின்ற ஆள்களுக்கு, இத்தகைய கணக்குகளின்மீது எழுதப்படும் காசோலைகளை இந்தியாவிற்கு வெளியே எடுத்துச் செல்வதற்கு அல்லது அனுப்புவதற்கு.

6. அந்நியச் செலாவணி நோட்டுகளின் விற்பனை (Sale of Foreign Currency Notes) : (i) வேறு எந்தவகையான வெளி நாட்டு நாணயமாற்றிற்கும் பொருந்தக்கூடிய அதே நிபந்தனைகள், அந்நியச் செலாவணி நோட்டுகளின் விற்பனைக்கும் பொருந்தும்; அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள், A படிவத்தில், அவர்களுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டதன்பேரில், அங்கீகரிக்கப்பட்டுள்ள காரியங்களுக்காக மட்டுமே, இத்தகைய நோட்டுகளை விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ii) பயணிகளுக்கு விடுக்கப்படுகின்ற, குறிப்புகள் (notes), பயணிகளின் காசோலைகள், அல்லது வாணிக உறுதிக்கடிதம் போன்ற வடிவங்களிலான எல்லா அந்நியச் செலாவணிகளும், அவர்களுடைய நுழைவுச் சீட்டுகளில் (Pass Ports) அதற்கெனத் தனியாக ஒதுக்கப்பட்டுள்ள பக்கத்தில், அந்நியச் செலாவணியை விற்கின்ற அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரியின் முத்திரை, மற்றும் கையொப்பத்தின்கீழ்ப் பதியப்படவேண்டும்; இவ்வாறு மேலெழுதப்படாத எந்தத் தொகையும், பயணத் தொடக்கத்தின் துறைமுகத்தில், சுங்க இலாகாவினால் இருத்திவைத்துக்கொள்ளப் படுவதற்கு உட்பட்டதாகும்.

அந்நியச் செலாவணி கணக்குகள் (Foreign Currency Accounts)

1. ஸ்டெர்லிங் பகுதி செலாவணிகளிலுள்ள கணக்குகள் (Accounts in Sterling Area Currencies) : பாகிஸ்தான் ரூபாய்களில் அல்லாத இதரக் கணக்குகளின் விசயத்தில், 1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் தேதிக்கு முன்னர், பாகிஸ்தான் ரூபாய்களிலான கணக்குகளின் விடயத்தில், 1951ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் தேதிக்கு முன்னர் இத்தகைய கணக்குகள் செயலில் இருந்திருந்தால், இந்தியாவில் குடியுரிமை கொண்டுள்ள நபர்களுக்கு, ஸ்டெர்லிங் அல்லது வேறு இதர ஸ்டெர்லிங் பகுதி செலாவணியில் கணக்குகளை வைத்துக்கொண்டு அவைகளைச் செயற்படுத்துவதற்கு, இந்திய ரிசர்வ் வங்கி பொது அனுமதியை வழங்கியுள்ளது. இந்தியாவில் குடியுரிமை கொண்டுள்ள நபர்களால், ஸ்டெர்லிங் அல்லது இதர ஸ்டெர்லிங் பகுதி செலாவணிகளில் புதிய கணக்குகள் திறக்கப்படுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கியின் முன்அனுமதி அவசியமாகும்,

2. இதர அந்நியச் செலாவணிகளில் கணக்குகள் (Accounts in other Foreign Currencies) : (i) இந்தியாவில் குடியிருந்து கொண்டு, ஆனால், அங்கு குடிவாழ்வுரிமை கொண்டிராத நபர்களால், எந்த அந்நியச் செலாவணியிலும் கணக்குகளை வைத்துக்கொண்டு அவைகளைச் செயற்படுத்துவதற்குப் பொதுவான அனுமதிகூட இந்திய ரிசர்வ் வங்கியால் அளிக்கப்பட்டுள்ளது.

(ii) வெளிநாட்டைச் சேர்ந்தவர்களால், இந்தியாவிலுள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகளிடத்தில், அந்நியச் செலாவணிகளில் கணக்கு வைத்துக் கொள்ளப்படுவது அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய கணக்குகளுக்கான வரவுகள், கணக்கு எதில் உள்ளதோ அந்தச் செலாவணியில் வெளிநாட்டிலிருந்து வரும் அனுப்புகைகள் (remittances), அல்லது A படிவத்தில் ரிசர்வ் வங்கியின் முன்அனுமதி பெறப்பட்டபின் ரூபாய்களை வேறு செலாவணிகளுக்கு மாற்றுவது ஆகியவைகளுக்கு மட்டும் வரையறை செய்யப்பட்டுள்ளது. இந்தக் கணக்குகளிலிருந்து இந்தியாவிலுள்ள வேறு குடியாள்களுக்கு, அல்லது அவர்கள் சார்பாக, அந்நியச் செலாவணிகளில் செலுத்துகைகள் செய்யப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது; ஆனால் மீதமுள்ள இருப்புகள், ரூபாய்களுக்கு மாற்றம் செய்யப்பட்டபின்னர் இந்தியாவிலுள்ள குடியாள்களுக்குச் செலுத்துகைகளைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படலாம்.

3. 1947ஆம் ஆண்டின் வெளிநாட்டு நாணயமாற்று ஒழுங்குபடுத்தல் சட்டத்தின்கீழ் ஏதாவது வெளிநாட்டு நாணயத்திற்கு உரிமையாளர்களாக ஆகக்கூடிய, இந்தியாவில் குடியாள்களாகவுள்ள எல்லா ஆள்களையும், அதனைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள், அதிகாரபூர்வமான நடப்பு நாணயமாற்று விகிதத்தில் ரூபாய்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிராக, அந்நியச் செலாவணி நடவடிக்கையில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரிக்கு அதனை விற்றுவிடவேண்டுமென்று கோருகின்ற ஆணை ஒன்றினை இந்திய அரசு விடுத்துள்ளது. வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் இந்த ஆணைக்கு உட்படுத்தப்படுவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளனர்.

பிணையப்பத்திரங்கள் (Securities)

1. **விளக்கம்** (Definition) : வெளிநாட்டு நாணயமாற்று ஒழுங்குபடுத்தல் சட்டத்தினைப் பொறுத்தமட்டில், 'பிணையப் பத்திரம்' என்னும் சொல் பங்குகள், பங்குத்தொகுப்புகள் (Stocks),

பிணைமுறிகள் (bonds), கடனீட்டுப் பத்திரங்கள், கடனீட்டுப் பத்திரத் தொகுப்புகள், அரசு பிணையப்பத்திரங்கள் ஆகியவை களைக் குறிக்கின்றது; மற்றும், பிணையப்பத்திரங்கள் தொடர் பான வைப்புச் சீட்டுகள் (Deposit Receipts), மற்றும் யூனிட் டிரஸ்டுகளின் யூனிட்டுகள் (units), மற்றும் உப யூனிட்டுகள் (Sub-Units) ஆகியவைகளும் அதில் அடங்கும். 'அந்நியப் பிணையப்பத்திரம்', என்பது எதன்மீது அசல் தொகை அல்லது வட்டி, ஏதாவது அந்நியச் செலாவணியில், அல்லது இந்தியா வில் அல்லாமல் வேறு இடத்தில் செலுத்தப்படவேண்டியதாக உள்ளதோ அத்தகைய ஒரு பிணையப்பத்திரத்தை, அல்லது இந்தியா அல்லாமல் வேறு ஓர் இடத்தில் விடுக்கப்பட்டுள்ள ஒரு பிணையப் பத்திரத்தைக் குறிக்கும்.

2. பிணையப்பத்திரங்களின் இறக்குமதி (Import of Securities) : இந்தியா அல்லது வெளிநாட்டைச் சேர்ந்த எதுவாக இருந்தாலும், இந்தியாவிற்குள், பிணையப்பத்திரங்களை இறக்கு மதி செய்வதற்கு தடைகளேதுமில்லை.

3. பிணையப்பத்திரங்களில் வியாபார நடவடிக்கைகள் (Dealings in Securities): (i) உள்நாட்டில், ரூபாய்களில் ஆன பிணையப்பத்திரங்களின் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு எந்த விதத் தடையும் கிடையாது.

(ii) இந்தியாவில் குடியிருக்கும் ஆள்கள், இந்தியாவில் மட்டும் தொழில் செய்துகொண்டு, ஒன்றை இந்தியாவிலும் மற் றொன்றை இங்கிலாந்திலுமாக இரண்டு பதிவேடுகளை (Registers) வைத்துக்கொண்டிருக்கின்ற ஸ்டெர்லிங் நிறுமங்களின் பங்குகளில், செலுத்துகை ரூபாய்களில் செய்யப்பட்டு, பங்குகள் இந்தியப் பதிவேட்டில் இருக்குமானால், நடவடிக்கைகளில் ஈடுபடலாம். இந்தியாவில் பதிவேடுகளை வைத்திராத நிறுமங்களின் பங்கு களில் நிகழும் நடவடிக்கைகள், ரிசர்வ் வங்கியின் முன்கூட்டிய அனுமதியைப் பெறவேண்டியவைகளாக உள்ளன.

(iii) வெளிநாட்டுப் பிணையப்பத்திரங்களின் உரிமையாளர் களாக உள்ள, அல்லது ஆகக்கூடிய இந்தியாவில் குடியிருக் கின்ற ஆள்கள், அவை இந்திய நாணயமாற்றுக் கட்டுப்பாடு ஒழுங்குபடுத்து விதிமுறைகளை முறிவு செய்வதாக ஆகாத ஒரு முறையில் பெறப்பட்டிருந்தால், இத்தகைய பிணையங்களை வைத்திருப்பதற்கு அல்லது இருத்திவைத்துக்கொள்வதற்கு அனு மதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய பிணையப்பத்திரங்கள், அவை களை வைத்திருப்பவரால் விற்கப்படுவதற்கு, மாற்றல் செய்யப்

படுவதற்கு அல்லது வேறு வகையில் அதனைத் தன்னிடமிருந்து விட்டுவிடுவதற்கு முன்னர், இந்திய ரிசர்வ் வங்கியின் முன்கூட்டிய அனுமதி அவசியமாகும். மறுமுதலீடு செய்வதற்காகப் பிணையப்பத்திரங்களை விற்பனை செய்வதற்கு, அல்லது விற்பனை செய்து, விற்றுவந்தவற்றை இந்தியாவிற்கு எடுத்துக்கொண்டு வருவதற்கு அனுமதி, அதிகாரமளிக்கப்பட்டுள்ள வியாபாரி ஒருவரின் மூலமாக விண்ணப்பம் செய்வதன்பேரில், அளிக்கப்படும்.

4. பிணையப்பத்திரங்களின் ஏற்றுமதி (Export of Securities) : வெளிநாட்டு நாணயமாற்று ஒழுங்குபடுத்து விதிகளின் படி, இந்திய ரிசர்வ் வங்கியின் முன்அங்கீகாரமின்றி, இந்தியாவிற்கு வெளியே (ஆயுள் மற்றும் காலவரையறைக் காப்பீட்டுப் பத்திரங்கள் உட்பட) பிணையப்பத்திரங்களை எடுத்துச்செல்வது அல்லது அனுப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது. விற்பனை, மாற்றல் செய்தல் ஆகியவைகளுக்காகத் தங்களின் பிணையப்பத்திரங்களை, வெளிநாட்டிலுள்ள தங்களின் வங்கியர்கள் அல்லது முகவர்களுக்கு அனுப்பிவைக்க விரும்புகின்ற ஆள்கள், வெளிநாட்டு நாணயமாற்றில் ஈடுபட்டுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு வியாபாரியின் மூலமாக, ஓர் அனுமதிக்கு, இந்திய ரிசர்வ் வங்கிக்கு விண்ணப்பம் செய்யவேண்டும்.

5. குடியாள்கள் அல்லாதவர்களுக்குப் பிணையப்பத்திரங்களை மாற்றல் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது (Transfer of Securities to Non-Residents Prohibited) : இந்திய ரிசர்வ் வங்கியின் பொதுவான மற்றும் சிறப்பு அனுமதியின்றி, இந்தியாவிற்கு வெளியே குடியிருக்கின்ற ஒரு நபருக்கு, அல்லது அவருக்குச் சாதகமாக, ஏதாவது பிணையப்பத்திரத்தை மாற்றல் செய்வது, அல்லது ஒரு பிணையப்பத்திரத்தில் ஏதாவது உரிமையை, ஏற்படுத்துவது, அல்லது மாற்றல் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அதேபோல, இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதியின்றி இந்தியாவிலுள்ள பதிவேடுகளிலிருந்து, இந்தியாவிற்கு வெளியேயுள்ள பதிவேடுகளுக்குப் பிணையப்பத்திரங்களை மாற்றல் செய்வது, மற்றும் இந்தியாவில் அல்லது வேறு இடத்தில், இந்தியாவில் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது செய்யப்படுவதற்குள்ள பிணையப்பத்திரங்களை இந்தியாவுக்கு வெளியே வசிக்கின்ற நபர்களுக்கு விடுப்பதுகூடத் தடைசெய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பிணையப்பத்திரங்களை வைத்திருப்பதற்கான அனுமதிக்கு விண்ணப்பம் (Application for permission to hold Foreign Securities) : வெளிநாட்டுப் பிணையப்பத்திரங்களை, அதாவது, இந்திய ரூபாய்களில் அல்லாத வேறு செலாவணியில் செலுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ள, பிணையப்பத்திரங்

களை வைத்திருக்கின்ற, (இந்தியாவில் குடியுரிமை கொண்டிராத வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் அல்லாத) இந்தியாவில் குடியிருக்கின்ற எல்லா நபர்களும், அவைகளை வைத்திருப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கு ரிசர்வ் வங்கிக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். இருந்தபோதிலும், இந்தியாவில் வாழும் வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர், அத்தகைய பிணையம் அவருடைய சொந்தச் சொத்தாக, அவரால் பெறப்பட்டிருந்தால், அல்லது இந்தியாவில் குடியுரிமை பெறாத ஏதாவது நபருக்காக அல்லது சார்பாக அவரால் வைத்திருக்கப்பட்டிருந்தால், ஏதாவது வெளிநாட்டுப் பிணையத்தைத் தொடர்ந்து வாங்குவதற்கு, வைத்திருப்பதற்கு, அல்லது விற்பதற்குப் பொதுவான அனுமதி அவருக்கு அளிக்கப்பட்டிருப்பதால், இத்தகைய விண்ணப்பம் எதனையும் செய்யவேண்டியதில்லை.

17. அண்மைக்கால வங்கியியல் வளர்ச்சிகள்

(Recent Banking Developments)

அண்மைக்காலத்தில், வங்கியியலில் சில முக்கிய வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன; அவைகளில், வைப்புக் காப்பீட்டுக் கூட்டுருவின் (Deposit Insurance Corporation) தோற்றுவிப்பு, வங்கிகளின் முதலீட்டு நிதிகள் மற்றும் எளிவரல்தன்மை வீதம் ஆகியவை தொடர்பாக இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய திட்டங்கள் ஆகியவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். நூலின் 6ஆவது அத்தியாயத்தில் ஆசிரியரால் பரிந்துரைக்கப்பட்ட, வரவுச் செலுத்துகைகளின் மாற்றலுக்கான ஒரு முறை (a System of Credit Transfer) சில வங்கிகளால் புதிதாகப் புகுத்தப்பட்டுள்ளது மற்றுமொரு முன்னேற்றமாகும்.

வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு (Deposit Insurance Corporation)

இந்தியாவில் வங்கி வைப்புகளைக் காப்பீடு செய்யவேண்டிய தேவை நீண்டநாள்களாகவே உணரப்பட்டு வந்ததொன்றாகும். 1950ஆம் ஆண்டின் கிராமப்புற வங்கி விசாரணைக் குழு [The Rural Banking Enquiry Committee, (1950], வைப்புக் காப்பீட்டுத் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்படுவதைக் கொள்கையளவில் ஆதரித்தது. 1954-ல் தனியார் துறைக்கான நிதிபற்றிய குழுவும் (The Committee on Finance for the Private Sector) (ஸ்ராப் குழு) (Shroff Committee) கூட வைப்புக் காப்பீடு தொடங்கப்படுவதைப் பரிந்துரைத்தது; குழு, அதற்கான திருத்தப்படாத திட்டக் குறிப்பினையும் (draft blue print) கூட வரைந்தது. இருந்தபோதிலும், லக்ஷ்மி பாங்க், பாலை மைய வங்கி ஆகியவற்றின் தோல்வி, கண்களைத் திறக்கக்கூடியதாக நிகழும் வரை, இந்தப் பொருள் யாருடைய தீவிரக் கவனத்தையும் பெறவில்லை. பொதுமக்களிடமிருந்தும், நாடாளுமன்றத்திலிருந்தும் அதிகாரிகள் பெற்ற குற்றச்சாட்டுகள், வேறு வழியின்றி, வங்கி வைப்புகளைக் காப்பீடு செய்வதற்கான சட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழி

வகுத்தது. வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு மசோதா, இந்தியக் குடியரசு தலைவரின் ஒப்புதலை 1961ஆம் ஆண்டு டிசம்பர் 7ந் தேதி பெற்றது; கூட்டுரு 1962ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று நிறுவப்பட்டது.

கூட்டுரு, முழுவதும் ரிசர்வ் வங்கியால் செலுத்தப்பட்டுள்ள, 1 கோடி ரூபாய் அனுமதித்த முதலைக் கொண்டுள்ளது. கூட்டுருவின் பொதுக் கண்காணிப்பு, அதனை இயக்குதல், மற்றும் அதன் மேலாண்மை ஆகியவை ஐந்து உறுப்பினர்கள் கொண்ட இயக்குநர்களின் அவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன; அவை உறுப்பினர்கள் வருமாறு: (1) ரிசர்வ் வங்கியின் ஆளுநர்; அவரே அவைத்தலைவரும் ஆவார், (2) ரிசர்வ் வங்கியால் நியமிக்கப்படுகின்ற அதனுடைய துணை ஆளுநர் ஒருவர், (3) மைய அரசால் நியமிக்கப்படும் அதனுடைய ஓர் அதிகாரி, (4) ரிசர்வ் வங்கியுடன் கலந்தாலோசித்து மைய அரசு நியமனம் செய்யும் வணிகம், தொழில் அல்லது நிதி ஆகிய துறைகளில் சிறப்பு அறிவுபெற்றுள்ள இரண்டு இயக்குநர்கள். இந்த இரண்டு இயக்குநர்களும், அரசு, ரிசர்வ் வங்கி, அல்லது ஒரு வங்கி நிறுமம் ஆகியவற்றின் அதிகாரிகளாகவோ, வேறு வகையில் ஒரு வங்கி நிறுமத்தோடு தீவிரச் செயல்தொடர்பு கொண்டவர்களாகவோ இருக்கமாட்டார்கள். அதிகாரிகள் அல்லாத இயக்குநர்களின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளுக்கு வரையறை செய்யப்பட்டுள்ளது. கூட்டுருவின் அன்றாட நடவடிக்கைகள், இயக்குநர் அவையால், இயக்குநர் அவை உறுப்பினர்களிலிருந்தே, இயக்குநர் அவையால் குறிப்பிடப்பட்டுள்ள, இயக்குநர்களின் எண்ணிக்கையைக் கொண்டுள்ள ஒரு செயற்குழுவிடம் (Executive Committee) ஒப்படைக்கப்பட்டுள்ளன. வைப்புக் காப்பீட்டுச் சட்டம், கூட்டுருவை, அது தன்னுடைய பணிகளை நிறைவேற்றுவதில், பொதுமக்களின் நலம் சம்பந்தப்பட்டுள்ள கொள்கை விடயங்களில், ரிசர்வ் வங்கியினுடைய ஆலோசனையைக் கேட்டு, மைய அரசு எழுத்துமூலம் அதற்கு அனுப்பக்கூடிய கட்டளைகளின்படி, வழிகாட்டப்பட வேண்டுமென்று கோருகின்றது.

காப்பீட்டுப் பாதுகாப்பளவு (Coverage of Insurance): (வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு) சட்டத்தினுடைய சரத்துகளின் படி, சட்டம் அமலுக்கு வந்த நேரத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த எல்லா வணிக வங்கிகளும் (அதாவது, ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளவை, அனுமதி ஏதும் மறுக்கப்படாதவை, வங்கி நிறுமங்களின் சட்டத்தின் பிரிவு 51-ன்கீழ் வங்கிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளவை—அதாவது ஸ்டேட் பாங்க்

மற்றும் அதன் துணை வங்கிகள்) காப்பீடு செய்யப்பட்டுள்ள வங்கிகள் என்று பதிவு செய்யப்படவேண்டும். வருங்காலத்தில் தொழில் தொடங்கக்கூடிய எல்லாப் புதிய வங்கிகளுங்கூட, காப்பீடு செய்யப்பட்ட வங்கிகளாகப் பதிவு செய்யப்படவேண்டும்.

தற்போதைக்கு, கூட்டுருவால் காப்பீடு அளிக்கப்படக்கூடிய வைப்புத் தொகையின் அளவு, ஒவ்வொரு வங்கியிலும், ஒரே தகுதியையும் ஒரே உரிமையையும் கொண்டுள்ள ஒவ்வொரு வைப்பாளருக்கும் ரூ. 1500 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது; இருப்பினும், மைய மற்றும் மாநில அரசுகள், வெளிநாட்டு அரசுகள், மற்றும் வங்கி நிறுமங்கள் ஆகியவைகளின் வைப்புகள் இந்தத் திட்டத்தினால் பாதுகாப்பளிக்கப்படமாட்டா. இது தொடர்பான வைப்புத் தொகையின் அளவு, அதிலிருந்து வைப்பாளரால் வங்கிக்குத் தரவேண்டியுள்ள ஏதாவது தொகையைக் கழித்து விட்டுக் கணக்கிடப்படும். தற்போதைய காப்பீட்டு அளவு, ஒவ்வொரு ஐந்து வைப்பாளர்களில் நான்கு பேருக்கு முழுப் பாது காப்பு அளிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது; மற்றும், மொத்த வைப்புகளில் காப்பீடு செய்யப்பட்டுள்ள பகுதி (அதாவது ரூ. 1500 வரை இருப்புகளை வைத்துள்ள வைப்பாளர்களின் எல்லா வைப்புகளும், மற்றும் இதர வைப்பாளர்களின் விடயத்தில் ஒவ்வொரு வைப்பாளருக்கும் ரூ. 1500-ம்) 24 சதவீதமாகும். கூட்டுரு, மைய அரசினுடைய முன்அனுமதியுடன், தன்னுடைய நிதிநிலை, மற்றும் வங்கியியல் முறையின் பொதுநலன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, சமயத்திற்கேற்றவாறு வரம்பினை உயர்த்திக் கொள்ளலாம் என்று வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு சட்டம் வகை செய்துள்ளது. 1934ஆம் ஆண்டு, யு. எஸ். கார்ப்பரேஷன் தொடக்கத்தில், ஒரு வைப்பாளருக்கு $. 2500-க்குக் காப்பீட்டுத் தொகையை வரையறைப்படுத்தி, படிப்படியாக, 1950-ல் $. 10,000-க்கு உயர்த்தியது என்பது, இந்தச் சமயத்தில், இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

காப்பீடு செய்யப்பட்ட ஒரு வங்கி நொடிப்படைந்து, செயல்படாமல் போகின்ற தறுவாயில், கூட்டுருவால் பணம் செலுத்தப்படுகின்ற முறையைச் சட்டம் விவரமாகக் குறிப்பிடுகின்றது. ஒரு வங்கி கலைக்கப்பட்டதிலிருந்து மூன்று மாதத்திற்குள், கலைப்பதிகாரி (Liquidator), ஒவ்வொரு வைப்பாளர் தொடர்பான வைப்புத் தொகைகளையும், மற்றும் அவைகளுக்கெதிராகச் சரிக்கட்டப்பட்ட (Set off) தொகைகளையும்பற்றிய ஒரு பட்டியலைக் கூட்டுருவிடம் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது; காப்பீடு அளிக்கப்பட்டுள்ள வங்கி ஒன்றிற்கு, ஒரு

சமாதான உடன்படிக்கைத் திட்டம் அல்லது ஏற்பாடு, அல்லது மறு சீரமைப்பு, அல்லது ஒருங்கிணைப்பு ஆகியவற்றிற்கு இசைவாணை அளிக்கப்பட்டுள்ள தறுவாயில், சம்பந்தப்பட்ட வங்கி, [அல்லது ஒருங்கிணைப்பாக இருந்தால் மாற்றலைப் பெற்ற (transferee) வங்கி] கூட்டுருவிற்கு, ஒவ்வொரு வைப்பாளருக்கும் உரிய வைப்புகளைத் தனித்தனியாகவும். அவைகளுக்கெதிராகச் சரிக்கட்டப்பட்ட தொகைகளையும், மற்றும் திட்டத்தின்கீழ் அவருடைய (வைப்பாளர்) கணக்கிற்குக் கொடுக்கப்பட்ட அல்லது வரவு கொடுக்கப்பட்ட தொகைகளையும் காட்டுகின்ற ஒரு பட்டியலைக் கொடுக்கவேண்டும். வைப்பாளர்களின் பட்டியலைப் பெற்றுக்கொண்ட இரண்டு மாதங்களுக்குள், சட்டத்தின்கீழ்ச் செய்யப்படவேண்டிய செலுத்துகைகளைக் கூட்டுருச் செய்யும். தொழில் செய்வதிலிருந்து நின்றுவிட்ட, காப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு வங்கியால், ஏதாவது வைப்பு தொடர்பாகச் செலுத்தப்பட வேண்டியுள்ள தொகைகள், அந்த வைப்புத் தொடர்பாகக் கூட்டுருச் செய்துள்ள செலுத்துகைகள் முழுவதும் திரும்பப் பெறப்படுகின்ற வரையில், அதனால் கூட்டுருவிற்குச் செலுத்தப்படவேண்டும்.

காப்பீட்டுக் கட்டண வீதம் (Rate of Premium): காப்பீடு செய்யப்பட்டுள்ள வங்கிகளின்மீது, காப்பீட்டுக் கட்டணமாக விதிப்பதற்குக் கூட்டுரு அதிகாரமளிக்கப்பட்டுள்ள உயர்ந்த அளவுக் கட்டணம் (மைய மற்றும் மாநில அரசுகள், ஓர் அயல் நாட்டு அரசு, அல்லது ஒரு வங்கி நிறுமம் ஆகியவைகளின் வைப்புகள் நீங்கலாக) வங்கியிடமுள்ள வைப்புகளின் மொத்தத் தொகையில், ஒவ்வொரு 100 ரூபாய்க்கும், ஆண்டிற்கு, 15 காசுகள் ஆகும். உண்மையாகச் செலுத்தவேண்டிய கட்டண வீதத்தை, கூட்டுரு ஒவ்வொரு 100 ரூபாய் வைப்புகளுக்கும் ஆண்டொன்றிற்கு 5 காசுகளாக, அதாவது, வைப்புகளின் 1 சத வீதத்தில் 1/20 என்று நிர்ணயம் செய்துள்ளது. கட்டத்தைச் செலுத்துவதில் தவறுமானால், காப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு வங்கி, ஆண்டிற்கு 8 சதவீதத்திற்கு மிகைப்படாத ஒரு வீதத்தில் வட்டி விதிக்கப்படுவதற்கு உட்பட்டதாகும். கட்டணத் தொகைகள், காலாண்டுத் தவணைகளில், செலுத்தப்படவேண்டுமென்று கூட்டுரு அறிவித்துள்ளது.

ரிசர்வ் வங்கியினிடமிருந்து ரூ. 5 கோடி வரை கடன் வாங்குவதற்கு கூட்டுரு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

கணக்கீட்டு முறைகள் (Accounting Procedures): இதர வருவாய்கள் அல்லது அதனால் ஏற்கப்படுகின்ற (நிர்வாகச் செலவுகள் உட்பட) செலவுகள் ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்தி, கூட்டுருவினுடைய காப்பீட்டு நடவடிக்கைகளின் மூலமாகக் கிடைக்கும் நிகரத் (இலாப, நட்ட) தொகையைப் பற்றிய தெளிவான நிலையைப் பெறும்பொருட்டு, ஒரு வைப்புக் காப்பீட்டு நிதியைக் (Deposit Insurance Fund) கூட்டுரு வைத்திருக்க வேண்டுமென்று (வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு) சட்டம் கோருகின்றது; அதனால் வசூலிக்கப்படும் கட்டணத்தொகைகள் யாவும் இந்த நிதிக்கு வரவு வைக்கப்படுகின்றன; மற்றும் காப்பீடு செய்யப்பட்ட வைப்புகள் சம்பந்தமான செலுத்துகைகளைச் செய்வதற்கு இந்த நிதியிலுள்ள தொகை பயன்படுகின்றது. ரிசர்வ் வங்கியிலிருந்து பெறப்படும் கடன்கள் யாவும், வைப்புக் காப்பீட்டுக் காரியங்களுக்காக மட்டுமே இருக்கும்; மற்றும் அக்கடன் அந்த நிதியிலிருந்துதான் திரும்பச் செலுத்தப்படும். வைப்புக் காப்பீட்டு நிதியிலுள்ள தொகைகள், தனியாக முதலீடு செய்யப்பட்டு, அத்தகைய முதலீடுகளிலிருந்து வரும் வருமானம் அந்நிதிக்கு வரவு வைக்கப்படும். முதலை முதலீடு செய்து பெறுகின்ற வருமானத்திலிருந்து கூட்டுருவின் நடைமுறைச் செலவுகளைக் கொடுத்தபின்பு எஞ்சியவற்றிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட காப்பு நிதிகள் (reserves) மற்றும் அதனுடைய முதல் ஆகியவற்றைக் கொண்ட பொது நிதி (General Fund) ஒன்றினையும் கூட்டுரு வைத்திருக்கும். எந்த நேரத்திலாவது வைப்புக் காப்பீட்டு நிதியிலுள்ள தொகை, அந்த நிதியினுடைய தேவைகளை நிறைவேற்றப் போதுமானதாக இல்லையெனில், தேவைப்படக் கூடிய தொகைகளை, ரிசர்வ் வங்கியின் முன்கூட்டிய அங்கீகாரத்துடன் இயக்குநர் அவையால் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளின் பேரிலும், அது தீர்மானிக்கும் காலத்திற்கும், பொது நிதியிலிருந்து, கூட்டுரு மாற்றல் செய்து கொள்ளலாம் என்ற அதிகாரத்தையளிக்கின்ற சரத்தும் உள்ளது. தன்னுடைய நிதிகளை மைய அரசினுடைய பிணையப்பத்திரங்களில் மட்டுமே கூட்டுரு முதலீடு செய்யவேண்டும்; ரிசர்வ் வங்கி அதனுடைய வங்கியர் ஆகும்.

அது தொழில் செய்கின்ற முதல் ஐந்தாண்டுகளுக்கு, கூட்டுரு, வருமான வரி மற்றும் மிகை வரி (Super Tax) ஆகியவற்றிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. கூட்டுருவினுடைய பொது நிதியிலுள்ள இருப்பு, தேவையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டபின், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காப்பு நிதிகளுக்கு வரவு வைக்கப்படும்.

வங்கிகளிடமிருந்து தகவலை அழைக்கவும், காப்பீடு செய்யப் பட்டுள்ள வங்கிகளைக் கண்காணிக்கவும் அதிகாரங்கள் (Powers to call for Information from Banks and Inspection of Insured Banks): வைப்புக் காப்பீட்டுத் திட்டமொன்று வெற்றிகரமாகச் செயல்படுவது, பெருமளவில், காப்பீடு செய்யப்பட்ட வங்கிகளின் நடைமுறைகளைக் கண்காணிப்புச் செய்தல், மற்றும் அவற்றின் செயற்பாட்டுத் திறமையின் தரத்தினை முன்னேற்றம் செய்யும் நோக்கத்தோடு வங்கிகளே தங்கள் சார்பில் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. அமெரிக்காவில் கூட்டு வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு (Federal Deposit Insurance Corporation), மற்ற கூட்டு அரசு பதிலாண்மைகளால் (Federal Government Agencies) கண்காணிப்புச் செய்யப்படாத வங்கி களின் கண்காணிப்பினைத் தானே மேற்கொள்ளுகிறது; கூட்டு அரசின் இதர முகமைகள் கண்காணிப்பினைச் செய்கின்றபோது, கண்காணிப்பு பற்றிய அறிக்கைகள் கூட்டுருவுக்குக் கிடைக்கும் படி செய்யப்படுகின்றன. கண்காணிப்பு அறிக்கைகளின் அடிப் படையில் காப்பீடு செய்யப்பட்டுள்ள வங்கிகளுக்குக் கூட்டுரு, அறிவுரை வழங்கி அவைகளினுடைய வங்கி நடைமுறைகளின் மீது குறிப்பிடுமளவிற்குத் தன்னுடைய செல்வாக்கினை புகுத்து கின்றது. இந்தியாவில், எல்லா வணிக வங்கிகளும் ரிசர்வ் வங்கியினால் கண்காணிக்கப்படுவதால், கூட்டுரு, தனியாகக் கண்காணிப்புகளை மேற்கொள்ளத் தேவையில்லை. இருந்த போதிலும், சட்டம் தொடர்பான எல்லாவற்றிற்கும், காப்பீடு செய்யப்பட்ட ஒரு வங்கியைக் கண்காணிப்புச் செய்யுமாறு ரிசர்வ் வங்கியைக் கேட்டுக் கொள்வதற்குக் கூட்டுருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது; இத்தகைய கண்காணிப்புகளை ரிசாவ் வங்கி மேற்கொண்டு, கண்காணிப்பு அறிக்கைகளின் படிகளைக் கூட்டுரு விற்கு அனுப்பவேண்டும். சட்டம், அவைகளினுடைய வைப்புகள் தொடர்பான ஏதாவது தகவலைத் தருமாறு காப்பீடு செய்யப் பட்ட வங்கிகளைக் கேட்பதற்கும், மற்றும் அதனுடைய பணி களை நிறைவேற்றுவதற்கு அது அவசியமென்று கருதுகின்ற பொழுது, காப்பீடு செய்யப்பட்ட ஒரு வங்கியினுடைய எந்தச் சான்றுப் பதிவினையும் (record) தடையேதுமின்றிக் காண்பதற் கும் கூடக் கூட்டுருவிற்கு அதிகாரமளிக்கின்றது. காப்பீடு செய்யப்பட்ட வங்கிகளைப் பற்றிய தகவல்களைக் கூட்டுருவும் ரிசர்வ் வங்கியும் தங்களிடையே பரிமாறிக் கொள்வதற்குங்கூடச் சட்டம் வகை செய்துள்ளது (இந்திய ரிசர்வ் வங்கி செய்தி யறிக்கை, டிசம்பர் 1961).

1964 செப்டம்பரில் முடிவடைந்த ஆண்டுக்காலத்தில், வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு, காப்பீட்டுக் கட்டணம் செலுத்தப் படுவதற்குட்பட்ட வைப்புத் தொகை ரூ. 2437.29 கோடியைக் கொண்டிருந்த, 98,37,176 கணக்குகளுக்குக், காப்பீட்டுப் பாதுகாப்பினை அளித்தது. தன்னிச்சையான ஒருங்கிணைப்புகள் (Voluntary amalgamations) மற்றும் வைப்புப் பொறுப்புகளை மாற்றல் செய்தல் ஆகியவைகளைத் தொடர்ந்து 1964 ஆம் ஆண்டுக்காலத்தில் அநேக வங்கிகள் ரத்து செய்யப்பட்டதால், காப்பீடு செய்யப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை குறைந்து போயிற்று. 1963ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில் 250ஆக இருந்த காப்பீடு செய்யப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை, 1964 ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில் 157ஆக இருந்தது.

வங்கிகளின் அளவில் அடிப்படையில், 30—9—1964 அன்று முடிவடைந்த ஆண்டுக்காலத்திற்கான காப்பீட்டுப் பாதுகாப்புப் பகுப்பு

(Analysis of Coverage of Insurance during the year ended 30—9—1964 according to the size of the Banks)

வங்கியின் அளவு	வங்கிகளின் எண்ணிக்கை	காப்பீடளிக்கப் பட்ட மொத்தக் கணக்குகள்	காப்பீட்டுக்கட்டணத் திற்கு உட்படுத்தப் பட்ட மொத்த வைப்புகள்
வைப்புக்களை ரூ. 100 கோடிக்குமேல் கொண்டுள்ளவை	6	42.29 இலட்சம்	ரூ. 1384.62 கோடி
ரூ. 50 கோடிக்குமேல் ஆனால் ரூ. 100 கோடி வரை கொண்டுள்ளவை	5	17.80 ,,	ரூ. 383.00 ,,
ரூ. 25 கோடிக்குமேல் ஆனால் ரூ. 50 கோடி வரை கொண்டுள்ளவை	8	16.86 ,,	ரூ. 311.40 ,,
ரூ. 10 கோடிக்குமேல் ஆனால் ரூ. 25 கோடி வரை கொண்டுள்ளவை	9	8.46 ,,	ரூ. 177.10 ,,
ரூ. 1 கோடிக்குமேல் ஆனால் ரூ. 10 கோடி வரை கொண்டுள்ளவை	38	9.90 ,,	ரூ. 152.30 ,,
ரூ. 1 கோடியும் அதற்குக் குறைவாகவும் கொண்டுள்ளவை	138	2.94 ,,	ரூ. 28.50 ,,

மூலதன நிதிகள், மற்றும் வங்கிகளின் எளிவரல் தன்மை வீதங்கள் ஆகியவை பற்றிய ரிசர்வ் வங்கியின் புதிய திட்டங்கள் (Reserve Bank's Proposals Regarding Capital Funds and Liquidity Ratios of Banks)

முதலாவது மற்றும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களினுடைய ஊக்குவிப்பின் காரணமாக, வங்கி வைப்புகளிலும், வங்கிக் கடனளிப்புகளிலும் தீவிர அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. வங்கிக் கடன் வடிவமைப்புக் (pattern) கூட மாறிக்கொண்டேயிருக்கிறது. தொன்றுதொட்டு வியாபாரத்திற்கு நிதியளித்து வருகின்ற வங்கிகள், நடப்பு முதல் மற்றும் நிலை முதல் (fixed capital) ஆகிய இரண்டினையுமே அளித்துத் தொழில் நிதியினையும் அளிப்பதில் அக்கறை எடுத்துக்கொள்ளத் தொடங்கியுள்ளன. முதல் விடுப்புகளை, ஒப்புறுதி (under write) செய்யவும் அவை தொடங்கியுள்ளன. வைப்புகளில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பின் காரணமாக வைப்பாளர்களுக்கு வங்கிகளின் பொறுப்புகள் தீவிரமாக அதிகரித்தும், மற்றும் அவை, பெருமளவிலான இடர்வாய்ப்பைக் கொண்டுள்ள பருவக்காலக் கடன் நடவடிக்கைகள் (term-loan operations) போன்றவற்றை மேற்கொண்டும், பொருளாதாரத்தினுடைய மாறுபட்ட தேவைகளுக்கேற்பத் தாங்களாகவே தங்களை மாற்றிக்கொண்டிருக்கின்ற அதே நேரத்தில், அவைகளுடைய மூலதன அடிப்படை, மற்றும் காப்பு நிதிகளைப் பலப்படுத்துவதில் சிறிது கவனமே செலுத்தப்பட்டுள்ளது. 1961ஆம் ஆண்டு ஜூன் திங்களோடு முடிவடைந்த ஆண்டுக்கான ரிசர்வ் வங்கியினுடைய இயக்குநர்களின் அறிக்கையில் சரியாகக் குறிப்பிடப்பட்டதுபோல, "ஒரு வங்கியினுடைய வலிமைத்தன்மையினை (Soundness), அதனுடைய மூலதன நிதி, அதனுடைய வைப்புப் பொறுப்புகளோடு ஒப்பிடுகையில் கொண்டுள்ள விகிதத்தை மட்டுமே எடுத்துக்கொண்டு எவ்விதத்திலும் அளவிடமுடியாது என்றபோதிலுங் கூட, இந்த விகிதம் ஒரு வங்கியினுடைய வலிமையை அளவிடுவதற்கு ஒரு முக்கியக் காரணியாகும்............" மூலதனம் மற்றும் காப்பு நிதிகள் ஆகியவற்றுக்கான குறைந்த அளவு தேவைகள், 1949ஆம் ஆண்டின் வங்கி நிறுமங்களின் சட்டத்தின், முறையே 11 மற்றும் 17 பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை, குறைந்த அளவு தேவைகள் என்று, பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு கணக்கிடப்பட்டவைகளாகும்; தற்போதைய சூழ்நிலைகளில் அவை உண்மையானவையாகத் தோன்றமாட்டா.

மேலே சொல்லப்பட்ட காரணிகளைக் கருத்தில்கொண்டு, வங்கியியல் அமைப்பினுடைய (Banking Structure) மூலதன அடிதளத்தை (capital base) வலிமைப்படுத்துவதற்கு நடவடிக் கைகள் எடுக்கப்படவேண்டுமென்பதை ரிசர்வ் வங்கி உணர்ந்தது. 1961ஆம் ஆண்டு ஜூன் திங்களில் வங்கிகளின் முதல் மற்றும் காப்பு நிதிகளைப் பலப்படுத்துவதற்குத் தகுந்த சட்டத்தினை இயற்றுவதற்கான சில திட்டங்களை அது தயாரித்தது. ஒவ் வொரு வங்கியையும், ஒவ்வோர் ஆண்டும் தன்னுடைய நிகர இலாபத்தில் 20 சதவீதத்திற்குக் குறையாமல், காப்பு நிதிகளுக்கு, (i) காப்பு நிதிகள் செலுத்து முதல் (paid up capital) அளவினை அடைகின்றவரையில், மற்றும் (ii) செலுத்து முதல் மற்றும் [பங்குமுனைமக் (premium) கணக்கையும் சேர்த்து] வெளியிடப் பட்ட காப்பு நிதிகள் ஆகியவற்றின் விகிதம், முந்தைய ஆண்டு இறுதியில், பொதுமக்களிடமிருந்து, அது பெற்ற வைப்புகளுக்கு $7\frac{1}{2}$ சதவீதத்திற்குச் சமமாக ஆகின்ற வரையில் ஒதுக்கவேண்டு மென்று கோருகின்ற வகையில், வங்கி நிறுமங்களின் சட்டத்தின் பிரிவு 17(1), திருத்தம் செய்யப்படவேண்டுமென்று முன்மொழி யப்பட்டது. இது தொடர்பாக, நிகர இலாபம் என்பது வரிவிதிப் பிற்கு முந்தைய இலாபமாக எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந் தது. மூலதனத் தேவைகளைப் பொறுத்தமட்டில், அப்போதிருந்த ரூ. 50,000க்கு எதிராக, ஒரு வங்கி நிறுமத்தைத் தொடங்குவ தற்கு ரூ. 5 இலட்சத்தைக் குறும அளவுத் தொகையாக நிர்ண யம் செய்யும் வகையில், வங்கி நிறுமங்களின் சட்டத்தின் 11ஆவது பிரிவினைத் திருத்தம் செய்வதற்கு முன்மொழியப்பட்டது. வங்கி யினுடைய அலுவலகம் பம்பாயிலோ கல்கத்தாவிலோ அமைக் கப்பட்டிருந்தால் குறைந்த அளவு மூலதனம் முன்பிருந்த அள வான 10 இலட்சத்திற்கெதிராக 20 இலட்சத்தில் நிர்ணயிக்கப் பட்டது. வைப்புகளோடு ஒப்பிடுகையில் அவற்றினுடைய மூலதன நிதிகளின் விகிதத்தை மிகவும் குறைவாகக் கொண்டுள்ள, மற்றும் $7\frac{1}{2}$ சதவீத விகிதத்தை அடைவதற்கு நீண்டகாலத்தை எடுத்துக் கொள்ளக்கூடியதுமான வங்கிகளை, தங்களுடைய செலுத்து முதலை, எங்கெல்லாம் முடியுமோ அங்கு, புதிய விடுப்புகளின் மூலம், அல்லது செலுத்தப்படாத முதல்களின்மீது அழைப்புகளை விடுப்பதன்மூலம், அதிகரிக்குமாறு கோருவதற்கு ரிசர்வ் வங்கிக்கு அதிகாரமளிப்பதற்கும் திட்டமிடப்பட்டது. வெளிநாட்டு வங்கி களைப் பொறுத்தமட்டில், அவை பம்பாய் மற்றும் கல்கத்தா அல்லாத இதர இடங்களில் தொழில் செய்தால், வைப்புகளோடு ஒப்பிடுகையில், அவைகளின் குறைந்த அளவு மூலதன விகிதத்தை 5 சதவீதம், அல்லது ஒரு குறைந்த அளவு மூலதனமான

ரூ. 15 இலட்சம், இதில் எது அதிகமோ அதில், பம்பாய் அல்லது கல்கத்தாவில் தொழில் செய்தால் ரூ. 20 இலட்சத்தில் வரை யறை செய்வதற்கு முன்மொழியப்பட்டது.

கோரப்பட்ட இதரப் புதுத்திட்டங்களாவன : The other Proposal sought) : (i) வங்கிகளின் ரொக்க இருப்புத் தேவை கள் மற்றும் எளிவரல் தன்மை விகிதம் ஆகியவற்றை, மொத்தப் பொறுப்புகளுக்குப் பதிலாக மொத்த வைப்புகளோடு ஒப்பிடுதல், (ii) காப்பு இருப்புத் தேவைகளைக் கணக்கிடுவதில் தற்போது அனுசரிக்கப்படும் தேவை (demand) மற்றும் கால (time) பொறுப்புகளுக்கு இடையேயான வேறுபாட்டினை நீக்கி விடுதல், (iii) ஓரளவிற்குக் காப்புநிதி, மற்றும் எளிவரல் தன்மை, ஆகியவற்றின் தேவைகளை உயர்த்துதல், (iv) காப்புநிதித் தேவை களின் ஒவ்வோர் அதிகரிப்பிற்கும் சமமாக, எளிவரல் தன்மைத் தேவைகளிலும் அதிகரிப்பு ஒன்று ஏற்படுவதை உறுதிப்படுத்து தல். வங்கி நிறுமங்களின் சட்டம், பிரிவு 24-ன் சரத்துகளின்படி, மொத்தப் பொறுப்புகளுக்கு எதிராக 20 சதவீதத்தில் இருந்த எளிவரல் தன்மை விகிதத்தை, வைப்புகளில் 27½ சதவீதம் என்ற விகிதத்தில் வைக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டது. [கால வைப்புகளில் 2 சதவீதம், மற்றும் தேவைப் பொறுப்புகளில் (demand Liabilities) 5 சதவீதம் என்பதற்குப் பதிலாக] மொத்த வைப்புகளில் 5 சதவீதம் என்ற ஒரு விகிதத்தை நிர்ணயம் செய்து, சட்டப்படியாக ரொக்க இருப்பினை வைத்திருப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த கால, மற்றும் தேவை வைப்புகளுக்கிடை யேயான வேறுபாடும் ஒழிக்கப்படவேண்டுமென்று முன்மொழியப் பட்டது; இந்தச் சதவீதத்தை, இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், பிரிவு 42(1A)-ன்கீழ், மாறுகின்ற காப்பிருப்பு வீதத் (Variable Reserve Ratio) திட்டத்தின்படி, ரிசர்வ் வங்கி 15 சதவீதத்திற்கு உயர்த்தலாம். இத் திட்டங்கள் பத்திரிகை உலகிலிருந்தும், வணிக மற்றும் நிதிவட்டாரங்களிலிருந்தும் பெருமளவில் இழி வுரையைப் (criticism) பெற்றது. இருந்தபோதிலும், குற்றச்சாட்டு கள் திட்டமுனைவுக்கான (proposal) அடிப்படை அவசியத்திற்கு எதிராக இருந்தன என்பதைவிட, முன்மொழியப்பட்ட, மூலதன நிதிகளில் மற்றும் எளிவரல் தன்மை விகிதத்தில் உள்ள அதிகரிப் பின் அளவிற்கு எதிராகவே முக்கியமாக இருந்தன. வங்கிகளை வழி நடத்திச் செல்வதற்கும் கட்டுப்பாடு செய்வதற்கும், ரிசர்வ் வங்கி ஏற்கெனவே பெருமளவில் அதிகாரங்களைக் கொண்டிருக் கும்பொழுது, (புதிதாகச்) சட்டமியற்றுவதற்கு அவசியமேது மில்லையென்றும், நீதியின் அடிப்படையிலான எச்சரிக்கை ஒரு சிறந்த முறையாக இருக்கக்கூடுமென்றும்கூட உணரப்பட்டது.

முடிவாக, வங்கிகளோடான முறைப்படியல்லாத ஓர் உடன்பாடு, சட்டமியற்றுதல் மற்றும் கட்டளையிடுதல் ஆகியவற்றைவிடச் சிறந்தது என்ற முடிவிற்கு ரிசர்வ் வங்கியும்கூட வந்தது. அதன் படி, வங்கி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்ட பலவகையான இடர்ப்பாடுகளைக் கருத்தில் எடுத்துக்கொண்ட பின்பு, ரிசர்வ் வங்கியின் ஆளுநர், அட்டவணையிலிடப்பட்ட எல்லா இந்திய வங்கிகளுக்கும் எழுதிய, 1961, டிசம்பர் 27 தேதியிட்ட தம்முடைய கடிதத்தில், (பொதுமக்களுக்கு) வெளியிடப்படுகின்ற காப்புநிதி களுக்கு ஒதுக்கீடுகள் செய்வது தொடர்பாகக் கீழ்க்காணும் மரபு விதிமுறைகள் (conventions) கடைப்பிடிக்கப்படவேண்டுமென்று பரிந்துரை செய்திருந்தார்:

(i) வங்கிகளினுடைய வெளியிடப்பட்ட (published) காப்பு நிதிகள், அவைகளின் செலுத்துமுதலுக்குச் சமமாக அல் லது அதிகமாக இருக்கின்றபோது, வங்கி நிறுமங்களின் சட்டத்தினுடைய பிரிவுகள் 11, மற்றும் 17 ஆகியவற் றில் சொல்லப்பட்டுள்ளவைகளைக் கருத்தில் கொள் ளாது, அவை தங்களுடைய அறிவிப்புச் செய்யப்பட்ட (declared) இலாபங்களில் (அதாவது, வழக்கமான மற் றும் அவசியமான ஒதுக்கீடுகளைச் செய்தபிறகு உள்ள இலாபங்களில்) குறைந்தது 20 சதவீதத்தை, அவற்றின் வெளியிடப்படுகின்ற காப்பு நிதிகளும், செலுத்துமுதலும் சேர்ந்து அவற்றின் வைப்புகளில் குறைந்தது 6 சதவீத அளவினை அடைகின்ற வரையில், அவற்றின் வெளி யிடப்பட்ட காப்பு நிதிகளுக்கு ஒதுக்கவேண்டும்.

(ii) வங்கிகளினுடைய காப்புநிதிகள் அவற்றினுடைய செலுத்து முதலுக்குச் சமமான அளவினை அடையாதபொழுது, அவை தங்களின் வெளிக்காட்டப்பட்ட (disclosed) இலாபங்களில் 20 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை,

(அ) காப்பு நிதிகள், குறைந்தது செலுத்துமுதலுக்குச் சமமாக உள்ளன, மற்றும்

(ஆ) மொத்த வைப்புகளுக்கு, செலுத்துமுதல் மற் றும் வெளியிடப்பட்ட காப்புநிதிகளின் விகிதம் குறைந்தது 6 சதவீதத்திலுள்ளது, என்கின்ற வரையிலும் தொடர்ந்து ஒதுக்கி வரவேண்டும்.

குறைந்த அளவு மூலதன நிதிகளின் விகிதமான 6 சத வீதத்தை, ஒவ்வோர் ஆண்டிலும் காப்புநிதிகளுக்குச் சேர்க்கப் படும் அதிகரிப்புத்தொகைகளின் மூலமாக அடைவதற்கு, பல

வங்கிகளுக்குச் சிலகாலம் ஆகக்கூடுமாதலால், எப்பொழுதெல்லாம் முடியுமோ அப்பொழுதெல்லாம், பிற்சேர்க்கை (Supplementary) நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஆளுநர் கருத்துரை வழங்கியுள்ளார். புதிய விடுப்புச் சந்தையில் (New Issue Market) உள்ள நிலவரங்களின் தேவையளவிற்கேற்ப, முதலீட்டாளர்களிடமிருந்து போதுமான ஊக்குவிப்பினைப் பெறுவதற்கு முடிந்தவையாகவுள்ள, சிறிய அளவு மூலதன நிதியினைக் கொண்டுள்ள வங்கிகள், மூலதனச் சந்தையை அணுகவேண்டும். பரிந்துரை செய்யப்பட்ட மற்றொரு நடவடிக்கை, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில், அழைக்கப்படாத மூலதனத்தின்மீது அழைப்புகளை விடுப்பதாகும். வங்கியியல் முறையில், மூலதன முதலீடுகளையும் எளிவரல் தன்மையையும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கை, நலிந்துள்ள நிறுவனங்களை, பலம் வாய்ந்தவற்றோடு ஒருங்கிணைப்பதற்கான முறை, வங்கி வைப்புகளைக் காப்பீடு செய்வதற்கான திட்டத்தின் தோற்றம் ஆகிய யாவும், வங்கி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொது மக்களுக்கு மட்டுமன்றி, இந்தியப் பொருளாதாரம் முழுமைக்கும் வரவேற்கப்படவேண்டிய முன்னேற்றங்களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலே கண்ட நடவடிக்கைகளின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள வலிமை, மூன்றாவது (ஐந்தாண்டு) த்திட்டத்தினால் அதிகரித்துள்ள தேவையின் நெருக்குப்பளுவைத் (impact) தாங்கிக் கொள்வதற்கு இந்திய வங்கிகளுக்கு உதவியளிக்கும் என்று நம்பப்படுகிறது.

வரவுச் செலுத்துகைகளை மாற்றல் செய்வதற்கான வசதிகள் புகுத்தீடு (Introduction of Credit Transfer Facilities)

இந்திய வங்கியியல் வரலாற்றில் மற்றொரு முன்னேற்றம், 1962ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியில் இந்திய ஸ்டேட் பாங்கினால் (State Bank of India) சிறப்பான, வரவுச் செலுத்துகைகளை மாற்றல் செய்வதற்கெனப் புகுத்தப்பட்ட ஒரு திட்டமாகும். சுருங்கக்கூறின், திட்டத்தினுடைய முக்கிய அம்சங்கள் வருமாறு: (i) இந்திய ஸ்டேட் பாங்கின் ஏதாவது கிளையில் வைப்புக் கணக்கு வைத்திருப்பவருடைய கணக்கிற்கு வரவு வைக்குமாறு அதனுடைய எந்தக் கிளையிலும் தொகைகள் செலுத்தப்படலாம்; (ii) இந்தப் பணி (சேவை), தனி ஆள் சேமிப்பு அல்லது நடப்புக் கணக்கு (அதாவது நிறுவனங்களின் கணக்குகளுக்கு இப்பணி கிட்டாது) வைத்துள்ள நபர்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடியதாகும்; (iii) தொகை, கணக்கு வைத்திருப்பவராலேயே செலுத்தப்படவேண்டியதாகும்; அவர் தாமே வங்கி அலுவலகத்திற்குச் செல்லவேண்டும்; (iv) தொகை ரொக்கமாகச் செலுத்தப்

படவேண்டியதாகும்; மற்றும் (v) தொகை ஒரு நாளைக்கு ரூ. 1000-க்கு அதிகமாக இருக்கக்கூடாது. இந்த வசதி இலவசமாகக் கிடைக்கக்கூடியதாகும். தனி ஆள் கணக்கினை வைத்துக்கொண்டு, தற்போதைக்கு ஊரைவிட்டு வெளியில் இருந்து கொண்டு, எங்கு அவர் ஏற்கெனவே கணக்கினை வைத்துள்ளாரோ அந்த ஸ்டேட் பாங்கினுடைய கிளை அலுவலகத்திலுள்ள அவருடைய கணக்கில் குறிப்பிட்ட தொகையை வைப்புச் செய்ய விரும்புகின்ற நபருக்கு உதவியளிப்பதற்காகவே இந்த வசதி, முக்கியமாக, ஏற்படுத்தப்பட்டது என்பது கவனிக்கப்படத்தக்கதாகும். ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு, கிளைகளுக்கிடையேயான மாற்றல்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இருந்தபோதிலும், திட்டம் பரீட்சார்த்த (Experimental) முறையிலேயே தொடங்கப்பட்டுள்ளது; ஆறுமாத காலத்திற்குப்பின்னர், அது, மறு ஆய்வு செய்யப்படவேண்டியதாகும். இந்திய ஸ்டேட் பாங்க் (இத்துறையில்) அளித்துள்ள தலைமையைத் தொடர்ந்து பாங்க் ஆப் இந்தியாவும், மிகவும் தளர்த்தப்பட்ட நிபந்தனைகளின் பேரில், ஒரு வரவுச் செலுத்துகை மாற்றல்கள் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. அவர்களினுடைய சிறப்பு அஞ்சல்வழி மாற்றல்கள் திட்டத்தின்படி, வாடிக்கையாளர்கள், ஒரு நாளில் வங்கியினுடைய ஏதாவது இரண்டு அலுவலகங்களுக்கிடையே, ரூ. 10,000 வரையிலான தொகைகளை மாற்றல் செய்யலாம். இதர சில வங்கிகளும் ஏறக்குறைய, தளர்த்தப்பட்ட நிபந்தனைகளோடு இத்துறையில் இறங்கியுள்ளன.

இந்த வசதிகள் அளிக்கப்பட்டுள்ள முறையும், அளவும் நூலின் 6ஆவது அத்தியாயத்திலுள்ள, ஆசிரியருடைய பரிந்துரைகளுக்கு ஏற்ப முழுக்க முழுக்க இல்லாவிட்டாலும், அவற்றினுடைய அனுபவத்தின் மூலம் நன்மையை அடைந்துள்ள வங்கிகள் நிபந்தனைகளைத் தளர்த்தக்கூடியவையாக இருக்கும் என்றும், இதர வங்கிகளும் அவைகளைப் பின்பற்றும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் வங்கிகள் அளிக்கின்ற அனுப்புகை வசதிகளில் பல இடர்ப்பாடுகள் உள்ளன; மற்றும், சில வேளைகளில், பொதுமக்கள், கால விரையம் தொடர்பாக மட்டுமன்றி, அனுப்புகையின் மீதான செலவு தொடர்பாகவுங்கூடப் பெருமளவு வசதிக் குறைவுகளுக்கு ஆளாகின்றனர் என்பது சொல்லத் தேவையில்லை.

யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா (Unit Trust of India)

முப்பது ஆண்டுகளுக்கும் முன்னதாக, இலண்டனின், முதலீடு பதிவுக் கம்பெனிக் குறிப்பேட்டில் (Journal of the Investment

Registry Co., London) எழுதி வந்த இந்த நூலின் ஆசிரியர், முதலீடுகள் சம்பந்தமான விடயங்களில் சாதாரண மக்களுக்குச் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களின் அறிவுரையை வழங்குவதற்காக, அதேபோன்ற நிறுவனங்களை நம் நாட்டில் தொடங்க வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்திருந்தார். முதலீடு செய்வதற்குத் தேவையான தரவுகளைச் (Data) சேகரிப்பது என்பது சாதாரண மனிதனுக்கு முடியக்கூடிய ஒன்று அன்று; இத்தகைய தரவுகள் இன்றிச் சரியான பங்குச்சான்றுச் சீட்டுகளைத் தெரிந்தெடுப்பது முடியாத காரியமாகும். உடல்நலம் சம்பந்தமான விடயங்களில் மருத்துவர் ஒருவரிடம் ஆலோசனை கோருவது ஒரு மனிதனுக்கு எவ்வளவு அவசியமானதோ, அதேபோல, முதலீடு (investment) செய்வது தொடர்பான காரியங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களை ஆலோசனை கேட்பது ஒரு சாதாரண மனிதனுக்கு அவசியமாகும்; நூலின் ஆசிரியர் இது பற்றி முதலீடு பதிவுக் கம்பெனியின் அதிகாரிகளோடு கலந்தாராய்ந்துள்ளார். முன்னாள் கவர்னர் ஜெனரல் ஆகவும், அப்போது இந்தியாவின் வைஸ்ராய் ஆகவும், அந்த நேரத்தில் மேலே சொல்லப்பட்ட கம்பெனியின் தலைவராகவும் இருந்த லார்டு ஹார்டிங் (Lord Harding), இந்தியாவிற்கு வருகை தந்தபோது, இத் திட்டம்பற்றிக் கலந்தாலோசிக்க, பம்பாய் அரசு இல்லத்தில் அவரைச் சந்திக்கும்படி ஆசிரியர் அழைக்கப்பட்டார். இத்திட்டம் லார்டு ஹாட்டிங் மனத்தில் நன்கு பதிந்துவிட்டபோதிலும், அந்த நேரம், ஒத்துழையாமை இயக்கம் இந்தியாவில் இருந்த காலமாதலால், இந்தக் காரியத்தில் மேற்கொண்டு செல்வது நல்லதன்று என்று அவர் கருதினார்.

இந்த நூற்றாண்டில், 1930 முதல் 1939 வரையிலான காலத்தில், காலம் சென்ற சர் கிலாசந்த் பிரேம்சந்த் (Kilachand Premchand) மற்றும் இதரச் சில நபர்களால் தொடங்கப்பட்ட இந்திய முதலீட்டு டிரஸ்ட் (Indian Investment Trust), மற்றும் டாடா-க்களால் (Tatas) தொடங்கப்பட்ட முதலீட்டு டிரஸ்ட் கார்பரேஷன் லிட். (Investment Trust Corporation Ltd.) போன்ற சில முதலீட்டு டிரஸ்டுகள் தோன்றின; ஆனால், அவை, வரிவிதிப்பிலிருந்து விலக்குப் போன்ற வசதிகளை அளிக்கமுடியாதவையாக இருந்தன; எனவே, அவை பொதுமக்களின் கவனத்தை அதிகமாகக் கவரவில்லை.

சாதாரண மக்களுக்கு, முதலீடு சம்பந்தமான காரியங்களில் அறிவுரை வழங்கவும், மற்றும் பொதுமக்களிடம் முதலீடு பற்றிய எண்ணத்தை எப்போதும் நிலைத்திருக்கும்படி செய்வதற்கும்,

சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஒரு நிறுவனம் இருக்கவேண்டுமென்பது நீண்டகாலமாக உணரப்பட்டு வந்த ஒன்றாகும்; இறுதியாக, இந்த எண்ணம், யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா அமைக்கப்பட்டதன்மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது; ஐயமின்றி, இந்த நிறுவனம், நாட்டினுடைய நிதியமைப்பிலுள்ள விலைமதிப்பற்ற, மற்றும் மாற்றப்படமுடியாத இணைப்புகளில் (links) ஒன்றாக இருக்கும்.

தன்னுடைய யூனிட்டுகளை (units), அநேகமாக எல்லா முக்கிய வங்கிகளினுடைய கிளைகள் என்ற பரந்த அளவிலான இணைப்புச் சங்கிலியின் மூலமாகவும், அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தரகர்களின் மூலமாகவும் சிறிய முதலீட்டாளர்களுக்கு விற்று, அவர்களிடையே முதலீடு செய்வதில் அக்கறையைத் தூண்டுவதை அது நோக்கமாகக் கொண்டுள்ளது; அஃது, எச்சரிக்கையாகவும், புத்திசாலிதனமாகவும் உள்ள சிறிய முதலீட்டாளருக்குப் பாதுகாப்பு, ஒரே சீரான வருமானம், எளிவரல் தன்மை ஆகிய மூன்று நன்மைகளையும் அளிக்கின்றது. முதலீடு செய்யப்பட்டுள்ள நிதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுமல்லாமல், சாதாரண நடுத்தர வகுப்பைச் சேர்ந்த தனிப்பட்ட முதலீட்டாளர்கள், பங்குகளையும் தகுந்த முதலீடுகளையும் தெரிந்தெடுக்கின்ற வேலையை, யூனிட் டிரஸ்ட் அமர்த்தியுள்ள சிறப்புத் தேர்ச்சியாளர்களிடம் விட்டுவிடுகின்ற நன்மையையும் பெற்றுள்ளனர்.

யூனிட் டிரஸ்ட், தான் அளிக்கக்கூடிய, வரிச்சலுகை, அதிகப்படியான பயன்கள், முதலீட்டினுடைய பாதுகாப்பு, நியாயமான வருமானம், எளிவரல் தன்மை ஆகியவற்றைக் கொண்டு, நிச்சயமாக, பங்குச் சந்தைகளிலுள்ள தொழில்நுட்பப் பிரச்சினைகள், முதலீட்டு நடவடிக்கைகளிலுள்ள இடர்ப்பாடுகள் ஆகியவை பற்றி அதிகமாக அறிந்திராத நடுத்தர வருமான வர்க்கத்தினர்களுக்கு, கவர்ச்சிகரமான ஒரு முதலீட்டு வகையென நிரூபணம் செய்யும்.

இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Development Bank of India)

நாட்டினைத் தொழில்மயமாக்குதல் என்னும் உணர்வு வளர்ந்து கொண்டே போகின்ற நேரத்தில், பெரிய தொழில் வளர்ச்சி, மற்றும் விரிவுபடுத்தும் திட்டங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான நீண்டகால மூலதனத்தின் அவசியம் உண்மையில் உணரப்பட்டது. இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு (Industrial Finance Corporation of India), இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டு கூட்டுரு (Industrial Credit and Investment Corpora-

tion of India), மாநில நிதிக் கூட்டுருக்கள் (State Finance Corporations) போன்ற நிறுவனங்களும், மற்றும் வணிக வங்கிகளுங்கூட, அவற்றின் திறமைக்கேற்றமுறையில், அதிக அளவில் கால நிதியினை (term finance) வழங்கித் தங்களுடைய பணியைச் செய்துவந்தபோதிலுங்கூட, அவற்றில் ஒன்றுகூட, அதிக அளவில் முதலீடு தேவையாகவும், அதனைத் திருப்பித் தருவதற்கு ஒப்பீட்டடிப்படையில் நீண்டகாலத்தை எடுத்துக் கொள்ளக்கூடியனவாகவும் உள்ள தொழில்களுக்கு நீண்டகால நிதியை அளிப்பதை அதிகமாகச் செய்யமுடியவில்லை. தொழில் நிதி அளிப்பதற்கான வசதிகளில் உள்ள இந்தக் குறைபாடு, இப்போது தோற்றுவிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட முதலாக ரூ. 50 கோடியைக் கொண்டுள்ள, மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் முழுமையாக உடைமை கொள்ளப்பட்டுள்ள, அதனுடைய துணை நிறுவனமான இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியால் சரிசெய்யப்படும்.

இந்த வங்கி நீண்டகாலத்திற்கும், பரந்த அளவிலும் ஆன வாய்ப்பினைக் கொண்டிருக்கும். முதலாவது, அவை பொதுத் துறையில் இருந்தாலுஞ்சரி, தனியார் துறையில் இருந்தாலுஞ்சரி, தொழில் வளர்ச்சிக்கு நிதி வழங்குவது தொடர்பான எல்லா நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் அது ஒருங்கிணைக்கும். தொழில் நிறுவனங்களுக்கு, இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு, மாநில நிதிக் கூட்டுருக்கள், அட்டவணையிலிடப்பட்ட வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் அல்லது இதர நிதி நிறுவனங்கள், ஆகியவற்றால் அளிக்கப்பட்டுள்ள ஏதாவது கடன்கள் அல்லது முன்பணங்கள் ஆகியவைகளை மறுநிதியீடு (refinance) செய்வதன்மூலம், மூன்றாண்டு முதல் 25 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தப்படவேண்டிய கடன்களை, அது, அவைகளுக்கு அளிக்கின்றது. ஆறுமாதங்களுக்குக் குறையாத காலம் முடிவடைந்தவுடன், மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்படுவதற்கான ஏற்றுமதிக் கடன் வசதிகளை அளிக்கும் நிறுவனங்களுக்குங்கூட, மறுநிதியீட்டு வசதிகள் கிடைக்கக்கூடியவையாகும். அவசியமானால், தொழில்களுக்கான மறுநிதியீட்டுக் கூட்டுரு (The Refinance Corporation for Industry), இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்குப் பின்னொரு சமயத்தில் மாற்றப்படும்.

ஏதாவது தொழில் நிறுவனத்திற்குக் கடன் அல்லது வேறு விதமான வசதி ஏதும் வணிகவங்கிகளிடமிருந்து கிடைக்கவில்லையெனில், நேரடியாகக் கடன்களை அளித்து, அல்லது பங்குகள்,

பிணைமுறிகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்கள் ஆகியவற்றின் விடுப்புகளுக்குப் பணம் வழங்கி, அல்லது அவற்றின் பொறுப்பு களுக்குப் பொறுப்புறுதியளித்து இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, அவற்றின் உதவிக்கு வரும். இதர நிறுவனங்களைப் போலல் லாது, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, தொழில்களுக்கு நிதி வழங்குவதைத் தவிர, மேம்பாட்டு நடவடிக்கைகள் சிலவற்றை யும் செய்கின்றது; பங்குத் தொகுப்புகள், பங்குகள், பிணைமுறி கள் அல்லது கடனீட்டுப் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குதல் அல்லது அவைகளில் நிதியீடு செய்வதன்மூலம், மற்றும் அவற்றி னுடைய ஒப்புறுதிப் பொறுப்புகளுக்குப் பொறுப்புறுதியளிப்பதன் மூலம், சிறப்பு நிதி நிறுவனங்களுக்கு வலிமையூட்டுவதோடு மட்டு மல்லாமல், புதிய துறைகளில் ஈடுபட்டு ஆக்கச்சார்பான, மற்றும் புனைவாற்றல் மிக்க முயற்சிகளுக்குப் புதிய தரநிலைப்பாடுகளை (standards) ஏற்படுத்தும்.

அதனுடைய பெருமளவிலான மூலவளங்கள், மற்றும், ஏதா வது புதிய திட்டத்திற்கு நிதியிடுவதற்குரிய திறமை மற்றும் விருப்பம் ஆகியவை தொடர்பாகவோ, எடுத்துக் கொள்ளப்படக் கூடிய பிணையத்தினுடைய தன்மை மற்றும் குணநலன்கள் ஆகியவை தொடர்பாகவே தடைப்படுத்துகின்ற நிபந்தனைச் சரத்துகள் ஏதும் இல்லாமை, ஆகியவற்றோடு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு அடிப்படையான, ஆனால் இதர நிறுவனங்களால் நிதியிடப்படு வதற்கு வாய்ப்பில்லாத, வழக்கத்திற்கு மாறாக அதிக அளவிலான அல்லது குறிப்பாக குறைந்த அளவு வருவாய் அளிக்கின்ற முத லீடுகளுக்கு நிதியிடுவதற்கு, அதற்கு வசதியாக, சிறப்பு வளர்ச்சி உதவி நிதி (Development Assistance Fund) என்ற ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. அது இனிமேல்தான் தொழில் நடவடிக்கை களைத் தொடங்க வேண்டியுள்ளது; ஆனால், தான் கொண்டுள்ள பரந்த மூலதன அடிப்படை மற்றும் பெருமளவிலான தன்னுரிமை (freedom) ஆகியவற்றைக் கொண்டு, இந்த வங்கி, நாட்டில் நடுநாயகமான (pivotal) ஒரு நிதி நிறுவனமாகவும், தகுதியில் மற்ற நிதி நிறுவனங்களைவிடச் சிறந்ததாகவும் ஆகக்கூடியதாக வுள்ளது; அதனுடைய பணிகள் இந்தியத் தொழிலுக்கு விலை மதிப்பிடமுடியாதவையாக ஆகக்கூடியவை.

முடிவு

(Conclusion)

மேலே சொல்லப்பட்டவை யாவும், அதிகபட்சம் பொதுச் சமூகத்திற்குப் பயன்படத்தக்க முறையில் இருக்கவேண்டும் என்பதற்காகத் தற்காலத்தில் கிடைக்கக்கூடிய எல்லா மூலவளங்களையும் வசதிகளையும், தம்முடைய வாடிக்கையாளர்களின் நன்மைக்காக, அவர்களின் முன்வைப்பதற்கு, பெருமளவு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கும் கூட்டுப்பங்கு வங்கியால் செய்யப்படுகின்ற, எண்ணிக்கையற்ற பணிகளின் சுருக்கமான தொகுப்புரையேயாகும். தற்கால வங்கி, சொல்லப்போனால், வாடிக்கையாளர் எந்த நிலையிலுள்ளவராக இருந்தாலும், அவருடைய சிறந்த நண்பர், தத்துவஞானி, மற்றும் வழிகாட்டுபவர் என்று நாம் கூறினால் மிகைப்படுத்திக் கூறப்பட்டதாக அது ஆகாது.

நூற்றாண்டு காலங்களாக உள்ள, நாட்டினுடைய கலாசார மற்றும் வரலாற்று நோக்கில் பார்க்கப்போனால், அது புதிராகத் தோன்றினாலுங்கூட, பொருளியல் கருத்தில், தொழில் மற்றும் வணிக வளர்ச்சிக்கான குறிப்பிடப்படும்படியான அளவில், பயன்படுத்திக் கொள்ளப்படுவதற்குத் தயாராக உள்ள மூலவளங்கள் மற்றும் வெளிக்கொணரப்படாத சக்திகள் ஆகியவற்றைத் தன்னகத்தே வைத்துக்கொண்டு, இந்தியா, இன்னும் ஒரு பின்தங்கிய நாடாகவே உள்ளது; தேசிய அரசு, மற்றும் குடி அரசு அமைப்பிலான முற்போக்கு நிறுவனங்கள், ஆகியவற்றின்கீழ், வேகமாகச் செல்லவேண்டிய பொருளாதார வளர்ச்சியின் தொடக்கப்பணியான, நாட்டினுடைய மூலதனம் மற்றும் கடன் மூலவளங்கள் ஆகியவற்றை ஒன்று திரட்டி, அங்கீகரிக்கப்பட்டுள்ள வழிகளில், உயர்ந்த அளவு நன்மையைப் பெறுகின்ற வகையில், அவற்றை வழிநடத்திச்செல்கின்ற மிகவுயர்ந்த பணியில், நாட்

டுடைமையாக்கப்பட்டுள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் ஆதரவின் கீழ், நம்முடைய வங்கிகள் கொண்டுள்ள பங்கினைவிட வேறு எவரும் ஒரு சிறந்த அல்லது செயற்பாடு நிறைந்த பங்கினைக் கொண்டிருக்கமுடியாது என்று கூறுகின்றபொழுது, நியாயமற்ற கோரிக்கையெதனையும் எழுப்பவில்லையென்பதில் நமக்கு ஐயமில்லை. எனவே, அதனை என்னவாக ஆக்கவேண்டுமென்று அதனுடைய வங்கிகள் விரும்புகின்றனவோ அதுவாக இந்தியா இருக்குமென்று கூறுவது மிகையாகாது.

பின்னிணைப்பு—ஆ

(Appendix B)

படிவம் எண். 14
(நமூனா எண். 14)

கணக்குத் திறப்பு படிவம், மற்றும், பொறுப்புரிமைக் கணக்குகளுக்கு அதிகாரம்

(Account Opening Form And Authority For Turst Accounts)

பி/எ. எண்.____________ தேதி __________ 19

பெறுநர்

மேலாளர்

____________________ வங்கி லிமிடெட்.

அன்புள்ள ஐயா,

தங்களுடைய வங்கியில் ____________ என்ற பெயரில் ஒரு நடப்புக் கணக்கினைத் தயவு செய்து திறக்கவும். கணக்கு __________ தேதியில் பதிவு செய்யப்பட்டு, __________ தேதியிடப்பட்ட பொறுப்புரிமைப் பத்திரத்தால் அதிகாரமளிக்கப் பட்டுள்ள பொறுப்புரிமையர்கள்* ____________ ஆல் இயக் கப்படும்.

சொல்லப்பட்ட பொறுப்புரிமைப் பத்திரத்தின் நகல், உரிய முறையில் சான்றளிக்கப்பட்டு இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. வருங்காலத்தில் கணக்கினை இயக்குகின்றவர்களின் பெயர்களில் மாற்றமேதும் தேவையாயிருந்தால், அது பொறுப்புரிமையர்களின் அவையினுடைய தீர்மானம் ஒன்றினால் நிறைவேற்றப்பட்டு அது பற்றி எழுத்துமூலம் எல்லாப் பொறுப்புரிமையர்களாலும் உங் களுக்குத் தகவல் தரப்படும்; இத்தகைய நபரை, கணக்கினை இயக்குவதற்குத், தாங்கள் அனுமதிக்கவேண்டும்.

---

* ''எல்லோராலும்'', ''யாராவது ஒருவர்'', ''யாராவது இருவர்'' அல்லது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு.

இத்தகைய கணக்குகளை நடத்திச் செல்வது தொடர்பாக, தற்போது செயலில் உள்ள, வங்கியின் விதிமுறைகளைக் கடைப் பிடிப்பதற்கும் அவைகளால் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதற்கும் தாங் கள் ஒப்புதல் அளிக்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

முழுப்பெயர்கள் தொழில்கள் மற்றும் முகவரிகள்

__________	கையொப்பம்	__________
__________	,,	__________
__________	,,	__________
__________	,,	__________
__________	,,	__________
__________	,,	__________
__________	,,	__________

அறிமுகப்படுத்தியவர் ____________________

[திருத்தங்கள், எல்லாக் கையொப்பதாரர்களாலும் முதல் எழுத் துக்கள் இடப்படவேண்டும் (initialled)]

மாதிரிக் கையொப்பங்கள்	மேலாளர் அல்லது கணக்கர் முதல் எழுத்துக்கள்
__________	__________
__________	__________
__________	__________

செல்லேடு விடுக்கப்பட்டது	
காசோலைப் புத்தகம் விடுக்கப்பட்டது	
சி/ஆர் பெறப்பட்டது	
தொடக்க வைப்பு	
நிலையான அறிவுறுத்தல்கள்	

படிவம் எண். 15
(நமூனா எண். 15)

செலுத்துச் சீட்டுப் படிவம்
(Form of Paying-in-Slip)

______ 19

______

______

______ என்பவர்

கணக்கில் வரவுக்கு

தொகை ரூபாய் பெற்றுக்கொள்ளப்பட்டது.

ரூ. ______

ரொக்க கணக்கர் ______

வங்கி லிமிடெட் பேரேட்டுப் பக்கம் எண். ______

	ரூ.	பை.
ஒவ்வொன்றும் ரூ. 10,000ல் ஆன தாள் பணம்		
,, ,, 1000 ,,		
,, ,, 500 ,,		
,, ,, 100 ,,		
,, ,, 50 ,,		
,, ,, 10 ,,		
,, ,, 5 ,,		
தங்கம்		
வெள்ளி		
செம்பு		
(பின்புறம் கண்ட விவரப்படி காசோலைகள்)		
மொத்தம் ரூ. ...		

ரொக்க கணக்கர்

______ வங்கி லிமிடெட்

______ 19

______

என்பவர் கணக்கில் வரவுக்கு

தொகை ரூபாய் செலுத்தப்பட்டது

செலுத்தியவர்

குறிப்பு:- கணக்கில் வரவு கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் இன்னும் வசூலாகாமல் உள்ள வரவுகளுக்கு எதிராக எழுதப்படும் காசோலைகள் மீதான செலுத்துகையைத் தள்ளிப்போடுவதற்கான தன்விருப்புரிமை அதிகாரத்தை வங்கி தன்னிடம் வைத்துக்கொள்கிறது என்று வாடிக்கையாளர்கள் தெரிவிக்கப்படுகின்றனர்.

மேலேயுள்ள நமுனாவின் மறுபுறம்
காசோலைகள் பற்றிய விவரம்

எழுதப்பெற்றவர்	ரூ	பை

படிவம் எண் 16
(நமூனா எண். 16)

ஒரு வாடிக்கையாளரின் மதிப்பு நிலை பற்றிய மறைவடக்கமான விசாரணை

(Confidential Enquiry as to The Status of a Customer)

________________ வங்கி லிமிடெட்.

எண் __________ தேதி __________ 19____

பெறுநர்

____
____
____

அன்புள்ள ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவருடைய வருமானம், செல்வாக்கு, நற்பெயர் ஆகியவைகள் பற்றிய ஒரு கருத்தினைக் கொடுத்துத் தாங்கள் உதவுவீர்கள் என்றால் நாங்கள் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவர்களாவோம்.

தாங்கள் கொடுத்து உதவும் எந்தத் தகவலும் முற்றிலும் தனிமனிதனுக்குரியதாகவும் மறைவடக்கமானதாகவும் கருதப்படும்.

பெயர் ______________________
பதவு ______________________
முகவரி ______________________

தங்கள் உண்மையுள்ள,

____
மேலாளர்.

படிவம் எண். 16(அ)

(நமூனா எண். 16(அ))

மறைவடக்கமான விசாரணை ஒன்றிற்கு மறுமொழியளிக்கும் நமூனா

(Form of Reply to a Confidential Enquiry)

தனிப்பட்டது மற்றும் மறைவடக்கமானது

________________ வங்கி லிமிடெட்

____

எண் ________ தேதி ________ 19__

பெறுநர்

____

____

____

அன்புள்ள ஐயா,

தங்களுடைய ____________ தேதியிட்ட கடிதத்தில் தாங்கள் விரும்பியபடி, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கை, மிகவும் மறைவடக்கமானதாகவும், மற்றும் இந்த வங்கி அல்லது அதனுடைய அதிகாரிகள் யார்மீதும் யாதொரு பொறுப்பு அல்லது பொறுப்புறுதியும் இன்றி, தங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

இந்தக் கடிதம், எங்களுடைய அறிக்கை தங்களால் பிறருக்கு அனுப்பிவைக்கப்படும் தறுவாயில், இந்த வங்கியினுடைய பெயர் வெளியிடப்படமாட்டாது என்ற நிபந்தனையின்பேரில் அனுப்பி வைக்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

____

மேலாளர்.

படிவம் எண். 16(ஆ)

(நமூனா எண். 16(ஆ))

________________ வங்கி லிமிடெட்

முகவரி ____________

தேதி ____________

A. B. கம்பனி லிமிடெட்

________________ சம்பந்தமாக

இது ரூ. ____________ அனுமதித்த முதலுடன் ________ ல் தோற்றுவிக்கப்பட்ட ________ என்ற ஒரு வரையறுக்கப்பட்ட தனி நிறுமம் ஆகும்.

________________________ ஆகியோர் இதனுடைய இயக்குநர்களாவர்; அவர்களின் துறையில் மிகவும் அனுபவம் வாய்ந்த ஆட்கள் என்று கருதப்படுகின்றனர்.

நிறுமம் நற்பெயருடன் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது; மற்றும் அதனுடைய சாதாரண தொழில் நடவடிக்கைகளைப் பொருத்தமட்டில் நம்பகமானதென்று கருதப்படுகின்றது.

இது ஒரு வேண்டுகோளுக்காகச் செய்யப்பட்ட, முற்றிலும் மறைவடக்கமான மறுமொழியாகும், என்றும், ஏதாவது நபர், கூட்டுவணிக நிறுவனம் அல்லது கூட்டுருவினுடைய பொறுப்பு, அல்லது செல்வாக்கு பற்றிய, அல்லது ஏதாவது பிணையங்களின் மதிப்பு பற்றிய, இந்த வங்கியினுடைய அல்லது அதனுடைய ஏதாவது அதிகாரிகளினுடைய அறிக்கை, ஒரு கருத்து என்ற முறையில்தான் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு இந்த வங்கியை அல்லது அதனுடைய ஏதாவது அதிகாரிகளை எந்த வகையிலும் பொறுப்பாளியாக ஆக்கமுடியாது என்றும் எல்லோரும் தெரிவிக்கப்படுகின்றனர்.

படிவம் எண். 17

(நமூனா எண். 17)

இரசீது படிவம் இணைக்கப்பட்டு, காசோலைப் புத்தகத்தை உள்ளடக்கிய கடித படிவம்

(Form of Letter Enclosing Cheque Book With Form of Receipt Attached)

________________ வங்கி லிமிடெட்

தேதி ____________

அன்புள்ள ஐயா,

__________ தேதியிட்ட தங்களின் கடிதத்தில் விரும்பிய படி, __________ எண்களைக் கொண்டுள்ள காசோலைப் புத்தகத்தைத் தங்களுக்கு, நாங்கள் தனியாக அனுப்பியுள்ளோம்; மற்றும் தங்களால் புத்தகம் பாதுகாப்பாக பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்காக, அது பெறப்பட்டதை, கீழேயுள்ள நமூனாவில், தாங்கள் ஒப்புக்கொண்டீர்களென்றால், நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

தங்கள் உண்மையுள்ள,

__________ வங்கி லிமிடெட்டுக்காக

____

மேலாளர்.

அறிவிப்பு : அவைகளைப் பயன்படுத்துவதற்கு முன்னர், காசோலைப் புத்தகத்தினுடைய இதழ்களை எண்ணிக்கொள்ளுமாறு வாடிக்கையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேதி ______________

பெறுநர் ______________ வங்கி லிமிடெட்

அன்புள்ள ஐயா,

______________ தேதியிட்ட தங்களின் கடிதத்தை நான் பெற்றுக் கொண்டேன்; மற்றும் தனியாக அனுப்பப்பட்ட காசோலைப் புத்தகம் சரியாகக் கைக்கு வந்து சேர்ந்துள்ளது என்பதைத் தங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

எண் ______________ ______________

படிவம் எண். 18

(நமூனா எண். 18)

வருங்காலத்தில் வாடிக்கையாளர்களாக ஆகக்கூடியவர்களுக்கான சுற்றுக் கடிதங்களின் மாதிரிகள்*

(Specimens of Circular Letters to Prospective Customers)

லெமன் கோவின் முதன்மை வங்கி

(The First Bank of Lemon Cove)

"மனிதர்கள் மற்றும் பணம் ஆகிய இருவரும் சுறுசுறுப்பாக இருக்கும்பொழுது அவர்களின் சிறந்த தன்மையில் உள்ளனர்"

("Both men and money are at their best when busy")

நாட்டினுடைய ரொக்கப் பணத்தில் $ 300,000,000க்கும் மேல், பைகளில் எடுத்துச் செல்லப்படுகின்றன அல்லது, பழைய பின்னல் காலுறைகள், தகரக் குவளைகள், மெத்தைகள் மற்றும் இதர மறைத்து வைக்கும் இடங்கள் ஆகியவைகளில் இரகசியமாக வைத்திருக்கப்படுகின்றன.

அது பயனில்லாமல் இருக்கின்ற பணமாகும்.

அரசு கடனுறுதிச் சீட்டுகளில் முதலீடு செய்யப்படும் இப்பணத்தில் ஒரு சிறு பகுதிகூட, அவைகளுக்குச் சரிசமமாக திரும்பப் (பணத்தைக்) கொண்டுவரும் வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டால், நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் பயனை அளித்து, தொழிலுக்குப் புதிய ஊக்கத்தினை அது கொடுக்கும்.

உங்கள் பணத்தை பயனற்று வீணாக இருக்கவிடாதீர்கள்.

தங்கள் உண்மையுள்ள,

____

துணைத் தலைவர்

---

* இக்கடிதங்கள், டபிள்யூ. ஆர். மோர்ஹவுஸ் மற்றும் எப். எ. ஸ்டீர்ன்ஸ் ஆகியோரின் "திருத்தப்பட்ட வங்கிக் கடிதங்கள்" என்பதிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

படிவம் எண். 18(அ)

[நமூனா எண். 18(அ)]

பர்ஸ்ட் நேசனல் பாங்க் ஆப் ரெட்லேண்ட்ஸ்

திரு. வி. ஜே. ரோவான்,
827, டார்வின் ஏவ்.,
ப்ளின்ட், மிச்.

அன்புள்ள ஐயா,

எப்படியாவது, ஏதோ ஒரு நாள் நம்மில் ஒவ்வொருவரும், நம்முடைய அன்றாட உணவு நம்முடைய அன்றாட முயற்சிகளில் இருந்து மட்டுமே முற்றிலும் வருவதில்லை என்பதையும்,—ஒரு வருவாயைக் கொண்டுவருகின்ற ஒரு பணத்தை முதலீடு செய்யப்பட்டுள்ளது, அந்த வருவாயிலிருந்து நாம் பணத்தை எடுத்துக் கொள்ளலாம் என்பதையும் உணரக்கூடும்.

நம்முடைய மனத்தின் ஆழத்தில், எப்படியாவது என்பது பணத்தைச் சம்பாதித்து அதனை ஒழுங்காகச் சேமிப்பதுதான் என்பதனையும், நாம் அறிவோம், மற்றும் அந்த ஏதோ ஒரு நாள், நாம் ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தினாலன்றி ஒருபோதும் வராது.

இப்போது சேமிக்கத் தொடங்குவதற்கு, ஏன் நீங்கள் இப்போது முடிவு செய்யக்கூடாது?

முடிந்த ஒவ்வொரு வழியிலும் நாங்கள் உங்களுக்கு உதவி புரிவோம்.

வைப்புச் செய்வதற்கு நீங்கள் வைத்துள்ள எவ்வளவு தொகையும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும். ஆண்டொன்றிற்கு...சதவீதத்தில் வட்டியைக் கூட்டி உங்கள் சேமிப்பு பெருகுவதற்கு நாங்கள் உதவுவோம்.

உங்களுக்குக் கிடைக்கக்கூடிய முதல் வாய்ப்பில் வங்கிக்கு வந்து அது ஒரு டாலருக்கு ($ 1) மட்டுமே இருந்தாலுங்கூட, ஒரு சேமிப்புக் கணக்கினைத் திறக்க உங்களால் முடியுமா?

தங்களின் உண்மையுள்ள,

____

துணைத் தலைவர்.

படிவம் எண். 18(ஆ)

[நமூனா எண். 18(ஆ)]

பர்ஸ்ட் பாங்க் ஆப் ரெட்லேண்ட்ஸ்

ஏப்ரல் 23, 1922.

திரு. ஜே. வி. ரோவான்,
827, டார்வின் ஏவ்.,
ப்ளிண்ட், மிச்.

"சிறிது காலம் கழித்து"

அன்புள்ள ஐயா,

"சிறிது காலம் கழித்து", சேமிக்கத் தொடங்கலாம் என்று அநேக மக்கள் நினைக்கின்றனர். அதற்கிடையில், செலவழிக்கின்ற பழக்கத்தை அவர்கள் தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றனர்.

தற்போது தாங்கள் செலவழிக்கின்ற பணம் சமீபத்திய எதிர் காலத்தில் தங்களை வசதி படைத்தவராக ஆக்கக்கூடியது அல்ல; இப்போதும் மற்றும் நீங்கள் சம்பாதிக்கின்ற ஆண்டுகளின் போதும் நீங்கள் சேமிக்கின்ற பணம்தான் அவ்வாறு உங்களை ஆக்கக் கூடியதாகும்.

சேமிப்பு, உண்மையில் வெற்றிகரமானதாக இருக்கும் வகையில் பழக்கப்படுத்தப்படவேண்டும் என்பதை அனுபவம் காட்டியுள்ளது. ஒரு பழக்கமாக ஏற்படுத்தப்பட்டவுடன், அது எளிதானதாகின்றது.

இந்த வங்கி, பலவகையான சேமிப்புத் திட்டங்களையும் எடுத்துக்கூறி, சேமிப்புச் செய்வதற்குத் தங்களுக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சியடையும்—இத்திட்டங்கள்யாவும் எங்களுடைய வங்கி வைப்பாளர்களால் வெற்றிகரமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

தாங்கள் சந்திப்பதற்கு அன்பு கூர்ந்தவராக இருப்பின் வங்கியின் எந்த அதிகாரியும் தங்களுடன் பேசுவதற்கு மகிழ்ச்சியுடையவராக இருப்பார்.

தங்கள் உண்மையுள்ள,

____

மேலாளர்.

படிவம் எண். 19

(நமூனா எண். 19)

காசோலைகள் திருப்பப்பட்டதற்கான குறிப்பு
(Cheque Returned Memo)

அனுப்புநர் ____________ லிட். (பம்பாய்) தேதி ________
பெறுநர் __________________________
காசோலை எண். __________ ரூ __________ க்கானது ________
வது எண் காரணத்திற்காக திரும்ப அனுப்பப்படுகிறது.

(1) ______________ பெறுபவரின் மேலெழுதல் ஒழுங்கற்றது/முழுமையாக இல்லை/தெளிவாக இல்லை. வங்கியினுடைய உறுதியளிப்பின்பேரில் பணம் செலுத்தப்படும்.

(2) ______________ பெறுபவரின் மேலெழுதல் தேவை, அல்லது, "தேவையாயுள்ள ______________ பெறுபவரின் மேலெழுதல் பொறுப்புறுதி செய்யப்படுகின்றது" என்று வங்கி சான்றளிப்பதன்பேரில் பணம் செலுத்தப்படும்.

(3) ______________ பெறுபவரின் தாய்மொழியிலுள்ள மேலெழுதல் (அ) வங்கியினுடைய பொறுப்புறுதி, (ஆ) பொறுப்புறுதி செய்யப்பட்ட மொழி பெயர்ப்பு ஆகியவைகளைத் தேவையாய் உள்ளது.

(4) பெறுபவருடைய கட்டை விரல் கீறல் (அ) குற்ற நடுவர் ஒருவரால் அவருடைய நீதிமன்ற முத்திரையின் கீழ் சான்று பகரப்படவேண்டும், (ஆ) வங்கியினுடைய அதிகாரி ஒருவருடைய முன்னிலையில் வைக்கப்படவேண்டும்.

(5) காசோலையின் தொகை ______________ன் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது என்று தயவு செய்து சான்றளிக்கவும்.

(6) எழுதியவரின் கையொப்பம் (அ) வேறுபடுகின்றது (ஆ) தேவையாகவுள்ளது (இ) முழுமையாக இல்லை.

(7) செலுத்துகை, எழுதியவரால்/______________ஆல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(8) ______________ல் உள்ள திருத்தம், எழுதியவரின் முழுக் கையொப்பத்தையும் தேவையாக உள்ளது.

(9) கையொப்பமிடுவதற்கு, எழுதியவருக்களிக்கப்படும் அதிகாரம் பெறப்படவில்லை.

(10) ______________க்குச் சாதகமாக உள்ள வக்காலத்தார் உரிமை எங்களுடைய ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(11) (காசோலை) சிதைந்துள்ளது. வங்கியின் பொறுப்புறுதியின் பேரில் பணம் செலுத்தப்படும்.

(12) (அ) எழுத்துக்களிலும், எண்களிலும் உள்ள தொகை வேறுபடுகின்றது, (ஆ) பின்தேதி இடப்பட்டுள்ளது, (இ) நாள் கடந்தது (out of Date), (ஈ) தேதி ஐயுறத் தக்கது, (உ) ஒழுங்கற்ற முறையில் எழுதப்பட்டுள்ளது, (ஊ) எழுதியவர் இறந்துவிட்டார், (எ) கணக்கு மூடப்பட்டது, (ஏ) கணக்கு கிடையாது, (ஐ) காசோலை புறம்பான விசயங்களைக் கொண்டிருக்கக்கூடாது.

(13) ஏற்பாடு செய்யப்பட்ட தொகைக்கு அதிகமானது; வரவேண்டியவை வசூலாகவில்லை } (மீண்டும் ______ தேதியில் முன்னிடப் படலாம்)

(14) (அ) செலுத்தத் தேவையான முழுத்தொகை பெறப்படவில்லை, (ஆ) ஏற்பாடு செய்யப்படவில்லை, (இ) எழுதியவரைப் பார்க்கவும், (ஈ) நிதி போதுமானதாக இல்லை.

(15) (அ) கீறலிடப்பட்ட காசோலை; ஒரு வங்கிமூலம் முன்னிடப்படவேண்டும், (ஆ) காசோலை இரண்டு வங்கிகளுக்குக் கீறலிடப்பட்டுள்ளது.

(16) (அ) பத்துப்பைசா வருவாய் (தபால்) தலை தேவை, (ஆ) கணக்கின் பெயர் தேவையாக உள்ளது.

(17) தீர்வக முத்திரை (அ) தேவை, (ஆ) தெளிவாக இல்லை, (இ) ______ வங்கியினுடையது, நம்பகமான அத்தாட்சியின் கீழ் ரத்து செய்யப்படவேண்டும்.

(18) அறிவுரை பெறப்படவில்லை.

(19) தொகை______ பெறுபவர் பெயர் ______ ______ } அறிவுரையில் உள்ளதில் இருந்து வேறுபடுகின்றது.

(20) ______ல் செலுத்தப்படவேண்டியது (வசூலுக்கு/மாற்றல் செய்யப்படுவதற்கு தயவு செய்து பணம் செலுத்துமிடத்தில் முன்னிடவும்)

(21) வசூலிக்கும் வங்கியினுடைய சான்றிதழ் தீர்வு செய்யும் வங்கியால் உறுதி செய்யப்படவேண்டும்.

(22) ______

(23) ______

கணக்கர்.

படிவம் எண். 20

(நமூனா எண். 20

கடன் பெறுதற்கான விண்ணப்பம்

(Application for Advance)

கிளை......மாக்டன்-ஆன்-சீப் தேதி.......... 19...

வாடிக்கையாளரின் பெயர்......சார்லஸ் ரிசர்ட் ரோ

விண்ணப்பதாரரின் முகவரி மற்றும் தொழில் பற்றிய விவரங்கள்... } ...80, ஹைரோடு, மாக்டன், ஐயர்ன்மாங்கர்,

வாடிக்கையாளரின் பொது குணவியல்பு.....நடுத்தர வயதுடையவர் மற்றும் திறமையான தொழில் செய்வோர்.

கணக்கு திறக்கப்பட்ட தேதி...ஜூலை, 1944.

அறிமுகப்படுத்தப்பட்டது...ஹென்றி டோ, மைத்துனர்.

வங்கியோடு வேறு ஏதாவது தொடர்பினை
அவர் கொண்டுள்ளாரா?...அவருடைய மைத்துனர்கள் சிறந்த கணக்குகளைக் கொண்டுள்ளனர்.

கடன் தேவைக்குக் குறிப்பிடப்படும் காரணம்..... சமீபத்தில் திருமணம் செய்துகொள்ளப்போகின்ற தன்னுடைய மகளுக்கு, 90, எல்ம் தெருவில் உள்ள வில்லங்கமில்லாச் சொத்தினை வாங்குவதற்கு.

முன்மொழியப்பட்டுள்ள பேரங்கள்......வங்கி வீதத்திற்குமேல் 1%......குறைந்தது 5%......கழிவு ஆண்டுக்கு £10:10.

கடன்	தற்போது உள்ளது	முன்மொழியப்பட்டுள்ள அதிகரிப்பு	மொத்தம்
மாற்றுச்சீட்டுக்கள் மற்றும் கடனுறுதிச் சீட்டுக்கள் ஆகியவைகளைக் கழிவு செய்தது ...	இல்லை	இல்லை	இல்லை
அதிகப்பற்றுக்கள் ...	இல்லை	£1,000	£1,000
கடன்	இல்லை	இல்லை	இல்லை
மொத்தம் ...	இல்லை	£1,000	£1,000

பொறுப்புறுதிகள் மற்றும் மேலெழுதல்கள் ஆகியவைகள் மீதான எதிர்காலப் பொறுப்பு ......ஹென்றி டோவிற்காக கழிவு செய்யப்பட்ட வியாபார மாற்றுச்சீட்டுக்களின் மீது £120.

பிணையங்கள்	தற்போதுள்ள கடன்களுக்கு	அதிகரிப்பிற்கு முன்மொழியப்பட்டுள்ள பிணையங்கள்	மொத்தம்
மாற்றுச்சீட்டுக்கள் மற்றும் கடனுறுதிச் சீட்டுக்கள் ஆகியன கழிவு செய்யப்பட்டது ...	இல்லை	இல்லை	இல்லை
பங்குமாற்று நிலைய பிணையங்கள் ...	இல்லை	£500	£500
பொறுப்புறுதிகள் அல்லது இதர துணைப் பிணையங்கள் ...	இல்லை	இல்லை	இல்லை
குத்தகை, வில்லங்கமில்லா, அல்லது பகரமாகவுள்ள நிலம் மற்றும் கட்டடம்...	இல்லை	£800	£800
சில்லறைகள் ...	இல்லை	இல்லை	இல்லை
மொத்தம் ...	இல்லை	£1300	£1300

வாடிக்கையாளரின் கணக்குபற்றிய விவரங்கள்

வைப்புக் கணக்கு			நடப்புக் கணக்கு			
உயர் அளவு	குறைந்த அளவு	சராசரி	உயர் அளவு	குறைந்த அளவு	சராசரி	புரள்வு
£670	£320	£480	£320	£120	£270	£3,090

இப்போது அளிக்கப்பட்டுள்ள பிணையங்களின் விவரங்கள்

1. மாற்றுச்சீட்டுக்கள் மற்றும் கடனுறுதிச் சீட்டுக்கள் இதற்கு முன்னர் ஏதாவது மாற்றுச்சீட்டுக்கள் மறுக்கப்பட்டனவா? ... இல்லை மறுபடி எழுதப்படுவதற்கான அறிகுறிகள் உள்ளனவா? ... ... இல்லை	இல்லை
2. பங்குமாற்று நிலையப் பிணையங்கள் ... விவரங்கள்...... £500 5% போர்க் கடன் 1929-41 பதிவு செய்யப்பட்டுள்ளது........................ ....பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் வங்கியினால் நியமனம் பெற்றவர்களின் பெயர்களுக்கு மாற்றப்படவேண்டியதா என்பதைக் குறிப்பிடவும்......யு/என் ஆப் திரு. டில்வி மற்றும் திரு. டால்வி, மதிப்பு, குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் என்ன விலையில்..... $101^1/_8$ = £500 குறிப்பிடப்பட்டிருந்தால் அவைகளின் மதிப்பு பற்றி தரகர்களின் கருத்து கேட்கப்பட்டதா?	£500
3. பொறுப்புறுதிகள் அல்லது இதர துணைப்(பிணை) விவரங்கள் .... வாடிக்கையாளருக்கும் பொறுப்புறுதியர்க்கும் உள்ள உறவு.........	
4. குத்தகை, வில்லங்கமில்லாத அல்லது பகரமாகக் கொண்டுள்ள நிலம் மற்றும் கட்டடம்.......... முகவரி...90, எல்ம் தெரு, மாக்டன்-ஆன்-சீ. விவரங்கள்...சிறந்த முடியிருப்பு இல்லம், வில்லங்கமில்லாதது இந்தக் கடனுக்காக மேலாளர் செய்துள்ள அதன் மதிப்பீடு..... £600 மதிப்பீட்டாளருடைய மதிப்பீடு...£1,000 (டன், பிரௌன்), ரோவினால் £1000க்கு வாங்கப்பட்டது. வரிக் கட்டணங்களுக்காகச் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு... £900 வாடகைக்கு விடப்பட்டால் ஆண்டு வாடகை .. £105 வரிக் கட்டணங்கள்...£35 (வாடகைக்கு குடியிருப்போரால் செலுத்தப்படவேண்டியது) நில வாடகை... £5 நிகர வாடகை.. £85......ஓராண்டுக்கு வாங்குவதானால் அந்த மதிப்பு.. £860 தீ-க்கு எதிராக காப்பீடு செய்யப்பட்டுள்ளது... அட்லாஸ் பயர் இன்சூரன்ஸ் கம்பனி... £1000 நிலப் பதிவு பகுதிக்குள் இருக்கிறதென்றால் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது?......	£800

அல்லது உரிமை பற்றிய தகவல் எடுக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டதா? பொறுத்திருந்து பார்க்கவும், தேவைப்பட்டால் திரு. ரோ வங்கிக்கு ஒரு சட்டப்படியான ஒற்றியைக் கொடுப்பார். ஏதாவது முந்தைய ஒற்றிபற்றி பதிவுப்பத்திரம் ஏதேனும் உள்ளதா? ...... இல்லை.	
5. சில்லறைகள்	இல்லை
பிணையங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த மதிப்பு...	£1,300

மேலாளரின் கவனிப்புக் குறிப்புகள்......திரு. ரோ வைப்புக் கணக்கில் £455 இருப்பையும், நடப்புக் கணக்கில் £137 இருப்பையும் கொண்டிருந்தபோதிலும் தன்னிடத்தில் கிடைக்கக்கூடிய எல்லா ரொக்கப்பணத்தையும், பிராட் ஸ்ட்ரீட்டில் அவர் திறக்கப்போவதாக உள்ள கிளை கடையை நிறுவுவதற்குத் தான் தேவையுடையவராக இருக்கக்கூடும் என்று அவர் கூறுகிறார்.

அனுமதியளிக்கப்பட்டது

மேலாளர் கையொப்பம், மேலாண்மை இயக்குநர்.

ஏ. எல். பாங்க்

படிவம் எண். 21
(நமூனா எண். 21)
கடன் விண்ணப்ப படிவங்கள்
(Loan Application Forms)

பெறுநர் ____________ வங்கி லிட். தேதி ______ 19

____________ அலுவலகம்

விண்ணப்பதாரரின் (முழுப்) பெயர் ____________

கூட்டு வணிகமாக இருந்தால் கூட்டாளிகளின் பெயர்கள்

____

தந்தையார் மற்றும் சாதி ____________

தொழிலும், வருமானமும் ____________

இருப்பிடம் மற்றும் தற்போதைய முகவரி ____________

தேவையான தொகை ____________

கடன் தேவையாயுள்ள கால அளவு மற்றும் கடன் நோக்கம் ______

எப்படித் திரும்பச் செலுத்துவதாக முன்மொழியப்பட்டுள்ளது ______

ஏதாவது கிளைகளுக்கு அவர் விண்ணப்பம் செய்தாரா, அப்படியானால் அதன் முடிவு என்ன? ______

ஏதாவது இதர விவரங்கள் ______

அளிக்கப்படும் பிணையத்தின் தன்மை, அளவு மற்றும் விவரங்கள்

(1) ______
(2) ______
(3) ______

______

______

விண்ணப்பதாரருடைய அசையும் மற்றும் அசையாச் சொத்துகளின் விவராவணம்

ஊர்	பகுதி	சொத்தின் விவரங்கள்	தோறாயமான மதிப்பு		கருத்துரை

முந்தைய பொறுப்புக்கள் பற்றிய அறிக்கை

ஊர்	கடனாளர்களின் பெயர் மற்றும் முகவரிகள்	எந்தப் பிணையத்தின் பேரில்	தொகை		கருத்துரை

நான்/நாங்கள் விதிமுறைகளை நன்கு படித்திருக்கிறேன்/கிறோம் என்றும், மேலே கொடுக்கப்பட்டுள்ள பதில்கள் உண்மையானவையென்றும் இதன்மூலம் நான்/நாங்கள் உறுதி கூறுகிறேன்/றோம், மற்றும் கொடுக்கப்பட்டுள்ள பதில்களில் ஏதாவது தவறாக இருப்பதாக ஆகுமெனில் நான்/நாங்கள் அதற்குத் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளியாக வேன்/வோம்

இடம் ________________

தேதி ________________ 19 ___

கையொப்பம் ________________

பதவி மற்றும் முகவரி ________________

கடன்கள் தொடர்பான விதிகள்
(Rules Relating to Loans)

1. வங்கி, அரசுப் பிணையம், ஆபரணம் மற்றும் இதர சிறந்த பிணையங்கள் ஆகியவைகளின் பிணையங்களின் மீது ரூ. 100க்கு மேற்பட்ட கடன்களை வழங்குகின்றது.

2. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மேலெழுதல்களைக் கொண்டுள்ள கடனுறுதிச் சீட்டுக்கள், அங்கீகரிக்கப்பட்டவைகளாக இருக்குமெனில் கழிவு செய்து தரப்படுகின்றன.

3. இசைவாணை அளிக்கப்பட்டு, ஆனால் கடன் வாங்குபவரால் இசைவாணை வழங்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் எடுத்துக் கொள்ளப்படாத கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

4. ஒவ்வொரு கடன் மற்றும் கடனுறுதிச் சீட்டு கணக்கின் மீதும் ஓர் அரையாண்டு தற்செயல் கட்டணமான ரூ. 1 விதிக்கப்படும்.

5. ஒவ்வோர் அரையாண்டுக்குப் பின்னரும் கூட்டுவட்டி விதிக்கப்படும்.

6. வங்கி தனக்கு வரவேண்டியுள்ள பாக்கித்தொகை முழுவதையும் அல்லது ஒரு பகுதியை, ஏதாவது கணக்கிலிருந்து அமைப்பு உறுப்பினரது (constituent) செலுத்தப்படவேண்டியுள்ள நிதிகளில் இருந்து சரிக்கட்டிக் கொள்வதற்கு உரிமை கொண்டுள்ளது.

படிவம் எண். 21—தொடர்ச்சி

பிணையங்கள் தொடர்பான விதிகள்
(Rules Relating to Security)

1. வீடு அல்லது நிலம் வகையிலான சொத்து பிணையமாக அளிக்கப்படுமானால், (அ) தன்மை, (ஆ) பகுதி (இ) ஏற்கனவே உள்ள வில்லங்கங்கள் (ஈ) அளவு (உ) மதிப்பு, (ஊ) உரிமை மற்றும் அவசியமான இதர விவரங்கள் ஆகியவை தெளிவாகக் கொடுக்கப்படவேண்டும்.

2. வியாபார சரக்கிருப்பு, சரக்குகள் மற்றும் பண்டங்கள் ஆகியவைகள் (பிணையங்களாக) அளிக்கப்படும்பொழுது, (அ) விவரங்கள், (ஆ) நிலைமை, (இ) நிகர மதிப்பு, (ஈ) சந்தை மதிப்பு மற்றும் (உ) வைக்கப்படவேண்டிய எச்ச ஓரம் ஆகியவைகள் குறிப்பிடப்படவேண்டும்.

3. அரசுப் பிணையம் மற்றும் கடன் பத்திரங்கள் அளிக்கப் படும்பொழுது, (அ) தன்மை, (ஆ) வட்டிவீதம் மற்றும் (இ) ஆண்டு முதலியன கொடுக்கப்படவேண்டும்.

4. ஆபரணம், அதாவது, தங்கம் (பிணையமாக) அளிக்கப் படுமானால், அதனுடைய எடை, மதிப்பு மற்றும் எச்ச ஓரம் ஆகியவை கொடுக்கப்படவேண்டும். ரொக்கக் கணக்காயர் அதனைச் சோதனை செய்தாரா என்பதும் கொடுக்கப்படவேண்டும்.

5. ஒரு நிறுமத்தினுடைய பங்குகள் அளிக்கப்படுகின்ற பொழுது, (அ) நிறுமத்தினுடைய பெயர், (ஆ) பங்குகளின் எண்ணிக்கை, (இ) சந்தை மதிப்பு, (ஈ) ஒவ்வொரு பங்கின்மீதும் செலுத்தப்பட்ட தொகை ஆகியவை குறிப்பிடப்படவேண்டும், மற்றும் அவசியமானால் கடைசி இருப்புநிலைக் குறிப்பு காட்டப் படவேண்டும்.

6. ஆள் பிணையம் (Personal Security) அளிக்கப்படும் தறுவாயில், பிணையாளரின் பெயர், பதவி, மற்றும் பெறுமானம் ஆகியன கூறப்படவேண்டும்.

7. ஆயுள் காப்பீட்டுப்பத்திரம் அளிக்கப்படுமானால், (அ) பத்திரத்தின் (காப்பீடு) தொகை, (ஆ) காப்பீடு நிறுமத்தின் பெயர் (இ) காப்பீடு கட்டணம் (ஈ) விடுமதிப்பு மற்றும் (உ) பத்திரத்தின் தவணை நாள் ஆகியவை கொடுக்கப்படவேண்டும். காப்பீடு பத்திரம் வங்கிக்கு உரிமை மாற்றிக் கொடுக்கப்படுமா?

படிவம் எண். 22

(நமூனா எண். 22)

ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு பிணையாளியால் அளிக்கப் படும் பொறுப்புறுதி படிவம்

(Form of Guarantee for one Customer by one Surety)

பெறுநர்

மேலாளர்,

__________________வங்கி லிட்.

பண்புடையீர்,

_______________சேர்ந்த_______________க்கு (இனி மேல் வாடிக்கையாளர் என்றழைக்கப்படுபவர்) ஒரு கணக்கினைத் தாங்கள் திறப்பதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்குப் பிரதிபலனாக (சரத்து 1)____________ச் சேர்ந்த__________ என்ற நான், இத்தகைய கணக்கின்மீது ஏற்கனவே கடனாகக் கொடுக்கப்பட்டுள்ள, செலுத்தப்பட்டுள்ள அல்லது ஏற்கப்பட்டுள்ள, அல்லது வாடிக்கையாளருக்கு, அல்லது அவருடைய உபயோகத்திற்கு அல்லது வசதிக்கு அல்லது அவருடைய நாணயத்தின்பேரில் (நடப்புக் கணக்கின்மீது, அல்லது சிறப்பான அல்லது அப்படியல்லாத புதிய கணக்கு ஏதாவது ஒன்றினைத் திறப்பது அல்லது தொடர்ந்து வைத்திருப்பதன்மூலம், அல்லது அவரால் எழுதப்பட்ட, ஏற்பு செய்யப்பட்ட அல்லது மேலெழுதப்பட்ட மாற்றுச் சீட்டுக்கள், கடனுறுதிச் சீட்டுக்கள் அல்லது இதர மாற்றுமுறைப் பிணையங்கள் ஆகியவைகளைக் கழிவு செய்தல் மூலம் அல்லது வேறு இதர ஏதாவது முறையில்) தாங்கள் கடனாக அளிக்கும், செலுத்தும் அல்லது ஏற்கும் எல்லாப் பணங்களையும் பொறுப்புக்களையும், இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொகை வரையிலும், அவை கேட்கப்பட்ட இரண்டு நாட்களுக்குப்பின், தங்களுக்குச் செலுத்தித் தீர்வு செய்வதற்கு இதன் மூலம் ஒப்புதல் அளிக்கிறேன்; இருந்தபோதிலும், இந்தப் பொறுப்புறுதியின் மீதான பொறுப்பு முழுவதும், ரூ.____________ மற்றும், பணம் செலுத்தும்படியான கோரிக்கை தங்களால் எனக்கு விடுக்கப்படுகின்ற தேதியிலிருந்து, ஆண்டுக்கு________சத வீதத்தில் அத்தொகையின் மீதான வட்டி ஆகிய தொகைகளை விட அதிகமாக இருக்காது.

மற்றும், பின்வருமாறு நான் மேற்கொண்டும் ஒப்புதல் அளிக்கிறேன் ;

(சரத்து 2):—இந்தப் பொறுப்புறுதி ஒரு தொடர்ந்து செல்கின்ற பொறுப்புறுதியாக இருக்கும்; மற்றும் அதனை நிறுத்தம் செய்து, பொறுப்புறுதியின் அளவை நிர்ணயம் செய்யவேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தை எழுத்துமூலமான அறிக்கையில் தங்களுக்கு நான் கொடுத்ததற்கு அல்லது அனுப்பியதற்குப் பிறகு மூன்று மாதம் வரையிலும் மற்றும் இத்தகைய அறிக்கை காலாவதியாகும்பொழுது, என்னுடைய பொறுப்பின் அளவு வரையிலும், செலுத்தவேண்டியுள்ள தொகையைத் தங்களுக்குக் கொடுக்கின்ற வரையிலும் செயலில் இருக்கும்; மற்றும் நான் இறந்து போகின்ற அல்லது திறமையற்ற நிலைக்கு ஆளாகும் தறுவாயில், என்னுடைய நிறைவேற்றாண்மையர்கள் (executors), சொத்தாட்சி அதிகாரிகள், அல்லது சட்டப்படியான தனிப்பட்ட சார்பாளர்கள், மற்றும் என்னுடைய சொத்து ஆகியவர்களின் பொறுப்பு, இந்த பொறுப்புறுதியினை முடிவு செய்வதற்காக இத்தகைய சட்டப்படியான தனிப்பட்ட சார்பாளர்களால், தங்களுக்குக் கொடுக்கப்படும் எழுத்துமூலமான மூன்று மாத காலத்திற்கான அறிக்கை காலாவதியாகும் வரையிலும் தொடர்ந்து இருக்கும்; மற்றும் இத்தகைய அறிக்கையைப் பெற்றுக் கொண்டவுடன், மூன்று மாத காலத்திற்குள் எந்த நேரத்திலும், வாடிக்கையாளருக்குப் புதிதாக ஒரு கணக்கைத் திறந்து, மேலே சொல்லப்பட்ட அளவு வரையிலுமான என்னுடைய பொறுப்பிற்குப் பாதகமேதும் ஏற்படாத வகையில், அதன்பின்னர், அவரால், பழைய கணக்கிற்கு வரவு வைக்கப்படவேண்டும் என்று வெளிப்படையாகக் குறிப்பிடாமல் உங்களிடம் செய்யப்படும் எல்லாச் செலுத்துகைகளையும் அந்தக் (புதிய) கணக்கிற்கு ஒதுக்கி வரவு வைத்துக்கொள்வதற்கு எல்லா உரிமையும் தங்களுக்கு உண்டு.

(சரத்து 3):—தாங்கள் எத்தறுவாயிலும், மேற்கொண்டு என்னுடைய ஒப்புதல் அல்லது எனக்குத் தகவல் ஏதுமின்றி, எந்த நேரத்திலும், வாடிக்கையாளருக்கு அல்லது அவருடன் அல்லது அவருக்காக, பொறுப்புறுதியராகவோ அல்லது வேறு வகையிலோ பொறுப்பாளியாகின்ற யாரேனும் ஒரு நபருக்கு, ஏதாவது கால அவகாசம் அல்லது சலுகை அளிப்பதற்கும், மற்றும் அவருடைய கடனை நிர்ணயம் செய்வதற்கும், அதிகரிப்பதற்கும் அல்லது மாறுதலடையும்படி செய்வதற்கும், மற்றும் இங்கு உத்தரவாதம் செய்யப்படவேண்டுமென்று விரும்பப்படுகின்ற பணங்கள் அல்லது அவற்றில் ஒரு பகுதிக்காக அல்லது சார்பாகத் தாங்களால் வைத்திருக்கப்படுகின்ற அல்லது வைத்திருக்கப்படக்கூடிய இதர பிணையங்களை மாறுதலடையச் செய்வதற்கும், மாற்றிக் கொள்வதற்கும் அல்லது விடுவிப்பதற்கும், மற்றும் ஏதாவது மாற்றுச்

சீட்டுக்கள், கடனுறுதிச் சீட்டுக்கள் அல்லது இதர மாற்றுமுறைப் பிணையங்களைப் புதுப்பிப்பதற்கும், அவருடன், அல்லது அவருக்காக அல்லது அவருடன் சேர்த்து பொறுப்பாளியாக உள்ள யாரேனும் ஒரு நபருடன், ஒரு பகுதியைக் கொடுத்து முழுக் கடனையும் தீர்க்கும் ஒரு ஒப்பந்தம் (compounding) அல்லது வேறு இதர ஏற்பாடுகள் எதையேனும், இந்த பொறுப்புறுதியின் கீழ் உள்ள என்னுடைய பொறுப்பினை நிறைவேற்றாமல் அல்லது எந்த வகையிலும் பாதிக்காமல் தாங்கள் பொருத்தமானது என்று நினைக்கின்ற வகையில் செய்துகொள்வதற்கும் உரிமை கொண்டிருப்பீர்கள்.

(சரத்து 4):—வாடிக்கையாளர் திவாலானவராக அல்லது செல்லும்புள்ளித்தன்மையை இழந்தவராக ஆகக்கூடுமானால், அல்லது அவருடைய கடனாளர்களோடு ஏதாவது ஏற்பாட்டில் அல்லது உடன்பாட்டில் இறங்கக்கூடுமானால், (இங்கு பொறுப்புறுதி செய்யப்பட்டுள்ள தொகை முழுவதும் அல்லது ஒரு பகுதி என்றால் அல்லது வேறு யாராவது நபரால் தங்களுக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும்) தாங்கள் கடனாளர்களாக இடம் பெறலாம், மற்றும் அவருடைய சொத்துக்கு எதிராக உங்களுடைய உரிமைக் கோரிக்கைத் தொகை முழுவதையும் கோரலாம், அல்லது அது தொடர்பான ஏதாவது உடன்பாட்டிற்கு ஒப்புதல் அளிக்கலாம் அல்லது அதனை ஏற்றுக்கொள்ளலாம், மற்றும், வாடிக்கையாளரின் பொறுப்புறுதியர் என்ற முறையில் உங்களுடன் ஆன போட்டியில் எனக்குள்ள எல்லா உரிமைகளுக்கும் அப்பாற்பட்டதாக, பங்கீடுகள், உடன்பாட்டில் பெறப்படும் தொகைகள் அல்லது அது சம்பந்தமான இதர செலுத்துகைகள் ஆகியவைகள் முழுவதையும், உங்களுடைய உரிமைக் கோரிக்கை முழுவதும் தீர்க்கப்படுகின்ற வரையிலும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்; மற்றும் வாடிக்கையாளருக்கு எதிரான உங்கள் உரிமைக்கோரிக்கை முழுவதும் நிறைவேற்றப்படுகின்றவரையில், உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள தொகையை அல்லது அதில் ஒரு பகுதியைச் செலுத்துவதன்மூலம், அல்லது வேறு எந்த அடிப்படையிலும், உத்தரவாதம் செய்யப்பட்ட தொகைக்கு அல்லது அதன் ஒரு பகுதி தொடர்பாக என்னுடைய உரிமைக் கோரிக்கையை நிலை நாட்டவோ அல்லது நிலை நாட்டுவதற்கு உரிமை கோரவோ மாட்டேன்.

(சரத்து 5):—வாடிக்கையாளருக்கு எதிராக உங்கள் உரிமைக் கோரிக்கை முழுவதையும் தாங்கள் பெறக்கூடும் என்ற நோக்கத்திற்கு, மேலே சொல்லப்பட்ட நிலைநாட்டுதல் மற்றும் சமரச

உடன்பாடு ஆகியவை இருந்தபோதிலும், மற்றும் இதன்மூலம் உத்தரவாதம் செய்யப்படவேண்டும் என்று விரும்பப்படும் தொகை அல்லது அதன் ஒரு பகுதி சம்பந்தமாக நீங்கள் வைத்திருக்கக் கூடிய அல்லது உரிமைகொண்டிருக்கக்கூடிய வேறு ஏதாவது பொறுப்புறுதி, பிணையம் அல்லது பரிகாரப் பொறுப்புறுதிகள் (remedy guarantees), பிணையங்கள் அல்லது சரிப்படுத்து வழிகள் (remedies) ஆகியவை இருந்தபோதிலும், மற்றும் வாடிக்கையாளரோடு கொண்டுள்ள உங்களின் நடப்புக்கணக்கில் அல்லது அவர் பொறுப்பாளியாகக்கூடிய வேறு ஏதாவது கணக்கில் பற்றெழுதப்பட்டிருக்கக்கூடிய ஏதாவது கட்டணங்கள் அல்லது வட்டி ஆகியவைகள் இருந்தபோதிலும், தாங்கள் கட்டாயப்படுத்தி, இதன்மூலம் பொறுப்புறுதி செய்யப்பட்ட முழுத்தொகையையும் மற்றும் அதன்மீதான வட்டியையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்பதற்கு நான் ஒப்புதல் அளிக்கிறேன்.

(*சரத்து* 6):—இதற்கு முன் சொல்லப்பட்டுள்ள எதனையும் பொருட்படுத்தாது, இந்தப் பொறுப்புறுதி வாடிக்கையாளரின் எல்லாக் கணக்குகளுக்கும், அவைகள் முற்றிலும் அவருடையதாக, அல்லது ஏதாவது ஒரு முறையில் வேறு ஒரு நிறுமம் அல்லது நபர் அல்லது நபர்கள் ஆகியவர்களோடு சேர்ந்து கூட்டாகப் பொறுப்பாளியாக உள்ள அல்லது பொறுப்பாளியாக ஆகக்கூடிய கணக்குகளாக இருந்தாலும் மற்றும் அவை எந்தப் பெயரில் அல்லது நிறுவனத்தின் பெயரில் இருந்தாலும், பொருந்தக்கூடிய பரந்த ஒன்றாக இருக்கும்; மற்றும் இந்தப் பொறுப்புறுதி, வங்கியினுடைய அமைப்பு, அதனுடைய வழித்தோன்றல்கள், அல்லது அதனிடமிருந்து உரிமை மாற்றிப் பெற்றவர்கள், ஆகியவற்றில் ஏற்படக்கூடிய ஏதாவது மாற்றத்தினாலோ, அல்லது, வேறு ஏதாவது வங்கி அல்லது வங்கிகளை அது ஈர்ப்பதாலோ, அல்லது அவைகளால் அது ஈர்க்கப்படுவதாலோ, அல்லது அவைகளுடன் அது இணைக்கப்படுவதாலோ பாதிக்கப்படமாட்டாது.

சாட்சி என்ற முறையில், 19____ ஆம் ஆண்டு __________ மாதம் __________ நாளான இன்று கையொப்பமிடுகிறேன்.

__________________________ என்பவரின் கையொப்பத்திற்கு சாட்சி.

சாட்சியினுடைய பெயர், முகவரி மற்றும் தொழில்

படிவம் எண். 22(அ)

[நமூனா எண். 22(அ)]

ஒரு வாடிக்கையாளருக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிணையாளிகள் கூட்டாயும் தனித்தும் அளிக்கும் பொறுப்புறுதி (படிவம்) நமூனா

(Joint and Several Guarantee Form for One Customer by two or more Sureties)

(சரத்து 1):—(அது, பின்வருமாறு தொடங்குகின்றது என்பதைத் தவிர மற்ற யாவும் நமூனா எண். 22ல் உள்ளபடியேயாகும்)

"நாங்கள் இதன்மூலம், கூட்டாகவும் தனித்தும் ________ ________________ ஒப்புதல் அளிக்கிறோம்"

(சரத்து 2):—இந்தப் பொறுப்புறுதி தொடர்ந்து செல்கின்ற ஒரு பொறுப்புறுதியாக இருக்கும்; மற்றும் அதனை நிறுத்தம் செய்து, பொறுப்புறுதியின் அளவை நிர்ணயம் செய்யவேண்டும் என்ற எங்களுடைய விருப்பத்தை எழுத்துமூலமான அறிக்கையில், தங்களுக்கு நாங்கள் ஒவ்வொருவரும் கொடுத்ததற்கு அல்லது அனுப்பியதற்குப் பிறகு மூன்று மாதம் வரையிலும், மற்றும் இத்தகைய அறிக்கை காலாவதியாகும்பொழுது எங்களுடைய பொறுப்பின் அளவு வரையிலும், செலுத்தவேண்டியுள்ள தொகையைத் தங்களுக்குக் கொடுக்கின்ற வரையிலும் செயலில் இருக்கும்; மற்றும் நாங்கள் எல்லோரும் அல்லது எங்களில் யாராவது இறந்து போகின்ற அல்லது திறமையற்றுப் போகின்ற நிலைக்கு ஆளாகும் தறுவாயில் எங்களுடைய சொத்துக்கள், மற்றும் எங்களுடைய நிறைவேற்றாண்மையர்கள், சொத்தாட்சி அதிகாரிகள் அல்லது சட்டப்படியான தனிப்பட்ட சார்பாளர்கள் ஆகியோருடைய பொறுப்பு, தன்னுடைய பொறுப்பினை நிர்ணயம் செய்வதற்கு எங்களில் ஒவ்வொருவராலும் அல்லது அவ்வாறு இறக்கின்ற அல்லது திறமையற்றுப்போகின்ற நபர் அல்லது நபர்களின் நிறைவேற்றாண்மையர்கள் அல்லது சொத்தாட்சி அதிகாரிகள் அல்லது சட்டப்படியான தனிப்பட்ட சார்பாளர்கள் ஆகியோர்களாலும் தங்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய, எழுத்துமூலமான மூன்று மாத அறிக்கை காலாவதியாகின்ற வரையிலும் தொடர்ந்து இருக்கும்; மற்றும் நீங்கள் ________________ முதலியன.

(சரத்துக்கள் 3, 4, 5 மற்றும் 6) (தேவையான திருத்தங்களுடன், நமூனா எண் 22ல் உள்ள அதேபோன்று)

(சரத்து 7).—இந்தப் பொறுப்புறுதியினுடைய கடப்பாடுகளி லிருந்து எங்களில் யாரையாவது விடுவிப்பதற்கு அல்லது நீக்கு வதற்கு அல்லது எங்களில் யாரிடமிருந்தேனும் ஏதாவது உடன் பாட்டினை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது எங்களில் யாருடனும் வேறு ஏதாவது ஏற்பாட்டினை, அதன்மூலம் எங்களில் மற்றவர் அல்லது மற்றவர்களுக்கு எதிரான தங்களுடைய உரிமைகளுக்குப் பாதகமாக அல்லது பாதிக்கும்படியாக இல்லாமல், செய்துகொள் வதற்கு தாங்கள் எல்லா உரிமையும் பெற்றவர்களாக இருப்பீர்கள்.

படிவம் எண். 22(ஆ)
[நமூனா எண். 22(ஆ)]
ஒரு கூட்டு நிறுவனத்தினுடைய கணக்கினை உத்தரவாதம் செய்வதற்கான படிவம் (நமூனா)
(Form to cover a Firm's Account)

(சரத்துக்கள் 1 முதல் 5):—தேவையான திருத்தங்களுடன் மேலேயுள்ளபடி. சரத்து 1, கூட்டு நிறுவனத்தினுடைய உறுப் பினர்களின் எல்லாப் பெயர்களையும் கொண்டிருக்கவேண்டும்.

(சரத்து 6):—________________ ஆகிய எதுவும் எப்படி யிருந்தாலும், மற்றும் எந்தப் பெயரில் அல்லது கூட்டு நிறுவனத் தின்பேரில் அது இருந்தாலும், இந்தப் பொறுப்புறுதி தொடர்ந்து செயலில் இருக்கும்; மற்றும் தற்போதைய அல்லது வருங்காலத் திய கூட்டாளிகளில் எவரேனும் ஒருவருடைய மரணம், அல்லது விலகுதல் அல்லது ஏதாவது புதிய கூட்டாளி அல்லது கூட்டாளி களைச் சேர்த்துக்கொள்ளுதல் ஆகியவை காரணமாக கூட்டு நிறுவனத்தில் சேர்ந்துள்ள கூட்டாளிகளில் ஏற்படும் எந்த மாற் றத்தையும் பொருட்படுத்தாது அது செயற்படுத்தக்கூடியதாக இருக்கும்; மற்றும் இந்த பொறுப்புறுதி ________________ ஆகியவற்றால் பாதிக்கப்படமாட்டாது.

(எஞ்சியவை, நமூனா எண். 22ல் உள்ளதுபோல)

படிவம் எண். 23
(நமூனா எண். 23)

கேட்டும்பொழுது செலுத்தப்படுவதற்கான கடனுறுதிச்சீட்டு
(Promissory Note Payable on Demand)

ரூ. 100-00 ______________ 19___

மதிப்பினைப் பெற்றுக் கொண்டதற்காக, கேட்கப்படும் பொழுது ______________ க்கு அல்லது ஆணைக்கு நூறு ரூபாய் தொகையைக் கொடுப்பதற்கு நான் உறுதி கூறுகிறேன்.

(ஒ-ம்) எம். ஜி. சிங் | தபால் தலை (முத்திரை)

(முத்திரையின் குறுக்காக ஒப்பம்)

படிவம் எண். 23(அ)
[நமூனா எண். 23(அ)]

குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் செலுத்தப்படுவதற்கான கடனுறுதிச் சீட்டு
(Promissory Note Payable after date)

ரூ. 200-00 ______________ 19___

மதிப்பினைப் பெற்றுக் கொண்டதற்காக, இன்றிலிருந்து, இரண்டு மாதங்களுக்குப் பிறகு ______________ க்கு அல்லது ஆணைக்கு இருநூறு ரூபாய் தொகையைக் கொடுப்பதற்கு நான் உறுதி கூறுகிறேன்.

(ஒ-ம்) ஜி. கோவிந்த்ராவ் | தபால் தலை (முத்திரை)

(முத்திரையின் குறுக்காக ஒப்பம்)

படிவம் எண். 23(ஆ)
[நமூனா எண். 23(ஆ)]

குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வட்டியுடன் செலுத்தப் படுவதற்கான கடனுறுதிச் சீட்டு
(Promissory Note Payable After Date with Interest)

ரூ. 300-00 ____________ 19___

இன்றிலிருந்து மூன்று மாதங்களுக்குப்பின்னர் ____________ வங்கி லிமிடெட்டுக்கு அல்லது ஆணைக்கு, அவர்களுடைய ______________ கிளையில் ரூ. 300 தொகையை, அது செலுத் தப்படும் வரை, அதன்மீது ஆண்டிற்கு 6 சதவீத வட்டியுடன் சேர்த்துச் செலுத்துவதற்கு நான் உறுதி கூறுகிறேன்.

(ஒ-ம்) ஜி. எஸ். ஜோதி | தபால் தலை (முத்திரை)

(முத்திரையின் குறுக்காக ஒப்பம்)

படிவம் எண். 23(இ)
(நமூனா எண். 23(இ))

கூட்டு கையொப்பங்களுடன் ஆன கடனுறுதிச் சீட்டு
(Promissory Note with Joint Signatures)

ரூ. 100-00 ____________ 19___

மதிப்பினைப் பெற்றுக் கொண்டதற்காக, கேட்கப்பட்டவுடன், ______________ க்கு அல்லது ஆணைக்கு ரூ. நூறு தொகை யைச் செலுத்துவதற்கு நாங்கள் உறுதிகூறுகிறோம்.

(ஒ-ம்) ஜி. கோவிந்த்ராவ்
(ஒ-ம்) ஜி. எஸ். ஜோதி | தபால் தலை (முத்திரை)

(முத்திரையின் குறுக்கே ஒப்பங்கள்)

படிவம் எண். 23(ஈ)

[நமூனா எண். 23(ஈ)]

கூட்டாகவும் தனித்தும் பொறுப்பினைக் கொண்ட
கடனுறுதிச் சீட்டு

(Promissory Note with Joint and Several Liability)

ரூ__________ . ____________ 19__

மதிப்பினைப் பெற்றுக் கொண்டதற்கு, கேட்கப்பட்டவுடன், ____________ வங்கி லிமிடெட்டுக்கு அல்லது ஆணைக்கு ____________ல் உள்ள அவர்களது அலுவலகத்தில் அல்லது ____________கிளையில், ரூபாய் ____________ ____________தொகையை, இந்தத் தேதியிலிருந்து, ____________கால இடைவெளியில் கணக்கிடப்பட்டுச் செலுத்துகை முழுமையாகச் செய்யப்படுகின்ற வரையில், இத்தொகையின்மீது, குறைந்த அளவு, ஆண்டுக்கு ____________ சதவீதத்திலான ஒரு வட்டியில், ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் வட்டிவீதத்திற்கும் மிகுதியாக ____________ சதவீத வட்டியுடன் சேர்த்துச் செலுத்துவதற்கு நாங்கள் கூட்டாகவும் தனித்தும் உறுதி கூறுகிறோம்.

தபால் தலை (முத்திரை)

(முத்திரையின் குறுக்கே கையொப்பம்)

கையொப்பம் ____________

முழு முகவரி ____________

படிவம் எண். 23(உ)

[நமூனா எண். 23(உ)]

கேட்டவுடன் வட்டியோடு செலுத்தப்படுவதற்கான
கடனுறுதிச் சீட்டு

(Promissory Note Payable on Demand with Interest)

____________ அலுவலகம்

____________ 19____

ரூ__________

மதிப்பினைப் பெற்றுக் கொண்டதற்கு, கேட்கப்பட்டவுடன், ____________ வங்கி லிமிடெட்டுக்கு அல்லது ஆணைக்கு ____________ல் உள்ள அவர்களது அலுவலகத்தில் அல்

லது ________________ கிளையில் ரூபாய் ______________________
______________ தொகையை, இந்தத் தேதியிலிருந்து, செலுத்து கை,யை ________________ கால இடைவெளியில் கணக்கிடப்பட்டு, முழுமையாகச் செய்கின்றவரையில், இத்தொகையின்மீது, குறைந்த அளவு, ஆண்டுக்கு ____________ சதவீதத்திலான ஒரு வட்டியில், ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் வட்டிவீதத்திற்கும் அதிகமாக ____________ சதவீத வட்டியுடன் சேர்த்துச் செலுத்துவதற்கு நான் உறுதி கூறுகிறேன்.

கையொப்பம் ______________________

முழு முகவரி ______________________

தபால் தலை (முத்திரை)

(முத்திரையின் குறுக்கே கையொப்பம்)

படிவம் எண். 24

(நமூனா எண். 24

மாற்றுச் சீட்டுக்களின் மாதிரி (நமூனாக்கள்) படிவங்கள்

1.

ரூ. 100-00 ______________ 19 _____

மதிப்பினைப் பெற்றுக் கொண்டதற்கு, கேட்டவுடன், திரு. ________________ க்கு அல்லது ஆணைக்கு நூறு ரூபாய் தொகையைச் செலுத்தவும்.

(ஒ-ம்) எம். ஜோத் சிங்

தபால் தலை (முத்திரை)

பெறுநர் ______________________
____

2.

ரூ. 50.00 ______________ 19 _____

முன்னிடப்பட்டவுடன், கொணர்பவருக்கு, ரூபாய் ஐம்பது தொகையைச் செலுத்தவும்.

(ஒ-ம்) ஆர். எம். படேல்

தபால் தலை (முத்திரை)

பெறுநர் ______________________
____

3

ரூ. 100-00 ______________ 19 __

மதிப்பினைப் பெற்றுக்கொண்டதற்கு, இன்றிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிறகு, திரு ______________ ன் ஆணைக்கு ரூபாய் நூறு தொகையைச் செலுத்தவும்.

(ஒ-ம்) எம். ஜி. பகவான்

தபால் தலை (முத்திரை)

பெறுநர் ______________

____

4

ரூ. 100 00 ______________ 19 __

மதிப்பினைப் பெற்றுக்கொண்டதற்கு, பார்த்ததிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிறகு எனக்கு அல்லது என்னுடைய ஆணைக்கு ரூபாய் நூறு தொகையைச் செலுத்தவும்.

(ஒ-ம்) ராம்லால்

தபால் தலை (முத்திரை)

பெறுநர் ______________

____

படிவம் எண். 24(அ)

[நமூனா எண். 24(அ)]

ஒரு மாற்றுச்சீட்டு ஏற்கப்படாததற்கான எதிர்ப்புச் சான்று (Protest of a Bill for Non-Acceptance)

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ______________ ஆம் ஆண்டு ______________ திங்கள் ______________ தேதியாகிய இன்று, ______________ சேர்ந்த வியாபாரியும், இதன் மறுபுறத்தில் எழுதப்பட்டுள்ள (அல்லது கீழே எழுதப்பட்டுள்ள) உண்மை நகலின், மூல மாற்றுச்சீட்டினை வைத்திருப்பவருமான திரு ______________ ன் வேண்டுகோளின்பேரில், அரசு (அல்லது சட்டப்படியான) அதிகாரத்தால் உரிய முறையில் நுழைவுரிமை அளிக்கப்பட்டு மற்றும் பதவிப் பிரமானம் செய்து வைக்கப்பட்டுள்ள நகர சான்றுறுதி அதிகாரியாகிய ______________ என்ற நான், யார்மீது அது எழுதப்பட்டுள்ளதோ அந்த திரு ______________ க்கு, சொல்லப்பட்ட மூல மாற்றுச்சீட்டினை, (அவருடைய முகவரியில்) ஏற்பு செய்யப்படுவதற்காக முன்னிட்டுக் காட்டி, ஏற்பு

செய்யும்படி கோரினேன்; அதற்கு அவர், அது தற்போது ஏற்கப்படமாட்டாது (அல்லது அவரால் அளிக்கப்பட்ட பதில்) என்று பதிலளித்தார். அக்காரணத்திற்காக, சொல்லப்பட்ட சான்றுறுதி அதிகாரியாகிய நான், மேலே சொல்லப்பட்ட வேண்டுகோளின் பேரில் எதிர்ப்புத் தெரிவித்தேன், மற்றும் இங்கமர்ந்துள்ளவர்களின் முன்னிலையில், சொல்லப்பட்ட மாற்றுச்சீட்டினை எழுதியவர், மற்றும் அதன் சார்பான இதர நபர்கள், மற்றும் அதனை மாற்றுதல், மறுமாற்றுதல் செய்தல் தொடர்பாக சம்பந்தப்பட்டுள்ள அல்லது சம்பந்தப்படக்கூடிய நபர்கள் ஆகிய எல்லோருக்கும் எதிராக, சொல்லப்பட்ட மாற்றுச்சீட்டு ஏற்கப்படாமல் போனது காரணமாக இதுவரை ஏற்கப்பட்ட மற்றும் இனிமேலும் ஏற்கப்படக்கூடிய செலவுகள், சேதாரங்கள், கட்டணங்கள், மற்றும் வட்டி ஆகியவைகளுக்குப் பொறுப்பாவார் என்று, முறையாக எதிர்ப்புத் தெரிவிக்கிறேன். ______________ல், திரு______________ மற்றும் திரு______________ ஆகிய சாக்ஷிகளின் முன்னிலையில் இவ்வாறு செய்யப்பட்டு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ______________ ஆண்டு ______________ திங்கள் ______________ நாள் என்று தேதியிடப்பட்டு என்னால் சான்றளிக்கப்படுகின்றது.

____

சான்றுறுதி அதிகாரி.

படிவம் எண். 24(ஆ)

(நமூனா எண். 24(ஆ))

மாற்றுச்சீட்டு ஏற்கப்படாதது அல்லது அதற்குப் பணம் செலுத்தப்படாதது பற்றிய அறிவுரை

(Advice of Non-Acceptance or Non-payment of Bill)

எண்______________ தேதி ______________ 19____

பெறுநர்

திருவாளர்கள்______________

____

____

அன்புடையீர்,

தங்களைத் தேவையானபோது உதவக்கூடியவராகக் (case-in-need) கொண்டுள்ள பின்வரும் மாற்றுச்சீட்டுக்கள் ஏற்பு / செலுத்துகைக்காக ______________ அன்று எழுதப்பெற்றவர்களுக்கு முன்னிடப்பட்டு ஏற்கப்படாமல் / செலுத்தப்படாமல் தவணை நாளாக ஆகி

தங்கியுள்ளன என்பதைத் தங்களுக்கு அறிவிக்க வேண்டியவர் களாக நாங்கள் இருக்கிறோம். தாங்கள் இந்த விசயத்தை எழுதப்பெற்றவர்களோடு எடுத்துக்கொண்டு, மாற்றுச்சீட்டினை

ஏற்பு செய்யப்பட்டு
பணம் செலுத்தப்பட்டு
பெறுவீர்கள் என்றால் நாங்கள் உங் களைப் பாராட்டுவோம்.

அவ்வாறு செய்வதற்கு நீங்கள் தவறுகின்ற தறுவாயில், எழுதிய வர்களிடமிருந்து அறிவுரைகளைப் பெறுவதற்கு நடவடிக்கை யினை எடுக்கவேண்டியவர்களாக நாங்கள் இருக்கவேண்டிவரும்.

தங்கள் உண்மையுள்ள,

____

கணக்கர்.

படிவம் எண். 24(இ)

நமூனா எண். 24(இ)

மறுப்பு பற்றிய அறிக்கை
(Notice of Dishonour)

எண் __________ தேதி __________ 19 __

பெறுநர்

____

____

அன்புடையீர்,

தங்களால் ஏற்பு செய்யப்பட்டு, __________ அன்று பணம் செலுத்தப்படவேண்டிய பின்வரும் மாற்றுச்சீட்டுக்கள் இன்னும் பணம் செலுத்தப்படாமல் உள்ளன என்பதைத் தயவு செய்து கவனிக்கவும்.

இந்த வங்கி அல்லது மாற்றுச்சீட்டுக்களில் உரிமை கொண் டுள்ள யாராவது இதர நபர், மறுப்பு செய்யப்பட்டது காரண மாக, ஏற்கும்படியாகக்கூடிய அல்லது ஏற்கக்கூடிய ஏதாவது நட்டம், அல்லது கட்டணங்கள் ஆகியவைகளுக்கு உங்களை நாங்கள் பொறுப்பாளியாக ஆக்கவேண்டியவர்களாவோம்.

தங்கள் உண்மையுள்ள,

____________________ ____________________

கணக்கர். மேலாளர்.

எப். பி. சி. எண்.	தொகை	எழுதியவர்

படிவம் எண். 24(ஈ)
[நமூனா எண். 24(ஈ)]

முகவரி__________
__________19___

__________வங்கி லிமிடெட்.

வாங்கப்பட்ட மாற்றுச்சீட்டுகள் பற்றிய விவராவணம்
(Statement of Bills Purchased)

எங்கள் பார்வை எண்__________

பெறுநர்
பெயர்__________
முகவரி__________

கீழே பட்டியலில் இடப்பட்டுள்ள இனங்கள் உங்களுடைய கணக்கிற்காக, வலது பக்கத்தில் காட்டப்பட்டுள்ள விவராவணத்தின்படி, தற்காலிகமாக வாங்கப்பட்டுள்ளன; இந்த அலுவலகத்தில் முழுச் செலுத்துகையும் ரொக்கமாகப் பெறப்படுவதற்குமுன் எந்த நேரத்திலும், வரவு வைக்கப்பட்டுள்ள இனங்கள் திரும்பவும் பற்று இனமாக எழுதப்படலாம்.—பின்புறம் பார்க்கவும்.

மாற்றுச் சீட்டு எண்.	எழுதப்பெற்றவர்	தொகை ரூ. பை.	கழிக்கப்பட்டுள்ள தள்ளுபடி ரூ. பை.	நிகரத் தொகை ரூ. பை.
ரூபாய்	....		ரூ.	

__________வங்கி லிட்.,டுக்காக
கையொப்பம்__________
கணக்கர்.

(பின்புறம்)

இந்த அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டாத எல்லா இனங்களும், மற்றும் தொடர்பான ஆவணங்களும் எங்கள் மீது பொறுப்பேதுமின்றி, உங்கள் பொறுப்பில், அஞ்சல் அல்லது வேறு வழியாக அனுப்பி வைக்கப்படுவதற்கு மட்டுமே பெற்றுக்கொள் ளப்படுகின்றன; அவை நேராக அல்லது சுற்று வழியில், எங் களுடைய கிளைகள் அல்லது தொடர்பாளர்கள் மூலமாக, அவர் களுடைய ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டு, செல்லும்படி வழிப்படுத்தப்படலாம்; அல்லது, எத்தறுவாயிலும், செலுத்துகை, ரொக்கத்தில், அனுப்பி வைக்கின்ற வங்கிக்கு வரவு கொடுப்பதில், அல்லது பணவிடையில் இருக்குமாறு அல்லது எழுதப்பெற்றவர், எழுதியவர், அல்லது செலுத்தும் வங்கி அல்லது இதர வங்கி ஆகியோரினால் சான்றளிக்கப்படுவதற்காக, ஏதாவது தொடர் பாளர், முகவர் அல்லது துணை முகவர் ஆகியோரின் ஏதாவது செயல், கவனமின்மை, கடமையில் தவறுதல், தோல்வியடைதல் அல்லது நொடிப்புநிலையடைதல் ஆகியவைகளுக்கும் அல்லது அனுப்பிவைக்கப்படுகின்ற வழியில் ஏற்படக்கூடிய நட்டங்கள் அல்லது காலதாமதங்கள் ஆகியவைகளுக்கும் எங்கள் மீது எந்த விதப் பொறுப்புமின்றி, நேரடியாக, எழுதப்பெற்றவர், அல்லது எழுதியவர் அல்லது செலுத்துகின்ற முகவர் ஆகியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

படிவம் எண். 24(உ)
[நமூனா எண். 24(உ)]

முகவரி_____________
தேதி__________ 19____

பெறுநர்
____________________வங்கி லிட்.
____________________(இடம்)

அன்புடையீர்,

காசோலைகள், பணவிடைகள், மாற்றுச்சீட்டுக்கள் ஆகியவை களை, (ஆவணங்கள் இணைக்கப்பட்டோ அல்லது இணைக்கப் படாமலோ) வசூல் செய்தல் அல்லது மாற்றுதல் செய்வதற்காகத் தங்களிடம் ஒப்படைக்கக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு அடிக்கடி ஏற்படக்கூடும்; அவைகளைத் தற்போதைய உங்களுடைய முக வர்களுக்கு வசூல் செய்யப்படும்பொருட்டு அல்லது மாற்றுதல் செய்வதற்காக நீங்கள் அனுப்பிவைப்பதற்கு நாங்கள் ஒப்புதல் அளிக்கிறோம். ஏதாவது ஓர் இடத்தில் தனிப்பட்ட வசூல்

முகவரை நீங்கள் கொண்டிருக்கவில்லையென்ற தறுவாயில், காசோலைகளை, அஞ்சல்மூலம் எழுதப்பெற்ற வங்கிக்கு நேரடியாக அனுப்பிவைப்பதற்கு நாங்கள் உங்களுக்கு அதிகாரமளிக்கின்றோம்.

இத்தகைய காசோலைகள், பணவிடைகள் அல்லது மாற்றுச்சீட்டுக்களை வைத்திருப்பவர் என்ற முறையில் தங்களுக்குள்ள சாதாரண உரிமைகளோடு, அவைகளுக்குப் பணம் செலுத்தும் வகையில் வரக்கூடிய, ________________ மீது அல்லது இதர மாநகரங்களின்மீது எழுதப்படும் ஒரு வங்கியரின் காசோலை அல்லது வங்கியர்களின் காசோலைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், மற்றும் இத்தகைய காசோலை அல்லது காசோலைகள் முன்னிடப்படும்பொழுது பணம் செலுத்தப்படாமல் போகும் தறுவாயில், அது சம்பந்தமாக ஏற்கப்பட்ட எல்லாக் கட்டணங்களுடன் சேர்த்துக் காசோலைத் தொகையை எங்களுடைய கணக்கில் பற்று எழுதுவதற்கும் நீங்கள் அதிகாரமளிக்கப்பட்டுள்ளீர்கள். மாற்றுச்சீட்டுக்களை முன்னிடல் செய்து, அவைகளின் மீதான தொகையை, மாற்றுச்சீட்டுக்கள் எங்கு செலுத்தப்படவேண்டியவைகளாக எழுதப்பட்டுள்ளனவோ அந்த இடத்திற்கான வழக்கத்தின்படி நீங்கள் பெறலாம் என்பதையும் நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

இந்த நடவடிக்கைகள் எல்லா வகைகளிலும், முழுமையாக எங்கள் இடர்வாய்ப்பிலும் பொறுப்பிலும் ஆனவை என்பதை அறிகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
கையொப்பம்________________

படிவம் எண். 25
(நமூனா எண். 25)

பங்கு மாற்று நிலையப் பிணையங்களுக்கு எதிராக வங்கியர்களின் கடன்களை உத்தரவாதம் செய்கின்ற நினைவுக் குறிப்பு
(Memorandum for Securing Bankers Advances Against Stock Exchange Securities)

________________ச் சேர்ந்த ________________ (இதன்பின், சொல்லப்பட்ட வங்கியர்கள் என்று அழைக்கப்படுபவர்கள்) ________________க்குப் பணம் கடன்களாக வழங்குவதற்கும் மற்றும்________________சொல்லப்பட்ட வங்கியர்களோடு ஒரு

கணக்கினைத் திறந்து அதனைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கு அனுமதியளிப்பதற்கும் ஒப்புக்கொண்டுள்ள தன்பேரில் __________ __________ சேர்ந்த __________ என்ற நான், இத்தகைய கடன்களை அல்லது அவைகள் புதுப்பிக்கப்படுவதை, நல்ல முறையில் உத்தரவாதம் செய்வதற்கும் மற்றும் திரும்பச் செலுத்தப்படுவதற்கும் மற்றும் வங்கியர்களின் வட்டி மற்றும் அவர்களின் வழக்கமான கழிவு மற்றும் இதர சட்டப்படியான கட்டணங்கள் ஆகியவைகளையும் சேர்த்து சொல்லப்பட்ட வங்கியிடத்திலுள்ள எல்லாக் கணக்குகளுக்கும் பொதுவான ஒரு பாதுகாப்பாக, இதன்மூலம் __________ களை அவர்களிடம் வைப்புச் செய்கிறேன், மற்றும் __________ இத்தகைய பிணையங்களை, அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட தன்விருப்புரிமையின்படி சரியென்று நினைக்கக்கூடிய, நேரத்தில் அல்லது நேரங்களில், ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு, விலையில் அல்லது விலைகளில் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் விற்று, மற்றும் விற்றுப் பெற்ற பணத்தை, இத்தகைய விற்பனை மற்றும் மாற்றல் செய்வது தொடர்பான செலவுகளுக்குச் செலுத்திய பிறகு, சொல்லப்பட்ட கடன்களையும் மற்றும், __________ ஆல் தனிப்பட்ட முறையில் அல்லது வேறு இதர நபர் அல்லது நபர்களோடு சேர்ந்து, மற்றும் ஒரு முதன்மைக் கடனாளி என்ற முறையிலோ அல்லது வேறு இதர நபர் அல்லது நபர்களுக்குப் பிணையாளி என்ற முறையிலோ, மேலே சொல்லப்பட்ட வட்டி, கழிவு மற்றும் கட்டணங்களையும் சேர்த்து, வங்கியர்களுக்குச் செலுத்த வேண்டியுள்ள இதர எல்லாப் பணத்தையும் செலுத்துவதில் அல்லது செலுத்துவது சம்பந்தமாகப் பயன்படுத்துவதற்கும் அவர்களுக்கு இதன்மூலம் அதிகாரமளிக்கிறேன்.

கையொப்பம் __________

படிவம் எண். 25(அ)

[நமூனா எண். 25(அ)]

பங்குத் தொகுப்புகள், பங்குகள் முதலியவைகளுக்கெதிராகக் கடன்கள்

(Advances Against Stocks, Shares Etc.)

தே__________ 19____

__________ வங்கி லிமிடெட்.

__________ வங்கி லிமிடெட் (இதன்பிறகு சொல்லப்பட்ட வங்கி என்று அழைக்கப்படுவது), கீழே கையொப்பமிட்டுள்ள என்னை/எங்களை, சொல்லப்பட்ட வங்கியில் உள்ள

என்னுடைய/எங்களுடைய கணக்கில் அதிகப்பற்றில் பணம் எடுப்பதற்கு, அல்லது சொல்லப்பட்ட வங்கியில் ஓர் அதிகப்பற்று, ரொக்கக் கடன் கணக்கினைத் திறப்பதற்கு அல்லது வேறுமுறையில் உதவியினைப் பெற்று சொல்லப்பட்ட வங்கிக்கு ஒரு பொறுப்பினை ஏற்பதற்கு, அனுமதியளிப்பதற்குப் பிரதிபலனாக, சொல்லப்பட்ட வங்கிக்கு $\frac{\text{என்னிடம்}}{\text{எங்களிடம்}}$ இருந்து செலுத்தவேண்டியுள்ள அல்லது இதன்பிறகு செலுத்தவேண்டியதாக ஆகக்கூடிய எல்லாத் தொகைகளையும், கேட்டபொழுது சொல்லப்பட்ட வங்கிக்குத் திரும்பச் செலுத்துவதற்கும், சொல்லப்பட்ட வங்கி அத்தொகைகளின் மீது, விதிக்கின்ற எல்லா வட்டிகளுக்கும் உத்தரவாதமாக, நான்/நாங்கள், இப்பொழுது வைப்புச் செய்யும் அல்லது சொல்லப்பட்ட வங்கியில் ஏற்கனவே நான்/நாங்கள் வைப்புச் செய்திருக்கக்கூடிய அல்லது என்னுடைய/எங்களுடைய சார்பில் அவர்களின் உடைமையில் இருக்கக்கூடிய எல்லா பங்குத் தொகுப்புக்களையும், பங்குகளையும் மற்றும் பிணையங்களையும், அத்தோடு, ஏற்கனவே வைப்புச் செய்யப்பட்டுள்ள பங்குத் தொகுப்புகள், பங்குகள், பிணையங்கள் ஆகியவைகளோடு அல்லது அவைகளுக்குப்பதிலாக, சொல்லப்பட்ட வங்கியில் நான்/நாங்கள் இதன்பின்னர் வைப்புச் செய்யக்கூடிய அல்லது என்னுடைய/எங்களுடைய சார்பில் அவர்களுடைய உடைமையில் வரக்கூடிய பங்குத் தொகுப்புகள், பங்குகள், பிணையங்கள் ஆகியவைகளையும், சொல்லப்பட்ட வங்கிக்கு நான்/நாங்கள் இதன்மூலம் அடகு வைக்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$, மற்றும், கீழே கையொப்பமிட்டுள்ள நான்/நாங்கள் இதன்மூலம், இதன்கீழ் சொல்லப்பட்டுள்ள காரியங்களுக்காக, சொல்லப்பட்ட வங்கியினுடைய ______ __________ ல் தற்போதைக்கு செயலாளராக அல்லது கணக்கராக உள்ளவரை, என்னுடைய/எங்களுடைய வக்காலத்தாராக அமைத்து நியமனம் செய்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$, மற்றும், இத்தகைய பங்குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள் ஆகியவைகளில் ஏதாவது ஒன்றுடன் இணைக்கப்பட்டுள்ள ஏதாவது முற்றுப்பெறாத மாற்றலை நிரப்பி முற்றுப்பெறச் செய்வதற்கும், மற்றும் அவருடைய பெயரை, அல்லது சொல்லப்பட்ட வங்கியினுடைய நியமனம் பெற்ற யாராவது ஒருவருடைய பெயரை அங்கு கூறப்பட்டுள்ள பங்குகள் மற்றும் பிணையங்களை மாற்றிப் பெறுபவராக, உள்ளிடு (insert) வதற்கும், மற்றும் கையொப்பமிடுவதற்கும், அல்லது சமயத்திற்கேற்றவாறு இத்தகைய பங்குத்

தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள் ஆகியவைகளின் மீது சொல்லப்பட்டுள்ள வங்கிக்கு உரிய உரிமையை முடிவான தாக ஆக்குவதற்கு அவசியமான அல்லது தேவையான ஏதாவது மாற்றலை அல்லது ஆவணத்தை கையொப்பமிட்டு, முத்திரை யிட்டு, நிறைவேற்றி ஒப்படைப்பு செய்வதற்கும், மற்றும் அவற்றை, அவை தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்களின் ஏடுகளில் பதிவு செய்து அங்கு குறிப்பிடப்பட்டுள்ள பங்குகள் மற்றும் பிணையங் களுக்காக புதிய பங்குச் சான்றுச் சீட்டினை அவருடைய சொந் தப் பெயரில் அல்லது, என்னுடைய/எங்களுடைய ஒப்புதல் அவ சியமின்றி அல்லது எனக்கு/எங்களுக்கு தகவலேதும் தரவேண் டிய அவசியமின்றி, சொல்லப்பட்ட வங்கியினுடைய ஏதாவது பணியாள் அல்லது நியமனம் பெற்றவருடைய பெயரில் பெறுவ தற்கும், அவருக்கு சிறப்பான அதிகாரத்தையும் உரிமையையும் அளிக்கிறோம். மேலும், என்னுடைய/எங்களுடைய ஒப்புதல் ஏதுமின்றி அல்லது எனக்கு/எங்களுக்கு தகவலேதும் தரவேண் டிய அவசியமின்றி, இத்தகைய எல்லா அல்லது ஏதாவது பங் குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள் ஆகியவை களை அடகு வைப்பதற்கு மற்றும் அல்லது, அவர் சரியென்று நினைக்கின்ற விலையில் மற்றும் முறையில், கட்டுப்பாடு ஏது மின்றி விற்றுவிடுவதற்கும் அதிகாரமளிக்கப்படுகின்றார். மற்றும், தற்போதைக்கு சொல்லப்பட்ட வங்கியினுடைய ____________ ல் செயலாளராக அல்லது கணக்கராக உள்ளவரின் வேண்டுகோளின் பேரில் கையொப்பமிடுவதற்கு அல்லது சமயத்திற்கேற்றவாறு இத் தகைய பங்குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள் ஆகியவைகளின்மீது, சொல்லப்பட்டுள்ள வங்கிக்கு உரிய உரி மையை முடிவானதாக ஆக்குவதற்கு அவசியமான அல்லது தேவையான ஏதாவது மாற்றலை அல்லது ஆவணத்தை கையொப்ப மிட்டு, முத்திரையிட்டு, நிறைவேற்றி ஒப்படைப்பு செய்வதற்கு நான்/நாங்கள் இதன்மூலம் இதன் மூலம் ஒப்புதல் அளிக்கி றேன்/றோம். மற்றும், இத்தகைய பங்குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள் ஆகிய எல்லாவற்றையும் அல்லது ஏதா வது ஒன்றினை மாற்றிக் கொடுப்பது அல்லது விற்பனை செய் வது தொடர்பாக, அல்லது அவைகளின் மதிப்பினை நிலையாக வைத்திருப்பதற்காக அல்லது அது தொடர்பாக வேறு இதர வகையில், அவர்களால் ஏற்கப்பட்டுள்ள விலைகள், கட்டணங் கள் மற்றும் செலவுகள் ஆகிய எல்லாவற்றையும், ஏதாவது அடகு வைப்பதன்மூலம் அல்லது விற்பனையின்மூலம் பெறுகின்ற பணத் திலிருந்து தாங்களே ஈடு செய்து கொள்வதற்கு நான்/நாங்கள்

சொல்லப்பட்ட வங்கிக்கு மேலும் அதிகாரமளிக்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$. மற்றும் இத்தகைய பங்குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள் ஆகியவைகளின் விற்பனைக்காக நியமிக்கப்பட்ட தரகர்கள் அல்லது இதர நபர்கள் ஆகியோரிடமிருந்து அல்லது அவர்கள் மூலமாக ஏற்பட்ட ஏதாவது நட்டத்திற்கு, அல்லது எந்தவகையிலுமான காரணத்திலிருந்து அல்லது காரணம் மூலமாக எழுகின்ற இத்தகைய பங்குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள் ஆகியவைகளின் மதிப்பில் ஏற்படும் நட்டம் அல்லது தேய்மானத்திற்கு சொல்லப்பட்ட வங்கி பொறுப்பாளியாகமாட்டாது என்று நான்/நாங்கள் அறிவிக்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$. மற்றும், ஏதாவது பற்றாக்குறை, அது எந்த வழிகளில் இருந்து தோன்றினாலும், எப்படித் தோன்றினாலும், அதற்காக வங்கிக்கு ஈடு செய்து, அதனை சொல்லப்பட்ட வங்கிக்கு கேட்டவுடன் செலுத்துவதற்கு நான்/நாங்கள் ஒப்புதல் அளிக்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$. மற்றும், சொல்லப்பட்ட வங்கிக்கு, என்னால் / எங்களால் செலுத்தப்படவேண்டியுள்ள, அல்லது ஒரு பகுதி செலுத்தப்படவேண்டியதாக உள்ள வேறு ஏதாவது கடனுக்கு, அல்லது எங்களால் அப்போது வருவித்துக் கொண்டுள்ள அல்லது வருவித்துக்கொள்ள வாய்ப்புள்ள பொறுப்பிற்குப் பிணையமாக, இத்தகைய எல்லா பங்குத் தொகுப்புக்கள், பங்குகள் மற்றும் பிணையங்கள் ஆகியவைகளின் மீது அல்லது (அவை விற்கப்பட்டால்) விற்பனைக்குப் பிறகு பெற்ற பணத்தின் மீது, சொல்லப்பட்ட வங்கி ஒரு பற்றுரிமையை (lien)க் கொண்டிருக்கும் என்பதற்கு, மேலும், ஒப்புதல் அளிக்கப்படுகின்றது. மற்றும், இந்த பங்குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள் ஆகியவைகளின் மீது செலுத்தப்படுவதற்கான அல்லது இனிமேல் செலுத்தப்படுகின்ற எல்லா பங்காதாயங்களையும். மேலூதியங்களையும் வசூல் செய்வதற்கு, மற்றும், சொல்லப்பட்ட பங்குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள், மற்றும் அவைகளின்மீது செலுத்தப்படத்தக்க பங்காதாயங்கள் மற்றும் மேலூதியங்கள் ஆகியவைகளின்மீதான உரிமையை, வங்கியிடத்தில் பயன் விளையத்தக்கமுறையில், ஒப்படைப்பதற்கு அல்லது வங்கி பெறுவதற்கு, அல்லது அவைகளின் விற்பனை அல்லது மாற்றலைச் செய்வதற்கு, அல்லது நிறுமம் கலைக்கப்படுகின்ற அல்லது புனரமைப்பு செய்யப்படுகின்ற தறுவாயில், சொல்லப்பட்ட வங்கியை, புதிய பங்குத் தொகுப்புக்களையும் பங்குகளையும் பெறுவதில் உதவுவதற்கு, அவசியமென ஆகக்கூடிய, மேற்கொண்டு தோன்றக்கூடிய ஆவணங்களைக் கையொப்பமிடு

வதற்கு, நான்/நாங்கள் சொல்லப்பட்ட வங்கிக்கு மேற்கொண்டும் அதிகாரமளிக்கி றேன்/றோம். மற்றும் இந்த பங்குத்தொகுப்புகள், பங்குகள், மற்றும் பிணையங்கள் ஆகியவைகளின் மதிப்பினை ஒரே சீராக வைத்திருப்பதற்கு, நான்/நாங்கள் மேலும் ஒப்புதல் அளிக்கிறேன்/அளிக்கிறோம். மற்றும், இத்தகைய பங்குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள் ஆகியவைகளின் மதிப்பில், ஒரு தற்காலிக அல்லது நிரந்தரமான, தேய்மானம் ஏற்படுகின்ற தறுவாயில், சொல்லப்பட்ட வங்கியின் அல்லது, சொல்லப்பட்ட வங்கியின் ______________ ல் தற்போதைக்குள்ள செயலாளர் அல்லது கணக்கர் ஆகியோருடைய வேண்டுகோளின்பேரில், சொல்லப்பட்ட வங்கிக்கு, இந்த பங்குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள், சொல்லப்பட்ட வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட அல்லது அதனுடைய உடைமையில் கொண்டுவரப்பட்ட தேதியில் கொண்டிருந்த சந்தை மதிப்பிற்கும், மேலே சொல்லப்பட்ட மாதிரி பணம் செலுத்தப்படவேண்டியதாக ஆகக்கூடிய தேதியில் கொண்டிருந்த சந்தை மதிப்பிற்கும் உள்ள வேறுபாட்டினைப் பணமாகச் செலுத்துவதற்கோ அல்லது, மதிப்பில் சந்தை வீழ்ச்சிக்குச் சமமாக, இதர, அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்களை ஆகியவைகளைச் சொல்லப்பட்ட வங்கியில் வைப்புச் செய்வதற்கோ ஒப்புதலளிக்கி றேன்/றோம். மற்றும், இத்தகைய வேண்டுகோளை நிறைவேற்ற நான்/நாங்கள் தவறுகின்ற தறுவாயில், அல்லது கேட்டவுடன் சொல்லப்பட்ட வங்கிக்கு, அப்போதைக்கு, செலுத்தப்படவேண்டியுள்ள பணம் முழுவதையும் அல்லது ஏதாவது ஒரு பகுதியை அல்லது சொல்லப்பட்ட வங்கிக்கு என்னால்/எங்களால் கொடுக்கவேண்டிதாக உள்ள பணத்தைச் செலுத்தத் தவறும் தறுவாயில், சொல்லப்பட்ட வங்கி அல்லது, சொல்லப்பட்ட வங்கியினுடைய ______________ ல் தற்போதைக்கு செயலாளர் அல்லது கணக்கர், இங்கு, அவைகளுக்கு அல்லது அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுவதையும் அல்லது ஏதாவது ஒரு பகுதியை உபயோகப்படுத்துவதற்கு நான்/நாங்கள் அதிகாரமளிக் கிறேன்/கிறோம். மற்றும் சொல்லப்பட்ட வங்கி அல்லது தற்போதைக்கு செயலாளராக அல்லது கணக்கராக உள்ளவர், இந்த உடன்பாட்டின்கீழ் அவர்களுடைய உடைமையில் இருக்கும்பொழுது இந்த பங்குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள் அடையும் ஏதாவது சேதாரம் அல்லது தேய்மானத்திற்குப் பதில் சொல்ல

வேண்டியவர்களாக அல்லது பொறுப்பாளிகளாக ஆகாது அல்லது ஆகமாட்டார் என்று நான்/நாங்கள் அறிவிப்பு செய்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$; சொல்லப்பட்ட வங்கி அல்லது தற்போதைக்கு செயலாளர் அல்லது கணக்கராக உள்ளவர், சொல்லப்பட்ட பங்குத் தொகுப்புகள், பங்குகள் மற்றும் பிணையங்கள் மீதான நட்டம் அல்லது தேய்மானத்தைத் தவிர்க்கும் பொருட்டு, ஏதாவது பணச் செலுத்துகைகளைச் செய்வதற்கு, அல்லது வேறு ஏதாவது செயலை அல்லது காரியத்தைச் செய்வதற்கு எந்தவகையிலான பொறுப்புக்கும் உட்பட்டவர்களல்லர். மற்றும், நான்/நாங்கள், சொல்லப்பட்ட வங்கியில் என்னால்/எங்களால் ஏற்கனவே வைப்புச் செய்யப்பட்டுள்ள, மற்றும் இப்போது வைப்புச் செய்யப்படுவதற்குள்ள, எல்லா பங்குத் தொகுப்புக்கள், பங்குகள் மற்றும் பிணையங்கள் ஆகியவைகளின் உரிமையாளர்/உரிமையாளர்கள் என்றும், மற்றும் அவைகள், இத்தகைய வைப்பிற்கு என்னுடைய/எங்களுடைய மனவிருப்பத்தின்கீழ் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ், ஏற்கப்பட்டுள்ளன என்றும் மற்றும் அவைகள் முந்தைய அடைமானம் எதற்கும் உட்பட்டவைகளல்ல என்றும் நான்/நாங்கள் மேலும் அறிவிக்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$. கடன் வாங்கியவர்/கள், இந்தப் பிணையம் இருக்கக்கூடிய காலத்தில், சொல்லப்பட்ட பங்குகளின்மீது செலுத்தப்படவேண்டியவைகளாக ஆகக்கூடிய எல்லா அழைப்புக்களுக்கும், சரியாகப் பணம் செலுத்துவார்கள்; மற்றும் இத்தகைய ஏதாவது அழைப்பின்மீது வங்கி செலுத்தக்கூடிய எல்லாப் பணங்களையும், அவைகளை வங்கி எந்தத் தேதியில் செலுத்தியிருக்கக்கூடுமோ அந்தத் தேதியில் இருந்து திரும்பச் செலுத்தப்படுகின்றவரையில் மேலே சொல்லப்பட்ட வீதத்தில் வட்டியுடன் சேர்த்து, கேட்டவுடன் வங்கிக்குத் திரும்பச் செலுத்துவார்/கள்; மற்றும் இவ்வாறு திரும்பச் செலுத்தப்படுகின்றவரையில், இத்தகைய பணங்களும் வட்டியும், இங்கு அடகு வைக்கப்பட்டுள்ள பங்குகளின்மீது அடைமானத்தைக் கொண்டிருக்கும்.

மற்றும் இதன்கீழ் எழுத்துமூலம் கொடுக்கத் தேவையான ஏதாவது அறிவிக்கை, வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள என்னுடைய/எங்களுடைய முகவரிக்கு எனக்கு/எங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தால் அல்லது இத்தகைய ஒரு முகவரி பதிவு செய்யப்படாத தறுவாயில், இறுதியாகத் தெரியக்கூடிய என்னுடைய/எங்களுடைய குடியிருப்பு இடத்திற்கு அல்லது ______________ ல் உள்ள தொழில் செய்யுமிடத்திற்கு அனுப்பப்பட்டு அந்த முகவரி அல்லது இடத்தில் விடப்பட்டிருந்தால் அல்லது மேலே சொல்

லப்பட்ட முகவரியில் அல்லது இடத்தில் அஞ்சல்மூலம் எனக்கு/எங்களுக்கு அனுப்பப்பட்டால், போதுமான முறையில் அது எங்களுக்குக் கொடுக்கப்பட்டதாக ஆகும் என்றும் இதன்மூலம் நான்/நாங்கள் ஒப்புதல் அளிக்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$. அஞ்சல்மூலம் அனுப்பப் படுகின்ற ஓர் அறிவிக்கை, அஞ்சல் செல்லுகின்ற உரிய முறையில், அது அனுப்பப்பட்டுள்ள முகவரியில் ஒப்படைப்பு செய்யப் படுகின்ற அந்த நேரத்தில், கொடுக்கப்பட்டதாகக் கருதப்படும்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து______________ஆம் ஆண்டு ______________ மாதம் ______________ தேதியாகிய இன்று சாக்ஷியுடன் நான்/நாங்கள் இங்கு கையொப்பமிட்டுள் $\frac{\text{ளேன்.}}{\text{ளோம்.}}$

__________________________முன்னிலையில்

_______________________ஆல் கையொப்பமிடப்பட்டது

முகவரி______________________________

படிவம் எண். 25(ஆ)

[நமூனா எண். 25(ஆ)]

பங்கு மாற்றல் (நமூனா) படிவம்
(Share Transfer Form)

இதன்பிறகு சொல்லப்பட்ட, உரிமை மாற்றம் பெறுபவர் என்று அழைக்கப்படுகின்ற, __________________ ஆல் எனக்குக் கொடுக்கப்பட்ட ரூ________ க்குப் பிரதிபலனாக _____________ சேர்ந்த______________என்ற நான், சொல்லப்பட்ட உரிமை மாற்றம் பெறுபவருக்கு, உரிமை மாற்றம் செய்கின்ற நேரத்தில் எந்த பல நிபந்தனைகளின் கீழ் நான் அவைகளை வைத்திருக்கின்றேனோ அதே நிபந்தனைகளுக்குட்பட்டு, சொல்லப்பட்ட மாற்றம் பெறுபவரான___________________, அவருடைய நிறைவேற்றாண்மையர்கள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் அவரால் அவைகளை ஒதுக்கப்பெறுபவர்கள் ஆகியோரிடத்தில் அவை இருக்குமாறு,___________________நிறுமம் லிமிடெட்டின் ஏடுகளில் என்னுடைய பெயரில் உள்ள _____________________ எண்ணிடப்பட்ட, ____________ பங்குகளை இதன்மூலம் உரிமை மாற்றிக்

கொடுக்கிறேன்; மற்றும்__________என்று சொல்லப்படும் நான் அதே நிபந்தனைகளுக்கு உட்பட்டு, சொல்லப்பட்ட பங்கு களை எடுத்துக் கொள்வதற்கு இதன்மூலம் ஒப்புதல் அளிக்கி றேன்.

19_____ ஆம் ஆண்டு__________ மாதம்__________
தேதியில் கையொப்பமிடப்பட்டது__________ சாக்ஷியினுடைய
முன்னிலையில் மேலேயுள்ள பெயர்
கொண்ட உரிமை மாற்றம் செய்பவ
ரால் கையொப்பமிடப்பட்டது விற்பனை செய்பவர்________
முகவரி____________________
__________சாக்ஷியினுடைய வாங்குபவர்__________
முன்னிலையில் மேலேயுள்ள தொழில்__________
பெயர் கொண்ட உரிமை மாற்றம் முகவரி ________ ________
பெறுபவரால் கையொப்பமிடப்பட்டது
முகவரி __________ ஏற்றுக்கொள்ளப்பட்டது__________
இயக்குநர்

வாங்குபவரின் மாதிரிக் கையொப்பம்

படிவம் எண். 25(இ)
(நமூனா எண். 25(இ))

பங்குகளின் மீதான பற்றுரிமை பற்றி நிறுமத்திற்கு அறிவிக்கை
(Notice of Lien on Shares to Company)

____________________ வங்கி லிமிடெட்

தேதி________________

பெறுநர்
செயலாளர்,
____________________ நிறுமம் லிட்.,
____

அன்புடையீர்,

________________ சேர்ந்த____________________ டைய பெய ரில் உள்ள உங்கள் நிறுமத்தினுடைய____________________ எண் கள் கொண்ட பங்குகளின்மீது நாங்கள் ஒரு பற்றுரிமையைக் கொண்டிருக்கிறோம் என்று தங்களுக்கு இதன்மூலம் பணிவுடன் அறிவிக்கின்றோம்,

இணைக்கப்பட்டுள்ள, அறிவிக்கையின் நகல்படியினை தயவு செய்து கையொப்பமிட்டு எங்களுக்குத் திரும்ப அனுப்பி வைக்கவும்; மற்றும் அதே சமயத்தில் மேலே சொல்லப்பட்ட பங்குகளின் மீது உள்ள முந்தைய அடைமானங்கள்பற்றி அறிவிக்கை எதனையும் தாங்கள் பெற்றுள்ளீர்களா என்றும் தயவு செய்து கூறவும்.

தங்கள் உண்மையுள்ள,

________________ வங்கி லிட்.டுக்காக

____

மேலாளர்.

இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கை நகலில் கீழ்க்கண்ட சான்றிதழ் மேலெழுதப்பட்டுள்ளது:

மேலேயுள்ள அறிவிக்கையின்படி ஒன்றினைப் பெற்றுக் கொண்டோம் என்று இதன்மூலம் நாங்கள் ஒப்புதல் அளிக்கிறோம்; மற்றும் பங்குகளின் மீதான முந்தைய அடைமானம் பற்றிய யாதொரு அறிவிக்கையையும் நாங்கள் இதுவரை பெறவில்லையென்று பணிவுடன் கூறுகின்றோம்.

________________ வங்கி லிட்.டுக்காக

________________ செயலாளர்.

படிவம் எண். 26
(நமூனா எண். 26)

வங்கிப் பொறுப்புறுதிக்கு எதிரான பொறுப்புறுதி
(Counter Guarantee For Bank's Guarantee)

பெறுநர்

________________ வங்கி லிமிடெட்.

____

அன்புடையீர்,

சில இயந்திரப் பொறி மற்றும் ________________ சம்பந்தமாக, சொல்லப்பட்ட ஒப்பந்தத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ள பேரங்கள் மற்றும் நிபந்தனைகளின்படி, ஒரு கட்சிக்காரராகிய எனக்கும், மறுகட்சிக்காரர்களாகிய திருவாளர்கள் ________________க்கும் இடையே செய்யப்பட்ட, ____________ தேதியிட்ட, மற்றும் எது தொடர்பாக, சொல்லப்பட்ட ________________க்குத் தங்களால்கொடுக்கப்பட்ட பொறுப்புறுதி பற்றி, ____________

தேதியிட்ட, இங்கு அதனுடைய படி அட்டவணையிடப்பட்டுக் காட்டப்பட்டுள்ள, ஒரு கடிதத்தைத் தாங்கள் அந்த நிறுமத்திற்கு எழுதியுள்ளீர்களோ, அந்த ஒப்பந்தத்தில் என்னுடைய கடமையை நிறைவேற்ற நான் தவறுகின்ற தறுவாயில், ______ ______ சேர்ந்த திருவாளர்கள் ______ க்கு, நிபந்தனையேதுமின்றி ரூ ______ தொகையை கொடுப்பதற்குத் தாங்கள் பெறுப்புறுதியளித்துள்ளதற்குப் பிரதிபலனாக ______ என்ற நான், ______ வங்கி லிமிடெட் ஆகிய உங்களுக்கு, மேலே குறிப்பிடப்பட்ட பொறுப்புறுதி சம்பந்தமாக, சொல்லப்பட்ட நிறுமத்திற்கு ஏதாவது சமயத்தில் அல்லது சமயங்களில், உங்களால் செலுத்தப்படும் எல்லாப் பணச் செலுத்துகைக்கும் பொறுப்புறுதியளிக்கிறேன்; மற்றும் தங்களிடத்தில் அல்லது தங்களுடைய முகவர்களிடத்தில், தங்களால் கொடுக்கப்பட்டுள்ள, சொல்லப்பட்ட பொறுப்புறுதியின்கீழ் அவசியமென ஆக்கப்படக்கூடிய செலுத்துகைகள் தொடர்பாகத் தங்களுக்கு நான் நிறைவேற்றவேண்டியதாக ஆகக்கூடிய கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டியதற்கெனக் குறித்து ஒதுக்கி ரூ ___ ___ தொகையை, 19 ______ போர்க் கடனின் உங்களிடத்தில் வைப்பில் வைத்திருப்பதற்கு உடன்படுகிறேன்; மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிணையங்களை, தங்களால் செய்யப்படும் செலுத்துகைகள் தொடர்பாக மற்றும் அவைகளில் இருந்து எழக்கூடிய ஏதாவது பற்றாக்குறைத் தொகைகள் யாவற்றையும் சரியாகத் திரும்பச் செலுத்துவதற்கு ஒரு பிணையமாகத் தங்களுக்கு அடைமானமாகக் கொடுப்பதற்கு மேற்கொண்டு நான் ஒப்புதலளிக்கிறேன்; மற்றும் சொல்லப்பட்ட ______ யுடன் ஆன உங்களுடைய நடவடிக்கைகளிலிருந்து எழக்கூடிய ஏதாவது நட்டம் அல்லது சேதாரம் ஆகியவைகளுக்கு எதிராகத் தங்களுக்கு ஈட்டுறுதி செய்வதற்கு மேற்கொண்டு நான் ஒப்புதலளிக்கிறேன்; மற்றும் சொல்லப்பட்ட ______ வைப்பின் எந்தப் பகுதியும், தங்களால் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புறுதியின்கீழ் செய்யப்படவேண்டியதாக ஆகக்கூடிய செலுத்துகைகளுக்கு அல்லாமல் வேறு எந்தக் காரியத்திற்கும் என்னால் உபயோகப்படுத்தப்படும் பொருட்டு கோரப்படமாட்டாது என்று மேற்கொண்டும் உறுதியளிக்கிறேன்; மற்றும் இந்தப் பொறுப்புறுதி, தங்களால் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புறுதி சம்பந்தப்பட்ட, சொல்லப்பட்ட கணக்கில் எந்த நேரத்திலாவது செலுத்தப்படவேண்டியதாக உள்ள எந்தத் தொகைக்கும் பொருந்தக்கூடிய ஒரு தொடர்ந்து செல்கின்ற பொறுப்புறுதியாகக் கொள்ளப்படும் என்பதற்கும் நான் மேற்கொண்டு ஒப்புதலளிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

______

அட்டவணை

________________ வங்கி லிமிடெட். இடமிருந்து ________________ க்கு எழுதப்பட்ட __________ தேதியிட்ட கடிதத்தின் நகல்.

19______ ஆம் ஆண்டு __________ மாதம் ________ ஆம் தேதியிடப்பட்ட, ____________ என்பவருக்கும் உங்களுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படி, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சில இயந்திரங்களின் கடைசிப் பகுதியை அனுப்பி வைத்த தேதிக்குப் பின்னர், கரும்பு ஆட்டுகின்ற முதல் பருவகாலம் முடியும்வரை அல்லது 19______ ஆம் ஆண்டு __________ மாதம் __________ தேதிவரை, ஆகிய இவற்றில், சொல்லப்பட்ட ஒப்பந்தத்தின் 5ஆவது சரத்தினுடைய உபசரத்து(இ)ல் குறிப்பிடப்பட்டுள்ள, அல்லது மிகவும் குறிப்பாக, சொல்லப்பட்ட ஒப்பந்தத்திற்கான அட்டவணையில் விவரித்துக் கூறப்பட்டுள்ள முறையில், __________ யை வாங்கிய விலையில் பாக்கித் தொகையான __________ யைச் செலுத்துவதற்காக, எது முதலில் விழுகின்றதோ அந்தத் தேதி வரை தாங்கள் கால அவகாசம் அளித்துள்ளதற்குப் பிரதிபலனாக __________ சேர்ந்த __________, அங்கு விதிக்கப்பட்டுள்ள முறையில் சொல்லப்பட்ட தொகையான __________ வுடைய செலுத்துகையை உத்தரவாதம் செய்வதற்காக, நாணய மாற்று வங்கி ஒன்றினுடைய பொறுப்புறுதியைப் பெறுவதற்கு ஒப்புதலளித்துள்ளபடியாலும், மற்றும் சொல்லப்பட்ட __________, இத்தகைய செலுத்துகையைப் பொறுப்புறுதி செய்யுமாறு எங்களைக் கேட்டுக் கொண்டுள்ளபடியாலும், இதன்பின்னர் வருகின்ற முறையில் அவ்வாறு செய்வதற்கு நாங்கள் ஒப்புதலளித்துள்ளோம்.

________________ வங்கி லிமிடெட் ஆகிய நாங்கள், சொல்லப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் மற்றும் முறையில் சொல்லப்பட்ட தொகையான __________ னுடைய நிபந்தனையற்ற செலுத்துகைக்கு இதன்மூலம், நிபந்தனையேதுமின்றி உங்களுக்குப் பொறுப்புறுதியளிக்கிறோம்.

சொல்லப்பட்ட ____________ மேலே சொல்லப்பட்டபடி தவனைநாளில் செலுத்துகையைச் செய்யத் தவறினால், சொல்லப்பட்ட தொகையான ________, செலுத்தத் தவறியதற்கான அறிவிக்கை அல்லது இதர அறிவிக்கை சொல்லப்பட்ட __________ க்கோ அல்லது எங்களுக்கோ கொடுக்கப்பட

வேண்டிய அவசியமின்றி, கேட்டவுடன், எங்களால் செலுத்தப் படக்கூடியதாகும்; எப்போதும் செல்லத்தக்க நிபந்தனை என்ன வென்றால், சொல்லப்பட்ட இயந்திரம், சொல்லப்பட்ட ஒப்பந்தத் தின் பேரங்களின்படி திருப்திகரமாக வேலை செய்யவில்லையென்று ______________ஆல் கண்டறியப்படுமானால், சொல்லப்பட்ட தொகையான __________, மேலே சொல்லப்பட்டபடி தவணை நாளில், சொல்லப்பட்ட ______________மற்றும் உங்களுடைய கூட்டுப் பெயரில், நாங்கள் திறக்கக்கூடிய, ஒரு கணக்கில் எங்களால் வைப்புச்செய்யப்படும்; மற்றும் அதைத் தொடர்ந்து, ஒப்பந்தம், நடுத்தீர்ப்பு, தீர்ப்புச்செய்தல் அல்லது நீதிமன்றச் தீர்ப்பு ஆணை ஆகியவைகளால், செலுத்துகையை நிறுத்தி வைப்பதற்கு அல்லது, தற்போதைய சரத்தினைப்போன்று, சொல்லப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள ஒரு சரத்தின்படி சொல்லப் பட்ட தொகையை வைப்புச் செய்யத் தவறுவதற்கு, சொல்லப் பட்ட ______________சரியான காரணங்களைக் கொண்டிருக்க வில்லையெனக் கண்டறியப்படுகின்ற தறுவாயில், சொல்லப்பட்ட தொகையை அதன்மீதான எல்லா வட்டித் தொகையையும் சேர்த்து, எடுத்துக்கொள்வதற்கு உங்களுக்கு உரிமையுண்டு; மற்றும், அவ்வாறன்றி வேறு தறுவாயில், வைப்புத்தொகையும் அதன்மீதான எல்லா வட்டியும், இத்தகைய ஒப்பந்தம், நடுத் தீர்ப்பு, தீர்ப்பு செய்தல் அல்லது நீதிமன்ற தீர்ப்பு ஆணை ஆகியவைகளின்படி செலுத்தப்படக்கூடியவையாகும்.

சொல்லப்பட்ட ______________க்கு ஏதாவது கால அவ காசம் அல்லது இதர சலுகையை நீங்கள் அளிக்கலாம்; அல்லது, அவரோடு, உங்கள் உரிமைக் கோரிக்கை மீது ஏதாவது தீர்ப்புச் செய்யப்பட்ட தொகையைப் பெறுவது சம்பந்தமாகவோ, இதர வகையாகவோ ஏதாவது ஏற்பாட்டினைச் செய்து கொள்ளலாம்; அல்லது உங்களுக்குத் தரவேண்டிய எங்களுடைய பொறுப்பினை விடுவிக்காமல், அல்லது குறைக்காமல், நீங்கள் வைத்திருக்கின்ற ஏதாவது பிணையத்தை அல்லது அதில் கொண்டுள்ள உரிமை யின் ஏதாவது பகுதியை விடுவிக்கலாம், அல்லது உங்களிட மிருந்து போகவிடலாம், மற்றும், இந்தப் பொறுப்புறுதியின் கீழ் அல்லது வேறு இதர உத்தரவாதத்தின்கீழ் அல்லது வேறு முறை யில், மேலே சொல்லப்பட்டபடி தற்போதைக்கு, செலுத்தப்பட வேண்டியதாக உள்ள சொல்லப்பட்ட பணத்தில் எதையேனும் வசூலிப்பதற்கு (திரும்பப் பெறுவதற்கு), நீங்கள் சரியானதென்று நினைக்கின்ற எந்த நேரத்திலும், எந்த ஒழுங்குமுறையிலும் மற் றும் எந்த வகையிலும், எல்லாப் பரிகாரங்களையும் அல்லது வழி முறைகளையும் கட்டாயமாகச் செயல்படுத்தலாம் அல்லது அம்

முறைகளின் உதவியை நாடலாம். சொல்லப்பட்ட__________ களின் மீது அல்லது அவைகளிலிருந்து உங்களால் பெறப்படுகின்ற எல்லாப் பங்காதாயங்களும் செலுத்துகைகளும், சொல்லப்பட்ட ________________ஆல் உங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வேறு ஏதாவது பணத்தொகை அல்லது தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் முறையில், எந்த வகையிலும், உங்களால் உபயோகப்படுத்தப்படலாம்; மற்றும் வேறு இதர கணக்கு எதற்கும் உபயோகப்படுத்தப்படாத இத்தகைய செலுத்துகைகள், உங்களுடைய இடத்தில் இருந்து உரிமை கோருவதற்கு அல்லது இத்தகைய பங்காதாயங்கள் மற்றும் செலுத்துகைகள், அல்லது இதர பிணையம் அல்லது பொறுப்புறுதி ஆகியவைகளின் நன்மையில் உரிமை கோருவதற்கு எங்களுக்கு யாதொரு உரிமையுமின்றி, சொல்லப்பட்ட________________க்கு எதிராகத் தாங்கள் கொண்டிருக்கக்கூடிய எல்லா உரிமைக் கோரிக்கைகள் சம்பந்தமான முழுத்தொகையையும் நீங்கள் பெற்றுக்கொள்ளுகின்ற வரையில், மொத்தக் கடன் தொகைக்கான செலுத்துகைகளாக எடுத்துக் கொள்ளப்பட்டு அதற்கு உபயோகப்படுத்தப்படலாம்.

கையொப்பம்________________

மேலாளர்.

______________ வங்கி லிட்.

படிவம் எண். 27

(நமூனா எண். 27)

கடனுறுதிச் சீட்டின் மீதான கடனுக்குப் பிணையமாக ஆபரணத்தை அடகு வைத்தல்

(Pledge of Jewellery as Security for Loan on Promissory Note)

____________ 19___

பெறுநர்

மேலாளர்,

____________________வங்கி லிமிடெட்

____

அன்புடையீர்,

ரூ__________க்கான என்னுடைய/எங்களுடைய________ ________ கடனுறுச் சீட்டுகளையும் மற்றும் அவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டியையும் சரியாகத் திரும்பச் செலுத்துவதற்கான பிணையமாக, அடியில் உள்ள பட்டியலில் கண்டபடி தோலாக்கணக்கில் எடையைக் கொண்டுள்ள (தங்களுடைய சராப் (Saraf) பினால் ரூ__________ல் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள), எனக்கு/எங்களுக்குச் சொந்தமான ஆபரணங்களைத் தயவுசெய்து பெற்றுக்கொள்ளவும்; மற்றும் மேலேயுள்ள பொறுப்புக்களைச் செலுத்துமாறு வங்கி ஒரு கோரிக்கையை எழுப்பியவுடன் அவைகளைச் செலுத்துவதற்கு நான்/நாங்கள் தவறுகின்ற தறுவாயில், சொல்லப்பட்ட பிணையத்தை விற்று, அதன்மூலம் பெறப்பட்டவைகளிலிருந்து வங்கி ஈடுசெய்து கொள்வதற்கு நான்/நாங்கள் இதன்மூலம் வங்கிக்கு அதிகாரமளிக்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$; மற்றும், அதன் தொடர்பாக எழுகின்ற ஏதாவது பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கும் நான்/நாங்கள், என்னை/எங்களை உட்படுத்திக்கொள்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$. கோரிக்கைக்கான அறிவிக்கை, என்னுடைய/எங்களுடைய அண்மையில் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அஞ்சலில் அனுப்பப்படுமானால் போதுமானதாகக் கருதப்படும்; மற்றும் என்னால்/எங்களால் பெறப்படவில்லையென்றாலுங்கூட, அடகு வைக்கப்பட்ட ஆபரணம் வங்கியால் விற்கப்படுவது பற்றிய ஒழுங்குமுறைபற்றி எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கமாட்டேன்/தெரிவிக்கமாட்டோம் என்று நான்/நாங்கள் உறுதியளிக்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$; மற்றும் விற்பனை ஒழுங்கற்ற முறையிலானது என்ற அடிப்படையில் வங்கிக்கு எதிராக நட்டஈடு ஏதும் கோருவதற்கும் நான்/நாங்கள் உரிமை கொள்ளமுடியாது.

மேலும், என்னால்/எங்களால் வைப்புச் செய்யப்பட்டுள்ள ஆபரணம் உண்மையான தங்கத்திலானது என்றும், எனக்கு/எங்களுக்குச் சொந்தமானது என்றும், அதன்மீது வேறு எவரும் பற்றுரிமை எதனையும் கொண்டிருக்கவில்லை என்றும் நான்/நாங்கள் உறுதி கூறுகி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$.

மேலே குறிப்பிடப்பட்ட, மற்றும் பிணையமாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ஆபரணங்களின் பட்டியல்.

எண்	விவரம்	மொத்த எடை	தோராயமான மதிப்பு	
			ரூ	பை
		மொத்தம்...		

தங்கள் உண்மையுள்ள,

____

படிவம் எண் 28
(நமூனா எண். 28)

ரொக்கக்கடனுக்கான ஒப்பந்தம்
(Agreement of Cash Credit)

____________________டைய (இதன் பின்னர் கடன் வாங்கியவர்கள் என்று அழைக்கப்படுபவர்கள்) வேண்டுகோளின் பேரில், ____________________உள்ள தங்களுடைய அலுவலகத்தின்மூலமாக, ____________________வங்கி லிமிடெட் ____________ தன்னுடைய ____________________உள்ள வங்கியின் கிளை ஏடுகளில், ரூ__________உயர்ந்த அளவு வரம்பு வரையிலுமான தொகைக்கு கடன் வாங்குபவர்களுடன் ஒரு ரொக்கக் கடன் கணக்கைத் திறப்பதற்கு உறுதியளிக்கப்பட்டு,

பின்வருமாறு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது:

1. இந்த உடன்பாட்டின்கீழ், வட்டியும் இதர கட்டணங்களும் சேர்ந்து இந்தக் கணக்கில் வரவேண்டியுள்ள மொத்தப் பாக்கித் தொகை, எந்த நேரத்திலும் ரூ______________ தொகைக்கும் அதிகமாகின்ற ஒரு தொகையைக் கடனாக அளிக்கும்படி வங்கி கோரப்படமாட்டாது. இருந்தபோதிலும், இந்தக் கணக்கில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வரவேண்டியதாக உள்ள முழுத் தொகையையும், இத்தகைய தொகை மேலே குறிப்பிடப்பட்ட வரம்பிற்கு அதிகமானதாக இருந்தபோதிலும்கூட, செலுத்துவதற்குக் கடன் வாங்கியவர்கள் பொறுப்பாளியாவார்கள்.

2. சொல்லப்பட்ட கணக்கின் அன்றாட பாக்கி இருப்பின் மீது, ______________ க்கு ______________ சதவீதத்தில் வட்டி கணக்கிடப்பட்டு, இக்கணக்கில் ஒவ்வொரு மாதத்தின் கடைசி வேலை நாள் அன்று பற்று வைக்கப்படும்; மற்றும் அது அசல் தொகையின் ஒரு பகுதியாக ஆகி மேலே சொல்லப்பட்ட வட்டிவீதத்தையும் கொண்டதாக இருக்கும்.

3. வருகின்ற 19 ________ ஆம் ஆண்டு ______________ மாதம் ________ தேதி அல்லது அதற்கு முந்தைய தேதியில் வங்கியால் கேட்கப்பட்டவுடன், கடன் பெறுபவர்கள், செலுத்தப் படும் தேதி வரையில், மேலே சொல்லப்பட்ட வீதத்திலான வட்டி யும் சேர்த்து, எந்தச் செலுத்துச் சீட்டு (Voucher) அல்லது பத்திரத்தையும் காட்டவேண்டிய அவசியமின்றி, சொல்லப்பட்ட வங்கியின் ஏடுகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளபடி, அவை சரி யாக உள்ளன என்பதற்குப் போதுமான அத்தாட்சியாக ஏற்றுக் கொள்வதற்கு கடன்பெறுபவர்கள் ஒப்புக்கொள்கின்ற, வங்கியால் விதிக்கப்படுகின்ற அல்லது ஏற்கப்படுகின்ற எல்லா கட்டணங் கள் மற்றும் செலவுகள் ஆகியவைகளுடன், சொல்லப்பட்ட கணக்கில் அப்போது செலுத்தப்படவேண்டியதாக, வங்கிக்குப் பாக்கியுள்ள தொகையை, கடன் பெறுபவர்கள் செலுத்துவார்கள்.

4. வங்கியினுடைய தலைமை அலுவலகம் ______________ ல் இருக்கின்றபடியால், கடன் பெறுபவர்களின்மீது ______________ ல் அல்லது ______________ ல் வழக்குத் தொடங்குவதற்கு, சொல்லப்பட்ட வங்கி தன்னுரிமை (liberty) கொண்டிருக்கும்.

5. ஒரு வழக்கினைத் தொடர்வதற்கு முன்னர், வங்கியால் ஏற்கப்படுகின்ற, திரும்பப் பெறக்கூடிய செலவுகள் அனைத்திற் கும், மற்றும் முழுத்தொகையையும் திரும்பப் பெறுகின்ற வரை யில் வழக்கு சம்பந்தப்பட்ட எல்லாச் செலவுகளுக்கும், இத்தகைய செலவுகள் நீதிமன்றத்தின் விதிகளின்படி அனுமதிக்கப்பட்டதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், கடன் பெறுபவர்கள் பொறுப் பாளியாவார்.

6. இத்தகைய கணக்கின்மீது எந்த நேரத்திலாவது வங்கிக் குச் செலுத்தவேண்டியதாக இருக்கக்கூடிய ஏதாவது தொகை யின் செலுத்துகையை உத்தரவாதம் செய்யும்பொருட்டு, இது சம்பந்தமாக ரூ ________ க்கான, ______________ தேதியிடப் பட்ட, ஒரு கடனுறுதிச் சீட்டு, கடன் பெறுபவர்களால் வங்கிக் குக் கொடுக்கப்பட்டுள்ளது.

7. ரிசர்வ் வங்கியின் தள்ளுபடி வீதம் ________ சதவீதம் அல்லது அதற்கு மேலாக இருக்கும்பொழுது, தாங்கள் சொல்லப் பட்ட ரிசர்வ் வங்கி வீதத்திற்கு மேலாக 1 சதவீதத்தை வட்டி யாகக் கொடுப்பார்கள் என்று கடன் பெறுபவர்கள் ஒப்புக்கொள் கின்றனர்.

8. கணக்கு தொடர்ந்து இருக்கின்ற காலத்தில், ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் அல்லது அதனுடைய பகுதிக்கு (தேவை யான உழைப்பைப் பொறுத்து) தற்செயலாக ஏற்படுகின்ற கட் டணங்களைச் செலுத்துவதற்கு கடன் பெறுபவர்கள் ஒப்புதலளிக் கிறார்கள்.

9. இந்தக் கணக்கில், எந்த நேரத்திலாவது, அவர்களுக்கு வரவில் இருக்கக்கூடிய எந்தத் தொகைக்கும், எந்த வட்டியை யும் பெறுவதற்கு கடன் பெறுபவர்களுக்கு உரிமையில்லை.

10. சொல்லப்பட்ட வரம்பான ரூ ________ முழுவதும் கடனாகப் பெறப்படாவிட்டாலுங்கூட, எந்த நேரத்திலும், முன் அறிவிக்கை ஏதுமின்றி, காரணம் ஏதும் காட்டாமல், கடன் கொடுப்பதை நிறுத்துவதற்கு வங்கி எப்பொழுதும் தன்னுரிமை கொண்டிருக்கும்.

11. வரம்பு வரையிலுமான கடன் உபயோகப்படுத்தப்படவே யில்லை, அல்லது சொல்லப்பட்ட பகுதிக்கும் குறைவான ஒரு தொகை கடனாகப் பெறப்பட்டுள்ளது, அல்லது கடன் பெறு பவர்களுக்குச் சாதகமாக வரவு இருப்பு உள்ளது என்றாலுங் கூட, மேலே சொல்லப்பட்ட வரம்பில் ________ பகுதிக்கு, குறிப் பிரிப்பட்ட வீதத்தில் வட்டி செலுத்துவதற்கும் கடன்பெறுபவர் கள் மேற்கொண்டு ஒப்புதலளிக்கின்றனர்.

சாட்சியளிக்கப்பட்டது :

____

முகவரி ________

____

தேதி ________

கடன்பெறுபவர் அல்லது கடன் பெறுபவர்கள் கையொப்பம்

____

முகவரி ________

____

தேதி ________ 19__

________ வங்கி லிட்டுக்காக

____

மேலாளர்

சாட்சியளிக்கப்பட்டது :

____

முகவரி ________

____

தேதி ________ 19__

தேதி ________ 19__

படிவம் எண் 29.

[நமூனா எண் 29]

தானியம் மற்றும் விளைபொருள் பிணையம் அல்லது அடைமானத்தின் மீது கடன்கள் அளிப்பதற்கான ஒப்பந்தம் (Agreement for Advances on the Security or Pledge of Grain or Produce)

தேதி ________ 19____

பெறுநர்

________ வங்கி லிமிடெட்.

பண்புடையீர்,

அவ்வப்போது, வங்கியினுடைய தன்விருப்புரிமைப்படி, வரையறுக்கப்பட்ட தொகைக்கு மற்றும் காலத்திற்கு, எனக்கு/எங்களுக்கு தானியங்கள் அல்லது இதர விளைபொருளின் பிணையத்தின் மீது வங்கி கடன்களை அளிப்பதற்குப் பிரதி பலனாக ________ல் வசிக்கின்ற நான்/நாங்கள், எனக்காக/எங்களுக்காகவும், உரிமை மாற்றம் பெற்றவர்கள், வாரிசுகள், நிறைவேற்றாண்மையர்கள் மற்றும் சொத்தாட்சி அதிகாரிகள் ஆகியோருக்காகவும், இதன் மூலம் பின்வருமாறு ஒப்புதல் அளிக்கிறோம்.

1. அவ்வாறு வழங்கப்படும் கடன்கள், கேட்டவுடன், செலுத்தப்படும் தேதிவரையிலான வட்டியுடன் செலுத்தப்பட வேண்டியவைகளாகும்.

2. கடன்களின் மீதான வட்டி டிசம்பர் 31 மற்றும் ஜூன் 30 ஆகிய தேதிகளில் விதிக்கப்பட்டு, ஆண்டுக்கு ________ சதவீதத்தில் செலுத்தப்படவேண்டியதாகும்; மற்றும் இந்தத் தேதிகளில் செலுத்தப்படவில்லையெனில் அவை அசல் தொகையுடன் சேர்க்கப்பட்டு, தவணை நாளில் இருந்து மேலே சொல்லப்பட்ட வீதத்தில் வட்டியைக் கொண்டதாக இருக்கும்; மற்றும் கடன் இறுதியாகத் தீர்க்கப்படும் தேதியில், அந்தத் தேதி வரையிலும் செலுத்த வேண்டிய வட்டி செலுத்தப்படும்.

3. கேட்கப்பட்டவுடன் கடன் திரும்பக் கொடுக்கப்படாவிட்டால், அப்பொழுது வங்கி, அடகு வைக்கப்பட்டுள்ள பிணையம் முழுவதையும் அல்லது ஒரு பகுதியை, மேலேயுள்ள முகவரிக்கு, பதிவுத் தபாலில் எனக்கு/எங்களுக்கு ________ நாள் அறிவிக்கையை அனுப்பிய பிறகு, வங்கி சரியென்று நினைக்கின்ற சமயத்தில், ஏலம் அல்லது தனி விற்பனை மூலம், விற்பனை செய்யலாம்; இருந்தபோதிலும், இத்தகைய விற்பனை காரணமாக எழுகின்ற எந்த நட்டத்திற்கும் வங்கி பொறுப்பாளியாகாது.

4. நான் நாங்கள், கீக்கண்ட முறையில் தானியம் அல்லது இதரவிளைபொருளை வங்கியிடம் ஒப்படைக்கஉறுதியளிக்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$.

(அ) தானியம் அல்லது இதர விளைபொருள், வங்கியினுடைய பணியாள் ஒருவரின் முன்னிலையில், பண்டகங்களில் சேமித்து வைக்கப்படும் அல்லது காட்டீஸ்களில் (khatties) நிரப்பி வைக்கப்படும்.

(ஆ) பண்டகங்கள் அல்லது காட்டீஸ்கள், தானியம் அல்லது இதர விளைபொருளின், எடை, அல்லது அளவீடு மற்றும் சந்தை மதிப்பு ஆகியவைகளோடு, எல்லா விவரங்களையும் கொண்ட இடாப்புடன் வங்கியினிடம் ஒப்படைக்கப்படும்.

(இ) இவ்வாறு ஒப்படைக்கப்படும் பண்டகம் மற்றும்/அல்லது காட்டீஸ் வங்கியினுடைய முழு உடைமையில் இருக்கும்; வட்டியும் சேர்த்து பாக்கியுள்ள கடன்தொகை திரும்பச் செலுத்தப்பட்டு, பண்டகங்கள் மற்றும்/அல்லது காட்டீஸ் என்னிடம்/எங்களிடம் திரும்ப ஒப்படைக்கப்படுகின்ற நேரம் வரையிலும், பண்டகத்தின் கட்டடங்களில் தங்களுடைய தர்வான்களை (Durwans) வைத்துக்கொள்ள வங்கி உரிமை பெற்றிருக்கும், மற்றும், அவைகளைத் திறப்பதற்கு அல்லது, அவைகளை எந்த விதத்திலாவது எடுத்துக்கொள்வதற்கு அல்லது அவைகளில் இருப்பவற்றை வேறு ஆள்களுக்கு ஒப்படைவு செய்வதற்கு எனக்கு/எங்களுக்கு உரிமையேதும் கிடையாது.

(ஈ) பண்டகங்கள் மற்றும் அல்லது காட்டீஸ் வங்கிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன, மற்றும் வங்கியின் தர்வான்கள் அங்கிருக்கிறார்கள் என்ற போதிலும், அவைகளில் உள்ளவைகளின் பாதுகாப்பிற்கு அல்லது சொல்லப்பட்ட பண்டகங்களை பாதுகாப்பதற்கு அல்லது அவைகள் எனன நிபந்தனைகளின் கீழ் வைத்திருக்கப்படுகின்றனவோ அவைகளை நிறைவேற்றுவதற்கு அல்லது கடைப்பிடிப்பதற்கு வங்கி எந்த வகையிலும் பொறுப்பாளியாகமாட்டாது; மற்றும் அவ்வாறு செய்ய வேண்டியது அவசியமெனில், எழுத்துமூலமான ஒரு விண்ணப்பத்தின்பேரில், பண்டகங்கள் மற்றும் அல்லது காட்டீஸ்களைச் சோதனை செய்வதற்காகத் திறப்பதற்கு என்னை/எங்களை வங்கி அனுமதிக்கும் என்பதை நன்கு தெரிந்து கொண்டு, திருட்டு மற்றும் மழை அல்லது இதர காரணங்களினால் அழிக்கப்படுதல் அல்லது சேதாரப்படுத்தப்படுதல் ஆகியவைகளிலிருந்து அவைகளைக் காப்பதற்கு பொறுப்பாளியாவதற்கு நான்/நாங்கள் இதன் மூலம் உறுதியளிக்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$.

5. அடைமானம் அளிக்கப்பட்டுள்ள தானியம் அல்லது விளைபொருளின், ______________ சதவீதத்திலான தெளிவான எச்ச ஓரத்தைக் கழித்து வருகின்ற, சந்தை மதிப்பினை, என்னால்/எங்களால் தரவேண்டியுள்ள தொகைக்கும் கீழ் வீழ்வதற்கு, எந்த நேரத்திலும் நான்/நாங்கள் அனுமதிக்கமாட் $\frac{\text{டேன்}}{\text{டோம்}}$ என்று இதன்மூலம் உறுதியளிக்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$; ஆனால் எந்த நேரத்திலாவது, எச்ச ஓரம், இந்தத் தொகைக்குக்கீழ் போய்விட்டது என்றால், அப்பொழுது, மேலேயுள்ள முகவரிக்கு, பதிவுத் தபால் மூலம், ______________ நாள் அறிவிக்கையை எனக்கு/எங்களுக்குக் கொடுத்த பின்னர், வங்கி, பிணையத்தை ஏலம் அல்லது தனி விற்பனைமூலம் விற்பனை செய்யலாம்.

6. அதனால் அங்கீகரிக்கப்படும் ஏதாவது காப்பீடு அலுவலகத்தில், வங்கிக்குத் திருப்தி ஏற்படுகின்ற வகையில், தானியம் மற்றும் விளைபொருளை அவைகளின் முழு மதிப்பிற்கும், எல்லாச் சமயங்களிலும், காப்பீடு செய்து வைத்து, அதன்மூலமான, சட்டப்படி செல்லுபடியாகக்கூடிய காப்பீடு பத்திரங்களை அதனிடம் நான்/நாங்கள் ஒப்படைக்கவில்லையென்றால் அப்பொழுது, அதனுடைய காப்பீட்டினை, முழு மதிப்பிற்கும் அல்லது அதனுடைய விருப்புரிமைப்படி ஏதாவது குறைந்த மதிப்பிற்கு, வங்கி ஏற்படுத்திக்கொள்ளலாம்; மற்றும் அவ்வாறு செலவழிக்கப்பட்ட எல்லாப் பணத்தையும் எனக்கு/எங்களுக்குக் கடனாக அளிக்கப்பட்ட பணமாகக் கருதிக்கொள்ளலாம்.

7. சொல்லப்பட்ட பண்டகங்களை அல்லது காட்டீஸ்களை பாதகமேதும் ஏற்படாமல் தங்கள் உடைமையில் வைத்திருப்பதற்கு, மற்றும் அவைகளை நல்ல நிலைமையில் பாதுகாத்து வைப்பதற்கு அவசியமான எல்லாப் பணங்களையும் வங்கி செலுத்திவிட்டு, அவ்வாறு செலவழிக்கப்பட்ட எல்லாப் பணத்தையும் எனக்கு/எங்களுக்குக் கடனாக அளிக்கப்பட்டவைகளாகக் கருதிக் கொள்ளலாம்.

8. இந்த ஒப்பந்தத்தின் பேரங்களின்படி வைத்திருக்கப்படும் பிணையம், என்னிடம்/எங்களிடமிருந்து வங்கிக்குச் செலுத்த வேண்டியதாகக்கூடிய எல்லாப் பணங்களின் இறுதி பாக்கித் தொகைக்காகத் தொடர்ந்து இருக்கக்கூடிய பிணையமாகச் செயல்படும்; மற்றும் சொல்லப்பட்ட பிணையமோ, இந்த உடன்பாடோ, ஒரு குறிப்பிட்ட கடன் மட்டும் திருப்பச் செலுத்தப்பட்டது,

அல்லது ஏதாவது ஒரு நேரத்தில் அல்லது அடிக்கடி வங்கியில் உள்ள என்னுடைய/எங்களுடைய கணக்கு வரவு இருப்பில் உள்ளது, (அல்லது இப்போது எங்களால் நடத்திச் செல்லப்படுகின்ற கூட்டுவணிக அமைப்பில், இறப்பு அல்லது வேறு காரணத்திற்காக ஏதாவது மாற்றம்) ஆகிய காரணங்களுக்காக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

9. இப்போது வைப்புச் செய்யப்பட்டுள்ள தானியம் அல்லது இதர விளைபொருளுக்கு அதிகமாக அல்லது பதிலாக, வங்கியில், பிணையமாக இதன்பிறகு வைப்புச் செய்யப்படும் எல்லா தானியமும் இதர விளைபொருளும், அதனோடு சேர்க்கப்பட்டு இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டு வைத்திருக்கப்படும்.

சாக்ஷி ________________ கையொப்பம் ________________

________________ ________________

படிவம் எண். 29(அ)
[நமூனா எண். 29(அ)]

கேட்டவுடன் திரும்பச் செலுத்துவதற்கான ஒரு ரொக்கக் கடனை உத்தரவாதம் செய்வதற்குச் சரக்குகளை அடகு வைத்தல்
(Pledge of Goods to Secure a Demand Cash Credit)

________________ வங்கி லிமிடெட்

____

எண் ________
தொகை ரூ ______________
பெயர்கள் ____________

(இதன் பின்னர் "வங்கி" என்று அழைக்கப்படுகின்ற) ______________ வங்கி லிமிடெட், (இதன் பின்னர் கடன் வாங்கியவர்(கள்) என்று அழைக்கப்படுகின்ற) ______________ டைய வேண்டுகோளின்பேரில், ______________ ல் உள்ள வங்கியின் ஏடுகளில், ரூ __________ அளவுக்கு, கடன் வாங்கியவர்களுக்குத் திறந்துள்ள அல்லது திறப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ள ஒரு ரொக்கக் கடன் கணக்கு வங்கியால் மூடப்படுகின்ற வரையிலும் செயலில் இருக்கவேண்டியதாகும்; மற்றும் வங்கியிடத்தில் அடகு வைக்கப்படுகின்ற சரக்குகளால் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கவேண்டியதாகும். கடன் பெற்றுள்ளவர்களால் கூட்

டாகவும் தனித்தும் கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளிக்கப்படவேண்டுமென்று இதன்மூலம் வங்கிக்கும் கடன் பெற்றுள்ளவர்களுக்கு மிடையே ஒப்புக் கொள்ளப்படுகின்றது :

முதலாவது :—ஏற்கனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள, பின்வருகின்ற அட்டவணையில் பொதுவான கருத்துகளில் விவரித்துக் கூறப்பட்டுள்ள சரக்குகள், அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ், ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள ஏதாவது தொகைக்கு அதிகப்படியான பிணையமாக இருக்கும்பொருட்டு அல்லது சொல்லப்பட்ட ரொக்கக் கடனுக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய ஏதாவது தொகை அல்லது தொகைகளுக்குப் பிணையமாக, அல்லது காலப் போக்கில், இந்த ஒப்பந்தத்தின்கீழ் அல்லது வேறு ஏதாவது முறையில் வங்கிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள அல்லது ஒப்படைப்புச் செய்யப்படக்கூடிய ஏதாவது சரக்குகளுக்குப் பதிலியாக மற்றும் பதிலாக, இதன்பின்னர் வங்கிக்கு ஒப்படைப்பு செய்யப்படக்கூடிய (இதன்பின்னர் ''பிணையங்கள்'' என்றழைக்கப்படுகின்ற) சரக்குகள், ஆகியவை இதன்மூலம் வங்கிக்கு அடைமானமாகக் கொடுக்கப்படுகின்றன; அல்லது குறிப்பிட்ட நேரத்தில், அல்லது சொல்லப்பட்ட ரொக்கக் கடன் கணக்கினை இறுதியாக மூடுகின்றபொழுது வங்கிக்குக் கொடுக்கவேண்டியுள்ள தொகையைக் கடன் பெற்றவர்கள் செலுத்துவதற்காக மற்றும் இங்கு 11ஆவது சரத்தில் சொல்லப்பட்டுள்ள எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் செலுத்துவதற்காக, வங்கிக்குப் பிணையமாக அவ்வாறு அடகு வைக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டியவைகளாக உள்ளன. இந்த ஒப்பந்தத்தினுடைய, இந்த மற்றும் தொடர்ந்து வருகின்ற சரத்துக்களில் உள்ள ''வங்கிக்குச் செலுத்தவேண்டியுள்ள பாக்கித் தொகை' என்ற கருத்து, சொல்லப்பட்ட ரொக்கக் கடன் கணக்கின்மீது அவ்வப்போது பாக்கியுள்ள அசல் தொகைகள், மற்றும் இதன்பின்னர் சொல்லப்பட்டுள்ள வீதத்தில் அன்றாடம் கணக்கிடப்படுகின்ற எல்லா வட்டி மற்றும் எல்லாக் கட்டணங்களின் தொகை மற்றும் பிணையங்கள் அல்லது அவைகளின் விற்பனை அல்லது வேறு வகையில் கைவிடுதல் சம்பந்தமாக ஏதாவது வழியில் வங்கி செலுத்தியிருக்கக்கூடிய அல்லது ஏற்றிருக்கக்கூடிய செலவுகள் ஆகியவைகளை உள்ளடக்கிய ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படும்.

இரண்டாவது :—இந்த (உடன்பாடு) ஒப்பந்தம் தொடர்ந்து இருக்கின்ற காலத்தில் கடன் பெற்றவர்(கள்), அப்போதைக்கு இந்தப் பிணையத்திற்கு உட்பட்டுள்ள, அல்லது உட்பட்டு இருக்கவேண்டுமென்று கருதப்படுகின்ற, ஏதாவது சரக்குகளை

அடகு வைக்கவோ, அல்லது வேறு வகையில் ஈடாகக் காட்டவோ அல்லது வில்லங்கப்படுத்தவோ மாட்டார்கள்; அல்லது இதற்குமுன்னர் வங்கிக்குக் கொடுக்கப்பட்டதாகக் கருதப்பட்ட பிணையத்தை நேர்மையற்ற முறையில் பாதிக்கும்படி எந்தச் செயலையும் செய்யவோ அல்லது அனுமதிக்கவோ மாட்டார்கள்.

மூன்றாவது :—கடன் பெற்றவர்(கள்), திரும்ப எடுத்துக்கொள்ளப்படுகின்ற சரக்குகளினுடைய கடன் மதிப்பு, சொல்லப்பட்ட கணக்கில் செலுத்தப்படுமானால் அல்லது இங்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகளுக்கு ஒத்த தன்மையுள்ள சரக்குகள் அல்லது அதேபோன்றுள்ள மற்றும் சமமதிப்புள்ள ஏதாவது ஒன்று அவ்வாறு திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்ட சரக்குகளுக்குப் பதிலியாகக் கொடுக்கப்படுமானால், வங்கியின் முன்கூட்டிய ஒப்புதலுடன், அவ்வப்போது, வங்கியிலிருந்து, அப்போதைக்கு வங்கிக்கு அடகு கொடுக்கப்பட்டு இந்த ஒப்பந்தத்திற்கு உட்பட்ட பிணையங்களின் ஒரு பகுதியாக இருக்கின்ற சரக்குகளில் எதையாவது திரும்ப எடுத்துக்கொள்வதற்கு உரிமை கொண்டிருப்பார்கள். இங்கேயுள்ள 6-வது சரத்துப்படி தேவையான எச்சஓரம் முழுமையாக வைத்திருக்கப்படுமானால், வங்கியினுடைய முன்கூட்டிய ஒப்புதலுடன், கடன் பெற்றவர் (கள்), சொல்லப்பட்ட கணக்கில், மேலே சொல்லப்பட்ட கடன் மதிப்பினை வங்கியில் செலுத்தவேண்டியது இல்லாமல், வங்கியிலிருந்து, அப்போதைக்கு வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ள சரக்குகளில் எதையாவது திரும்ப எடுத்துக்கொள்வதற்கு உரிமை கொண்டிருப்பார்கள் என்று எப்போதும் காப்புவாசகம் செய்யப்பட்டுள்ளது.

நான்காவது :—மேலே சொல்லப்பட்டபடி ஏற்கனவே ஒப்படைப்பு செய்யப்பட்ட அல்லது இதற்குப்பிறகு ஒப்படைப்பு செய்யப்படக்கூடிய எல்லா பிணையங்களும், தீயினால் ஏற்படக்கூடிய இடர்களுக்கு எதிராக, வங்கியினால் அங்கீகரிக்கப்படுகின்ற ஏதாவது காப்பீடு நிறுமம் அல்லது நிறுமங்களில், வங்கியின் பெயரில், இத்தகைய பிணையங்களின் முழுச்சந்தை மதிப்பிற்கு, கடன் பெற்றவரால்/பெற்றவர்களால் காப்பீடு செய்யப்படும்; மற்றும் எல்லா காப்பீடு பத்திரங்களும், இத்தகைய காப்பீட்டின்மீது செலுத்தப்படும் காப்பீடு கட்டணங்களுக்கான இரசீதுகளும் வங்கியிடம் ஒப்படைப்பு செய்யப்படும். கடன் பெற்றவர் (கள்) அவ்வாறு காப்பீடு செய்வதற்குத் தவறினால் அல்லது காப்பீடு பத்திரங்களை அல்லது காப்பீடு கட்டணங்களுக்கான இரசீதுகளை மேலே சொன்னபடி ஒப்படைப்பு செய்யத் தவறி

னால், இத்தகைய காப்பீட்டினை கடன் பெற்றவ $\frac{\text{ரின்}}{\text{ர்களின்}}$ செல வில் செய்துகொள்வதற்கு வங்கிக்கு உரிமையுண்டு.

ஐந்தாவது :—மேலே சொல்லப்பட்டபடி, இத்தகைய ஏதா வது காப்பீடுகளின்கீழ் பெறப்படுகின்ற எல்லாத் தொகைகளும், அப்போதைக்கு வங்கிக்கு வரவேண்டியுள்ள பாக்கித் தொகை யைத் தீர்ப்பதில், அல்லது தீர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும்; மற்றும் அங்கு ஏதாவது எச்சத்தொகை இருக்கின்ற தறுவாயில், அது, இங்கு 11-வது சரத்தில் உள்ள காப்புவாசகத்தின்படி பயன் படுத்தப்படும்.

ஆறாவது :—கடன் பெற்றவர் (கள்) வங்கிக்கு, பிணையங்களின் அடக்க விலை மற்றும் சந்தை மதிப்புபற்றிய அறிக்கைகளையும் (Statements) அனுப்பீடுகளையும் (returns) மற்றும் அவை மீதான முழு விளக்கத்தையும் தயார் செய்து அளிப்பார்(கள்) மற்றும் அவ்வப்போது வங்கி வேண்டுகின்றபடி, அதனை உறுதிப்படுத் துவதற்காகத் தேவையான அத்தாட்சிகளை ஏற்படுத்துவார்(கள்); மற்றும் வங்கிக்குச் சாதகமாக, அவ்வப்பொழுது, பிணையங்களின் சந்தை மதிப்பிற்கும், அப்போதைக்கு வங்கிக்குச் செலுத்தவேண் டியுள்ள பாக்கித் தொகைக்குமிடையே __________ சதவீதத் திலான எச்ச ஓரத்தை நிலையாக வைத்திருப்பார்(கள்). இத் தகைய எச்ச ஓரம், அவ்வப்பொழுது வங்கியால் நிர்ணயிக்கப் படுகின்ற, பிணையங்களின் பகிரங்கச் சந்தை மதிப்பின்மீது கணக்கிடப்படும்; மற்றும் கடன் பெற்றவ $\frac{\text{ரால்}}{\text{ர்களால்}}$, வங்கியால் அங்கீகரிக்கப்படவேண்டிய, அதிகப்படியான பிணையங்களை ஒப்படைப்பு செய்வதன்மூலமோ, அப்போதைக்கு பிணையங்களின் மீதான சந்தை மதிப்பு, வங்கிக்கு வரவேண்டியுள்ள தொகையின் மொத்தத்தோடு, மேலேயுள்ளபடி கணக்கிடப்படுகின்ற எச்ச ஓரத்தைக் கூட்டிவந்த தொகைக்குக் குறைவாக ஆன உடனே கடன் பெற்றவ $\frac{\text{ரால்}}{\text{ர்களால்}}$ ரொக்கச் செலுத்துகை செய்யப்படுவ தன்மூலமோ அது நிலையாக வைத்திருக்கப்படும்.

ஏழாவது :—அது முழுமையாகத் திரும்பச் செலுத்தப்படும் வரை, சொல்லப்பட்ட ரொக்கக் கடன் கணக்கில் செலுத்தப்பட வேண்டியதாக உள்ள அன்றாடப் பாக்கித் தொகையின்மீது, வங் கிக்குச் சாதகமாக, ஆண்டுக்கு __________ சதவீதத்திலான வட்டி கணக்கிடப்பட்டு விதிக்கப்படும்; மற்றும் வங்கியால் கேட்

கப்படுகின்ற அவ்வப்பொழுது கடன் பெற்றவர்களால் செலுத்தப்படும்.

எட்டாவது :—வங்கியால் கேட்கப்பட்டவுடன், கடன் பெற்றவர்(கள்), சொல்லப்பட்ட ரொக்கக் கடன் கணக்கில் அப்போதைக்கு வங்கிக்குச் செலுத்தவேண்டியதாக உள்ள பாக்கித் தொகையோடு, மேலே சொல்லப்பட்ட வீதத்தில் ஆன மேற்கொண்டு வருகின்ற எல்லா வட்டித் தொகைகள், மற்றும் செலுத்தப்படுகின்ற தேதி வரையிலான மேற்கொண்டு ஆகின்ற எல்லா கட்டணத் தொகை, மற்றும் (ஏதாவது இருப்பின்) செலவுகள் ஆகியவைகளையும் சேர்த்து வங்கிக்குச் செலுத்துவார்கள்; இங்கு இந்தச் சரத்தில் உள்ள எதுவும், மேலே சொல்லப்பட்ட வீதத்தில் அப்போதைக்குச் செலுத்தவேண்டியதாகவுள்ள வட்டியை மட்டும், அதே நேரத்தில், இத்தகைய வட்டியைத் தவிர்த்து வங்கிக்குச் செலுத்தவேண்டியுள்ள பாக்கித் தொகையைச் செலுத்துமாறு கோறாமல், செலுத்தும்படி, வங்கி கோருவதைத் தடுப்பதாகக் கருதப்படமாட்டாது.

ஒன்பதாவது :—கடன் பெற்றவர்(கள்), மேலே சொல்லப்பட்டபடி எச்ச ஓரத்தை வைத்திருப்பதற்குத் தவறினால் அல்லது கடன் பெற்றவர்(கள்), அப்போதைக்கு வங்கிக்குச் செலுத்த வேண்டியதாக உளள தொகையை, கேட்டவுடன் வங்கிக்குத் திரும்பச் செலுத்துவதற்குத் தவறினால் அல்லது அசட்டையாக இருந்தால், அல்லது கடன் பெற்றவர்(கள்) நொடித்தவர்(கள்) அல்லது செல்லாப்புள்ளி(கள்) ஆக ஆகின்ற அல்லது தீர்ப்பளிக்கப்படுகின்ற தறுவாயில், அல்லது ஒழுங்குப்படுத்து ஏற்பாடு (arrangement), சமரச ஏற்பாடு (composition) அல்லது கண்காணிப்பு ஏற்பாடு (Inspectorship) பத்திரம் ஏதாவது ஒன்றை நிறைவேற்றிக் கொடுத்தால், அல்லது கடன் பெற்றவர்களுடைய ஏதாவது சொத்தின் மீது அல்லது அதற்கு எதிராக, அந்தச் சொத்து இந்தப் பிணையத்திற்கு உட்பட்ட ஒன்றாக இருந்தாலும் இருக்காவிட்டாலும், ஏதாவது கடனுக்காகக் கைப்பற்றப் படுவதற்கான ஆணை, அல்லது நிறைவேற்றாணை விதிக்கப்பட்டுள்ளது அல்லது கட்டாயமாகத் திணிக்கப்பட்டுள்ளது என்கின்ற தறுவாயில், அல்லது (கடன் வாங்கியவர்கள் ஒரு கூட்டுப் பங்கு நிறுமமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும்) ஏதாவது நபர், கூட்டுவணிக நிறுவனம் அல்லது நிறுமம் கடன் வாங்கியவர்களின் சொத்து அல்லது அதனுடைய ஏதாவது ஒரு பகுதிக்கு, சொத்தாட்சி அதிகாரியை நியமிப்பதற்கான ஒரு ஆணைக்கு

விண்ணப்பம் செய்வதற்கு அல்லது பெறுவதற்கு ஏதாவது நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்ற தறுவாயில், அல்லது (கடன் பெற்றவர்(கள்) ஒரு கூட்டுப் பங்கு நிறுமமாக இருக்கின்ற தறுவாயில்), ஏதாவது நபர், கூட்டுவணிக நிறுவனம் அல்லது நிறுமம் கடன் பெற்றவர்கள் கலைக்கப்படுவதற்கான ஒரு ஆணைக்கு விண்ணப்பம் செய்தால் அல்லது அதனைப் பெற்றுக் கொண்டால் அல்லது கடன் பெற்றவர்(கள்) கலைக்கப்படுவதற்கு ஏதாவது தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அல்லது நிறைவேற்றும்பொருட்டு, ஏதாவது நபரால், கூட்டுவணிக நிறுவனத்தால் அல்லது நிறுமத்தால், இத்தகைய ஆணை வழங்கப்பட்டால் அல்லது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டால் அல்லது இத்தகைய ஏதாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், இவற்றில் எது முதலில் நடந்தாலும், உடனடியாக அல்லது அதன்பிறகு எந்த நேரத்திலாவது, கடன் பெற்றவர்களுக்கு எந்த அறிவிக்கையும் அனுப்பவேண்டிய அவசியமின்றி, கடன் பெற்றவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு வங்கிக்கு உள்ள உரிமை பாதிக்கப்படாமல், பொது ஏலம் அல்லது தனி ஒப்பந்தத்தின்மூலம், கட்டுப்பாடு ஏதுமின்றி, பிணையங்கள் முழுவதையும் அல்லது அவற்றில் ஏதாவது பகுதியை, ஒட்டு மொத்தமாகவோ, சிறு தொகுப்புகளாகவோ, தனித்தனியாகவோ விற்பது, அல்லது வேறு வகையில் கைவிடுவது, மற்றும் விற்றுவந்த நிகரத்தொகையை அப்போது வங்கிக்குச் செலுத்தவேண்டியதாக உள்ள பாக்கித் தொகையைத் தீர்ப்பதில் அல்லது தீர்ப்பதற்கு உபயோகப்படுத்துவது வங்கி சட்டப்படியாகச் செய்யக்கூடிய செயல்களாகும்.

பத்தாவது :—இத்தகைய விற்பனைமூலம் பெறப்பட்ட நிகரத் தொகை அப்போது வங்கிக்குச் செலுத்தவேண்டியதாக உள்ள பாக்கித் தொகையைத் தீர்ப்பதற்குப் போதுமானதாக இல்லையெனில், கடன் பெற்றவருக்கு/கடன் பெற்றவர்களுக்கு அல்லது அவர்களில் ஒருவர் அல்லது அதிகமானவர்களுக்கு வரவு இருப்பாக உள்ள அல்லது சொந்தமானதாக உள்ள, வங்கியின் கைகளில் இருக்கும் வேறு ஏதாவது பணம் அல்லது பணத்தை, அந்த நேரத்தில் வங்கிக்குச் செலுத்தவேண்டியதாக உள்ள பாக்கித் தொகையைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்துவதற்கு வங்கிக்கு உரிமையுண்டு; மற்றும் மேலே சொல்லப்பட்டபடி, வங்கியரின் கைகளில் அத்தகைய பணம் அல்லது பணங்கள் ஏதுமில்லை என்கின்ற தறுவாயில் அல்லது இத்தகைய பணம் அல்லது பணங்கள் இத்தகைய பாக்கித் தொகையை முழுமையாகத் தீர்ப்பதற்கு இன்னும் போதுமானவையாக இல்லை என்கின்ற தறுவாயில் கடன் பெற்றவர்(கள்), இதன்பின்னர் (செய்யப்பட்டுள்ள) எழுதப்பட்டுள்ள

12வது சரத்தில் உள்ளபடி தயாரிக்கப்பட்டு மற்றும் கையொப்ப மிடப்படுகின்ற ஒரு கணக்கினை அவர்களிடம் காட்டியவுடனே, அதன்படி, கடன் பெற்றவரால்/கடன் பெற்றவர்களால் செலுத்தப் படவேண்டியதாகத் தோன்றக்கூடிய ஏதாவது மேற்கொண்டு செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்துவதற்கு கடன் பெற்ற வர்(கள்) உறுதியளிப்பர் மற்றும் உடன்படுவர்; இங்கு அடங்கி யுள்ள எதுவும், சொல்லப்பட்ட எலலா அல்லது ஏதாவது பிணை ய்ங்கள் விற்கப்பட்டிருக்கமாட்டா எனினும், சொல்லப்பட்ட ரொக் கக் கடன் கணக்கின்மீது, கடன் பெற்றவரிடமிருந்து/கடன் பெற் றவர்களிடமிருந்து, அப்போதைக்கு, வங்கிக்கு வரவேண்டியதாக உள்ள பாக்கித் தொகையைக் கட்டாயமாகப் பெறுவதற்கு (வங்கி தன்னிடம் கொண்டிருக்குமென்று, இதன்மூலம், வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள) வங்கியின் உரிமை எதனையும் இல்லையென்று ஆக்குவதாக, மாறுபடும்படி செய்வதாக அல்லது வேறுவகையில் ஒரு தலைப்பட்சமாகப் பாதிப்பு அடையச் செய் வதாகக் கருதப்படமாட்டாது என்று எப்போதைக்கும் காப்பு வாசகம் செய்யப்படுகின்றது.

பதினொன்றாவது :—இத்தகைய விற்பனையின்மூலம் பெறு கின்ற நிகரத் தொகையில், வங்கிக்குச் செலுத்தவேண்டியுள்ள பாக்கித் தொகையை முழுமையாகச் செலுத்தியபிறகு, எச்சம் ஏதாவது அங்கு இருப்பின், வங்கி சொல்லப்பட்ட எச்சத் தொகை யைத் தன்னிடத்தில் இருத்தி வைத்து அதனை, கடன் பெற்ற வர்(கள்) அல்லது அவர்களில் ஒருவர் அல்லது அதற்கு மேற் பட்டவருக்குச் சொந்தமாக அப்போதைக்கு வங்கியின் கைகளில் ஏதாவது கணக்கில் அல்லது கணக்கின்கீழ், உள்ள ஏதாவது பணம் அல்லது பணங்கள் ஆகியவைகளோடு சேர்த்து, கடன் கள், கழிவு செய்யப்பட்ட மாற்றுச் சீட்டுக்கள், நாணயக்கடிதங் கள், பொறுப்புறுதிகள், ஈடுகாட்டுகள் அல்லது மாற்றுச் சீட்டு கள், கடனுறுதிச் சீட்டுகள், நாணயக் கடன்கள், ஆகியவைகள் மூலமாக, கடன் வாங்கியவரிடமிருந்து, அல்லது அவர்களில் ஒரு வர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டோரிடமிருந்து, தனித்த முறை யிலோ, அல்லது வேறு ஒரு நபர் அல்லது நபர்கள், கூட்டு வணிகம் அல்லது நிறுமம் ஆகியவைகளோடு சேர்த்தோ, வங் கிக்கு வரவேண்டியதாக உள்ள, அல்லது வரவேண்டியதாக ஆகக்கூடிய ஏதாவது அல்லது எல்லா பணத்தையும், அல்லது கடன் வாங்கியவர்கள், அல்லது அவர்களில் ஒருவர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் ஆகியோருக்கு எதிராக, வங்கி கொண் டிருக்கக்கூடிய, மாற்றுச் சீட்டுகள், கடனுறுதிச் சீட்டுகள், நாண யக் கடன்கள் ஆகியவைகள் உட்பட வேறு ஏதாவது கடன்

அல்லது பொறுப்பு, மற்றும் நடப்பிலுள்ள ஆனால் அப்போதைக்குச் செலுத்தவேண்டியதாக இல்லாத, அல்லது செலுத்தவேண்டிய, இதர பொறுப்புக்கள், அல்லது சட்டப்படியான அல்லது நியாயப்படியான இதர கோரிக்கைகள், அல்லது, ஒன்றுக்கொன்று சரிக்கட்டல், அல்லது ஒருவருக்கொருவர் உதவிக் கடன் சட்டம் (Law of Set-off or Mutual Credit) அனுமதிக்கக்கூடிய மேற்கூறிய கடன்கள், ஆகியவைகளோடு, இத்தகைய கடன் அல்லது கடன்கள் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து, அவைகள் எந்த வட்டிவீதத்தில் கொடுக்கப்பட்டுள்ளனவோ அந்த வீதத்திலான வட்டியையும் சேர்த்து, கடன் வாங்கியவர்கள் அல்லது அவர்களில் ஒருவர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர் திவாலானவராக ஆனாலும் அல்லது அறிவிக்கப்பட்டாலும், அல்லது கலைப்பில் இருந்தாலும், செலுத்துவதற்கு அல்லது கடனைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்துவதற்கு வங்கிக்குச் சட்டப்படி உரிமையுண்டு.

பன்னிரண்டாவது :—கடன் பெற்றவர்(கள்), இந்த ஒப்பந்தத்தின்கீழ், அவர்களிடமிருந்து வங்கிக்கு வரவேண்டியதாகக் கோரப்படுகின்ற ஏதாவது தொகை சரியானது என்பதற்கு முடிவான ஆதாரமாக, வேறு இதர செலுத்துச் சீட்டு, ஆவணம் அல்லது பத்திரம் எதனையும் காட்டவேண்டிய அவசியமின்றி, வங்கியினுடைய ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்டு, கணக்கர் அல்லது சரியான முறையில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வங்கியின் வேறு ஒரு அதிகாரியால் கையொப்பமிடப்பட்ட ஒரு கணக்கு அறிவிக்கையினை, ஏற்றுக்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கின் $\frac{\text{றார்}}{\text{றனர்}}$.

பதிமூன்றாவது :—இந்த ஒப்பந்தம் (உடன்பாடு) வங்கிக்கு அவ்வப்போது செலுத்தவேண்டியுள்ள பாக்கித் தொகைக்கு மற்றும் சொல்லப்பட்ட ரொக்கக் கடன் கணக்கில் செலுத்தவேண்டியதாக ஆகக்கூடிய இறுதிப்பாக்கித் தொகைக்கும் பிணையமாகச் செயல்படவேண்டியது ஆகும்; மற்றும், ஏதாவது நேரத்தில் அல்லது அடிக்கடி சொல்லப்பட்ட ரொக்கக் கடன் கணக்கு வரவு இருப்பில் கொண்டுவரப்பட்டது என்பதற்காகவோ, அல்லது அதிலிருந்து சொல்லப்பட்ட தொகையான ரூ __________ முழுவதும் எடுக்கப்பட்டு, அக்கடனுக்குப் பணம் செலுத்தப்பட்டு, அதன்பிறகு மீண்டும் திறக்கப்பட்டது என்பதற்காகவோ, இந்தப் பிணையத்தைப் பொறுத்தமட்டில், சொல்லப்பட்ட கணக்கு மூடப்பட்டதாகக் கருதப்படமாட்டாது; மற்றும் பிணையம் முழுவதும் தீர்ந்து போய்விட்டதாகக் கருதப்படமாட்டாது,

பதினான்காவது :—இந்த (உடன்பாடு) ஒப்பந்தம், இந்த உடன்பாட்டிற்குத் தொடர்பில்லாமல், தனித்த முறையில், கடன் பெற்றவருக்கு/கடன் பெற்றவர்களுக்கு வங்கியால் கொடுக்கப்பட்டுள்ள அல்லது கொடுக்கப்படுவதற்குள்ள இதர ஏதாவது கடன் சம்பந்தமாக, கடன் பெற்றவருக்கு/கடன் பெற்றவர்களுக்கு எதிராக வங்கிக்கு உள்ள உரிமைகளை அல்லது பரிகாரங்களைப் (remedies) பாதிக்காது என்பது எப்போதும் செயல்படத்தக்க காப்புவாசகம் ஆகும்.

பதினைந்தாவது :—கடன் பெற்றவர்(கள்) ஒரு கூட்டுவணிக நிறுவனமாகவோ அல்லது கூட்டுவணிக நிறுவனத்தின் உறுப்பினர்களாகவோ இருக்கும் தறுவாயில், இந்த ஒப்பந்தம் தொடர்ந்து இருக்கின்ற காலத்தில் இத்தகைய கூட்டுவணிக நிறுவனத்தின் அமைப்பில் ஏற்படுகின்ற எத்தகைய ஒரு மாற்றமும், கடன் பெற்றவர்(கள்) அல்லது அவர்களில் யாராவது ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர், ஆகியோருடைய பொறுப்பினைக் குறைக்கவோ அல்லது முற்றிலும் விடுவிக்கவோ செய்யாது.

கடன் பெற்றவர்(கள்), சாக்ஷியத்துடன், இங்கு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ______________ ஆண்டு ______________ மாதம் __________ நாள் ஆன இன்று அவருடைய (அவர்களுடைய கையொப்பத்தை இட்டுள்ளார் (இட்டுள்ளனர்).

முன்னே சொல்லப்பட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிணையங்களின் அட்டவணை :

———

படிவம் எண். 29(ஆ)
[நமூனா எண். 29(ஆ)]

பற்றுரிமைக் கடிதம்
(Letter of Lien)

______________ 19

பெறுநர்

மேலாளர்,

____________________ வங்கி லிமிடெட்,

____

ஐயா,

தங்களுடைய வங்கி, எனக்கு/எங்களுக்கு ரூ __________ க்கு ஒரு கடனை அளித்துள்ளதற்கு அல்லது (மொத்தத்தில் ரூ ___ க்கு அதிகப்படாத) கடனை அளிப்பதற்கு பிரதிபலனாக, நான்/நாங்கள், இங்கேயுள்ள அட்டவணையில் விவரித்துக் கூறப்பட்டுள்ள, ரூ __________ மதிப்பிற்கான சரக்குகளை இதன்மூலம் வங்கியிடம் வைப்புச் செய்து, அடைமானமாகக் கொடுத்து, இவ்வாறு, அதில் __________ சதவீத எச்ச ஓரத்தை ஏற்படுத்தி, சொல்லப்பட்ட கடன்களை, அவைகளின்மீதான ஆண்டுக்கு __________ சதவீதத்திலான அல்லது அவ்வப்போது ஒப்புக்கொள்ளப்பட்டு __________ *கால இடைவெளியில் கணக்கிடப்பட வேண்டிய வீதத்திலான வட்டி, சொல்லப்பட்ட சரக்குகள் தொடர்பாக வங்கியால் செலுத்தப்பட்ட, அல்லது ஏற்கப்பட்ட, தீ காப்பீடு கட்டணம், மற்றும் பண்டக மற்றும் இதர கட்டணங்கள் யாவும் சேர்த்து, கேட்டவுடன் செலுத்துவதற்குப் பிணையமாக வைக்கிறோம்.

வங்கிக்குப் போதுமான ரொக்கச் செலுத்துகைகளைச் செய்வதன்பேரில் அவ்வப்போது சரக்குகளை எடுத்துச் செல்வதற்கு எனக்கு/எங்களுக்கு உரிமையுண்டு; ஆனால் சொல்லப்பட்ட கடன்கள் அல்லது அவைகளின்மீதான ஏதாவது வட்டி அல்லது சொல்லப்பட்ட சரக்குகளின் மீதான காப்பீடு கட்டணம் அல்லது கட்டணங்கள் ஆகியவை தொடர்பாக ஏதாவது பணம் வங்கிக்குப் பாக்கி செலுத்தவேண்டியதாக இருக்கின்றவரையில், மேலே சொல்லப்பட்ட எச்ச ஓரத்தை, அதாவது, எந்த நேரத்திலும் வங்கிக்குச் செலுத்தவேண்டியதாக உள்ள பாக்கித்தொகை, வங்கியில் வைப்பாகச் செய்யப்பட்டு அடகு வைக்கப்பட்டுள்ள சரக்குகளின் மதிப்பிற்கு, 100க்கு __________ என்ற வீதத்தைவிட உயர்ந்த வீதத்தில் இல்லாதபடி, வைத்திருப்பதற்கு நான்/நாங்கள் இதன்மூலம் உடன்படுகி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$.

சொல்லப்பட்ட கடன்களின் தொகை, வட்டி மற்றும் கட்டணங்கள் யாவும் சேர்த்து கேட்கப்பட்டவுடன் வங்கிக்குச் செலுத்தப்படவில்லையென்ற தறுவாயில், அல்லது எந்த நேரத்திலாவது மேலேயுள்ள ஒப்பந்தப்படி, என்னிடம்/எங்களிடம் இருந்து வரவேண்டியுள்ள தொகைக்கும், பிணையத்தினுடைய சந்தை மதிப்

*சந்தர்ப்பத்திற்கேற்றவாறு, ''அரையாண்டு'', ''மாதத்திற்கு'' என்று இடையில் புகுத்தவும்.

பிற்கும் இடையேயான பிணைய எச்சஓரத்தை, அவ்வாறு செய்யும்படி எழுத்துமூலம் கேட்டுக்கொள்ளப்பட்ட பிறகு இருபத்தி நான்கு மணி நேரத்திற்கு, வைத்திருப்பதற்கு நான் / நாங்கள் தவறுகின்ற தறுவாயில், உடனே அல்லது அதற்குப்பிறகு எந்த நேரத்திலும், எந்தவித நிபந்தனையுமின்றி, சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாவற்றையும் அல்லது எதையேனும் விற்பதற்கு மற்றும் வேறுவகையில் கைவிடுவதற்கு மற்றும், இத்தகைய விற்பனையின் மூலம் பெறப்பட்ட நிகரத்தொகையை, அது போதுமானதாக உள்ள அளவு வரையிலும், அசல் தொகை மற்றும் சொல்லப்பட்ட கடன்கள் தொடர்பாக வட்டி, ஆகிய தொகைகளை, வங்கியால் ஏற்கப்பட்ட, கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவைகளோடு சேர்த்துத் தீர்ப்பதற்குப் பயன்படுத்துவதற்குச் சட்டப்படி வங்கிக்கு உரிமையுண்டு, மற்றும் வங்கியினுடைய மேலாளர், கணக்கர் அல்லது உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரியால் கையொப்பமிடப்பட்ட இத்தகைய விற்பனைக்கான வங்கியினுடைய கணக்கை, இத்தகைய விற்பனையின் மூலம் பெறப்பட்ட தொகை, மற்றும் அது தொடர்பான கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவைகள் சரியாக உள்ளன என்பதற்குப் போதுமான அத்தாட்சியாக ஏற்றுக்கொள்வதற்கு நான்/நாங்கள் ஒப்புக்கொள் $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$.

இத்தகைய விற்பனை மூலம் பெறப்பட்ட நிகரத்தொகை, சொல்லப்பட்ட வங்கியினுடைய கணக்கில் காட்டப்பட்டுள்ளபடி, வட்டி மற்றும் கட்டணங்கள் ஆகியவைகளுடன் சேர்த்து சொல்லப்பட்ட கடன்கள் தொடர்பாகச் செலுத்தவேண்டியதாகப் பாக்கியுள்ள முழுத் தொகையையும் தீர்ப்பதற்குப் போதுமானதாக இல்லையெனில், சொல்லப்பட்ட கணக்கு அனுப்பிவைக்கப்பட்டவுடனே, அதன்கீழ் என்னால்/எங்களால் செலுத்தப்படவேண்டியதாக உள்ள ஏதாவது பாக்கித்தொகையை வங்கிக்குச் செலுத்துவதற்கு நான்/நாங்கள் ஒப்புதல் அளிக்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$.

ஒப்பந்தத்தின் கீழ், அடைமானம் வைக்கப்பட்டுள்ள சரக்குகளின்மீது வங்கிக்கு உள்ள பற்றுரிமை, நான்/நாங்கள் (அல்லது எவராவது அல்லது எங்களில் ஒருவர்), வேறு ஏதாவது கணக்கில், தனியாகவோ அல்லது வேறு இதர நபர் அல்லது நபர்களுடன் கூட்டாகவோ, வங்கிக்கு கடன்பட்டவராக ஆகக்கூடிய அல்லது பொறுப்பாளியாக ஆகக்கூடிய ஏதாவது இதர பண அல்லது பணங்களின் தொகைக்குங்கூட பொருந்தும்.

இதன்கீழ் செலுத்தப்படவேண்டிய வட்டி மற்றும் கட்டணங்கள் சேர்த்து எல்லாத் தொகைகளும் செலுத்தப்பட்டவுடன், இவ்வாறு வைப்புச்செய்யப்பட்டு, அடைமானம் வைக்கப்பட்டு அதுவரை விற்கப்படாமல் உள்ள சரக்குகளின் ஏதாவது பகுதி, எனக்கு/எங்களுக்குத் திருப்பித் தரப்படும் மற்றும், சொல்லப்பட்ட சரக்குகளின் ஏதாவது விற்பனை மூலம் பெறப்பட்ட நிகரத் தொகையில் மீதமுள்ள ஏதாவது தொகை எனக்கு / எங்களுக்கு அல்லது நான்/நாங்கள் கட்டளையிடுகின்றபடி கொடுக்கப்படும்.

____

கையொப்பம்/கையொப்பங்கள்

(மறுபுறம் பின்வரும் அட்டவணை அச்சிடப்பட்டுள்ளது)

அட்டவணை

அடையாளங்கள்	இடாப்புத் தேதி	சிப்பங்கள் அல்லது கட்டுமானங்கள்	சரக்குகளின் விவரம்

—

படிவம் எண். 30

(நமூனா எண். 30)

பொறுப்புரிமை இரசீது
(Trust Receipt)

________________ 19 ____

பெறுநர்

________________ வங்கி லிமிடெட்.,

____

________________ உள்ள அவர்களுடைய அலுவலகத்தின் மீது ____________ ஆல் எழுதப்பட்டு, சொல்லப்பட்ட அவர்களுடைய அலுவலகத்தால் ஏற்பு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள (பணவிடை) மாற்றுச் சீட்டிற்கு உரிய முறையில் பணம் செலுத்தப்படுவதற்குத் துணைப்பிணையமாக வங்கிக்கு

அடகு வைக்கப்பட்டுள்ள, அடியில் கண்ட விவரங்களின் படி யான சரக்குகளுக்கான கப்பல் அனுப்பீடு ஆவணங்களை வங்கி என்னிடம் கொடுப்பதற்குப் பிரதிபலனாக, சொல்லப்பட்ட சரக்கு களை, வங்கியினுடைய பொறுப்புரிமையராக மற்றும் வங்கியின் சார்பாக, இறக்கி, சேமிப்பு செய்து, வைத்திருப்பதற்கு, நான்/நாங்கள் இதன் மூலம் ஒப்புதல் அளிக்கிறோம்; மற்றும் விற்பனை செய்து பெறப்படும் தொகைகள், வங்கியினுடைய பொறுப்புரி மையர் என்ற முறையில், என்னால்/எங்களால் பெற்றுக் கொள்ளப் பட்டு, பெறப்படுகின்ற அவ்வப்பொழுது வங்கியிடம் செலுத்தப் பட்டு, இத்தகைய செலுத்துகை எந்தக் கணக்கில் செலுத்தப் பட்டுள்ளது என்று, அதே நேரத்தில், நான்/நாங்கள் வங்கிக்கு அதற்கெனத் தகவல் அளிப் $\frac{\text{பேன்}}{\text{போம்}}$; மற்றும், இந்த அல்லது இதரவழிகளின் மூலம், சொல்லப்பட்ட மாற்றுச்சீட்டிற்கு, எல்லா கட்டணங்கள் மற்றும் கழிவுகள் ஆகியவைகளுடன் சேர்த்து, பணம் செலுத்துவதற்குப் போதிய நிதியினை, முதிர்வு நாளுக்கு ____________ நாட்களுக்குக் குறையாமல், முன்னர், வங்கிக்கு ஒதுக்கிக் கொடுப்பதற்கு நான்/நாங்கள் பொறுப்பேற்றுக்கொள்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$.

சரக்குகளை தீவிபத்துக்கு எதிராக முழுமையாகக் காப்பீடு செய்து வைப்பதற்கும், காப்பீடு செய்பவர்களிடமிருந்து பெறு கின்ற எல்லாத் தொகைகளையும் வங்கியிடம் கொடுத்துவிடுவ தற்கும் நான்/நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கி $\frac{\text{றேன்}}{\text{றோம்}}$; இதற் கிடைப்பட்ட நேரத்தில், காப்பீடு பத்திரங்கள், என்னால்/எங்க ளால், வங்கிக்குப் பொறுப்புரிமையர் என்ற முறையிலும் வங்கி யின் சார்பாகவும் வைத்திருக்கப்படும்.

இங்கு அடங்கியுள்ள எதனையும் பாதிக்காத முறையில், எந்த நேரத்திலும் செய்யப்படக்கூடிய, எழுத்துமூலமான, வங்கி யினுடைய கோரிக்கையின் பேரில் உடனே, நான்/நாங்கள், சொல்லப்பட்ட கப்பல் அனுப்பீடு ஆவணங்கள், தீ காப்பீடு பத்திரங்கள் ஆகியவைகளை அல்லது அவைகளில் ஏதாவது ஒன்றை வங்கிக்குத் திரும்ப அனுப்பி வைப் $\frac{\text{பேன்}}{\text{போம்}}$, அல்லது சொல்லப்பட்ட சரக்குகளை அல்லது அவற்றில் ஏதாவது ஒரு பகு தியை வங்கியிடத்தில் ஒப்படைப்பு செய் $\frac{\text{வேன்}}{\text{வோம்}}$.

மாற்றுச்சீட்டுகள் மற்றும் சரக்குகளின் விவரங்கள்

மாற்றுச்சீட்டுத் தொகை		தவணை	சரக்குகளின் விவரம்	குறிகள் மற்றும் எண்கள்	கப்பல்
ரூ.	பை				

கையொப்பம்

படிவம் எண். 31

(நமூனா எண். 31)

காப்பீடு திட்டாவணத்தை, உரிமை மாற்றிக் கொடுத்தவரின் சொந்தப் பொறுப்புக்களை உத்தரவாதம் செய்யும்பொருட்டு உரிமை மாற்றிக் கொடுத்தல்

(Assignment of the Life Policy to Secure Assignor's own Liabilities)

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ______ ஆம் ஆண்டு ______ மாதம் ______ நாளில் ______ சேர்ந்த ______ ஐ (இதன் பின்னர் "உரிமை மாற்றம் செய்பவர்" என்றழைக்கப்படுபவர்; "உரிமை மாற்றம் செய்பவர்" என்னும் சொல், இங்கு வருகின்ற சூழ்நிலைகளின் தேவைக்கேற்றபடியும், அவைகள் ஏற்றுக்கொள்ளுகின்றபடியும், அவருடைய வாரிசுகள், சட்டப்படியான சார்பாளர்கள், நிறைவேற்றாண்மையர்கள், சொத்து நிர்வாகிகள் அல்லது உரிமை ஒதுக்கப்பெற்றவர்கள் ஆகியவர்களையும் உள்ளடக்கிய ஒன்றாகும்) ஒரு கட்சிக்காரராகவும், ______ வங்கி லிமிடெட்டை (இதன் பின்னர் "வங்கி" என்றழைக்கப்படுவது; இங்கு "வங்கி" என்னுஞ் சொல், இங்கு வருகின்ற சூழ்நிலைகளின் தேவைக்கேற்றபடியும், அவைகள் ஏற்றுக் கொள்ளுகின்றபடியும், அவர்களுடைய வழி மரபினர்கள் (Successors), உரிமை ஒதுக்கப் பெற்றவர்கள் ஆகியவர்களையும் உள்ளடக்கிய

ஒன்றாகும்) மற்றொரு கட்சிக்காரராகவும் கொண்டு, அவர்களுக்கிடையேயான, எழுத்துமூலமான இந்த ஒப்பந்தம், இதன் மூலம் கொடுக்கப்படுகின்ற பிணையத்தை நிறைவேற்றும் பொருட்டு, உரிமை மாற்றம் செய்பவர், அதனுடைய பயனைப் பெறுகின்ற உரிமையாளர் என்ற முறையில், இதன் மூலம் வங்கிக்கு, உரிமை மாற்றம் செய்பவரான ________________ ன் ஆயுள் மீது ________________ காப்பீடு நிறுமம் லிமிடெட் - ஆல், ரூ. __________ க்கான, 19 ஆம் ஆண்டு ________ மாதம் ________ ஆம் தேதியிட்ட ____________ எண்ணிட்ட காப்பீடு திட்டாவணத்தால் அளிக்கப்பட்டுள்ள உரிமை எல்லாவற்றையும் உரிமை மாற்றம் செய்து கொடுக்கிறார் என்றும், காப்பீடு செய்யப்பட்ட எல்லாப்பணத்தையும் மற்றும் நன்மைகளையும், அல்லது அந்தப் பத்திரத்தின் மூலம் அல்லது அதன் கீழ் செலுத்தப்படக்கூடிய, மற்றும் அந்தத் திட்டாவணத்தின் மூலம் அல்லது அதன் கீழ் காப்பீடு செய்யப்பட்ட, அல்லது செலுத்தப்படவேண்டிய எல்லாப் பணத்தையும், நன்மைகளையும் மற்றும் அதன் மூலமான முழு நன்மையையும், இதன்பின்னர் அடங்கியுள்ள, மீட்பு செய்வது தொடர்பான காப்புவாசகத்திற்கு உட்பட்டு, வைத்திருக்கிறார் என்று கூறுகின்றது. உரிமை மாற்றம் செய்பவரிடமிருந்தோ, அல்லது அவரால் தனித்தோ, அல்லது கூட்டுவணிகத்தில் உள்ள ஒரு நபரோடு அல்லது நபர்களோடு கூட்டாகவோ அல்லது வேறு வகையிலோ, மற்றும் வங்கிக் கணக்கின்மீது அல்லது ஏதாவது கழிவின் மீது அல்லது இதர கணக்கின் மீது அல்லது வழக்கமான வங்கிக் கட்டணங்கள் உட்பட வேறு ஏதாவது இதர காரியம், அல்லது பொருள் தொடர்பாக, முதன்மைக் கடனாளி என்ற முறையிலோ, பிணையாளி என்ற முறையிலோ, அப்போதைக்கு வங்கிக்குக் கொடுக்கவேண்டியுள்ள பாக்கித் தொகை எல்லாவற்றையும், எல்லாப் பணத்தையும், கேட்டவுடன், உரிமை மாற்றம் செய்தவர் வங்கிக்குச் செலுத்தினால், அதன்பிறகு எந்த நேரத்திலும், உரிமை மாற்றம் செய்பவரின் வேண்டுகோளின்படி, அவருடைய செலவில், இங்கு உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ள காப்பீடு திட்டாவணத்தை, அவருக்கு, வங்கி மறுஉரிமை மாற்றிக் கொடுக்கும் அல்லது அவர் கட்டளையிடுகின்றபடி செய்யும். மற்றும் சொல்லப்பட்ட காப்பீடு திட்டாவணம் தொடர்பாகச் செலுத்தவேண்டியதாக ஆகக்கூடிய காப்பீடு கட்டணங்கள், மற்றும் இதர எல்லாப் பணங்களையும் காலந்தாழ்த்தாது செலுத்துவதாகவும் மற்றும் அதனைச் செல்லுபடியாகத்தக்கதாக வைத்திருப்பதற்கு அவசியமான நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பதற்கும், மற்றும் இத்தகைய காப்பீடு கட்டணங்கள் செலுத்தப்பட்டதற்கான இரசீதுகளை, காப்பீடு கட்டணங்கள் செலுத்தப்படு

வதற்காக அனுமதிக்கப்படுகின்ற சலுகை நாட்கள் முடிவடை வதற்குக் குறைந்தது____________முழு நாட்களுக்கு முன்னர் வங்கியிடம் கொடுத்துவிடுவார் என்றும் உரிமை மாற்றம் செய் பவர் வங்கியுடன் இதன் மூலம் ஒப்பந்தம் செய்துகொள்கிறார். மற்றும், மேலே சொல்லப்பட்டபடி குறிப்பிட்ட காலத்திற்குள், ஏதாவது காப்பீடு கட்டணம் செலுத்தப்பட்டதற்கான இரசீதினை ஒப்படைப்பதற்கு, உரிமை மாற்றம் செய்பவர் தவறினார் என்றால், அவ்வாறு செய்வது சரியென்று அவர்கள் நினைத்தால், வங்கி அத்தகைய காப்பீடு கட்டணம் அல்லது கட்டணங்களைச் செலுத்திவிட்டு அத்தொகைக்கு உரிமை மாற்றல் செய்பவரின் கணக்கைப் பற்று வைத்துக்கொள்ளலாம் என்று இதன்மூலம் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. இதன்பிறகு எந்தநேரத்திலும் அல் லது நேரங்களிலும், உரிமை மாற்றல் செய்பவரின் ஒப்புதல் அல்லது இசைவு எதனையும் பெறவேண்டிய நிபந்தனையின்றி, தங்களுடைய தன்னிச்சையான அதிகாரத்தின்படி, சொல்லப் பட்ட காப்பீடு நிறுமத்திற்கு, சொல்லப்பட்ட காப்பீடு திட்டா வணம், பணம், மற்றும் மனையிடம் ஆகியவைகளை விற்றுவிடு வதற்கு, மற்றும்/அல்லது கைவிட்டுவிடுவதற்கு, அல்லது யாராவது இதர நபருக்கு அல்லது நபர்களுக்கு, அவர் அல்லது அவர்கள் யாராயிருந்தபோதிலும், அவைகளைத் தன்னிச்சைப்படி பொது ஏலம் அல்லது தனிப்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் விற்பதற்கு அல் லது வேறுவகையில் கைவிடுவதற்கு, மற்றும்/அல்லது அச்சமயத் தில் சரியென்று தோன்றுகிறபடி, உரிமை தொடர்பான நிபந்தனை கள் அல்லது கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு அல்லது இதர முறையில், முழு உரிமையோடு, விற்பனைக்கான ஏதாவது ஒப் பந்தத்தின்மூலம் வாங்குவதற்கு, அல்லது அந்த ஒப்பந்தத்தைத் தள்ளுபடி செய்வதற்கு, மற்றும் அதன்மூலம் எழுகின்ற நட்டத் திற்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு ஏதுமின்றி மறுவிற் பனை செய்வதற்கு, மற்றும் மேலே சொல்லப்பட்ட காரியங்களுக் காக, அல்லது அவைகளில் ஏதாவது ஒன்றிற்காக, அவர்கள் சரியென்று நினைக்கின்றபடி, எல்லா காப்பீட்டினையும் அல்லது இதர காரியங்களையும் செய்து நிறைவேற்றுவதற்கு, மற்றும் சொல்லப்பட்ட காப்பீடு திட்டாவணத்தைக் கைவிடு விற்பனை மூலம் அல்லது இதர வகையில் கைவிடுதல் மூலம் வருகின்ற பணங்கள் அல்லது நன்மைகளைப் பெற்றுக்கொண்டு, அதே பணங்களில் இருந்து, சொல்லப்பட்ட பொருள்களின் பிணையத் தின்மீது வரவேண்டியுள்ள அல்லது கடனாகவுள்ள எல்லாப் பணங்களையும் மற்றும் அவைகளைச் செலுத்தத் தவறியது காரண மாக ஏற்பட்ட, அல்லது இந்த அதிகாரத்தை நிறைவேற்றுவது தொடர்பாக எழுந்த எல்லாக் கட்டணங்கள் மற்றும் செலவுகள்

ஆகியவைகளைச் செலுத்துவதற்கு, அல்லது இருத்திவைத்துப் பின்னர் கடனைத் தீர்த்துக்கொள்வதற்கு வங்கிக்குச் சட்டப்படி எப்போதும் அதிகாரமுண்டு என்றும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. மற்றும் உரிமை மாற்றல் செய்பவர், சொல்லப்பட்ட காப்பீடு திட்டாவணம் செல்லுபடியாகத்தக்கதாக தொடர்ந்து செயலில் இருக்கின்ற ஒன்று என்றும், மற்றும் பறிமுதல் செய்யப்பட்டோ, அல்லது வேறுவகையில் சொல்லத்தகாததாகவோ அல்லது தவிர் தகு பத்திரமாக ஆகக்கூடியதாகவோ இல்லையென்றும் வங்கியுடன் ஒப்பந்தமேற்படுத்திக்கொண்டுள்ளார். ஏதாவது கணக்கினை, இதர காரியத்தை அல்லது பொருளை, அவை எப்படிப் பட்டவைகளாக இருப்பினும், தீர்வு செய்வதைப் பொருட்படுத்தாது இந்தப் பிணையம், தொடர்ந்து செல்லுகின்ற ஒரு பிணையமாக இருக்குமென்று இதன்மூலம் அறிவிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளவும் படுகின்றது; மற்றும் இந்தக் காப்புவாசகம் எப்போதும் பொருந்தக்கூடியதாகும்; மற்றும் அது (பிணையம்), இப்போது அல்லது இதன்பின்னர், உரிமை மாற்றல் செய்பவரின் கணக்கில் அல்லது கணக்கின்பேரில் வங்கி வைத்திருக்கின்ற ஏதாவது பிணையம் அல்லது பிணையங்களோடு மேற்கொண்டு பெறப்பட்ட ஒன்றாகவும், அவைகளை எந்தவகையிலும் பாதிக்காததாகவும், உள்ளது ஆகும். உரிமை மாற்றல் செய்பவர், சொல்லப்பட்ட காப்பீடு திட்டாவணம், பணங்கள், பயன்கள் மற்றும் மனையகம் ஆகியவைகளை, அல்லது அவைகளில் ஏதாவது ஒரு பகுதியை மீட்பு செய்துகொள்வதற்குத் தனக்குள்ள நியாய உரிமையை, வில்லங்கம் செய்துள்ளார் (encumbered) அல்லது வேறு வகையில் தன்னிடமிருந்து கைவிட்டுவிட்டார் என்பதற்கான அறிவிக்கையை அவர்கள் பெறுகின்ற தறுவாயில், வங்கி, அப்போதுள்ள நடப்புக் கணக்கினை மூடிவிட்டு, உரிமை மாற்றல் செய்பவரோடு ஒரு புதிய கணக்கினைத் திறப்பதற்கு வங்கிக்கு உரிமையுண்டு என்றும், இத்தகைய புதிய கணக்கில், உரிமை மாற்றல் செய்பவருக்குச் சாதகமாக வரவில் கொண்டுவரப்படுகின்ற பணம் எதுவும், மேலே சொல்லப்பட்டது போன்ற அறிவிக்கையை அவர்கள் பெறுகின்ற நேரத்தில், சொல்லப்பட்ட மூடப்பட்ட கணக்கின் மீது வங்கிக்கு வரவேண்டியதாகவுள்ள ஏதாவது தொகையைத் தீர்வு செய்வதற்காக, அல்லது அத்தகைய விளைவினை ஏற்படுத்துவதற்காக சரிக்கட்டக்கூடாது என்றும், இதன்மூலம் மேற்கொண்டும் அறிவிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்படுகிறது.

மேலே எழுதப்பட்டுள்ள தேதி மற்றும் ஆண்டில், இந்த ஒப்பந்தங்களில் சம்பந்தப்பட்டுள்ள கட்சிக்காரர்கள், சாட்சியங்களுடன் தங்கள் கையொப்பங்களை இங்கு இட்டுள்ளனர்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால் கையொப்பமிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு, ______________________________

____

____

ஆகியோர் முன்னிலையில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இலச்சினை (Seal)

படிவம் எண். 31(அ)
[நமூனா எண். 31(அ)]

ஆயுள் காப்பீடு திட்டாவணத்தை மறு உரிமை மாற்றல் செய்தல்
(Re-Assignment of Life Policy)

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ______________ ஆம் ஆண்டு ______________________ மாதம் ______________ தேதியில் இங்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள __________________________ வங்கி லிமிடெட்-ஐ (இதன் பின்னர் "வங்கி" என்றழைக்கப்படுவது) ஒரு கட்சிக்காரராகவும், இங்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ____________ ______________________________ ஐ (இதன்பின்னர் அடகு கொடுத்தவர் என்று அழைக்கப்படுபவர்) மற்றொரு கட்சிக்காரராகவும் கொண்டு, அவர்களுக்கிடையேயான, எழுத்துமூலமான இந்த உடன்படிக்கை, அடகு பெற்றவர்கள் என்ற முறையில், வங்கி, அடகு கொடுத்தவருக்கு, அவருடைய ஆயுளின்மீது, அவருக்கு ______________________ காப்பீடு நிறுமம் லிமிடெட் ஆல் வழங்கப்பட்டுள்ள, 19____________ ஆம் ஆண்டு ____________________ மாதம் ______________ தேதியிடப்பட்ட, ______________________ எண்ணிடப்பட்டு, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காப்பீடு திட்டாவணத்தை, அடகு கொடுத்தவருக்கு, எழுத்துமூலமான ஒப்பந்தத்தினால் உத்தரவாதம் செய்யப்பட்டிருந்த எல்லா அசல் தொகைகள், வட்டி ஆகியவைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, அடகு கொடுத்தவரே வைத்துக்கொள்ளும்பொருட்டு, இதன்மூலம் உரிமை மாற்றிக் கொடுக்கின்றது. மேலே முதலில் எழுதப்பட்டுள்ள ____________ நாளில், மற்றும் ஆண்டில், வங்கி, சாட்சியங்களுடன் தங்கள் முத்திரையை இவ்விடத்தில் இட்டுள்ளது.

படிவம் எண். 31(ஆ)
[நமூனா எண். 31(ஆ)]

காப்பீடு நிறுமத்திற்கு, உரிமை மாற்றல் பற்றிய அறிவிக்கை
(Notice of Assignment to the Insurance Co.)

____________ வங்கி லிமிடெட்
____________ 19 ____

மேலாளர்,
____________ காப்பீடு நிறுமம் லிட்.,
____

பண்புடையீர்,

உங்களுடைய நிறுமத்தினுடைய ____________ எண் கொண்ட காப்பீடு திட்டடாவணத்தினால் யாருடைய ஆயுள் காப்பீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த, ____________ சேர்ந்த ____________, 19 ____________ ஆம் ஆண்டு, ____________ மாதம் ____________ நாள் தேதியிடப்பட்ட எழுத்து மூலமான உடன்படிக்கையின்மூலம், சொல்லப்பட்ட தன்னுடைய காப்பீடு திட்டாவணத்தை ____________ வங்கி லிமிடெட்டிற்கு உரிமை மாற்றிக் கொடுத்துள்ளார் என்பதை இதன் மூலம் தங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தயவுகூர்ந்து, இந்த அறிவிக்கையைப் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதலை அளிக்கவும்; மற்றும் இந்தக் காப்பீடு திட்டாவணத்தின்மீதான ஏதாவது முந்தைய அடைமானம் பற்றித் தாங்கள் அறிவிக்கை எதையேனும் பெற்றுள்ளீர்களா என்பது பற்றியும் எனக்குத் தெரியப்படுத்தவும்.

பதிவுக் கட்டணம் செலுத்தும் வகையில், ரூ ____________ க்கான தபால் தலைகளை இத்துடன் அனுப்புகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
____
மேலாளர்.

படிவம் எண் 32
(நமூனா எண். 32)

கடன் கணக்கின் மீதான கடனை உத்தரவாதம் செய்வதற்கு வங்கிக்குச் சாதகமாக அடைமானப் பத்திரம்
(Mortgage-Deed in Favour of Bank to Secure Indebtedness on Loan Account)

19___________ ஆம் ஆண்டு, ____________ மாதம் ____________ தேதியில், எழுத்துமூலமான இந்த ஒப்பந்தம், ____________ சேர்ந்த ____________ ஐ (இதன் பின்னர் அடைமானம் கொடுத்தவர் என அழைக்கப்படுபவர்; அடைமானம் கொடுத்தவர் என்னும் சொல், இங்கு, அவருடைய வாரிசுகள், நிறைவேற்றாண்மையர்கள், சொத்தாட்சியதிகாரிகள் மற்றும் உரிமை மாற்றிப் பெற்றவர்கள் ஆகியோரையும் குறிக்கும்) ஒரு கட்சிக்காரராகவும், இந்திய நிறுமங்களின் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு, தன்னுடைய பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை ____________ இல் கொண்டுள்ள, ஒரு கூட்டுப்பங்கு நிறுமமாகிய ____________ வங்கி லிமிடெட்டை (இதன் பின்னர் வங்கி என்று அழைக்கப்படுவது; வங்கி என்னும் சொல், இங்கு அதனுடைய சொத்தினை உரிமை மாற்றிப் பெற்றவர்களையும் குறிக்கும்) மற்றொரு கட்சிக்காரராகவும் கொண்டு, அவர்களுக்கிடையே செய்யப்பட்டுள்ளது.

அடைமானம் கொடுத்தவர், இங்கேயுள்ள அட்டவணையில் விவரித்துக் கூறப்பட்டுள்ள மற்றும் வில்லங்கம் ஏதுமில்லாத, அடைமானம் கொடுக்கப்படுவதற்கெனக் கருதப்பட்டுள்ள, வீட்டு மனையிடங்கள், நிலங்கள், வாரிசு உரிமைச் சொத்துக்கள் மற்றும் மனையகங்கள் ஆகியவைகளை உடைமை கொண்டுள்ளவரும் அவைகளின் உரிமையாளருமாவார்; மற்றும், வங்கி, அடைமானம் கொடுத்தவருக்கு ரூ____________ க்கு மட்டுமான தொகையை, வட்டியுடன் சேர்த்து அது திரும்பச் செலுத்தப்படுவதை, இதன்பின்னர் காணப்படுகின்ற முறையில் உத்தரவாதம் செய்யப்பட்டு, கடனாக அளிப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளது.

இப்போது இந்த ஒப்பந்தம் பின்வருமாறு சரத்துகளைக் கொண்டுள்ளது :

I சொல்லப்பட்ட ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, அடைமானப் பொருட்களின் அடைமானத்தை நிறைவேற்றிக் கொடுப்பதன் பேரில் அல்லது அதற்கு முன்னர், வங்கியால்,

அடைமானம் கொடுத்தவருக்கு ரூ__________ஆன தொகையை அதனைப் பெற்றுக் கொண்டதற்கு இதன் மூலம் அடைமானம் கொடுத்தவர் ஒப்புதலளிக்கிறார்) கடனாக அளிப்பதற்குப் பிரதி பயனாக, அடைமானம் கொடுத்தவர், வங்கியுடன் பின்வருமாறு ஒப்பந்தம் செய்து கொள்கிறார்.

(1) முழுக்கடனும் முழுமையாக______________யில், அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட்டுவிடுகின்றன முறையில், சொல்லப்பட்ட அசல் தொகையான ரூ__________ஐ, ரூ________க்கான, ஒரே அளவிலான அரையாண்டுத் தவணைகளில், ______________இருந்து தொடங்கி ஒவ்வொரு ஆண்டும், ___________முதல் தேதியிலும்___________முதல் தேதியிலும், அதன் மீது பாக்கியுள்ள ஏதாவது வட்டியையும் சேர்த்து அடைமானம் கொடுத்தவர் வங்கிக்குச் செலுத்துவார்,

(2) மேற்கொண்டு, சொல்லப்பட்ட அடைமானப் பொருள்களால் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ள அசல் தொகையின் மீது ஆண்டு ஒன்றிற்கு______________சதவீதத்தில் வட்டியையும் அடைமானம் கொடுத்தவர் செலுத்துவார்,

(3) வங்கிக்குச் செலுத்தவேண்டியதாகப் பாக்கியுள்ள, அசல் தொகை, மற்றும் வட்டி, அல்லது அவற்றில் ஏதாவது ஒரு பகுதியைத் திரும்பப்பெறும் பொருட்டு, வங்கி ஏதாவது வழக்கினைத் தொடரவேண்டியுள்ள தறுவாயில், அடைமானம் கொடுத்தவர், __________ மற்றும் __________ ஆகியவைகளின் மீதான, அரையாண்டுக்கொருமுறை கணக்கிடப்படவேண்டிய, சரத்து I(2)-இல் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்திலான வட்டியை, பணம் திரும்பப்பெறப்படுகின்ற வரையில் வங்கிக்குச் செலுத்துவார். மற்றும், இந்த உடன்படிக்கைகளின் கீழ் செலுத்தப்படவேண்டிய ஆறுமாதத்திற்கான வட்டி எந்தநேரத்திலாவது பாக்கியாக இருந்து செலுத்தப்படாமல் இருக்குமனால், அப்போது, அவ்வாறு பாக்கியாகவுள்ள வட்டி அசல் தொகையாக மாற்றப்பட்டு, செலுத்தப்படுகின்ற வரையில், அரையாண்டுக்கொருமுறை கணக்கிடப்படக் கூடிய, மேலே சொல்லப்பட்ட ஆண்டிற்கு __________வீதத்திலான வட்டியைக் கொண்டிருக்கும்.

(4) இந்தப் பிணையம் செயலில் இருக்கின்றவரையில், இதன்மூலம் அடைமானம் செய்யப்பட்டுள்ள, சொல்லப்பட்ட மனையகங்ளைத் தன்னுடைய சொந்தச் செலவில், மிகவும் பழுதில்லாத முறையிலும், வாடகைக்கு விடக்கூடிய நிலையிலும் அடைமானம் கொடுத்தவர் வைத்திருப்பார் மற்றும் வைத்திருக்க வேண்டும்,

(5) இந்த அடைமானத்தின் கீழ் செலுத்தப்படவேண்டிய அசல் தொகைக்கான தவணைகள், அல்லது வட்டி, இத்தகைய அசல்தொகைத் தவணைகள், அல்லது வட்டி, செலுத்தப்படுவதற்காக இங்கு முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் செலுத்தப்படவில்லையெனில், அப்பொழுது செலுத்தப்படாமல் பாக்கியுள்ள அசல் தொகை முழுவதும், பாக்கியுள்ள வட்டியோடு சேர்த்து வங்கிக்கு உடனே செலுத்தப்படவேண்டியதாகும்; மற்றும் சொத்து மாற்றல் சட்டத்தின் (Transfer of Property Act) கீழ் சாதாரணமாக அடைமானத்தைப் பெற்றுள்ள ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய பரிகாரங்களில் ஏதாவது ஒன்றினை வங்கி உடனே செயல்படுத்தலாம்.

(6) இந்த அடைமானங்கள் ஏற்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள், அடைமானம் கொடுக்கப்பட்ட கட்டம், மற்றும் மனையகங்களில் தகுதியற்ற நிலையிலுள்ள பகுதிகளை, அல்லது அவைகளில் ஏதாவது ஒரு பகுதியை அல்லது பகுதிகளை, தீயினால் ஏற்படக்கூடிய நட்டம் அல்லது சேதாரத்திலிருந்து, அவற்றின் முழுமதிப்பிற்கு, வங்கியால் அங்கீகரிக்கப்படவேண்டிய ஏதாவது காப்பீடு நிறுவனத்தில், அடைமானம் கொடுத்தவர், மற்றும் அடைமானம் பெற்றவர் என்ற முறையில் வங்கி, ஆகியோரின் கூட்டுப்பெயரில், அடைமானம் கொடுத்தவர் காப்பீடு செய்து, காப்பீடு செய்யப்பட்டவைகளாக அவைகளை வைத்திருப்பார். (சம்பந்தப்பட்ட காப்பீடு திட்டாவணம், ஒப்புக்கொள்ளப்பட்ட, தீ காப்பீடு சங்கத்தினுடைய, வங்கிச் சரத்தினைக் கொண்டதாக இருக்கவேண்டும்) மற்றும், அது தொடர்பாகச் செலுத்தப்படவேண்டிய எல்லா காப்பீடு கட்டணங்களையும் இதர பணங்களையும் சரியான முறையில் செலுத்துவார்; மற்றும் இத்தகைய காப்பீட்டிற்கான திட்டாவணத்தையும் மற்றும் ஒவ்வொரு காப்பீடு கட்டணச் செலுத்துகைக்குமான இரசீதினையும், அது செலுத்தப்படவேண்டியதாக ஆனபிறகு ஏழுநாட்களுக்குள், வங்கியிடம் ஒப்படைப்புச் செய்வார்; மற்றும் அடைமானம் கொடுத்தவர் சொல்லப்பட்ட மனையகங்களை, மேலே சொல்லப்பட்ட தொகைக்குக் காப்பீடு செய்து வைப்பதை, அல்லது காப்பீடு திட்டாவணம் அல்லது இரசீதுகளை மேலே சொல்லப்பட்டபடி ஒப்படைப்பு செய்வதைச் செய்யாமலிருந்தால் அல்லது அவ்வாறு செய்வதற்கு மறுத்தால், அப்போதும், அத்தகைய ஒவ்வொரு தறுவாயிலும், அதனை, மேலே சொல்லப்பட்ட தொகைக்கு அல்லது அதைவிடக்குறைந்த ஏதாவது தொகைக்குக் காப்பீடு செய்வதற்கு, வங்கிக்கு, சட்டப்படி உரிமையுண்டு: மற்றும் மேலே சொல்லப்பட்டபடி இத்தகையு

காப்பீட்டின் மீது, அல்லது காப்பீடு தொடர்பாக வங்கியால் செலவழிக்கப்படும் எல்லாப்பணமும், அவைகள் செலுத்தப்படுகின்ற நேரம் அல்லது நேரங்களில் இருந்து, ஆண்டிற்கு, நூற்றுக்கு ________________ ரூபாய் வீதத்தில் அவைகளின்மீது கணக்கிடப்படுகின்ற வட்டியுடன் சேர்த்து, கேட்கப்பட்டவுடன், அடைமானம் கொடுத்தவரால், வங்கிக்குத் திரும்பச் செலுத்தப்படும்; மற்றும் இதற்கிடையில், அவை, அசல்தொகை மற்றும் அதன் மீதான வட்டியோடு சேர்த்து, இதன்மூலம் அடைமானம் கொடுக்கப்பட்டுள்ள மனையகங்களின் மீதான ஒரு பொருட்பிணைப் பொறுப்பு (charge) ஆகும்.

(7) அடைமானம் கொடுக்கப்பட்டுள்ள சொத்தினுடைய ஏதாவது பகுதியை, ஏதாவது அரசு, உள்ளாட்சியதிகாரம், அல்லது இரயில்வே, அல்லது மாவட்ட அதிகாரி ஆகியோர் கட்டாயமாக எடுத்துக்கொள்வதற்கு ஈடாக வழங்கப்படும் எல்லாப் பணமும், அடைமானம் கொடுத்தவர் சார்பாக, வங்கியால் நேரடியாகப் பெறப்படும்; மற்றும் இத்தகைய பணமும், மேலே சொல்லப்பட்ட ஏதாவது காப்பீட்டின்கீழ் அல்லது காப்பீடுமூலமாகப் பெறப்படும் பணங்களும் வங்கியினுடைய விருப்பப்படி, சொல்லப்பட்ட மனையகங்களை குறிப்பிடுமளவில் மறுகட்டுமாணம், மறு அமர்த்தல், அல்லது பழுதுபார்த்தல் ஆகியவைகளுக்காகவோ, அல்லது இந்தப் பொருள்களினுடைய உத்தரவாதத்தின்பேரில், அப்போதைக்கு, செலுத்தப்படாமல் பாக்கியுள்ள அசல் தொகை, வட்டி மற்றும் செலவுகள் ஆகியவைகளைச் செலுத்துவதிலோ, அல்லது அவைகளுக்காகப் பணம் செலுத்தும் முகமாகவோ பயன்படுத்தப்படும் என்பதற்கு அடைமானம் கொடுத்தவர் ஒப்புதல் அளிக்கிறார்.

II மேலே சொல்லப்பட்ட பிரதிபயனுக்காக, மற்றும் சொல்லப்பட்ட ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, அடைமானம் கொடுத்தவர், இங்குள்ள அட்டவணையில் விவரித்துக் கூறப்பட்டுள்ள எல்லாச் சொத்துகளையும் அவைகளிலுள்ள உரிமைகள், துய்ப்புரிமைகள், மற்றும் உடைமைப் பொருள்கள் ஆகியவைகளோடு சேர்த்து, எளிய அடைமானமாக, இதன்மூலம் வங்கிக்கு அளித்து மாற்றல் செய்கிறார்; மற்றும் சொல்லப்பட்ட மனையகங்களிலுள்ள தன்னுடைய அதிகாரங்கள், உரிமை, நலன் ஆகியவைகளை, சொல்லப்பட்ட அசல்தொகை, வட்டி, செலவுகள் ஆகியவைகளை இதற்குமுன்னர் சொல்லப்பட்ட ஒப்பந்த வாசகங்களின்படி வங்கிக்குச் செலுத்துவதற்கு உத்தரவாதமாக, இதன்மூலம் அடைமானமாகக் கொடுக்கப்பட்டுள்ள மனையகங்கள் யாவும் எளியு

அடைமானத்திற்கு ஈடாக ஆக்கப்பட்டு, எல்லா வில்லங்களிலி ருந்தும் விடுபட்டு ஒன்றாக இருக்கும் என்ற எண்ணத்துடன் மாற்றல் செய்கிறார்.

III அடைமானம் கொடுத்தவர், சரியென்று தோன்றக்கூடிய எல்லா நேரங்களிலும், வங்கி, அதனுடைய பணியாட்கள், முகவர்கள், மதிப்பீட்டாளர்கள் ஆகியோரை, சொல்லப்பட்ட மனையகங்களில் நுழைந்து அவைகளின் நிலைமை மற்றும் சூழ்நிலையைப் பார்வையிட்டு சோதனை செய்வதற்கு அனுமதிப்பார்.

IV அடைமானம் கொடுத்தவர், 30 நாள்களுக்கான அறிவிக்கை ஒன்றினைக் கொடுத்தபின்னர், எந்த நேரத்திலும், வங்கிக்குச் செலுத்தப்படவேண்டியதாக உள்ள அசல்தொகை, வட்டி, செலவுகள் ஆகியவைகள் முழுவதையும் வங்கிக்குச் செலுத்தலாம்.

சாட்சியங்களுடன், சம்பந்தப்பட்ட நபர்கள், இங்கு, 19_____ ஆம் ஆண்டு, ______________ மாதம் ______________ ஆம் நாள் அன்று தங்களுடைய கையொப்பங்களையும் முத்திரையையும் இட்டுள்ளனர்.

(அட்டவணை)

1 ________________________

2 ________________________ ஆகியோர் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

படிவம் எண். 32(அ)

[நமூனா எண். 32(அ)]

தன்னுடைய சொந்தக் கணக்கினை உத்தரவாதம் செய்யும் பொருட்டு உரிமைப் பத்திரங்கள் வாடிக்கையாளர் ஒருவரால் வைப்புச் செய்யப்பட்டது பற்றிய நினைவுக்குறிப்பு

(Memorandum of Deposits by a Customer of the Title Deeds to secure his own account)

இங்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை, அந்த ஆவணங்கள் தொடர்பான என்னுடைய எல்லாச் சொத்துகளின்மீதும், அவைகளிலுள்ள உரிமையின்மீதும், தற்போது செலுத்தப்படவேண்டியதாக உள்ள, அல்லது இதன்பிறகு எந்த நேரத்திலாவது என்னிடமிருந்து தனியாகவோ, அல்லது வேறு யாராவது நபர் அல்லது நபர்களுடன் சேர்ந்தோ வங்கிக்குச் செலுத்தவேண்டியதாக ஆகக்கூடிய, கணக்கிலுள்ள பாக்கி இருப்பின்மீது, அல்லது மாற்றுச் சீட்டுக்கள், கடனுறுதிச் சீட்டுக்கள்

காசோலைகள், மற்றும் இதர மாற்றுமுறை ஆவணங்கள் ஆகியவைகளைக் கழிவு செய்வது தொடர்பாக அல்லது இதர வகையில், அல்லது வேறு ஏதாவது முறையில் செலுத்தவேண்டியதாக ஆகக்கூடிய தொகையின் மீது, அவற்றின்மீது அரையாண்டுக்கொருமுறை கணக்கிடப்படவேண்டிய வட்டியுடன் சேர்த்து, கழிவு, மற்றும் இதர வங்கிக் கட்டணங்கள், மற்றும் கணக்கு தொடர்பாக வங்கியால் ஏற்கப்பட்ட ஏதாவது சட்டச் செலவுகள், ஆகியவை தொடர்பான பணங்களையும், கேட்டவுடன் வங்கிக்குச் செலுத்தப்படுவதை உத்தரவாதம் செய்யும் பொருட்டு, அவைகளின் மீது ஒரு நியாய அடைமானத்தை ஏற்படுத்தும் எண்ணத்துடன், ______________ வங்கி லிமிடெட்டில், (இதன் பின்னர் "வங்கி" என்றழைக்கப்படுவது— வங்கி என்னும் சொல், அவர்களுடைய வழித்தோன்றல்கள், மற்றும் உரிமை மாற்றிப் பெற்றவர்கள் ஆகியோரையும் குறிக்கும்), இந்த நாளில், வைப்புச் செய்துள்ளேன் என்று, கீழே கையொப்பமிட்டுள்ள, ______________ சேர்ந்த நான் இதன்மூலம் ஒப்புக்கொள்கிறேன் என்பதற்கான நினைவுக்குறிப்பு. மற்றும், வங்கியால் கேட்கப்படுகின்றபொழுதெல்லாம், என்னுடைய செலவில், இந்த நியாய அடைமானத்தினால் உத்தரவாதம் செய்யப்பட்ட எல்லாப் பணங்களையும் கேட்டவுடன் திரும்பப் பெறுவதற்காக, வங்கி கோருகின்ற முறையில், குறிப்பிட்ட சொத்தின் மீது, குறிப்பிட்ட வடிவத்தில், குறிப்பிட்ட விற்பனை அதிகாரங்களுடனும், இதர காப்பு வாசகங்களுடனும், செல்லுபடியாகத்தக்க, சட்டப்படியான ஓர் அடைமானத்தை வங்கிக்கு நிறைவேற்றிக் கொடுப்பதற்கு நான் மேற்கொண்டும் ஒப்புதல் அளிக்கிறேன். மற்றும் என்னிடமிருந்து வங்கிக்கு ஏதாவது பணம் செலுத்தவேண்டிய பாக்கியாக இருக்கின்ற வரையில், அதன்மீது ஆண்டொன்றிற்கு ______ சதவீதத்தில் வட்டியை வங்கிக்குச் செலுத்துவதற்கும் நான் இதன் மூலம் மேற்கொண்டும் ஒப்புதல் அளிக்கிறேன். மற்றும், இப்போது வைப்புச் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் யாவும் என்னுடைய உடைமையில், அல்லது கட்டுப்பாட்டில் உள்ளன என்றும், சொத்து வேறு எந்தமுறையிலும் பொருட்பிணைப்பொறுப்பாக ஆக்கப்பட்டோ, வில்லங்கத்திற்குட்படுத்தப்பட்டோ இல்லையென்றும் நான் இதன்மூலம் உறுதி கூறுகிறேன்.

19______________ ஆம் ஆண்டு ______________ மாதம் ______________ நாளாகிய இன்று, சாட்சியத்துடன் கையொப்பமிடுகிறேன்.

(மேலே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை)

______________ ______________

சாட்சி (வாடிக்கையாளர் கையொப்பம்)

படிவம் எண். 32(ஆ)
[நமூனா எண். 32(ஆ)]

வேறொரு நபருடைய கணக்கினை உத்தரவாதம் செய்யும் பொருட்டு உரிமைப்பத்திரங்களை ஒரு நபர் வைப்புச்செய்தல் பற்றிய நினைவுக்குறிப்பு
(Memorandum of Deposit of the Title Deeds by a person to Secure the account of another person)

இதன்பிறகு "வங்கி" என்றழைக்கப்படும் ______________ வங்கி லிமிடெட், இதன்பிறகு "கடனாளி" என்றழைக்கப்படும், ______________ சேர்ந்த ______________ என்பவருக்கு ஒரு கணக்கினைத் திறப்பதற்கு அல்லது (ஒரு கணக்கினைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கு) பிரதிபயனாக, ______________ சேர்ந்த, கீழே கையொப்பமிட்டுள்ள நான் வங்கியிடம், இங்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை, கடனாளிக்கு அல்லது கடனாளிக்காக, அவருக்குத் தனிப்பட்ட முறையிலோ, அவ்லது இதர நபர் அல்லது நபர்களைக் கூட்டாளியாகக் கொண்டு கூட்டாகவோ, கணக்கில் உள்ள பாக்கி இருப்பின் மீதோ, அல்லது மாற்றுச்சீட்டுகள், கடனுறுதிச்சீட்டுகள், காசோலைகள், மற்றும் இதர மாற்றுமுறை ஆவணங்கள் ஆகியவைகளைக் கழிவு செய்து தொடர்பாகவோ, அல்லது இதர வேறு எந்த வகையிலோ, ஏற்கனவே வங்கியால் கடனாக அளிக்கப் பட்டுள்ள எல்லாப்பணங்களையும் பொறுப்புக்களையும், அரையாண்டுக்கொருமுறை கணக்கிடப்படவேண்டிய வட்டிகள், கழிவுகள் மற்றும் இதர வங்கிக் கட்டணங்கள், கணக்கு தொடர்பாக ஏற்கப்பட்ட ஏதாவது சட்டச் செலவுகள் ஆகியவைகளையும் சேர்த்து, கேட்டவுடன், வங்கிக்குக் கடனாளியால் செலுத்தப்படுவதற்கு உத்தரவாதமாக, இந்த நாளில், வங்கியில் வைப்புச் செய்துள்ளேன் என்பதை நான் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறேன்; வங்கியால் கேட்கப்படுகின்றபொழுதெல்லாம், சொல்லப்பட்ட ஆவணங்களில் அல்லது அவைகளில் ஏதாவது ஒன்றில் அடங்கியுள்ள, இந்த நியாய அடைமானத்தில் சேர்க்கப்பட்டு அதனால் பாதிக்கப்பட்டுள்ள சொத்தின் மீது சட்டப்படியான அடைமானத்தை ஏற்படுத்தும் வகையில், என்னுடைய சொந்தச் செலவில், வங்கிக்கு, செல்லுபடியாகத் தக்க, சட்டப்படியான ஓர் அடைமானத்தை, அல்லது பொருட்பிணைப் பொறுப்பிணை நிறைவேற்றிக்கொடுப்பதற்கு வங்கியுடனும், அவர்களுடைய வழித்தோன்றல்கள், உரிமைமாற்றிப்பெற்றவர்கள் ஆகியோருடனும், இதன்மூலம், நான் மேற்கொண்டும் ஒப்பந்தம் செய்துகொள்கிறேன். சட்டப்படியான அடைமானத்தின் மூலமாக ஆன,

சொல்லப்பட்ட அடைமானம், அல்லது பொருட்பிணைப்பொறுப்பு, அதன் மூலம் உத்தரவாதம் செய்யப்படவேண்டிய அசல் தொகை வட்டி ஆகியவைகள், கேட்கப்பட்டவுடன் செலுத்தப்படுவதை உத்தரவாதம் செய்யும் பொருட்டு, வங்கி கேட்கின்றபடி, தேவையான விற்பனை உரிமை, மற்றும் இதர, காப்புவாசகங்களைக் கொண்டதாக இருக்கும். மற்றும், கடனாளிக்குக் கடனாக அளிக்கப்பட்டுள்ள ஏதாவது பணம் திரும்பச் செலுத்தப்படாமல் இருக்கின்ற வரையில், அவற்றின் மீதான வட்டியை, ஆண்டுக்கு __________ சதவீதத்தில் வங்கிக்குச் செலுத்துவதற்கும் நான் உடன்படுகிறேன். கடனாளி திவாலானவராகவோ, நொடிப்பு நிலையை அடைந்தவராகவோ ஆனால், அல்லது, அவருடைய கடனாளர்களுடன் ஏதாவது ஏற்பாட்டில் ஈடுபடுகிறார், அல்லது ஏதாவது சமரச உடன்பாட்டினைச் செய்துகொள்கிறார் என்றால் (உத்தரவாதம் செய்யப்பட்டுள்ள தொகை முழுவதுமே அல்லது அதில் ஏதாவது ஒரு பகுதி என்னால் அல்லது வேறு யாராவது நபரால் வங்கிக்குச் செலுத்தப்பட்டுள்ளது என்றபோதிலுங் கூட) வங்கி, கடனாளர் என்ற தகுதியில், தன்னுடைய கோருரிமையின் முழுத்தொகையையும் கோருவதற்கு தன்விருப்புரிமை கொண்டுள்ளது; மற்றும், அப்பொழுது, அல்லது அதற்குப்பிறகு கடனாளியின் சொத்துக்கு எதிராக வங்கி வைத்திருக்கக்கூடிய அல்லது வைத்திருப்பதற்கு உரிமை பெற்றுள்ள ஏதாவது மாற்றுச் சீட்டுகள், கடனுறுதிச்சீட்டுகள் அல்லது இதர பிணையங்களைப் புதுப்பிப்பதற்கு, அலலது அவை சம்பந்தமான ஏதாவது சமரச உடன்பாட்டிற்கு உடன்பட்டு அதனை ஏற்றுக்கொள்வதற்கு வங்கிக்கு முழு விருப்புரிமையுண்டு. மற்றும், உத்தரவாதம் செய்யப்பட்ட தொகையைச் செலுத்திவிடுவதன் மூலம், அல்லது வேறு ஏதாவது அடிப்படையின் கீழ், கடனாளிக்கு எதிரான வங்கியின் முழுக்கோரிக்கையும் நிறைவேற்றப்படுகின்ற வரையில், நான் உத்தரவாதம் செய்யப்பட்ட தொகை அல்லது அதனுடைய ஏதாவது பகுதி சம்பந்தமாக, உரிமையை நிலைநாட்டவோ, உரிமையை நிலைநாட்டுவதைக் கோரவோ மாட்டேன்; மற்றும் வங்கி, பங்காதாயங்கள் உடன்பாட்டின் மூலமான வரவுகள் அல்லது அவை சம்பந்தமான இதர செலுத்துகைகள் முழுவதையும் வங்கி பெற்றுக்கொள்ளலாம்; மற்றும் அவைகளைப் பெற்றுக்கொண்டு தன்னிடம் இருத்திவைத்துக் கொள்ளலாம், மற்றும் சொல்லப்பட்ட கடனாளியிடமிருந்து வரவேண்டிய முழுத்தொகையை அவர்கள் பெற்றுக்கொள்ளுகின்றவரையில், என்னால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள தொகையைக் குறைக்கின்ற வகையில் அல்லது வேறு வகையில், இத்தகைய நிருபணம், பங்காதாயங்கள், சமாதான உடன்படிக்கைப் பணங்கள் அல்லது செலுத்து

கைகள் அல்லது வங்கியால் வைத்திருக்கப்படுகின்ற இதர ஏதாவது பிணையத்தின் நன்மை, ஆகியவைகளைக் கோருவதற்கு, அல்லது அவைகளின் நன்மைகளைப் பெறுவதற்கு எனக்கு உரிமை கிடையாது. மற்றும் இத்தகைய, மேலே சொல்லப்பட்ட ஏதாவது நிருபணம் அல்லது சமசர உடன்பாடு ஆகியவைகளைக் கருத்தில்கொள்ளாமல், மற்றும் இதன்மூலம் உத்தரவாதம் செய்யப்படவேண்டும் என்றுஎண்ணப்பட்ட தொகை அல்லது அதனுடைய ஏதாவது ஒரு பகுதி சம்பந்தமாக அவர்கள் வைத்திருக்கக்கூடிய வேறு ஏதாவது பிணையம் அல்லது பரிகாரங்களைக் கருத்தில் கொள்ளாமல், கடனாளி பொறுப்பாளியாகக்கூடியதாக வங்கியில் வைத்துள்ள நடப்புக் கணக்கில் அல்லது வேறு ஏதாவது கணக்கில் பற்றுவைக்கப்படக்கூடிய, வட்டிக்காக விதிக்கப்படும் ஏதாவது கட்டணங்களைக் கருத்தில் கொள்ளாது, இதன் மூலம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ள முழுத்தொகையையும், மற்றும் அதன்மீதான வட்டியையும், இந்தப் பிணையத்தின் மீது செயல்படுத்தி வங்கி திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

19 ________ ஆம் ஆண்டு ________ மாதம் ________ நாள் ஆன இன்றைய தேதியிடப்பட்டது.

மேலே சொல்லப்பட்டுள்ள அட்டவணை

____

வாடிக்கையாளர் மற்றும் சாட்சியின் கையொப்பம்

படிவம் எண். 32(இ)
(நமூனா எண். 32(இ))

சொத்து தன்னால் ஈட்டப்பட்டது என்பதற்கான வாக்குமூலப்பத்திரம்
(Affidairt Regarding Property being Self-Acquired)

________________ குற்ற நடுவர் நீதிமன்றத்தில் மனையகங்களினுடைய உரிமைப் பத்திரங்களை வைப்புச் செய்வது விசயமாக. ________ எண் கொண்ட __________ வுடன் ஆனவைகளை, கடன்களுக்காகப் பிணையமாக அவர்களிடமிருந்து.

_____________ மற்றும் _____________ என்கின்ற நாங்கள், பின்வருமாறு மனமாரக்கூறி உறுதியளிக்கின்றோம்.

1. நாங்கள், _____________ களாக, _____________ என்ற பெயர் மற்றும் பாணியின்கீழ் _____________ நகரத்தில் _____________ என்ற இடத்தில், கூட்டு அல்லது மூதாதையருடைய ஏதாவது தொடக்க முதலின் உதவியேதுமின்றி, எங்களாலேயே ஈட்டப்பட்ட எங்களுடைய சொந்தப்பணம், மற்றும் எத்தகைய உதவியையும் பெறாத எங்களுடைய சொந்த முயற்சிகள் ஆகியவைகளைக் கொண்டு தொழிலைத் தொடங்கினோம்.

2. எங்களாலேயே ஈட்டப்பட்ட, எங்களுடைய சொந்தப் பணத்தையே முழுவதுமாகக் கொண்டுள்ள, சொல்லப்பட்ட, தொழிலினுடைய இலாபங்களிலிருந்து _____________ என்ற நாங்கள் _____________ ஆவது எண் மனையகங்களை வாங்கினோம்.

3. _____________ என்ற நாங்கள், சொல்லப்பட்ட _____________ எண் கொண்ட மனையகங்களுக்குத் தனித்த, மற்றும் கட்டுப்பாடு ஏதுமில்லாத உரிமையாளர்கள்; மற்றும் மேலே சொல்லப்பட்ட மனையகங்கள் தொடர்பாக, சகபங்குதர்களோ, சககூட்டாளிகளோ எங்களுக்குக் கிடையாது; மற்றும் அது, மூதாதையர் சொத்தோ, கூட்டுக்குடும்பச் சொத்தோ அல்ல; ஆனால், எங்களாலேயே ஈட்டப்பட்ட எங்களுடைய தனிப்பட்ட சொத்தாகும்; அதன்மீது முழு விற்பனை அதிகாரத்தை நாங்கள் கொண்டுள்ளோம்.

4. மேலே குறிப்பிடப்பட்ட மனையகங்கள், அடைமானம், பொருட்பிணைப்பொறுப்பு, பற்றுகை, பிணையம், பற்றுரிமை, பொறுப்புரிமை, ஆண்டுத் தொகை செலுத்துகை, முந்தைய பொறுப்பு, நீதிமன்றத் தீர்ப்பு, நீதிமன்றத் தீர்ப்புமூலம் எழுந்த கடன், ஆகியவைகளுக்கோ, அல்லது வேறு ஏதாவது முறையிலோ, ஏதாவது வில்லங்கங்களுக்கோ, உட்பட்டவைகளல்ல; மற்றும் _____________ மாநகராட்சி, அல்லது _____________ மேம்பாட்டுப் பொறுப்புறுதி ஆகியவைகளின் ஏதாவது திட்டம் அல்லது நில வரிசைப்படுத்துத் திட்டம் ஆகியவைகளாலோ, அல்லது ஏதாவது நில ஆக்கிரமிப்பு அறிவிக்கையினாலோ பாதிக்கப்படவில்லை.

19 _____________ ஆம் ஆண்டு _____________ மாதம் _____________ ஆம் நாள் தேதியிடப்பட்டது.

____

கையொப்பம்.

படிவம் எண். 32(ஈ)
[நமூனா எண். 32(ஈ)]

முகம்மதியர் ஒருவரின் சொத்து வாக்ப் முதலானவற்றிலிருந்து விடுபட்டதாக உள்ளது என்பதற்கான ஆணை உறுதிப்பத்திரம்.
(Affidavit Regarding a Mohammedon's Property being free from Waqft Etc.)

__________மாவட்டம்__________
__________குற்றநடுவர் முன்பாக.,
மனையகங்கள் எண்__________
விசயமாக.
வாக்கு மூலப்பத்திரம்.

__________நகரில், __________ தெருவில் வசித்து வரும் __________ என்பவரின் மகனை, முகம் மதிய வியாபாரியாகிய __________ என்ற நான் மனதார உறுதியளித்துப் பின்வருமாறு கூறுகிறேன்.

1. நான், சன்னி-சியா பிரிவிலுள்ள __________ என்ற உப பிரிவைச் சேர்ந்த ஒரு முகம்மதியன்.

2. இங்கே பின்னிணைப்புச் செய்யப்பட்டுள்ள அட்டவணை "அ" வில் முழுமையாக விவரித்துக்கூறப்பட்டுள்ள __________ எண்கொண்ட மனையகங்களில் அடங்கியுள்ள சொத்துக்கு நான் தனித்த மற்றும் முழுமையான உரிமையாளர்; அவை என்னுடைய சொந்த நிதியிலிருந்து எடுக்கப்பட்ட பணத்தினால், __________ அன்று __________ என்பவரிடமிருந்து வாங்கப்பட்டவையாகும்

3. நான், __________ என்ற பெயரின் கீழும் பாணியிலும் __________ல் தொழில் செய்துவருகிறேன்; அத்தொழில் தனித்து மற்றும் முழுமையாக எனக்கு உடைமையானதாகும்.

4. என்னுடைய தொழிலுக்காகப் பணம் தேவையாக இருந்த படியால், __________ வங்கியினுடைய __________ கிளைக்கு ரூ__________க்கான ஒரு கடனுக்கு விண்ணப்பம் செய்தேன்; என்னுடைய விண்ணப்பங்களின் அடிப்படையில், அக்கடன், ஒரு அதிகப்பற்று கடன் வசதியாக எனக்கு அளிக்கப்படும் பொருட்டு இசைவாணை வழங்கப்பட்டது.

5. அட்டவணை "அ"-வில் விவரித்துக் கூறப்பட்டுள்ள சொத்து எந்தவகையான வில்லங்கங்களுக்கும் உட்பட்டதல்ல; மற்றும் அதனுடைய எந்தப்பகுதியும், சீதனமளிப்பு தொடர்பான ஏதாவது கடனைச் செலுத்துவதற்குப் பொருட்பிணைப் பொறுப்

பாக ஆக்கப்பட்டதாகவோ, அல்லது, ஏதாவது "ஹைபா-பில்-இவாஸ்", 'ஹைபா-பா- சார்ட்-உல்-இவாஸ்", 'அரீட்","சாதக்" அல்லது வேறு ஏதாவது வடிவத்திலான "ஹைபா", ஆகியவை களுக்காகவோ, அல்லது தனிப்பட்ட, அல்லது பொது "வாக்ப்" கா ரியங்களுக்காகவோ, அல்லது "கான்கா" அல்லது ஒரு "டாகியா" ஆகியவற்றின் நன்மைக்காகவோ மாற்றப்பட்டதாகவோ அல்லது மாற்றப்படுவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டதாகவோ இல்லை.

6. __________ எனக்குக் கடன் தருவதாக ஒப்புக்கொண்டுள்ள ரூ________ தொகையைத் திரும்பச் செலுத்துவதற்கு உத்தரவாதமாக, அட்டவணை "ஆ"வில் குறிப்பிடப் பட்டுள்ள (அட்டவணை "அ"-வில் விவரித்துக் கூறப்பட்டுள்ள சொத்து சம்பந்தப்பட்ட ஒரே உரிமைப்பத்திரங்களான) உரிமைப் பத்திரங்களை வைப்புச் செய்வதன்மூலம் __________ க்குச் சாதகமாக ஒரு நியாய அடைமானத்தை ஏற்படுத்துவதிலிருந்து என்னைத் தடை செய்யக்கூடிய விளைவு எதனையும் ஏற்படுத்தக்கூடிய எந்தச் செயலையும், அல்லது ஒப்பந்தத்தையும் நான் செய்யவுமில்லை, அவ்வாறு செய்யப்படுவதற்குக் காரணமாகவோ அல்லது அச்செயல் நிகழ்வதற்குக் காரணமாகவோ இருக்கவுமில்லை.

மற்றும், நான் இந்த உறுதிமொழி ஆகியவற்றை ஏற்படுத்துகிறேன்.

அட்டவணை "அ"
அட்டவணை "ஆ"

19______ ஆம் ஆண்டு ________
மாதம் ________ நாள் தேதியிடப் பட்டது. __________
கையொப்பம்.

படிவம் எண். 33
(நமூனா எண். 33)

செலுத்துகைக் கோரிக்கையை நினைவுபடுத்துங் கடிதம்
(Letter of Reminding Demand of Payment)

பெறுநர் ________ 19____

____

____

____

அன்புடையீர்,

எங்களுடைய முழுமையான உடைமையிலுள்ள ________ ________ ஆகியவைகளை உள்ளடக்கிய சரக்கிருப்புக்களின் பிணையத்திற்கெதிராகத் தாங்கள் பெற்றுள்ள கடன்/மேல்வரைப்

பற்று/ரொக்கக் கடன் தொடர்பாக, தீர்மானிக்கப்பட்ட எச்ச ஓரமான __________ சதவீதம் நிலைநாட்டப்படவில்லை என்பதைத் தங்களுக்கு ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளோம் என்பதனையும், கணக்கினைச் சரியாக, ஒப்புக்கொள்ளப்பட்ட எச்ச ஓரத்திற்குள் கொண்டுவருவதற்காக ரூ ________ செலுத்துகையைக் கோரினோம் என்பதையும் தங்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கோரப்பட்ட தொகையைச் செலுத்துவதற்கு இதுவரை தாங்கள் நடவடிக்கையெதனையும் எடுத்துக் கொள்ளவில்லையென்பது மிகவும் வருத்தம் தரக்கூடிய விசயமாகும். தற்போதைய சூழ்நிலைகளில் தங்கள் கணக்கு தொடர்ந்து இருப்பதை அனுமதிப்பதற்கு நாங்கள் இயலாமல் இருக்கிறோம் என்பதற்காக நாங்கள் வருந்துகிறோம். சொல்லப்பட்ட கணக்கின் மீது, ____________ வரையிலும் கணக்கிடப்பட்டுள்ள வட்டியுடன் சேர்த்து ரூ __________ செலுத்தவேண்டியது பாக்கியுள்ளது; அத்தொகை, உண்மையில் செலுத்தப்படுகின்ற தேதிவரையில் _________ வீதத்திலான அதிகப்படியான வட்டியுடன் சேர்த்து, இந்த லெட்டர் பெற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து _________க்குள் செலுத்தப்படவேண்டும், அவ்வாறு செலுத்தத் தவறினால், அதன்பின்னர் எந்த நாளிலாவது, எங்களிடம் அடைமானம் கொடுக்கப்பட்ட சரக்கிருப்புக்களை, நாங்கள் சிறந்தது என்று கருதுகின்றபடி பொது ஏலம் அல்லது தனியார் ஒப்பந்தத்தின் மூலம் நாங்கள் விற்று, அத்தகைய விற்பனைகள்மூலம் பெறப்பட்ட நிகர வருவாய்களை, எங்களுக்குத் தரவேண்டியுள்ள மேலே சொல்லப்பட்ட தொகை, மற்றும் அதிகப்படியான வட்டி மற்றும் ஏற்கக்கூடிய கட்டணங்கள் ஆகியவைகள் செலுத்தப்பட்டதாகக் கருதப்படுகின்ற வகையில் பயன்படுத்துவோம்.

இத்தகைய விற்பனைகள் மூலம் பெறப்படும் நிகரத்தொகை, எங்களுக்கு வரவேண்டியுள்ள முழுத்தொகைக்கும் போதுமானதாக இல்லையென்கின்றபோது, அத்தகைய பற்றாக்குறையைச் செலுத்துவதற்கு நீங்கள் பெறுப்பாளியாவீர்கள்.

இருந்தபோதிலும், மேலே சொல்லப்பட்ட காலத்திற்குள் இந்த விசயத்தைத் தீர்க்கக்கூடியவர்களாக இருப்பீர்கள் என்றும், அதன் கட்டாயமாக விற்பனை செய்யப்படுகின்ற ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி நடைபெறுவதற்கு இடந்தரமாட்டீர்கள் என்றும் நாங்கள் முழுமையாக நம்புகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

____

மேலாளர்.

படிவம் எண் 34
[நமூனா எண் 34]

கப்பல் வழிச்சீட்டு (எளிய படிவம்)
[Bill of Landing (Simple Form)]

தற்போதைய பயணத்திற்கு ____________ எனபவரைத் தலைவனாகக் கொண்டு, தற்போது ____________ ல் நிலை கொண்டுள்ள, மற்றும் ____________

____

____

ஆகிய இடங்களுக்குச் செல்வதற்குள்ள, ____________ என்றழைக்கப்படும் சரக்கு நீராவிக் கப்பலில், ____________ என்பவரால், நல்ல ஒழுங்கு நிலையிலும், நல்ல நிலைமையிலும், ஏற்றி அனுப்பப்பட்டு, இங்கு ஓரத்தில் (margin) உள்ளதுபோல அடையாளமிடப்பட்டும், எண்ணிடப்பட்டும், அதே சிறந்த ஒழுங்கு நிலை, மற்றும் சிறந்த நிலைமையில் மேலே சொல்லப்பட்ட ____________ துறைமுகத்தில் (கடவுள், அரசரின் எதிரிகள், தீ, இயந்திரம், கொதிகலன்கள், ஆகியவைகளின் செயல்கள், மற்றும் கடல்கள், ஆறுகள் மற்றும் நீராவிக் கப்பல் போக்குவரத்து போன்றவைகளின் எல்லா மற்றும் ஒவ்வோர் அபாயங்கள், மற்றும் விபத்துக்கள் ஆகியவைகள், அவை எத்தன்மையானவைகளாக இருப்பினும், எந்தவகையானவையாக இருப்பினும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளன) ____________ என்பவரிடத்தில் அல்லது ____________ என்பவரிடமிருந்து உரிமை மாற்றல் பெற்றவர்களான ____________ என்பவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்படவேண்டியவைகளாகும். சொல்லப்பட்ட சரக்குகளுக்கான கப்பல் சத்தம், ____________ வழக்கமான ஏற்றுக்கட்டணம், மற்றும் சராசரிச் சரத்து ஆகியவைகள் சேர்ந்ததாகும்.

சாட்சியங்களுடன், சொல்லப்பட்ட கப்பலின் தலைவன் அல்லது உரிமையாளர், கப்பல் வழிச்சீட்டு ____________ க்கு, இந்த எல்லா நிபந்தனைச் சரத்துக்களையும் தேதியையும் உறுதிகூறியுள்ளார்; இந்த இரசீதுகளில் ஏதாவது ஒன்று நிறைவேற்றப்பட்டதன்பேரில், மற்றவைகள் இல்லாநிலையது செல்லாதவைகளாக) ஆகிவிடும்.

____________ 19 ____ இல் தேதியிடப்பட்டது.

எடை, மற்றும் உள்ளடக்கம் தெரியாது ____________

கப்பல் தலைவனுக்காக

படிவம் எண். 35
(நமூனா எண். 35)

துறைமுக ஆணை
(Dock Warrant)

எண் ______ ______ துறைமுக நிறுமம் ______

தேதி ______ 19____

______ என்பவரைத் தலைவனாகக் கொண்ட ______ கப்பலின்மூலம் ______ இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, ______ ல் ______ ஆல் பதிவு செய்யப்பட்டு, ______ என்பவருக்கு அல்லது இதில் மேலெழுதல் செய்வதன்மூலம் அவரிடமிருந்து உரிமை மாற்றத்தினைப் பெற்றவர்களுக்கு ஒப்படைப்புச் செய்யப் படவேண்டிய ______ க்கான ஆணை. வாடகை ______ இருந்தும், இதர கட்டணங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தேதியிலிருந்தும் தொடங்குகின்றன.

விதிக்கப்பட்டுள்ள கட்டணம்.

அடையாளக் குறி	எண்ணிக்கை	எடை	
		மொத்தம்	தள்ளுபடி எடை

பேரேடு எண் ______ பக்கம் எண் ______

______ எழுத்தர்

______ ஆணை எழுத்தர்.

படிவம் எண். 36
(நமூனா எண். 36)

பண்டக நிர்வாகிகளின் சான்றிதழ்
(Warehouse-Keeper's Certificate)

எண் __________

மாற்றத்தக்கது அல்ல

திருவாளர்கள் ____________________

எஸ். எஸ் ________________ என்ற கப்பலிலிருந்து இறக்கப்பட்ட ____________________ களை, இங்கு பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி, எங்களுடைய பண்டகத்தில், உங்களுடைய செயலாட்சியின் கீழ், நாங்கள் வைத்திருக்கிறோம்.

____

பண்டக நிர்வாகிகள்

(ஒப்படைப்பு ஆணைகள் விடுப்பது, வாடகைச் செலுத்துகை ஆகியவைகள் தொடர்பான நிபந்தனைகள் பொதுவாகப் படிவத்தின் பின்புறம் அச்சிடப்பட்டிருக்கும்)

படிவம் எண் 36(அ)
[நமூனா எண். 36(அ)]

பண்டக இரசீது
(Warehouse Receipt)

(பம்பாய் பண்டகங்களின் சட்டம், 1959, மற்றும் பம்பாய் பண்டகங்களின் விதிமுறைகள், 1960 ஆகியவைகளின் காப்பு வாசகங்களுக்கு உட்பட்டு விடுக்கப்பட்டது)

மாற்றுமுறைத் தன்மை கொண்டது/மாற்றுமுறைத் தன்மை யற்றது.

பண்டக இரசீதின் வரிசை எண் ______ பண்டக இருப்பிடம் ____

இரசீது விடுக்கப்பட்ட தேதி ______ செல்லுபடியாகத்தக்கது ______

பண்டக அனுமதி எண் __________ ____________________ வரை

யாரிடமிருந்து பெறப்பட்டது ________ (வைப்புச் செய்பவரின் பெயரும் முகவரியும்)

பின்வரும் விவரக் குறிப்பினைக் கொண்ட சரக்குகள்

சரக்குகளின் விவரம்	வகுப்பு, தர நிலை, தன்மை, அல்லது தரம்	நிலைமை சிறந்தது/பரவாயில்லை/சுமார்	கட்டுமங்களின் எண்ணிக்கை	நிகர அளவு பிரிடிஷ் பௌண்டில் அல்லது கி. கிராமில்
1	2	3	4	5

கட்டுமங்களின் மீது குறிக்கப்பட்டுள்ள, வைப்புச் செய்பவரின் அடையாளக் குறிகள்	வைப்புச் செய்த நேரத்தில் சந்தை மதிப்பு	மதிப்பீடு	சேமிப்புக் கட்டணங்களின் வீதம்
6	7	8	9

கீழ்க்கண்டவர்களின் பெயரும் அனுமதி எண்ணும் :

எடைபோடுபவர் திரு..................அனுமதி எண்.........தேதி......

மாதிரிபார்ப்பவர் திரு..................அனுமதி எண்.........தேதி......

தரம் செய்பவர் திரு..................அனுமதி எண்.........தேதி......

தீ/திருட்டு/வெள்ளம்/கலவரம்/உள்நாட்டுக் குழப்பம் அல்லது வேறு ஏதாவது எதிர்பாராச் செயல்களின் மூலமான (இங்கு குறிப்பிடப்படவேண்டும்) நட்டம் அல்லது சேதாரத்திற்கு எதிராக ______________ (காப்பீடு நிறுமத்தின் பெயர்)-இல், ரூ____________ க்குக் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பண்டகக் கட்டணங்களுக்கு மேற்கொண்டும் வசூலிக்கப்பட்ட இதர கட்டணங்கள் :

(i) எடைபோடுதல் மற்றும் கையாளுதல் கட்டணங்கள் ____________ ரூ________

(ii) வாடகைக்கு விடப்பட்டுள்ள பைகள், பை ஒன்றுக்கு ரூ ______ வீதம் ______ எண்ணிக்கையிலான பைகள் ______ மாதங்களுக்கு / வாரங்களுக்கு

(iii) பை ஒன்றுக்கு ரூ ______ வீதம் ______ புதிய பைகளுக்கான விலை ______ சரக்குகள் ______ யிலிருந்து ______ வரை சேமித்து வைக்கப்படும் பொருட்டு பெறப்பட்டுள்ளன.

தேதி ______ ______

பண்டக நிர்வாகி அல்லது அவருடைய முகவர் கையொப்பம்

(சரக்குகளின் மீது பற்றுரிமைகள், அடைமானங்கள் அல்லது இதர வில்லங்கங்களை ஏற்படுத்துகின்ற நபர்களினால் மேலெழுதல் செய்யப்படுவதற்கான இடம்)

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகள், பண்டகத்திலிருந்து ஒப்படைப்பு செய்யப்பட்டதன்மூலம் இந்த இரசீதிலிருந்து, இதன் மூலம் விடுவிக்கப்பட்டுள்ளன. விடுவிக்கப்படாமல் உள்ள சரக்குகளின் ஏதாவது இருப்பு, விடுவிக்கப்பட்ட பகுதியின் மீதான செலுத்தப்படாத கட்டணங்கள், மற்றும் முன்பணமளிப்புக்கள் ஆகியவைகளுக்காக ஒரு பற்றுரிமைக்கு உட்பட்டவையாகும்.

தேதி	விடுவிக்கப் பட்ட அளவு	கையொப்பம்	இரசீதின் மீது பாக்கியுள்ள அளவு

______

பண்டக நிர்வாகி அல்லது அவருடைய முகவர் கையொப்பம்

படிவம் எண். 36(ஆ)
[நமூனா எண். 36(ஆ)]

ஒப்படைப்பு ஆணை
(Delivery Order)

எண் ________ ____________ 19 ____

பெறுநர் ____________

____________ என்பவரைத் தலைவனாகக் கொண்ட ____________ கப்பலில், ________ ________ அன்று ________ என்பவரால் ____________ இருந்து ஏற்றியனுப்பப்பட்ட, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகளைத் தயவு கூர்ந்து ____________ என்பவருக்கு ஒப்படைப்பு செய்யவும், ____________ யிலிருந்து ஆன கட்டணங்கள் ________ செலுத்தப்பட வேண்டியவைகளாகும்.

அடையாளக் குறி ____________

எண் ____________

உள்ளடக்கம் ____________

படிவம் எண் 37
(நமூனா எண். 37)

குறிப்பிட்ட ஒரு சொத்தினை விற்று, கொள்முதல் பணத்தைப் பெற்றுக்கொண்டு உரிமை மாற்றத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான அதிகாரச் செயல்படுநர் அதிகாரம்
(Power of Attorney to sell a Particular property, to receive Purchase money and Execute conveyance)

இந்த அதிகாரச் செயல்படுநர் அதிகாரத்தின் மூலம், ____________ சேர்ந்த "அ. ஆ" என்ற நான், ____________ சேர்ந்த "இ" என்பவரை, என்னுடைய பெயரில், மற்றும் என் சார்பாக, இதன் பின்னர் சொல்லப்பட்டுள்ள பத்திரங்கள், செயல்கள், காரியங்கள் ஆகிய எல்லாவற்றையும், அல்லது அவைகளில் ஏதாவது ஒன்றினைச் செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு, என்னுடைய சட்டமுகவராக இதன் மூலம் நியமனம் செய்கிறேன்; அதாவது :

1. ______________________ல் உள்ள, __________________ எண் கொண்ட என்னுடைய மாளிகையை, ஒப்புக்கொள்ளப்பட்டு, என்னுடைய அதிகாரச்செய்படுநர் தன்னுடைய தன்னிச்சையான விருப்புரிமைப்படி சரியானது என்று கருதக்கூடிய விலையில் அதனை வாங்குகின்ற எவருக்கும் விற்றுவிடுவதற்கு.

2. வாங்கியவரிடமிருந்து ஒப்புக்கொள்ளப்பட்ட விலையைப் பெற்றுக்கொண்டு, அதற்கான செயலாற்றல் மிக்க இரசீதினை அல்லது தீர்வினைக் கொடுப்பதற்கு,

3. என்னுடைய பெயரில், என்னுடைய நடவடிக்கையாகவும், என்னுடைய செயலாகவும், சொல்லப்பட்ட (சொத்தினை) வாங்கியவருக்கு அல்லது அவருடைய கட்டளையின்படி அவரிடமிருந்து உரிமை மாற்றலைப் பெற்றவர்களுக்கு, சொல்லப்பட்ட சொத்தினுடைய அவசியமான அல்லது தகுந்த உரிமைமாற்றத்தினை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு.

4. சொல்லப்பட்ட உரிமை மாற்றத்தினைப் பதிவு செய்யப்படும் பொருட்டு முன்னிடல் செய்வதற்கும், பதிவாளர் முன்பாக பிரதிபயன் பெறப்பட்டதை ஒப்புக்கொள்வதற்கும், மற்றும் அதனைப் பதிவு செய்யப்பட்டுப் பெற்றுக்கொள்வதற்கும், மற்றும் எல்லாவகையிலும் நானே செய்வதுபோல, முழுமையாகவும், விளைவாற்றல் உள்ளதாகவும், சொல்லப்பட்ட (சொத்தினை) வாங்கியவருக்கு, சொல்லப்பட்ட சொத்தினை உரிமை மாற்றம் செய்து கொடுப்பது தொடர்பாக அல்லது அதற்காக, என்னுடைய அதிகாரச் செயல்படுநர் சரியானது அல்லது அவசியமானது என்று கருதக்கூடிய எல்லா நடவடிக்கைகளையும், காரியங்களையும் மற்றும் செயல்களையும் செய்வவற்கும்.

5. இந்த உடன்படிக்கைப் பத்திரத்தின் காரணமாக, சொல்லப்பட்ட என்னுடை அதிகாரச் செயல்படுநர் சட்டப்படி செய்யக்கூடிய, அல்லது செய்யப்பட்டிருக்கும்படி ஆக்குகின்ற எல்லாவற்றையும், அவை எப்படிப்பட்டவையாக இருந்தபோதிலும், பின்ஏற்பு செய்து உறுதிசெய்வதற்கு நான் உடன்படுகிறேன்.

சாட்சியத்துடன், முதலியன.

———

படிவம் எண். 38
(நமூனா எண். 38)

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு வழங்கப்படும் பொதுவான அதிகாரச் செயல்படுநர் அதிகாரம்
(General Power of Attorney to two or more persons)

இந்த அதிகாரச் செயல்படுநர் அதிகாரத்தின் மூலம், ______ ______ சேர்ந்த "அ. ஆ" என்ற நான், ______ சேர்ந்த "இ" என்பவரையும், ______ சேர்ந்த "ஈ" என்பவரையும், ______ சேர்ந்த "உ" முதலியோரையும், கூட்டாகவும், அவர்களில் யாராவது இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சேர்ந்தும், அல்லது அவர்களில் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும், என்னுடைய பெயரிலும், என் சார்பாகவும், பின்வரும் எல்லாச் செயல்களையும் காரியங்களையும், அல்லது அவற்றில் எவற்றையேனும், செய்து நிறைவேற்றுவதற்கு என்னுடைய அதிகாரச் செயல்படுநர்களாக, அல்லது அதிகாரச் செயல்படுநராக, இதன்மூலம் நியமனம் செய்கிறேன். அதாவது :

I எனக்கு வரவேண்டியுள்ள கடன்கள், முன்பணச் செலுத்துகைகள், கோரிக்கைகள் ஆகிய எல்லாவற்றையும் கேட்டு, வசூல் செய்து பெற்றுக்கொண்டு, செயல்விளைவினை ஏற்படுத்தக்கூடிய நல்லெண்ணத்துடன் ஆன தீர்வினை, என்னுடைய பெயரிலும், என் சார்பாகவும் கொடுப்பதற்கும், மேற்கொண்டு, சொல்லப்பட்ட கடன்கள், முன்பண அளிப்புகள் ஆகியவைகளைத் திரும்பப் பெறுவதற்கு, சட்டப்படியான எல்லா நடவடிக்கைகளையும் வழிமுறைகளையும் எடுப்பதற்கும், பயன்படுத்துவதற்கும், மற்றும் சட்டப்படியான எல்லா நடவடிக்கைகளையும், வழக்குகளையும், கோருரிமையும், கோரிக்கைகளையும், தகராறுகளையும் தொடங்கி வழக்குத் தொடர்வதற்கும், எதிர்வழக்காடுவதற்கும், மற்றும் நடுவர் தீர்ப்புக்கு விடுவதற்கும், மற்றும் கணக்குகள், வழக்குகள், கோரிக்கைகள் ஆகிய எல்லாவற்றையும் சரிக்கட்டி தீர்வு செய்வதற்கும், மற்றும் சமாதான உடன்படிக்கை செய்துகொள்வதற்கும், மற்றும் மேலே சொல்லப்பட்ட ஏதாவது ஒரு காரியத்திற்கு அல்லது எல்லாக் காரியங்களுக்கும் அவசியமானது, அல்லது தகுந்தது என்று கருதப்படுகின்ற பத்திரங்கள் அல்லது விசயங்களைச் செய்வதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவர்கள் மேற்கொண்டும் உரிமையினைக் கொண்டிருப்பார்கள்.

II சொல்லப்பட்ட அதிகாரச் செயல்படுநர் அல்லது அதிகாரச் செயல்படுநர்கள், சரியானது என்று நினைத்தால், அசையக் கூடியவையாகவோ, அசையாதவையாகவோ உள்ள என்னுடைய ஏதாவது சொத்தினுடைய பிணையத்தின்பேரில், அவ்வப்பொழுது, தகுந்த நிபந்தனைகளின்பேரில், பணத்தைக் கடனாகப் பெறுவதற்கும், இத்தகைய காரியங்களுக்காக, சரியானவை என்று கருதக்கூடிய உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவைகளின்மூலம், தேவையான அடைமானங்கள், பொருட்பிணைப் பொறுப்புகள், அடகுகள் ஆகியவைகளை அல்லது இதர பிணையங்களை நிறைவேற்றிக்கொடுப்பதற்கு.

III எனக்குச் சொந்தமான, அல்லது நான் உடைமை கொண்டுள்ள வீடுகள், கட்டடங்கள், நிலம் ஆகியவற்றில் எதையேனும் விற்பனை செய்வதற்கு, மாற்றல் செய்து கொடுப்பதற்கு, கைவிடுவதற்கு, குத்தகைக்கு விடுவதற்கு அல்லது வேறுவகையில் கைவிடுவதற்கு, மற்றும் ஏதாவது அடைமானங்களை மாற்றிக் கொடுப்பதற்கு அல்லது விடுவிப்பதற்கு, அல்லது இத்தகைய ஏதாவது அடைமானங்கள் அல்லது பொருட்பிணைப் பொறுப்புகள் ஆகியவைகளின் கீழுள்ள, விற்பனை செய்வதற்கான ஏதாவது அதிகாரங்களை, அல்லது இதர ஏதாவது அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு அல்லது செயல்படுத்துவதற்கு, அல்லது சரியானது என்று கருதப்படக்கூடிய முறையில், இதர வழியில், அதன் மூலமான நன்மையை அடைவதற்கு அல்லது பெறுவதற்கு,

IV என்னுடைய பணங்கள் எவற்றையேனும், என்னுடைய அதிகாரச் செயல்படுநர்கள், அல்லது அவர்களில் ஒருவர், அவர்களுடைய அல்லது அவருடைய தன்னிச்சையான விருப்புரிமைப்படி சரியானது என்று நினைக்கக்கூடிய முதலீடுகளில், அவ்வப்போது ஏதாவது முதலீடுகளை மாற்றுவதற்கும், முதலீடு செய்வது முற்றுப்பெறாமல் இருக்கின்றபொழுது என்னுடைய பணங்கள் எவற்றையேனும், எந்த வங்கியிலும் வைப்புச் செய்வதற்கும் ஆன அதிகாரங்களுடன், முதலீடு செய்வதற்கு.

V என்னுடைய அதிகாரச் செயல்படுநர்கள், அல்லது அதிகாரச் செயல்படுநர் அவசியமானது அல்லது என்னுடைய விவகாரங்களோடு சரியான முறையில் தொடர்பு கொண்டது என்று கருதினால், ஏதாவது மாற்றுச் சீட்டினை, கடனுறுதிச் சீட்டினை, காசோலைகளை அல்லது இதர மாற்றுமுறை ஆவணங்களை,

எழுதுவதற்கு, ஏற்பதற்கு, மேலெழுதல் செய்வதற்கு மாற்றிக் கொடுப்பதற்கு, கெடுவுக்கு முன்பு பணம் செலுத்துவதற்கு, பணம் செலுத்துவதற்கு.

VI என்னால் திறக்கப்பட்டுள்ள கணக்குகளை இயக்குவதற்கு, என்னுடைய அதிகாரச் செயல்படுநர்கள் அல்லது அதிகாரச் செயல்படுநர், சரியானது மற்றும் தகுந்தது என்று கருதக் கூடிய ஏதாவது புதிய வங்கிக் கணக்கினை எந்த வங்கியிலும் திறந்து அதனை இயக்குவதற்கு.

VII என்னுடைய அசையாச் சொத்தினுடைய எந்தப் பகுதியையும், எந்தவகையான குத்தகைக்கும் கொடுப்பதற்கும், மற்றும் அதன்மீது தற்போது வரவேண்டியுள்ள மற்றும் இப்போது முதற் கொண்டு வரவேண்டியதாக ஆகக்கூடிய வாடகைகள் மற்றும் இலாபங்கள் ஆகியவைகளுக்காகக் கோரிக்கைகளை விடுத்து, அவைகள் தொடர்பாக வழக்குத்தொடுத்து அவைகளை வசூலித்துப் பெற்றுக் கொள்வதற்கும், மற்றும் அவைகளுக்கான செயல் விளைவினை ஏற்படுத்தக்கூடிய தீர்வுகளைக் கொடுப்பதற்கும், மற்றும் சொல்லப்பட்ட வாடகைகளைப் பெறுவதற்கும், மற்றும் குத்தகைக்கு எடுத்தவருடன் ஆன ஏதாவது ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைகளை நிறைவேற்றுவதைக் கட்டாயப் படுத்துவதற்கும், மற்றும் குத்தகைதாரர்களை வெளியேற்றுவதற்கும், மற்றும் குத்தகை சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் அல்லது ஏதாவது உடன்படிக்கையை நிறைவேற்றாததற்காக அவர்களிடமிருந்து சேதாரங்களுக்கான நட்ட ஈட்டினைப் பெறுவதற்கும், சட்டப்படியான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கும்.

VIII எனக்காகவும், என் சார்பாகவும் சொத்தினைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, என்னுடைய அதிகாரச் செயல்படுநர் சரியானதென்று கருதக்கூடிய உடன்படிக்கைகளின்மூலம், குத்தகைக்கு விடுபவருக்குச் சாதகமாகத் தேவையான குத்தகைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு.

IX எனக்குச் சொந்தமான பங்குகளின் மீதான அழைப்புக்களுக்குப் பணம் செலுத்துவதற்கும், நான் ஒரு பங்குநராக உள்ள ஏதாவது நிறுமத்தினுடைய, ஏதாவது கூட்டத்தில் வாக்களிப்பதற்கும்.

X என்னுடைய அதிகாரச் செயல்படுநர்கள், அல்லது அதிகாரச் செயல்படுநர் சரியென்று நினைக்கின்றபடி, என்னுடைய சொத்து சம்பந்தமான ஏதாவது காரியத்திற்கு, ஏதாவது முகவர் அல்லது பதிலாணை எனக்காக நியமிப்பதற்கும் விலக்குவதற்கும்,

XI நானே செய்தால் எப்படியிருக்குமோ அப்படி, எல்லா வகையிலும் முழுமையாகவும், செயல்விளைவினை ஏற்படுத்தக் கூடிய முறையிலும், மேலே சொல்லப்பட்ட காரியங்களுக்காக என்னுடைய அதிகாரச் செயல்படுநர்கள் அல்லது அதிகாரச் செயல்படுநர் சரியானதென்று கருதக்கூடிய எல்லாச் செயல் களையும் காரியங்களையும் பொதுவாகச் செய்வதற்கு.

மற்றும், இந்த உடன்படிக்கைப் பத்திரத்தின்மூலம், சொல் லப்பட்ட என்னுடைய அதிகாரச் செயல்படுநர்கள் அல்லது அதி காரச் செயல்படுநர் சட்டப்படியாகச் செய்கின்ற அல்லது செய் திருப்பதாக ஆகின்ற எல்லாவற்றையும், அவை எப்படிப்பட்ட வைகளாக இருப்பினும், பின்னேற்பு செய்து உறுதிப்படுத்துவ தற்கு, சொல்லப்பட்ட "அ. ஆ" என்ற நான் இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

________________முன்னிலையில் சாட்சியங்களுடன் நான் என்னுடைய கையொப்பத்தை இட்டுள்ளேன்.

________________ ________________

சாட்சியின் கையொப்பம் அ. ஆ.வின் கையொப்பம்

19__________ஆம் ஆண்டு, __________மாதம் __________ஆம் நாள் தேதியிடப்பட்டது.

படிவம் எண். 39
(நமூனா எண். 39)

நிறுமத்தால் விடுக்கப்பட்ட தற்காலிக இரசீது முன்னிடல் செய்யப்படாமல், பங்குச் சான்றிதழ் ஒப்படைப்பு செய் யப்படுவதன்மூலம் ஏற்படக்கூடிய நட்டத்திற்கான ஈட்டுறுதி
(Indemnity for loss resulting from Delivery of Share Certificate without production of Temporary Receipt issued by the Company)

தேதி __________ 19___

பெறுநர்

____

__________ வங்கி லிமிடெட்.,

____

அன்புடையீர்,

______________ நிறுமம் லிமிடெட்டினுடைய ________ எண்களைக் கொண்டு ______________ பங்குகள் சம்பந்தப் பட்ட ______________ எண் கொண்ட பங்குமாற்று இரசீதினை நான் தொலைத்துவிட்டேன், இடந்தவறி வைத்துவிட்டேன், அல்லது தற்செயலாக அழித்துவிட்டேன் என்பதைத் தாழ்மையுடன் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்; மற்றும் சொல்லப்பட்ட பங்குமாற்று இரசீது ஒப்படைப்புச் செய்யப்படவில்லையென்ற போதிலும் மேலேயுள்ள பங்குகளுக்கான சான்றிதழ்களை நிறுமம் எனக்கு விடுப்பதற்குப் பிரதிபயனாக, சொல்லப்பட்ட இரசீது ஒப்படைப்புச் செய்யப்படாததன் விளைவாக, அல்லது சொல்லப் பட்ட பங்குமாற்று இரசீனை வைத்திருக்கின்ற ஏதாவது நபரால் அல்லது அவர் சார்பாகச் செய்யப்படும் ஏதாவது கோருரிமையின் விளைவாக, நிறுமத்தால் ஏற்கவேண்டியதாக ஆகக்கூடிய கட்டணங்கள், செலவுகள் ஆகிய எல்லாவற்றிற்கும் எதிராக நிறுமத்திற்கு ஈடுசெய்வதற்கு நான் இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

____

பங்குதாரர்.

படிவம் எண். 40
(நமூனா எண். 40)
கணக்கினை உறுதிப்படுத்துதல்
(Confirmation Account)

______ வங்கி லிட்.

______ அலுவலகம்

எண் ______

தேதி ......

பெறுநர்

______

______

______

தேதி ______

பெறுநர்

மேலாளர்,

______ வங்கி லிமிடெட்

______

அன்புடையீர்,

______ தேதியிட்ட தங்களுடைய ______ எண்ணிடப்பட்ட கடிதத்

அன்புடையீர்,

______ தேதியில் எங்களுக்குச் சாதகமாக ரூ ______ இருப்பினைக் காட்டுகின்ற உங்களுடைய ______ கணக்கு சரியாக உள்ளது என்று சான்றளிக்கும் வகையில், இணைக்கப்பட்டுள்ள படிவத்தினைத் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய சமீபத்திய வாய்ப்பு வசதியில், தயவுகூர்ந்து கையொப்பமிட்டு எனக்குத் திரும்ப அனுப்பிவைத்தால் நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவனாக இருப்பேன்.

தங்கள் உண்மையுள்ள,

______ ______
கணக்காயர். மேலாளர்

தை நான்/நாங்கள் பெற்றுக் கொண் டேன்/டோம்; மற்றும் அதற்கான பதிலாக, ______ ______யில் என்னுடைய/எங்களுடைய பற்றில் காட்டப் பட்டுள்ள தொகையான ரூ ______ சரியாக உள்ளது என்பதை நான்/நாங்கள் கண்டறிகி றேன்/றோம் என்பதைப் பணிவுடன் நான்/நாங்கள் கூறிக் கொள்கி றேன்/றோம்.

தங்களின் உண்மையுள்ள

கையொப்பம் ______

முகவரி ______

படிவம் எண். 40(அ)
[நமூனா எண். 40(அ)]

கணக்கினை உறுதிப்படுத்துவதற்கான மற்றொரு படிவம்
(Another form for Confirmation of Account)

______ வங்கி லிமிடெட்
______
பம்பாய் ______ 19 ______

அன்புடையீர்,

______ 19 ____ வரையிலும் இருப்புக்கட்டப்பட்ட தங்களின் நடப்புக்கணக்கு, இணைக்கப்பட்டுள்ள விவராவணத்தின்படி, உங்களுக்கு/எங்களுக்குச் சாதகமாக ரூ ______ இருப்பினைக் காட்டுகின்றது என்பதைப் பணிவுடன் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தங்களுடைய உறுதப்படுத்தலைப் பெறுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

தங்கள் உண்மையுள்ள,
______ வங்கி லிட்.டுக்காக
______
கணக்கர்.

______
______
______

படிவம் எண் 40(ஆ)
[நமூனா எண் 40(ஆ)]

வாடிக்கையாளருடைய பதிலுக்காக இணைக்கப்பட்டுள்ள படிவம்
(Annexed Form for Customers' Reply)

இந்தப் படிவம் நிரப்பப்பட்டு, இத்துடன் அனுப்பப்பட்டுள்ள சிறப்பு உறையில், ... வங்கி லிமிடெட்டிற்குத் திரும்ப அனுப்பப்படவேண்டும்; இந்த உறையில் வேறு எந்தக் கடிதமும் இணைக்கப்படலாகாது.

பேரேடு எண்

பக்க எண் .... 19....

மேலாளர்,

.... வங்கி லிமிடெட்,

பம்பாய்.

பண்புடையீர்,

தங்களுடைய, ... 19........ தேதியிட்ட கடிதம் பெற்றுக்கொள்ளப்பட்டதனை நான் பணிவுடன் ஒப்புதல் செய்கிறேன்; மற்றும் .... 19........ தேதியில் என்னுடைய கணக்கின் வரவில்/பற்றில் உள்ள ரூ. .... இருப்பினை இதன்மூலம் உறுதிப்படுத்துகிறேன்.

தங்களின் உண்மையுள்ள,
கையொப்பம் ....
பதவி ....
முகவரி ....

படிவம் எண் 41
(நமூனா எண் 41)

பங்குத் தொகுப்புகள் மற்றும் பங்குகள் ஆகியவைகளை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கான வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்கள்
(Customer's Instructions for the Purchase or Sale of Stocks and Shares)

தேதி .... 19....

பெறுநர்

.... வங்கி லிமிடெட்.,

....

பண்புடையீர்,

கீழ்க்கண்டவைகளை, ரொக்கத்திற்கு/கணக்கின்மீது, வாங்குவதற்கு/விற்பதற்குத் தங்களுடைய தரகர்களைத் தயவுசெய்து அறிவுறுத்தவும்.

பிணையப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் : ______ } நூற்றுக்கு / ஒரு பங்குக்கு ரூ. ______க்கு

______

______

______

அதிகப்படாத விலையில் / குறையாத விலையில்

யாருடைய பெயரில் பதிவு செய்யப்பட வேண்டுமோ அவருடைய பெயர் } ______

இப்பொழுது அது யாருடைய பெயரில் உள்ளதோ அவருடைய பெயர் } ______ (முழுப்பெயரையும் கொடுக்கவும்)

தொழில் ______

முகவரி ______

(தயவுசெய்து தெளிவான முகவரியைக் கொடுக்கவும்)

மற்றும் அதிலிருந்து பெறக்கூடிய தொகையை ______

கணக்கிற்கு பற்று வைக்கவும் / வரவு வைக்கவும்.

எழுத்துமூலமாக ரத்து செய்யப்படும் வரையிலும்/______ தேதிவரையிலும் இந்த ஆணை செயலில் இருக்கும்.

தங்களின் உண்மையுள்ள,

கையொப்பம் ______

முக்கியக் குறிப்பு: அறிவுறுத்தல்கள், வாங்கப்படுவதற்காக இருப்பின், யாருடைய கணக்கு, வாங்கிய விலைக்கு, பற்று வைக்கப்படவேண்டுமோ அந்த நபரால் இந்தப் படிவம் கையொப்பமிடப்படவேண்டும். அறிவுறுத்தல்கள் விற்பனை செய்யப்படுவதற்காக இருப்பின், பிணையப்பத்திரங்கள் யாருடைய பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளனவோ அந்த எல்லா நபர்களாலும் அது கையொப்பமிடப்படவேண்டும்; அல்லது அவைகள் பதிவு செய்யப்படாதவைகளாக இருப்பின், அதாவது, வெறுமனே ஒப்படைப்புச்

செய்யப்படுவதன் மூலம் மாற்றிக் கொடுக்கப் படத்தக்கவைகளாக இருப்பின், உரிமையா ளர்கள் எனப்படும் எல்லா நபர்களாலும் கையொப்பமிடப்பட வேண்டும்.

படிவம் எண் 42
(நமூனா எண் 42)

பொருள்களின் பாதுகாப்பு வைப்பிற்கான விண்ணப்பப் படிவம்
(Application Form for Safe Custody of Articles)

பாதுகாப்பு வைப்பு இரசீது எண்	மேலாளர்

பெறுநர்

மேலாளர்

.... வங்கி லிமிடெட்,

....

அன்புடையீர்,

இந்நாளில் நான் உங்களிடம் வைப்புச் செய்துள்ள .... என்று பெயர் எழுதப்பட்டு, முத்திரை செய்யப்பட்டுள்ள .... களைத் தங்கள் பொறுப் பில் அருள்கூர்ந்து எடுத்துக்கொள்ளுமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அவைகளின்மீது வங்கிக் கட்டுப்பாடு எதனையும் கொண்டிராத கொள்ளை, தீ, இதர விபத்துகள், அல்லது இயற்கைப் பெரும் சக்திகள் ஆகியவைகளின் செயல் களால், அதன்மீது (பாதுகாப்பு வைப்புப் பொருளின்மீது), அல்லது அதனுடைய ஏதாவது ஒரு பகுதியின்மீது, நட்டம் அல்லது அழிவு ஏற்படுகின்ற தறுவாயில், தாங்கள் எந்த வகை யான பொறுப்பிற்கோ, அல்லது ஈடுசெய்வதற்கோ உட்பட்ட வர்கள் அல்லர் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். எனக்கு .... நாள்களுக்கான, முன்கூட்டிய ஓர் அறி விக்கையினைக் கொடுப்பதன் மூலம், வங்கியால் அவ்வாறு வேண்டப்பட்டால், அவற்றை நான் திரும்ப எடுத்துக்கொள்கி றேன் என்பதற்கும் நான் ஒப்புதல் அளிக்கிறேன்; மற்றும் மேலே சொல்லப்பட்டபடி, வைப்புச்செய்யப்பட்ட பொருள்களை நான்

எடுத்துக்கொள்ளவில்லையென்றால், எந்தவகையான காரணத்தினாலும் ஏற்படக்கூடிய நட்டம், அல்லது முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ அழிந்துபோவது, ஆகியவை தொடர்பான எல்லா இடர்வாய்ப்புகளிலிருந்தும், பொறுப்புகளிலிருந்தும், எந்தவித நிபந்தனையுமின்றி, வங்கி விடுக்கப்படும். பெட்டி ________ என்ற கூட்டெழுத்துகளால் (monogram) ஆன முத்திரைகளைக் கொண்டுள்ளது.

பின்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நான் படித்துத் தெரிந்துகொண்டேன்.

(கட்டுமத்தை ஒப்படைப்புச் செய்வது போன்றவை தொடர்பான சிறப்பு அறிவுறுத்தல் ஏதாவது இருப்பின் அதனை தயவுசெய்து இங்குக் குறிப்பிடவும்.)

....

....

வைப்புச் செய்பவரின் கையொப்பம்..............................

முழு முகவரி..

தங்கள் உண்மையுள்ள,

தேதி.............................. ________________

(பின்வரும் நிபந்தனைகள் பின்புறம் அச்சிடப்பட்டுள்ளன)

நிபந்தனைகள்

1. வைப்புச் செய்யப்படும் பொருட்டு, முத்திரையிடப்பட்ட பெட்டிகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்; அவைகளில் என்ன அடங்கியுள்ளன என்பதற்கு வங்கி பொறுப்பாளியல்ல. பயன்படுத்தப்படும் முத்திரை வைப்புச் செய்பவருடையதாக இருக்க வேண்டுமேயன்றி வங்கியினுடையதாக இருக்கக்கூடாது.

2. ....″ × ....″ × ....″ அளவுள்ள ஒவ்வொரு பெட்டிக்கும், உயர்ந்த பட்சம், முதல் ஆண்டிற்கு அல்லது அதனுடைய ஏதாவது பகுதிக்கு ரூ.........ஆன ஒரு கட்டணமும், அதைத் தொடர்ந்து வரும் ஒவ்வோர் ஆண்டிற்கும் ரூ .... ஆன ஒரு கட்டணமும் விதிக்கப்படும். பருமனான பெட்டிகளுக்கு, மேலாளரின் விருப்பப்படி, உயர் அளவுக் கட்டணங்கள் விதிக்கப்படும்.

3. அவைகளின்மீது வங்கிக் கட்டுப்பாடு எதனையும் கொண்டிராத கொள்ளை, தீ அல்லது இதர விபத்து அல்லது இயற்கைப்

பெரும் சக்திகள் ஆகியவைகளின் மூலமான நட்டம், அல்லது பாதுகாப்பு வைப்புப் பெட்டி முழுவதும் அல்லது அதனுடைய ஏதாவது ஒரு பகுதி அழிந்துபோகின்ற தறுவாயில், அது சம்பந்தமாக வங்கி, எந்தப் பொறுப்பிற்கும், நட்டத்தை ஈடுசெய்வதற்கும் உட்பட்டதாக இருக்காது என்று வெளிப்படையான நிபந்தனையின்பேரில் இரசீது விடுக்கப்பட்டுள்ளது. எழுத்து மூலமான .... நாள்களுக்கான ஓர் அறிவிக்கையைக் கொடுப்பதன்மூலம் வைப்புச் செய்வதற்கான இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கான உரிமையை வங்கி தன்னிடம் வைத்துக்கொள்கின்றது; இந்தக் காலத்திற்குள் வைப்புச் செய்தவர் பெட்டியைத் திரும்ப எடுத்துக்கொள்வார். அனுமதிக்கப்படும் காலத்திற்குள் அது திரும்ப எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்குமெனில், எந்தவகையான காரணத்தினாலும் ஏற்படும் நட்டம் அல்லது அது முழுமையாக அல்லது ஒரு பகுதி அழிந்து போவது ஆகியவற்றிற்கு வங்கி பொறுப்பாளியாகமாட்டாது. தனித்த முறையிலோ அல்லது கூட்டாகவோ தரவேண்டியுள்ள ஏதாவது கடனுக்காக வங்கி கொண்டிருக்கும் பற்றுரிமைக்கு உட்பட்டுத்தான் பாதுகாப்பு வைப்புப் பெட்டி இருக்கும்.

படிவம் எண் 43

(நமூனா எண் 43)

பாதுகாப்பு வைப்புப் பொருள்களுக்கு அளிக்கப்படும் மாதிரி இரசீது

(Specimen Receipt for Safe Custody Articles)

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள பிணையப் பத்திரம், அதனடியில் வைப்புச் செய்தவருடைய கையொப்பத்தைக் கொண்டதாக, இந்த இரசீது ஒப்படைப்புச் செய்யப்படுவதன்பேரிலும், அல்லது தாமே நேரடியாக வர முடியவில்லையென்றால் பின்புறத்தில் மேலெழுதல் செய்யப்பட்டு அதிகாரம் பெறுகின்ற நபருக்கும், மட்டுமே கொடுக்கப்படும்.

முடிகின்றபொழுதெல்லாம் அவருடைய தனி பட்ட (personal) விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டுமென்று குறிப்பாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எண் .... வங்கி லிட்.,

.... கிளை .... 19 ....

..........................யிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது
..........................க்கான.............. சான்றிதழ் எண்..............
..........................வங்கி லிட்.,டுக்காக
....
....
..........................வங்கி லிமிடெட். இடமிருந்து மேலே சொல்லப்பட்ட..........................களைப் பெற்றுக்கொண்டேன்.

கையொப்பம்.......................தேதி..............19 —

முக்கியக் குறிப்பு :-இந்த இரசீது பாதுகாப்பான ஓர் இடத்தில் வைத்திருக்கப்படவேண்டும்.

(இரசீதின் பின்புறம்)

பெறுநர்

மேலாளர்,

..........................வங்கி லிட்.,

....

மறுபக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள..........................களைத் அருள்கூர்ந்து இதைக் கொணர்பவரிடம் ஒப்படைப்புச் செய்யவும்.

கையொப்பம்..........................
இருப்பிடம்..........................
தேதி..........................

படிவம் எண் 44

(நமூனா எண் 44)

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்குக் காணும் வாய்ப்பினைக் கொடுக்கின்ற காப்பு வாசகத்துடன் கூடிய, பொருள்களின் பாதுகாப்பு வைப்பிற்கான மாதிரி இரசீதின் படிவம்.

(Form of Specimen Receipt for Safe Custody Articles with Provision for Access to two or more Persons)

பெயர் (கள்)..........................வாடகை ரு..........................
முகவரி(கள்)..........................இருந்து
..........................எஸ்/ஓ எண்..........................
....
....

மாதிரிக் கையொப்பம் (கையொப்பங்கள்)..........................
திறவுகோல் எண்..........................தொலைபேசி எண்..........................
காப்பறை எண்...........................

....	....
காணும் வாய்ப்பு அதிகாரமளிக்கப் பட்டவர்கள்	அவர்கள் பின்வருமாறு கையொப்பமிடுவார்கள்
....	....
....	....
....	....
....	....

படிவம் எண் 45
(நமூனா எண் 45)

ஆவணங்கள் சேர்ந்த வாணிக உறுதிக்கடிதம்
(Documentary Letter of Credit)

.... வங்கி லிட்.,

....

தேதி..

எண் ____________

ரூ. ....

பெறுநர் ....

....

அன்புடையீர்,

....சேர்ந்த .... என்பவருக்குக் கப்பலில் அனுப்பிவைக்கப்படுவதற்குள்ள சரக்குகளின் இடாப்பு விலைக்காக, எல்லாமாகச் சேர்ந்து ரூ............ (ரூ. .... மட்டும்) அளவிற்கு .... நாள்களுக்கான, பார்த்தவுடன் செலுத்துவதற்கான மாற்றுச் சீட்டுகளை இந்த வங்கியின்மீது எழுதுவதற்குத் தாங்கள் அதிகாரமளிக்கப் பட்டுள்ளீர்கள்.

அதற்கு முன்னர் ரத்து செய்யப்பட்டாலன்றி, இந்தக் கடன், இந்தத் தேதியிலிருந்து ஆறு திங்களில் முடிவடைகின்றது. அதற்கு எதிரான எல்லா மாற்றுச் சீட்டுகளும் அந்தத் தேதிக்கு முன்னர் எழுதப்பட்டு, இடாப்பு, சரக்கனுப்பீடு செய்தவரின் ஆணைக்கு விடுக்கப்படும் கப்பல் வழிச்சீட்டு வெற்று மேலெழுதல் செய்யப் பட்டு, மற்றும் கடல் காப்பீட்டுப் பத்திரங்கள் அல்லது சான்றிதழ்கள் ஆகியவைகளோடு சேர்த்து அனுப்பப்பட்டு எங்களுக்குத் தகவல் அளிக்கப்படவேண்டும்.

இந்தக் கடனின்கீழ் எழுதப்படும் எல்லா மாற்றுச் சீட்டு களின் விவரங்களும் இங்குப் பின்புறத்தில் மேலெழுதல் செய்யப் படவேண்டும்; மற்றும், அவைகள் .... தேதி யிடப்பட்ட கடன் எண் .... கீழ் எழுதப்பட்டவை என்று மாற்றுச் சீட்டுகள் குறிப்பிட வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட பத்திரங்களைச் சரியான முறையில் இந்த வங்கிக்குக் கொடுத்துவிடுவதற்கு எதிராக, சரியான முறை யில் முன்னிடல் செய்யப்பட்டால், ... ல் செலுத்தப்படுவதாகச் சொல்லப்பட்ட மாற்றுச்சீட்டுகள் சரியான முறையில் ஏற்பு செய்யப்படும் என்று, இதன்மூலம், இந்தக் கடனின்கீழ், மற்றும் அதனுடைய சரத்துகளுக்கேற்ப எழுதப் படுகின்ற மாற்றுச்சீட்டுகளை எழுதுபவர்கள், மேலெழுதுபவர் கள், மற்றும் நல்லெண்ணத்துடன் அவைகளை வைத்திருப்பவர்கள் ஆகியவர்களுடன், நாங்கள் ஒப்பந்தம் செய்துகொள்கிறோம். தவணை முதிர்வில், சரியான முறையில் முன்னிடல் செய்யப் படுவதன் பேரில் உரிய முறையில் அவைகளுக்குப் பணம் செலுத்தப்படும்.

தங்களின் உண்மையுள்ள,

.... வங்கி லிட்.டுக்காக

....

மேலாளர்.

படிவம் எண் 45(அ)

[நமூனா எண் 45(அ)]

தூய வாணிகவுறுதிக் கடிதம்
(Clean Letter of credit)

.... வங்கி லிட்.,

....

எண் .... தேதி ....

பெறுநர் ....

....

அன்புடையீர்,

இந்த வங்கியின்மீது, மொத்தத்தில் ரூ. .... (ரூபா .... மட்டும்) வரையிலும், ... நாள்களில் பார்த்தவுடன் செலுத்தப்படுவதற்கான மாற்றுச் சீட்டு களை எழுதுவதற்கு, இதன்மூலம், தாங்கள் அதிகாரமளிக்கப்

பட்டுள்ளீர்கள்; மற்றும் இந்தக் கடனின்கீழ், மற்றும் அதனுடைய சரத்துகளின்படி எழுதப்படுகின்ற மாற்றுச் சீட்டுகளை எழுதியவர்கள், மேலெழுதியவர்கள், நல்லெண்ணத்துடன் அவைகளை வைத்திருப்பவர்கள் ஆகியோருடன், சரியான முறையில் அவைகள் முன்னிடப்படுமானால், ...ல் செலுத்தப்படுவதற்காக, உரிய முறையில் ஏற்பு செய்யப்படுமென்றும், தவணை முதிர்வில் உரிய முறையில் முன்னிடல் செய்யப்படுமானால் அவைகளுக்குப் பணமளிக்கப்படும் என்றும் இதன்மூலம் நாங்கள் ஒப்பந்தம் செய்துகொள்கிறோம்.

இந்தக் கடன், இத் தேதிக்குப் பின்னர் ஆறுமாதங்களுக்குச் செயலில் இருக்கும். அதற்கெதிராக எழுதப்படுகின்ற எல்லா மாற்றுச் சீட்டுகளினுடைய விவரங்களும் இதன் பின்புறத்தில் மேலெழுதல் செய்யப்படவேண்டும்; மற்றும் மாற்றுச் சீட்டுகள், 19 .... ஆம் ஆண்டு .... மாதம் .... நாள் தேதியிடப்பட்ட கடன் எண் .... ன் கீழ் எழுதப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடவேண்டும்.

தங்கள் உண்மையுள்ள,

.... வங்கி லிட்.,

....

மேலாளர்.

படிவம் எண் 45(ஆ)

[நமூனா எண் 45(ஆ)]

உறுதிசெய்யப்பட்ட கடன்

(Confirmed Credit)

அ. ஆ. இ. வங்கி லிமிடெட், பம்பாய்

....19 ....

....

உறுதிசெய்யப்பட்ட கடன் எண் ....

(தயவுசெய்து அதனைக் குறிப்பிடவும்)

அன்புடையீர்,

....வரையில் செல்லுபடியாகத்தக்க, ரூ. ....(அதாவது ....) வரையிலும், ...டைய ஆணையின் பேரிலும், அவருடைய கணக்

கிலும், ...க்குச் சாதகமாக, உறுதிசெய்யப்பட்ட ஒரு கடன் கணக்கினை எங்களுடன் அவர்கள் திறந்திருப்பதாக ....யிடமிருந்து நாங்கள் தகவலைப் பெற்றுள்ளோம் என்பதைத் தங்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்; அக் கடன், உங்களால் எங்களின் மீது எழுதப்படுகின்ற மாற்றுச் சீட்டுகள் பின்வருபவைகளோடு சேர்த்து அனுப்பப்படுவதன் மூலம் கிடைக்கக்கூடியதாகும்.

இடாப்பு

வாணிகத்தூதுவர் இடாப்பு ....'ஆணை'க்கான கப்பல் அனுப்பீடு சம்பந்தப் பட்ட கப்பல் வழிச்சீட்டின் முழுத்தொகுதி	எடைக்குறிப்பு கட்டுமானக் குறிப்பீடுகள் தோற்றுவாய்ச் சான்று. கடல், மற்றும் போர் இடர் வாய்ப்புகளுக்குப் பாதுகாப் பளிக்கும் காப்பீட்டுப் பத் திரம் அல்லது சான்றிதழ்

..................................முன்னால், ...க்கு .... கப்பல் அனுப்பீடுகளில்..................யிருந்து ....க்கு ....நீராவிக்கப்பல் (எஸ். எஸ்.) மூலம் அனுப் பப்பட்டுள்ள ....ஒரு கப்பல் அனுப்பீடுகள் தொடர்பான மேலே குறிப்பிடப்பட்ட பத்திரங்கள் யாவும்.

இந்தக் கடனின்கீழ் எழுதப்படும் எல்லா மாற்றுச் சீட்டு களும் '..................தேதியிடப்பட்ட, பி/சி எண் .... கீழ் எழுதப்பட்டது' என்ற சரத்தினைக் கொண்டிருக்கவேண் டும்; மற்றும் அவைகள் இந்தக் கடனின் நிபந்தனைகளுக்கு முழுமையாக ஒத்துப்போகின்ற முறையில் எழுதப்பட்டு முன்னிடப் பட்டால், இத்தகைய மாற்றுச் சீட்டுகளுக்கு அவைகள் முன்னிடப் பட்டவுடன் பணமளிப்பதற்கு நாங்கள் இதன்மூலம் பொறுப்பேற் கின்றோம்.

எதிர் கையொப்பம் தங்கள் உண்மையுள்ள,

....

மேலாளர்.

படிவம் எண் 45 (இ)

உறுதி செய்யப்படாததும், அறிவிக்கையின்றி ரத்து செய்யப்படுவதற்கு உட்பட்டதுமான கடன்
(Credit which does not carry Confirmation and is subject to cancellation without Notice)

அ. ஆ. இ. வங்கி லிமிடெட், பம்பாய்.

.... 19........

....

† உறுதி செய்யப்படாததும், அறிவிக்கையின்றி ரத்து செய்யப்படுவதற்கு உட்பட்டதுமான உடன்படிக்கைக் கடன் எண்.................. (தயவுசெய்து இங்குக் குறிப்பிடவும்) பற்றிய தகவலறிவிப்பு.

அன்புடையீர்,

.... வரையில் இங்குச் செல்லுபடியாகத்தக்க, ரூ.................. (குறிப்பிடுக) வரையிலுமான,.................. டைய ஆணையின் பேரிலும், அவருடைய கணக்கிலும் ஆன,.................. ....க்குச் சாதகமான அவர்களுடைய.................. கடனை அவர்கள் விடுத்திருக்கிறார்கள் என்று.................. ....ஆல், நாங்கள் தகவல் அளிக்கப்பட்டுள்ளோம் என்பதைப் பணிவுடன் உங்களுக்கு நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம்; மற்றும் அக் கடன்..................ஆல்,.................. மீது,.................. பரிகாரத்துடன் எழுதப்படுகின்ற மாற்றுச் சீட்டுகளின் மூலம் கிடைக்கக்கூடியதாகும்; மாற்றுச் சீட்டு கீழ்க்கண்டவைகளோடு சேர்த்து அனுப்பப்படவேண்டும்.

இடாப்பு	எடைக்குறிப்பு கட்டுமானக் குறிப்பீடுகள்
வாணிகத் தூதுவர் இடாப்பு	தோற்றுவாய்ச் சான்று,
முழுத்தொகுதி, 'ஆணை' 'கப்பல் அனுப்பீடு' கப்பல் வழிச்சீட்டு.................. ....யினுடைய ஆணைக்கு	கடல் மற்றும் போர் இடர் வாய்ப்புகளுக்குப் பாது காப்பளிக்கும் காப்பீட்டுப் பத்திரம் அல்லது சான்றிதழ்.

..................முன்னர்..................க்கு..................
கப்பல் அனுப்பீடுகளில்..................யிருந்து..................க்கு

† பொறுப்பினைத் தவிர்க்கின்ற இந்தச் சாத்துக்குச் சிறப்புக் கவனத்தை ஈர்க்கும்பொருட்டு வேறுபட்ட நிறமையில் அச்சிடப்படுவது.

..................நீராவிக்கப்பல் (எஸ். எஸ்.) மூலம் அனுப்பப்பட்டுள்ள ....ஒரு கப்பல் அனுப்பீடு சம்பந்தப்பட்ட, மேலே குறிப்பிடப்பட்ட யாவும்.

இந்தக் கடனின்கீழ் எழுதப்படும் மாற்றுச் சீட்டுகள் யாவும் '..............................தேதியிடப்பட்ட பி/சி எண்..................கீழ் எழுதப்பட்டவை' என்ற சரத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.

இந்தக் கடன் நிபந்தனைகளுக்கு ஒப்ப எழுதப்பட்ட மாற்றுச் சீட்டுகளை மாற்றித்தருமாறு நாங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளோம்; ஆனால் இந்த அறிவுறுத்தல் தங்களுடைய உதவிக்காக மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது; மற்றும் அது, இத்தகைய மாற்றுச்சீட்டுகளை மாற்றல் செய்து தரவேண்டுமென்ற பொறுப்பு ஏதும் வங்கிக்கு உள்ளது என்பதாகப் பொருளாகாது.

எதிர் கையொப்பமிடப்பட்டது ....

தங்கள் உண்மையுள்ள,

____

மேலாளர்.

படிவம் எண் 46

(நமூனா எண் 46)

வாணிக உறுதி சுற்றுக் கடிதம்
(Circular Letter of Credit)

____________________19______க்குப் பின்னர் கிடைக்கத்தக்கது அன்று.

எண்..............................　　　　..............................வங்கி லிட்.,

ரூ..............................　　　　..............................

தேதி ....

பண்புடையீர்,

இந்த (வங்கி) அலுவலகத்தின்மீது எழுதப்படும், பார்த்தவுடன் செலுத்தப்படுவதற்கான மாற்றுச் சீட்டுகளுக்கு எதிராக ....என்பவரால், மொத்தத்தில் ரூ.............................. தொகை வரையிலும், கோரப்படக்கூடிய நிதியை நீங்கள் யாருக்கு இதன்மூலம் அளிக்கவேண்டிவருமோ அந்த, சொல்லப்பட்ட ....என்பவரை இந்தக் கடிதம் மூலம் தங்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம்; அந்த மாற்றுச்சீட்டுகளைத் தாங்கள் தயவுகூர்ந்து ....மீதான வங்கியரின் காசோலைகளுக்குரிய, உங்களுடைய வாங்கும் விலையில் எழுதிக்கொள்ள

வும். ஒவ்வொரு மாற்றுச் சீட்டும், இந்த நாணயக்கடித எண் ....இன் கீழ் எழுதப்பட்டதாகக் குறிப்பிடவேண்டும்; மற்றும், இதனோடு கொடுக்கப்படவேண்டிய, அதே எண் கொண்ட, எங்களுடைய சுட்டிக்காட்டு கடிதத்தில் உள்ள மாதிரிக் கையொப்பத்தைப் போலவே கையொப்பமிடப்பட வேண்டும்.

இத்தகைய மாற்றுச்சீட்டுகள், இந்தத் தேதியிலிருந்து ________ ....மாதங்களுக்குள் மாற்றித்தரப்படுமானால், உரிய முறையில் அவைகளுக்குரிய பணம் செலுத்தப்படும் என்பதற்கு நாங்கள் உடன்படுகிறோம்.

ஒவ்வொரு மாற்றுச்சீட்டிற்கான தொகையும், இந்தக் கடிதத்தின் பின்புறத்தில் பொறிக்கப்படவேண்டும். இந்தக் கடிதம் ரத்து செய்யப்பட்டு கடைசியாக எழுதப்பட்ட மாற்றுச் சீட்டுடன் இணைக்கப்படவேண்டும்.

தங்கள் உண்மையுள்ள,

____

பெறுநர்

திருவாளர்கள் : (இத்துடன் சேர்த்துக் காண்பிக்கப்பட வேண்டிய சுட்டிக்காட்டும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கியர்கள்)

குறிப்பு : பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு, வாணிக உறுதிக்கடிதத்தை வைத்திருப்பவர், சுட்டிக் காட்டும் கடிதத்திலிருந்து அதனைத் தனியே எடுத்து, எடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நாணயக் கடிதத்தின் மறுபுறம் பின்வருமாறு இருக்கும் :

நாள்	யாரால் செலுத்தப் பட்டது	செலுத்தப்பட்ட தொகை	தொகை. எண்களில்

படிவம் எண் 46(அ)

[நமூனா எண் 46(அ)]

சுட்டிக்காட்டும் கடிதம்
(Letter of Indication)

(வாணிகவுறுதிக் கடிதத்தோடு சேர்ந்து செல்லவேண்டியது)

..................................வங்கி லிட்.,

....

எண்.................. தேதி ....

பெறுநர்

திருவாளர்கள்: (இந்தச் சுட்டிக்காட்டும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கியர்கள்)

பண்புடையீர்,

இந்தக் கடிதத்தை வைத்திருப்பவர், யாருக்குச் சாதகமாகப் பரிந்துரை செய்யப்பட்டு, ... எண் கொண்ட நாணயக் கடிதத்தை நாங்கள் விடுத்துள்ளோமோ அந்த .... என்பவராவார். மற்றும் கீழேயுள்ள மாதிரிக் கையொப்பத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

மாதிரிக் கையொப்பம் ....

குறிப்பு: இந்தக் கடிதம், அதனை வைத்திருப்பவரால், சம்பந்தப்பட்ட நாணயக் கடிதத் தொகை முழுவதும் தீர்ந்துபோகின்ற வரையில் வைத்திருக்கப் படவேண்டும்; வாணிக உறுதிக் கடிதத் தொகை முழுவதும் தீர்ந்து போனவுடன், இறுதியாகப் பணம் செலுத்துகின்ற வங்கியரிடம் இது ஒப்படைக்கப்படவேண்டும்.

மேற்கோள் நூற்பட்டியல்
(Bibliography)

Aiyar, A. N. — Banking Companies Act, 1949.

Bagehot — English Constitution.

Banerjee, Dr. Pramath Nath — Public Administration in **Ancient** India.

Bhashyam, K. and Adiga, K. Y. — The Negotiable **Instruments Act**, 1881.

Brunton, John — Bankers and Borrowers.

,, — Letters on Practical Banking.

Buhler — The Laws of Manu. The Sacred Books of the **East**, Vol. XXV.

Byles, Sir John Barnard — A Treaties on the Law of **Bills of** Exchange, Promissory Notes and Cheques.

Chalmers, Sir M.D. — A Digest of the Law of Bills of **Exchange.**

,, — The Bills of Exchange Act, 1882.

Davis, J.F. — Bank Organisation, Managements and **Accounts.**

Dongerkerry — The Indian Partnership Act, 1932.

Donough's — Indian Stamp Act.

Dunbar, Charles, F. — The Theory and History of Banking.

Dutt, R. C. — Civilization in Ancient India.

Easton, H. T. — History and Principles of Banks and **Banking.**

Evitt, H. E. — Practical Banking, Currency and Exchange.

Ewbank — Manual for Co-operative Societies in the **Bombay** Presidency.

Findlay Shirras — Indian Finance and Banking.

Ghosh, K. M. — The Indian Company Law.

Ghose, Sir Rashbehary — The Law of Mortgage in **India,** 2 Vols.

Gilbart, J. W. — The History, Principles and Practice of **Banking**, 2 Vols, Logic of Banking.

Halsbury, Lord — The Law of England, Vol. II.

Holden, J. M. — Securities for Bankers' **Advances.**

Hopkins, Alfred — The Fundamentals of Good **Bank-Building.**

Hutchison, John — The Practice of Banking, 4 **Vols.**

Institute of Bankers, London – Questions on Banking Practice.
Jain, L. C. — Indigenous Banking in India.
Jones, R. W. — Studies in Practical Banking.
Jordan, David F. — Investments.
Kautilya — Arthshastra.
Kniffin, William H. — Commercial Paper.
Laughlin, J. C. — The Principles of Money.
League of Nations, Economic Intelligence Service — Commercial Banks.
MacDonnel, A. A. and Keith, A. B. — Vedic Index, Numbers and Subjects (1912), Vol. I.
McGregor, T. D. — Bank Advertising Plans.
MacLeod, Henry Dunning — The Elements of Banking.
,, — Theory and Practice of Banking, 2 Vols.
Megrah, Maurice — The Banker and Customer.
Mitra, A. C. — Banking Companies Act, 1949.
Moxon, T. B. — English Practical Banking.
Mulla, D. F. and Shavaksha, K. S. — Indian Contract Act, Sale of Goods Act and Partnership Act, Students' Ed.
Paget, Sir John — The Law of Banking.
,, — Legal Decisions Affecting Bankers (Edited and Annotated), 3 Vols.
Palmer — Company Precedents.
Pollock and Mulla — The Indian Contract Act.
Prudden, Russel F. — The Bank Credit Investigator.
Rae, George — The Country Banker.
Ramachandra Rao, B — Present Day Banking in India.
Richard, R. D. — The Origin of the Cheque.
Sen, Sushil Chandra — The Indian Companies Act, 1913 (As Amended by Act XXII of 1936).
Sheldon, H. P. — Practice and Law of Banking.
Sitaram, R.S. — Banking Decisions Affecting Bankers in India.
Smith, James Walter — A Handy Book on the Law of Banker and Customer.
Splading, W. F. — Banker's Credit.
Stead, Francis R. — Bankers' Advances.
,, — Bankers' Tests.
Steele, F. E. — The Banker as Lender.
Suneja, L. R. — Bankers' Objections on Unpaid Cheques.
,, — Bankers' Securities Against Advances.

Sykes, Ernest — Banking and Currency.
Tannan, M. L. — Banking Needs of India.
,, — Regulation of Banks in India.
Thakur, B. T. — Organisation of Indian Banking.
Thomas, S. Evelyn — Bankers and Customer.
Thomson, Williams — Dictionary of Banking.
Tillyard, Frank — Banking and Negotiable Instruments.
Trant, James B. — Bank Administration.
Walker, J. Douglas — A Treatise on Banking Law.
Watkins, Leonard L. — Bankers' Balances.
Whitney, N. R. — Banking Practice.
Withers, Hartley — Bankers and Credit.

Annual Report on the Indian Post and Telegraphs Department.
Census Report (1931).

Report of the Hilton Young Commission (1926).

Report of the Indian Central Banking Enquiry Committee (1931) Vol. I.

Report of the Indian Law Commission (1866)

Report of the Stock Exchange Enquiry (Morison) Committee, (Bombay, 1937).

Statistical Tables Relating to Banks in India.

The Indian Finance Year Book.

The Investors' Year Book — Place, Siddons and Gough.

Reserve Bank of India Publications. (The author is grateful for the use of the material although it has not been possible to acknowledge the source at each place separately).

Handout issued by Ministry of Commerce and Industry, Government of India on Credit Guarantee Scheme (Substantially reproduced).

கலைச்சொற்கள்

A

Actuary	—	காப்பீட்டு மதிப்பாளர்
Advance	—	கடன், முன்பணம்
Affidavit	—	வாக்குமூலப் பத்திரம் அல்லது ஆணை உறுதிப் பத்திரம்
Agent	—	முகவர்
Agreement	—	உடன்பாடு
Allotment	—	ஒதுக்கீடு
Assignee	—	உரிமை மாற்றிப் பெற்றவர்
Assignment	—	உரிமை மாற்றம், உரிமை ஒதுக்கீடு
Assignor	—	உரிமை மாற்றிக் கொடுப்பவர்
Attachment	—	பற்றுகை
Attestation	—	அத்தாட்சி செய்தல் அல்லது சான்றொப்பம்
Attorney	—	சட்டமுகவர், வக்காலத்தார்
Auditor	—	தணிக்கையாளர்

B

Bailee	—	ஒப்படை பெறுநர்
Bailment	—	ஒப்படைவு
Bailor	—	ஒப்படை செய்பவர்
Bank	—	வங்கி
Banker	—	வங்கியர்
Banking	—	வங்கியியல்
Bankrupt	—	நொடிப்புநிலையடைந்தவர்
Bankruptcy	—	நொடிப்புநிலை
Bearer	—	உடையவர், கொணர்பவர்
Bilateral	—	இருதரப்பு
Bill of Exchange	—	மாற்றுச்சீட்டு
Bill of Lading	—	கப்பல் வழிச்சீட்டு
Blank Transfer	—	வெற்று மாற்றல்
Bond	—	பிணைமுறி, பத்திரம்

Bonus — மேலூதியம்
Book Debit — ஏட்டுக் கடன்
Breach — முறிவு

C

Carrier — சரக்கேற்றி
Charge — பொருட்பிணைப் பொறுப்பு
Chartered Accountant — பட்டயக் கணக்கர்
Claim — கோருரிமை
Collateral Security — துணைப்பிணையம்
Consideration — மறுபயன், பிரதிபயன்
Consignee — அனுப்பீடு பெறுநர்
Consignment — அனுப்பீடு
Consignor — அனுப்பீடு செய்நர்
Contingency — தற்செயல் நிகழ்ச்சி, எதிர்பாரா நிகழ்ச்சி
Contract — ஒப்பந்தம்
Contract Act — ஒப்பந்தச் சட்டம்
Conversion — தகாமுறையிலான மாற்றம் அல்லது கையாடல் தீங்கு
Corner — முடுக்கு
Corporation — கூட்டுரு
Correspondent — தொடர்பாளர்
Co-surety — சக பிணையாளி
Counterfoil — சரிநேர் படி
Counter Security — எதிர்ப் பிணையம்
Country of Origin — தோற்றுவாய் நாடு
Creditor — கடனீவோர்
Credit Squeeze — கடன் நெருக்கடி
Cumulattive Preference Shares — குவிவு முன்னுரிமைப் பங்குகள்
Currency — செலாவணி
Custodian — காப்பாளர்
Custom — சுங்கம்

D

Debenture — கடனீட்டுப் பத்திரம்
Debtor — கடனாளி
Defendant — பிரதிவாதி, எதிர்வாதி
Definition — விளக்கம், இலக்கணம்
Delivery — ஒப்படைப்பு, சேர்ப்பு

Deposit — வைப்பு
Depositor — வைப்பாளர்
Depository — வைப்பகம்
Discharge — விடுவிப்பு, தீர்ப்பு
Dividend — பங்காதாயம்
Dividend Warrant — பங்காதாய ஆணை
Document — ஆவணம்
Draft — பணவிடை

E

Encumbrance — வில்லங்கம்
Endorsement — மேலெழுதல்
Endowment Policy — காலவரைத் திட்டாவணம்
Equitable mortgage — நியாய அடைமானம்
Equitable Owner — நியாய உரிமையாளர்
Equitable Title — நியாய உரிமை
Equity — நியாயம்
Estoppel — முரண்தடை
Evaluation — மதிப்பீடு

F

Firm — நிறுவனம், கூட்டுவணிக நிறுவனம்
Floating Charge — இழையுறு பொருட்பிணைப்பொறுப்பு
Foreclosure — மீட்புரிமை அடைப்பு
Forfeiture — பறிமுதல் அல்லது ஒறுப்பிழப்பு
Form — படிவம், நமூனா
Forward Contracts — முன்னோக்கிய ஒப்பந்தங்கள்
Fraud — மோசடி
Free consent — தன்னிச்சை ஒப்புதல்

G

Gilt-Edged-Securities — சிறப்பீட்டுப் பிணையப் பத்திரங்கள்
Good Faith — நல்லெண்ணம்
Gratuitous — ஊதியம்பெறா
Guarantee — பொறுப்புறுதி
Guarantor — பொறுப்புறுதியர்

H

Hire purchase — வாடகை கொள்முறை
Holder — உடையவர், வைத்திருப்பவர்
Holder-in-due-course — முறைப்படி உடையவர்
Hypothecation — ஒற்றி அல்லது அசை அடைமானம்

I

Implied	—	உள்ளார்ந்த, உட்கிடையான
Income-Tax Return	—	வருமான வரி விவரவறிக்கை
Indemnity	—	ஈட்டுறுதி
Inscribed Stock	—	பொறிக்கப்பட்ட பங்குத் தொகுப்பு
Insolvent	—	நொடித்தவர், வகையில்லாதவர்
Instruction	—	அறிவுறுத்தல்
Insurance	—	காப்பீடு
Insurable Interest	—	காப்பீடு செய்தகு உரிமை
Insurance Policy	—	காப்பீட்டுத் திட்டாவணம்
Invalid	—	செல்லாதது
Investment	—	முதலீடு
Investor	—	முதலீட்டாளர்
Invoice	—	இடாப்பு

J

Joint and Several	—	கூட்டாகவும் தனித்தும்
Joint Guarantee	—	கூட்டுப் பொறுப்புறுதி

L

Law Merchant	—	வழக்காற்றுச் சட்டம்
Legacy	—	மரபுரிமைச் சொத்து, இறுதி விருப்பக் கொடை
Legal Mortgage	—	சட்டப்படியான அடைமானம்
Letter of Credit	—	வாணிக உறுதிக் கடிதம்
Letter of Indication	—	சுட்டிக்காட்டும் கடிதம்
Licence	—	உரிமம்
Lien	—	பற்றுரிமை
Liquidator	—	கலைப்பதிகாரி
Liquidity	—	எளிவரல் தன்மை
Local Authority	—	உள்ளாட்சியதிகாரம்
Locker	—	நிலைப்பெட்டி
Lunatic	—	சமமன நிலை இழந்தவர்

M

Mandate	—	உரிமைக் கட்டளை
Margin	—	எச்ச ஓரம்
Material fact	—	கருப்பொருள் உண்மை
Mercantile Agent	—	வாணிக முகவர்
Minor	—	இளவர்
Misrepresentation	—	திரித்துக்காட்டல்

Mortgage — அடைமானம்
Mortgagee — அடைமானம் வாங்கியவர்
Mortgagor — அடைமானம் கொடுத்தவர்
Movables — அசைபவை, அசையும் சொத்துகள்

N

Negligence — கவனமின்மை
Negotiability — ஆவண மாற்றுத்தன்மை
Negotiable Instrument — மாற்றுமுறை ஆவணம்
Nomination — நியமனம் அல்லது பெயர் குறிப்பம்
Nominee — பெயரவர்
Non-Resident — குடியாளர் அல்லாதவர்
Notice — அறிவிக்கை

O

Offer — முனைவு அல்லது முன்கூற்று
Official Assignee — உரிமை மாற்றிப்பெறும் அதிகாரி, சொத்தாட்சியதிகாரி
Official Receiver — சொத்தாட்சியதிகாரி
Ordinary shares — சாதாரணப் பங்குகள்
Overhead charges — மேற்செலவுகள்

P

Package — கட்டுமம்
Packing — கட்டுமானம்
Paid up Capital — செலுத்திய முதல்
Parcel — பொட்டலம், கட்டுமம்
Partnership — கூட்டுவணிகம், கூட்டாண்மை
Patent — புனைபொருள்
Personal Security — ஆட்பிணையம்
Pilferage — சிறுஅளவுத் திருட்டு
Pledge — அடகு
Pledgee — அடகுபெறுநர்
Pledgor — அடகுவைப்பவர்
Postal Order — அஞ்சல் ஆணை
Preference shares — முன்னுரிமைப் பங்குகள்
Premium — முனைமம்
Presentation — முன்னிடல்
Principal Debitor — முதன்மைக் கடனாளி
Probate — விருப்புறுதி மெய்ப்பிதழ்

Probate of a Will — உயில் மெய்ப்பிதழ்
Promissory Note — கடனுறுதிச் சீட்டு

Q

Questionnaire — வினாத்தொகுதி
Quotation — விலைக்குறிப்பீடு

R

Ratification — பின்னேற்பு
Realisation — விற்றுப் பணமாக்குதல்
Recourse — பரிகாரம், நாடுதல்
Redemption — மீட்பு
Registered Stock — பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுப்பு
Remedy — பரிகாரம்
Remittance — அனுப்புகை
Renunciation — உரிமை விட்டுக்கொடுத்தல்
Repository — களஞ்சியம்
Reputed ownership — நம்பிக்கை உரிமை
Reserve — காப்பு
Resident — குடியாள், குடியுரிமை பெற்றவர்
Revocation — பின்னழிப்பு, விலக்கு
Rings — வளைவுகள்
Risk — இடர்வாய்ப்பு

S

Safe Custody Deposit — பாதுகாப்பு வைப்பு
Sanction — இசைவாணை
Scheduled Banks — அட்டவணை வங்கிகள்
Security — பிணையப்பத்திரம், பிணையம்
Settlement — தீர்வு
Shipment — கப்பல் அனுப்பீடு
Solicitor — சட்டமுகவர், வக்காலத்தார்
Solvency — செல்லும் புள்ளித் தன்மை
Solvent — செல்லும் புள்ளி
Speculation — ஊக வணிகம்
Speculator — ஊக வணிகர்
Staff — பணியாள் தொகுதி
Statement — அறிக்கை, விவராவணம்
Stock — பங்குத்தொகுப்பு
Stock Exchange — பங்குமாற்று நிலையம்
Stoppage-in-Transit — வழியிடைநிறுத்தம், நடுவழிநிறுத்தம்

Surety — பிணையாளி
Surplus — எச்சம், மிகை
Surrender — கைவிடுதல், விடுதல்
Surrender Value — விடுமதிப்பு
Survey — அளவாய்வு
Surveyor — அளவாய்வாளர்

T

Tacking — இணைத்துப் பொருத்துதல்
Tenants — குடியிருப்பவர்கள், குத்தகைதாரர்கள்
Tenure — உரிமைக்கட்டுப்பாடு
Testator — இறுதிப் பத்திரம் எழுதுபவர்
Trade Debit — வியாபாரக் கடன்
Traveller's Cheque — பயணிகள் காசோலை
Trust — பொறுப்புரிமை
Trustee — பொறுப்புரிமையர்

U

Uberrimae Fidei — முழு நம்பிக்கையில் எழுகின்ற
Underwriting — ஒப்புறுதி
Undue Influence — தகுதிமீறிய தூண்டுதல்
Usufructuary mortgage — பயனடை உரிமை அடைமானம்

V

Valuation — மதிப்பீடு
Void — இல்லா நிலையது, செல்லாதது
Voidable — தவிர்தகு

W

Warehouse — பண்டகம்
Whole Life Policy — ஆயுட் காலத் திட்டாவணம்
Will — உயில்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை – 600 031

தமிழில் பயில்பவருக்குக் கல்லூரிப் பாடநூல்கள்

(Tamil Medium Books for Colleges)

1979 ஏப்ரல் முடிய 899 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் விரைவில் வெளிவருபவை

கணிதவியல்	—	1 நூல்
புள்ளியியல்	—	1 ,,

கிடைக்குமிடங்கள் :

1. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு,
விக்ரம் சாராபாய் மின்னணு வளாகம்,
பலகை வாராவதி, திருவான்மியூர்,
சென்னை-600 041

2. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
62, ஸ்பர் டாங்க் சாலை, சேத்துப்பட்டு,
சென்னை-600 031

கிடங்கில்	வாங்குவோர்க்கு	20%	கழிவு வழங்கப்படும்
பாடநூல் நிறுவனத்தில்	,,	10% ,,	,,